வெளியீடு—16—11—1977] Issued—16-11-1977]

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

## ...... DEBATES

பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

சனிக்கிழமை 1977 ஜூலை 30 — Saturday 30th July 1977 1 to 8 August

தொகுதி IV—எண் 1-7 Volume IV—No. 1-7

©
தமிழ் நாடு அரசு — GOVERNMENT OF TAMIL NADU
1977

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை-600 009
Legislative Assembly Department, Fort. St. George, Madras-600009

விலை 1-50 காசுகள்] [Price 1-50 Paise

D
V211,31 N77
N78-4,31
122085

உள்ளடக்கம்

பக்கங்கள்.

(i) தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும். i-iv

(ii) தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள். v

(iii) தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி) தயாரிக்கப்பட்ட பெயர்ப் பட்டியல். vii-xv

1. அரசினர் தீர்மானங்கள்.—

(அ) பொதுக் கணக்குக் குழுவிற்கான தேர்தல். 1

(ஆ) பொது நிறுவனங்கள் குழுவிற்கான தேர்தல். 1

2. அறிவிப்புகள்.—

(அ) பொதுக் கணக்குக் குழுவிற்கான தேர்தல். 1

(ஆ) பொது நிறுவனங்கள் குழுவிற்கான தேர்தல். 1

(இ) எதிர்க் கட்சித் தலைவருக்குச் சலுகைகள். 101

3. தகவல் கோரல்.—

உரிமைப் பிரச்சினை குறித்து 3-4

4. 1977-78ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தின் மீதான பொது விவாதம். 5-101

5. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் 102

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| 1. வினாக்கள்—விடைகள் | 103—104 |
| 2. அவையுரிமைப் பிரச்சினை— | |
| 'அண்ணா' நாளிதழ் மீது | 114—117 |
| 3. அறிவிப்புகள்— | |
| (அ) கவன ஈர்ப்பு ஒத்தி வைத்தல் குறித்து | 117 |
| (ஆ) மதிப்பீட்டுக் குழுவிற்கான தேர்தல் | 118 |
| (இ) உரிமைக் குழுவிற்கான தேர்தல் | [illegible] |
| (ஈ) அவைக் குழுவிற்கான தேர்தல் | 11[illegible]—[illegible]20 |
| (உ) மானியக் கோரிக்கைகளுக்கு வெட்டுத் தீர்மானங்கள் கொடுப்பது குறித்து | 207 |
| 4. அரசினர் தீர்மானங்கள்— | |
| (அ) மதிப்பீட்டுக் குழுவிற்கான தேர்தல் | 117 |
| (ஆ) உரிமைக் குழுவிற்கான தேர்தல் | 118 |
| (இ) அவைக் குழுவிற்கான தேர்தல் | 117 |
| 5. ஒழுங்குப் பிரச்சினை— | |
| வினா எண் 5-ன் கீழ் துணை வினாவிற்கு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அளித்த விடை குறித்து | 120—125 |
| 6. 1977–78ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதம்—[illegible] | 125—207 |
| 7. பேரவையின் முன் வைக்கப்பெற்ற [illegible] | 207—208 |

## உள்ளடக்கம்.

பக்கங்கள்.


1. வினுக்கள்—விடைகள் .. .. .. 209–226

2. ஒத்திவைப்புத் தீர்மானங்கள்—

(அ) சென்னை மருத்துவக் கல்லூரிக்கு முன்னுல் பல் இயந்திர கம்மியர் மற்றும் உடல்நலக் கோட்பாடு மருத்துவர்கள் உண்ணுவிரதம் மேற்கொண்டுள்ளதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து .. .. .. 226–233

(ஆ) சென்னையில் ஆசிரியர்கள் கைது செய்யப் பெற்றுள்ளதால் தோன்றியுள்ள பதட்ட நிலை குறித்து .. .. .. 233–235

(இ) மதுரைச் சட்டக் கல்லூரி மாணவர்கள் வேலை நிறுத்தம் செய்துவருவதும், அரசு தக்க நடவடிக்கை எடுக்கத் தவறியதும் குறித்து .. 235–237

3. அரசினர் தீர்மானம்

விதி 41(3)-ஐத் தளர்த்தல் .. 237

4. தகவல் கோரல்

ஒத்திவைப்புத் தீர்மானங்கள் குறித்து .. 237–238

5. கவன ஈர்ப்பு—

(அ) தஞ்சை மாவட்டம் வேதாரண்யம் பகுதியில் புகையிலை உற்பத்தி செய்து விற்க முடியாமல் அவதியுறும் விவசாயிகள் நிலை குறித்து .. .. .. .. 238–240

(ஆ) தமிழ்நாட்டிலுள்ள உயர்நிலைப் பள்ளிகளில் 1978–79-ம் ஆண்டு முதல் பகுநேராம் வகுப்பு நீக்கப்படுவது குறித்தும், ஆசிரியர்கள் வேலை இழக்கும் அபாயம் குறித்தும் .. 240–242

(இ) தஞ்சை மாவட்டம், மன்னர்குடி, ஜெயலட்சுமி விலாஸ் நடுத்தரப் பள்ளி நிர்வாகத்தினரின் போக்கு குறித்து .. .. 242–244

6. ஒழுங்குப் பிரச்சினைகள்

முதலமைச்சர்கள் மகாநாட்டின் முடிவுகளை, முதல்வர் அவைக்கு அறிவிக்காததும், அவைக்கு வராததும் குறித்து .. .. 244

7. 1977–78-ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம் (தொடர்ச்சி) 244–324

8. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 325–326


A 104—1

## உள்ளடக்கம்


| | | பக்கங்கள் |
|---|---|---|
| 1. | வினாக்கள்-விடைகள் | 327—337 |
| 2. | அறிவிப்பு— | |
| | மதுரைப் பல்கலைக்கழக ஆட்சிக்குழுவிற்குத் தேர்தல். | 337—338 |
| 3. | ஒத்திவைப்புத் தீர்மானம்— | |
| | நெல்லிக்குப்பம் காவல்துறையினரால் கைது செய்யப்பெற்ற திரு. சிதம்பரம் என்பவர் இறந்துவிட்டதும், அதன் விளைவாக ஏற்பட்ட நிகழ்ச்சிகள் குறித்தும். | 338—347 |
| 4. | கவன ஈர்ப்பு— | |
| | (அ) கீழ் பவானி ஆயக்கட்டிற்கு தண்ணீர் விடப்படாததால் விவசாயம் பாதிக்கப்படுவதும் அதனால் தண்ணீர் விட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய அவசியமும் குறித்தும். | 347—349 |
| | (ஆ) பூம்புகாரில் ஏற்பட்டுள்ள கடலரிப்பால் அங்குள்ள கட்டடங்கள் பாழ்பட்டுப் போகாமல் தடுக்க தடுப்புச்சுவர் கட்டுவது குறித்து. | 349—350 |
| 5. | 1977-78 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம் (தொடர்ச்சி). | 350<br>351—434 |
| 6. | தகவல் கோரல்— | |
| | முதலமைச்சர்கள் மாநாட்டின் முடிவுகள் குறித்து. | 350—351 |
| 7. | பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள். | 434—435 |

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

### தமிழ் நாடு ஆளுநர்

திரு. பிரபுதாஸ் பட்வாரி.

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:— பொதுத் துறை, பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள், காவல் துறை, தேர்தல்கள், பயண அனுமதிச் சீட்டுகள், மது விலக்கு, சுகாதாரம், மருத்துவம், அறக் கட்டளைகள், லஞ்ச ஒழிப்பு, தொழில்கள், சுரங்கங்கள் கனிப் பொருள்கள், கிராமத்தொழில்கள், ஊரகத் தொழில்கள் திட்டம், பூதான கிராமதான இயக்கங்கள் மற்றும் முன்னாள் இராணுவ வீரர்கள்.

2. மாண்புமிகு திரு. இ. மனோகரன் (நிதித் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :— நிதி, திட்டம், வணிக வரிகள், ஆயத் தீர்வை, வருவாய், சட்ட மன்றம்.

3. மார்ண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (பொதுப் பணித் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்கு பொறுப்பு வகிப் பார் :—பொதுப் பணிகள், சிறுபாசன சிறப்புத் திட்டங்கள் உட்பட சிறுபாசனம், இரும்புஉருக்கு கட்டுப்பாடு, மின்சாரம்.

4. மாண்புமிகு திரு கே. நாராயணசாமி முதலியார் (சட்டத் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்கு பொறுப்பு வகிப் பார் :—சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள், எடைகள்— அளவைகள் குறித்த சட்டம், கடன் கொடுத்தல் குறித்த சட்டம், சீட்டுகள் குறித்த சட்டம், கம்பெனிகளை பதிவு செய்தல்.

5. மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் (உணவுத் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்கு பொறுப்பு வகிப்பார் :— உணவு, உணவு உற்பத்தி, கூட்டுறவு, மீனளம், பத்திரப்பதிவு, சிங்கோனு உட்பட காடுகள், இளைஞர் அணி.

6. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் (செய்தி விளம்பரத் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்கு பொறுப்பு வகிப் பார் :—செய்தி, விளம்பரம்,. படச் சுருள் தொழில் நுட்பம், சுற்றுலா, சுற்றுலா அபிவிருத்திக் கழகம், திரைப்படச் சட்டம்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வித் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்கு பொறுப்பு வகிப்பார்:— தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சி மொழி, வேலை வாய்ப்பும் பயிற்சி அளித்தலும்.

8. மாண்புமிகு திரு. கா. காளிமுத்து (உள்ளாட்சித் துறை
அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—
நகராட்சி, சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்
கள், கிராமவாசிகள்கடன் பட்டிருத்தல்.

9. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர்
நலத் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு
வகிப்பார் :—தொழிலாளர் நலன், வீட்டு வசதி, குடிசை மாற்று
வாரியம், புள்ளி விவரம், குடி நீர் வடிகால் வாரியம், நகர
அமைப்பு.

10. மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் (அரிசன
நலத் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்கு பொறுப்பு
வகிப்பார் :—அரிசன நலன், பிற்பட்ட வகுப்பினர், எழுது
பொருள்-அச்சுத் துறை, அரசு அச்சகம், மலை வாழ் பழங்குடி
மக்கள்.

11. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (போக்குவரத்துத்
துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்கு பொறுப்பு வகிப்
பார் :—போக்கு வரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்கு
வரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம், நெடுஞ்சாலைகள், துறை
முகங்கள்.

12. மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி (சமூக நலத்துறை
அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்கு பொறுப்பு வகிப்பார்:—
மகளிர்-சிறுவர் நலம் உட்பட சமூக நலம், கால்நடை வளர்ப்பு,
இரவலர்கள் விடுதி, அனாதை இல்லங்கள், கண்காணிப்புப் பணி
கள், வெளி நாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள் இடம்
பெயர்ந்தவர்கள்.

13. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (வேளாண்மைத்
துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்
பார் :—வேளாண்மை, வேளாண்மை மறு நிதி உதவி,
வேளாண்மை பொறியியல் பிரிவு, வேளாண்மை பொறியியல்
சம்பந்தமான பகுதிகள், பால், பால்வள நிறுவனம், பால்வள
முனைப்புத் திட்டங்கள்.

14. மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது (கைத்தறி-
ஆலைத் துணிகள் துறை அமைச்சர்): கீழ்க்கண்ட துறைகளுக்குப்
பொறுப்பு வகிப்பார் :—இட வசதிக் கட்டுப்பாடு, பத்திரிகை
காகிதக் கட்டுப்பாடு, வேளாண்மைப் பணி சம்பந்தமான வட்
டாரக் கூட்டுறவுச் சங்கங்கள், இணைப்பு அளவிலான கழகங்கள்
உட்பட்ட மாவட்டச் சங்கங்கள், முகமதியர் அறக் கட்டளைகள்,
ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, கதர்.

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

*Governor of Tamil Nadu.*

THIRU PRABHUDAS PATWARI.

1. THE HON. THIRU M. G. RAMACHANDRAN (*Chief Minister*)—Minister in-charge of Public, General Administration, Matters relating to Indian Civil Service and Indian Administrative Service Officers, District Revenue Officers, Deputy Collectors, Police, Elections, Passport, Prohibition, Health, Medicine, Religious Endowments, Prevention of Corruption, Industries, Bhoodan and Gramdan and Ex-servicemen, Mines and Minerals, Village Industries and Rural Industries Project.

2. THE HON. THIRU K. MANOHARAN (*Minister for Finance*)—Minister in-charge of Finance, Planning, Commercial Taxes and Excise, Revenue and Legislature.

3. THE HON. THIRU S. RAMACHANDRAN (*Minister for Public Works*)—Minister in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme, Works, Iron and Steel Control and Electricity.

4. THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR (*Minister for Law*)—Minister in-charge of Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Legislation on money lending, Legislation on Chits and Registration of Companies.

5. THE HON. THIRU G. R. EDMUND (*Minister for Food*)—Minister in-charge of Food, Food Production, Co-operation and Fisheries Registration, Forest including cinchona and youth Service Corps.

6. THE HON. THIRU R. M. VEERAPPAN (*Minister for Information and Publicity*)—Minister in-charge of Information and Publicity, Film Technology, Tourism and Tourism Development Corporation and Cinematograph Act.

7. The Hon. Thiru C. ARANGANAYAGAM (*Minister for Education*)—Minister-in-charge of Education including Technical Education, Official Language, Employment and Training.

8. The Hon. Thiru K. KALIMUTHU (*Minister for Local Administration*)—Minister in-charge of Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness.

9. The Hon. Thiru S. RAGHAVANANDHAM (*Minister for Labour*)—Minister in-charge of Labour, Housing, Slum Clearance Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board and Town Planning.

10. The Hon. Thiru P. SOUNDARAPANDIAN (*Minister for Harijan Welfare*)—Minister in-charge of Harijan Welfare, Backward Classes, Stationery and Printing, Government Press and Hill Tribes.

11. The Hon. Thiru C. PONNAIYAN (*Minister for Transport*)—Minister-in-charge of Transport, Nationalised Transports, Motor Vehicles Act, Highways and Ports.

12. The Hon. Selvi P. T. SARASWATHI (*Minister for Social Welfare*)—Minister in-charge of Social Welfare including Women and Children Welfare, Animal Husbandry, Beggars Home, Orphanages, Indians Overseas and Refugees and Evacuees, and Correctional Administration (Approved Schools and Vigilance Service).

13. The Hon. Thiru P. KOLANDAIVELU (*Minister for Agriculture*)—Minister in-charge of Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering Wing, Agro-Engineering Wing, Milk, Dairy Development Corporation and Operation Flood Project.

14. The Hon. Thiru K. RAJA MOHAMMED (*Minister for Handlooms and Textiles*)—Minister in-charge of Accommodation Control, Newsprint Control, Agro-Service Co-operative Societies at Block, District and Apex Level including Federation, Waqfs, Textiles, Yarn' Handloom, and Khadi.



தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

பேரவைத் தலைவர்.

மாண்புமிகு திரு. முனு ஆதி.

பேரவைத் துணைத் தலைவர்.

திரு. எஸ். திருநாவுக்கரசு, பி.ஏ., பி.எல்.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. கே. பண்ணை சேதுராம்
2. திரு. ஆர். முத்தையா
3. திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா
4. திரு. கே. கே. முத்தையா

சட்டமன்றப் பேரவைச் செயலாளர்.

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி. எல்.

துணைச் செயலாளர்.

திரு. த. இராதாகிருஷ்ணன்

குழு அலுவலர்.

திரு. ப. சுப்பராயன், எம். ஏ.

சார்புச் செயலாளர்கள்.

திரு. கே. பாலகுரு, பி.ஏ.
திரு. பி. எம். பத்மனுபன் நம்பியார், பி. ஏ.
திரு. பெ. பள்ளிகொண்டபெருமாள், பி.ஏ., பி.எல்.

விவாதப் பதிப்பாளர்.

திரு. கே. சுந்தரராசன்

தலைமை நிருபர்.

திரு. பி. கே. இலக்குமிநாராயுணன்

எஸ்டேட் அதிகாரி.

திரு. வி. சீதாரா்மன், பி.காம்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி) தயாரிக்கப்பட்ட பெயர்ப்பட்டியல்.

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| 1 | அண்ணாமலை, திரு. எம். .. | ஹரூர் (செ.வ.). |
| 2 | அப்துல் ரஜாக், திரு. கே. எம். | ஆலந்தூர். |
| 3 | அப்துல் லத்தீப், திரு. கி. .. | கடலூர். |
| 4 | அப்புனு கவுண்டர், திரு. கா. .. | பெண்ணாகரம். |
| 5 | அமிர்த ராஜ், திரு. இரா. .. | திருச்செந்தூர். |
| 6 | அம்பிகாபதி, திரு. மு. .. .. | மன்னார்குடி. |
| 7 | அய்யாசாமி, திரு. ரா. .. | தாராபுரம் (செ.வ.). |
| 8 | அரங்கசாமி, திரு. க. .. | குன்னூர் (செ.வ.). |
| 9 | அரங்கநாதன், திரு. அ. க. .. | வேலூர். |
| 10 | அரங்கநாதன், திரு. மு. .. | திருவல்லிக்கேணி. |
| 11 | அரங்கநாயகம், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்) .. | கோயம்புத்தூர் (மேற்கு). |
| 12 | அருணாசலம் திரு. இரா. .. | நாமக்கல் (செ.வ.). |
| 13 | அர்சுனன், திரு. வீ. .. .. | ஆரணி. |
| 14 | அழகர்சாமி, திரு. சோ. .. | கோவில்பட்டி. |
| 15 | அன்பழகன் திரு. க. .. | புரசவாக்கம். |
| 16 | அன்பழகன், திரு. இ. .. .. | நாட்ராம்பள்ளி. |
| 17 | ஆண்டி அம்பலம், திரு. மெ. .. | நத்தம். |
| 18 | ஆதிசுவாமி, திரு. இரா. .. | குளச்சல். |
| 19 | ஆறுமுகம், திரு. சி. .. .. | மதுராந்தகம். |
| 20 | ஆறுமுகம், திரு. எச். ஜி. .. | பர்கூர். |
| 21 | ஆறுமுகம், திரு. இல. .. .. | திருநாவலூர். |
| 22 | ஆறுமுகம், திரு. மு. .. .. | சேலம்-2. |
| 23 | ஆறுமுகம், திரு. த. .. .. | அரியலூர். |
| 24 | இராசமாணிக்கம், திரு. இரெ. | குத்தாலம். |
| 25 | இராஜாராம் ரெட்டி, திரு. டி. ஆர். | திண்டிவனம். |
| 26 | இராசரத்தினம், திரு. து. .. | பூந்தமல்லி. |
| 27 | இராதா, திரு. எஸ். ஆர். .. | கும்பகோணம். |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 28 இராமசாமி, திரு. க.ந.க. | கோபிச்செட்டிபாளையம். |
| 29 இராமசாமி, திரு. எஸ். ஜே. | சோளிங்கர். |
| 30 இராமசாமி, திரு. எஸ். வி. | பெரம்பலூர் (செ.வ.). |
| 31 இராமசாமி. திரு. டி. | இராமநாதபுரம். |
| 32 இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். | சாத்தூர். |
| 33 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. எம். ஜி. (முதலமைச்சர்) | அருப்புக்கோட்டை. |
| 34 இராமச்சந்திரன், திரு. என். | செஞ்சி. |
| 35 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்) | பண்ருட்டி. |
| 36 இராமச்சந்திரா ரெட்டி, திரு. என். | ஹோசூர். |
| 37 இராமலிங்கம், திரு. செ. | திருவிடைமருதூர். |
| 38 இராஜாராம் நாயுடு, திரு. தே. இரா. | தல்லி. |
| 39 இளங்கோவன், திரு. கோ. | திருவையாறு. |
| 40 ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி. | அம்பாசமுத்திரம். |
| 41 உக்கிரபாண்டியன், திரு. க. | பரமக்குடி (செ.வ.). |
| 42 உச்சி, திரு. கே. | கூடலூர். |
| 43 உத்திராபதி, திரு. பொ. | திருத்துறைப்பூண்டி (செ.வ.). |
| 44 உமாநாத், திரு. ரா. | நாகப்பட்டிணம். |
| 45 உய்யக்கொண்டான், திரு. கே. ஜே. | ஆற்காடு. |
| 46 எட்மண்ட், மாண்புமிகு திரு. க. உரொ. (அமைச்சர்) | திருநெல்வேலி. |
| 47 எத்ராஜ். திரு. கி. | அச்சரப்பாக்கம் (செ.வ.). |
| 48 ஏகாம்பர ரெட்டி, திரு. | பள்ளிப்பேட். |
| 49 ஐசரி வேலன், திரு. | டாக்டர் இராதா கிருஷ்ணன் நகர். |
| 50 கணேசன், திரு. இ. | எடப்பாடி. |
| 51 கணேசன், திரு. எஸ். | பூம்புகார். |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 52 கண்ணன், திரு. ம. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 53 கந்தசாமி, திரு. கே. | ஆண்டிப்பட்டி. |
| 54 கந்தசாமி, திரு. கா. வே. | கிணத்துக்கடவு. |
| 55 கபாலி, திரு. டி. கே. | மயிலாப்பூர். |
| 56 கரியமாணிக்கம் அம்பலம், திரு. கரு. ராம. | திருவாடானை. |
| 57 கருணகிரி முத்தையா, திரு. க. | மருங்காபுரி. |
| 58 கருணாநிதி, திரு. மு. | அண்ணாநகர், சென்னை. |
| 59 கருணாநிதி, திரு. தாழை மு. | திருவாரூர் (செ.வ.). |
| 60 கருணாமூர்த்தி, திரு. வெ. | ஜெயங்கொண்டான். |
| 61 கருப்பசாமி பாண்டியன், திரு. வீ. | ஆலங்குளம். |
| 62 கலியமூர்த்தி, திரு. துரை | சிதம்பரம். |
| 63 காத்தமுத்து, திரு. கி. பெ. | தொட்டியம். |
| 64 காளிமுத்து, மாண்புமிகு திரு. கா. (அமைச்சர்) | திருப்பரங்குன்றம். |
| 65 காளியப்பன், திரு. பொ. | காரைக்குடி. |
| 66 காளியப்பன், திரு. இரா. | ஏற்காடு (ஆ. வா.). |
| 67 கிட்டப்பா, திரு. என். | மாயூரம். |
| 68 கிட்டு, திரு. ப. கோ. | பல்லடம். |
| 69 கிருஷ்ணன், திரு. பி. எம். | பாலக்கோடு. |
| 70 கிருஷ்ணன், திரு. செ. | கன்னியாகுமரி. |
| 71 கிருஷ்ணன், திரு. நா. | ஸ்ரீ பெரும்புதூர் (செ.வ.). |
| 72 கிருஷ்ணன், திரு. பி. | விழுப்புரம். |
| 73 கிருஷ்ணன், திரு. ரா. | வாசுதேவநல்லூர் (செ.வ.). |
| 74 குப்புசாமி, திரு. என். | மொரப்பூர். |
| 75 குருசாமி, திரு. ப. | ஆண்டியூர் (செ. வ.). |
| 76 குழந்தைவேலு, மாண்புமிகு திரு. ப. (அமைச்சர்) | உடுமலைப்பேட்டை |
| 77 கோதண்டராமன், திரு. வி. சே. | குடியாத்தம். |
| 78 கோதண்டராமன் என்கிற முசிறிபுத்தன், திரு. பி. | முசிறி. |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 136 தங்கவேலு கவுண்டர், திரு. பொ. | மேலமலையனூர். |
| 137 தங்கவேலு, திரு. ர.ச. .. | வால்பாறை (செ. வ.). |
| 138 தண்டபாணி, திரு. ரா. க. சு. | காங்கேயம். |
| 139 தமிழரசன், திரு. இ. .. | பேரணும்பட்டு (செ.வ.) |
| 140 தனசேகரன், திரு. ந. .. | தூத்துக்குடி. |
| 141 தனபால், திரு. ப. .. .. | சங்கரி (செ. வ.) |
| 142 தனுஷ்கோடி, திரு. கோ. .. | ராஜபாளையம் (செ.வ.) |
| 143 தாமரைக்கனி, திரு. இரா. .. | ஸ்ரீவில்லிபுத்தூர். |
| 144 திருநாவுக்கரசு, மாண்புமிகு திரு. எஸ், (பேரவைத் துணைத் தலைவர்.) .. | அறந்தாங்கி. |
| 145 திருவேங்கடம், திரு. பெ. சு. | கலசப்பாக்கம். |
| 146 துரை கோவிந்தராசன், திரு. அரசாங்க தலைமைக்கொறடா | திருவோணம். |
| 147 துரைசாமி, திரு. ப. .. | ராசிபுரம். |
| 148 துரை முத்துசாமி, திரு. .. | சங்கராபுரம். |
| 149 துரை முருகன், திரு. .. | இராணிப்பேட்டை. |
| 150 துரைராஜ், திரு. சு. ம. .. | பொன்னேரி (செ.வ.) |
| 151 துலுக்காணம், திரு. வ. .. | உளுந்தூர்பேட்டை (செ.வ.). |
| 152 தைலப்பன், திரு. டி. எம். .. | ஒரத்தநாடு. |
| 153 நடராசன், திரு. அ. .. | பேரூர். |
| 154 நடராசன், திரு. எஸ். .. | தஞ்சாவூர். |
| 155 நல்லதம்பி, திரு. தி.சு. .. | பார்க்டவுன், சென்னை. |
| 156 நாச்சிமுத்து, திரு. க. .. | பொங்கலூர். |
| 157 நாச்சிமுத்து கவுண்டர், திரு. கொ. பொ. | மேட்டூர். |
| 158 நாராயணன், திரு. ரா. .. | தாரமங்கலம். |
| 159 பட்டாபிராமன், திரு. செ. | திருவள்ளூர். |
| 160 பண்ணை சேதுராமன், திரு. கே. | பெரியகுளம். |
| 161 பரமசிவம், திரு. அ. மா. .. | மேலூர். |
| 162 பரமசிவம், திரு. மொ. .. | வானூர் (செ. வ.). |



| தொடர் எண்ணும் உறுப்பினர்க்ளின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| 163 பழனிசாமி, திரு. சு. .. | மேட்டுப்பாளையம். |
| 164 பழனிசாமி, திரு. சொ. ந. .. | அவிநாசி (செ. வ.). |
| 165 பழனிமுத்து, திரு. சி. .. | ஆத்தூர். |
| 166 பழனியப்பன், திரு. அ. ப. .. | ஒட்டன்சத்திரம். |
| 167 பழனிவேல், திரு. என். .. | பழனி (செ. வ.). |
| 168 பாண்டியன், திரு. .. .. | சேரன்மாதேவி. |
| 169 பாலகிருஷ்ணன், திரு. சோ. | முதுகுளத்தூர். |
| 170 பாலகுருவா ரெட்டியார், திரு. வெ. | சோழவந்தான். |
| 171 பாலன், திரு. சு. .. .. | பெரம்பூர் (செ. வ.). |
| 172 பாலாஜி, திரு. க. .. | காஞ்சீபுரம். |
| 173 பாலுசாமி, திரு. அ. .. | நிலக்கோட்டை (செ. வ.). |
| 174 புருஷோத்தமன், திரு. து. .. | சைதாப்பேட்டை, சென்னை. |
| 175 புஸ்பராஜு, திரு. த. .. | ஆலங்குடி. |
| 176 பெரியசாமி, திரு. மொ. .. | மங்களூர் (செ. வ.). |
| 177 பெரியசாமி, திரு. ரா. .. | உப்பிலியாபுரம். |
| 178 பெரியசாமி, திரு. டி. பி. மு. | மதுரை மேற்கு. |
| 179 பெருமாள், திரு. என். .. | வரகூர் (செ. வ.). |
| 180 பெருமாள், திரு. ரா. கு. .. | விளாத்திகுளம் |
| 181 பொன்னுசாமி, டாக்டர், ஏ. | பெருந்துறை. |
| 182 பொன்னுரங்கம், திரு. ப. .. | இராயபுரம். |
| 183 பொன்னையன், மாண்புமிகு திரு. சி. (அமைச்சர்) .. | திருச்செங்கோடு. |
| 184 மணிமாறன், திரு. மா. .. | நன்னிலம் (செ.வ.). |
| 185 மணிமாறன், திரு. ஆர். .. | திருப்பூர். |
| 186 மணிமுடி, திரு. எஸ். .. | எழும்பூர், சென்னை (செ.வ.). |
| 187 மருதாசலம், திரு. க. .. | தொண்டாமுத்தூர். |
| 188 மனோகரன், மாண்புமிகு (அமைச்சர்) திரு. கி. .. | பாளையங்கோட்டை. |
| 189 மாணிக்கம், திரு. சி. .. | திருச்சிராப்பள்ளி-1. |
| 190 மார்கரெட் எலிசபெத் .. | பிலிக்ஸ் நியமன உறுப்பினர். |
| 191 மார்க்கபந்து, திரு. ரா. .. | அணைக்கட்டு. |

| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 192 மாரிமுத்து, திரு. ஏ. ஆர். .. | பட்டுக்கோட்டை. |
| 193 மீனாட்சிசுந்தரம், திரு. மா. .. | வேதாரண்யம். |
| 194 முத்துசாமி, திரு. பா. க. சி. | தர்மபுரி. |
| 195 முத்துசாமி, திரு. சு. .. | ஈரோடு. |
| 196 முத்துசாமிகரையாளர், திரு. சு. | தென்காசி. |
| 197 முத்தையா, திரு. இரா. .. | சேடப்பட்டி. |
| 198 முருகேசன், திரு. கூ. ச. .. | திருவரம்பூர். |
| 199 முனிசாமி, திரு. பொ. .. | வந்தவாசி, (செ.வ.). |
| 200 முனிரத்தினம், திரு. எஸ். .. | கும்மிடிபூண்டி. |
| 201 முனு ஆதி, மாண்புமிகு திரு... (பேரவைத் தலைவர்) | தாம்பரம், சென்னை. |
| 202 மூக்கையா தேவர், திரு. பி. கே. | உசிலம்பட்டி. |
| 203 யூசப், திரு. யா. சை. மு. .. | ராதாபுரம். |
| 204 ரகுமான்கான், திரு. ஏ. .. | சேப்பாக்கம், சென்னை. |
| 205 ரகுராமன், திரு. வி. .. | புவனகிரி. |
| 206 ரகோத்துமன், திரு. கோ. .. | முசையூர். |
| 207 ரமணி, திரு. கு. .. | கோயம்புத்தூர் கிழக்கு. |
| 208 ரசாக், திரு. எம். எம். எ. | கடையநல்லூர். |
| 209 ராமசாமி, திரு. கோ. .. | சிவகாசி. |
| 210 ராமசாமி, திரு. து. .. | வெள்ளக்கோயில். |
| 211 ராமதாஸ், திரு. பி. .. | போடிநாயக்கனூர். |
| 212 ராமநாதன், திரு. சி. .. | விருத்தாசலம். |
| 213 ராமலிங்கம், திரு. இ. .. | காட்டுமன்னார்கோவில் (செ. வ.). |
| 214 ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான், திரு. | புதுக்கோட்டை. |
| 215 ராஜு, திரு. செ. மெ. .. | தலைவாசல் (செ. வ.). |
| 216 ராஜு, திரு. வி. கே. .. | அரக்கோணம் (செ. வ.). |
| 217 லட்சுமிநாராயணன், திரு. என். | மதுரை மத்திய தொகுதி. |
| 218 லத்தீப், திரு. எம். ஏ. .. | வாணியம்பாடி. |
| 219 வடிவேலு, திரு. கே. .. | கரூர். |



| தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். | தொகுதியின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 220 வரதராஜன், திரு. என். .. | திண்டுக்கல். |
| 221 வரதராஜன், திரு. சௌ. வே. | சேலம்-1. |
| 222 வாசன், திரு. சீ. மு. .. | வேடசந்தூர். |
| 223 வின்சென்ட், திரு. மி. .. | நாகர்கோவில். |
| 224 விஜயராகவன், திரு. பொ. | கிள்ளியூர். |
| 225 வேங்கா கவுண்டர், திரு. பி. | வீரபாண்டி. |
| 226 வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு, திரு. ரா. | சிங்காநல்லூர். |
| 227 வெள்ளைச்சாமி, திரு. ஆ. .. | ஆத்தூர். |
| 228 வேணுகோபால், திரு. த. .. | தண்டராம்பட்டு. |
| 229 வேலுச்சாமி, திரு. ஒ. சோ. | ஒட்டப்பிடாரம் (செ. வ.) |
| 230 [illegible], திரு. அனூர் .. | செங்கல்பட்டு. |
| 231 ஜான் வின்சென்ட், திரு. மு. | நாங்குனேரி. |
| 232 ஜெபமணி, திரு. ர. .. .. | சாத்தான்குளம். |
| 233 ஜெயராமன், திரு. வே. இரா. | தேனி. |
| 234 ஜெயவேலு, திரு. எம். ஏ. .. | காட்பாடி. |
| 235 ஜேம்ஸ், திரு. ஜே. .. .. | திருவட்டார். |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

1 மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி முதலியார் — அமைச்சர்.

2 மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்— அமைச்சர்.

3 மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்— அமைச்சர்.

4 மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது—அமைச்சர்.

5 திரு. வி. பி. இராமன்—தலைமை வழக்கறிஞர்.

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

சனிக்கிழமை, 1977, ஜூலை 30.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்று வினாக்கள் இல்லை.

## (1) அரசினர் தீர்மானங்கள்.

### (அ) பொதுக் கணக்குக் குழுவிற்கான தேர்தல்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே,

''தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 173-வது விதியின் கீழ், 1977-78 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்''

என்கிற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

## (2) அறிவிப்புகள்.

### (அ) பொதுக் கணக்குக் குழுவிற்கான தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின்கீழ், பொதுக் கணக்குக் குழுவிற்கு 16 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேட்பாளர்கள் வேட்புத்தாள்களை 5-8-1977 வெள்ளிக்கிழமை, பிற்பகல் 3 மணிக்குள் சயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். வேட்புத்தாள் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

வேட்பு தாள்கள் 6—8—1977 சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 8—8—1977 திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு அதாவது 16-க்கு மேற்படுமாயின் 10—8—1977 புதன் கிழமை முற்பகல் 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே தலைமைச் செயலகத்திலுள்ள பேரவை குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

### (1) அரசினர் தீர்மானங்கள்—(தொடர்ச்சி).

### (ஆ) பொது நிறுவனங்கள் குழுவிற்கான தேர்தல்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: பேரவைத் தலைவர் அவர்களே,

> "தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 182-ஏ விதியின் கீழ், 1977-78 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்".

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

### (2) அறிவிப்புகள்—(தொடர்ச்சி).

### (ஆ) பொது நிறுவனங்கள் குழுவிற்கான தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின் கீழ், பொது நிறுவனங்கள் குழுவிற்கு 16 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேட்பாளர்கள் வேட்புத் தாள்களை 5—8—1977 வெள்ளிக்கிழமை பிறபகல் 3 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். வேட்புத்தாள் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

வேட்புத் தாள்கள் 6—8—1977 சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 8—8—1977 திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்படவேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது 16-க்கு மேற்படுமாயின் 10—8—1977 புதன் கிழமை முற்பகல் 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே தலைமைச் செயலகத்திலுள்ள பேரவை குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.



### (3) தகவல் கோரல்.

### உரிமைப் பிரச்சினை குறித்து.

*திரு. க. அன்பழகன் : நேற்று முன்னாள் ஓர் உரிமை மீறல் குறித்த தீர்மானத்தை தங்கள் மூலமாக ஒரு முடிவு பெற வேண்டுமென்று தந்திருக்கிறேன். நேற்று முன்னாள் தந்திருந்தேன். நேற்று முன்னாள் தந்த காரணத்தினால் இந்நாள் வரவேண்டியது நியாயம் உண்டு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரண்டு வந்திருக்கின்றன. இன்னும், முழு விவரங்கள் கேட்டு வரவில்லை. திங்கட்கிழமை அவசியம் பேராசிரியர், சாதிக் பாட்சா அவர்கள் இருவரும் கொண்டு வந்ததையும், மற்றொரு உறுப்பினர் கொண்டு வந்ததையும் எடுத்துக் கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன் : தாங்கள் காலம் எடுத்துக் கொள்வது பற்றி எனக்கு வருத்தம் இல்லை. ஆனால் உடனுக்குடன் இப்படிப் பட்ட பிரச்னைகள் அவையில் தீர்மானிக்கப்படுமானால் தான் இந்த அவைக்கு பெருமையே தவிர கால நீடிப்பு என்பது உரிமை மீறல் பிரச்னைகள் வேறு பல வளர வாய்ப்பாகப் போய் விடும். நான் தந்த பிரச்னையாக இருப்பதால் நீங்கள் திங்கட்கிழமை தருகிற முடிவு வரையில் நான் பொறுத்திருக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த ஆசிரியருக்கு அனுப்பியிருக்கிறேன். உடனே வந்து தகவல் தரும்படி, நேராக வந்து தகவல் சொல்லும்படி கேட்டிருக்கிறேன். அவர் இன்னும் வரவில்லை. பத்திரிகை ஆசிரியர்கள் இனி துரிதமாக சொன்னபடி இத்தனை மணி நேரத்திற்குள் பதிலளிக்க வேண்டுமென்று சொன்னால் அதற்குள் பதிலளித்தால் அன்று அல்லது அதற்கு மறுநாள் நான் தீர்ப்புத் தர முடியும். அந்த முறையில் நடவடிக்கை எடுத்துக்கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன் : தங்களுடைய மேலான ஆலோசனையை நான் ஒரு வகையில் வரவேற்கிறேன். இன்னொரு வகையில், அச்சிடப்பட்ட பத்திரிகை, சட்ட மன்ற நடவடிக்கைக் குறிப்பு இவை இரண்டையும் பார்க்கிறபோது ஏற்படுகிற வேற்றுமையை தலைவர் அவர்கள் பார்த்து அதில் உரிமை மீறல் இருக்கிறதா என்று பார்த்து தீர்மானிக்க வேண்டும். உரிமை மீறல் இருக்கிறது என்று தீர்மானித்ததற்குப் பிறகுதான் ஆசிரியர் அல்லது நிருபர் அல்லது மற்றவர்களை அழைத்து கேட்பது இயற்கை, நியாயம். முதலில் அவைக்குத் தெரிவித்து விட்டு உரிமை மீறல் இருக்குமானால் ஆசிரியரை அழைத்தால் அது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

__மாண்புமிகு பேரவைத் தலைவர் :__ பேராசிரியர் அவர்கள் சொல்கிற கருத்துக்கள் எனக்கு நன்ருகப் புரிகிறது. அவையில், இன்ஞர் இன்ஞர் உரிமை மீறல் பிரச்சினையைக் கொண்டு வந்திருக்கிருர்கள், அதை சம்பந்தப்பட்ட ஆசிரியருக்கு அனுப்பியிருக்கிறேன் என்ற தகவல் கொடுத்தால் போதும் என்று நினைக்கிறீர்கள். உரிமை மீறல் இருக்கிறதா இல்லையா என்பதை ஆசிரியரைக் கூப்பிட்டுப் பேசி பதில் வந்த பிறகு நீங்கள் சொன்னபடி அவைக்கு அறிவிக்கலாம்.

__திரு. க. அன்பழகன் :__ உரிமை மீறல் என்பது சட்ட மன்றத்தினுடைய முதல் உரிமை. சட்ட மன்றத்தைப் பொறுத்த வரையில், உரிமை மீறல் இருக்கிறதா அல்லவா—ப்ரைமா பேஸி கேஸ் இருக்கிறதா இல்லையா—என்பதைத் தீர்மானிக்க வேண்டியவர் தலைவர் அவர்கள். தீர்மானிக்கிறபோது தேவையான தகவல்களை, பத்திரிகைகளில் அச்சிட்டு வந்திருக்கிற செய்தி, மற்றென்று, சட்ட மன்ற நடவடிக்கைக் குறிப்பேட்டில் காணப்படுகிற, டைப் அடித்து தரப்படுகிற செய்தி, இரண்டையும் தாங்கள் முதலில் பார்க்கக்கூடிய எல்லா விதமான உரிமையும் வாய்ப்பும் பெற்றிருக்கிறீர்கள். தங்களுக்கு உதவுவதற்கு அலுவலர்கள் இருக்கிருர்கள். நாங்களும் அந்தக் குறிப்பைத் தங்களிடம் தந்திருக்கிருேம். எனவே அந்தக் குறிப்புகளைப் பார்த்தவுடன் உரிமை மீறல் இருக்கிறதா இல்லையா என்பது தெரியவரும். அந்த அடிப்படையில் தெரிவித்து விட்டு அதற்கு மேல் உரிமை மீறல் இருக்கிறது என்று தாங்கள் கருதிஞல் ஆசிரியர் அழைக்கப்பட்வேண்டுமே தவிர இது உரிமை மீறல் அல்ல, இப்படி நடப்பது உலக இயற்கை என்று தங்களுக்குத் தோன்றிஞல் ஆசிரியரை அழைக்கத் தேவை இல்லை. உரிமை மீறல் யார் மீது கொடுத்திருக்கிறேஞே அவர் சார்பாகவும் இதைப் பேசுகிறேன்.

__மாண்புமிகு திரு. கி. மனேகரன் :__ ஒரு வேளை பேராசியர் அவர்கள் வாய் தவறிப் பேசியிருக்கக்கூடும் என்று கருதுகிறேன். உரிமை மீறல் என்பது இந்தச் சபையின் உரிமை என்று அவர்கள் ஆரம்பித்தார்கள்.

__திரு. க. அன்பழகன் :__ நான் தவறிய இடத்தில் திரு. மனேகரன் அவர்கள் கவனமாக இருக்க வேண்டும் என்று முன்னவரைக் கேட்டுக்கொள்கிறேன்.

__மாண்புமிகு பேரவைத் தலைவர் :__ எப்போது ஆசிரியருக்கு அனுப்பினேஞே அப்போது அது உரிமை மீறல் இருக்கிறது என்ற அர்த்தத்தோடு அனுப்பியது. இப்போது வேறு சொல்லிவிட்டு பிறகு ஆசிரியரை அழைத்து அவர்களிடம் கேட்டு அவர் மன்னிப்பு அல்லது தவறு செய்து விட்டேன் என்று எழுதிக் கொடுப்பதை மறுபடியும் அறிவிக்கிற இரட்டை வேலை வேண்டாம் என்று எண்ணித்தான் அவற்றை ஆசிரியரிடம் அனுப்பியிருக்கிறேன். பதில் வந்தவுடன் அவைக்கு அறிவிக்க இருக்கிறேன்.



__(4) 1977–78 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் மீதான பொது விவாதம்.__

__திரு. எஸ். ஆர். இராதா :__ பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையில் இன்று பல்வேறு புதுமையான திட்டங்களைஅறிவித்து தமிழகத்தினுடைய முன்னேற்றத்திற்காக சில மாதங்களில் சிலபல நல்ல காரியங்களைச்செய்வதற்காக திட்டமிடப்பட்டிருப்பதைக் காண்கிற நேரத்தில் என்னைப் போன்ற புதிதாக வந்திருக்கிற உறுப்பினர்கள் அதில் அதிகமான அளவிற்கு மகிழ்ச்சி அடைய வேண்டியவர்களாக இருக்கிருர்கள் என்பதை நான் முதலில் தெரிவித்துக்கொண்டு இந்த நிதிநிலை அறிக்கை இந்த மன்றத்தில் வைக்கப்படுவதற்கு முன்ஞல் வெளியிலே பல்வேறு கருத்துக்கள் பேசப்பட்டு வந்தன.

(முற்பகல் 9-10)

இந்த அரசு அமைக்கப்பட்ட பிறகு இந்த அரசு எத்தனை நாளைக்கு இருக்கப்போகிறது என்ற கேள்வியை எழுப்பியது உண்டு, அப்படியே இந்த அரசு இருக்குமாஞல், இந்த அரசு நிதிநிலை அறிக்கையை இந்த மன்றத்தில் வைக்க முடியுமா என்ற கேள்வியும் எழுப்பப்பட்டதுண்டு, அதற்குப் பின்ஞல் பல்வேறு பிரச்னைகளைப் பேசிக்கொண்டு இருந்தார்கள். என்னைப் பொறுத்தவரையிலும் நான் கருதிக்கொண்டிருந்தது, இப்படிப்பட்ட நிதிநிலை அறிக்கை வருகிற நேரத்தில் இந்த அரசு பல்வேறு பிரச்னைகளை சமாளித்து சுமார் 24 நாட்களுக்குள்ளாக நிதிநிலை அறிக்கையை தயார் செய்து மன்றத்தில் வைத்து, அப்படி இந்த மன்றத்தில் வைக்கப்படுகிற நேரத்தில் நிதிநிலை அறிக்கை ரகசியங்கள் எங்கே வெளி வந்துவிட போகிறதோ, நிதிநிலை அறிக்கை வருவதற்கு முன்ஞலேயே பரீட்சை பேப்பர் வெளியாவது போல், வெளிவந்து விடும் என்று பேசியவர்களும் என் கவனத்திற்கு வருகிருர்கள். அப்படிப்பட்ட சாதாரண சந்தோஷத்தில் சிலர் இருந்தார்கள், இந்த நிதிநிலை அறிக்கையை இந்த மன்றத்தில் இன்றைக்கு வைக்கப்பட்டு எந்தவிதமான ரகசியங்களும் வெளியே வராமல் காப்பாற்றப்பட்டிருப்பதை நினைத்து நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். இந்த நிதிநிலை அறிக்கை தயார் செய்யப்பட்டு இங்கே அறிவிக்கப்படுகிற நேரத்தில் நாட்டில் இருக்கின்ற பொருளாதார நிலைகள், இருக்கின்ற பல்வேறு பிரச்சினைகள் இவைகளை எல்லாம் கவனித்துப் பார்த்து, ஒரு புதிய அரசு தன்னுடைய நிதி நிலை அறிக்கையை சமர்ப்பிக்க முடியுமா என்கிற கருத்தை பல பேர் கேட்டுக்கொண்டிருந்தார்கள். நிதி நிலை அறிக்கையை தருகின்ற நேரத்தில் இருக்கிற பொருளாதார வெள்ளத்தை இந்த அரசு என்னும் படகு கடக்குமா என்று கேட்ட நேரத்தில் அந்த வெள்ளத்தை கடந்து நல்லபடியாக கரையை அடைந்திருப்பதற்கு மகிழ்ச்சி அடைய வேண்டும். படகு சேர்ந்தது என்று சொல்லும்போது, அதற்கு நமது

[திரு. எஸ். ஆர். இராதா] [1977 ஜூலை 30

நிதி அமைச்சர் அவர்களுக்கு துணையாக
ராமாயணத்திலும் ஆற்றைக் கடப்பதற்கு குகன் இருந்தார்,
அது போல் இங்கே பொருளாதார வெள்ளத்திலிருந்து குகன் இருந்தார்,
நல்லபடியாக கரை சேர்த்து இருக்கிறார்கள் என்பதைப் படகை
கும்போது உள்ளபடியே நாம் இதைப் பாராட்ட பார்க்
இந்த நிதிநிலை அறிக்கையைப் பார்க்கும்போது, வேண்டும்.
இருந்த நிலைமைக்கும், இப்போது அதாவது 1977–78-ம் 1975–76-ல்
அறிக்கைக்கும் நிலைமை எப்படி இருக்கும் என்பதை ஆண்டு
பினர் என்கிற காரணத்தால், பழைய அரசு புதிய உறுப்
நிலைமை எப்படியிருந்தது, இப்போது எப்படியிருக்குமோ இருந்தபோது
சிறிது அச்சத்துடன் இருந்தேன். அந்த என்று
நிதிநிலை அறிக்கையை கவனிக்கவேண்டும் முறையில் இந்த
பட்டாலும், நிதித் துறையிலிருந்து என்று ஆசைப்
போக முடியாத அளவுக்கு தந்திருக்கின்ற எங்களால் தூக்கிக்கொண்டு
களை எல்லாம் படித்துப்பார்ப்பதற்கு போதிய ஏராளமான புத்தகங்
விட்டாலும், சில இனங்களை மட்டும் அவகாசம் இல்லா
ளுல் இருந்த அரசு தந்திருந்த நிதிநிலை பார்த்தபோதும்,
போதுள்ள நிதிநிலை அறிக்கையிலுமுள்ள அறிக்கையிலும், முன்
களை மட்டும் என்னுல் கவனிக்க சில இப்
லாம் பார்த்தபோது, முடிந்தது. புள்ளிவிவரங்
பழைய அரசுக்கு கீழே போய் இந்த புதிய அரசு இவற்றையெல்
தவறிவிடுவார்களோ என்று ஏதாவது எந்தவகையிலும்
டிருந்தேன். நான் பெரிதும் காரியங்களை செய்ய
சொல்ல ஆசைப்படுகிறேன். பார்த்த சில கவலைப்பட்டுக் கொண்
இன்ற நிதிநிலை அறிக்கையில் இப்போது புள்ளிவிவரங்களை இங்கு
என்பதில் மொத்த "வருவாய் கொண்டுவரப்பட்டிருக்
கோடி என்று வரவு 1975–76 ஆம் கணக்கு விவரம்"
ஆண்டில் 633·24 போடப்பட்டிருக்கிறது. ஆண்டு ரூ. 583·86
அதில் குறைவு கோடி ரூபாய் ஆனுல் 1977–78 ஆம்
வரிகள் இனத்தில் எதுவும் என்று போடப்பட்டுள்ளது.
என்று போடப்பட்டிருக்கிறது. 1975–76 ஆம் காட்டப்படவில்லை.
என்று புள்ளிவிவரம் 1977–78-ல் ஆண்டில் அதேபோல்
கோடி ரூபாய் போடப்பட்டிருக்கிறது. 319·10 கோடி
அதிகமாகப் போடப்பட்டு 368·10 கோடி
இருக்கிறது. இவ்விதம் 49

பிரித்துக் கொடுக்கப்படுகின்றதன்மூலம்
மிருந்து கிடைக்கும் வருவாய் என்ற இந்திய
ஆண்டில் 122·03 கோடி என்று தலைப்பில் 1975–76 அரசிட
இது 1977–78 ஆம் ஆண்டில் 136·9 குறிப்பிடப்பட்டிருக்கிறது; ஆம்
பட்டிருக்கிறது. அதேபோல நம் கோடி என்று காட்டப்
உதவி என்ற இனத்தில் 1975–76 ஆம் அரசிற்கு கிடைக்கின்ற
என்றிருந்தது, இன்றைக்கு 1977–78 ஆம் ஆண்டில் 32·46 கோடி
கோடி என்று காட்டப்பட்டிருக்கிறது. ஆண்டில் 44·73
வாய்க் கணக்கில் மட்டுமில்லாமல் அதேபோல, வரு
வான பணிகள் என்ற தலைப்பில் செலவு நிலவரத்தில், பொது
கோடி செலவிடப்பட்டிருப்பதாகக் 1975–76 ஆம் ஆண்டு 159·34
காட்டப்பட்டிருக்கிறது. ஆனுல்



1977 ஜூலை 30] [திரு. எஸ். ஆர். இராதா]

1977–78 ஆம் ஆண்டில் இது 204·31 கோடியாகக் காட்டப்பட்டிருக்கிறது. அதேபோல, சமூக சமுதாயப் பணிகள் என்ற தலைப்பில் 1975–76-ல் 242·45 கோடி என்று காட்டப்பட்டிருக்கிறது. ஆனுல், 1977–78-ல் 283·56 கோடி என்று காட்டப்பட்டிருக்கிறது. பொருளாதாரப் பணிகளில் 1975–76-ல் 140·56 கோடி என்றும், அதுவே 1977–78-ல் 154·76 கோடி என்றும் காட்டப்பட்டிருக்கிறது. உதவி மானியங்களில் உதவித் தொகை 1975–76-ல் 15·63 கோடி என்று காட்டப்பட்டிருக்கிறது. அதுவே 1977–78-ல் 20·7 என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதேபோல் மாநில அரசு வரிகளில் உள்ள இனத்தில் விற்பனைவரி தலைப்பில் 1975-76 ல் 208·93 கோடி என்று காட்டப்பட்டிருக்கிறது. அதுவே, 77-78-ல் 251·70 கோடி என்று காட்டப்பட்டிருக்கிறது. அதேபோல, மோட்டார் வண்டிகள் வரியின் மூலமாக 1975-76-ல் 44·01 கோடி என்று காட்டப்பட்டிருக்கிறது. அதுவே 1977–78-ல் 50 கோடி என்று காட்டப்பட்டிருக்கிறது. அதேபோல, செலவினங்கள் தலைப்பில் கல்விக்காக மட்டும் 1975–76-ல் 121·26 கோடி என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதுவே, 1977–78-ம் ஆண்டில் 157·79 கோடி என்று காட்டப்பட்டிருக்கிறது. அதேபோல் வேளாண்மையைச் சேர்ந்த தலைப்பில் 1975–76-ல் 75.62 என்றிருக்கிறது. 1977-78-ல் இது 82·10 என்று காட்டப்பட்டிருக்கிறது. அதேபோல், மருத்துவத்திற்கு 1975-76-ல் 41·30 என்றும், அதுவே 1977–78-ல் 49·30 என்றும் காட்டப்பட்டிருக்கிறது. அதேபோல், பாசன முதலீட்டுத் தலைப்பில் 1975-76-ல் 11·77 என்றும், 1977-78-ல். 24·7 என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட புள்ளிவிவரங்களையெல்லாம் பார்க்கின்ற நேரத்தில் அருமையாக, 1975-76 ல் இருக்கின்ற நிலைமைகளை எந்த வகையிலும் விட்டுவிடாமல், 1975–76 ல் இருந்ததைக் காட்டிலும், 1977-78-ல் பல அருமையான திட்டங்களை அறிவித்திருப்பதை நாம் பாராட்டியாக வேண்டும்.

இந்த அரசு மத்திய அரசிடமிருந்து உதவிகளைப் பெற முடியுமா? திட்டங்களை வாங்கமுடியுமா? என்று சொல்கின்ற நேரத்தில், இந்த அரசு மத்திய சர்க்காருக்கு அதிக அதிகாரங்கள் இருப்பதால் மத்திய சர்க்காருக்கு அடங்கி, தன்னுடைய உரிமைகளை விட்டுக் கொடுத்துவிடும் என்று எதிர்பார்க்கின்றவர்கள் பலபேர் இருக்கின்றார்கள். ஆனுல், இந்த சர்க்காரைப் பொறுத்தவரையில் மத்திய சர்க்காருக்கு அடங்கியோ, கைகட்டிக் கொண்டோ இருக்காது என்பதை நான் நிச்சயமாக உறுதியாக நம்புகிறேன். இதிலே, மாநில சுயாட்சியைப் பற்றிக் கேட்டால், மாநில சுயாட்சியைவிட, பேரறிஞர் அண்ணு அவர்கள் சொன்னூர்கள், 'கட்டுண்டு வாழோம், ஆனுல் அதே நேரத்தில் பிரிவினை நாடோம்; ஆனுல் சமநிலையிலே இணைவோம்' என்பதற்கொப்ப, இந்த அரசு நிச்சயமாக அந்தக் கொள்கையைப் பின்பற்றும் என்பதிலே நான் உறுதியாக இருக்கிறேன்.

நிதி அமைச்சர் அவர்களுக்கு துணையாக குகன் இருந்தார்,
ராமாயணத்திலும் ஆற்றைக் கடப்பதற்கு குகன் இருந்தார்,
அது போல் இங்கே பொருளாதார வெள்ளத்திலிருந்து படகை
நல்லபடியாக கரை சேர்த்து இருக்கிறார்கள் என்பதைப் பார்க்
கும்போது உள்ளபடியே நாம் இதைப் பாராட்ட வேண்டும்.
இந்த நிதிநிலை அறிக்கையைப் பார்க்கும்போது, 1975–76-ல்
இருந்த நிலைமைக்கும், இப்போது அதாவது 1977–78-ம் ஆண்டு
அறிக்கைக்கும் நிலைமை எப்படி இருக்கும் என்பதை புதிய உறுப்
பினர் என்கிற காரணத்தால், பழைய அரசு இருந்தபோது
நிலைமை எப்படியிருந்தது, இப்போது எப்படியிருக்குமோ என்று
சிறிது அச்சத்துடன் இருந்தேன். அந்த முறையில் இந்த
நிதிநிலை அறிக்கையை கவனிக்கவேண்டும் என்று ஆசைப்
பட்டாலும், நிதித் துறையிலிருந்து எங்களால் தூக்கிக்கொண்டு
போக முடியாத அளவுக்கு தந்திருக்கின்ற ஏராளமான புத்தகங்
களை எல்லாம் படித்துப்பார்ப்பதற்கு போதிய அவகாசம் இல்லா
விட்டாலும், சில இனங்களை மட்டும் பார்த்தபோதும், முன்
னால் இருந்த அரசு தந்திருந்த நிதிநிலை அறிக்கையிலும், இப்
போதுள்ள நிதிநிலை அறிக்கையிலுமுள்ள சில புள்ளிவிவரங்
களை மட்டும் என்னால் கவனிக்க முடிந்தது. இவற்றையெல்
லாம் பார்த்தபோது, இந்த புதிய அரசு எந்தவகையிலும்
பழைய அரசுக்கு கீழே போய் ஏதாவது காரியங்களை செய்ய
தவறிவிடுவார்களோ என்று பெரிதும் கவலைப்பட்டுக் கொண்
டிருந்தேன். நான் பார்த்த சில புள்ளிவிவரங்களை இங்கு
சொல்ல ஆசைப்படுகிறேன். இப்போது கொண்டுவரப்பட்டிருக்
கின்ற நிதிநிலை அறிக்கையில் "வருவாய்க் கணக்கு விவரம்"
என்பதில் மொத்த வரவு 1975–76 ஆம் ஆண்டு ரூ. 563·36
கோடி என்று போடப்பட்டிருக்கிறது. ஆனால் 1977–78 ஆம்
ஆண்டில் 633·24 கோடி ரூபாய் என்று போடப்பட்டுள்ளது.
அதில் குறைவு எதுவும் காட்டப்படவில்லை. அதேபோல்
வரிகள் இனத்தில் 1975–76 ஆம் ஆண்டில் 319·10 கோடி
என்று போடப்பட்டிருக்கிறது. 1977–78-ல் 368·10 கோடி
என்று புள்ளிவிவரம் போடப்பட்டிருக்கிறது. இவ்விதம் 49
கோடி ரூபாய் அதிகமாகப் போடப்பட்டு இருக்கிறது.

பிரித்துக் கொடுக்கப்படுகின்றதன்மூலம் இந்திய அரசிட
மிருந்து கிடைக்கும் வருவாய் என்ற தலைப்பில் 1975–76 ஆம்
ஆண்டில் 122·03 கோடி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.
இது 1977–78-ஆம் ஆண்டில் 136·9 கோடி என்று காட்டப்
பட்டிருக்கிறது. அதேபோல நம் அரசிற்கு கிடைக்கின்ற
உதவி என்ற இனத்தில் 1975–76 ஆம் ஆண்டில் 32·46 கோடி
என்றிருந்தது, இன்றைக்கு 1977–78 ஆம் ஆண்டில் 44·73
கோடி என்று காட்டப்பட்டிருக்கிறது. அதேபோல, வரு
வாய்க் கணக்கில் மட்டுமில்லாமல் செலவு நிலவரத்தில், பொது
வான பணிகள் என்ற தலைப்பில் 1975–76 ஆம் ஆண்டு 159·34
கோடி செலவிடப்பட்டிருப்பதாகக் காட்டப்பட்டிருக்கிறது. ஆனால்



1977–78 ஆம் ஆண்டில் இது 204·31 கோடியாகக் காட்டப்
பட்டிருக்கிறது. அதேபோல, சமூக சமுதாயப் பணிகள் என்ற
தலைப்பில் 1975–76-ல் 242·45 கோடி என்று காட்டப்பட்
டிருக்கிறது. ஆனால், 1977–78-ல் 283·56 கோடி என்று
காட்டப்பட்டிருக்கிறது. பொருளாதாரப் பணிகளில் 1975–
76-ல் 140·56 கோடி என்றும், அதுவே 1977–78-ல் 154·76
கோடி என்றும் காட்டப்பட்டிருக்கிறது. உதவி மானியங்களில்
உதவித் தொகை 1975–76-ல் 15·63 கோடி என்று காட்டப்
பட்டிருக்கிறது. அதுவே 1977–78-ல் 20·7 என்று சொல்லப்பட்
டிருக்கிறது. அதேபோல் மாநில அரசு வரிகளில் உள்ள
இனத்தில் விற்பனைவரி தலைப்பில் 1975-76 ல் 208·93 கோடி
என்று காட்டப்பட்டிருக்கிறது. அதுவே, 77-78-ல் 251·70
கோடி என்று காட்டப்பட்டிருக்கிறது. அதேபோல, மோட்
டார் வண்டிகள் வரியின் மூலமாக 1975-76-ல் 44·01 கோடி
என்று காட்டப்பட்டிருக்கிறது. அதுவே 1977–78-ல் 50
கோடி என்று காட்டப்பட்டிருக்கிறது. அதேபோல, செலவினங்
கள் தலைப்பில் கல்விக்காக மட்டும் 1975–76-ல் 121·26 கோடி
என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதுவே, 1977–78-ம் ஆண்
டில் 157·79 கோடி என்று காட்டப்பட்டிருக்கிறது. அதே
போல் வேளாண்மையைச் சேர்ந்த தலைப்பில் 1975–76-ல் 75.62
என்றிருக்கிறது. 1977-78-ல் இது 82·10 என்று காட்டப்
பட்டிருக்கிறது. அதேபோல், மருத்துவத்திற்கு 1975-76-ல்
41·30 என்றும், அதுவே 1977–78-ல் 49·30 என்றும் காட்
டப்பட்டிருக்கிறது. அதேபோல், பாசன மூதலீட்டுத் தலைப்
பில் 1975-76-ல் 11·77 என்றும், 1977-78-ல் 24·7 என்றும்
சொல்லப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட புள்ளிவிவரங்களை
யெல்லாம் பார்க்கின்ற நேரத்தில் அருமையாக, 1975-76 ல்
இருக்கின்ற நிலைமைகளை எந்த வகையிலும் விட்டுவிடாமல்,
1975–76 ல் இருந்ததைக் காட்டிலும், 1977-78-ல் பல அருமை
யான திட்டங்களை அறிவித்திருப்பதை நாம் பாராட்டியாக
வேண்டும்.

இந்த அரசு மத்திய அரசிடமிருந்து உதவிகளைப் பெற முடியு
மா? திட்டங்களை வாங்கமுடியுமா? என்று சொல்கின்ற நேரத்தில்,
இந்த அரசு மத்திய சர்க்காருக்கு அதிக அதிகாரங்கள் இருப்ப
தால் மத்திய சர்க்காருக்கு அடங்கி, தன்னுடைய
உரிமைகளை விட்டுக் கொடுத்துவிடும் என்று எதிர்பார்க்கின்ற
வர்கள் பலபேர் இருக்கின்றார்கள். ஆனால், இந்த சர்க்காரைப்
பொறுத்தவரையில் மத்திய சர்க்காருக்கு அடங்கியோ, கைகட்டிக்
கொண்டோ இருக்காது என்பதை நான் நிச்சயமாக உறுதி
யாக நம்புகிறேன். இதிலே, மாநில சுயாட்சியைப் பற்றிக்
கேட்டால், மாநில சுயாட்சியைவிட, பேரறிஞர் அண்ணா அவர்
கள் சொன்னார்கள், 'கட்டுண்டு வாழோம், ஆனால் அதே
நேரத்தில் பிரிவினை நாடோம்; ஆனால் சமநிலையிலே இணை
வோம்' என்பதற்கொப்ப, இந்த அரசு நிச்சயமாக அந்தக் கொள்
கையைப் பின்பற்றும் என்பதிலே நான் உறுதியாக இருக்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் 24 நாட்களில் எவ்வளவு பெரிய சாதனைகளைச் செய்ய முடியும் என்று பார்க்கின்ற நேரத்தில், பல்வேறு சாதனைகள் இந்த 24 நாட்களில், பல அரசுகள் செய்யத் தவறியதை, பல அரசுகள் விட்டுவிட்டதையெல்லாம் இந்த 24 நாட்களிலே இந்த அரசு இந்த நிதிநிலை அறிக்கையிலே பல்வேறு திட்டங்களையெல்லாம் சொல்லியிருக்கிறார்கள்.

[முற்பகல் 9.20]

நான் அதை நினைத்துப் பார்க்கிற நேரத்தில் எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. நாளைக்கு ஒரு திட்டம் என்று எடுத்துக் கொண்டால் 24 திட்டங்களை அறிவித்திருப்பார்கள் என்று பார்த்தேன். ஆனால் பல திட்டங்களைச் சொல்லியிருக்கிறார்கள். எனக்குத் தெரிந்த வரையில் இன்றைக்குப் புதிதாக அறிவிக்கப்பட்டிருக்கும் திட்டங்களில் வேளாண்மைப் பொருள்கள் விற்பனையை விரிவுபடுத்துவதற்காக தனியாக இயக்குநர் அலுவலகத்தை ஏற்படுத்தி அதற்கான நடவடிக்கைகளை எடுப்பதாக அறிவித்திருக்கிறார்கள். அதே போல் தூத்துக்குடியில் மீனளக் கல்லூரிக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். மூன்று கால்நடை வளர்ப்புத் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். ஈரோட்டில் மூன்று கோடி ரூபாய் செலவில் பால் பண்ணைத் திட்டம்; வட ஆற்காடு மாவட்டத்தில் கமண்டல ஆற்றுக்குக் குறுக்கே நீர்த்தேக்கத் திட்டம், புதிய சர்க்கரை ஆலை ஒன்று அமைத்திட 17 லட்சம் ரூபாய், மக்களுக்குக் குடிநீர் வசதி செய்து தருவதற்கான திட்டங்கள், அரிசன பழங்குடி மக்களுக்கு இலவசக் கல்வி, இலவச புத்தகங்கள், மீனவர்கள் கடலில் சென்று இறந்துவிட்டால் 5,000 ரூபாய் தருவது, அதற்குப் பின்னால் அந்தக் குடும்பங்களுக்கு மேலும் ரூ. 5,000 உதவி, தொழிலாளர் நல வாரியம் அமைத்து தொழிலாளர்கள் தங்க விடுதி கட்டுவது, கிராமப்பகுதிகளில் மினி பஸ்கள் விடுவது, 24 வளர்ச்சி வட்டாரங்களில் நடமாடும் மருத்துவ நிலையம், ஐயாயிரம் மக்கள் தொகை கொண்ட பகுதிகளில் மினி ஹெல்த் சென்டர்ஸ், ஏழைத் தமிழ்ப் புலவர்களுக்கு 75 ரூபாய் தருவது, மதுரை திருமலை நாயக்கன் மகால், இராமநாதபுரம் இராமலிங்க விலாஸ், தரங்கம்பாடி கோட்டை ஆகியவற்றைப் பாதுகாப்பது, வேலை வாய்ப்பைப் பெருமளவில் பெருக்குவது, கிராமங்களில் நிலப்படை அமைப்பது, அரசு ஊழியர்களுக்கு 10 ரூபாய் பஞ்சப்படி வழங்கியதை 20 ரூபாயாக உயர்த்தியது, மூன்றாவது ஊதியக் குழு அமைத்தது, புதிய ஓய்வு காலத் திட்டங்களைத் துவக்கியது, 30—6—1977 அன்று முடிவுற்ற பசலி ஆண்டுக்கு வரி வசூல் தள்ளி வைக்கப்பட்டது தற்போது ரத்து செய்யப்பட்டது, சினிமா கேளிக்கை வரி குறைப்பு, உயர்ந்த தரமான சினிமாப் படங்களைத் தயாரிப்பவர்களுக்கு ஒரு லட்சம் ரூபாய், பல்கலைக் கழக ஆசிரியர்களுக்கு பல்கலைக்கழக நிதிக் குழு பரிந்துரை செய்த ஊதியம் தருவது, பிற மாநில பல்கலைக்கழகங்களில் தமிழ் பகு[illegible]



ஏற்பாடு செய்வது, ஆசிரியர்களுக்கு வீட்டு வசதி கூட்டுறவுத் துறையின் மூலமாக ஏற்படுத்துவது என்பது போன்று பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

இந்தத் திட்டங்களையெல்லாம் இந்த அரசு செய்கிற நேரத்தில் அரசு ஊழியர்களுக்கான பஞ்சப்படியை உயர்த்தித் தருகிற நேரத்தில் நான் ஒன்றைக் கவனிக்கிறேன். பழைய அரசு பஞ்சப்படிக்கு ஒரு உச்சவரம்பை விதித்ததை நான் மறக்கவில்லை. பல உச்சவரம்புகள் வந்தாலும் அரசு ஊழியர்களின் பஞ்சப்படிக்கும் உச்சவரம்பு வந்தது என்பதை மறக்கவில்லை. அரசு ஊழியர்களிடமிருந்து மாதம் 15 ரூபாய் பிடித்து வந்தால் 25 ஆண்டு கழித்து அவர்களுக்கு 10,000 ரூபாய் தருவது என்பது இந்த அரசு அறிவித்திருக்கும் புதிய திட்டம். இந்தத் திட்டத்தைப் பற்றி நேற்று மாண்புமிகு உறுப்பினர் ப.உ.சண்முகம் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். இந்த 4,500 ரூபாயை இந்தியன் வங்கியில் போட்டால் நீங்கள் தருகிற பத்தாயிரத்தைவிட அதிகமான தொகை தருவார்கள் என்று சொன்னார்கள். நான் உள்ளபடியே அதைக் கேட்டு மகிழ்ச்சியடைந்தேன். அதற்குப் பின்னாலே சில பேரிடத்திலே பேசிப் பார்த்தேன். கூட்டுறவில் இருக்கும் வங்கியில் அதே பணத்தை 25 ஆண்டுகளுக்குக் கொடுத்தால் ப. உ. ச. சொன்னதை விட அதிகமாகத் தருவதாகச் சொல்லுகிறார்கள். கும்பகோணத்திலுள்ள சிட்டி யூனியன் பாங்கிலே கொடுத்தால் இன்னும் அதிகமாகத் தருவதாகச் சொல்லுகிறார்கள். அதைவிட இன்னொருவர் சொன்னார்—மான்மல்சந்த் ஜெயினிடம் கொடுத்தால் இன்னும் அதிகமாக வட்டி தருவார் என்று. அதே போல் அரசு ஊழியர்களிடமிருந்து பிடிக்கிற பிராவிடண்ட் பண்ட் பணத்தைப் பிடிக்காமல் அப்போதைக்கப்போது கொடுத்துவிட்டால் இன்னும் ஏராளமான பணம் வட்டியாகக் கிடைக்கும். எனவே, நான் கேட்டுக் கொள்கிறேன், திட்டங்களை அறிவிக்கிற நேரத்தில் இன்றைக்கு இருக்கிற நிலைமைகளில் எந்த அளவுக்கு நிலைமைகள் இருக்கின்றன என்பதைக் கவனித்து அரசு சில திட்டங்களை சொல்லுகிற நேரத்தில் அதை வரவேற்காவிட்டாலும் இப்படி வட்டிக்கணக்கு பார்த்துக் கொண்டிருக்க வேண்டியதில்லை. இப்படி வட்டிக் கணக்குப் பார்த்தால் அது பிராவிடண்ட்பண்டாக இருந்தாலும், கிராசுவிடியாக இருந்தாலும் வட்டிக்கு வெளியே கொடுத்தால் அதிகமாகத்தான் வரும். எனவே அரசு யோசிக்க வேண்டியது இதை வட்டிக்கடைகளுக்கே கொடுத்து விடலாமா அல்லது நாம் வைத்துக் கொள்ளலாமா என்பதுதான்..............

<u>திரு. துரை கோவிந்தராசன்</u> : பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன், சார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்றுப் பேசுகின்றாரா அல்லது எதிர்த்துப் பேசுகின்றாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : நண்பர் கொறடா அவர்களுக்கு நான் ஆதரிக்கிறேனா இல்லையா என்ற சந்தேகம். நான் இந்த வட்டிக்கணக்கைப் பார்த்துச் சொன்னதும், அப்படிப்பட்ட சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன். அவருக்கு நான் சொல்லிக்கொள்கிறேன், நான் எப்போதும் வட்டிக் கடைகளை ஆதரித்துப் பழக்கப்பட்டவன் அல்ல, நான் அரசாங்கத் திட்டங்களை வரவேற்கிறவனே தவிர வட்டிக் கடைகளை ஆதரிக்கிறவன் அல்ல.

அடுத்து, இந்த நிதிநிலை அறிக்கையிலே கழிவுநீர்த் திட்டத்தினைப் பற்றிச் சொல்லியிருக்கின்றார்கள், நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள். நான் என்னுடைய சுயநலத்தின் அடிப்படையிலே ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். கழிவுநீர்த் திட்டங்களுக்காக பல கோடி ரூபாய்களை ஒதுக்கிய நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ஏனோ தெரியவில்லை எங்கள் கும்பகோணத்தை மறந்து விட்டார்கள், அதை சேர்க்காமல் விட்டு விட்டார்கள். அதையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். பழைய அரசில், முப்பது ஆண்டுகள் காங்கிரஸ் அரசு இருந்த காலத்திலே புதை சாக்கடைத் திட்டம் அங்கே பல ஆண்டுகளுக்கு முன்னர் நிறைவேற்றத் திட்டமிடப்பட்டு ஒரு பகுதியிலே நிறைவேற்றப்பட்டு இருக்கிறது. மற்றப் பகுதிகளிலே எடுத்துக்கொள்ளப்படவில்லை. நான் இந்த நேரத்திலே ஒன்றை கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். உலகத்திலேயே அதிகமான கொசுவுக்குப் பேர்போன இடம் கும்பகோணம் தான். ஆகவே புதை சாக்கடைத் திட்டத்திலே அந்த கும்பகோணத்தையும் மறந்துவிடக் கூடாது என்று நான் நிதியமைச்சர் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக் கொண்டு ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்லி என்னுடைய உரையை முடித்துக் கொள்ளலாம் என நினைக்கிறேன்.

இந்த அரசை சிலர் பலூனுக்கு ஒப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். இது என்றைக்காவது உடையாதா, என்றாவது யாராலாவது உடைக்கப்படுமா, இந்த பலூன் காற்று இறங்கிப் போகாதா என்று எதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள். நான் அவர்களுக்கெல்லாம் ஒன்றைச் சொல்லிக்கொள்வேன். இந்த அரசு, பலூன் அல்ல, உடையும் என்று நினைக்காதீர்கள், யாராவது உடைப்பதற்கு முயற்சித்தால் நாங்கள் உடைக்க விடுவதாக இல்லை என்பதைத் தெரிவித்து நிச்சயமாக இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று அமைகிறேன்.

*திரு. த. புஷ்பராஜு : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 1977-78-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீதான எனது கருத்தை இங்கே கூற விரும்புகிறேன். கிராமங்களிலே உள்ள



ஆரம்பப் பள்ளிகளுக்கு நிரந்தரமான கட்டடங்கள் இல்லாமல், கட்டடங்கள் உள்ள இடங்களிலே போதிய வகுப்பறைகள் இல்லாமல், மாணவ மாணவிகள் எல்லாம் மரத்தடியில் உட்காருகின்ற நிலைமை இருப்பதை உணர்ந்து இந்த நிலை மாற கல்விக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்ற நிதியில் அதிகமான நிதி கிராமங்களிலுள்ள ஆரம்பப் பள்ளிகளுக்குத் தேவையான கட்டட வசதிகளைச்செய்து கொடுப்பதற்கு ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அரிசனங்கள், பழங்குடியினர், பின்தங்கிய வகுப்பினர், மீனவர்கள், கைத்தறி நெசவாளர்கள் இவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்வதற்காக இந்த வரவு-செலவுத் திட்டத்தில் பல திட்டங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவர்களோடு, இலங்கையிலிருந்து வந்த அகதிகளுக்கும், தாயகம் திரும்பியுள்ள அவர்களுக்கும், அந்த ஏழை எளியவர்களுக்கும் நிதி ஒதுக்கி அவர்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்த அதிகமான சலுகைகள் கொடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நிலத்தடி நீரை முழுமையாகப் பயன்படுத்துவதற்கு முக்கியத்துவம் கொடுத்து, இந்த வரவு-செலவுத் திட்டத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. நிலத்தடி நீரைப் பெறுகின்ற முறையில் ஒவ்வொரு மாவட்டத்திலேயும் வெவ்வேறான நீர் மட்டத் தன்மைகள் இருக்கின்றன. அவைகளையும் கணக்கிலே எடுத்துக் கொண்டு ஒரே திட்டத்தை எல்லா மாவட்டங்களுக்கும் வைத்துக் கொள்ளாமல் ஆங்காங்கே உள்ள நிலைமைகளைப் பொறுத்து இந்தத் திட்டத்தை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எங்கள் புதுக்கோட்டை மாவட்டத்திலே பாசன வசதிகளை அதிகப்படுத்த அங்கேயுள்ள குளங்களிலே உள்ள நீர்ப்பிடிப்பை அதிகப்படுத்தக் கூடிய முறையில் ஆழ் கிணறுகளை அமைத்து, மழையை நம்பி வாழ்கின்ற அந்த விவசாய மக்களுக்கு நீர் கிடைக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். கிராமங்களிலே விவசாயிகளுக்குத் தேவையான உரம், பூச்சி மருந்து இவைகளை விற்பதற்கு சில கிராமங்களிலே "அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன்" மூலமாகவும், அதோடு சில தனி நபர்கள் மூலமாகவும் விற்பனை செய்கிறார்கள். அந்தத் தனி நபர்கள் இந்த "அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன்" மூலமாக விநியோகிக்கப்படுவதை எந்த எந்த வழிகளை கையாண்டு தடுக்க முடியுமோ அந்த வழிகளையெல்லாம் செய்து வருகிறார்கள்.

(முற்பகல் 9-30)

அதுமட்டுமல்லாமல், உரம், பூச்சி மருந்து முதலியவைகளில் கலப்படம் செய்து, ஏழை விவசாயிகளை ஏமாற்றி விவசாயத்தைப் பாழ்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக புதுக்கோட்டை

மாவட்டத்தைப் பொறுத்த வரையில் பல அக்ரோ இன்டஸ்ட்ரீஸ் மூடப்பட்டு விட்டன என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே, இந்த நிலைமை மாற, உரம், பூச்சிக்கொல்லி மருந்து போன்ற பொருட்களை தனி நபர்கள் விற்பனை செய்வதைத் தடுத்து கிராமக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமும், அக்ரோ இன்டஸ்ட்ரீஸ் மூலமாகவும் விற்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, புதுக்கோட்டை மாவட்டத்திலே மூன்று ஆண்டுக் காலமாக ஏராளமான விவசாயிகள் பேங்கில் கடனைப் பெற்று பம்பு செட்டுகள் வாங்கித் தயாராக இருந்தும், அவர்களுக்கு மின் இணைப்பு வழங்கப்படவில்லை. இதுபற்றி மின்சார வாரியத்தில் கேட்டால் கிரவுண்ட் வாட்டர் கிளியரன்ஸ் சர்டிபிகேட் வாங்கி வந்தால்தான் மின் இணைப்பு கொடுப்போம் என்று சொல்கிறார்கள். அது இல்லை என்றால் விதிகளின்படி கொடுக்க வழி இல்லை என்று சொல்கிறார்கள். புதுக்கோட்டை மாவட்டத்திற்கு மின் இணைப்பு கொடுப்பதைப் பொறுத்தவரையிலும் மின் இணைப்பு கொடுப்பதற்குள்ள இந்த விதியை மாற்றி இணைப்பு கொடுக்க ஏற்பாடு செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய ஆலங்குடி தொகுதியில் பல கிராமங்களுக்கு பஸ் போக்குவரத்து வசதி இல்லாமல் இருக்கிறது. ஆலங்குடியிலிருந்து கொத்தமங்கலம், கருக்காகுரிச்சி, கருப்பட்டிப்பட்டி, நெடுவாசல், வேங்கடகுழும், குளவாய்ப்பட்டி ஆகிய கிராமங்களுக்கு உடனடியாக பஸ் போக்குவரத்து வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக என்னுடைய ஆலங்குடி தொகுதியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் மிகக் குறைவாக உள்ளன. வடகாடு, சேந்தாங்குடி, குளவாய்ப்பட்டி, தாந்தானி, வெட்டன்விடுதி, வெல்லத்திரா கோட்டை ஆகிய கிராமங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்களை அமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

முடிவாக, தாய்க்குலத்தின் மீது மிகுந்த அக்கறை கொண்டுள்ள இந்த அரசு, சமுதாயத்தில் பொருள் இல்லாமல், தங்கள் வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வழியில்லாமல் இருக்கும் தாய்க் குலத்திற்கு ஒரு நல்ல வழியைச் செய்ய வரதட்சிணை ஒழிப்பு முறையைத் தீவிரமாக அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி கூறி என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

*திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, இந்த மன்றத்தின் முன்பாக நமது நிதியமைச்சரவர்கள் சமர்ப்பித்திருக்கின்ற 1977-78-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மேல்



சில கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பளித்தமைக்காக உங்களுக்கு நன்றியை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். நிதிநிலை ஆண்டறிக்கை என்பது அரசியலமைப்புச் சட்டம் 202-ஆவது பிரிவின்படி கட்டாயக் கடமையாக்கப்பட்டிருக்கிறது. சட்டசபைத் தேர்தல் என்பதும், இதுபோன்ற நிதிநிலை அறிக்கைகளை விவாதிப்பது என்பதும் ஜனநாயகத்தில் நமக்குக் கிடைத்திருக்கின்ற உரிமைகளாகும். ஆனால் கடந்த கால நிலைமைகளைப் பார்க்கும்பொழுது அரசியல் அமைப்புச் சட்டம் 42-ஆவது திருத்தத்தைப்பற்றி நாடு நன்றாக அறியும். 42-ஆவது திருத்தத்தைக் கொண்டு வந்தவர்கள் சர்வாதிகாரத்திற்கு அடிகோலும் நடவடிக்கைகளை எடுத்தார்கள். ஜனநாயக உரிமைகள் பறிக்கப்பட்டு, கூட்டாட்சித் தத்துவத்திற்கு சாவுமணியடித்து, அரசியலமைப்புச் சட்டத்தின் உண்மையான உருவத்தைச் சீர்குலைத்த நிகழ்ச்சிகளையெல்லாம் நாட்டு மக்கள் மறந்திருக்க மாட்டார்கள். ஆனால் ஜனநாயக உணர்வு கொண்ட மக்கள் அந்த சர்வாதிகார எண்ணத்தை வீழ்த்தி இன்றைக்கு ஜனநாயக ஆட்சி மத்தியில் ஏற்பட்ட காரணத்தினால் இன்றைக்கு இதுபோன்ற விவாதங்களை நடத்துவதற்கு நமக்கு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. ஒருவேளை அந்தப் பழைய ஆட்சியே தொடர்ந்து இருந்திருந்தால் இதுபோன்ற விவாதத்தை நாம் பார்த்திருக்க முடியாது. அரசாங்க உத்தரவின் மூலம், "அட்மினிஸ்ட்ரேட்டிவ் ஆர்டர்" மூலம் பட்ஜெட்டை நிறைவேற்றி இருப்பார்கள் என்றுதான் நம்புகிறேன். இந்த வாய்ப்பை நமக்குக் கொடுத்த ஜனநாயக உணர்வைக் கொண்ட மக்களுக்கு நன்றி செலுத்த நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

நம்முடைய நிதியமைச்சரவர்கள் அனுபவம்வாய்ந்த அரசியல்வாதி. பல ஆண்டு அறிக்கைகளைப் பற்றி பாராளுமன்றத்தில் விமர்சனம் செய்திருக்கக் கூடியவர்கள். சில நேரங்களில் கடுமையாக விமர்சனம் செய்திருக்கிறார்கள். அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு இந்த நிதிநிலை அறிக்கையில் புரட்சிகரமான சோஷலிசத் திட்டங்களெல்லாம் அறிவிக்கப்படும் என்று நான் எதிர்பார்த்தேன். ஆனால் அப்படி எந்தவிதமான அறிவிப்பும் இல்லை என்பதை பார்க்கும்பொழுதுதான் வேதனையாக இருக்கிறது. நம்முடைய நிதியமைச்சரவர்கள் தங்களுடைய நிதிநிலை அறிக்கையைத் துவங்கும்பொழுது சற்றுத் தயக்கத்தோடும், அச்சத்தோடும் ஆரம்பித்திருக்கிறார்கள்—ஆங்கிலத்திலே சொல்ல வேண்டுமானால், "with an apologetic tone" ஆரம்பித்திருக்கிறார்கள். நான் நம்முடைய நிதியமைச்சரவர்களின் திறமையைச் சந்தேகிக்க மாட்டேன், அவரால் பட்ஜெட் தயாரிக்க முடியாது என்று சொல்ல மாட்டேன். நான் எண்ணுவது, நான் நம்புவது என்னவென்றால் நம்முடைய நிதிநிலை அறிக்கையில் புரட்சிகரமான திட்டங்களைக் கொண்டுவர முடியவில்லை என்பதை அவர்கள் உணர்கிறார்கள். இருக்கின்ற சூழ்நிலைகளை உணர்கிறார்கள், நிலைமைகளைச் சந்திக்கிறார்கள்,

கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியவில்லையே, மக்களுடைய கஷ்டங்களைப் போக்க முடியவில்லையே என்று உணர்கிறார்கள், அதிகாரம் மத்திய அரசாங்கத்தில் தேங்கியிருக்கும் நிலைமைகளை உணர்கிறார்கள் என்றுதான் நான் நம்புகிறேன். ஏனென்று சொன்னால் இன்று விலைவாசிகளைக் கட்டுப்படுத்த வேண்டுமென்றால் மத்திய அரசாங்க அதிகாரத்தைத்தான் பயன்படுத்த வேண்டும். பயிர் இன்ஷூரன்ஸ் திட்டமானாலும் மத்திய அரசாங்கத்தை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. அவைகளுக்கெல்லாம் போதிய அதிகாரங்கள் இல்லையென்பதை நிதியமைச்சர் உணர்கிறார் என்று நம்புகிறேன். மாநில அரசு உரிய அதிகாரம் இல்லாத அமைப்பு என்பதை அவர் தெரிந்து கொள்கிறார் என்று நம்புகிறேன். நம்முடைய நிதியமைச்சர் சட்ட மேதை ஸெதல்வாட்டை துணைக்கு அழைக்கிறார் என்று கருதுகிறேன். அவர் கருத்துக்களை நான் முழுக்க முழுக்க ஏற்றுக்கொள்கிறேன். நிதியமைச்சர், ஸெதல்வாட் கருத்துக்களை மேற்கோள் காட்டினார்கள். ஆனால் அதோடு நின்றுவிட்டார்கள். மாநிலங்கள் நியாயமான அதிகாரங்களைப் பெறுவதற்காக அண்ணா அவர்களின் மாநில சுயாட்சி அல்லது ஆளுங் கட்சியின் மாநிலங்களுக்குத் தேவையான அதிகாரங்களைப் பெற மேற்கொண்டு என்ன நடவடிக்கையை எடுக்கப் போகிறார்கள் என்பதை நாங்கள் மிகுந்த ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். மாநிலங்களுக்கு அதிகாரங்கள் தேவை என்று பல பேர் வற்புறுத்தினாலும் அந்தக் கருத்துக்கு உயிரூட்டிய பெருமை அண்ணா அவர்களைச் சார்ந்தது என்று சொன்னால் அது மிகையாகாது. இன்று பல்வேறு அரசியல் தலைவர்களும் அந்தக் கருத்துக்கு வலுவூட்டித்தான் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். காஷ்மீர் பிரதமராக உள்ள ஷேக் அப்துல்லா அவர்கள் சமீப காலத்திலே ஐதராபாத்திலே பேசும்பொழுது குறிப்பிட்டிருக்கிறார்,

While addressing pressmen under the auspices of the Hyderabad district unit of Andhra Pradesh union of the working journalists, he said: —

'There was now a great deal of concentration of power at the Centre as a result of which States like Tamil Nadu feel that they have been crippled.

Concentration of power in the hands of the Centre had somewhat crippled the States to deal with their own problems. While the Centre should look into the integrity and security of the country, it should ease its grip in other matters.'

என்று கருத்து தெரிவித்திருக்கிறார்கள். அதேபோல், சமீப காலத்திலே மேற்கு வங்கத்து முதலமைச்சராகிய திரு. ஜோதி பாசு அவர்கள் மத்திய மாநில உறவுகளைப் பற்றிச் சொல்லி,



மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்களை வற்புறுத்தி இருக்கிறார்கள். அந்தக் குறிப்பையும் நிதியமைச்சர் கவனித்திருப்பார் என்று நம்புகிறேன். 11—7—1977 அன்று திரு. ஜோதி பாசு அவர்கள் சொல்லிய கருத்து என்னவென்றால்,

Eventhough the structure of the Indian political set up was federal in concept, in effect it was unitary. The result was the States were dependent for almost everything on the Centre.

He did not think it was possible to build up a strong country by concentrating all powers in the hands of the Central Government and reinforcing the police or the navy.

என்பதாகும்.

மாநில அதிகாரங்கள், decentralisation of powers என்பது பரவலாகப் பேசப்படுகின்ற இன்றைய சூழ்நிலையிலே நம்முடைய நிதியமைச்சரை நான் கேட்டுக்கொள்வது மாநிலங்களுக்கு அதிகாரங்கள் பெற அவர்கள் கவனம் செலுத்த வேண்டும்; முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்பதுதான்.

அடுத்து, தலைவர் அவர்களே, நம்முடைய நிதி அமைச்சர் கொண்டுவந்திருக்கிற இந்த பட்ஜெட்டிலே, டெஃபிஸிட் கொண்டுவந்திருக்கிறார்கள். சுமார் ரூ. 25 கோடி அளவுக்கு டெஃபிஸிட் என்று நிதியமைச்சரவர்கள் சொல்லி இருக்கிறார்கள். ஆனால் ''இந்து'' பத்திரிகையைப் பார்க்கும்போது அவர்கள் 'காப்பிடல் டெஃபிஸிட்' ரூ. 69·70 கோடி என்று சொல்லியிருக்கிறார்கள். நேற்றைக்குக் கூட பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது.

Among the short-term measures suggested is the need to reduce deficit financing by the States to the minimum and the Centre has already written to the States reminding them of their responsibility to ensure th's.

என்று 'டெஃபிஸிட் பைனான்ஸ்'ப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். அதற்குள்ளே நான் செல்ல விரும்பவில்லை.

நம்முடைய நிதியமைச்சரவர்கள் சில இடங்களிலே வரி விதிப்பிலே சலுகைகளைக் கொடுத்திருக்கிறார்கள். அவை வரவேற்கத் தக்கது என்றாலும்கூட, நம்முடைய நிதியமைச்சரவர்கள் 'பினான்ஷியல் ரிசோர்ஸஸ்' பற்றி, 'நாஷனல் பிளானிங் கமிஷன்', 'பினான்ஸ் கமிஷன்' ஆகியவற்றோடு பேசும்போது அவர்கள் பதில் எவ்வளவு கசப்பாக இருக்கும் என்ற அனுபவத்தைப் பெற இருக்கிறார்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்த நிலைமையை நான் சுட்டிக்காட்ட விரும்புவதற்குக் காரணம்,

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1977 ஜூலை 30

'பினான்ஸ் கமிஷன்', 'நாஷனல் பிளானிங் கமிஷன்' ஆகியவற்றோடு நீங்கள் விவாதிக்கும்போது, நம்முடைய உரிமைகளை நிலைநாட்ட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

சமீபகாலத்திலே, 7-வது 'பினான்ஸ் கமிஷன்' நியமிக்கப்பட்டிருக்கிறது. மத்திய சர்க்கார், 7-வது 'பினான்ஸ் கமிஷனை ஜஸ்டிஸ் ஷெலாட் தலைமையில் நியமித்திருக்கிறது. அந்த பினான்ஸ் கமிஷன், அரசமைப்புச் சட்டப்படி மாநில மத்திய அரசாங்கத்தினுடைய நிதிநிலைமைகளைப் பங்கிடுவதற்காக, வழிவகைகளை வகுத்திடுவதற்காகச் செயல்பட இருக்கிறது.

(முற்பகல் 9-40.)

இதற்கு முன்னாலே ஒரு பைனான்ஸ் கமிஷன் நியமித்தார்கள். 6-வது நிதிக் கமிஷன். அந்த பைனான்ஸ் கமிஷனுக்கு ஒரு அரசியல்வாதியைத் தலைவராகப் போட்டார்கள். முதலமைச்சர் பதவி இழந்த ஒருவரை ''அக்காமொடேட்'' செய்வதற்கு அவரைத் தலைவராகப் போட்டார்கள். அந்த பைனான்ஸ் கமிஷனிடத்தில் அன்றைக்கு இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு, மாநில உரிமைகளை நிலைநாட்ட, மாநிலங்களுக்குக் கொடுக்க வேண்டிய நியாயமான நிதிகளைப் பற்றியும் ஒரு மெமோரண்டம் கொடுத்தோம். மாநில உரிமைகள், நியாயமான உரிமைகள் காப்பாற்றப்படும் என்று எதிர்பார்த்தோம். ஆனால் நியாயமான உரிமைகள் காப்பாற்றப்படவில்லை என்பதில் நாம் ஏமாற்றம் அடைந்தோம். ஆனால் இன்றைக்கு நியமிக்கப்பட்டிருக்கிற நிதிக் கமிஷன் ஒரு நீதிபதியைத் தலைவராகக் கொண்டிருக்கிறது. அந்த நீதிபதிக்கு அவருக்குக் கிடைக்கவேண்டிய உரிமைகள் கிடைக்கவில்லை என்று ஒரு கருத்து இருக்கிறது. எனவே, உரிமை என்றால் என்ன, உரிமை கிடைக்கவில்லை என்றால் எவ்வளவு வேதனையாக இருக்கும் என்று அவர் புரிந்து கொண்டிருப்பார் என்று நினைக்கிறேன். எனவே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இந்த நிதிக் கமிஷன் மூலம் நியாயமானவைகளை வற்புறுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நான் நிதி அமைச்சருக்கு வேண்டுகோள் விடுவது நிதிக் கமிஷன் முன்னாலே நம்முடைய அரசாங்கத்தின் கருத்துக்களை வைக்கும்போது எதிர்க்கட்சித் தலைவர்களைக் கலந்து ஆலோசித்து அவர்களுடைய அனுபவபூர்வமான கருத்துக்களைக் கவனத்தில் கொண்டு, ஏகோபித்த கருத்தை, நிதிக் கமிஷன் முன்பு வைப்பார்களானால் அது தமிழ்நாட்டு மக்களுக்கு நன்மையாக இருக்கும் என்று நம்புகிறேன்.

அடுத்த நாட்டில் ''எமர்ஜன்சி எர்சஸஸ்'' பற்றி விசாரணை செய்வதை நாம் பார்க்கிறோம். மத்திய அரசாங்கத்லும் ஒரு குழு இருக்கிறது. மாநில அரசாங்கத்திலும் அதிகாரிகள் நியமிக்கப்பட்டு, நடைபெற்ற எக்சஸ்களைப் பற்றி விவரங்களை



1977 ஜூலை 30] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

சேகரிக்கவேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் என்ன காரணத்தாலோ இந்த அரசாங்கம் அதைச் செய்யவில்லை. அதனால் இங்கே நடைபெறவில்லை என்று சொல்ல முடியாது. இங்கே மத்திய சிறைச்சாலையிலே நடைபெற்ற கொடுமைகளைப் பற்றி விசாரணை நடைபெற்று வருகிறது. திராவிட முன்னேற்றக் கழக அரசு கலைக்கப்பட்ட பிறகு பல கொடுமைகள் நடந்திருக்கின்றன. உதாரணமாக நீலகிரி மாவட்டத்தில் 1,000 பேருக்கு மேல் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அங்கே எம்.ஏ. பட்டதாரி—பகுத்தறிவாளர் கழக உறுப்பினர்—ஒருவரை காவல் நிலையத்தில் வைத்து, மேஜையை வாயால் கவ்வச் சொல்லிக் கடுமையாக அடித்திருக்கிறார்கள். அதை நாம் மறந்துவிட முடியாது. அதேபோல் பல நூற்றுக்கணக்கானவர்கள் கொடுமைப் படுத்தப்பட்டிருக்கிறார்கள்.

உடுமலைப் பேட்டை தொகுதியிலே தேவனூர் புதூர் என்ற ஊரிலே, திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளர் திரு. திருமலைசாமி என்பவரை, அங்கே இருந்த காங்கிரசார் தூண்டிவிட்டு, உள்ளூர் காவல் நிலையத்தில் அடித்தால் பீதி ஏற்படும் என்று கருதி, அவுட் ஆப் ஜூரிஸ்டிக்ஷன், வெளியே கொண்டு சென்று கோமங்கலம் என்ற காவல் நிலையம் கொண்டு சென்று நிர்வாணமாக்கி கொடுமைப்படுத்தியிருக்கிறார்கள். அவருக்கு உடம்பெல்லாம் வீங்கி இருந்தது. ஒரு வாரத்திற்குப் பின் நான் போய் அவரைப் பார்த்தபோது அவருடைய நிலைமை அவ்வளவு மோசமாக இருந்தது. அதுபற்றி ரிப்போர்ட் செய்யலாம் என்றால் அவர்கள் முன் வர பயந்தார்கள். அந்த நிலைமையை இன்றைக்கு அரசு பார்த்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நிதி அமைச்சர் அவர்கள் பட்ஜெட்டிலே பாசன வசதிபற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் அதை முழுக்க முழுக்க வரவேற்கிறேன். கிட்டத்தட்ட 35,000 ஏக்கர்களுக்குப் போதிய பாசன வசதி செய்வதாகச் சொல்லுகிறார்கள். கோவை மாவட்டத்தில் பரம்பிக் குளம்-ஆளியாறு திட்டம் ஏற்கனவே சேர்ந்து, கிட்டத்தட்ட ஒரு லட்சம் ஏக்கருக்கு மேலும் பயன்படும் விதத்தில், அதிகாரிகளுடைய ஆலோசனைகளைப் பெற்று, ஆழ்ந்து பரிசீலித்து அதன் பிறகு அந்தத் திட்டத்தின் மூலமாக பாசன வசதி பெருக வேண்டுமென்று உத்தரவுகள் போடப்பட்டன. உத்தரவுகள் போடப்பட்டது மாத்திரம் அல்ல, உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால் நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக அரசு கலைக்கப்பட்ட பிறகு, உள்ளூரிலே உள்ள காங்கிரஸ்காரர்கள் தங்கள் செல்வாக்கைப் பயன்படுத்தி அதை நடைபெறாமல் தடுத்து இருக்கிறார்கள். ஆளும் கட்சி உறுப்பினர் திரு. கந்தசாமி அவர்கள் கூட இந்த திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டார்கள். எனவே, அந்தத் தடையை நீக்கி நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆளும் கட்சி உறுப்பினர்களே கூட முழு மனதோடு வரவேற்பார்கள் என்று நம்புகிறேன்.

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1977 ஜூலை 30

அடுத்து நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கார்ப்பரேஷன் தேர்தல் நடைபெறும் என்று மேல் சபையில் தெரிவித்தார்கள். சென்னை மாநகரத்திலே இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவன் என்ற முறையிலே அதை வரவேற்கிறேன். ஆனால் இந்த மன்றத்தில் பேசும்போது திட்டவட்டமாகச் சொல்லவில்லை. மேல் சபையிலே சொல்லியிருக்கிறார்கள்.

சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் முக்கியமான பிரச்னை மக்கள் தொடர்பு கொள்ள வேண்டிய அமைப்பு கார்ப்பொரேஷன், ஸ்லம் கிளியரன்ஸ் போர்டு, அவுசிங் போர்டு, எலெக்டிரிசிடி போர்டு ஆகியவற்றுடன் அதிகமாகத் தொடர்பு கொள்ளவேண்டியிருக்கிறது. இன்றைக்கு என்னுடைய தொகுதியைச் சேர்ந்த கிரியப்பா சாலை, கோடம்பாக்கம் கிராமத் தெரு, ரங்கோன் வீதி, ஆல் தோட்டம், ஆஸ்டின் நகர், பத்திரிகரை, போக் ரோடு, தோமையப்பன் வீதி, புஷ்பா நகர் போன்ற இடங்களில் இருக்கின்ற நிலைமைகளைக் கவனித்து நடவடிக்கை எடுப்பதற்கு அதிகாரிகள் முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு மக்கள் அதிகாரிகளோடு அடிக்கடி தொடர்பு கொள்வதற்குக் கஷ்டமாக இருப்பதால் இந்த கார்ப்பொரேஷன் அவுசிங் போர்டு, ஸ்லம் கிளியரன்ஸ் போர்டு, எலெக்டிரிசிடி போர்டு ஆகியவற்றோடு தொடர்பு கொள்வதற்கு ஒரு ''கன்சல்டேடிவ் கமிட்டி'' போன்ற அமைப்பை அமைத்து, அது மாதம் தோறும், மக்கள் பிரதிநிதிகள், சட்ட மன்ற உறுப்பினர்கள் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் 10 ஆயிரம் சிறு தொழில்கள் ஆரம்பிக்க இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். இதை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். தொழில்களை ஆரம்பிப்பதில் உள்ள கஷ்டம் என்னவென்றால் அதற்குத் தேவையான நிதி கிடைப்பதில்லை. கிடைத்தாலும் காலதாமதமாகக் கிடைக்கிறது. ''நேஷனலைஸ்டு பாங்கி''கள், ''பைனான்ஷியல் இன்ஸ்டிடியூஷன்'' பலவேளைகளில் இந்தத் தொழில்களைத் துவங்க உதவியாக இருப்பதற்கு பதிலாக காலதாமதம் செய்கிற நிலைமைகளைப் பார்க்கிறோம். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால் ஒரு தொழிலதிபர், ஒரு ''ஸ்மால் ஸ்கேல் ஆண்ட்ரபுரூனர்'' ''மொசைக் டைல்ஸ்'' தொழிற்சாலை ஆரம்பிப்பது சம்பந்தமாக ஒரு விண்ணப்பத்தை நம்முடைய தொழில் இலாகாவிற்குக் கொடுத்திருக்கிறார். '' will be reviewed after six months '' என்று அந்த விண்ணப்பம் வாபஸ் செய்யப்பட்டிருக்கிறது. அந்த விண்ணப்பம் திரும்பி வந்தவுடன், நான் அவருக்குச் சொன்னேன் ''டி.ஐ.சி.சி.-க்கு ஒரு கடிதம் எழுதுங்கள். நடவடிக்கை எடுப்பார்கள் என்று. அவரும் கடிதம் எழுதினார். உடனடியாக பதில் வந்தது. எப்படி, என்றால் எந்தவிதமான விளக்கங்களும் கொடுக்காமல் மறுத்து



1977 ஜூலை 30] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

விட்டார்கள். அதைப் பற்றி மேலும் அந்த ''ஆண்ட்ரபுரூனர்'' நடவடிக்கை எடுத்துக் கொண்டு இருக்கிறார். நான் சொல்வது அதிகாரிகள் ஒரு நெகடிவ் ''அப்புரோச்'' சில் வாரியம் செய்கிறார்கள். வந்ததும் உடனடியாக டிஸ்போஸ்ஸல் செய்கின்ற தன்மையில் செயல்படுகின்றார்களே தவிர நிலைமைகளைக் கவனித்து எப்படிச் செயல்பட வேண்டுமென்று காரியம் செய்வதில்லை. எனவே அரசு இதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து இன்னும் இரண்டு, மூன்று மாதங்களில் முஸ்லீம்களில் பல பேர் ஹஜ் யாத்திரை போக இருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில் புனித யாத்திரை செய்பவர்களுக்குப் போதுமான அனுமதி கிடைப்பதில்லை. பாஸ்போர்ட் வெளிநாட்டு அனுமதி கிடைப்பதில்லை. இதில் அரசு போதுமான கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். மத்திய அரசு சொல்வது ''பாபுலேஷன் பேசிஸ்''-சில் கொடுக்கிறோம் என்கிறார்கள். அப்படி பாபுலேஷன் பேசிஸ்சில் கொடுப்பது என்பது நியாயமானது அல்ல என்பதை நாங்கள் வற்புறுத்தி வருகிறோம். எனவே அந்தக் குறையைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அது மாத்திரமல்ல. நமது சென்னைத் துறைமுகம் முக்கியமான ஒரு துறைமுகம். இங்கே இருந்தும் கூட அந்த யாத்திரைக்குப் போவதற்கு வாய்ப்பு இருக்கிறது. பம்பாய்த் துறைமுகத்தின் மூலம் தான் அந்நிய நாட்டுக்கு சென்னையைச் சேர்ந்தவர்கள் நம்முடைய யாத்திரீகர்கள் யாத்திரை செல்ல வேண்டியிருக்கிறது. நான் இதைப் பற்றி கன்சல்டேடிவ் கமிட்டி, ஹஜ் கமிட்டி, சென்ட்ரல் கமிட்டியிடத்தில் பேசினேன். அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால் ''இன்டர்நேஷனல்'' ரெகுலேஷன் இருக்கிறது. அந்த ரெகுலேஷன் அடிப்படையில் பம்பாய்த் துறைமுகத்தின் மூலம் தான் செல்ல முடியும் என்று சொன்னார்கள். இந்த அரசு எப்படியாவது இந்த ''இன்டர்நேஷனல் ரெகுலேஷன்''-ஐ நம்முடைய சென்னைத் துறைமுகத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்படிச் செய்தால் நம்முடைய தென் மாநிலத்தைச் சேர்ந்த தமிழ்நாடு, ஆந்திரா, கேரளம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த யாத்திரீகர்களுக்கு மிகுந்த உதவியாக இருக்கும் என்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்[illegible]றேன்.

அடுத்து சேல்ஸ் டேக்ஸ்சை [illegible]ற்பனை வரியாக மாற்றி அமைத்து இருப்பதை வரவேற்கி[illegible]முடைய நிதி அமைச்சர் சில பொருட்களின் மீது இரு[illegible]ற பல முறை விற்பனை வரியை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக நிதியமைச்சர் பட்ஜெட் சமர்ப்பித்த பிறகு சில சலுகைகளை வழங்குவதை பழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே நிதியமைச்சரைக் கேட்டுக் கொள்ள

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1977 ஜூலை 30

விரும்புவது, இப்போது நாட்டுச் சர்க்கரைக்குப் போடப்பட்டிருக்கும் வரியை விலக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இந்த மின்சாரத்தைப் பற்றி இரண்டொரு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். நான் பத்திரிக்கையிலே பார்த்தேன். நம்முடைய முதல் அமைச்சர் அவர்களும், பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களும் கேரளம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த அமைச்சர்களுடன் மின்சாரத்தைப் பங்கிட்டுக் கொள்கிற விஷயமாகப் பேசப் போவதாக நான் பத்திரிகையிலே பார்த்தேன். அதிலே இருந்து என்ன தெரிகிறது என்ருல் தமிழ்நாட்டில் ஏதோ அதிகமாக மின்சாரம் இருப்பது போலவும், அதை மற்ற மாநிலங்களுக்குக் கொடுப்பதற்கு ஓரளவு அதிகமாக இருப்பது போலவும் ஒரு எண்ணம் ஏற்பட்டு விடும் என்று நான் அச்சப்படுகிறேன். தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் மின்சாரத்தில் நம்முடைய மாநிலம் ஒரு "டெபிசிட் ஸ்டேட்". நம்முடைய மாநிலத்திற்குப் போதுமான மின்சாரம் இல்லாத குறை. குறிப்பாக இடிக்கி ப்ராஜெக்ட்டில் உற்பத்தியாகிற மின்சாரத்தில் இருந்து கேரளத்திற்குத் தேவையான மின்சாரம் போக மிச்சத்தைத் தமிழ்நாட்டிற்குக் கொடுக்க வேண்டுமென்று, அவர்களுடைய "என்டயர் சர்ப்பளஸ்":ஐ நம்முடைய மாநிலத்திற்குத் தர வேண்டுமென்ற ஒரு ஒப்பந்தத்தைச் செய்திருக்கிருேம். அந்த ஒப்பந்தத்தின் மூலம் நமக்கு ஓரளவிற்கு இன்றைக்கு நன்மை ஏற்பட்டிருக்கிறது. மனிதாபிமான அடிப்படையில் மற்ற மாநிலங்களுக்கு மின்சாரம் கொடுப்பதைப் பற்றி ஆட்சேபணையில்லை. ஆனல் நியாயமான ஒப்பந்த அடிப்படையில் கிடைக்கிற மின்சாரத்தை நாம் இழந்து விடக் கூடாது என்பதைத்தான் நான் வற்புறுத்தித் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[முற்பகல் 9-50]

அடுத்து, நான் சொல்ல விரும்புகிற முக்கியமான பிரச்சினை என்னவென்ருல் 'மொழிப் பிரச்சினைதான். இன்றைக்கு மொழி பிரச்சினை ஒரு முக்கியமான பிரச்சினையாக வாதாடப்படுகிறது. இந்தச் சட்டமன்றக் கூட்டம் ஆரம்பித்தவுடன் நமது முதலமைச்சருக்கு இந்தியப் பிரதமர் கடிதம் எழுதியிருப்பதாகச் சொல்லப்படுகிறதே, அது என்ன கடிதம் என்று கேட்டோம். 'அதற்குப் பதில் வரவில்லை. இன்றைக்குத் தொடர்ந்து அதுபற்றி பேசப்படுகிறது. அரசாங்[illegible]த்தின் கொள்கை இருமொழிக் கொள்கைதான் என்பது திட்[illegible]டமாகத் தெரிவிக்கப்பட்டிருந்தாலும் சந்தேகம் ஏற்படத் iewed வகையில் சூழ்நிலை இருக்கிறது.

27—7—1977 அன்று [illegible]கேரள மாநிலத்தைச் சேர்ந்த நம்பூதிரிபாட் அவர்கள்

The C.P.M. leader was sharply critical of the insistence of some people including Central Ministers about the supremacy of Hindi over other Indian languages.



1977 ஜூலை 30] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

He warned that if attempts to impose Hindi were not given up, there might be repetition of the explosion which shook the country in 1965.

For all that I learn something has started happening, he said. There were sufficient portends in his view.

It was not for nothing that the Tamil Nadu Chief Minister had spoken about the imposition of Hindi and it was even referred to in the Governor's Address.

என்று இந்த அளவுக்குச் சொல்லியிருக்கிருர். இன்னொரு மாநிலத்தைச் சேர்ந்த ஒருவர் சொல்கிற அளவு நமது மாநில முதலமைச்சர் அவர்களோ, நிதி அமைச்சர் அவர்களோ சொல்லவில்லை என்கிற அளவில் சந்தேகம் வருகிறது என்பதை மட்டும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இறுதியாக நான் சொல்ல விரும்புவது அரசாங்கத்தின் கொள்கைகளைக் கோடிட்டுக் காட்டும் விளக்க உரையாக இருப்பது பட்ஜெட். ஆனல் இந்த பட்ஜெட்டில் தொழிலாளர்கள் கொள்கை என்ன; தொழில் கொள்கை என்ன, மூடப்பட்ட ஆலைகளைத் திறப்பதற்கான விளக்கம் என்ன ஆகிய எதுவும் தெரிவிக்கப்படவில்லை. இந்த ஆட்சி வந்தால், புரட்சி வெடிக்கும், புதுமை பூத்துக் குலுங்கும் என்றெல்லாம் சொன்ஞர்கள். இதில் புரட்சியும் இல்லை, புதுமையும் இல்லையென்று தெரிவித்துக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம்: மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, 1977-78 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தைப் பற்றி எங்களது கட்சியின் கருத்தை—பொதுவான கருத்தை—சுருக்கமாகச் சொல்லி முடித்துக்கொள்ள விரும்புகிறேன். பின்னர் மானியக் கோரிக்கைகள் வரும்பொழுது, விவரமாகப் பேச வாய்ப்பு இருக்கிற காரணத்திஞல், அப்போது அவை பற்றிய கருத்துக்களைச் சொல்லலாம் என்ற முறையில் ஒன்றிரண்டு கருத்துக்களை முதலில் தெரிவிக்கிறேன்.

உங்களுக்கு எல்லாம் தெரியும். நிதி அமைச்சர் அவர்கள் தம் உரையில் பற்ருக்குறையை மூன்று விதமாகக் குறிப்பிட்டிருக்கிருர்கள். முதலில் 30 கோடிக்குச் சிறிது அதிகம் என்றும், அடுத்து 18·6 கோடி என்றும், பின்னர் 5·7 கோடி சேர்த்து மூன்று விதமாகச் சொல்லியிருக்கிருர்கள். இந்த ஆண்டு திட்டத்தின் இறுதியில், எந்த அளவுக்குப் பற்ருக்குறை இருக்கும் என்று நமக்குத் தெரியாது. இதை ஏன் முதலில் தெரிவிக்கிறேன் என்ருல் மக்களிடத்தில் சொன்னவற்றையும் நிறைவேற்ற வேண்டும்; புது வரிகளும் போடக் கூடாது. மத்திய அரசு எவ்வளவு நிதி ஒதுக்குகிறது என்பதையும் கொண்டு மிகச் சிரம்ப்பட்டு பற்ருக்குறை பட்ஜெட்டாகத் தயாரிக்கிருர்கள்.

[திரு. கூத்தக்குடி ச. சண்முகம்] [1977 ஜூலை 30

(மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் தலைமை)

உங்களுக்குத் தெரியும். மத்திய அரசிடம் இருந்து நமக்குரிய நிதியைப் பெறுகிற தன்மையை இந்த அரசு நாடுகிறது. அதற்கான ஆலோசனைகளைக் கூறுகிறபோது, இந்த அரசு எடுக்கிற நடவடிக்கைகள் அனைத்திலும் எங்கள் கட்சி ஒத்துழைக்கும், அரசு அதற்கான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும். அது பற்றி பலபேர் பேசிவிட்டார்கள். தமிழ்நாட்டில் நாம் எந்த முறையைக் கையாள வேண்டுமென்பது பற்றி நான் ஆலோசனை சொல்ல விரும்புகிறேன்.

ஏனென்றால் நாம் மூடப்பட்ட சில மில்களை எடுத்துக்கொள்வது பற்றி ஆலோசிக்கிறோம்.

திரு. ஆர். கே. எஸ். தண்டபாணி : பாயின்ட் ஆப் ஆர்டர் சார், உறுப்பினர் தம் இடத்திலிருந்து பேசாது, இடம் மாறிப் பேசுகிறார். அப்படிப் பேசலாமா ?

திரு. கூத்தக்குடி ச. சண்முகம்: இடம் மாறிப் பேசவில்லை, கொள்கையும் மாறவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் அவருக்கு ஒதுக்கப்பட்டுள்ள முறையான இடத்தில் இருந்துதான் பேசுகிறார்.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம்: வியாதி அடைந்த மில்களை, பஞ்சாலைகளை, எடுத்துக்கொள்ள அரசாங்கம் ஆலோசிக்கிறபோது, நிதி நிலை பற்றி வரக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

கோடானுகோடி ரூபாய் ஏற்கனவே சம்பாதித்திருக்கக் கூடிய பஞ்சாலைகள் தமிழ்நாட்டில் ஏராளமாக உண்டு. அன்னிய நாட்டுக்குச் சொந்தமான கம்பெனிகளோடு கூட்டு வைத்திருக்கக் கூடிய பஞ்சாலைகளும் உள்ளன. நமது வருவாயைப் பெருக்கிக் கொள்ள தைரியமாக அண்ணாயிஸம் வழி நின்று, தமிழ்நாட்டுக் காரியங்களில் மத்திய அரசு குறுக்கிடக்கூடாது என்று வற்புறுத்தும் அதே நேரத்தில், அதே வழியைப் பின்பற்றும் முறையில், கட்டாயம் இந்தப் பஞ்சாலைகளை எடுத்துக் கொள்வதில் இந்த அரசு கவனம் செலுத்த வேண்டும் என்றும், அதற்கான மசோதாவினைக் கொண்டுவர வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். உத்தரப்பிரதேசம் போன்ற மாநிலங்களில்கூட கரும்பாலைகளை அரசு எடுத்துக் கொள்ளவேண்டும் என்றும் சர்க்கரை ஆலைகளை அரசு எடுத்துக் கொள்ள வேண்டும். நிதி வருவாயைப் பெருக்க என பல ஆலோசனைகள் கூறப்பட்டிருக்கின்றன. அதன் மேல் கட்சிப் பிரதி கட்சி வாதங்கள் சட்ட சபையில் நடந்துள்ளன. அங்கே. ஆகவே, தமிழ்நாட்டில் இருக்கிற சர்க்கரை ஆலைகளை



1977 ஜூலை 30] [கூத்தகுடி திரு. ச. சண்முகம்]

அரசே எடுத்து நடத்தும் முறையில் ஒரு மசோதா கொண்டு வந்து அதற்கு அங்கீகாரம் கேட்போம். அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இங்கு சொன்னதைப் போல் தேசியவுடைமையாக்குவதில் பின்வாங்காது என்று சொன்னதிற்கொப்ப இதற்கான அனுமதியை மத்திய அரசிடம் கேட்டுப் பெறுவோம் என்ற முறையில் போராட வேண்டும்.

டிரான்ஸ்போர்டை வைத்துக் கொண்டிருக்கிறோம். அதில் லாபம் கிடைத்துக்கொண்டு வருகிறது. நமது நிதிவசதியை மேலும் பெருக்க அதில் இன்னும் அதிகக் கவனம் செலுத்த வேண்டும். ஒரு சின்ன உதாரணம் கூறுகிறேன். தாயம்மன்கோவில் திருவிழா நடக்கிறது. முன்பு ஜெயவிலாஸ் கம்பெனிதான் ஸ்பெஷல் பஸ் விடுவார்கள். தனியார் கம்பெனி பஸ் விடவேண்டியதில்லை என்று மாவட்ட கலெக்டர் கருதி பி.ஆர்.டி. பஸ் விடப்பட்டு நான்கு நாட்களில் 56,000 ரூபாய் மிச்சம் ஏற்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் பல திருவிழாக்கள் நடைபெறுவதால், அரசாங்கத்தின் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளும் விதத்தில் இந்த மாதிரி பஸ்களை உபயோகித்தால் பெரிய அளவிற்கு தொகை இல்லாவிட்டாலும் ஒரு கோடி ரூபாய் அளவிற்காவது எட்ட முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்

அடுத்தபடியாக, காண்ட்ராக்ட் முறை ஒழிக்கப்பட வேண்டும். பணத்தை பெர்சென்டேஜ் கணக்கில் அதிகாரிகள் பிரித்துக் கொள்வதைப் பற்றி அதிகமான விவரங்களில் நான் புகவில்லை. அது ஊழலுக்கு இடம் தருகிறது. திருப்பத்தூரில் ஒரு உயர்நிலைப்பள்ளி கட்டியிருக்கிறார்கள். ஐந்தாறு வருடங்களாகின்றன. இப்போது பள்ளியில் செங்கல்லை உருவி எடுக்கலாம். நடைமுறையில் இப்போது பிள்ளைகள் இருப்பதற்கு கீற்றுக் கொட்டகை ஒன்று கட்டப்பட்டிருக்கிறது. அப்பள்ளி கட்டுவதற்கு ரூ. 35,000 நன்கொடை கொடுத்த ஆறுமுகம் பிள்ளை — சிதம்மாள் நாகராஜன் வகையறுக்கள்தான் — அந்த ட்ரஸ்டியே — இப்போது அந்தக் கொட்டகையையும் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். இதுபோன்ற ஏராளமான சர்க்கார் கட்டிடங்கள், பாலங்கள் போன்றவை மக்கள் பீதியடையக் கூடிய நிலையில் இருக்கின்றன. ஆகவே, இந்தக் காண்ட்ராக்ட் முறை ஒழிக்கப்படுவதால் ஏராளமான ரூபாயும் மிச்சப்படும். எனவே இதற்கு முதல் இடம் அளிக்க வேண்டும். இதை நிதியமைச்சர் அவர்கள் கவனத்தில் எடுத்துக் கொண்டிருந்தால் இந்த அளவிற்கு நிதிப்பற்றாக்குறை இருந்திருக்காது.

அடுத்து, இந்த நிதி ஒதுக்கீடுபற்றி எங்கள் கருத்தைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். வேளாண்மைத்துறைக்கு முதல் இடம் கொடுப்பது வரவேற்கத்தக்கது என்றாலும் வேளாண்மைத் துறைக்கு நாம் எந்த அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறோம் என்பதைப் பார்க்கும்போது — ஒப்புவமை பார்த்தால் — அது போதாது என்ற மனோபாவம்தான் பொதுவாக ஏற்படுவது இயல்பு. நீங்கள் படித்துப் பார்த்திருக்கலாம். கழிவு

[திரு. கூத்தகுடி ச. சண்முகம்] [1977 ஜூலை 30

நீர் அகற்றுவதற்குற்காக இருபது கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. கொசுக் கடித் துன்பத்தைப் போக்க ஏன் இவ்வளவு தொகை ஒதுக்கியிருக்கிறார்கள் என்று நான் கேட்கவில்லை. ஆனால் அதோடு ஒப்பிட்டுப் பார்த்து, நீர்ப்பாசனத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை எவ்வளவு என்று பார்த்தால் — கழிவு நீர் அகற்றுவதற்கு இருபது கோடி ரூபாய், குடிதண்ணீருக்காக ஆறு கோடி ரூபாய் என்று சொன்னால் குடிதண்ணீருக்குள்ள முக்கியத்துவத்தை அரசு அறிந்திருந்தாலும் நடைமுறையில் கொசுக்கடித் துன்பத்தை அகற்றத்தான் முதல் ஏற்பாடு இருக்கிறது என்று எடுத்துக் காட்டுவது அவசியம் என்று கருதுகிறேன். தொழில் துறையை எடுத்துக் கொண்டால் நிச்சயமாக தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் தொழிலதுறை முன்னேறாமல் நிரந்தரமாக வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கமுடியாது. தொழில்கள் வளர நாம் அதிகமான முறையில் ஆர்வம் காட்டாவிடில் நாம் முன்னேற்றம் அடைய முடியாது. இந்தத் திட்டத்தை எடுத்துக் கொண்டு பார்த்தால் கொடுத்திருக்கக்கூடிய இந்தப் புத்தகத்தில் ஒரு வட்டப் படம் போட்டிருக்கிறார்கள். அது கடலில் கரைத்த பெருங்காயம் மாதிரி இருக்கிறது. 13 கோடி ரூபாய்தான் தொழில்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மற்ற இனங்களோடு இந்த 13 கோடி ரூபாயை ஒப்பிட்டுப் பார்த்தால் நீண்ட காலத்திற்கு தொழில்களுக்கு அதிக நிதி ஒதுக்கும் பார்வை இல்லை என்றும் அதற்கான ஏற்பாடு இல்லை என்பதையும் சுட்டிக்காட்டி தொழில்கள் வளருவது தமிழ்நாட்டின் நலனுக்கு, மிகவும் அவசியம் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[முற்பகல் 10-00]

நான் உதாரணமாக ஒன்றைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். எங்கள் மாவட்டத்தை எடுத்துக் கொண்டால், கிழக்கு இராமநாதபுரம் எங்கள் மாவட்டம். அங்கே 20 லட்சம் மக்கள் இருக்கிறார்கள், 7 பஞ்சாலைகள் இருக்கின்றன, இவற்றில் 3,613 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். வேறு எந்தவிதமான தொழிலும் கிடையாது, பெருவாரியான அளவுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்க வேண்டுமென்றால் தொழில் வளர்ச்சி இருக்க வேண்டும். தொழில்களைப் பெருக்க வேண்டும் என்று சொல்லும்போது, மத்திய அரசாங்கம்தான் இதைச் செய்ய வேண்டும் என்றில்லாமல், ........ (மணியடிக்கப்பட்டது) விரைவில் முடித்து விடுகிறேன். தொழில்களை ஏற்படுத்துவதில் இந்த அரசு பெரு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் எப்பொழுதும் ஒழுங்கைப் பின்பற்றுகிறவன், ஆகவே கூடுதல் நேரத்தை எடுத்துக் கொள்ளாமல், ஒன்றிரண்டு கருத்துக்களை மட்டும் கூறி முடிக்கலாம் என்று நினைக்கிறேன்.



1977 ஜூலை 30] [திரு. கூத்தகுடி ச. சண்முகம்]

கைத்தறியைப் பற்றி பேசலாம், அதைப்பற்றி பலர் இங்கே பேசினார்கள். சுகாதாரம் பற்றியும் பேசப்பட்டது. இதில் ஒரு விஷயத்தை குறிப்பிட விரும்புகிறேன், கிராமப்புறங்களுக்கு டாக்டர்கள் போவதில்லை, உதாரணமாக பூலாங்குறிச்சி என்ற கிராமத்திற்கு டாக்டரைப் போட்டு இதற்கான உத்தரவு போட்டு மூன்று மாதங்கள் ஆகின்றன. இன்னும் டாக்டர் போகவில்லை. உத்தரவு போட்டால் கண்டிப்பாக டாக்டர் போக வேண்டும் என்பதை கரார் படுத்த வேண்டும். இதில் தயவு தாட்சண்யம் இல்லாமல் இருக்க வேண்டும். கிராமப்புறங்களுக்கு டாக்டர்களைப் போட்டு விட்டால், எப்படியாவது அமைச்சர்களிடம் சொல்லி மாற்றத்தைத் தடுத்துவிடலாம் என்று வருகிறார்கள். நிச்சயமாக இந்த அரசு இதற்கு இடம் கொடுக்காது என்று கருதுகிறேன்.

இன்னொரு விஷயத்தைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். அதாவது சிறையிலுள்ள கைதிகள் எப்படி நடத்தப்படுகிறார்கள் என்பது, 1·50 ரூபாயில் இரண்டு நேரம் சாப்பிட வேண்டும். இது முடியுமா என்பதை நாம் யோசித்துப் பார்க்க வேண்டும். ஒரு சம்பவத்தைக் கூற விரும்புகிறேன். திருப்பத்துர் சப்-ஜெயிலில் முந்தின நாள் 6 மணிக்குச் சாப்பாடு கொடுத்துவிட்டு, அதன் பின்னால் அடுத்த நாள் 12 மணிக்குச் சாப்பாடு கொடுக்கப்படுகிறது என்று சொன்னால், இதைக் கவனிக்க யாரும் இல்லையா என்று தெரியவில்லை. நம்மில் பலரும் ஜெயிலில் இருந்திருக்கிறோம், ஆனால் வெளியே வந்தவுடன் நாம் அதைப்பற்றிய நினைப்பில்லாமல் இருந்துவிடக்கூடாது. சிறைச்சாலைகளைப் பொறுத்தவரையில் நல்ல சீர்திருத்தம் செய்ய வேண்டும். கைதிகளிடம் கடுமையாக வேலை வாங்கட்டும், அதன்மூலம் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளட்டும், ஆனால், அவர்களுடைய உரிமைகளை— சாதாரண மனிதனின் உரிமையாகக் கருதி கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் அவசர காலத்தின் நிலைமைகளைப்பற்றியும் அதிலுள்ள பல கோளாறுகளைப் பற்றியும் அப்போது நடந்த தவறுகளைப் பற்றியும் இங்கே பலர் எடுத்துச் சொன்னார்கள். நான் இதைப்பற்றி இங்கே பேச வேண்டாம் என்றுதான் நினைத்தேன், ஆனால் இங்கே இதைப்பற்றி பலரும் பேசியதால் தான் நானும் இதைப்பற்றி பேச வேண்டியவனாக இருக்கிறேன். அவசர காலத்தில் நடைபெற்ற சம்பவங்களைப் பற்றி நடவடிக்கை எடுக்க வேண்டியதுதான், விசாரணை நடத்த வேண்டியதுதான். அதை யாரும் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் ஏற்கெனவே எங்கள் தலைவர் திரு. கே. டி. கே. ஒரு மேடையில் பேசியபோது, நெப்போலியனைப் போல் இவர்களும் அகற்றப்படுவார்கள் என்று சொன்னதே தவறு என்று

சொல்லி, மேடையில் பேசுவதற்குள்ள பேச்சுரிமையைக் கூட பறித்த ஆட்சி கலைஞர் ஆட்சி என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (ஆளும்கட்சி தரப்பிலிருந்து ஆரவாரம்)......

*திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்த அவையில் உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது, திரு. கே. டி. கே., ஆர். எஸ். மங்கலம் என்கிற இடத்தில் பேசிய பேச்சு, ஆனால் நண்பர் குறிப்பிட்டது போல் அல்ல அவர் பேசியது, நெப்போலியன் அல்ல, கருணாநிதி, முசோலினியைப் போல், ஹிட்லரைப் போல் சுட்டுக் கொல்லப்பட வேண்டும் என்ற கருத்துள்ள பேச்சைத்தான் பேசினார். இதுபற்றி நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இதுபற்றி விவாதம் இந்த மன்றத்தில் வந்த போது நிதிபதி அளித்த தீர்ப்பை இங்கே படித்துக் காட்டியிருக்கிறேன். அதில், அவர் பேசியது உண்மைதான், இருந்தாலும் அந்த நோக்கத்தோடு அப்படிக்கூறவில்லை என்று நீதிபதி தீர்ப்பு வழங்கியிருககிறார். ஆக ேபசியது உண்மைதான் என்று நீதிபதியினுடைய தீர்ப்பில் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. இன்னொன்றையும் நண்பருக்கு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இப்படிப்பட்ட வழக்குகளை வழக்கு மன்றத்தில் தொடர்ந்து நியாயம் பெற அவசரகாலச்சட்டம் இல்லாத நேரத்தில் நிலைமை இருந்தது. அவசர சட்ட காலத்தில் நீதிமன்றத்திற்கே போக முடியாத நிலைமை இருந்தது. ஆகவே தான் அவசரகால சட்டத்தை நாங்கள் எதிர்த்தோம்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : எதிர்க்கட்சித் தலைவரவர்கள் ஒரு திருத்தத்தைச் சொன்னார்கள். ஏற்றுக்கொள்கிறேன். நெப்போலியன் அல்ல. முசோலினி. அதுதான் அவர்களுடைய திருத்தம். (ஆரவாரம்) எப்போதுமே சாதாரண காலத்தில் நீதிமன்றத்திற்குப் போவதற்கு........

திரு. மு. கருணாநிதி : வார்த்தைகளை குறைத்து விளையாடக்கூடாது. அதற்கு கைதட்டுவது நல்ல மரபை வளர்க்காது. ஏனெனில் நெப்போலியன் போல், முசோலினி போல் சுட்டுக் கொல்லப்பட வேண்டும். அவர்களுக்கு ஏற்பட்ட முடிவு எனக்கு ஏற்பட வேண்டுமென்று பேசியதற்காக வழக்கு போடப்பட்டது. அந்த வழக்கில் கூட வழக்கு மன்றத்திற்குச் சென்று அவருக்கு வழக்காட உரிமை அளிக்கப்பட்டது. ஆனால் அவசர காலத்தில் சாதாரண வழக்குக்கூட வழக்கு மன்றம் செல்ல இடம் இல்லை என்பதைத்தான் சொன்னேன்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : முசோலினி சுட்டுக் கொல்லப்படவில்லை. (ஆரவாரம்) அவரை மக்கள் கூட்டம் கல்லால் எறிந்து கொன்றது என்பதை நான் எதிர்கட்சித் தலைவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.





திரு. மு. கருணாநிதி : இந்த மன்றத்தில் 2—3 நாட்களாக என் உயிரோடு விளையாடிக்கொண்டிருக்கிறார்கள். நான் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. அமைச்சர் திரு. வீரப்பன அவர்கள் கூட உயிரோடு இருப்பவர்களுடைய சிலைக்கு மாலை அணிவிக்க வேண்டுமா என்று என்னுடைய உயிரிலே அக்கறை கொண்டு கேட்டு இருக்கிறார்கள். எந்த நேரத்திலும் போகக் கூடிய உயிர்தான். ஆறிலும் சாவு. நூறிலும் சாவு, அது நெப்போலியன் போல் போனால் என்ன, ஹிட்லர் போல் போனால் என்ன, முசோலினி போல் போனால் என்ன, எப்படி போனாலும் அது தமிழ் நாட்டிற்காக, தமிழ் மக்களின் சமுதாயத்திற்காக, போகக்கூடிய உயிராகத்தான் இருக்கும் (ஆரவாரம்). கோழைத்தனமாக அந்த உயிர் போகாது என்பதை நான் நண்பருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : என்னைப் பற்றி எதிர்க்கட்சித் தலைவருக்குத் தெரியாது என்று கருதுகிறேன். நான் 19 முறை சிறை சென்றவன் என்பதையும், என்னைச் சுட்டாவது கைது செய்ய வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்து இருந்தது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். பழைய நிகழ்ச்சிகளை எடுத்துக் கூறி தற்புகழ்ச்சியாகப் பேச நான் விரும்பவில்லை. ஏனெனில் யாருக்கும் உயிர் எப்போதும் போகலாம். அதைப்பற்றிக் கவலையில்லை. தயவு செய்து என்னைப் பேச அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கைதட்டுகிற முறையை..எதிர்கட்சியைப் போலல்ல மற்ற கட்சிக்காரர்களும் கையாளுகிறார்கள். ஆகவே எதிர்க்கட்சித் தலைவர்கள் அவர்கள் கட்சிக்குச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் மற்றொரு திருத்தத்தையும் சொல்லலாம் என்று கருதுகிறேன். ஏனெனில் உங்களுக்குத் தெரியும். சாதாரணமாக வழக்கு போடக்கூடிய போலீசார்......

திரு.மு.கருணாநிதி : தலைவரவர்களே, நான் நம்முடைய நண்பர்களைக் கேட்பது, ஒருவர் மீது குற்றம் சாட்டப்பட்டால் அவர் அதை எதிர்த்து வழக்கு மன்றத்திற்குச் செல்லக்கூடிய நிலை இருந்தது. அவசரக்காலச் சட்டத்தால் அது பறிக்கப்பட்டது. அது சரியா ?.

திரு. கூத்தகுடி சண்முகம் : அவசரகால நிலையின்போது நாங்கள் பல அம்சங்களை எதிர்த்து இருக்கிறோம். பல தவறுகள் இந்த நாட்டில் ஏற்பட்டு இருக்கின்றன என்பதையும் ஏற்றுக்கொள்கிறோம். எங்கள் கட்சியின் தீர்மானத்தைப் படித்துப் பார்த்தால் தெரிந்து இருக்கும் என்று கூறி, அடுத்தாற்போல் ஒரே ஒரு சம்ப

வத்தைச் சொல்லலாம் என்று கருதுகிறேன். ஏனென்றால் அந்தக் கருத்து இங்கே விவாதத்திற்கு வந்துவிட்ட காரணத்தால் சொல்ல வ்ரும்புகிறேன். சாதாரணமாக வழக்கு போடக்கூடிய போலீசார் வழக்குகளை ஜோடித்து பொய் வழக்கு போடுவார்கள். ஆனால் அவர்கள் கூட கொலை வழக்கு அப்படி போடுவது கிடையாது. ஆனால் திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியில் சொல்லியே அப்படி ஒரு வழக்கைப் போட்டார்கள். அந்த வழக்கு நீதி மன்றத்திற்குச் சென்று விடுதலை கிடைத்து விட்டக்காரணத்தால் சொல்லுகிறேன். சிவகெங்கை பகுதியில் குமாரபட்டி என்ற இடத்தில் 2 பேர் போட்டுக்கொண்ட சண்டையில் ஒருவர் இறந்து விட்டார். அவர் மீது தி.மு.க.கொடியைப் போர்த்தி அம்பால் குத்திக் கொல்லப்பட்டார் என்று போலீஸ் ஸ்டேஷனில் சொல்லி எங்கள் கட்சியின் மாவட்ட உதவிச் செயலாளர் மீது வழக்கு போட்ட பெருமை பழைய ஆட்சியைச் சேரும் என்பதை நான் கூறிக்கொள்கிறேன். ஆகவே அதிலே போக வேண்டாம் என்று கேட்டுக்கொண்டு, அவசரக் கால நிகழ்ச்சிகளைப் பற்றிப் பேசினால், தமிழ் நாட்டில் நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றியும் பேச வேண்டும். ஏனெனில் அமைச்சர்களாக இருந்தவர்கள் அவசர கால அடக்குமுறைகளைப்பற்றி பேச ஆரம்பித்தார்கள். நான் கூட பேச சங்கடப்பட்டுக்கொண்டு இருந்தேன். அந்த வழக்கம் நிற்க வேண்டும் என்பதற்காகச் சொல்லுகிறேன். இந்த விஷயங்களை எல்லாம் இந்த விவாதத்தில் பேசாமல், போலீஸ்பற்றி மானியம் வருமானால் அதிலே பேசலாம். அந்த மாதிரி நிலைமை இருக்கவேண்டும் என்று சொல்லி, இந்த வழக்கம் நிற்க வேண்டும் என்பதற்காகத்தான் இதை ஆரம்பித்தேன் என்று சொல்லி, கடைசியாக நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்த வரவு செலவு திட்டத்தில் வேறு பல அம்சங்களைப் பற்றியும் நான் பேச விரும்பினேன். ஆனால் நேரம் அதிகமாகிவிட்ட காரணத்தால், அந்தக் கருத்தையெல்லாம் விரிவான பட்ஜெட் மானியம் வரும்போது என்னுடைய கருத்தை தெரிவிக்கிறேன் என்று கூறி அமர்கிறேன்.

*<u>திரு.கோ.இராமசாமி</u>. மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த புதிய அரசு கொடுத்துள்ள 1977-78 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டத்தின் மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்கச் சந்தர்ப்பம் அளித்ததற்காக நன்றி செலுத்திக்கொள்கிறேன். இந்த அரசு வேளாண்மைத் துறைக்காக நிதி ஒதுக்கீடு செய்துள்ளதில், கிராமங்களுக்கு, அங்கேயுள்ள விவசாயிகளுக்கு தனிப்பட்ட முறையில் அதைப் பெற்று பயன்பெறத் தக்க வகையில் என்ன திட்டங்களை மாநில அரசானது செய்து இருக்கிறது என்று கேட்டு, அந்த விவசாயிகள் தனிப்பட்ட முறையில் பயன் பெறும் வகையில் நிதி ஒதுக்கீடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.





(முற்பகல் 10–10)

வேளாண்மைப் பொறுத்தவரையில் விதைப் பண்ணைகளை விரிவுபடுத்தவும், மண்வளப் பாதுகாப்பிற்கும் பல கோடி ரூபாய் கள் செலவிடப்பட இருக்கிறது. இந்த விதைப் பண்ணைகளை தனியார் துறைக்கு விடாமல், அரசாங்கமே இந்த விதைப் பண்ணைகளை ஏற்படுத்தி, அந்த விதைப் பண்ணைகளின் மூலம் பொறுக்கு விதைகளை விவசாயிகளுக்கு நேரடியாகக் கிடைக்க வழிசெய்ய வேண்டும். தனியார் இடத்தில் கொள்முதல் செய்வதால், அந்த விதைகளிலும், மற்றவற்றிலும் பல குறைபாடுகள் காணப்படுகின்றன. எனவே, அரசாங்கமே இந்த விதைப் பண்ணைகளை ஏற்படுத்தி, தரமான விதைகளை எல்லா விவசாயிகளுக்கும் கிடைக் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேற்கு இராமநாதபுரத்தில் நிறைய கிணறுகள் இருக்கின்றன. அந்தக் கிணறுகளில் நாளுக்கு நாள் தண்ணீர் கீழேபோய்க் கொண்டிருக்கிறது. இதை நிதி அமைச்சர் அவர்களும் தெரிவித்திருக்கிறார்கள். இந்த நீரை மேல்மட்டத்திற்குக் கொண்டுவர வெம்பக்கோட்டை கிராமத்திலுள்ள—வைப்பாறில் ஒரு அணைக் கட்டு கட்டுவதன் மூலம் நிறைவேற்றி வைக்கலாம். இதை அந்த பகுதியிலே உள்ள மக்கள் மிகுந்த உற்சாகத்துடன் வரவேற்பார்கள்; அதோடு நல்ல பயனும் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல், மேற்கு இராமநாதபுரத்தில், ராஜபாளையத்தில் கிரி ஆறு திட்டம் ஏற்கெனவே ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்தை நிறைவேற்றினால், ராஜபாளையத்திலுள்ள கிணறுகளிலுள்ள அடிமட்டத்திலுள்ள நீர் உயர்வதற்கும், அதே சமயத்தில் விவசாயிகளுக்கும், நீர்ப் பாசன வசதி கிடைக்க மிகவும் உதவியாக இருக்கும் என்பதைக் கூறிக் கொள்கிறேன்.

ஏற்கனவே இந்த பட்ஜெட்டில் 30,000 கிணறுகளுக்கு மின் இணைப்பு கொடுக்க வழி செய்யப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட 1,000 கிணறுகள் வெட்டப்பட்டிருந்தும்கூட, அவைகளுக்கு மின் இணைப்பு கிடைப்பதிலே சில கஷ்டங்கள் இருக்கின்றன. மின் இணைப்பு கேட்டால், கிரவுண்ட் வாட்டர் இலாகாவிலிருந்து கிளியரன்ஸ் சர்டிபிகேட் வேண்டுமென்று கேட்கிறார்கள். இது விரைவிலே கிடைப்பதில்லை. எனவே, இந்த கிளியரன்ஸ் சர்டிபிகேட் தேவையில்லை என்று சொல்லி, அதை ரத்து செய்து இந்தக் கிணறுகளுக்கு மின் இணைப்பு கொடுக்க வேண்டுமென்று கெட்டுக் கொள்கிறேன்.

இந்த நாட்டிலே இந்த மின் இணைப்பு கட்டணத்தால் கடன் சுமை ஏற்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் இந்த மின் இணைப்புக் கட்டணம் உயர்ந்து கொண்டே செல்கிறது. 1973 ஆம் ஆண்டு முடிந்த ஒப்பந்தத்தின் அடிப்படையிலே இந்த அரசும் மின் இணைப்புக் கட்டணத்தை நிர்ணயம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. கோ. இராமசாமி] [1977 ஜூலை 30

நடப்பு ஆண்டில் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க தொழில் துறையை அபிவிருத்தி செய்ய இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. வாழ்விழந்த பெண்களுக்கு உதவி செய்யப்போவதாகவும் கூறப்பட்டுள்ளது. அதேபோல், திருமணம் ஆகாத ஏழைப் பெண்கள், அதிலும் குறிப்பாக அரிஜனப் பெண்கள் ஆகியவர்களுக்கு இந்த உதவி செய்தால் நல்லது. எங்கள் பகுதியில், தீப்பெட்டி, பட்டாசு, அச்சுத்தொழில் ஆகியவைகள் விரிவாக நடந்து கொண்டிருக்கின்றன. இந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கும், தொழிலாளருக்கு பாதுகாப்பு அளிக்க இந்த அரசு முன்வரவேண்டும். இந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கும் தொழில் அதிபர்கள் கொடுக்கும் தொகைக்குச் சமமாக அரசும் மானியம் வழங்கி, எல்லாத் தொழிலாளர்களுக்கும் பரவலாக பாதுகாப்பு அளிக்க முன்வரவேண்டும்.

இப்போது முதியோர்களுக்கு பென்சன் கொடுக்கப்பட்டு வருகிறது. அது குறைவான அளவுக்குத்தான் கொடுக்கப்பட்டு வருகிறது. அதை இரண்டு மடங்காக்கி, மேலும் நடைமுறையிலே உள்ள சிக்கல்களை எல்லாம் நீக்கி எளிதாக கிடைக்க ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

குடிநீர் பிரச்னை விஷயமாக ஏற்கனவே பல கோடி ரூபாய் ஒவ்வொரு ஆண்டும் செலவிடப் பட்டு வருகிறது. அப்படி செலவு செய்தும் இந்தப் பிரச்னை தீர்ந்த பாடில்லை. மேலும் பல கிணறுகள் வெட்டப்படுகின்றன. வாட்டர் போர்டிலே குழாய் போடுகின்ற இந்த முறை சரியாகச் செயல்படவில்லை. கிணறுகளில் தண்ணீர் கீழே தான் கிடைக்கின்றது. எங்கள் பகுதியிலுள்ள கிணறுகளில் குடிநீர் பிரச்னை, அதுவும் தமிழ்நாடு குடிநீர் வாரியத்திலிருந்து செய்யப்பட்ட வேலைகள் மிகவும் குறைபாடு உள்ளதாக இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வெம்பக்கோட்டை ஏரியாவில் குடிநீர் வசதி இல்லை. விரைவில் குடிநீர் வசதியைச் செய்து தரவேண்டும். நீர்த் தேக்கங்களுக்குத் தண்ணீர் கொண்டு வந்தால் வெம்பக்கோட்டை பஞ்சாயத்து யூனியன் வட்டாரம் பயன் பெற முடியும். அந்தத் திட்டங்களை விரைவுபடுத்தவெண்டும்.

ஊராட்சி ஒன்றியங்களில் நிதிநிலை மோசமாக இருக்கிறது. குடிநீர் வசதிக்காக குழாய் கிணறுகளைப் போட முடியாமலும், மின் கட்டணங்களைக் கட்ட முடியாமலும், தெரு விளக்குக்காக கட்டணங்களைக் கட்டமுடியாமலும் இருக்கின்றன. அரசாங்கம் மின் கட்டணத்திற்கான நிதியை பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்து கிராமங்களில் சாக்கடைத் திட்டம் மோசமாக இருக்கிறது. கிராம வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பொது மக்களிடம் பாதி தொகை, சர்க்கார் பாதித் தொகை கொடுத்து



1977 ஜூலை 30] [திரு. கோ. இராமசாமி]

வேலைத் திட்டங்கள் நடந்தது. இந்த மாதிரித் திட்டங்களுக்காக கிட்டத்தட்ட 20 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. கிராமப் புறங்களில் இந்தத் திட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து செயல்படுத்த வேண்டும். வாருகால் திட்டங்களை கிராமப் பகுதிகளில் நிறைவேற்றுவதன் மூலந்தான் கிராமச் சுகாதாரம் பாதிக்கப்படாமல் இருக்கும். குடிநீர் நல்ல முறையில் இருக்கும்.

பள்ளிகளிலும் சீரமைப்பு வேலைகள் செய்யப்பட வேண்டும். பள்ளிக்கட்டிடங்கள் பழுதடைந்து கிடைக்கின்றன. குழந்தைகளுடைய சுகாதாரத்தைப் பேண பள்ளிக் கட்டிடப் பராமரிப்புக்காக ஒவ்வொரு ஆண்டும் பஞ்சாயத்து யூனியனுக்கு விசேஷ நிதி கொடுக்கவேண்டும்.

அரிசனங்களின் வீட்டு வசதிக்காக நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், வீடு கட்டும் திட்டம் எதுவும் இல்லை. வீடு கட்டும் சொசைடிகளுக்குச் சென்றால் பல சிக்கல்கள், சட்டப் பிரச்சனைகள் வந்துகொண்டிருக்கின்றன. சொத்துக்களைக் காட்டி வீடு கட்ட முடியவில்லை. ஆகவே, அரிசனங்களைப் பொறுத்த வரை இந்தச் சட்ட திட்டங்கள் அவர்களைக் கட்டுப்படுத்தாத அளவிற்கு நிலைமைகளை உருவாக்க வேண்டும். இன்று அரிசனத் தெருக்கள் பராமரிப்பு செய்யமுடியாத நிலைமையில் இருக்கின்றன. இந்த மாதிரி நிலைமைகளை எல்லாம் மாற்ற அரிசன நல இலாகாவிலிருந்து விஷேச நிதி ஒதுக்கி பஞ்சாயத்து மூலமாகவோ, நேரடியாகவோ செய்யவேண்டுமென்று கூறி வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

*திரு. எம். அண்ணாமலை : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையின் பேரில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் எனது கருத்துக்களை நான் முன் வைக்கிறேன். இன்றைக்கு மலிவு விலைக் கடைகள் குறிப்பாக ரெவின்யூ கிராமங்கள் அனைத்திலும் திறக்கப்படும் என்ற ஒரு சேதியை, ஒரு குறிப்பினை ஏற்கின்றோம். அதே நேரத்தில் இந்த மலிவு விலைக் கடைகளை நடத்துவதற்கான ஒரு நிதிநிலையைக் குறிப்பிடவில்லை ; குறிப்பிட்டிருந்தால் உதவிகரமாக இருக்கும் என்பதை கூற விரும்புகிறேன். இந்த மலிவு விலைக் கடைகள் ரெவின்யூ கிராமங்களில் மட்டும் நடைபெறும் என்ற அளவில் அது போதுமானது அல்ல என்றாலும் இன்றுள்ள நிலையில் இதை வரவேற்கிறேன். இன்றைக்கு நாட்டு மக்கள் அனைவரும் இந்த உணவுப் பிரச்சனையைச் சமாளிக்கும் வகையில், ஏழை எளிய மக்களுடைய பெரும்பிரச்சினையாக இருக்கக்கூடிய பிரச்சினை இதுவாகும்.

[முற்பகல் 10-20]

கிராமப் புறங்களில் வேலையில்லாமல் குறைந்தபட்சம் ஒரு ரூபாய் கூலிக்கும் கூட வகையற்ற சூழ்நிலையில் உள்ள தொழிலாளர்களுக்கு இந்த மலிவு விலைக் கடைகளில் அடித்தட்டில் உள்ள விவசாயத்

தொழிலாளர்களுக்கும் மற்ற சாமான்யத் தொழிலாளர்களுக்கும் அவர்களுடைய வருவாய்க்கேற்ற முறையிலே விலையை நிர்ணயம் செய்து அரசு தேவையான பொருள்களை, அரிசி, பருப்பு, மண் ணெண்ணெய், மோட்டா ரகத் துணிகள் இவை போன்ற அத்தியா வசியப் பண்டங்கள் அனைத்தையும் தட்டுப்பாடின்றி விநியோகிக்க உத்திரவாதமளிக்கக்கூடிய முறையில் ஏற்பாடுகளைச் செய்ய வேண் டும். இந்தக் கடைகளை யெல்லாம் கண்காணிப்பதற்காக ஆங் காங்கே மக்கள் கமிட்டிகளை அமைத்துக் கண்காணிப்புச் செய்தால் தான் ஓரளவிற்கு உதவியாக இருக்கும். இல்லாவிட்டால் பழைய காலத்து முறையிலேயே மக்கள் பெயராலேயே உணவு வழங்கல் காரியங்கள் போகக்கூடிய நிலைமை ஏற்படும். அதை அரசு அனு மதிக்காமல் மக்கள் கமிட்டிகளை அமைத்து அவர்கள் மேற்பார்வை யில் தட்டுப்பாடின்றி நல்ல முறையிலே உணவு விநியோக ஏற் பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நிலப்படை அமைப்பது என்ற ஒரு நிகழ்ச்சியை நாங்கள் ஏற்கிறோம். ஆனல், இந்த நிலப்படை அமைப்பதில், அது அரசுப் பொறுப்பிலேயே இருக்க வேண்டும், விவசாய வேலைகளை யும் அரசுத்தரப்பு வேலைகளையும் அது செய்யலாம், ஆகவே, இந்த கான்ட்ராக்ட் முறை ஒழிக்கப்படக்கூடிய நிலைமையில்— கான்ட்ராக்ட் முறையில் மக்கள் நலன்கள் என்ற பெயரை வைத்துக்கொண்டு கொள்ளை அடிக்கக்கூடிய நிலைமையை மாற்றி யமைக்கின்ற முறையில்—அரசுப் பொறுப்பிலேயே இருந்து வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நிலவள வங்கிகள் மூலமாக விவசாயிகளுக்குக் கடன் வழங்குவதற்காக 18 கோடி ரூபாய் அளவில் ஒதுக்கியிருப்பதை நான் வரவேற்கிறேன். ஆனல், நிதி ஒதுக்குவதில் உள்ள சிக்கல் களை நான் அரசினுடைய கவனத்துக்குக் கொண்டுவர விரும்பு கிறேன். பெரும்பாலும் இன்றைக்கு விவசாயிகள் என்ற முறை யிலே சாதாரண மத்திய தர விவசாயிகள், ஒரு ஏக்கர், 5 ஏக்கர், 10 ஏக்கர் வைத்திருக்கக்கூடிய விவசாயிகள் இன்றைக்கு உள்ள கடன்களை அவர்கள் நிலஅபிவிருத்திக்காகவோ அல்லது மற்ற வகை களுக்காகவோ பல்வேறு நிலைமைகளில் கடன்வாங்கி அந்தக் கடன் களையெல்லாம் அவர்கள் கட்டமுடியாத நிலைமை ஏற்பட்டு “ ஓவர் ட்யூஸ் ” என்ற முறையிலே இருக்கிறார்கள். இன்றைக்கு கூட்டுறவு சங்கத்தினுடைய விதிமுறைகளின்படி தவணை கடந்த ஓவர் ட்யூஸ் இருந்தால் கடன் கொடுப்பதில்லை என்ற விதிமுறை இருக்கிறது. இதை வைத்துக்கொண்டு கடன் வாங்குகிறபோது, சாதாரண ஏழை விவசாயிகள், மத்திய தர விவசாயிகள், 1, 2 ஏக்கர் முதல் 10 ஏக்கர் வரையில் வைத்துள்ள விவசாயிகள் அந்தக் கடனைத் தொட்டுக்கூடப் பார்க்க முடியாத நிலைமை இருக்கிறது; ஆகவே



நேரடியாக நிலத்திலே பாடுபடுகின்ற விவசாயிகளுக்குக் கடன் கள் கிடைக்க வேண்டுமென்றால் ஓவர்ட்யூஸ் இருந்தால் கடன் கொடுக்கப்பட மாட்டாது என்ற அந்த விதிமுறையை மாற்றி விவசாயிகளுடைய தேவையின் அடிப்படையில் கடன் வழங்க முற்பட வேண்டும்.

அதோடு கிராமப்புறங்களிலே உள்ள ஏழைவிவசாயத் தொழி லாளர்கள், மற்றும் பல தொழிலாளர்கள் எல்லாம் தங்களுடைய சுக துக்கங்களுக்குக்கூட கடன் பெற முடியாமல் இருக்கிறது. குறிப்பாக எங்கள் தர்மபுரி மாவட்டத்தில் ஒரு விவசாயி குடும் பத்தில் ஒருவர் இறந்துவிட்டால் பிரேதத்தை வைத்துவிட்டுஅவன் தனது நிலச்சுவான்தார் வீட்டுக்குப்போய் கடன் வாங்கிக்கொண்டு வந்துதான் அந்தப் பிரேதத்தை எடுத்துச் செல்லக்கூடிய அவல நிலைமையிலே இருக்கின்றான். இதையெல்லாம் நான் இந்த அரசாங் கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அத்தகைய விவ சாயத்தொழிலாளிகள் அப்படிப்பட்ட அந்தக் காலங்களில் கொடுக் கப்படக்கூடிய அந்தக் கடன்களைக் கோரும் பொழுது ஏற்கெ னவே 3 ரூபாய் கூலி என்று இருந்தாலும் 2 ரூபாய்க்கு தன்னை ஒப்பந்தம் செய்து கொண்டு நூறு ரூபாயோ, ஐம்பது ரூபாயோ பெற்று தங்கள் தாய் அல்லது பெண்டு பிள்ளைகளின் அந்தச் சவக் காரியங்களில் ஈடுபடக்கூடிய நிலைகளைச் சர்வ சாதாரணமாக கிராமந்தோறும் நடக்கும் நிகழ்ச்சிகளாகும் என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இத்தகைய ஜனப் பகுதிக்கு இந்தக் கூட்டுறவு ஸ்தாபனங்கள் இன்றைக்கு நிலமில்லாத விவ சாயத் தொழிலாளர்களுக்கு இரண்டு, மூன்று பட்டாதாரர்கள் கையெழுத்துப் போட்டால்தான் அந்தக் கடனும்கொடுக்கப்படும் என்ற நிலைமை சொத்து ஜாமீன் கேட்பதை விட மிகக் கடுமை யானது, சாத்தியமானது ஒன்று. இத்தகைய விதிமுறைகள் இல்லாமல் தனி நபர் ஜாமீன் பேரிலே வட்டியில்லாத கடன்களை இந்தக் கூட்டுறவு ஸ்தாபனங்கள் கொடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், 30,000 பம்பு செட்டுகளுக்கு மின்னிணைப்பு வழங்கப் படும் என்ற குறிக்கோளை நாங்கள் ஏற்றுக் கொள்ளுகிறோம், அது பாராட்ட வேண்டிய விஷயம். ஆனல், இன்றைக்கு இதைக் கொடுப்பதிலுள்ள சிரமங்களைக் கருத்திற்கொண்டு அதற்கான மாற்று ஆலோசனைகளை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இன்றைக்கு நூற்றுக்கணக்கான விவசாயி கள் கிணறு வெட்டி மின்னிணைப்புக்காக மனுக்கள் போட்டிருக் கின்றனர். தர்மபுரி மாவட்டத்தில் அப்படி ஆயிரக்கணக்கான மனுக்கள் இருக்கின்றன. இதே போல வடார்க்காடு மாவட்டத்தில் தற்பொழுது எனக்குக் கிடைத்த விபரப்படி 1,500 மனுக்கள் இன்றைக்கு நிலத்தடி நீர் இல்லை என்ற, நிபுணர்களுடைய சர்ட்டிபிகேட் இல்லை என்ற காரணத்திலுல் மின்னிணைப்புகொடுக்

[திரு. எம். அண்ணாமலை] [1977 ஜூலை 30

கப்படாமல் தாமதப்பட்டிருக்கிறது. இந்த மின் இணைப்புக் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்று சொன்னால் நீர்வள ஆதாரங்களைப் பெருக்க வேண்டும். அப்பொழுது இன்றைக்கு உள்ள சிறு நீர்ப்பாசனங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். நிலத்தடி நீரை உருவாக்க வேண்டுமென்றால் ஏரிகள், குட்டைகள் போன்ற இடங்களில் நீரைத் தேக்க வேண்டும். பருவ காலத்தில் பெய்யக்கூடிய மழை நீரைத் தேக்க வேண்டும். அப்படித் தேக்கினால் தான் நீர்வள ஆதாரங்கள் பெருகும். இன்றைக்குத் தர்மபுரி மாவட்டத்தில் பல்வேறு திட்டங்கள் உருவாக்கப்பட்டும் இலட்சம் ஒரு கோடி என்ற அளவில் சிறு அணைத் திட்டங்கள் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் அந்நிய ஆட்சி காலத்தில் உருவாக்கப்பட்ட திட்டங்களும் நடைபெறவில்லை. ஆகவே, சிறிய காட்டாறு போன்ற ஆறுகளில் 25 அடி, 30 அடி, அளவுக்குப் பள்ளமாக அறுக்கப்பட்டு ஊற்று இல்லாத நிலை ஏற்படுகிறது. அதோடு இன்றைக்கு நீர் நிபுணர்கள் வந்து இந்தப் பகுதியில் தண்ணீர் இல்லை என்று சொல்வதால் சாதாரண விவசாயிகள் கடன் பெற முடியாமலும் அல்லது மின் இணைப்பு பெற முடியாத நிலைமைகளும் இன்றைக்கு உருவாகி உள்ளபடியே விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். நிலத்திலே பாடுபடக்கூடிய 10 ஏக்கர், 5 எக்கர் உள்ள மத்திய ரக விவசாயிகளுக்கு இன்றைக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லாமல் ஜீவனத்திற்கும் வழியில்லாமல் பல்வேறு துன்பங்களை அனுபவிக்ககூடிய மிகக் கொடூரமான நிலைமைகளைப் பார்க்கிறோம். இந்த வகையில் நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு, குறிப்பாக சிறிய நீர்ப்பாசன திட்டங்களுக்கு முதலிடம் தர வேண்டும். அதாவது அந்த நீர்ப்பாசனத் திட்டங்களைப் பொறுத்த வரையில், குறிப்பாக நம்முடைய ஏரிகள், குட்டைகளில் பொதுப்பணித்துறை அதனுடைய மண்ணை வெட்டி கரைமேல் போடுவதால் பல நூறு ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட அந்த ஏரிகளில் வண்டல் மண் தேங்கி 5 அடி 6 அடி என்று வண்டல் மண் தேங்கி அந்த ஊற்றே பூமிக்குள் செல்லாத அளவிற்கு நிலைமைகள் இருக்கின்றன. எனவே பொதுப்பணித் துறை இதற்கான முறைகளை அனுஷ்டித்து அந்த ஊற்றுகளைப் பாதுகாக்கும் முறையில், நிலத்திற்கு அந்த நீர் செல்லக்கூடிய வகையில் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மண்ணை எடுத்துத் தரையில் போடுவதால் மேலும் மழை வந்தால் அந்த பக்கமும், இந்தப் பக்கமும் உள்ள நைஸான . களிமண் தண்ணீர் வந்ததும் அடித்துச் செல்லப்படுகிறது. அதனால் ஊற்றடைப்பு ஏற்படுகிறது. எனவே, அந்த நீரை விவசாயிகள் பயன்படுத்தும், முறையில், மண்ணை எடுத்துக் கரை மேல் போடாமல் எஸ்டிமேட் தயாரித்து கழிமண்ணை வெளியேற்றினால் பூமிக்கு அடியில் ஊற்று சுரக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-30)



1977 ஜூலை 30]

சின்னச்சின்ன ஏரிகள், வாய்க்கால்களைப் பாசனத்திற்கு விட்டு, அந்தந்த ஏரிகளுடைய மதகுகள் அடைத்து, உள்ளபடியே தண்ணீரைத் தேக்கவேண்டும். அதனால் வாய்க்கால் பாசனத்தில் வாழ்வதைவிட, மதகுப் பாசனத்தில் வாழ்வதைவிட, ஊற்றுப் பாசனங்களால் கிடைக்கும் ஆதாயம் அதிகமாகும். 3 மாதம் வருகின்ற ஏரித் தண்ணீர், 12 மாதங்கள் கிணற்றுத் தண்ணீர், பயன்படுகிறது. இது அனுபவபூர்வமான உண்மை. ஆகவே, அரசு நீர்ப்பாசனத் திட்டத்தில் இந்த அணுகுமுறையை மேற்கொள்ள வேண்டும். இதுதான் நிலத்தடி நீரைப் பாதுகாக்க ஒரு வழி என்று நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்,

அடுத்து, மற்றொரு விஷயம், அரிசன கல்லூரி மாணவர்களுடைய பிரச்னையை நான் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். இன்றைக்கு அரிசன மாணவன் கல்லூரிப் படிப்பு படித்தால், இரண்டு வருஷம் பெயில் ஆகி விட்டால், உபகாரச் சம்பளம் இல்லை, விடுதியில் இடம் இல்லையென்ற நிலையிருக்கிறது. குறிப்பாக, தர்மபுரி மாவட்டத்திலிருக்கிற கல்லூரியில் இன்றைக்கு 4 பேர் பி. ஏ. மூன்றாம் ஆண்டு முடிக்கக்கூடிய தருவாயில் எந்தவிதமான பாதுகாப்பும் இல்லாமல் இருக்கிறார்கள். அதுபற்றி எனக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அது சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சரவர்களிடம் எடுத்துக் கூறியிருக்கிறேன் அனுதாபத்துடன் அவர்கள் பிரச்னையைக் கவனிப்பதாகச் சொல்கிறார்கள். என்றாலும் அவர்கள் படிப்பை முடிக்கிறவரையிலும் சம்பளச் சலுகையும் கண்டிப்பாகக் கொடுக்கவேண்டும்,

தாழ்த்தப்பட்ட குடும்பத்திலே இருந்து கல்லூரிக்குப் போகிற எவனும் டிகிரிப் படிப்பை பெயிலாகாது படிப்பது பெறுவது முடியாது. ஆகவே, அரிசனங்களுக்குச் சலுகை என்று சொல்லி, இவ்வாறு தடைபடுத்துகிற நிலையை அனுதாபத்துடன் பரிசீலித்து, அவன் பட்டப் படிப்பை முடிக்கிற வரையிலும், ஆஸ்டல் வசதியும் உபகாரச் சம்பளமும் கொடுத்துப் பாதுகாக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், இன்றைக்குப் பல்வேறு பகுதிகளில் அரிசனங்கள், வீதிகளில், டீ கடைகளில் வேஷ்டி கட்டிச் செல்ல முடியாது. செருப்பு போட்டுச் செல்ல முடியாது. அதனால் அங்கங்கு பல்வேறு கலவரங்கள், விவகாரங்கள் ஏற்படுகின்றன. அந்த விவகாரங்களை, சம்பந்தப்பட்ட அதிகாரிகள், உடனுக்குடன் பிரச்னையை தீர்க்கப்படும் என்ற அளவில் அனுதாபத்தோடு தீர்ப்பதில்லை. ஆகவே, காலம் தாழ்த்திச் செய்வதன் மூலம், ஏற்கெனவே இருந்த உரிமைகளை இழந்துவிடும்படியான நிலைமை கிராமப் புறத்திலே இருக்கிறது. இந்த அரசு உடனடியாக

[திரு. எம். அண்ணுமலை] 1677 ஜூலை 30]

இந்தப் பிரச்சனைகளைத் தீர்க்க முற்படுவதோடு மட்டுமின்றி, ஜாதி விவகாரங்கள், சுமூகமாகத் தீர்க்கப்படுகிற கிராமத்திற்கு, அவை எழாமலிருக்கின்ற கிராமத்திற்கு, கௌரவப் பரிசு வழங்கவேண்டு மென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது.)

அடுத்தபடியாக, அரூரில் ஒரு மருத்துவமனை இருந்தும் எந்த வித வசதியும் இல்லாமலிருப்பதால், சேலம், தர்மபுரிக்கு அப்பால் 40, 50 மைல்களுக்கு அப்பால்தான், சாதாரண கேஸ்களை எடுத்துச் செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. அங்கு ஒரு பொது மருத்துவமனையை எல்லா வசதிகளோடு கூடிய மருத்துவமனையை உருவாக்கித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

திரு. டி.பி.மு. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1977-78 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை, மாண்புமிகு நமது நிதி அமைச்சர் நாஞ்சிலார் அவர்கள் சமர்ப்பித்த கன்னித் தன்மையும், கண்ணியமுமான நிதி நிலை அறிக்கையை இந்திய தேசிய பார்வார்டு பிளாக் சார்பாக வரவேற்கிறேன். கன்னித் தன்மையும், கண்ணியமும் உள்ள இந்த நிதி நிலை அறிக்கையில், கன்னிப் பேச்சுடன் ஆரம்பிக்கிற நான், இங்கு பேசிய பல உறுப்பினர்கள் போற்றிப் பேசியதையும், தூற்றிப் பேசியதையும் பார்த்தோம். நல்ல உள்ளம் படைத்தவர்கள், நடுநிலையோடு ஆராய்ந்து பார்த்தவர்கள், போற்றிப் பேசியதையும், * * * படைத்தவர்கள் தூற்றிப் பேசியதையும் நாம் பார்த்தோம். இவர்களிடையே நான் நுழையாமல் போற்றியவர்களுடன் என்னையும் இணைத்து இந்த நிதி நிலை அறிக்கையை நாட்டு மக்களுக்கு அளித்த நாஞ்சிலார் அவர்களுக்கு வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.......

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : நண்பர் பெரியசாமி அவர்கள் பேசும்போது நல்ல மனம் படைத்தவர்கள் பாராட்டிப் பேசினார்கள் என்றும் * * * படைத்தவர்கள் அதைத் தாக்கிப் பேசினார்கள் என்றும் குறிப்பிட்டார்கள். 234 உறுப்பினர்களும் நல்ல மனம் படைத்தவர்கள் என்ற கருத்து எனக்கு இருக்கிறது என்பதை அவர்களுக்குச் சொல்லி, தயவு செய்து மனங்களை இந்த அடிப்படையிலே பிரிக்க வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க (முற்பகல் 10-35—10-36-ல்) சில சொற்ள் அகற்றப்பட்டது.



1977 ஜூலை 30]

திரு. டி.பி.மு. பெரியசாமி : மதிப்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவரவர்களே, எனதுபேச்சில் '.' என்ற வார்த்தையை தயவுசெய்து எடுத்துவிடும்படி பணிவோடு கேட்டுக்கொள்கிறேன் அதை யாருடைய மனதையும் புண்படும்படி ......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : * * * என்ற வார்த்தையை சபைக்குறிப்பிலிருந்து நீக்கும்படி ஆணையிடுகிறேன்.

திரு. டி.பி.மு. பெரியசாமி : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், நிதி நிலை அறிக்கையில் விவசாயப் பெருங்குடி மக்களின் வாழ்வுக்காக அவர்கள் கட்ட வேண்டிய வரியிலிருந்து விடுதலை அளித்து வரியைத் தள்ளுபடி செய்ததற்காக அவரை மனமுவந்து பாராட்டுகிறேன்.

நிதி நிலை அறிக்கையில் விவசாயிகள் துயர் துடைப்பதற்கு அவர்கள் ஒதுக்கிய நிதியைப் பார்க்கிறபோது, இதற்கு முன் ஞலே இருந்த அரசு எவ்வளவு தவறு செய்து இருக்கிறது என் பதை சுட்டிக்காட்டுவதன் மூலமாக, இதற்குப் போதிய நிதி அளவை, நிதி நிலை அறிக்கையிலே, ஒதுக்கிய நாஞ்சிலாரைப் பாராட்டுகிறேன்.

பாசனத்திற்காக 1975-76 ஆம் ஆண்டிலே பாசன முதலீடு 11.9 கோடி ரூபாயாக இருந்தது. இப்போது 24.7 கோடி ரூபாயாக உயரும் என்பது குறிப்பிடத்தக்கது, பாராட்டுக்குரியது, வரவேற்கத்தக்கது என்று சொல்லி நிதி நிலை அறிக்கையை வரவேற்கிறேன். மேலும் பெரியாறு மேம்பாட்டுத் திட்டத்திற்காக உலக வங்கி நிதி உதவி செய்வதை இந்த நிதி நிலை அறிக்கையில் இந்தத்திட்டத்திற்காக 41.04 கோடி ரூபாய் செலவாகும்என்றும்' அதற்காக நமது அரசு 3.16 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாக வித்திருப்பது பெரியாறு பாசனத்தில் இருக்கக்கூடிய விவசாய மக்களுக்கு நல்லதொரு செய்தியாக இருக்கிறது என்று சொல்லி கொள்ள ஆசைப்படுகிறேன்.

சிறு பாசனத் திட்டங்களுக்காகவும், சிறு கிணறுகள் தூர் வாரி சீரமைக்கவும் 4.7 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது பெரிதும் வரவேற்கப்படும். கிராம மின் வசதி திட்டத்தின் கீழ் 30 ஆயிரம் பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையிலே கூறியிருப்பது நாங்கள் வரவேற்கத் தக்க ஒன்ருக இருந்தாலும் உண்மையிலேயே 30 ஆயிரம் பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்க உறுதிப்படுத்தவேண்டுமென் ருல், மின் இணைப்பு வழங்குவதிலே உள்ள கஷ்டங்களைப் போக்க வேண்டும் என்று நிதி அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க (முற்பகல் 10:35—10:36இல்) ஒரு சொற்கள் அகற்றப்பெற்றது.

தலைவர் சொல்லிய அந்தத் திட்டங்களையெல்லாம் இதிலே நல்ல முறையிலே நிறைவேற்றியிருக்கிறார்கள். கிராமப்புற மக்களுடைய பொருளாதார மேம்பாட்டுக்காக இந்தத் திட்டத்திலே முன் உரிமை கொடுத்து இருப்பது எல்லோராலும் வரவேற்கத் தக்கது.

நான் மதுரை நகரத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தாலும் இந்த வரவு-செலவுத் திட்டத்தினைக் குறிப்பாக வரவேற்கிறேன். கிராமப்புற மக்களுக்கு, நகரத்தில் கிடைக்கின்ற எல்லா வசதிகளையும் தருவதன் மூலம் மதுரையில் உள்ள எல்லா வசதிகளையும், கிராமப் புற, மக்களுக்குக் கிடைக்கச் செய்வதின் மூலம் கிராமத்தில் உள்ள மக்களின் வாழ்க்கை மேம்பாட்டையச் செய்து, அதே நேரத்தில் நகரத்தின் சிரமத்தைக் குறைத்து, கிராம மக்கள் நகரத்திற்கு வருவதன் மூலம் ஏற்படுகின்ற பிரச்சனைகளைக் குறைக்கின்ற வகையிலே இந்த வரவு-செலவுத் திட்டம் அமைக்கப்பட்டிருப்பதற்காக நான் இதை வரவேற்கிறேன்.

அடுத்து ஏதோ நான் ஆளுங்கட்சி உறுப்பினன் என்கின்ற ஒரே காரணத்திற்காக மட்டும் இந்த வரவு செலவுத் திட்டத்தை வரவேற்கவில்லை. பத்திரிக்கைகள் கூட இந்த வரவு-செலவுத் திட்டத்தை வரவேற்று இருக்கின்றன. மெயில் போன்ற நடுநிலைப் பத்திரிக்கைகள் மட்டும் இந்த வரவு-செலவுத் திட்டத்தை வரவேற்று இருக்கவில்லை. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கொள்கைகளைச் சாடுகின்ற இந்தியன் எக்ஸ்பிரஸ், தினமணி போன்ற பத்திரிக்கைகள் கூட இந்த வரவு-செலவுத் திட்டத்தை வரவேற்று இருக்கின்றன என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். [மணியடிக்கப்பட்டது].

[முற்பகல் 10-50]

இன்றைக்குள்ள பண வீக்க சூழ்நிலையிலும், விலைவாசி உயரும் தன்மையிலும், பற்றுக்குறை நிதிநிலையை நாட்டுக்கு அளிக்கக் கூடிய நிலையிலே, வரிச்சுமையை மேலும் உயர்த்த முடியாத சூழ்நிலையிலும், மத்திய மாநில நிதி உறவுகள் சீராக இல்லாது அமைந்திருக்கும் இந்த நிலைமையிலே, நம்முடைய நிதியமைச்சரவர்கள் இந்த பட்ஜெட்டை இங்கே அளித்திருக்கிறார்கள். சர்க்கஸ் ரிங் மாஸ்டர் எப்படிப் பணியாற்றுகிறாரோ, அதுபோல நமது மாண்பு மிகு நிதி அமைச்சர் அவர்கள், பல பிரச்சினைகளையும் சமாளிக்கின்ற வகையில், இந்த வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரித்து நமக்குத் தந்திருக்கிறார்கள். [மணியடிக்கப்பட்டது.]

மத்திய அரசு 7-வது நிதிக் கமிஷனை அமைக்க இருப்பதை நம்முடைய பட்ஜெட்டிலே தெரிவித்திருக்கின்றார்கள். அந்த 7-வது நிதிக் கமிஷனில் தமிழகத்திற்கு வரவேண்டிய நிதியைப் பெற இந்த அரசு வலியுறுத்தும் என்கின்ற உத்தரவாதத்தை [illegible]த அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அது வரவேற்கத் தக்க ஒன்றாகும்.



இந்த பட்ஜெட்டிலே பொருளாதார அடிப்படைத் தேவைகளான வேளாண்மை, பாசனம், மின்சார சக்தி, தொழில்கள் ஆகியவற்றுக்கும், குடிதண்ணீர் வழங்குதல், கல்வி, சுகாதாரம், அரிசனங்கள், பழங்குடி மக்கள் பின் தங்கிய வகுப்பினர்கள் நலன் ஆகியவற்றுக்குமாக 263·5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கும் தன்மை வரவேற்கக் கூடியதாகும்.

அதோடு இல்லாமல் வேளாண்மைக்கு இந்த அரசு முன்னுரிமை அளித்திருப்பதும், மண்வளப் பாதுகாப்புத் திட்டத்திற்காக 302 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதும் வரவேற்கத் தக்கதாகும். இதனால் புஞ்சை சாகுபடிப் பகுதிகள் நன்மை பெறும். புஞ்சை சாகுபடியைப் பெருக்குவதன் மூலம் மக்களுடைய உணவு தானியப் பொருட்களை இந்த அரசு அதிகப்படுத்த இருக்கின்றது குறித்து நான் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன். வணிகப் பயிர்கள், கறிகாய், எண்ணெய் வித்துக்கள் ஆகியவற்றின் உற்பத்தியைப் பெருக்குவதன் மூலம் வேளாண்மைக்கு முக்கியத்துவம் அளித்து, வேளாண்மைப் பொருள்களுக்கு விற்பனை வசதிகளை விரிவுபடுத்த தனிப்பட்ட இயக்குநர் அலுவலகம் ஒன்றை அரசு அமைக்க இருக்கிற நிலை குறித்து வரவேற்கின்றேன். இன்றைக்கு நகரங்களில் காய்கறிகள் குறைந்த விலையில் கிடைக்கவில்லை. மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே காய்கறிகளை உற்பத்தி செய்து, குறைந்த விலையில் நகரத்திலுள்ள மக்களுக்குக் கிடைக்க வகை செய்ய வேண்டும். [மணியடிக்கப்பட்டது.]

அதோடு மீனளத்துறையைப் பொறுத்தவரையில் இடைத்தரகர்களின் ஆதிக்கம் நிறைய இருக்கிறது. மீனவர்களிடம் இருந்து கடற்கரையில் கிலோ 50 பைசாவுக்கு வாங்கி, நகரத்தில் 5 ரூபாய்க்கு விற்கும் இடையிலுள்ள இடைத்தரகர்கள் கொள்ளை லாபம் அடைகிறார்கள். மீன் பிடிக்கின்ற மீனளத் தொழிலாளிகளுக்கு எதுவும் நன்மை ஏற்படுவதில்லை. இன்றைக்கு இந்த இடைத்தரகர்கள் மீனவர்களுக்கு கடன் கொடுத்து, அவர்களிடம் அடிமை வேலை வாங்கிக்கொண்டு, கொத்தடிமைகளைப்போல நடத்துகிறார்கள். இவர்களுடைய கொட்டத்தை இந்த அரசு அடக்கி, நேரிடையாக மீனவர்களிடத்திலேயே அரசு கொள்முதல் செய்து, நகரங்களில் பாதுகாக்கப்பெற்ற குளிர்சாதனங்கள் பொருந்திய வண்டிகள் மூலம், குறைந்த விலையில் மக்களுக்கு மீன் கிடைக்க வகை செய்ய வேண்டுமென்று இந்த மன்றத்தின் மூலம் கேட்டுக் கொள்கிறேன். அதோடு தூத்துக்குடியில் மீனளக் கல்லூரியை ஏற்படுத்த இருப்பது பற்றியும், வரவேற்கிறேன். நெடிய கடற்கரை உள்ள தமிழகத்தில் எந்த எந்த இடத்தில் மீன்கள் கிடைக்கின்றன என்பதை அரசு சர்வே செய்து மீனவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய நிலையில் உள்ளது. மீன் உணவுகளை எப்படி தயார் செய்ய வேண்டுமென்பதை மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். இவற்றுக்கெல்லாம் மீனளக் கல்லூரி உதவி புரியும் என்று நம்புகிறேன்.

[திரு. என். லட்சுமிநாராயணன்] [1977, ஜூலை 30

இன்றையதினம் மீனவர்கள் எதுவும் குறிப்பிட்ட இடம் என்று இல்லாமல் வழக்கமாக மீன் பிடிக்கின்ற இடங்களுக்கே சென்று மீன் பிடிக்கின்றார்கள். ஆனால் கிழக்குக் கடற்கரைப் பகுதியில் நிறைய மீன் செல்வங்கள் பிடிக்கப்படாமல் இருக்கின்றன. அப்படிப்பட்ட பகுதிகளில், அரசே சிறிய கப்பலை வாங்கி, ''பிஷ்ஷிங் க்ரவுண்டு'' சர்வே செய்து மீனவர்களுக்கு அவ்வப்போது அறிவிப்பு செய்ய வேண்டுமென்று இந்த மாமன்றத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு மதுரை பால் பண்ணையில் மிஞ்சுகின்ற பாலை பவுடராக ஆக்குகின்ற வசதி இருக்கிறது. நிறைய பால் பவுடரும் தயாரிக்கப்படுகிறது. அப்படி உற்பத்தி செய்யப்படுகிற பால் பவுடர்கள் மார்க்கெட்டில் விற்பனையாகாமல், தேங்கியிருக்கிற சூழ்நிலை இருக்கிறது. அப்படித் தேங்கியிருக்கிற பால் பவுடரை விரைவில் விநியோகிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பாசனத்தைப் பொறுத்து 1975–76-ஆம் ஆண்டில் 11.9 கோடி ரூபாயாக இருந்தது, இன்றைக்கு 24.7 கோடியாக உயர்த்தப்பட்டிருக்கிறது.

இது வரவேற்கத்தக்கதொரு அம்சமாகும். இன்று நீர் தட்டுப்பாடு மிகுதியாக இருக்கிறது. நீரை சிக்கனமான முறையில் விவசாயிகளுக்குத் தரவேண்டியவர்களாக இருக்கிறோம். அந்த வகையில் பாசனத் திட்டத்திற்காக நல்லமுறையில் நிதி ஒதுக்கீடு செய்திருப்பது வரவேற்கத்தக்கது. பெரியாறு மேம்பாடு திட்டத்திற்கு, உலக வங்கியின் உதவியோடு ரூ. 41·04 கோடி மொத்தச் செலவிற்கு இந்த ஆண்டு 3.16 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருப்பதை அந்தப் பகுதி விவசாயிகள் உண்மையிலேயே வரவேற்பார்கள். பெரியாறு நீர் நிறைய சேதமாவதால் சிமென்ட் கால்வாய்களை அதிகப்படியாக அமைத்தால் ஏறத்தாழ 38,000 ஏக்கருக்கு மேல் அதனால் பயன் அடைய முடியும் என்றும் கூறிக்கொள்கிறேன். மின்சக்தியைப் பொறுத்தவரையில், 155 மெகாவாட்ஸ் அதிக உற்பத்தி செய்வதற்கு இந்த அரசு ஏற்பாடு செய்திருப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறேன். தமிழகம் இன்று மின்சாரத்தில் பற்றுக்குறை நிலையில் இருக்கிறது. அந்தப் பற்றுக்குறையைப் போக்க, மின்சாரத்தை ஒரு இடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு மாற்றும்போது ஏற்படுகிற சேதாரத்தைக் குறைப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும். ஏறத்தாழ 30 சதவீதம் மின்சாரம் அந்த வகையில் சேதாரமாவதாகச் சொல்கிறார்கள். ஆனால் மேலை நாடுகளில் எல்லாம் 5 சதவீதம் அளவிற்குத்தான் இந்த சேதாரம் ஏற்படுகிறது. எனவே இந்தச் சேதாரத்தினைக் குறைப்பதற்கு அதிகாரிகள் தக்க வழிவகைகள் காண வேண்டும். அடுத்து, மதுரை நகரத்தைப் பொறுத்தவரையில் மதுரை நகர வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். வைகை குடிநீர் திட்டத்தை மதுரை



1977, ஜூலை 30] [திரு. என். லட்சுமிநாராயணன்]

யில் நிறைவேற்ற வேண்டும். மதுரையில் குடிநீர் பிரச்னை என்பது ஒரு மாபெரும் பிரச்னையாக இருக்கிறது. எனவே அந்தக் குடிநீர் பிரச்னையைத் தீர்ப்பதற்கு வைகை குடிநீர் திட்டத்தை அடுத்து வரும் காலங்களிலாவது நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். குடிசைமாற்று வாரியத்தின் பணிகள் சென்னையில் மட்டுமே நடைபெற்று வருகிறது. அந்தப் பணிகளை மதுரை போன்ற நகரங்களுக்கும் விரிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏனெனில் மதுரை போன்ற நகரங்களி லும் ஏராளமான சேரிகள் இருக்கின்றன. அந்தச் சேரிகளை ஒழித்து, குடிசைகளை மாற்றி, நல்ல கட்டிடங்களை அங்கும் கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு கூட, வீட்டுவசதி வாரியத்தால் கட்டித் தரப்படுகிற வீடுகள் ஆயிரம் ரூபாய் வருமானம் உள்ளவர்களுக்கு ஒரு இடத்திலும், ரூ. 500 வருமானம் உள்ளவர்களுக்கு ஒரு இடத்திலும், ரூ. 200 வருமானம் உள்ளவர்களுக்கு இன்னொரு இடத்திலும் வீட்டுவசதி வாரியத்தி னால் வீடுகள் கட்டித் தரப்படுகின்றன. வர்க்க பேதத்தை ஒழிக்க இருக்கிற நாம்—ஆயிரம் ரூபாய் வருமானம் உள்ளவர்களின் வீடுகளுக்குப் பக்கத்தில் ரூ. 500 வருமானம் உள்ளவர்களின் வீடுகள் இருக்க வேண்டும். ரூ. 500 வருமானம் உள்ளவர்களின் வீடுகளுக்குப் பக்கத்தில் ரூ. 200 வருமானம் வரக் கூடியவர்களின் வீடுகள் இருக்க வேண்டும். அப்படி கலந்திருந் தால்தான் வர்க்கபேதம் ஒழிக்கப்படுவதற்கு அது முன்னோடிச் செயலாக அமையும் என்று கருதுகிறேன், அடுத்தபடியாக, வரி விதிப்பைப் பொறுத்தவரையில் [மணியடிக்கப்பட்டது].

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> மணி அடிப்பதன் நோக்கம் ஒன்றிரண்டு நிமிடங்களுக்குள் முடித்துக் கொள்ளுங்கள் என்று கூறுவதற்குத்தான். நான் பத்து தடவை மணி அடிக்க அடிக்க நீங்கள் பேசிக்கொண்டே போகிறீர்கள். ஒரு நிமிடத்திற்குள் முடித்துவிடுங்கள்.

<u>திரு. என். லட்சுமிநாராயணன் :</u> வரி விதிப்பைப் பொறுத்த வரையில், வாசனைத் திரவியங்கள், பவுடர் போன்றவைகளை இரு பிரிவுகளாகப் பிரித்து ஒன்றுக்கு 8 சதவீதம், மற்றொன்றுக்கு 12 சதவீதம் விதிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். எந்த முறையில் இதைப் பிரிப்பது என்று தெரியவில்லை. முகப் பவுடருக்கு மட்டும் 8 சதவீதம் வரி விதித்தால் நன்றாகயிருக்கும். அதைத்தான் ஏழை எளிய மக்களெல்லாம் பயன்படுத்துகிறார்கள். தலைக்குத் தடவும் வாசனை எண்ணெயை ஏழை மக்கள் பயன்படுத்துவதில்லை. ஏழை மக்களுக்கு பயன் ஏற்படும் வகையில் 8 சதவீதம் வரியை முகப் பவுடருக்கு மட்டும் போட்டு மற்ற எல்லாப் பொருள்களுக்கும் இப்போது இருப்பதைப்போல் 12 சதவீதம் வரி போடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. என். லட்சுமிநாராயணன்] [1977, ஜூலை 30

டூத் பேஸ்ட்க்கு பலமுனை வரி விதிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு 12 சதவீதம் ஒரு முனை விற்பனை வரி விதித்தால் வசூல் செய்வதற்கு வசதியாக இருக்கும் என்று சொல்லி எனக்கு இந்த வாய்ப் பளித்தமைக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

(முற்பகல் 11–00)

திரு. அ. செல்லப்பா : மதிப்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1977–78-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தின் ஒப்புத லுக்காக அளித்திருக்கிறார்கள். இதன் மீது கருத்துக்களை எடுத் துரைப்பதற்கு முன்னால், இங்கு வந்து பேசுவதற்குரிய வாய்ப்பை நல்கிய எங்கள் ஒப்பற்ற தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் என்னை தேர்ந்தெடுத்து இங்கு அனுப்பிய வலங்கைமான் தொகுதி மக்களுக்கும் என் நன்றியை உரித்தாக்குகின்றேன். இந்த நிதி நிலை அறிக்கையின் மூன்றாவது பக்கத்தில், நான்காம் பகுதியில், மத்திய மாநில அரசுகளின் உறவைப் பற்றி சொல்லுகின்ற நேரத் தில் மத்திய அரசு எப்போதும் வழங்கும் நிலையிலும் மாநில அரசு கள் எப்போதும் வாங்கும் நிலையிலும் இருக்கின்றன என்ற உண் மையை தெரிவித்திருப்பதை நான் வரவேற்கிறேன். இந்த நிலை மையை மாற்றி அமைக்க இந்த அரசு செயலாற்ற வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

பாசனத்திற்காக இந்த ஆண்டு 24.7 கோடி ரூபாய் ஒதுக்கி யிருப்பதை நான் வரவேற்கிறேன். அதே நேரத்தில் தஞ்சை மாவட்டத்தில் உள்ள சில நடைமுறை சிக்கல்களையும் உணர்ந்து இந்த அரசு செயலாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரை, பெரும் மழை வந்து விட்டால், கீழத் தஞ்சை மிகவும் வெள்ளத்தால் பாதிக்கப் படுகிறது. அதைக் கருதி மேட்டூர் அணை அடைக்கப்பட்டால், மேலத் தஞ்சை காய்ந்து விடுகிறது. இதை நன்கு ஆலோசித்துப் பார்த்து, பொறியியல் பயின்ற நமது பொதுப்பணி அமைச்சர் அவர்கள் காலத்தில் இதற்கு நல்லதொரு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியைப் பொறுத்தவரை பெரும்பாலும் விவசாயத் தொழிலாளர்களும், விவசாயிகளும் நிறைந்த தொகுதியாகும். இந்த அரசு விவசாயிகளுக்கு பாதுகாப்பாக பயிர் பாதுகாப்புத் திட்டத்தைக் கொண்டு வருவார்கள் என்று அவர்கள் மிகவும் ஆவலோடு எதிர்பார்த்தார்கள். ஆனால் இந்த அரசு மத்திய அரசு தான் இதைக் கொண்டுவரவேண்டும் என்று சொல்லி விட்டது. எங்கள் துணைத் தலைவர் பேராசிரியர் அவர்கள் பேசும் போது குறிப்பிட்டதுபோல் இந்த அரசே பயிர் பாதுகாப்புத் திட்டத்தை எடுத்துக்கொண்டு நடைமுறைக்கு கொண்டுவர



1977 ஜூலை 30] [திரு. அ. செல்லப்பா]

வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் எனது தொகுதியில் ஏராளமான விவசாய தொழிலாளர்கள் இருக்கிறார் கள். அவர்கள் எல்லாம் தங்களுக்கு இதுவரை இருந்துவந்த தினக்கூலி என்பது போய் மாதச் சம்பளம் வரும் என்று அந்த அப்பாவி தொழிலாளர்கள் எண்ணிக்கொண்டிருந்தார்கள். ஆனால் இன்றையதினம் இந்த அரசு அந்த எண்ணத்தை ஈடேற்றவில்லை என்று நான் குற்றஞ்சாட்டுகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்த காலத்தில் எல்லா சேரிகளுக்கும் மின் இணைப்பு கொடுக்கப்படவேண்டும் என்று திட்டமிட்டு சேரிகளுக் கெல்லாம் மின் இணைப்பு கொடுத்ததை நாம் அறிவோம், இந்த நாடும் அறியும். இதில் என்னுடைய தொகுதியில் சில இடர்பாடுகளும் இருக்கின்றன. ஒரு பழமொழி சொல்வார்கள், சாமி வரம் கொடுத்தாலும், பூசாரி வரம் கொடுக்க மாட்டார் என்றுசொல்வதுபோல், அன்றைக்கிருந்த அரசாங்கம் மின் இணைப்பு கொடுக்க வேண்டுமென்று ஆணை பிறப்பித்தும், கும்பகோணம் எலக்ட்ரிக் சப்ளை கார்ப்பரேஷன் செயலாற்றவில்லை. தற்போது இந்த கார்ப்பரேஷன் அரசு கைவசம் வந்துள்ளது. ஆகவே இந்த அரசு உடனடியாக இதுபோன்ற கிராமங்களுக்கு, குறிப்பாக சேரிப்பகுதிகளுக்கு மின் இணைப்பு கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தாய்க்குலத்தைப் பற்றி பேசக்கூடியவர்கள், புதுமை யான திட்டத்தை அவர்களுக்காக கொண்டுவருவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் ஏதோ ஆண்டு ஒன்றுக்கு 150 ரூபாய் வீதம் 1,000 பேர்களுக்கு உதவித் தொகை கொடுக்க முன்வந்துள்ளது. இளம் விதவைகளுக்கு இந்த உதவி கொடுக்கப் படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இளம் விதவைகளைப்பற்றி பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் ''கோரிக்கையற்று கிடக் குதண்ணே.. வேரில் பழுத்த பலா..'' என்று சொல்லியிருக்கிறார் கள். அப்படிப்பட்டவர்களுக்கு எங்களுடைய ஒப்பற்ற தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக்காலத்தில் இளம் விதவைகளை மறுமணம் செய்து கொண்டால் 5,000 ரூபாய் கொடுக்க முன்வந்தார்கள். இந்த அரசு அதைவிட ஏதேனும் புரட்சிகரமான திட்டத்தைக் கொண்டுவரும் என்று எதிர்பார்த் தோம். ஆனால் ஏமாற்றம்தான் மிஞ்சியுள்ளது.

அடுத்து, அரசு 200 ரூபாய் அதிகபட்ச சம்பளம் வாங்குபவர் களுக்கு மேல் உள்ளவர்களுக்கு 10 ரூபாய் பஞ்சப்படியாக கொடுக்க முன்வந்திருக்கிறது. இதில் கடைநிலை ஊழியர்களை ஏன் விட்டுவிட்டார்கள் என்று தெரியவில்லை. அவர்கள் இந்த அரசுக்கு என்ன பாவம் செய்தார்களோ தெரியவில்லை. அதிலும் 10 ரூபாய் கொடுத்துவிட்டு 15 ரூபாய் பிடித்தம் செய்துகொள் கிறார்கள். இதன் நிலைமை என்னவாகிறது என்று பார்த்தால் முன்பு இருந்ததைவிட ஐந்து ரூபாய் குறைவாகப் பெறுகிறார்கள்.

[திரு. அ. செல்லப்பா] [1977 ஜூலை 30

இந்த சேமிப்பு, கட்டாய சேமிப்பு என்ற முறையிலே தான் புகுத்தப்பட்டிருக்கின்றது. அதுமட்டுமல்ல. இந்த பதினைந்து ரூபாயை அவர்களிடமிருந்து பிடிப்பதற்குப் பதிலாக இந்த அரசு அலுவலர் ஒரு தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் போட்டால் 25 ஆண்டுகள் கழித்து அவருக்கு என்ன கிடைக்கும் தெரியுமா? அந்த விவரத்தைச் சொல்கிறேன். ஒவ்வொரு மாதமும் 15 ரூபாய் வீதம் இந்தியன் பாங்கியிலே 25 ஆண்டு காலத்திற்குப் போட்டால் கடைசியில் அவருக்கு ரூபாய் 20,067-30 காசுகள் கிடைக்கும். அதே தொகையை தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியிலே போட்டால், 25 ஆண்டுகள் கழித்து ரூபாய் 20,947–25 காசு பெறுவார் ஆனால் இந்த அரசு கொடுப்பதாகச் சொல்கின்ற தொகையோ ரூபாய் 10,000 தான். எனவே, இந்தத் திட்டத்தில் என்ன புரட்சி இருக்கிறது? என்ன புதுமை இருக்கிறது என்பதை என்னால் ஊகிக்கமுடியவில்லை. அரசு ஊழியர்களை அடிக்காமல் அடிக்கிறீர்கள் என்பதை சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அரிசன பழங்குடி மாணவர்களுக்கு உதவி செய்யப்பட்டிருப்பதற்காக நான் இந்த அரசைப் பாராட்டுகிறேன். ஆனால் அதே நேரத்தில் பிற்பட்ட மாணவர்கள் கதி என்ன? அவர்கள் பிரச்சினை குறித்து நான் கவலைப்படுகிறேன். அவர்களது பெற்றோர்கள் வருமானம் ஆண்டுக்கு ரூபாய் 2,500–க்கு அதிகமாக இருந்தால் எந்தவிதமான சலுகையும் கிடையாது. எனவே, இந்த ரூபாய் 2,500 என்பதை குறைந்தபட்சம் ரூபாய் 5,000 என்று மாற்ற இந்த அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து என், தொகுதியைப் பற்றி ஒருசில கருத்துக்கள் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில், தஞ்சைக்கும் கும்பகோணத்திற்கும் இடையில் ஆலூர், கோவிந்தக்குடி வழியாகச் செல்லும் சாலையில் 4, 5 ரூட் பஸ்கள் செல்கின்றன. ஒரு டவுன் பஸ்ஸும் செல்கிறது. திட்டையில் ரயில்வே ஸ்டேஷனுக்கு அருகாமையில் லோயர் பிரிட்ஜ் ஒன்றிருக்கிறது. மழைக் காலங்களில் அந்த பிரிட்ஜில் மழைத் தண்ணீர் வழிந்தோடும். மழை பெய்து ஒரு வார காலமானாலும் இந்த நிலைமை இருக்கிறது. ஆதலால் அந்த தண்ணீர் வெளியேறாமல் தேங்கி அந்த நேரங்களில் அந்த வழியாக பேருந்துகள் செல்ல முடியாத நிலைமை ஏற்படுகிறது. எனவே இந்த அரசு அந்த இடத்தில் கீழ்ப் பாலத்திற்குப் பதிலாக ஒரு மேம் பாலம் கட்ட வேண்டும். இது போன்ற சில நல்ல பல திட்டங்கள் இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றதா என்று பார்க்கின்ற நேரத்திலே, என் போன்றவர்களுக்கு ஏமாற்றத்தை அளித்திருக்கிறது. அடுத்து அடுத்து வரும் இந்த நிதிநிலை அறிக்கைகளிலாவது, எதிர்க்கட்சியிலே உள்ளவர்கள் ஆக்கப்பூர்வமான கருத்துக்கள் தெரிவித்தால் அதை ஏற்றுக்கொண்டு செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடிக்கின்றேன். வணக்கம். நன்றி.



1977 ஜூலை 30]

*திரு. ஓ. சோ. வேலுசாமி: சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் 77–78-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே ஆரம்ப கட்டத்திலேயே அகில இந்திய பொருளாதார நிலையை மிக இரத்தினச் சுருக்கமாக, ஒரு வாக்கியத்திலே சொல்லி, அறிக்கையை ஆரம்பித்திருக்கிறார்கள்.

''விலைவாசி நிலையாக ஒருசில காலம் இருந்தபின், தற்சமயம் அனைத்திந்திய பொருளாதாரத்தில் பணவீக்கச் சக்திகள் மீண்டும் தலைதூக்கத் தொடங்கியுள்ளன'' என்று ஆரம்பித்திருக்கிறார்கள். ஒரு உண்மையான, நியாயமான கருத்தை அகில இந்திய பொருளாதாரத்திலே கடந்த இரண்டு ஆண்டுகளாக இருந்த நிலைமையை ஓரேஒரு வாக்கியத்தில் அழகாகச் சொல்லியிருக்கிறார்கள். ''ஒருசில காலம் தான்'' என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த ஒரு சிலகாலம் எல்லோருக்கும் அறிந்த காலம் தான். அவசரநிலை பிரகடன நேரத்திலே தான், விலைவாசிகள் நிலையாக இருந்தது அதைத்தான் ''ஒரு சில காலம் நிலையாக இருந்தபின், தற்போது பணவீக்கச் சக்திகள் மீண்டும் தலைதூக்கத் தொடங்கின'' என்று சொல்லியுள்ளார்கள். இந்த அவசர நிலையைப் பொறுத்தவரையில், மாண்புமிகு பேராசிரியர் அவர்கள், மாண்புமிகு சாதிக் பாஷா அவர்கள், தோழர் உமாநாத் அவர்கள் அரசியல் கண்ணோட்டத்தில், கடுமையாக விமர்சனம் செய்தார்கள். அத்துமீறல்களை எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். ஆனால் இந்த அறிக்கையிலே மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இந்த விலைவாசியைப் பற்றி சொல்கின்ற நேரத்தில், பொருளாதார கோணத்திலே இருந்து பார்த்து பொருளாதார நிலையை விளக்குகின்றபோது, அவசரகால நிலைமை பிரகடனத்தில் இருந்தபோது, 'விலைவாசிகள் நிலையாக இருந்தது,. என்ற ஒரு நல்ல கருத்தை உண்மையைத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

(முற்பகல் 11–10)

பொதுவாக, அத்துமீறல்களைப் பொறுத்தவரை அவசர கால நிலையாக இருந்தாலும் சரி அல்லது சாதாரண கால நிலையாக இருந்தாலும் சரி, சட்டத்திற்கு அப்பாற்பட்டு, மனிதாபிமானத்திற்கு அப்பாற்பட்டு எந்த அத்துமீறல்கள் நடந்தாலும் அது எந்த ஆட்சியில் நடந்தாலும் அவை ஏற்றுக்கொள்ளப்படக் கூடியவை அல்ல. ஆனால், ஒரு உண்மையை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில் நம்முடைய தமிழகத்தில் விவசாயிகள் சில கோரிக்கைகளை முன்வைத்து ஒரு போராட்டம் நடத்தினார்கள். அமைதியான போராட்டம் தான் நடத்தினார்கள். ஆனால், அந்த தினத்திலே என்ன நடந்தது என்டதை நாடும் அறியும், நாமும் அறிவோம்.

19 விவசாயிகள் சுட் கொல்லப்பட்டார்கள்—ஒரே நாளில். பேராசிரியர் அவர்கள் குறிப்பிட்டார்கள் அவசரகால நிலையில் பாலகிருஷ்ணன், சிட்டிபாபு போன்றவர்கள் எல்லாம் மறைந்தார்கள் என்று சொன்னார்கள். ஆனால் சாதாரண காலத்தில், விவசாயிகள் அமைதியான முறையில் போராடுகின்றபோது அவர்கள் கோரிக்கைகளுக்காகப் போராடிய போது ஒரே நாளில் 19 பேர்கள் சுட்டுக்கொல்லப்பட்டார்கள். கோவில்பட்டியில் கந்தசாமி சாத்தூரில் சீனிவாசன், விருதுநகரில் ஆழ்வார்சாமி என்று தென்பகுதியில் ஆரம்பித்து வடபகுதி வரையில், கோவை வரையில் விவசாயிகள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். அப்பேற்பட்ட கொடுமைகளோடு அப்பேற்பட்ட அத்துமீறல்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிற போது அதனை அவர்களே ஒப்பிட்டுப் பார்க்க விட்டுவிடுகிறேன்.

விலைவாசி நிலையாக ஒருசில காலம் இருந்தது. அவசர காலத்திலேதான் அந்நியச் செலவாணியில் நமக்கு 3,200 கோடி ரூபாய் லாபம் கிடைத்தது என்பதை யாரும் மறுக்க முடியாது மறைக்க முடியாது. அந்தக் காலத்திலேதான் பசுமைப் புரட்சியின் லாபத்தைப் பெற்று ஏறக்குறைய 18 மிலியன் டன் உணவு உற்பத்தி செய்து கையிருப்பு வைத்திருந்தோம். அதுமட்டுமல்ல, 30 ஆண்டு பொருளாதார வரலாற்றிலேயே கண்டிராத ஆதாயம் அவசர காலத்தில் கிடைத்தது. திரு. ஏ. சி. ஜார்ஜ் அவர்களே பாராளுமன்றத்தில் சொல்லியிருக்கிறார்கள். ஏற்றுமதி இறக்குமதியில் 72 கோடி ரூபாய் நமக்கு லாபம் கிடைத்தது. இத்தகைய பொருளாதார முன்னேற்றம், வளர்ச்யின் அடிப்படையில் தான் இந்த விலைவாசி நிலையாக ஒருசில காலம் இருந்தது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதே நேரத்திலே, அதற்கு அடுத்த வரியிலே'...... தற்சமயம் அனைத்திந்தியப் பொருளாதாரத்தில் பணவீக்கச் சக்திகள் மீண்டும் தலைத்தூக்கத் தொடங்கியுள்ளன'. என்ற உண்மையையும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். தற்சமயம் பண வீக்க சக்திகள் தலைதூக்க ஆரம்பித்திருக்கின்றன. ஹாங்காங்கில் சர்வதேச நிதியமைச்சர்கள் கூட்டம் நடந்தபோது அங்கே சொன்னார்கள்—பணவீக்க சக்தியைக் கட்டுப்படுத்த வேண்டுமென்றால் எப்படி கட்டுப்படுத்துவது என்பதை இந்தியாவில் சென்று பாருங்கள் என்று சொன்னார்கள். அதே நேரத்தில் இங்கிலாந்தில் பவுண்ட் ஸ்டர்லிங் மதிப்பு குறைந்து கொண்டே வந்ததையும் நாம் பார்த்தோம். நம்முடைய இந்தியாவில் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டு ரூபாயின் மதிப்பு ஒவ்வொரு நாளும்பெருகிக் கொண்டே இருந்ததைப் பார்த்தோம். இப்படிப்பட்ட பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டபின் தற்சமயம் பண வீக்க சக்திகள் தலை தூக்க ஆரம்பிக்கக் காரணம் என்ன ?





தோழர் உமாநாத் அவர்கள் சொன்னார்கள். நம்முடைய பொருளாதாரத்தின் பெரும்பகுதி 75 (மொனாபலி) ஏகபோகக் குடும்பங்களுடைய கையிலே தொழிலதிபர்கள் குடும்பங்களுடைய கையிலே இருக்கின்றன, ஆகவே, நம்முடைய பொருளாதார வீழ்ச்சிக்கு, பொருளாதார சீர் குலைவுக்கு அதுதான் காரணம் என்று சொன்னார்கள். அதுமட்டுமல்ல; இன்று ஏறக்குறைய அந்த 75 குடும்பங்களோடு ஒப்பிடப்படக்கூடிய அளவுக்கு செல்வத்திலே இருக்கும் 250 கடத்தல்காரர்கள் இருக்கிறார்கள். அவர்களும் தங்கள் கை வரிசையைக் காட்டி கொண்டிருக்கிறார்கள். ஆசீர்வாதம் பெற்று, நல்லாசி பெற்று இன்று அவர்களுடைய கை வரிசையைக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை யாரும் மறுத்துவிட முடியாது. ஆகவே, பண வீக்க சக்திகளுக்குக் காரணம் என்ன ? 75 குடும்பங்கள் அவசர கால நிலையை எதிர்த்தன; 250 கடத்தல்காரர்களும் அவசரகால நிலையைக் கண்டனம் செய்தனர். ஆகவே, அவசர கால நிலையில் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டது என்பதை யாரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது என்பதைத் தெளிவாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

'எல்லாப் பிரச்சினைகளையும் சீர் தூக்கிச் சமன் செய்யும் நோக்குடன் அணுக வேண்டிய நிலைமையில் இருக்கிறோம்' என்று நிதியமைச்சர் அவர்கள் இந்த அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். எனவே சீர் தூக்கிச் சமன்செய்யும் நோக்குவது நல்லதுதான். அதே நேரத்திலே இங்கே தாக்கல் செய்யப்பட்டு இருக்கிற இந்த நிதிநிலை அறிக்கை தமிழக மாநிலத்தினுடைய பொருளாதார நிலைமையை, பொருளாதாரத்தின் தலைவிதியை, பொருளாதாரத்தின் வளர்ச்சியை நல்ல முறையிலே ஏற்படுத்துவதாக இருக்க வேண்டும். ஸ்திரத் தன்மையோடு கூடிய வளர்ச்சியை ஏற்படுத்துவதாக இருக்க வேண்டும். accelerated growth with stability என்பது இதனுடைய நோக்கமாக இருக்க வேண்டும். ஓரளவிற்கு மத்திய-மாநில உறவுகளைப் பற்றியெல்லாம் சொல்லியிருக்கிறார்கள், நிதிநிலைமைகளைப் பற்றியெல்லாம் சொல்லியிருக்கிறார்கள். பொதுவாகச் செலவினங்களிலே கவனம் அதிகமாகச் செலுத்தப்படவேண்டும். இந்த அறிக்கையிலே பார்க்கிற போது வளர்ச்சி வகை செலவிற்கு (டெவலப்மெண்ட் எக்ஸ்பெண்டிச்சருக்கு) எவ்வளவு பணம், வளர்ச்சி அல்லாத செலவுக்கு (நான்-டெவலப்மெண்ட் எக்ஸ்பெண்டிச்சருக்கு) எவ்வளவு பணம் என்று பார்த்தால் ஓரளவுக்கு நான்-டெவலப்மெண்ட் எக்ஸ்பெண்டிச்சரைவிட டெவலப்மெண்ட் எக்ஸ்பெண்டிச்சர் அதிகமாக கொடுக்கப்பட்டிருந்தாலும்கூட இன்னும் அதிகமாகத் தொகை ஒதுக்கி இருக்கலாம் என்பதுதான் என் கருத்து. டெவலப்மெண்ட் எக்ஸ்பெண்டிச்சருக்கு எவ்வளவுக்குகெவ்வளவு பணம் ஒதுக்குகிறோமோ அந்த அளவிற்குத்தான் ஸ்திரத் தன்மையுடன் கூடிய வளர்ச்சியை ஏற்படுத்த முடியும். இப்படிப்பட்ட சூழ்நிலையில் நான் ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

[திரு. ஓ. சோ. வேலுசாமி] [1977 ஜூலை 30

படையாக ஆகியிருக்கிறது. ஆனால் இதில் அரசியல் புகுந்து—
கொள்ளாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன்.

அடுத்து, மாநில சுயாட்சியைப் பொறுத்தவரையில் மத்திய
அரசுக்கும், மாநில அரசுக்கும் உள்ள உறவுகளைப்பற்றிச்சொல்
கிற காலத்தில் ஓரிரு கருத்துக்களைச் சொல்லிவிட்டு அமரலாம்
என்று கருதுகிறேன். கலைஞர் அவர்கள் 15—11—1969-ல் ஒரு
உத்தரவைப்போட்டு, டாக்டர் இராஜமன்னார் குழுவை அமைத்
தார்கள். அந்தக் குழுவின் பரிந்துரையை நாம் பார்த்தால்,
பொதுவாக அவர்கள் கேட்டது, '' அட்மோஸ்ட் ஆட்டானமி '',
(utmost autonomy) கூடுமானவரையில் மாநில சுயாட்சி என்றுதான்
கேட்டார்கள், ஆனால், டாக்டர் ராஜமன்னார் அவர்களுடைய
பரிந்துரையைப் பார்த்தால், Parliament need not burden itself
பார்லிமெண்ட் தன் மீது அதிகமான பளுவைச் சுமத்திக்
கொள்ள வேண்டியது இல்லை என்று சொல்லுகிறார்கள்.
ஆகவே, காங்கிரஸைப் பொறுத்த வரையில் மாநிலங்கள் அதிக
நிதி உறவுகளைக் கேட்பதிலே எந்த விதமான ஆட்சேபனையும்
இல்லை, ஆனால், மாநில சுயாட்சியைப் பொறுத்தவரையில்
டாக்டர் இராஜமன்னார் அவர்கள் அதை எதிர்க்கும் அளவிற்குத்
தான் இருக்கிறது. காரணம் என்னவென்றால், ''we have not
disturbed the essential Frame work of the Constitution'' என்று
அவர்களே சொல்லியிருக்கிறார்கள். ஆனால் கடைசியாக அவர்கள்
இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 263-வது பிரிவை சுட்டிக்
காட்டி மாநிலங்களிலே ஒரு உறவு மன்றம் நிரந்தரமாக இருக்க
வேண்டுமென்று சொல்கிறார்கள். 27—6—1967 அன்று இந்தச்
சட்டசபையிலே மறைந்த முதல்வர் அண்ணா அவர்கள் பேசும்
பொழுது I want the Centre to be strong enough to maintain
the sovereignty and integrity of India என்றுதான் அண்ணா
சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அரசியல் ரீதியிலே இல்லாது,
பொருளாதார ரீதியிலே அந்த அதிக அதிகாரங்கள் என்பதைப்
பார்க்கும்பொழுது நிதியின் உறவிலே அதிகமான அதிகாரம் பெறு
வதை நாங்கள் வரவேற்கிறோம். இந்த அரசியலமைப்புச் சட்டத்
தில் உள்ள அதிகாரங்களைக் கொண்டே திரு. ஆர். வெங்கட்ராமன்
அவர்கள் தொழில் அமைச்சராக இருந்த நேரத்தில் ஒவ்வொரு
நாளும் ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்திக் கொண்டிருந்தார்கள்.
இருக்கின்ற அதிகாரங்களை வைத்துக்கொண்டே அப்பொழுதெல்
லாம் எத்தனையோ தொழிற்சாலைகள் அமைத்தார்கள், வேலை
வாய்ப்புக்களை பெருக்கினார்கள் என்பதைச் சொல்லிக் கொண்டு
என்னுடைய உரையை முடிக்கின்றேன், வணக்கம்.

*<u>திரு. சீ. மு. வாசன் :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவ
ரவர்களே, அறிஞர் அண்ணாவின் அடிச்சுவட்டில், அனைவருக்கும்
பயனளிக்க அமைந்ததே புரட்சித் தலைவரின் தலைமையில் அமைந்த



1977 ஜூலை 30] [திரு. சீ. மு. வாசன்]

நல்லரசு. இது ஆட்சிப் பொறுப்பேற்ற ஒரு திங்களில் அளித்திடும் கன்னி வரவு–செலவுத் திட்டம், மக்களுக்குக் கனியோடு கரும்புச் சாற்றையும் கலந்து கொடுத்தது போன்ற இன்பம் அளிக்கிறது. இத்தகைய வரவு–செலவுத் திட்டத்தைத் தந்த மாண்புமிகு அமைச்சர்களுக்குப் பணிவன்பான நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அனைத்துத் துறைகளிலும் கொண்டு வந்துள்ள திட்டங்கள் அனைத்தும் மக்களுக்கு முழுமையாகப் பயன்படும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. விவசாயிகளுக்கு இருந்த ஒரு பெரும் பிரச்சனை தாங்கள் உற்பத்தி செய்த பொருட்களை ஒழுங்கான, நேர்மையான முறையில் விற்பனை செய்ய முடியாத நிலை, அளவுக்கு மீறிய இடைத்தரகர்களின் கொள்ளை ஆகிய இந்த நிலையின்றுந்து மீட்டு, விவசாயிகளை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தும் வண்ணம், வேளாண்மைப் பொருள்களுக்கு விற்பனை வசதிகளை விரிவுபடுத்த தனி இயக்குநர் அலுவலகம் திறப்பது இந்த அரசு விவசாயிகளுக்கு அளிக்கும் நல்விருந்தெனலாம். இதனை உளமாற அனைத்து மக்களும் வரவேற்பார்கள் என்பதில் ஐயமில்லை.

முன்பு இருந்ததைவிட 1977-78 ஆம் ஆண்டில் பாசனத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ள 24·7 கோடி ரூபாய் என்ற செய்தி அனைவருக்கும் இனிக்கக் கூடிய நற்செய்தியாகும்.

சிறப்புச் சிறுபாசனத் திட்டங்களுக்காகவும் ஏரி குளங்களைத் தூர் வாரிச் சீரமைக்கவும் வரவு–செலவுத் திட்டத்தில் ரூ. 4·7 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் சிறுசிறு ஓடைகளைத் தேக்கி அருகிலுள்ள குளங்களில் நீரைத் தேக்குவதால் சிறுசிறு நீர்த் தேக்கங்களினால் கிராமங்கள் பல நன்மை பெறும். சிறுசிறு நீர்த் தேக்கங்களினால் அனைத்து ஊர்களுமே நன்மை பெறும். ''வரப்புயர'' என்று வாழ்த்திய ஔவையார் வாக்கை நிறைவேற்றியது நயது கழக அரசு.

எனது தொகுதியாகிய வேடசந்தூர் வட்டம் வறட்சியான பகுதியாகும். ஐந்து ஆண்டுகளாக மழை பொய்த்த காரணத்தினால் கடுமையான பஞ்சம் நிலவுகிறது. அருகே சிறிய நீர்த்தேக்கங்கள் இன்மையால் தவறிச் சிறிது மழை பெய்தாலும் அந்த நீர் வீணாகி விடுகிறது. ஆனால் இந்த ஆண்டு பருவ மழை நிச்சயம் பெய்யும். அநேக சிறிய நீர்த் தேக்கங்களை அமைப்பதால் பசுமைப் புரட்சியை எதிர்நோக்கலாம். பிறகு வறண்ட பகுதியான எமது தொகுதி பசுஞ் சோலையாக மாறும் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. இதனை எங்கள் கழக அரசு நிச்சயம் நிறைவேற்றும் என உறுதி கொள்கிறேன்.

[திரு. சீ. மு. வாசன்] [1977 ஜூலை 30

கிராமங்களின் வளர்ச்சியே நாட்டின் வளர்ச்சி என்ற குறிக் கோளைக் கொண்டது எமது நல்லரசு. தேர்தல் உறுதி மொழியை நிறைவேற்றும் வண்ணம் கிராமங்களில் தொழில் வளர்ச்சித் திட்டம் அமைந்துள்ளது.

எனது தொகுதி மிகுந்த வறட்சியான பகுதியாகையால் சிறு சிறு தொழில்கள் தொடங்கினால் பல்லாயிரக்கணக்கான மக்கள் நன்மை பெறுவர். ஆகவே, சிறு சிறு தொழிற்பேட்டைகள் அமைக்கும்படித் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

கோம்பை அணைத் திட்டம் கட்டுவதால் சுமார் 1,000 ஏக்கர் நிலமும் 50 குளங்களும் பயன்பெறும். குஜிலியம்பாறை ஒன்றி யம் முழுமையுடன் பாசன வசதி பெறுவதுடன் 300 சதுர மைலில் உள்ள கிணறுகள் அனைத்தும் நீர் ஊற்றுப் பெறும். இதனால் இறைவைப் பாசன வசதியும் உண்டாகும். ஆகையால் கோம்பை அணைத் திட்டத்தை எனது தொகுதியில் அமைக்க ஏற்பாடு செய்யும்படி வேண்டுகிறேன்.

தமிழகத்திலேயே குடிநீர் பிரச்சினை பெரிதாக உள்ளது. இப் பிரச்சினையை நமது அரசு நன்முறையில் சீர் தூக்கி ஆராய்ந்து நன்முடிவு கண்டிருப்பது வரவேற்கத்தக்கது. இந்தக் குடிநீர்ப் பிரச்சினை மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் அதிக பாதிப்பு ஏற்படுத்தியுள்ளது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

எனது தொகுதியிலும் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க அதிக அளவு நிதி ஒதுக்கீடு செய்து கவனிக்கும்படிகேட்டுக் கொள்கிறேன். மாவட்ட ஒதுக்கீடுகளினின்று விலக்கி, எனது தொகுதி தமிழ் நாட்டிலேயே வறட்சிப் பகுதி என்ற காரணத்தால் சிறப்பாக இதனை நோக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தக் குடிநீர், பாசன வசதி செய்வதோடு எனது தொகுதியாகிய வேட சந்தூரை வறட்சிப் பகுதியாக அறிவிக்கும்படி வேண்டுகிறேன்.

அரிசனங்கள், பழங்குடியினர், அரசு அலுவலர், ஆசிரியர், ஆகிய அனைத்துத் தொழில் புரியும் மக்களுக்கும் நன்மையளிக்கும் இவ்வரவு-செலவுத் திட்டத்திற்கு அனைவரும் தங்களது இதயப் பூர்வமான வரவேற்பை அளிக்கின்றனர் என்பதில் ஐயமில்லை. இத்தகைய அரிய செயலைச் செய்த மாண்புமிகு நிதி அமைச்சரை மிகவும் நன்றியறிதலோடு போற்றுகிறேன்.

எனது தொகுதி மிகவும் பின்தங்கிய பகுதி. சரியான பேருந்து வழித்தடங்களும் சிறுசிறு கிராமங்களை இணைக்கும் சாலை களும் இல்லை. அங்கு சிறு பேருந்துகளை விடுவதன்மூலம் அனைத்துக் கிராம மக்களும் பயன்பெறுவர்.



1977 ஜூலை 30] [திரு. சீ. மு. வாசன்]

நடமாடும் வைத்தியசாலையமைப்பது நாட்டு மக்களின் மேல் கொண்ட நல்லெண்ணத்தைக் காட்டுகிறது. சரியாக நடை பெறாத ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை அரசே ஏற்று நடத்து வது நன்மைதரும் செயலாகும்.

எனது வேடசந்தூர் தொகுதியிலே இதுவரையிலே அரசு மருத்துவமனை இல்லை. அங்கு வாழும் மக்கள் பயன்பெறும் வகையில் ஒரு மருத்துவ மனை அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கல்விக்காக இந்த அரசு மேற்கொண்டுள்ள திட்டங்கள் அனைத்தும் சிறப்போடு அமைந்துள்ளன. 10+2+3 கல்வி முறைத் திட்டமும், இதனால் 11,000 புதிய ஆசிரியர் வேலை பெறுவர் என்பதும் உள்ள மகிழ்வை ஏற்படுத்துகிறது.

பொதுவாக நமது கல்வித் தரம் குறைந்து வருகிறது என்று வதந்தி பரவுகிறது. இதை நமது அரசு நிச்சயம் மாற்றும் என்று உறுதி கூறலாம். நடுத்தரப் பள்ளியில் பட்டதாரி ஆசிரியர்கள் தலைமையாசிரியர்களாகப் பணியாற்ற அப்பள்ளியின் மாணவர் வருகைப் பதிவு 400 ஆக இருக்க வேண்டுமென்ற முறை அமுலில் உள்ளது. பல கிராமப்புற நடுத்தர பள்ளிகளில் 400 மாணவர்கள் இருப்பதில்லை. இதனை 250 அல்லது 300 என்ற வருகைப் பதிவை நடைமுறையில் திருத்தம் கொண்டுவந்தால் அநேக கிராமப்புற நடுநிலைப்பள்ளிகளில் பட்டதாரி ஆசிரியர்கள், தலைமை யாசிரியர்களாகப் பணியாற்ற முடியும். இதனால் கல்வித் தரம் உயரும். பல படித்த பட்டதாரி ஆசிரியர்களும் வேலை பெறுவர். எனவே இதனைச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எனது வேடசந்தூர் தொகுதியிலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளிக்கு மாணவர்கள் அதிகமாக வருகை தந்தும் போதுமான இடவசதி இல்லை, கூரை வசதி இல்லை, தண்ணீர் வசதி இல்லை. ஆகவே, அவற்றிற்கு இந்த அரசு ஏற்பாடு செய்யவேண்டுமென்று தங்கள் மூலமாகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

"விழுந்தால் வீட்டுக்கு; விழாவிட்டால் நாட்டுக்கு" என்று அமரர் பேரறிஞர் அண்ணா அவர்கள் பரிசுச் சீட்டைப் பற்றிக் கூறியுள்ளார்கள். பரிசுச் சீட்டை, சூதாட்டமாக எண்ணா மல் மக்களும், அரசும் இதனால் நன்மையடையும் வண்ணம் அரசுப் பரிசுச் சீட்டு முறையினை அமுல் படுத்தியமைக்கு நன்றி தெரிவிக்கின்றேன்.

ஏழை மக்களுக்குக் கடன் கொடுக்க வரவு-செலவு திட்டத்தில் வழி செய்யப்பட்டுள்ளது. நாம் எத்தனை கூட்டுறவு சங்கங்கள் அமைத்தாலும் கொடுக்கின்ற கடன்கள் நேரடியாக மக்களுக்குப் பயன்தரவே இல்லை. ஆகவே, தனியார் துறையில் உள்ளவர்கள்

வட்டிக்குக் கடன் கொடுக்கிறார்கள். கூட்டுறவு சங்கம் மூலம் கொடுக்கப்படும் கடனுக்கான வட்டி 18 சதவீதம். ஆனால், தனியார் 12 சதவீதம் வட்டிக்குத் தான் கடன் கொடுக்க வேண்டுமென்று சொல்லும்போது, அவர்கள் அதற்கு மாறாக, மறைமுகமாக வேறு வட்டி வாங்குகின்றனர். ஆகவே, அவர்கள் 20, 21 சதவீத வட்டியை நேரடியாக வாங்க நடவடிக்கை எடுக்கவேண்டும். தனியார் கேட்கும் வட்டிக்கும் அரசு கேட்கும் வட்டிக்கும் வித்தியாசமிருக்கிறது. ஆகவே, அதில் அரசு கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, திண்டுக்கல்லை தனி மாவட்டமாக அமைக்கும்படியும் கேட்டுக்கொள்கிறேன். திண்டுக்கல், வேடசந்தூர், பழனி, பெரியகுளம் தாலூகாக்களை இணைத்து, திண்டுக்கல்லை தனி மாவட்டமாக ஆக்கும்படியும் அதை அடுத்த வரவு-செலவுத் திட்டத்தில் ஏற்படுத்தித் தரும்படியும் நிதியமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன்.

வரிகள் பலவற்றை ஏழை மக்களுக்குக் குறைத்தும், அதே சமயம் ஏழைகள் நன்மையடையும் வண்ணமும் இந்த வரவு-செலவுத் திட்டம் அமைந்துள்ளது. அனைத்து நிலை மக்களும் மனதில் உவகை கொள்ளும் வண்ணம் கன்னி வரவு-செலவுத் திட்டமே அமைந்து விட்டது என்பதே உண்மையான அண்ணாவின் தம்பியின் நல்லரசு இது என்பதற்கு வெள்ளிடைமலை. வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி அமர்கின்றேன்.

(முற்பகல் 11-30)

* திரு. ப. பொன்னுரங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, கன்னி பட்ஜெட்டின் மீது, என்னுடைய கன்னிப் பேச்சை வைப்பதற்கு முன்னால், நான் இந்த அவைக்கு வருவதற்கு காரணமான எனது தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், எனது இராயபுரம் தொகுதி வாழ் வாக்காளப் பெருமக்களுக்கும் என்னுடைய இதயம் கனிந்த நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இந்த பட்ஜெட்டைக் குறித்து பல்வேறு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை வைத்திருக்கிறார்கள். அதிலே ஆளும் தரப்பைச் சேர்ந்தவர்கள், குறிப்பாகவும், சிறப்பாகவும் அன்புக்கும், மரியாதைக்கும் உரிய மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் அவர்கள், என்னுடைய தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் 1971-72-லே சமர்ப்பித்த அந்த பட்ஜெட்டிலே சாராய வாடை வீசியது என்று குறிப்பிட்டார்கள். நான் உள்ளபடியே ஒத்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் அந்த சாராய வாடைக்குத் துணைபோனவர்கள் இன்று முதலமைச்சராகவும், அமைச்சரவையிலே சிலர் உறுப்பினர்களாகவும் இருக்கிறார்கள் என்பதை அருள் கூர்ந்து ஞாபகப்படுத்த கடமைப் பட்டிருக்கிறேன்.





திரு. எஸ். ஜே. இராமசாமி : பாயின்ட் ஆப் ஆர்டர். உறுப்பினர் பேசுவதை நீங்களும் கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள். அவர் யார்? எந்த அமைச்சர் என்று தயவு செய்து சரியாக சொல்லவேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த அமைச்சர் என்று குறிப்பிட்டு சொல்லவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயின்ட் ஆப் ஆர்டர் என்றால் நான் பதில் சொல்கிறேன். அவர் பேசியதில் அதிலே ஒன்றும் ஒழுங்குப் பிரச்சினை இல்லை. உறுப்பினர் தொடர்ந்து பேசலாம்.

திரு. ப. பொன்னுரங்கம் : இன்னொன்றும் நான் குறிப்பிட விரும்புகிறேன். அதே பேச்சில் சாக்கடை வாடை வீசியதாகவும் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டார்கள். நான் இதயபூர்வமாக ஒத்துக் கொள்கிறேன். மனமாற ஒத்துக்கொள்கிறேன். இன்னும் கொஞ்சம் கூர்ந்து நுகர்ந்திருப்பாரானால் பிண வாடை கூட அடித்திருக்கும் என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. ஏனென்றால் என்னுடைய தொகுதியில் நொச்சிக் குப்பம், காசிமேடு, பேசின் பிரிட்ஜ், ராதாகிருஷ்ணன் நகர் ஆகிய பிற பகுதிகளில் இருக்கிற குடிசைவாழ் மக்கள், சாக்கடையிலே, சுடுகாட்டிலே கொட்டகை அமைத்து வாழ்ந்து கொண்டிருந்தார்கள். அப்படிப்பட்ட ஏழை எளிய மக்களுக்கு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு எங்கள் தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில் குடிசைகளை அகற்றி மாடிவீடுகளை அமைக்க கைவைத்தக் காரணத்தால் பட்ஜெட் வாயிலாக அந்த வாடை அடித்தது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, நான் என்னுடைய கன்னிப் பேச்சை, முன்பு கவர்னர் உரையின் போது கலந்து கொள்ளாத காரணத்தினால், இன்று கவர்னர் உரையையும் தொட்டுப் பேச அனுமதியளிக்கவேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கவர்னர் உரை என்று தனியே சொல்ல வேண்டாம். இதுவும் அதிலே சேரும். இது பொது விவாதம்.

திரு. ப. பொன்னுரங்கம் : கடந்த 30-ம் தேதி அன்று நாம் ஒரு பெரிய நிகழ்ச்சியை தமிழ் நாட்டின் தலைநகரான சென்னையில் பார்த்தோம். அந்த நிகழ்ச்சி படாடோபமாக அமைக்கப்பட்டது மட்டுமல்ல, பல 100 தோரணங்கள் வைக்கப்பட்டு, ஆயிரக்கணக்கான

போலீசாருக்கு வேலை கொடுக்கப்பட்டு 100-க்கணக்கான போலீஸ் அதிகாரிகளுக்கு வேலை கொடுக்கப்பட்டு, அங்கே வரவழைக்கப்பட்டு, அதை விட அதற்கும் மேலாக ஒரு நாளைக்கு முன்னதாகவே சென்னை மாநகரத்தின் இருதயமாக உள்ள அண்ணா சாலையில் போக்குவரத்தை தடுத்து நிறுத்தி பொது மக்களுக்கு சொல்ல முடியாத அளவுக்கு கஷ்டம் ஏற்பட்டு அந்த நிகழ்ச்சி நடைபெற்றது என்பதை நாம் பார்த்தோம்.

அந்த நிகழ்ச்சி முதலமைச்சர் பதவி ஏற்றுக்கொண்டபிறகு நடந்தது ஆகும். பதவி ஏற்ற பிறகு மக்களை சந்திப்பது நல்ல முறைதான். சிறந்த முறை தான். இல்லை என்று நான் சொல்லவில்லை. ஆனால் இந்த நேரத்தில் நான் ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். அண்ணா வழி வந்தவர்கள் என்று சொன்னவர்கள் இப்படிச் செய்யலாமா? அண்ணா அவர்கள் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொண்டு விட்ட பிறகு இப்படிப்பட்ட நிகழ்ச்சி நடைபெற்றதா? இன்னொன்றையும் சொல்லிக்கொள்கிறேன். ஊழல் பேர்வழிகளை, வீண்விரயம் செய்பவர்கள் என்று குற்றம் சாட்டிய ஒரு சிலரால் விமர்சிக்கப்பட்ட டாக்டர் கலைஞர் அவர்கள் பதவி ஏற்றபோது 1971-ல் பதவி ஏற்றபோது இப்படிப்பட்ட நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டதா என்று நான் கேட்க வ்ரும்புகிறேன். இதை நான் குறிப்பிடுவதற்குக் காரணம், ஆளுநர் உரையில் வீண்விரயம் தவிர்ப்போம் என்று கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அப்படி இருக்கிறபோது இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் தேவையா? மேலும் முதலமைச்சர் அவர்கள் அன்றைய தினம் மாலையே மக்களை மெரினா பொது கூட்டத்தில் சந்திக்க இருக்கிறார்கள். இடைவெளி ஒரு சில மணி நேரங்களே. அப்படியிருக்கிற நேரத்தில் மக்கள் வரிப்பணத்தை உபயோகித்து இப்படிப்பட்ட ஆடம்பர செலவு வேண்டுமா? என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதுவும் அங்கே எவ்வளவு நேரம் இருந்து இருக்கிறார். பத்திரிகையில் பார்த்தோம். ஒரு சில வினாடிகளே அவர் அங்கே இருந்து இருக்கிறார். இப்படியெல்லாம் செய்து விட்டு வீண் விரயம் அற்ற ஆட்சி நடத்துவோம் என்று கவர்னர் உரையில் குறிப்பிட்டு இருக்கிறார்கள். இதைப் பார்க்கிறபோது எனக்கு வேதனையாக இருக்கிறது. ஒன்று சொல்லக்கூடும். கவர்னர் உரை அதற்குப் பின்னாலே வந்தது என்று. இந்த நிகழ்ச்சி கவர்னர் உரைக்கு முன்னாலே நடை பெற்றது என்று சொல்லக்கூடும். ஆனால் ''தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்'' சென்றிடக் கூடாது என்பதே என் வேண்டுகோளாகும். எனவே இந்த மாதிரி வீண்விரயம் தவிர்க்கப்பட வேண்டும் என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

மீனவர்களைக் குறித்து இந்த பட்ஜெட்டிலே மிக அழகாகக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவன் என்ற



காரணத்தால் அந்த விவகாரத்தில் நான் இந்த பட்ஜெட் விவாதத்தில் மிகவும் அக்கறை செலுத்தி பேசுவது நியாயம் என்று கருதுகிறேன். மீனவர்களுக்கு, மீனவ நலம், என்று குறிப்பிட்டு ஒரு அரிய திட்டத்தை வழங்கியிருக்கிறார்கள். நான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புவது அந்த மீனவ நலம் என்ற தலைப்பைப் பார்க்கிறபோது மீனவர்களுக்கு கல்வித் துறையில், தொழில் துறையில், சமுதாயத் துறையில் மற்ற எல்லாத் துறைகளிலும் நல்ல திட்டங்களைத் தீட்டிக்கொடுத்து இருக்கிறார்கள். என்று நான் முதலில் எண்ணிக்கொண்டு இருந்தேன். இடையில் அந்தத் திட்டங்களை கூர்ந்து கவனித்து நிலைமைகளைப் பார்க்கிறபோது அதில் ஒரு திட்டம் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். மீனவர்கள் இறந்தால் அந்தக் குடும்பத்திற்கு அதுவும் தொழில் செய்கிறபோது இறந்தால் அந்தக் குடும்பத்திற்கு ரூ. 5,000 கொடுக்கப்படும் என்று அறிவித்து இருக்கிறார்கள். மகிழ்ச்சி; வரவேற்கிறேன். அந்தச் சமுதாயத்தைச் சேர்ந்தவன் என்ற காரணத்தால் அதை ஆதரிக்கிறேன். நன்றி செலுத்துகிறேன். ஆனால் ரூ. 2,000 தான் முன் பணமாகத் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். மற்ற ரூ. 3,000 எந்த முறையில் எப்படி தர இருக்கிறார்கள் என்பதை அடுத்து மானியக் கோரிக்கை வருகிறபோது தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து அதை ஒட்டியே இன்னொன்றும் சொல்லப்பட்டு இருக்கிறது. 5,000 ரூபாய் கடனாக அந்த கைம்பெண்ணான மனைவிக்கு அல்லது குடும்பத்திற்கு கொடுக்கப்படும் என்று சொல்லியிருப்பது வரவேற்கத்தக்கது. மகிழ்ச்சி. ஆனால் அதே நேரத்தில் அதற்கு ஒட்டு மொத்தமாக ஆகும் செலவு எவ்வளவு என்று பார்க்கிறபோது முதலிலே மானியமாகத் தரும் தொகை ரூ. 2 லட்சம். ஒரு ஆண்டுக்கு அந்த சமுதாயத்தில் உள்ளவர்கள் எவ்வளவு பேர் இறந்தாலும் ரூ. 2 லட்சம் தானா? நான் அப்படி ஒரு துர்பாக்கியமான நிலை அந்த சமுதாயத்திற்கு வரவேண்டுமென்று விரும்பவில்லை. அப்படி ஒரு துர்பாக்கியமான நிலை 50 பேர், 60 பேர், 100 பேர் என்று வந்து விட்டால், இந்த அரசு அவர்களுக்கு உதவ என்ன திட்டத்தை வைத்து இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 11-40]

ஏனென்றால் தமிழ்நாடு முழுவதும் 40 பேருக்குத் தான் ஒவ்வொரு ஆண்டும் கொடுக்க இருக்கிறார்கள். இது எந்த அளவிற்குப் போதுமானது என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து இதனை ஒட்டியே சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். மீனவ சமுதாயத்திற்காக 4 லட்ச ரூபாயை இந்த அரசு ஒவ்வொரு ஆண்டும் செலவு செய்ய இருக்கிறது என்று இந்த நிதி நிலை அறிக்கையிலே குறிப்பிடப் பட்டிருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் மீனவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள்

இவர்களின் பால் அக்கறை கொண்ட அரசு என்று அந்தத் தரப்பிலிருந்தும் அவர்களோடு கூட்டணியில் இருப்பவர்களும் பாராட்டியிருக்கிறார்கள். அப்படிப் பாராட்டியவர்களுக்கு எந்த அளவிற்கு மீனவச் சமுதாயத்தினர் வஞ்சிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை இந்த அவையின் மூலம் கோடிட்டுக் காட்ட ஆசைப்படுகிறேன்.

அவைத் தலைவரவர்களே: முந்தைய பட்ஜெட்டில் 1975-76-ம் ஆண்டு தானைத் தலைவர் கலைஞர் அவர்கள் ஒதுக்கிச் செலவு செய்த பணம், 88 லட்சத்து 55 ஆயிரம் ரூபாய். அதே நேரத்தில் ஜனநாயக வாதிகளால் வெறுக்கப்பட்ட அந்த நெருக்கடி காலத்திலே அந்த ஆண்டிலே இந்த மீனவர்களுக்காக அவர்களுக்குக் கடன் வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டது 62 லட்சத்து 76 ஆயிரம் ரூபாய். ஆனால் ''ரிவைஸ்ட் எஸ்டிமேட்''-ல் 78 லட்சத்து 81 ஆயிரம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் மீனவ நண்பர்கள் இப்போது வந்திருக்கிற இந்த நேரத்தில் இந்த பட்ஜெட்டில் எவ்வளவு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றால் 24 லட்சத்து 14 ஆயிரம் ரூபாய். இந்த அரசு மீனவர்களுக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்கும் உற்ற நண்பன் என்று வர்ணிக்கப்படுகிறது. தாழ்த்தப்பட்ட என்னுடைய மக்களுக்கு, என் சமுதாய மக்களுக்கு இந்த அரசு இழைத்து இருக்கிற கொடுமைகளையெல்லாம் கோடிட்டுக் காட்ட முடியுமா என்றால் முடியாது.

தலைவர் கலைஞர் அவர்கள் இந்த நாட்டின் முதலமைச்சராக இருந்த போது அவர் மீனவர் வீடு கட்டும் திட்டத்திற்கு ஒதுக்கிய தொகை 129 லட்ச ரூபாய். நெருக்கடி நிலையின் போது ஒதுக்கிய தொகை ஒரு கோடி ரூபாய். ஆனால் அதே நேரத்தில் இந்த மீனவ நண்பர் ஆட்சியிலே, முதலமைச்சருடைய ஆட்சியிலே ஒதுக்கி இருக்கிற தொகை இரண்டாயிரம் ரூபாய் என்பதை வேதனையோடு தெரிவித்துக் கொள்கிறேன். நான் இந்த நேரத்திலே ஒன்றைச் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன். அண்ணா அவர்கள் கூட இது பற்றிப் பேசியது . .

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> இன்னும் இரண்டு நிமிடங்களே உள்ளன. ''டூ மினிட்ஸ் ப்ளீஸ்''.

<u>திரு. ப. பொன்னுரங்கம் :</u> அண்ணா அவர்கள் 1957-ம் ஆண்டு பேசியது எனக்கு இன்னும் பசுமையாக இருக்கிறது. மீனவர்களுக்காக அன்றைக்கு காங்கிரஸ் அரசாங்கம் ஒதுக்கிய தொகை குறைவு என்று கூட அவர் பேசவில்லை. ஆனால் அந்தத் தொகை உரியவர்களுக்கு, உரிய நேரத்தில், உரிய இடத்துக்குச் சென்று இருக்கிறதா என்பதை அரசாங்கம் கண்காணிப்போடு பார்க்க வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். ஏன் என்று





சொல்லி அவர் குறிப்பிட்டார் அந்தத் தொகையானது கைக்குக் கை மாறுகிற ஐஸ் கட்டியாக இருக்கிறது. எனவே மீனவர்களுக்காக ஒதுக்குகிற தொகை அவர்களுக்கு ஒழுங்காகக் கிடைக்க வேண்டுமென்று பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள். அண்ணா அவர்கள் தொகையைப் பற்றிக் குறிப்பிட்டு சொல்லவில்லை. கைக்குக் கை மாறுகிற ஐஸ் கட்டியாக இது கரைந்து விடுகிறது என்றார்கள். ஆனால் இந்த ஆட்சியில் மீனவர்களுக்கு ஒதுக்கிய தொகை இந்த பட்ஜெட்டிலேயே கரைந்து போயிருக்கிறது என்பதை வேதனையோடு சொல்லி என்வே, மீனவர்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை மிகவும் குறைவு என்பதைக் குறிப்பிட்டு என் உரையை முடிக்கிறேன்.

<u>*திரு இ. தமிழரசன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே. தமிழக மக்களுக்கு, மாண்புமிகு புரட்சித் தலைவர் தலைமையில், மாண்புமிகு நிதியமைச்சர் தந்திருக்கும் இந்த நிதி நிலை அறிக்கையினை, 1977-78-ம் ஆண்டுக்கான புரட்சிகரமான இந்தத் திட்டத்தை அறிவிக்கும் இந்த நேரத்தில் நானும் அவர்களில் ஒருவனாக நின்று கொண்டு இந்த நிதிநிலை அறிக்கையினை வாழ்த்தி வரவேற்றுப் பேச விரும்புகிறேன்.

தமிழக மக்களின், குறிப்பாக ஏழை ஹரிஜன, நடுத்தர மக்களின் வரிப்பணத்தைச் சுரண்டுவதற்கென்றே முந்தைய அரசுகள் சிற்சில திட்டங்களைப் போட்டு மக்களை மயக்கி அவர்கள் வாழவிடாமல் செய்து வந்தன. ஆனால் தற்போது உள்ள அரசு தான் ஏழை, எளிய மக்கள் என்றென்றும் மகிழ்ச்சிகொள்ளத் தக்க வகையில் திட்டங்களைப் போட்டு நிறைவேற்றப்பாடுபட இருக்கிறது. தமிழக மக்கள் அனைவரும் மகிழ்ச்சியோடு இருக்கிற இந்த நேரத்தில் அவர்களோடு சேர்ந்து நானும் இந்த அரசுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அரிசி பேர ஊழலும், கோதுமை பேர ஊழலும் மேலும் தலையெடுக்காவண்ணம், மேலும் பல ஆயிரம் கூட்டுறவுக் கடைகளை கிராமங்கள் தோறும் உருவாக்கி, கிராம மக்களுக்கு எல்லாம் நியாயமான விலையில், போதுமான அளவில் உணவுப் பண்டங்கள் விநியோகிக்கப் போட்டிருக்கும் திட்டத்தை நான் பெரிதும் பாராட்டி வரவேற்கின்றேன்.

கருணா, ஜெயா போன்ற விளம்பர நெல் விதைகளை உருவாக்காமல் தரமான, உடலுக்கு ஊட்டம் கொடுக்கக்கூடிய சுகாதாரமான விதைகளை உருவாக்கி, மண்வள பாதுகாப்புத் துறையை உருவாக்கி, அதற்காக 302 லட்சம் ரூபாய் இந்த நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்டிருப்பது கண்டு நான் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன். தாய்மார்களே, வெயிலில் கால்கடுக்க நிற்க வேண்டாம், க்யூவிலே நின்று நீங்கள்

[திரு. இ. தமிழரசன்] [1977 ஜூலை 30

குழந்தையைப் பெற்றெடுக்கவும் வேண்டாம். நாங்களே போதுமான அளவு உணவு உற்பத்தி பெருக வழிசெய்து, உங்களுக்குக் கிடைக்க வகுத்திருக்கும் திட்டம் இதோ என்று படைத்திருக்கும் இத்திட்டத்தை வரவேற்கின்றேன்.

விவசாயிகளுக்கு நியாயமான விலை கொடுக்காமல், பண்டங்களின் விலையை மட்டும் குறைக்க குழப்பமான சட்டங்களைப் போட்டுச் சீர்குலைத்த முன்னாள் அரசைக் காட்டிலும், இதற்கென்றே இயக்குநர் ஒருவரை நியமித்து உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு நியாய விலைகள் கொடுக்க போட்டுள்ள இந்தத் திட்டத்தை வரவேற்று தமிழக விவசாயிகள் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இடைத் தரகர்களைக் குறைத்து மீனவர்களுக்கு நல்ல விலை கிடைக்கவும், மீன் வளத்தைப் பெருக்குவதற்கு என்றே தூத்துக்குடியில் மீன்வளக் கல்லூரி ஒன்று திறக்கவும், உள்நாட்டு நீர் நிலைகளில் மீன்வளர்க்க பல திட்டங்கள் தீட்டவும் வகை செய்கின்ற இந்த பட்ஜெட்டை நோக்கும்போது நிச்சயமாக மீனவர்களின் நண்பன் இந்த அரசு ஒன்றுதான் என்று தெளிவாகக் கூறி வரவேற்கின்றேன்.

நசித்துப்போன பட்டாசு புஸ்வாணம்போல் நிதி ஒதுக்காமலேயே பாசனத் திட்டங்களை டமாரம் அடித்து ஊர்தோறும் நாற்றம் அடித்த முன் அரசின் பட்ஜெட்டைக் காட்டிலும் 24,7 கோடி ரூபாய் ஒதுக்கி ஏழு பாசனத் திட்டங்களை உருவாக்க வகை செய்யும் இந்த பட்ஜெட் ஓர் உயிர் உள்ள அதிர்வேட்டுடன் வெடிக்கும் ஒரு பட்ஜெட் என்று கூறி வரவேற்கின்றேன்.

இதன்மூலம் என் பேரணம்பட்டு தொகுதியில் ஏற்கனவே ஆரம்ப வேலைகளுடன் பற்றுக்குறையால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள பத்ரபள்ளி அணைக்கட்டு நிச்சயமாக முடிவுபெறும், இதனால் குறைந்தது 10,000 ஏக்கர் நிலம் பயன்பெறும், ஐம்பது கிராமங்கள் பயன் அடையும் என்கிற நம்பிக்கையோடு இதை வரவேற்கின்றேன். என் ஊர் உதயேந்திரம் நகர பஞ்சாயத்தில் 300 ஏக்கர் பரப்பில் ஏரி உள்ளது. அதை 2 அடி ஆழப்படுத்தினால் ஏறக்குறைய 1 வருடத்திற்கு தண்ணீர் கிடைக்கும். இதனால் சுமார் 3,000 ஏக்கர் நிலம் பயன்பெறும்.

கிணற்றிலே நீர்மட்டம் குறைந்து காயாமல் இருக்க, ஆங்காங்கே ஏரி, குளம் இவற்றை ஆழப்படுத்தி தண்ணீரைத் தேக்கி பாசனத்துக்கும் கிணற்றில் நீர்மட்டம் குறையாமல் இருக்கவும் 4·7 கோடி ரூபாய் ஒதுக்கி 30,000 பம்புசெட்டுகளுக்கு மின்சாரக் கனெக்ஷன் கொடுக்க இருப்பது குறித்து



1977 ஜூலை 30] [திரு. இ. தமிழரசன்]

இந்த அரசை நான் பாராட்டுகிறேன். மேலும் சுருளியாறு திட்டம், தூத்துக்குடி அனல் மின்சாரத் திட்டம் ஆகியவற்றை சரிசெய்ய நிதி ஒதுக்கம் செய்யப்பட்டிருப்பதைப் பாராட்டுகிறேன். சென்ற அரசின் முறைகேட்டினால் ஒரு மின்சாரத் திட்டமே பாழ்பட்டுப்போனதுபோல இல்லாது, இத்துறையிலுள்ள முறைகேட்டைக் களைய அரசு வகை செய்திருப்பதைப் பாராட்டுகிறேன்.

ஊர் என்றால் கோயில் அடுத்த குளம் வேண்டும். தற்போது குளம், குடிக்க நீர் வசதி இல்லாத கிராமங்கள் அநேகம் இருக்கின்றன. ஏன், என் சொந்த ஊர் உதயேந்திரம் நகரப் பஞ்சாயத்தில் குடிக்க தண்ணீர் இல்லை. ஆயிரம் மக்களும், சுற்று வட்டார கிராமங்கள் சேர்ந்து நீர் இல்லாமல் அவதியுறுகிறோம். ஆற்றில் ஊற்றெடுத்து நீர் எடுத்தால் தோல் ஷாப் கழிவு நீர் வாடையும், கலருமே வருகிறது. அதே போல் மாதனூர், பாலூர், வட்டாரத்தில் கிணறுகளில் பக்கெட்டை இறக்கினால் சேறு வருகின்றது. நீர் எடுக்க 2 மைல் நடந்து செல்கிறார்கள். ஆனால் தற்போது பட்ஜெட்டையும் ஒதுக்கியுள்ள நிதியையும் பார்க்கும்போது நிச்சயம் இப்பிரச்சனை தீரும் என்ற உணர்வோடு நன்றி கூறுகிறேன்.

ஒருநாடு தொழில் வளமும், தொழிலாளர் வளமும் நிறைந்திருந்தால் தான் அது வளமுடைய நாடாக இருக்க முடியும். தொழிலாளர் பிரச்சினைக்கு தீர்வு காண அரசு அழைப்பின் பேரில் வரும் பிரதிநிதிகள், தொழிற்சங்கத் தலைவர்கள் குறைந்த செலவில் தங்க வசதியாக தங்கும் இடம் ஏற்படுத்தும் திட்டம் புதுமையான திட்டம். தொழிலாளர்களின் மறுமலர்ச்சி, அவர்கள்மேல் அக்கறையான திட்டம்.

(முற்பகல் 11-50)

அதற்கு வகைசெய்யும் வகையில் அறுபது கோடி ரூபாய்க்கு மேல் முதலீடு செய்து பல்வேறு தொழில்களை அரசுத் துறை மூலமாகவும், கூட்டுறவுத் துறை மூலமாகவும் தொழில்வளம் பெருகி இதனால் உற்பத்தி பெருகவும், வேலையில்லாத் திண்டாட்டம் குறையவும் வகை செய்யும் இந்த நிதிநிலை அறிக்கையை நான் வரவேற்கிறேன். இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்ள விரும்புவது என் தொகுதியில் வட-ஆற்காடு மாவட்டத்தில் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் அதிகமாக உள்ள பகுதி. இந்திய நாட்டிற்கு அதிகப்படியான அன்னியச் செலாவணியை ஈட்டிக் கொடுக்கக்கூடிய தொழில் இது. ஆனால் இந்த மாவட்டத்தில் உள்ள தொழிற்சாலைகளில் தொழிலாளர்களுக்கு வேலை கிடைப்பதில்லை. காரணம், அங்குள்ள தொழிற்சாலைகள், ஆறு மாதத்திற்கு ஒரு முறை பெயரை மாற்றி, புதுப் புதுக் கம்பெனிகள் ஆரம்பித்து தொழி

[திரு. இ. தமிழரசன்] [1977 ஜூலை 30

லாளர்களுக்கு தொடர்ந்து வேலை கொடுக்காமல் அவர்களை நாசப்படுத்தி வருகிறார்கள். அங்கே தொழிலாளர்களுக்கு தகுந்த பாதுகாப்பு இல்லை. அவர்களுக்கு சரியானபடி வேலை கிடைப்பதில்லை. எனவே வடசேரி கிராமம் அருகே டான்னிங் ஃபினிஷிங் யூனிட் ஒன்று ஏற்படுத்தவும், பேரணாம்பட்டில் தோல் பொருள்கள் செய்யும் தொழிற்சாலை ஒன்றை பெண்களுக்காக அங்கு ஆரம்பிக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். அடுத்து, ஹரிஜனங்கள், பழங்குடி மக்கள் ஆகியோருக்காக 23·57 கோடி ரூபாய் ஒதுக்கி மாணவர்கள் கல்லூரிப் படிப்பு வரையில் இலவசக் கல்வி பெற வகைசெய்து, மற்றும் ஏழை விதவைகள், மகளிர் சுருக்கெழுத்து, தட்டச்சு போன்றவற்றில் பயிற்சி பெறவும், கைம்பெண்களின் சிறார்களுக்கு இலவச புத்தகங்கள், நோட்டுகள் வழங்கவும் வகை செய்யும் இந்த நிதிநிலை அறிக்கையை நான் வரவேற்கிறேன். கிராமங்களில் மருத்துவ வசதிகள் மிகவும் குறைவு. பணம் கொடுத்து நகரத்திற்குச் சென்று மருத்துவ சிகிச்சை பெற வசதியில்லை, வாய்ப்பு இல்லை. குறிப்பாக என் சொந்த ஊரிலும், சுற்றியுள்ள 10 கிராமங்களுக்கும் இல்லை. எனவே உதயேந்திரம் கிராமத்தில் அரசு சிறு மருத்துவமனை (தாய்-சேய் நல விடுதி) ஏற்படுத்தவேண்டும். பேரணாம்பட்டில் ஏற்கெனவே ஆரம்பித்து, பல காரணங்களால் நிறுத்தி வைக்கப்பட்ட பைல்களுக்கு உயிர் தந்த ஒரு அரசு பொது மருத்துவமனை ஏற்படுத்த வேண்டுகிறேன். இதற்கு வகை செய்யும் பட்ஜெட்டை வாழ்த்தி வரவேற்கின்றேன்.

தமிழ்நாடு பரிசுச்சீட்டு மூலம் 1 லட்சம் ஒரே ஆளுக்கு போகாமல் 2 பேருக்கு பகிர்ந்து கொடுக்க இசைந்துள்ள பட்ஜெட்டை வரவேற்று நன்றி கூறுகிறேன்.

சென்ற ஆட்சி காலத்தில் சரியானபடி பள்ளிக்கூடங்கள் இயங்கவில்லை. பள்ளிகளின் தரம் சரியாக இல்லை. ஆசிரியர்களுக்கு வேலை பாதுகாப்பு இல்லை. இந்த நாட்டின் முதுகெலும்பு ஆசிரியப் பெருமக்கள். நம்மையெல்லாம் உருவாக்கி அனுப்பியவர்கள் ஆசிரியப் பெருமக்கள். வருங்காலத்தை உருவாக்க வேண்டியவர்கள் ஆசிரியப் பெருமக்கள். ஆகவே ஆசிரியப் பெருமக்கள் வசதியாக இருந்தால்தான் கல்வியின் தரம் உயரும், இந்த நாட்டின் தரம் உயரும். ஆகவே ஆசிரியர்களுக்கு சம்பளத்தை அதிகமாக உயர்த்திக் கொடுத்து, அவர்களுக்கு வீட்டு வசதி, மருத்துவ வசதி போன்றவற்றை அதிகமாக்கி அவர்களுக்கு ஊக்கமளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு என் தொகுதியில் ஒரு மேம்பாலம் கட்டப்பட்டு வருகிறது. என் தொகுதி மக்கள் வாணியம்பாடி சென்று வியாபாரம் நடத்துவதற்கும், தொழில்களில் பங்கெடுத்துக்கொள்ளவும் அந்தப் பாலம் கட்டப்படுகிறது பாலாற்றின் குறுக்கே. அது சரியானபடி முற்றுப் பெறாத விதத்தில் மெதுவாக இயங்கிக் கொண்டுவருகிறது.



1977 ஜூலை 30] [திரு. இ. தமிழரசன்]

எனவே அந்த மேம்பாலம் உடனடியாக கட்டி முடிக்கப்பட்டு அண்ணாவின் பெயரை வைத்து அதை உடனடியாக திறப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வேலூர், காட்பாடி விட்டால் குடியாத்தம், ஆம்பூர், பேரணாம்பட்டு, வாணியம்பாடி, திருப்பத்தூர் வரையில் பெண்களுக்கு ஒரு கல்லூரி எங்கள் பகுதியில் இல்லை. எனவே எங்கள் பகுதியில் பெண்களுக்கு ஒரு கல்லூரி ஏற்படுத்த இந்த அரசு உதவவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆம்பூர்—குடியாத்தம் சித்தூர் செல்லும் வழியில் பாலூர் அருகே ஒரு சிற்றோடை ஓடுகிறது. சிறு மழை பெய்தாலும் அதில் தண்ணீர் பெருகி பஸ் போக்குவரத்து பாதிக்கப்பட்டு அதனால் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே அங்கே ஒரு தரைப் பாலம் கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

<u>*திரு. து. இராசரத்தினம்:</u> மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, 1977–78-ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் என்னுடைய கருத்தினையும் இணைத்துக் கொள்கிறேன். குறிப்பாக அவசர கால நெருக்கடி இருந்த காலத்தில் ஊராட்சி ஒன்றியங்கள் அப்போதிருந்த மேதகு ஆளுநர் ஆட்சிக் காலத்தில் கலைக்கப்பட்டு அதற்குப் பின்னால் தொடர்ச்சியாக வட்ட வளர்ச்சி அதிகாரி, கோட்ட வளர்ச்சி அதிகாரி மூலம் ஏழெட்டு ஒன்றியங்களை ஒன்றாக உள்ளடக்கி அவர்கள் மேற்பார்வையில் அவை இயங்கிக் கொண்டு வருகின்றன. ஆனால் ஆங்காங்கு ஊராட்சி மன்றங்கள் அதன் தலைவர்கள் மட்டிலும் அப்படியே இருந்துகொண்டிருக்கின்ற தன்மையும், ஆனால், ஒன்றியத் தலைவர்கள் இல்லாத நிலைமையும், அதே நேரத்தில் கோட்ட வளர்ச்சி அதிகாரி மூலம் சிறப்பான காரியங்கள் செய்ய முடிகிறதா என்றால் ஒரு ஒன்றியத்தைக்கூட அவரால் பார்ப்பதற்கு முடியவில்லை. கிராம ராஜ்யம் இருந்த தன்மையை மாற்றும் நிலையில் இது அமைந்திருக்கிறது. ஆளுநர் ஆட்சியில் அப்படிப்பட்டதொரு நிலை ஏற்பட்டிருந்தாலும், இன்றைக்கு வந்திருக்கக்கூடிய ஆட்சி உடனடியாக ஒன்றியத் தலைவர்களைப் பொருத்தி அவர்கள் மூலம் ஏற்கனவே ஒன்றியங்கள் மூலம் செய்யப்பட்டு வந்த குடிநீர் பிரச்னை, பம்ப் செட்கள் அத்தனையும் பராமரிப்பற்றுக் கிடக்கக்கூடிய சூழ்நிலையைப் போக்க ஏதுவாக அமைய வேண்டும் என்பதற்காக இந்த வேண்டுதலை உங்கள் முன்னால் வைக்கிறேன்.

அதுமட்டுமல்ல. இன்றைய தினம் நடைபெறுகின்ற இந்த ஆட்சி, பாசனத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கின்ற தொகை எந்த அளவுக்கு ஒதுக்கப்பட்டிருந்தாலும், அந்த அளவைப் பார்க்கும் போது, 1975-76-ல் இருந்ததையும் 1976-77-ல் இருந்ததையும் மட்டும் வைத்துப் பார்க்காமல் அதற்கு முன்னால் எப்படி

எப்படியிருந்தது என்பதையும் பார்க்கவேண்டும். முன்பு இருந்த ஆண்டைவிட இப்போது ஒன்றுக்கு இரண்டு மடங்காக அதிகப்படுத்தப்பட்டிருந்தாலும், அதை நாம் வரவேற்கக்கூடிய நேரத்தில், பாசனத்திற்காக நிதியை அதிகமாக ஒதுக்கி, விவசாயத்திற்கு பல முன்னோடி திட்டங்களைக் கொண்டுவருவது என்பது வரவேற்கக்கூடிய திட்டம் தான். அது மட்டுமல்லாமல் பாசனத்திற்கு, முதலாவது பாசனமாக இருந்தால், 12 ரூபாய் என்றிருந்ததை 10 ரூபாயாகவும், 10 ரூபாய் இருந்ததை 8 ரூபாயாகவும் குறைத்து விவசாயிகளை வாழ வைக்கவேண்டும் என்று சொல்லப்படுகின்ற நேரத்தில், இதற்கு முன்னால் இருந்த அரசு விவசாயிகளுக்கு கொடுத்துவந்த, அதாவது, நெல்லை வாங்குகின்றபொழுது, கட்டுப்படியான விலை கிடைக்கக்கூடிய அளவில், குவிண்டால் ஒன்றுக்கு 10 ரூபாயும், வண்டி வாடகையாக ஐந்து ரூபாயும் கொடுத்து வந்ததைப்போல் இப்போதும் சேர்த்துக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. பாசனத்திற்கு 12-லிருந்து 10 என்றும், 10-லிருந்து 8 என்றும் சலுகை அளிக்கின்ற நேரத்தில், மின்சாரத்தை பயன்படுத்தி விவசாயம் செய்கின்றவர்களுக்கும் சலுகை அளிக்கவேண்டும். மின்சாரத்தின் மூலம் பம்பு செட்டு மூலம் பாசனம் செய்து கொண்டிருந்தவர்களுக்கு நெருக்கடி காலத்தில், 16 பைசாவாக கட்டணம் விதிக்கப்பட்டது. அது மட்டுமல்ல, ஒரு ஹார்ஸ் பவருக்கு 2·50 ரூபாய் என்றும் உயர்த்திஅதிகமாக 10 ரூபாய் அளவுக்கு உயர்த்தப் பட்டிருக்கிறது. இந்த அளவுக்கு மின்சார கட்டணத் தொல்லை இருந்து கொண்டு இருக்கிறது. இதைக் குறைப்பதற்கு பெருமுயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் மீட்டர் போடும்போது அதற்கு வாடகை வாங்குகிறார்கள். இந்த மீட்டரை மின்சாரத் துறையினரே பெட்டியில் வைத்திருந்தாலும் அதற்கும் வாடகை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். இதற்கிடையில் மீட்டர் எரிந்து போகுமானால், எலக்ட்ரிசிட்டிக்காரர்களே பெட்டியில் வைத்து பாதுகாத்தாலும் அங்கே மீட்டர் எரிந்துவிடுமானால் அந்த மீட்டரை விவசாயியே வாங்கித் தரவேண்டும் என்று கோருகிறார்கள். அப்படி வாங்கிக் கொடுத்தால் மீண்டும் இணைப்பு கொடுக்கிறார்கள். அது மட்டுமல்ல, விவசாயி வாங்கிக் கொடுத்த மீட்டருக்கு மீண்டும் வாடகை வசூல்க்கிறார்கள். இதை விவசாயிகள் தங்கள் பொறுப்பிலேயே வைத்துக்கொள்கிறோம் என்றும் அதற்கும் ஒத்துக்கொள்வதில்லை. அவர்களே பெட்டியில் வைத்துக் கொண்டு வாடகைக் கட்டணம் வசூல்ப்பதை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நிதி அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும் மின்சாரத்தை பயன்படுத்தி கிணத்தடி நீரை பயன்படுத்துவதற்கு இதுபோன்ற சலுகைகளை அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.





அரிசனங்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கும் திட்டத்தில் வட்டியில்லாத கடனைக் கொடுக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே முன்னால் இருந்த அரசு அரிசனங்களுக்கு இலவசமாக 4,000 ரூபாய் செலவில் வீடுகளைக் கட்டிக் கொடுத்தது அந்தத் திட்டம் என்ன ஆயிற்று? இப்போது வீடுகள் கட்டிக்கொள்ள வட்டியில்லாத கடன் அளிக்கப்படும் என்று சொல்லுகின்ற இந்த நேரத்தில் முன்பு வாரியத்தின் மூலமாகக் கட்டப்பட்ட வீடுகள் என்னவாயிற்று? அதிலும் குறைபாடாக பல வீடுகள் அப்படியே இருக்கின்றன. அந்தக் குறைபாடுகளை நீக்கி மேலும் வீடுகளைக் கட்டுவதற்கு மானியம் கொடுக்கப்படுமா, அல்லது வட்டியில்லாத கடன் கொடுப்பதின் மூலமாக வீடுகள் எந்த முறையில் கட்டப்படும் என்பதை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் தனது பதிலில் தெரிவிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆவடி நகரியத்தைப் பொறுத்த அளவில், அங்கிருந்த அறவே குடிதண்ணீர் இல்லாத நிலைமையைப் போக்குவதற்காக 1974-ம் ஆண்டு இதற்காகத் திட்டமிட்டு அதை ஆய்வு செய்வதற்காக 70 ஆயிரம் ரூபாய் நகரியத்திலிருந்து கட்டப்பட்டு 1975-ம் ஆண்டு டிசம்பரில் ஒரு கோடி 9 லட்சம் ரூபாய் அளவில் திட்டம் தயாரித்து செயல்படுத்தக்கூடிய அளவில் இருந்தது. ஆவடி நகரியம், சென்னை மாநகராட்சி, மதுரை மாநகராட்சி இவை இரண்டுக்கும் அடுத்தபடியாக பெரிய நகராட்சியாக 30 சதுர மைல் பரப்பு கொண்டதாக இருக்கிறது. அங்கு அறவே குடிநீர் இல்லாத நிலைமையைப் போக்குகின்ற அளவில் இந்த ஒரு கோடி 9 லட்சம் ரூபாய் திட்டத்தை எடுத்து உடனடியாக நிறைவேற்றுவதன் மூலமாக, அங்கு அறவே குடிதண்ணீர் இல்லாத கஷ்டத்தைப் போக்குவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(நண்பகல் 12.00)

முன்னாலே வழங்கப்பட்ட குடியிருப்புகளுக்காக 3 கோடியே 60 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருகிறது. இதிலே சென்னை, மதுரை, கோயமுத்தூர், திருச்சி ஆகிய இடங்கள் சேர்க்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதிலே ஆவடியையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். அந்தப் பகுதியிலேயும் ஏழை எளிய மக்கள் வாழ்கின்றார்கள். தவிர, அது புறநகர்ப் பகுதியாகவும் இருக்கின்றது. எனவே, ஆவடியையும் இதிலே சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, இதற்கு முன்னாலே இருந்த அரசாங்கம் பூவிருந்தவல்லியிலே பின்தங்கிய, அரிசன மாணவர்களுக்காக 3 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் மாணவர்களுக்கான விடுதியும், இதேபோல் 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் மாணவிகளுக்கும் விடுதிகள் கட்டப்பட்டு இருக்கின்றன. அந்த

விடுதிகள் கட்டப்பட்டு ஓராண்டு காலமாகியும், இன்னும் அவை
கள் திறக்கப்படாமல் இருக்கின்றன. அவைகளை உடனடியாகத்
திறந்தால் ஏழை அரிசன மக்கள் இட நெருக்கடி இல்லாமல் நல்ல
முறையிலே தங்கிப் படிக்கக்கூடிய நிலை ஏற்படும். எனவே, இவை
களையும் உடனடியாகத் திறக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே
கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நெசவுத் தொழிலாளர்கள் பிரச்னை. என்னுடைய
தொகுதியிலே நெசவுத் தொழிலாளர்கள் நிறைய இருக்கின்றார்
கள். இந்த நெசவுத் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டப்பட
வேண்டுமென்றும், அதற்கு வட்டியில்லாக் கடன் கொடுக்கப்பட
வேண்டுமென்றும் கோருகிறேன். இது தவிர, தற்போது நூல்
விலை ஏறியிருக்கின்றது. நூல் விலையை எந்த அளவுக்குக் குறைக்க
முடியும் என்கின்ற நிலைமையையும் ஆராய்ந்து, அவர்களுக்கும்
வேண்டிய வசதிகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன்.

அடுத்து, இந்த நிதி நிலை அறிக்கையிலே குறிப்பாக அரிசன
மக்களுக்கு மானியமாக, இன்றைய தினம் அவர்களுக்கு இலவச
மாகப் புத்தகங்கள் வழங்குகிறோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.
வசதிபடைத்தவர்களாக இருந்தாலும் அவர்களுக்கும் இலவச
மாகக் கொடுக்கப்படும் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. இதில்
100-க்கு ஒன்றிரண்டு பேர்கள்தான் இருப்பார்கள். அதற்கு
மாறாக, அவர்களுக்கு இல்லங்கள் கட்டிக் கொடுத்தால், அவர்
கள் அந்த அளவிற்குத் தங்குவதற்கு வசதியாக இருக்கும் என்
பதைத் தெரிவித்துக் கொண்டு, எனக்கு இந்த வாய்ப்பினை அளித்த
தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

*<u>திரு இரா. அமிர்த ராஜ்</u> : மதிப்பிற்குரிய சட்டப்பேரவைத்
தலைவர் அவர்களே, 25—7—1977-ம் தேதியன்று மாண்பு
மிகு நிதி அமைச்சர் அவர்கள், என் அன்பிற்குரிய திரு. மனோ
கரன் அவர்கள் சமர்ப்பித்த இந்த நிதிநிலை அறிக்கையை வாழ்த்
திப் பேசுகின்ற நல்வாய்ப்பைக் கொடுத்ததற்கு நன்றிகூறி, ஒரு
சில கருத்துக்களைத் தெரிவிக்க முற்படுகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கை, இருண்ட உலகிற்கு ஒளி தருகின்ற,
குன்றின் மேலிட்ட விளக்காகப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது
என்று வாழ்த்திக் கூற கடமைப்பட்டுள்ளேன். தமிழகத்திலே
பிற்படுத்தப்பட்ட, அடித்தளத்திலே உள்ள மக்களின் உள பூர்வ
மான எண்ணங்களை நிறைவேற்றுகின்ற வகையிலே இந்த நிதிநிலை
அறிக்கை அமைந்துள்ளது என்பதை நான் கூறிக்கொள்ள
கடமைப்பட்டிருக்கிறேன்.

உதாரணத்திற்கு, மீன் வளத்தை எடுத்துக் கொண்
டால், தூத்துக்குடியில் இந்த நடப்பு ஆண்டில் மீனளக்
கல்லூரி ஆரம்பிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.





அப்படி அது ஆரம்பிக்கப்படுமானால், என்னுடைய
தொகுதியிலே இருக்கின்ற 4 கிராம மக்கள் அதிலே பயனடைவ
தோடுமட்டுமல்லாமல், அந்தக் கிராம மக்கள் தாங்கள் பிடிக்கின்ற
மீன்களை எல்லாம் விற்கக்கூடிய அளவிற்கு, அவைகளை எப்படிப்
பதப்படுத்துவது போன்ற தன்மைகளையெல்லாம்கூட படிப்பினை
யாகப் பெறக்கூடிய வாய்ப்பினை உண்டாக்கக்கூடிய வகையிலே
இந்தக்கல்லூரி அமையுமா என்று நான் தெரிந்து கொள்ளக்
கடமை பட்டிருக்கிறேன்.

அடுத்ததாக, விவசாயிகளுக்கு இந்த அரசு, " மாநில நிலவள
வங்கி கடனளிக்கும் திட்டத்திற்காக, அதற்கு அரசு 145 இலட்சம்
ரூபாய் உதவும் ; இந்த உதவி பெற்று நிலவள வங்கி விவசாயி
களுக்கு 18 கோடி ரூபாய் அளவுக்குக் கடன் கொடுக்க இயலும்.
நுகர்பொருள் கூட்டுறவுச் சங்கங்களையும், பதப்படுத்தும் கூட்
டுறவு நிறுவனங்களையும் இன்னும் பல இடங்களில் வலுப்படுத்
தலும், செலவுக் கடனும், நகைகளின் மேல் கடனும் கொடுக்க
நிதி வசதிகளைப் பெருக்குதலும், இம்மாநில அரசு, கூட்டுறவு
வளர்ச்சித் துறையில் மேற்கொள்ளவிருக்கும் ஏனைய முக்கியமான
திட்டங்களாகும் " என்று கூறியிருக்கிறது. விவசாயத்தைப்
பொறுத்த மட்டில், இந்தக் கடன் முறையாகக்கொடுக்கப்படு
மானால், கிராமங்களிலே உள்ள விவசாய மக்களை ஊக்குவிப்பதற்
கும், அவர்கள் அந்தந்தப் பருவ காலங்களில் விவசாயத்தை
வளத்தோடு பெருக்குவதற்கும் ஒரு வாய்ப்பினை நல்கும், உறு
துணையாக இருக்கும் என்பதை நான் கூறி, இதைப் பாராட்டக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில், எனக்கு முன்னாலே பேசிய அருமை அண்ணன்
திரு ராதா அவர்கள், இந்த நிதிநிலை அறிக்கையிலே எத்தனையோ
நல்ல பல திட்டங்கள் இருக்கின்றன என்று அவைகளையெல்லாம்
வரிசைப்படுத்திச் சொன்னார்கள். எனவே, மீண்டும் அவைகளை
யெல்லாம் வாழ்த்திப் பேசி என்னுடைய காலத்தை வீணாக்காமல்
என்னுடைய தொகுதியில் இருக்கும் ஒரு சில குறைபாடுகளைச்
சொல்ல விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்த மட்டில் விவசாயி
களும், மீனவ மக்களும், பனையேறும் தொழிலாளர்களும் அதிக
மாக இருக்கும் இடமாகும். இந்த கிராமங்களில் இருக்கக்கூடிய
மக்களுக்கு, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 1947-ஆம் ஆண்டு
சுதந்திரத்தைப் பெற்று ஏறத்தாழ 30 ஆண்டுகள் கடந்தும் குடி
தண்ணீர் வசதி கூட இல்லாமல் மிகுந்த கஷ்டத்திற்கும், அவ
திக்கும் உள்ளாகியிருக்கிறார்கள். அந்த நிலையைப் போக்கும்
வகையில் குடிநீர்ப் பிரச்சினை பற்றி நிதிநிலை அறிக்கையில் தெளி
வாகக் குறிப்பிடப்பட்டிருப்பதை வாழ்த்தக் கடமைப் பட்டிருக்
கிறேன். அந்த மக்களுக்குக் குடி நீர் வசதி அளிக்கின்ற வகையில்
17 லட்சம் மக்கள் தொகை கொண்ட 4,010 குடியிருப்புக்களில்

ஒரு கிலோ மீட்டர் தொலைவிற்குள் குடிப்பதற்கு நீர் நிலை இல்லாத அப்படிப்பட்ட இடங்களுக்கு குடி நீர் வழங்க 14 கோடி ரூபாய் செலவாகும் என்றும் அதற்கு முதற்கட்டமாக 6·65 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதை வரவேற்கக் கடமைப் பட்டிருக்கிறேன். இந்த நிலையில் என்னுடைய தொகுதியில் அதிகமான கிராமங்கள் இருக்கின்றன. சேர்ந்தமங்கலம், ஆறுமுகனேரி, திருச்செந்தூர், உடன்குடி ஆகிய அநேக பகுதிகளில் ஒரு கிலோ மீட்டரையும் தாண்டி இரண்டு கிலோ மீட்டர் தூரத்தில் இருந்து கூட குடி நீர் வசதி கிடைக்காத சூழ்நிலை இருக்கிறது. இந்த நிதி நிலை ஆண்டில் அந்தக் குறைபாடுகள் போக்கி வைக்கப்படும் என்று நம்பி இந்த நிதி நிலை அறிக்கையை வாழ்த்தக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடித்தளத்தில் இருக்கும் மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டத்தில் 10,000 சிறு தொழில்கள் துவங்கப்பட இருப்பதை வரவேற்கிறேன். அந்தப் பத்தாயிரம் சிறு தொழில்களையும் இந்த நிதி நிலை ஆண்டிலேயே தொடங்கி முடித்துக் கொடுப்பார்களானால் சிறு தொழில்கள் பெருகுவதோடு ஏழை எளிய மக்களுக்கு தினக் கூலி கிடைக்கின்ற வகையில் அன்றாடக் கூலி கிடைத்து அவர்கள் வாழ்க்கையை ஓரளவு வளமாக்கிக் கொள்ள வழி ஏற்படும் என்று நிச்சயமாக நம்புகிறேன்.

உடன்குடி கிராமத்தில் 18 லட்சம் ரூபாய் செலவில் குடி தண்ணீர்த் திட்டத்தை ஆரம்பித்து வைக்கும் வகையில் பஞ்சாயத்துக்கு தாக்கீது வந்தது. அதிலே. முன்பணமாக 30,000 ரூபாய் கட்டவேண்டுமென்று கூறப்பட்டிருந்தது. அப்படி 30,000 ரூபாய் முன் பணமாகக் கட்டக் கூடிய நிலையில் அந்தக் கிராமப் பஞ்சாயத்து இல்லை என்று அலுவலாளர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அது மிகவும் பின் தங்கிய இடம். ஏற்கெனவே அவர்களுடைய நிதி நிலை மோசமாக இருக்கும் நிலையில், முன் பணம் கட்ட முடியாத நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, முன்பணம் கட்ட வேண்டுமென்ற முறையை மாற்றி எப்படியாவது கிராமங்களுக்குக் குடி தண்ணீர் வழங்க வேண்டுமென்ற நல்ல நிலையை உருவாக்கித் தரவேண்டுமென்று நம்முடைய அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியில் பட்டணங்கள் என்ற பெயரால் மூன்று கிராமங்கள் இருக்கின்றன. காயல் பட்டணம், வீரபாண்டியன் பட்டணம், குலசேகரன் பட்டணம் இவைகளில் எல்லாம் பட்டணம் என்ற பெயரால் அழகாக அழைக்கப்பட்டாலும் அங்கு இருக்கக்கூடிய மக்கள் எந்த நிலையில் இருக்கிறார்கள் என்று பார்க்கவேண்டும். அந்த மூன்று பட்டணங்களிலும் மிகவும் பின்தங்கியது குலசேகரன் பட்டணம் கிராமம். அடிப்படைத் தொழில் கூடக் கிடையாது. அங்கே இருப்பவர்கள் தங்கள் இல்லங்களை இடித்து கதவு, நிலைகள்



ஜன்னல்கள் போன்றவற்றை எல்லாம் விற்று வாழ்க்கையை நடத்தி வருகிறார்கள். குலசேகரன் பட்டணம் கிராமக் கடற்கரையை ஒரு சிறு மீன் பிடி துறை முகமாக அமைத்துக் கொடுக்க மத்திய அரசைக் கேட்டு நடவடிக்கையைத் துரிதமாக எடுத்தால் அந்தக் கிராம மக்கள் வாழ்க்கை வளம் பெறமுடியும். அப்படிச் செய்தால் அந்த கிராம மக்கள் பிடிக்கிற மீன்களையும் பனைத் தொழிலில் ஈடு பட்டு செய்யக் கூடிய பொருள்களையும் தூத்துக்குடி துறை முகத்திற்கு அனுப்ப வாய்ப்பு ஏற்படும். ஆகவே, இதனை அந்தக் கிராம மக்களுக்கு செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12·10)

அடுத்தபடியாக உடன்குடி கிராமத்தை எடுத்துக் கொண்டால் அங்கேயுள்ள மக்கள் எல்லாம் வெற்றிலை விவசாயம் செய்கிற மக்களும். அங்கேயிருந்த மணல் தேரிகளையெல்லாம் நல்ல நன்செய் பயிர் விளை நிலங்களாக அமைத்து மாற்றி மோட்டார்கள், பம்பு செட்டுகள் நல்ல நிலங்களாக மாற்றிப் பயன்படுத்தி விவசாயத்தைப் பெருக்கிக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் பம்பு செட்டுகள் வைத்திருந்தால் அவை ஒழுங்காக ஓடுவதற்கு போதுமான மின்சார வசதி கிடையாது. அங்கே மின்சாரம் பற்றாக்குறை இருக்கிறது. உடன்குடியிலே ஒரு மின்சார சப் ஸ்டேஷன் அமைப்பதற்கு அங்கேயுள்ள மின் இலாகாவிற்கு தாக்கீது போயிருந்தும்கூட அங்கே வேலை கூட செய்யப்படாமல் இருக்கிறது என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். அதற்குக் காரணம் அங்கே மின்சாரம் பற்றாக்குறையாக இருக்கிறது. அங்கே மின்சார அழுத்த சக்தி குறைவாக இருப்பதால் உயரிய குதிரை சக்தி உள்ள மோட்டார்களாக இருந்தால் நன்றாக ஓடுகின்றது. ஆனால் குறைந்த குதிரை சக்தி உள்ள மோட்டார்கள், 3 ஹார்ஸ் பவர் மோட்டார்கள் எல்லாம் ஓடாமல் காயல் தீய்ந்து அதற்காக 2 ஆயிரம் 3 ஆயிரம் ரூபாய் செலவிடக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. இதனால் அந்தப் பகுதியிலே உள்ள விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, அங்கே ஒரு சப் ஸ்டேஷனை உடனே அமைத்துக் தருவதற்கு நம்முடைய அமைச்சரவை ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக பிரைமரி ஹெல்த் சென்ட்டர்ஸ் ஆரம்ப சுகாதார நிலையங்கள் கிராமங்களில் அமைக்கப்படுகின்றன. பட்டணங்களிலே ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏற்படுத்த அரசாங்கமே பல லட்சக்கணக்கான ரூபாய்களை ஒதுக்கிக் கட்டித் தருகிறது. ஆனால் கிராமப் புறங்கள் புறக்கணிக்கப்படுகின்றன. கிராமப் புறங்களிலே ஏழை எளிய மக்கள் தான் அதிகமாக இருக்கிறார்கள். அங்கே உள்ள மருத்துவர்கள் கைவிட்டு விட்டால் அவர்கள் பட்டணத்திற்கு வந்துதான் நோயைத்தீர்க்க வேண்டிய நிலை இருக்கிறது. உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால் திருநெல்வேலியிலே லட்சக் கணக்கான ரூபாய் பணம் போட்டு கட்டடங்களைக் கட்டி

கொடுத்திருக்கிறார்கள். ஆனால் கிராமங்களிலே ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்க வேண்டுமென்றால் 10 ஆயிரம் ரூபாய் முன்பணம் கட்ட வேண்டியிருக்கிறது. 10 ஆயிரம் ரூபாய் இருந்தால்—கிராமத்திலேயே உள்ளவர்கள் ஏழை மக்கள் தான்—அவர்களே மருத்துவ மனையைக் கட்டிக் கொள்வார்கள். ஆனால் அவர்கள் பணம் கட்டமுடியாத சூழ் நிலையில் அவர்களுக்கு எல்லா மருத்துவ வசதிகள் கிடைக்காமல் இருக்கிறது. அங்கே பணம் உள்ளவர்கள் இருக்கிறார்கள், அவர்கள் எல்லாம் தங்கள் இல்லங்களிலே நோய் வந்துவிட்டால் பஸ்ஸிலோ அல்லது காரிலோ அழைத்துக் கொண்டுபோய் பட்டணத்திலே மருத்துவம் பார்க்க முடியும். ஆனால் சமுதாயத்திலே நலிந்த நிலையில் உள்ள, வறுமையில் உள்ள கிராமத்தில் உள்ள ஏழை எளிய மக்கள் அப்படிச் செய்ய முடியாது. காரணம் கையில் பணம் இல்லாத நிலைமை தொழிலிலே வருமானம் இல்லாத நிலைமை தான். எனவே, 10 ஆயிரம் முன்பணம் கட்டினால்தான் ஆரம்ப சுகாதார நிலையம் கட்டித்தரப்படும் என்ற திட்டத்தை விட்டுவிட்டு கிராமங்களிலே ஏழை எளிய மக்கள் பயன் அடைகிற வகையிலே எப்படியாவது அரசாங்கப் பணத்திலேயே மருத்துவ வசதிகளைப் பெறுகின்ற அளவில் மருத்துவ மனைகளை கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே சொக்கப்பளம்குளம் என்ற குளம் ஆத்தூருக்கு அருகில் இருக்கிறது. அங்கே ஏறத்தாழ 30 ஆண்டுகளாக எந்தவிதமான மராமத்தும் செய்யப்படாமல் அந்தக்குளம் இருக்கிறது. இதற்கு முந்தைய அரசு இருந்த போது கிராம மக்கள் இதைப்பற்றி மனுக் கொடுத்தும் அது பரிசீலனை செய்யப்படாமல் அங்கே பயிர்கள் எல்லாம் காய்ந்து கருகி கொண்டிருக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அங்கே ஒரு வாய்க்கால் இருக்கிறது, அதிலிருந்து தண்ணீர் வடிகால் வழியே வருகிறது. அந்தத் தண்ணீர் சரியாக வருவதில்லை, ஏற்கெனவே 14 அடி அகலமாக இருந்ததாம், இப்போது 5 அடிதான் அகலம் இருக்கிறது. அங்கே இருக்கிற மண்ணை வாரி அந்த வாய்க்காலை சீர்படுத்தினால் அதோடு இந்த சொக்கப்பளம் குளத்தையும் சீர்படுத்தினால், ஏறத்தாழ 500 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறக்கூடிய நிலைமையை ஏற்படுத்தி அங்கே விவசாயிகளுக்கு விவசாயத்தைப் பெருக்கக் கூடிய நல்ல வழிவகை ஏற்படும். என்னுடைய திருச்செந்தூர் தொகுதியிலே ஸ்ரீராம் பாப்புலர் பஸ் கம்பெனி என்ற தனியார் கம்பெனி பேருந்துகளை விட்டுக்கொண்டிருந்தது, ஆனால் அவர்கள் நஷ்டத்தில் ஓடுகிறது என்ற காரணத்தைச் சொல்லி, தங்களுக்கு இன்னும் ஒரு மாதம் பெர்மிட் இருந்தும்கூட அதற்கு முன்னாலேயே பேருந்துகளை நிறுத்திவிட்டார்கள். இதனால் படிக்கின்ற மாணவர்கள், தொழிலாளர்கள், பொது மக்கள், வியாபாரிகள் ஆகிய அனைவரும் கஷ்டப்படுகிறார்கள் காலையிலே பள்ளி செல்ல வேண்டிய மாணவர்களுக்கு வசதி இல்லை





கட்டபொம்மன் என்று தேசிமயமாக்கப்பட்ட பயஸ் இருக்கிறது. அப்படியிருந்தாலும் அதற்கென்று நேரம் கிடையாது. பேருந்து நிலையத்திலிருந்து புறப்படுமா என்பது சந்தேகம். அப்படியே புறப்பட்டாலும் உரிய இடத்திற்குச் சென்று சேர்கிறதா என்றால் அதுவும் இல்லை. ஆகவே, அரசாங்கம், நிறுத்தப்பட்ட அந்த வழித்தடங்களில் குறுகிய காலத்தில், நாளைக்கேகூட உத்தரவு போட்டால் மாணவர் சமுதாயம் பிழைக்கும், ஏழைத் தொழிலாளர்கள் தொழிற்சாலைக்குச் செல்வார்கள், வியாபாரிகள் வியாபார ஸ்தலங்களுக்குச் செல்வார்கள், அதற்காக வாய்ப்புகள் இருக்கும் என்று தெரிவித்து, உடனடியாக அரசு ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எங்களுடைய தொகுதியில் காவல் துறையினர் முன்பு இருந்த அரசாங்கத்தார் நம்முடைய இயக்கத்தைப் பொறுத்த வரையில் எந்தச் சூழ்நிலையைப் பின்பற்றினார்களோ அதே நிலையில்தான் நமது கழகத்து தொண்டர்கள் தொடர்ந்து தாக்கப்பட்டு வருகிறார்கள். இந்த அரசு இந்த நிலையைச் சீக்கிரம் மாற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கடுத்தபடியாக பனை ஏறுகின்ற தொழிலாளர்கள் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் எங்கள் தொகுதியில் வாழ்கிறார்கள். ஆனால் அவர்களுடைய வாழ்க்கைக்கு உத்தரவாதம் கொடுக்கும் வகையில் எத்தனையோ சங்கங்கள் இருந்தாலும் என்ன நடக்கிறது என்றால், அவர்களுக்குக் கடன் ஒதுக்கப்படுகிறது, ஆனால் ஒதுக்கப்படும் கடன் முறையாக அந்த பனை ஏறும் தொழிலாளர்களுக்கு போய்ச் சேர்கிறதா என்றால் போய்ச் சேரவில்லை. இடையிலே உள்ள விவரம் தெரிந்த அரசியல்வாதிகள் அந்தப் பணத்தைப் பயன்படுத்துகிறார்கள். அந்தச் சூழ்நிலையை மாற்றத் தகுந்த பரிசீலனை செய்து குழு அமைத்து உரியவர்களுக்குக் கிடைக்கும் வகையில் வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டு, இந்த நிதி நிலை அறிக்கையைப் பொறுத்தமட்டில் இது பேரறிஞர் அண்ணா அவர்களின் கொள்கைக்கு பட்டை தீட்டிய வைரக்கல்லாக விளங்குகிறது என்று கூறி நான் அமர்கிறேன், நன்றி வணக்கம்.

*<u>திரு. இரா. ஆதிசாமி :</u> மாண்புமிகு உதவி சபாநாயகர் அவர்களே, எனக்கு இந்த பட்ஜெட்டில் பேசுவதற்கு ஒரு வாய்ப்பு கிடைத்ததைப் பற்றி மகிழ்ச்சி அடைகிறேன். இந்த பட்ஜெட்டில் காந்திஜியினுடைய நிர்மாணத் திட்டங்களில் ஒன்றான மதுவிலக்கு பற்றி அமல் நடத்துவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இன்றைக்கு அரிஷ்டம் என்ற பெயரில் மதுவானது எல்லாயிடங்களிலும் மிகச் சர்வசாதாரணமாகக் கிடைக்கிறது. குறிப்பாக எங்கள் ஜில்லாவிலே பார்த்தால் எந்தக் கடையிலும் இன்றைக்கு சர்வசாதாரணமாக கலரைப் போல எல்லாக் கடைகளிலும் கிடைக்கிறது. அதை உற்பத்தி செய்ய இந்த அரசாங்கமானது லைசென்ஸ் கொடுத்திருக்கிறது. அதை எல்லா வெற்றிலை பாக்குக் கடைகளிலும் விற்பனை செய்ய லைசென்ஸ்கள் கொடுத்

[திரு இரா. ஆதிசாமி] [1977, ஜூலை 30

இருக்கிறது. உண்மையிலேயே இந்த சர்க்காருக்கு மதுவிலக்கில் ஆர்வம் இருந்தால் உடனடியாக இப்படி விற்பனை செய்வதற்குக் கொடுத்திருக்கின்ற லைசென்ஸையும், அரிஷ்டம் உற்பத்தி செய்வதையும் தடை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீர்ப்பாசனத்திற்காக இந்தச் சர்க்கார் காவிரி வாய்க்காலைச் செப்பனிடவும், வைகைக் கால்வாயை உலக பாங்கின் உதவியுடன் செப்பனிடவும் தொகையை அனுமதித்திருக்கிறது. ஆனால் எங்களுடைய ஜில்லாவான கன்னியாகுமரியில் உள்ள ஒரே அணைக்கட்டான கோதையாறு நீர்த்தேக்க வாய்க்கால்கள் பழுதடைந்திருக்கின்றன. எழுபது ஆண்டுகளுக்கு முன்பு வெட்டப்பட்ட வாய்க்கால்களாகும் அவை. அணையில் எவ்வளவு தண்ணீர் இருந்தாலும் திறந்து விட்டால் கடை வரம்பு நிலங்களுக்கு வருவது இல்லை அந்தத் தண்ணீர் கால்வாயிலிருந்து ஒழுகிப் போகிறது. உயரே இருந்த கால்வாய்களில் ஷட்டர்கள் இல்லை. பல தடவைகள் எஞ்ஜினியர்களிடம் குறைப்பட்டுக்கொண்டாலும் அவர்கள் சொல்கிறார்கள், "ஷட்டர்களை உயரே உள்ளவர்கள் திறந்து போடுகிறார்கள் அல்லது ஏதாவது செய்து விடுகிறார்கள்" என்று சொல்கிறார்கள். அதைப் பழுது பார்க்கவும் இல்லை. ஆகவே, வைகை கால்வாய் பெரியாற்றுக் கால்வாய் ஆகியவற்றிற்கு எப்படி ஒரு பெரிய ஸ்கீமை வைத்து ரீ மாடல் செய்கிறார்களோ அதைப்போல இந்த சானல்களையும் ரீ மாடல் செய்தால் தண்ணீர் தட்டில்லாமல் இருக்கும். இந்தக் கால்வாய்களின் கடை வரம்பாக இருக்கிறது எங்கள் தொகுதி. எல்லா சானல்களும் என் தொகுதியில்தான் வந்து முடிகின்றன. அங்கு தண்ணீர் இல்லை என்று சொன்னவுடன் மக்கள் அங்குள்ள பிரதிநிதிகளைத்தான் எல்லோரும் அணுகுகிறார்கள்.

(பிற்பகல் 12.20)

எங்கள் மாவட்டத்தில் போன கிருஷியிலே 5,000 ஏக்கர் தீய்ந்து இருக்கிறது. இந்தத் தடவையும் 5,000 ஏக்கருக்கு மேல் விவசாயம் ஆகாமலிருக்கிறது. அதனால் கால்வாய் வேலையை உடன் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், அங்கு எனது தொகுதியில் ஓடுகின்ற ஆறுகளில் தண்ணீர் பாழாகின்றது. பன்றிவாய்க்கால் என்றும் வள்ளியாறு என்றும் இரண்டு ஆறுகளிருக்கின்றன. அந்த ஆறுகளிலே இருக்கிற தண்ணீரை லிஃப்ட் செய்ய வேண்டுமென்று பலமுறை அரசாங்கத்திற்கு எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. அதை ஆராய்ந்து அறிக்கைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அவைகள் இதுவரை நடைமுறைக்குக் கொண்டு வரப்படவில்லை. வள்ளியாற்றில் இருக்கிற தண்ணீரை லிஃப்ட் செய்து கொடுத்தால், இரட்டக்கரை குளச்சல் சானல்களில் சரியான முறையில் பயிர்களைப் பாதுகாக்க முடியும். அதை உடனடியாகச் செய்ய நடவடிக்கை எடுத்து, நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1977 ஜூலை 30] [திரு இரா. ஆதிசாமி]

எனது தொகுதியிலிருக்கிற ஒரே கல்லூரி இலக்குமிபுரம் கல்லூரி. அந்தக் கல்லூரி தனிப்பட்ட போர்டால் முன் நடத்தப்பட்டது. அந்தக் கல்லூரியில் பணிபுரிவோருக்கு 13 மாதங்களாகச் சம்பளம் கொடுக்கப்படவில்லை. இப்பொழுது, அது சர்க்கார் வசம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு சி.இ.ஓ. நிர்வாகம் செய்து வருகிறார். இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காணவேண்டுமென்று அங்குள்ள ஆசிரியர்கள் ஒரு ஸ்டிரைக் ஆரம்பித்திருக்கிறார்கள். அதனால், உடனடியாக அந்த ஆசிரியர்களுக்குச் சம்பளம் கிடைக்க ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தச் சர்க்காரானது மீனவர்களுக்குப் பல நன்மைகளைச் செய்வதாகக் கூறி, அவர்கள் பணிபுரியும்போது இறந்தால், அவர்கள் குடும்பத்தினருக்கு ரூ. 5,000 கொடுக்கப்போவதாகக் கூறி இருக்கிறது. ஆனால், அவர்களுடைய வாழ்வை வளப்படுத்துவதற்காக, போட்டுகளுக்கோ, வீடு கட்டிக் கொள்ள கூடுதலாக மானியம் கொடுக்கவோ, கூடுதலாக ஒன்றும் நிதி ஒதுக்கவில்லை.

அடுத்து, எனது தொகுதிக்கு ஒரு எல்லையாக உள்ள அரபிக் கடல் கொந்தளிப்புக் கூடுதலாகியிருக்கிற காரணத்தால் கடியகட்டணம், மிடாளம் போன்ற பகுதிகளில் கடல் அரிப்புக் கூடுதல் ஆகியிருக்கிறது. என்னுடைய தொகுதியில் கடியப்பட்டணம் என்ற ஊரில் அருகில் 4 வீடுகள் கடல் அரிப்பால் எடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றது. அதனால், அந்தப் பிரதேசங்களில் கடல் அரிப்பைத் தடுக்க தடுப்புச் சுவர்கள் கட்ட ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் அங்கு விசைப்படகுகள் அதிகமாக இருக்கின்றன. அங்கு இயற்கையாகவே ஒரு துறைமுகம் இருக்கிறது. அந்தத் துறைமுகத்திலே இப்பொழுது போட்டுகள் நிறுத்தப்படுகின்றன. ஆனால், பிரிட்டிஷார் ஆக்கிரமித்த காலத்தில், டனலாய், டோனாய் என்ற இரண்டு ஆங்கிலேயர்கள் அந்தத் துறைமுகத்தை ஆக்கிரமித்ததாகச் சொல்கிறார்கள். அந்தத் துறைமுகத்தை ஒரு சிறிய துறைமுகம் ஆக்கவேண்டும். 40 வருஷங்களுக்கு முன் என் இளம் பிராயத்தில் பர்மாவிலிருந்து குளச்சல் துறைமுகத்தில் படகரிசி இறக்குமதி செய்யப்பட்டது. அதனை படகு அரிசி என்று சொல்வார்கள். அந்தத் துறைமுகம் இப்பொழுது பாழடைந்து கிடக்கிறது. அதை மைனர் போர்ட்டாகவோ அல்லது மீன் பிடி துறைமுகமாகவோ செய்தால் நல்லது. உலக வங்கியும் அந்தத் துறைமுகத்தை சர்வே செய்திருக்கின்றது. ஆகவே, மைனர் போர்ட்டாகவோ அல்லது மீன் பிடி துறைமுகமாகவோ செய்தால், மீனவர் சமுதாயத்திற்கு உண்மையிலே நன்மை செய்வதாக அமையும், அவர்களுடைய பொருளாதார மேம்பாட்டுக்கு உதவியாகவும் இருக்கும்.

எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் படித்தவர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டம் ரொம்ப கூடுதலாக இருக்கிறது. படித்த காரணத்தால், அவர்களுக்கு எந்த வேலையும் கிடைக்கவில்லை. அவர்கள், இப்பொழுது, ஏற்கனவே செய்துகொண்டிருந்த தொழிலையும் செய்யமுடியாமல் கஷ்டப்படுகிறார்கள்.

அந்தப் பகுதியில் கூடுதலாக ரப்பர் கிடைக்கின்றது; அதைக் கொண்டு அங்கு ஒரு ரப்பர் தொழிற்சாலையை ஏற்படுத்த வேண்டும்.

மற்றும், மணவாளக்குறிச்சியில் மோனோசைட் மண் இருக்கிறது. அதிலிருந்து மோனோசைட், இல்மனைட், பிரிக்கலாம். அது ஆல்வாய்க்கு அனுப்பப்பட்டு பிரிக்கப்படுகிறது. அந்தத் தொழிற்சாலையையும் எங்கள் ஜில்லாவிலேயே நிர்மாணித்தால், பல இளைஞர்களுக்கு வேலை கிடைக்கும். அந்த முறையில் வேலை வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இவ்வளவு நேரம் பேச அனுமதித்த உதவி சபாநாயகர் அவர்களுக்கு மீண்டும் நன்றியும் வணக்கமும் தெரிவித்து, அமர்கிறேன். வணக்கம்.

(பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

*திரு எஸ். நடராசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அளித்துள்ள நிதி நிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு வாய்ப்புக் கிடைத்தற்காக தங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினனான நான், இன்றையத் தினம் தஞ்சை மாவட்டத்தில் உள்ள பீதியான நிலைமையை இந்த அவைக்கு சுட்டிக்காட்டுவதன் மூலம் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அதற்கான பரிகாரம் காண்பார்கள் என்ற நம்பிக்கையில் என்னுடைய உரையைத் துவங்குகிறேன்.

'சோழவள நாடு சோறுடைத்து' என்று சொல்வார்கள். இன்றைக்கு அந்த சோழ வளநாட்டிற்கே சோறு கிடைக்குமா என்ற ஏக்கம் பிறக்கக் கூடிய நிலையிலே, அவர்களுடைய விவசாயம் முழுமையாக செய்யப்படுமா, முற்றுப் பெறுமா என்ற கவலை இருக்கிறது என்பதை சுட்டிக் காட்டுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். 150 கோடி ரூபாய் மதிப்புள்ள 22 லட்சம் டன் நெல்லை, 12 லட்சம் ஏக்கர் நஞ்சை நிலத்திலே உற்பத்தி செய்கின்ற தஞ்சை மாவட்டம், இன்றைக்கு வறண்ட மாவட்டமாக ஆகிவிடுமோ என்ற கவலை, அச்சம் விவசாயிகளைப் பிடித்திருக்கிறது. காரணம 74-ம் ஆண்டோடு முடிவடைந்த, அல்லது புதுப்பிக்க வேண்டிய காவிரி ஒப்பந்தம் கர்நாடக அரசோடு இன்னும் புதுப்பிக்கப்படாத காரணத்தால் அது புதுப்பிக்கப்படுமா அல்லது யாசகம் கேட்டுத்தான் நாம்



விவசாயம் செய்யவேண்டும் என்ற நிலைமை நீடிக்குமா என்ற கவலையில் அவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு இந்த அரசு முயற்சி செய்யும் என்ற நம்பிக்கை ஒரு பக்கம் இருந்தாலும், எங்கே செய்யப்படாமல் போய்விடுமோ என்ற எண்ணத்தில் நாமே அதற்கு வழிகாணுவோம் என்ற எண்ணத்தில் தஞ்சை மாவட்ட விவசாயப் பெருங்குடி மக்கள், உச்ச நீதி மன்றத்தில் வழக்குத் தொடரயிருக்கிறார்கள் என்பதை தங்கள் மூலம் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். காரணம் சென்ற ஆண்டு நம்முடைய நிலைமை அப்படி இருந்தது என்று எண்ணிப் பார்த்து, விவசாயிகள் இந்த ஆண்டும் அப்படித்தான் தொடரும் என்று நம்புவதற்கு சில காரணங்கள் இருக்கின்றன. சென்ற ஆண்டு ஆடிப்பெருக்கு என்று சொல்கின்ற நேரத்திலே கூட தண்ணீர் வராதிருந்த ஆறுகளில், இந்த ஆண்டு சற்று முன்னதாக தண்ணீர் வந்தாலும், வழக்கத்திற்கு மாறாக எப்போதும் திறந்து விடுவதற்கு மாறாக, இப்போது காலம் தாழ்த்தப்பட்டு வருகிறது என்பதை இந்த அரசு கவனிக்கும் என்று நம்புகிறேன். சென்ற ஆண்டு குடியரசுத் தலைவர் ஆட்சியிலே கர்நாடக அரசோடு அதிகாரிகள் பேச்சு வார்த்தை நடத்தி 500 கோடி கன அடி வீதம் தண்ணீர் 2 முறைகள் வாங்கப்பட்டது. இப்போது இந்த அரசு கர்நாடக அரசுடன் பேசி முடிவெடுத்துகூட பெற்றிருக்கிற தண்ணீர் 100 கோடி கன அடி வீதம் பத்து நாட்களுக்கு வாங்கப்பட்டது என்று பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறது. அது தான் உண்மையும்கூட, ஆக சென்ற ஆண்டு 1000 கோடி கன அடி தண்ணீர் வாங்கப்பட்டது. இந்த ஆண்டும் 1,000 கோடி கன அடிதான். தஞ்சை மக்கள் பீதி அடையக் காரணம் அடுத்த ஆண்டும் இவ்வளவுதான் கிடைக்கும். இனிமேல் ஆண்டுக்காண்டு இதுதான் கிடைக்கும் என்று அச்சப்படுகிறார்கள். அதற்காகத் தான் இந்த அரசு முதலமைச்சர் அவர்கள், நிதி அமைச்சர் அவர்கள், சர்வ கட்சித் தலைவர்களையும் கலந்து ஒரு தக்க முடிவெடுத்து இந்த காவிரி பிரச்சினையை விரைவிலே தீர்வு காணுவார்கள் என்று தஞ்சை மாவட்ட மக்கள் ஏக்கத்தோடு கவனித்து வருகிறார்கள்.

தஞ்சை மாவட்டத்திலே உள்ள நிலைமை, யாராவது நிலம் வாங்க ஆள் கிடைப்பார்களா என்ற நிலைமைதான். விவசாயப் பெருமக்கள் நில உடமையாளர்கள் நிலத்தை விற்பதற்குத் தயாராக இருக்கிறார்கள். சென்றஆண்டு ஏக்கர் 10 ஆயிரம், 9 ஆயிரம் விற்றது. இன்று 5 ஆயிரம் 6 ஆயிரம் ரூபாய்க்கு வாங்குவதற்குக் கூட ஆட்கள் கிடைக்கவில்லை. காரணம் தண்ணீர் வராதோ என்ற கவலைதான். தண்ணீர் வராத நேரத்தில் விற்றுவிட்டால் நாம் கெட்டிக்காரர்கள் ஆகிவிடுவோம் என்று கருதுகிறார்கள். ஆகவேதான் இத்தகையை நம்பிக்கை அற்ற தன்மை, பீதியான தன்மை உலவிக் கொண்டிருக்கிறது. குறுவை சாகுபடி—குறுவை

காப்பாற்றப் படும்—என்று சொல்கிறார்களே தவிர—குறுவை யாரும் அதிகமாக நடுவது இல்லை. சாதாரணமாக, வழக்கமாக ஆற்றிலே காலாகாலத்திலே தண்ணீர் திறந்து விடப்பட்டு மேட்டூர் நீர்த்தேக்கத் தண்ணீர் நிறைய இருக்கிற காலத்திலே 4 லட்சம் ஏக்கர் நிலத்திலே குறுவை சாகுபடி செய்யப்பட்டது. இப்போது 2 லட்சம் ஏக்கர் செய்கிறோமா என்பதே சந்தேகத்திற்கு உரியதாக ஒன்று.

(பிற்பகல் 12-30)

குறுவை சாகுபடி செய்யும் நேரத்திலேயே குறுவைக்கு வரும் தண்ணீர் ஏன் சம்பாவிற்கு வராது என்று சம்பாவிற்கு நாத்து விட்டு விட்டார்கள். சம்பா நல்ல பயிர். குறுவை அவர்கள் வசதிக்கு தகுந்தாற்போல் செய்வார்கள். சம்பா எல்லா இடத்திலும் செய்ய முடியும். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் சம்பா தான் நல்ல பயிர். குறுவை நிலத்திற்கு களம் வேண்டும். வடிகால் வசதி வேண்டும். சம்பாவிற்கு விளை நிலத்திலேயே நெல்லை அடித்து விடுவார்கள். ஆகவே, குறுவை காப்பாற்றப்படும் என்று சொல்கிற நேரத்தில் சம்பாப் பயிருக்கு என்ன செய்யப் போகிறீர்கள் என்பதை விவசாயப் பெருங்குடி மக்களுக்குத் தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வளவு கஷ்டப்பட்டு விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கு அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு நியாயமான விலை கிடைக்கிறதா என்று பார்த்தால், மற்ற மாவட்டங்களைப் பார்க்கிறபோது, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கட்டுப்படி இல்லை என்றுதான் சொல்லவேண்டும். கழக அரசு வழங்கி வந்த போனசும் நிறுத்தப்பட்டு விட்டது. வண்டி சத்தம் நிறுத்தப்பட்டு விட்டது. அந்த விவசாயி ஓடி ஓடி அதிகம் உழைத்து உற்பத்தி செய்தாலும் அதற்கு உரிய விலை கிடைக்கவில்லை என்று ஏக்கமும் ஆத்திரமும் கொண்டு இருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

என்னுடைய தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஒரு கோரிக்கையை பல்லாண்டுகாலமாக இங்கே பேசுகின்ற உறுப்பினர்கள் எந்தக் கட்சிக்காரர்களாக இருந்தாலும் சொல்லிக்கொண்டு வருகிறார்கள். எங்கள் மாவட்டத்திற்கு ஒரு விவசாயக் கல்லூரி வேண்டும். மீனளக் கல்லூரி பற்றி அறிவித்து இருக்கும் நிதி அமைச்சர் அடுத்த பட்ஜெட்டில் விவசாயக் கல்லூரி கொண்டு வருவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 6 மாத காலம் மட்டுமே வேலை வாய்ப்புக் கிடைக்கும் அந்த தஞ்சை மாவட்டத்தில் எந்த விதமான தொழில் நிறுவனமும் கிடையாது. விரல் விட்டு எண்ணக்கூடிய அளவில் 4–5 தொழில் நிறுவனங்கள் தான் அந்தப் பகுதியில் இருக்கின்றன. தஞ்சை மாவட்டம் பின்தங்கிய மாவட்டம், தொழில் துறையில் என்று அறிவிக்காத காரணத்தால் மத்திய அரசு தரும் 15 பர்சண்டு சப்சிடி அவர்களுக்குக் கிடைப்பது இல்லை. ஆகவே, அவர்கள் தொழில் ஆரம்பிக்க விரும்பினாலும், பக்கத்தில் உள்ள புதுக்கோட்டை அல்லது இராமநாதபுரம் மாவட்டத்திற்குச் சென்று ஆரம்பிக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்தில் துவங்க அவர்கள் விரும்புவது இல்லை. ஆகவே, நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் டெல்லியிலே மிகுந்த செல்வாக்குப் படைத்தவர்கள். மத்திய அரசோடு பேசி தஞ்சை மாவட்டத்தையும் தொழில் துறையில் பின்தங்கிய மாவட்டமாக அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே தொழில் துறை அதிகரித்தால் வேலை வாய்ப்புப் பெருகும். வேலையில்லாத் திண்டாட்டம் ஓரளவு குறையும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.





எங்களுடைய தஞ்சை நகரத்தில் கொள்ளிடத்தில் குடிநீர் வசதித் திட்டம் 5 ஆண்டு காலத்திற்கு முன்பு ஆரம்பிக்கப்பட்டு வேலைகள் துரிதமாக நடைபெற்று வந்தபோதிலும், இப்போது அந்த வேலையில் தொய்வு ஏற்பட்டு இருக்கிறது. இப்போது எல்லாம் அந்தப் பகுதியில் கடுமையான தண்ணீர் பஞ்சம் இருந்து கொண்டு இருக்கிறது. ஆகவே, அந்தக் குடிதண்ணீர் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற அந்த வேலையைத் துரிதப்படுத்த வேண்டுமென்று கேட்டு, தஞ்சை வாழ் மக்களுக்கு விரைவில் குடிதண்ணீர் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். தஞ்சை மாவட்டத்திற்காக 1975-ம் ஆண்டு தஞ்சை நகரத்திலே மாவட்ட விளையாட்டு அரங்கு கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. ஆனால் அந்த விளையாட்டு அரங்கம் கட்ட இன்றுவரையில் வேலை துவங்கப்படாமல் இருக்கிறது. நாட்டின் இளைஞர்கள் வளரும் சமுதாயத்தினர் நல்ல மனப்பான்மையும், பரந்த உள்ளமும் கொண்டவர்களாக இருக்க வேண்டுமானால் அது விளையாட்டுத் துறை மூலமாகத்தான் வளரமுடியும் என்று திட்டவட்டமாக நான் நம்புகிறேன். ஆகவே, அந்த விளையாட்டு அரங்கம் கட்டுவதற்கான வேலையைத் உடனடியாக ஆரம்பித்து, மற்ற மாவட்டத் தலைநகரங்களில் உள்ளதுபோல், தஞ்சை மாவட்டத்திலும் அமைத்துத் தந்து, தஞ்சை மாவட்டத்து மக்களின் அந்தக் குறையைப் போக்க அரசாங்கம் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி வணக்கம்.

*திரு. வி. ஆர். ஜெயராமன்: மாண்புமிகு சட்டப் பேரவை துணைத் தலைவர் அவர்களே 1977-78-ம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விழைகின்றேன்.

''இயற்றலும் ஈட்டலும், காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு''

என்ற அந்தமில் இன்பத்து அழிவில் வீட்டினைத் தருகின்ற தெள்ளு தமிழ் வள்ளுவப் பெருந்தகையின் வாக்கினுக்கொப்ப, இந்த நிதி நிலை அறிக்கை அமைந்துள்ளது.

வரி இல்லாத பட்ஜெட் வாழ்க்கையின் அடிமட்டத்தில் உள்ள ஏழை எளியவர்களுக்கான, நடைமுறைச் சாத்தியமான நிதிநிலை அறிக்கையாக அமைந்திருக்கிறது.

விவசாயத் துறையைப் பொறுத்த அளவில் கரும்பு, எண்ணெய் வித்து, தானியம், பருத்தி போன்ற மிக அவசியமானவற்றில் இலக்கு நிர்ணயித்து, உற்பத்தியைப் பெருக்கிடவும், மண்வளப் பாதுகாப்புக்கும், உயர் விளைச்சல் வித்துக்கள் வழங்கிடவும்— விவசாய விளைபொருள் விற்பனையகம் அமைத்திடவும், மத்திய அரசின் பயிர்ப் பாதுகாப்புத் திட்டத்தை தமிழகத்தில் நடைமுறைப் படுத்திடவும் திட்டமிடப்பட்டதின் மூலம், வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்தியும், நிலவள வங்கியின் மூலம் கடனுதவியும் தந்திட வழி வகுத்துள்ள இவ்வறிக்கையினை விவசாயிகள் மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றனர்.

இந்த நிலையில் தேனியில் உள்ள "Cotton Corporation of India"–வை நிரந்தரமாக்கிடவும், இப்பகுதியில் உயர் விளைச்சல் பருத்தி அதிகமாகப் பயிராவதால் அரசு விதைப்பண்ணையை அபிவிருத்தி செய்திடவும் வழி வகை காணவிழைகின்றேன்.

நீர்ப்பாசனத்தைப் பொறுத்த அளவில் "நீரின்றி அமையாது உலகு" என்ற வாக்கிற்கொப்ப, புதிய நீர்ப்பாசன வசதிகளும், நிரந்தர நீர்ப்பாசன வசதிகளும் செய்வது பாராட்டிற்குரியது. பெரியாறு மேம்பாட்டுத் திட்டத்திற்கு, உலக வங்கியின் உதவியினைப் பெற்றிருப்பது பாராட்டுதலுக்குரியது. வான்பொய்த்து வறண்டதனால் வளம் குன்றித் தவிக்கின்ற தேனித் தொகுதியின் கிராமங்களுக்கு நடைபெற்று வருகின்ற பி.டி.ஆர். வாய்க்கால் திட்டத்திலிருந்து ஒரு "காண்டூர் கெனால்" (Contour Canal) அமைத்துதவ வேண்டுகின்றேன். தொட்டமான்துறை வாய்க்கால் திட்டத்தை நிறைவேற்றிட வேண்டுகின்றேன். சிறப்பு நீர்ப்பாசனத் திட்டங்கள், 30,000 பம்பு செட்டுகள் அமைத்தல், சிறு விவசாயிகளுக்குப் பெரும் மகிழ்வைத் தருகின்றன. இருப்பினும், மின் இணைப்புச் சிக்கல், நிலத்தடி நீர்க்கோட்டச் சிக்கல் இவற்றை நீக்கிட வேண்டும்.

நிலத்தடி நீரினைப் பாதுகாத்திடவும், ஒழுங்கு படுத்திடவும் அரசு தனிக் கவனம் செலுத்தவிருப்பது வரவேற்கத் தக்கது. பிற மாநிலங்களில் உள்ளதுபோல "Director of Geology" என்ற அமைப்பின் மூலம் நீருடன், கனிவளமும் பெருக்கிட வழி செய்திட அரசை வேண்டுகிறேன். இது குறித்து தமிழகத் திட்டக் குழு தனது 1972 முதல் 1984 ஆம் ஆண்டு முடிய கனிவளம் குறித்த அறிக்கையில் Towards Optimum Utilisation of our



Mineral Wealth என்று குறிப்பிட்டுள்ளது. இதன் மூலம் தமிழகம் மற்றொரு ஜெர்மனியாக, ஜப்பானாக மாறிடும் என நம்புகிறேன்.

தமிழகத்தின் எல்லையோரமாய், கேரளத்தில் ஓடி, அரபிக் கடலில் கலக்கிற ஆறுகளின் நீரை கிழக்கே, மதுரை, இராமநாதபுரம், நெல்லை மாவட்டங்களில் வறண்ட பகுதிகளுக்குக் கொணர்ந்து வளமாக்கிட மத்திய அரசுடனும், கேரள அரசுடனும் தொடர்பு கொண்டு ஆவன செய்திடவும், காவிரி நீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காணவும் தனியாக ஒரு தலைமைப் பொறியாளரை நியமிக்க வேண்டுகிறேன்.

மின் சக்தியைப் பொறுத்த வரையில் நெய்வேலியில் இரண்டாவது சுரங்கமும், அதன் மூலம் பெரிய அனல் நிலையம் நிறுவிடவும், கல்பாக்கம் அணு மின் நிலையம் விரைவில் செயல்படவும் மத்திய அரசை வற்புறுத்தி, விரைவில் மின் உற்பத்தியை அதிகரிக்க நல்ல முடிவு செய்யப்பட்டுள்ளது வரவேற்கத் தக்க ஒன்றாகும்.

தொழில் துறைகளைப் பொறுத்த அளவில் நலிந்துள்ள சிறு தொழில்களை மேம்படுத்திடவும், 20 கோடி ரூபாய் முதலீட்டில் பல்வேறு சிறு தொழில்களை 12 மாதங்களில் நிறைவேற்றிட இருப்பதும் பாராட்டுதலுக்குரியது. தேனியில் கூட்டுறவுத் துறையில் நூற்பாலையும், பஞ்சு அறைக்கும் ஆலையும், நைலான் Chord தொழிற்சாலையும் அமைத்துத் தர வேண்டுகிறேன். கைத்தறியில் முன்னேற்றமும், சமுதாயத்தில் கீழ் மட்டத்திலுள்ள மக்களுக்கு பொருளாதார வாய்ப்புக்களைத் தருவதன் மூலம். அவர் தம் வாழ்க்கை நிலைகளை உயர்த்திட, குடிநீர், கல்வி, சுகாதாரம், குடியிருப்பு, போக்குவரத்து வசதிகள் ஆகியவை செய்திட திட்டவட்டமான திட்டங்கள் செய்ய இருப்பது மகிழ்ச்சிக்குரியது.

குடிநீர்ப் பிரச்சினையைப் பொறுத்த மட்டில் குடிப்பதற்கும் நீரின்றித் தவிக்கின்ற நிலை தீர்க்க, கிராமக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் ஆவன செய்யப்பட்டுள்ளது. வறட்சியின் இருப்பிடமாய் தேனித் தொகுதியின் சில கிராமங்கள் இருப்பது நீடிக்காது என்று நான் பெரிதும் மகிழ்வு கொள்கிறேன். குறிப்பாக ஹரிஜன மக்கள் குடிநீர் பெற்று மகிழ்வார்கள். மது நீருக்கு வழிவகை காணாமல் குடிநீருக்கு வழி செய்த அரசின் முடிவை எல்லோரும் வரவேற்பர்.

ஹரிஜனங்கள், பின் தங்கியோர், மீனவர்கள் முதலியோரின் நன்மைக்காகப் பல திட்டங்கள் உள்ளன. கிராமப்புற பொருளாதாரத்தில் மேம்பாடு காண கிராமப்புறச் சாலைகளுக்கு முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. தேனித் தொகுதியில் (1) நாகலாபுரம் முதல் தப்புக்குண்டு, (2) கோவிந்த நகரம் முதல் குப்பிநாய்க்கன்பட்டி (3) அப்பி பட்டி முதல் வெள்ளையம்மாள்புரம்

[திரு. வி. ஆர். ஜெயராமன்] [1977 ஜூலை 30

ஆகிய சாலைகளைச் செப்பனிட்டு தார் போட்டிடவும், மலைய கவுண்டன் பட்டிக்கு இணைப்புச் சாலை போட்டிடவும் வேண்டுகிறேன். வால் கரட்டில் , தேனி அல்லிநகரம் நகராட்சியில் வீடற்றோருக்கு வீட்டு மனை தந்திடவும் வேண்டுகின்றேன்.

அம்பாசமுத்திரம் அருகில் வள்ளல் நதியின் குறுக்கே பாலம் கட்டி, ஆண்டிப்பட்டி ஒன்றியப் பகுதிக்கு இணைப்புச் சாலை அமைத்துதவ வேண்டுகிறேன்.

சுகாதாரம் பொறுத்த அளவில் தெரிந்தெடுக்கப்படவிருக்கின்ற 24 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள ஒவ்வொரு கிராமத்திற்கும், நடமாடும் மருத்துவக் குழு வாரம் ஒருமுறை செல்லும் திட்டம் மிகவும் பாராட்டுதலுக்குரியது. சின்னமனூர் நகராட்சியில் ஒரு மருத்துவ மனை அமைத்திடவும் வேண்டுகிறேன்.

கல்வியைப் பொறுத்த மட்டில் 10+2+3 கல்வி முறையை நடைமுறைப்படுத்தவும், முறை சாரா (Non-formal) கல்விக்கு முக்கியத்துவமும், 1,100 ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பும், கல்லூரி ஆசிரியர்களுக்கு U.G.C. சம்பளமும் அளிக்கப்பட்டது வரவேற்கத் தக்கது.

[பிற்பகல் 12.40].

தனியார் பள்ளிகளில் ஆசிரியர்களுக்கு வேலை பாதுகாப்பற்ற அவலநிலை உள்ளது. ஆப்பிரிக்க அடிமைகளும் சுதந்திரம் அடையும் நாளில்—இங்கு—அடைந்துவிட்ட சுதந்திரத்தில் அடிமைகளா ஆசிரியர் என்று கேட்கப்படும் நிலை மிக விரைவில் தீர்க்கப்பட வேண்டுகிறேன். தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு அரசே நேரடியாகச் சம்பளம் தந்தால் ஆசிரியர்கள் மகிழ்ச்சியடைவார்கள். தேனியில் ''அக்ரோ பேஸ்ட் பாலிடெக்னிக்'' ஏற்படுத்த வேண்டுகிறேன்.

தமிழ் வளர்ச்சிக்கும், நகரப்பகுதி வளர்ச்சிக்கும் ஆவன செய்யப்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரியது.

அடுத்து முக்கியமாக வேலை வாய்ப்புப்பற்றியது. ''சாலை ஓரத்திலே வேலையற்றவர்கள்—அந்த வேலை அற்றவர்களின் உள்ளங்களின் விபரீத எண்ணங்கள் அந்தோ! அதுதான் காலக்குறி என்றார் பேரறிஞர் அண்ணா. படித்தும் வேலையன்றிப் பரிதவிப்போர் துயர் நீக்க பல திட்டங்களைத் தீட்டி செயல் படுத்த இவ்வரசு கொண்டுள்ள ஆர்வத்திற்கு எடுத்துக்காட்டாய் நிலப்படை இயக்கம் அமைக்கபட்டிருக்கிறது. நிலப்பறி இயக்கம் போய் நிலப்படை இயக்கம் செயல்படுவதன் மூலம் சிறுதொழில் வளர்ச்சி பெறும் சுயவேலைத் திட்டம் உருவாகும்.



1977 ஜூலை 30] [திரு. வி. ஆர். ஜெயராமன்]

அரசு ஊழியர்களுக்கு சுகாதாரம், வீட்டுமனை, கல்வி, சமூகப் பாதுகாப்பு மற்றும் பிற தேவைகளை செய்துதவ இருப்பதும் மூன்றாவது ஊதியக்குழு அமைக்கவிருப்பதும், ஓய்வுக்கான நலத்திட்டம் கொண்டுவருவதும் பாராட்டிற்குரியது.

''டாப் தி ரிச், அண்டு பாட் தி புவர்'' (Tap the rich and pat the poor) என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியது போல, மதுவுக்கு அதிக வரி விதித்ததும், ஆயத் தீர்வையினை அதிகரித்ததும் நாம் ஒப்புக்கொண்டுள்ள மதுவிலக்குக் கொள்கைக்கு அளித்துள்ள சிறப்பாகும். நீர்ப் பாசனக் கட்டணத்தை ஏக்கருக்கு ரூபாய் 2 வீதம் குறைத்ததும், பணப்பயிர் சிலவற்றிற்கு பயிர்க் கட்டணத்தை நிறுத்தியதும், விற்பனை வரியில் சில பொருள்களுக்கு விதிவிலக்களித்ததும், கேளிக்கை வரியினைக் குறைத்ததும் பெரிதும் போற்றுதற்குரியதாகும்.

தேனித் தொகுதியில் பல்லாண்டுக் காலமாக மக்கள் மத்தியிலே தீர்க்கப்படாமலிருக்கிற பிரச்சினைகளான நாகராபுரம், வீர பாண்டி ஊராட்சிகளை இரண்டாகப் பிரித்து நிர்வாகச் சீரமைப்பு செய்வதன் மூலம், ஊராட்சியின் மூலம் கிடைக்க வேண்டிய பொது நன்மைகள் விரைவாகக் கிடைக்க வழி செய்ய வேண்டும்.

தேனியிலிருந்து கோவைக்கும், திருச்சிக்கும் புதிய எல்.எஸ். எஸ். பேருந்து விடுவதற்கும், சின்னமனூர், நகராட்சியில் இருந்து வெள்ளையம்மாள்புரம் வழியாக, காமாட்சிபுரம் வரை ஒரு விரைவுப் பேருந்து விடுவதற்கும் வழி வகை செய்ய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

சின்னமனூர் நகராட்சிக்கு ஒரு அரசு மருத்துவமனை ஏற்படுத்தித் தர உடனடி நடவடிக்கை எடுக்க அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

மற்றும் வள்ளல் நதி ஓரத்திலே இருக்கின்ற ஆற்றோரக் கிணறுகளிலே இருந்து விவசாயம் செய்கின்ற விவசாயப் பெருங்குடி மக்களுக்கு ஏக்கருக்கு 200 ரூபாய் அளவில் தண்ணீர் தண்டத் தீர்வை வருடாவருடம் விதிக்கப்பட்டு வருகிறது. இந்தத் தண்ணீர் தண்ட வரியினை உடனடியாக நீக்க ஆவன செய்வதுடன் வள்ளல் நதி ஓரத்திலே உள்ள கிணறுகளை, ரெவின்யூ போர்டு உறுப்பினர் ஒருவரைக் கொண்டு ஆய்வு செய்து அந்த விவசாயக் கிணறுகளை ரெகுலரைஸ் செய்து கொடுக்கும்படி வேண்டுகிறேன்.

தேனியில் ஒரு மண்வளப் பரிசோதனை நிலையம் ஏற்படுத்துவதற்கும் பெரியகுளம் வேளாண்மைக் கோட்டத்தில் ஒரு ''ஜாயிண்ட் டைரக்டர் ஆப் அக்ரிகல்சுர்'' அலுவலகம் அமைத்து தீவிர விவசாய முறைகளை ஊக்கமாக்க வேண்டுகிறேன்.

பெரியகுளம் வருவாய்க் கோட்டத்திலே, நிரந்தர வறட்சி பகுதியாக கொடுவிலார்ப்பட்டி, தாடிச்சேரி, தப்புகுண்டு, காட்டுடைக்கன்பட்டி, பூமலைப் பூண்டு, ஜங்கால்பட்டி, கோவிந்தராஜபுரம், காமாட்சிபுரம், சீபாலக்கோட்டை, புலிகுத்தி ஆகிய இடங்கள் இருக்கின்றன. இங்கு மழை இவ்வாண்டும் பொய்த்து விட்டது. போர்க்கால அடிப்படையில் வறட்சி நிவாரணப் பணிகளை மேற்கொள்ள ஆவன செய்யும்படி வேண்டுகிறேன்.

மொத்தத்தில் கரைபடியாத, கொடுத்துச் சிவந்த கரங்களின் சொந்தக்காரரான எங்கள் புரட்சித் தலைவரின் கொள்கையான ஊழலற்ற, லஞ்சலாவண்யம் அற்ற, நியாயமான, நேர்மையான, உண்மையான அரசாட்சி அமைவதற்கு வழிசெய்துள்ள நிதிநிலை அறிக்கையாகும் இது என்று பாராட்டி அமைகிறேன். வணக்கம்.

*திரு கே. எஸ். முருகேசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே நான் பேசுவதற்கு வாய்ப்பளித்த, என் அருமைத் தலைவர், முன்னாள் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், எனது திருவரம்பூர் தொகுதி மக்களுக்கும் முதலிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து இங்கே நிதி நிலை அறிக்கையிலே பேசுவதற்கு எனக்கு வாய்ப்புக் கொடுத்ததற்காக பேரவைத் தலைவருக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கை விவசாயிகளுக்கும், மற்ற அரசு ஊழியர்களுக்கும் எதிர்பார்த்த அளவிற்கு இல்லை என்ற குறைபாடுகள் இருந்தாலும் ஓரளவு சில நல்ல திட்டங்களைக் கொண்டிருப்பதை நாங்கள் ஆதரிக்கக்கூடிய நிலையில் இருக்கிறோம். விவசாயப் பெருங்குடி மக்களுக்கு முந்திய அரசு கொடுத்த போனசும், அவர்கள் கொண்டுவந்து கொடுத்த ஒவ்வொரு மூட்டைக்கும் கொடுத்த வண்டி வாடகை போன்றவையும் இந்த பட்ஜெட்டிலே குறிப்பிடாத நிலைமை இருக்கிறது.

அதேபோல் முந்திய திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்த நேரத்தில் அரிஜன மக்களுக்கு 40,000 வீடுகள் வரையில் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக எங்கள் பகுதியில் நாடோடிகளாக நாதியற்றவர்களாக இருந்த நரிக்குறவர்கள் சமுதாயத்திற்கு கிட்டத்தட்ட 120 வீடுகள் கட்டிக் கொடுத்து அவர்களுக்கு ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் ஒரு பள்ளிக்கூடம் அமைத்து அங்கே குடிநீர் வாரியத்தின் மூலம் நீர்த்தேக்கத் தொட்டி ஒன்றும் கட்டி, ஊராட்சி மன்றம் சார்பாக மின் இணைப்புகள் கொடுத்து அங்கே பட்டிணத்தைப் போல் இருக்கக்கூடிய அளவிற்கு அங்கு நிலைமை இருக்கிறது. அதேபோல் எங்கள் ஒன்றியப் பகுதியில் கிட்டத்தட்ட இருநூறுக்கு மேற்பட்ட அரிஜனங்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கின்றன. இதை நான் ஏன் குறிப்பிடுகிறேன் என்றால் இப்போது நான் ஊருக்குச் சென்றிருக்கிறபோது அங்கே இரண்டு



பிரிவினராக நரிக்குறவர்கள் இருக்கிறார்கள். ஒரு பிரிவினருக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டு மற்றொரு பிரிவினருக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவில்லை என்ற ஏக்கம் காரணமாக அங்கு பழங்கனூர்குடி கிராமத்தில் நரிக்குறவர்கள் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் என்னிடம் வந்து நமது முதல் அமைச்சர் அவர்கள் ''ஒளி விளக்கு'' என்ற சினிமாவில் நரிக்குறவர்கள் படி ஏறி பிச்சை கேட்கமாட்டோம் என்று பாடினார்கள் ; அந்தப் பாட்டின் அடிப்படையில் அவர்கள் எங்களுக்குத் தொழில் வளம் கொடுத்து எங்களை படி ஏறி பிச்சை கேட்காத அளவிற்குச் செய்யுங்கள், இதை சட்டமன்றத்தில் கூற வேண்டும் என்று கோரிக்கொண்டார்கள். அந்த அடிப்படையில், அவர்கள் பிச்சை எடுக்காத அளவிற்கு அவர்களை ஆக்கிவிட வேண்டும் என்று இந்த நேரத்தில் துணைத் தலைவர் அவர்கள் மூலம் கேட்டுக்கொள்கிறேன். மற்றும் அரிஜன மக்களுக்கும் நல்ல முறையில் வீடுகட்டித் தர முன்நின்று செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். அரிஜன மக்கள், பிற்பட்ட வகுப்பினர் இவர்களுக்கு கடனுதவிக் கொடுக்க அரசு முன் வந்திருக்கிறது. மேலும் மேலும் அவர்களைக் கடனாளியாக ஆக்காது, அவர்கள் கடன்பட்டோர் நெஞ்சம்போல் வாழாமல் அவர்களுக்கு முந்தைய அரசு கொடுத்ததைப்போல் அவர்களுக்கு வீடுகள் கட்டித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சுகாதாரத்தைப் பொறுத்த வரையில், திருச்சியில், திருவரம்பூர் தொகுதியைப் பொறுத்த வரையில் அங்கு ஒரு டிஸ்டிலரி—எரி சாராயம் தயாரிக்கும் தொழிற்சாலை—இருக்கிறது. அது பல ஆண்டுகளாக அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கு சுகாதாரக் கேடை விளைவித்து, அதிலிருந்து வரும் கழிவு நீர் உய்யகொண்டான் வழி வந்து, அங்கு கிராமப் பஞ்சாயத்துக்களால் வெட்டப்பட்டிருக்கிற கிணறுகளில் நுழைந்து சுகாதாரக் கேட்டினை விளைவிக்கிறது. அதன் காரணமாக ஆங்காங்குள்ள ஏரிகளில் எல்லாம் உள்ள மீன்கள் செத்து மடியக் கூடிய அளவில் இருக்கிறது. எனவே அந்த டிஸ்டிலரியை வேறு ஒரு இடத்திற்கு மாற்ற வேண்டும் அல்லது அந்த கழிவு நீர் வராத அளவிற்கு மாற்றுத் திட்டம் ஒன்றை இந்த அரசு கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். முன்பிருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு அதற்கு ஒரு மாற்றுத் திட்டம் தயாரித்து அந்தக் கழிவு நீரை உய்யக்கொண்டானில் விடாமல் மற்றொரு இடத்திற்கு அதைக் கொண்டு சென்று அங்கு விவசாயம் செய்வதற்கு ஆவன செய்யவேண்டும் என்று நாங்கள் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் அவர்கள் ஒரு திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அந்தத் திட்டம் நிறைவேறும் தருவாயில் ஆட்சி கலைக்கப்பட்டது என்பதை இந்த நேரத்தில் நான் குறிப்பிடாமல் இருக்க முடியாது. அதேபோல் எங்கள் திருவரம்பூர் பகுதியில் திருச்சி பல்கலைக்கழகம் கட்டுவதற்காக இடங்கள் எல்லாம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பல்கலைக் கழகம் அங்கு வருவதற்கு புதிய அரசு ஏற்பாடு செய்ய

[திரு. கே. எஸ். முருகேசன்] [1977 ஜூலை 30

வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அங்கு அந்தப் பல்கலைக்கழகத்தை நிறுவிட முந்தைய அரசு முயற்சி எடுத்துக் கொண்டது; அதற்கிடையில் ஆட்சி கவிழ்க்கப்பட்டதன் காரணமாக அந்தப் பல்கலைக்கழகம் வருவது நிறுத்தப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன். அதேபோல் எங்கள் பகுதியில் இரண்டு அரசினர் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. அந்த இரண்டு பள்ளிகளிலும் கூரைதான் இருக்கிறதே தவிர, மாணவர்கள் அங்கே வெளியிலே இருந்துதான் படிக்கக்கூடிய நிலை இருக்கிறது. புதிய அரசு இதில் கவனம் செலுத்தி அந்த இரண்டு பள்ளிக்கூடங்களுக்கும் நிரந்தரமான கட்டிடங்கள் கட்டிக் கொடுக்க ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[பிற்பகல் 12–50]

விவசாயத்தைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு அங்கே பூச்சி மருந்து, மற்றும் விதைகள், உரங்கள் போன்றவற்றின் விலைகளை இந்த பட்ஜெட்டில் குறைத்திருக்கலாம். மத்திய அரசு தான் குறைக்க முடியும் என்ற நிலைமை இருந்தாலும், இந்த அரசு ஏதாவது மான்யமாவது கொடுக்கலாம். வருகின்ற பட்ஜெட்டிலாவது பூச்சி மருந்து, விதைகள், உரங்கள் இவைகளுக்கு மான்யம் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல், மற்ற தொழில்களைப் பொறுத்தவரையில், எங்கள் பகுதியில் தொழில் பயிற்சி பள்ளி ஒன்று இருக்கிறது. அந்தப் பள்ளியில் இந்த ஆண்டு இங்கே சொல்ல முடியாத அளவுக்கு லஞ்ச லாவண்யம் நடந்திருக்கிறது. இதை புதிய அரசு ஒற்றர்களை வைத்து விசாரித்து, இதுபோன்ற செயல்கள் நடைபெறாத அளவுக்குச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக அந்தத் தொழிற் பயிற்சிப் பள்ளியில் 400 இடங்கள் இருக்கின்றன. இதற்குக் கிட்டத்தட்ட 15,000 பேர்கள் மனு செய்திருந்தனர். ஆகவே இந்த நிலையைப் போக்க இப்போது 400 இடங்கள் என்றிருப்பதை 1,000 இடங்கள் என்கிற அளவுக்கு உயர்த்துவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

ஆகவே எங்கள் பகுதியைப் பொறுத்த வரையில் குறிப்பாக இப்போது நடைபெறக் கூடிய விவசாயத்திற்கு காவிரியிலிருந்து தண்ணீர் வந்தாலும், உய்யக்கொண்டான் கால்வாயில் தண்ணீர் வர இயலாத நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. இப்போது விவசாயம் செய்வதற்கு அதிலும் காலத்தில் செய்வதற்கு அங்கு தண்ணீரை விடுவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

அதே போல் பொன்மலை நகராட்சியில் அந்தப் பகுதியில் குடி தண்ணீர் பிரச்னை பெரும் பிரச்னையாக இருந்து கொண்டிருக்கிறது. முன்பு இருந்த அரசு, இந்த நகராட்சிக்குத் தனியாக ஒரு திட்டத்தைப் போட்டு கிட்டத்தட்ட 11 லட்சம் ரூபாய் அளவுக்கு நிதி ஒதுக்கியிருந்தது. ஆனால் அது செயல்படுத்தப்பட முடியாமல் குடியரசுத் தலைவர் ஆட்சியில் விடுபட்டிருந்தது. இப்போது அந்த 11 லட்சம் ரூபாயையும் பயன்படுத்தி அதற்கு மேலும் பணம் ஒதுக்கி, இந்தத் திட்டத்தை நிறைவேற்றி, அந்த பகுதியிலுள்ள மக்களுக்கு இருக்கின்ற குடிதண்ணீர் கஷ்டத்தைப் போக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். அதோடு திருச்சி மாவட்டத்தில் காவல் துறையைச் சார்ந்தவர்கள் கிட்டத்தட்ட 1,000-க்கு மேற்பட்டவர்கள் அங்கே குடியிருக்கிறார்கள். அவர்களுக்கு என்று தனியாக திருச்சி நகராட்சியிலுள்ள தண்ணீரைக் கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



1977 ஜூலை 30] [திரு. கே எஸ் முருகேசன்]

அடுத்து, மாணவர்கள் மத்தியில் பதட்ட நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. அண்ணாமலை பல்கலைக் கழகம் மூடப்பட்டது. பாளையங்கோட்டை இந்திய மருத்துவக் கல்லூரி மூடப்பட்டது. சென்னை கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். காவல் துறையினரும், சமூக விரோதிகளும் சேர்ந்து கொண்டு நிலைமையை மோசமாக்கி வருகிறார்கள். லயோலா கல்லூரியில், ஊர்வலத்தில் பங்கு பெற்ற மாணவர்களை பழிவாங்கும் நடவடிக்கையை மேற்கொண்டிருப்பதால், மேலும் நிலைமை மோசமாகக் கூடிய அபாயம் ஏற்பட்டிருக்கிறது. எனவே அரசாங்கம் உடனே தலையிட்டு நிலைமை இன்னும் சிக்கலடையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும், இதுபற்றி லயோலாக் கல்லூரி முதல்வருக்கு கூற வேண்டும் என்று இந்த மாமன்றத்தின் மூலமாகக் கேட்டுக் கொண்டு, அமைதியை நிலைநாட்ட இந்த அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*திரு. மா. சுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் நிதி அமைச்சர் மாண்புமிகு நாவுக்கரசர் அவர்கள் சமர்ப்பித்துள்ள 1977-78ம் ஆண்டுக்கான நிதிநிலையை அறிக்கையை வரவேற்றுப் பேசுகின்றபோது, என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு முன்பாக, வங்கக் கடலோரம் நீங்காத் துயில் புரியும் அமரர் பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு என் அஞ்சலியை செலுத்தி விட்டு, சின்ன சேலம் தொகுதி மக்கள் எனக்கு அளித்த வெற்றியை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களது காலடியில் நான் சமர்ப்பித்து, என்னுடைய பேச்சைத் துவக்குகிறேன்.

ஓர் அரசு, ஒரு குறிப்பிட்ட பகுதியினருக்கு என்றில்லாமல், பெருவாரியான மக்களுக்கு நன்மை தருகின்ற ஒரு திட்டத்தை தீட்டினால், அந்த அரசை நாம் ' சோஷலிச அரசு ' என்று வாழ்த்துகிறோம். அந்த அடிப்படையிலே இந்த நிதி நிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கின்ற நன்மைகள், குறிப்பிட்ட ஒரு பகுதி மக்களுக்கு என்றில்லாமல், பரவலாக எல்லா மக்களுக்கும்

[திரு. மா. சுப்பிரமணியம்] [1977 ஜுலை 30

பயன்படக்கூடிய முறையில் அமைந்திருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். இராதா அவர்கள் புள்ளி விவரங்களோடு எடுத்துப் பேசினார்கள். அதன்படி ஒரு மனிதனுக்கு அடிப்படைத் தேவைகள் என்ன என்பதை நாம பார்க்கும்போது, உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும், குடிக்கத் தண்ணீரும்தான் ஒரு மனிதனின் அடிப்படைத் தேவைகளாக இருக்கின்றன. அந்த அடிப்படைத்தேவைகளைப் பரவலாகச் செய்வதற்கு இந்த அரசு எப்படியெல்லாம் திட்டங்கள் தீட்டியிருக்கிறது என்பதை நான் விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

குடிநீர் பிரச்னையைப் பொறுத்தவரையில், இந்த அரசு ஒரு குறிப்பிட்ட நிதி எல்லையை ஏற்படுத்தாமல், எல்லா இடங்களுக்கும், எல்லா மக்களுக்கும் குடிநீர் கிடைக்க ஏற்பாடு செய்திருப்பதை நான் வரவேற்கின்றேன். இந்த நேரத்திலே இங்கே பேசிய மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர், "எங்கள் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சியிலேதான் இந்தக் குடிநீர் பிரச்னையைத் தீர்ப்பதற்காக வாரியம் அமைத்ததாகக் கூறினார்கள்." நான் அப்படி அவர்கள் வாரியம் அமைத்ததை மறுக்கவில்லை. அவர்கள் குடிநீருக்கு மட்டுமா வாரியம் அமைத்தார்கள்? வீட்டு வசதி வாரியம், குடிசை மாற்று வாரியம் என்றெல்லாம்கூட வாரியங்கள் அமைத்தார்கள். அப்படி வாரியங்கள் அமைத்து வாரிச் சுருட்டிக் கொண்டார்கள். என்றும் மேல்நிலைத் தொட்டியில் குடிநீர் வருமென்று தொட்டிகள் கட்டினார்கள். ஆனால், அங்கெல்லாம் தண்ணீருக்குப் பதில் பெரிய கொட்டை எழுத்துக்களில் கலைஞர் அவர்களின் பெயர்தான் பொறிக்கப்பட்டிருக்கின்றன என்று ஏழைமக்கள் பரவலாகப் பேசிக் கொள்கிறார்கள். அந்த நிலையை மாற்றி, ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குள், அதாவது 12 மாதங்களுக்குள் குடிநீர் பிரச்னையைத் தீர்ப்பதற்கு இந்த அரசு முயற்சி எடுத்துக் கொண்டிருப்பதை நான் மனதார வரவேற்கின்றேன். அதற்காக இந்த நிதி நிலை அறிக்கையிலே 6·5 கோடி ரூபாய் ஒதுக்கி இருப்பதை நான் வரவேற்கின்றேன். வாழ்த்துகின்றேன். இந்த முயற்சி தொடர்ந்து நடைபெற வேண்டும்; ஈடேற வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

அதே நேரத்திலே, அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த கென்னடி அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, அவர்கள் முதன்முதலாகப் பேசிய பேச்சு என் நினைவிற்கு வருகிறது. அவர், "The prospect would not be easy. All this will not be finished in the first hundred days. Nor will it be finished in the first thousand days, not in the life of this administration, nor even perhaps in our life-time on this planet. But let us being"
என்று பேசினார். அதாவது :- ஒளிமயமான எதிர்காலம் எளிதல்ல. இவைகளெல்லாம் 100 நாட்களில் முடியாமல் போகலாம். 1 000 நாட்களிலும் முடியாமல் போகலாம். நமது வாழ்நாளிலேயே முடியாமல் போகலாம். ஆனால் இன்றே ஆரம்பியுங்கள்



1977 ஜுலை 30] [திரு. மா. சுப்பிரமணியம்]

நல்லனவற்றை உடனே ஆரம்பிக்க வேண்டும். எப்பொழுது முடியும் என்று இருப்பதைவிட இப்பொழுதே துவங்கு" என்று பேசினார். அந்த அடிப்படையிலே இந்த நல்ல திட்டத்தை ஆரம்பித்திருக்கிறார்கள். கென்னடி அவர்கள் பேசிய பேச்சுக்கும் ஒருபடி மேலாகச் சென்று ஓராண்டு காலத்திலே இந்தக் குடிநீர் திட்டம் நிறைவேற்றப்படும் என்று நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருப்பதை நான் வரவேற்கிறேன்.

அதோடு, வீடு கட்டித் தரும் பிரச்னை குறித்து பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு கவிஞன் குறிப்பிட்டதாக குறிப்பிட்டார்கள் :- பாம்பு புறப்படுகிறது என்றால் புற்றிலிருந்து புறப்படுகிறது என்றும் குருவி பறக்கிறது என்றால் கூட்டிலிருந்து பறக்கிறது என்றும் ஆந்தை வெளியே வந்தது என்றால் பொந்திலிருந்து வந்தது என்றும் நண்டு வெளியே வந்தது என்றால் வளையிலிருந்து வந்தது என்றும் இப்படி பாம்புக்குப் புற்றும், குருவிக்குக் கூடும், ஆந்தைக்குப் பொந்தும் நண்டுக்கு வளையும் இருக்கிறது; ஆனால், பாழும் மனிதனுக்கு மட்டும் வாழ ஒரு இடம் இல்லையே என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் வருத்தப்பட்டார்கள். நான் ஆட்சிக்கு வந்தால் இந்தநிலைமையை மாற்றுவேன் என்று குறிப்பிட்டார்கள். அந்த அடிப்படையிலே, இங்கே அரிசன மக்களுக்கும், மீனவத் தொழிலாளிகளுக்கும் வீடுகள் கட்டித் தருவதற்காக 3·2 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியிருப்பதை நான் வரவேற்கின்றேன். இந்தத் திட்டத்தை விரைவிலே நிறைவேற்ற நாம் முயற்சி செய்ய வேண்டும். அந்த அடிப்படையிலே இந்த முயற்சியையும், அதற்கான திட்டத்தையும் நான் மிகவும் வரவேற்கின்றேன்.

அடுத்து, இங்கே மாண்புமிகு உறுப்பினர் நடராசன் அவர்கள் பேசுகின்றபோது, தஞ்சை மாவட்டம் ஒரு சோழ வளநாடு, "சோழ வளநாடு சோறுடைத்து" என்று பேசினார்கள். ஆனால் அவர்கள் அப்படிப் பேசும்போது, இன்றைக்கு அங்குள்ள மக்கள் உணவுப் பொருள்களை அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள்.

[பிற்பகல் 1–00]

இதைக் குறிப்பிடுகிற நேரத்திலே இந்த அரசு 84 லட்சம் டன் உணவு உற்பத்தியைச் செய்ய வேண்டுமென்ற இலக்கைக் கொடுத்திருக்கிறது. அந்த இலக்கை அடைவதற்கான முயற்சியினை நான் வரவேற்கின்கிறேன். அதே நேரத்தில் தஞ்சை மாவட்டத்தில் இருக்கும் விவசாயப் பெருங்குடி மக்கள், உணவு தானியங்களை உற்பத்தி செய்தும், அவர்கள் உற்பத்தி செய்கிற அளவுக்கு லாபகரமான விலையைப் பெற முடியவில்லையே, அது ஏன் என்ற நிலையை எண்ணிப் பார்க்க வேண்டும். அவர்கள் நெற்றி வியர்வை நிலத்தில் சிந்த உற்பத்தி செய்த தானியத்தை நல்ல விலைக்கு விற்க முடியவில்லை. அதற்குக் காரணம் என்ன என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இவற்றுக்கான காரணங்களைச் சிந்தித்துப் பார்க்கிறபோது நான் ஒரு குற்றச்சாட்டைப் பழைய அரசாங்கத்தின்மீது சுமத்த விரும்புகிறேன். தஞ்சை மாவட்டத்திலே உணவு தானியத்தை உற்பத்தி செய்கிற மக்கள் அந்த உணவு தானியங்களை வரி வசூல் கெடுபிடி, கடன் தொல்லைகள் போன்ற சூழ்நிலை காரணமாக குறைந்த விலைக்கு விற்பதற்கான சூழ்நிலையை ஏற்படுத்தினார்கள். அந்த நிலையில் அந்த மாவட்ட நெல் வெளி மாவட்டங்களுக்குச் செல்ல முடியாது தடை உத்தரவு போடப்பட்டிருந்தது பல ஆண்டு காலமாக. அந்த நிலை ஒவ்வொரு ஆண்டும் நீடிக்கிறது. அந்தத் தடை உத்தரவு இருக்கும் காரணத்தால் அந்த மாவட்ட நெல்லை அந்த மாவட்ட வியாபாரிகள் மட்டுந்தான் வாங்க வேண்டியிருக்கிறது. அப்படி வாங்குகிறபோது கடன் தொல்லையினாலும், வரி வசூல் கெடுபிடியினாலும் அந்த மாவட்ட வியாபாரிகளிடம் அவர்கள் உற்பத்தி செய்த நெல் முழுவதையும் விற்று விடுகிறார்கள். அந்த நெல் அத்தனையும் அந்த இடைத்தரகர்களால் கொடவுன்களில் முடக்கி வைக்கப்பட்ட பிறகு தடை உத்தரவு நீக்கப்படுகிறது. 1974ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 19ஆம் நாள் அப்படி தடை உத்தரவு நீக்கப்பட்டது. அவ்வாறு தடை உத்தரவு நீக்கப்பட்ட பிறகு அந்த அந்த மாவட்டத்து நெல் 10,000-க்கு மேற்பட்ட லாரிகளில் எறும்பு ஊர்வது போல் வரிசையாக ஊர்ந்து செல்லுகின்றன. அப்படி லாரிகளில் நெல் கடத்தப்பட்ட பிறகு அந்தத் தடை உத்தரவு திரும்பவும் போடப்படுகிறது. அவ்வாறு பத்தாயிரம் லாரிகளில் அங்கிருந்து நெல்லையும் அரிசியையும் கடத்திய காரணத்தால் இரண்டு நாட்களில் இடைத்தரகர்கள் பெற்ற லாபம் 300 கோடி ரூபாய் என்று அந்த மாவட்ட மக்கள் பேசிக் கொள்ளுகிறார்கள். அந்தப் பத்தாயிரம் லாரிகளில் சென்ற நெல் எங்கே சென்றது என்று இன்றுவரை கண்டுபிடிக்க முடியவில்லை. இதே மாமன்றத்தில் 1974ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 13ஆம் தேதி முதல் 17ஆம் தேதிவரை அதைப்பற்றி விவாதங்கள் நடந்திருக்கின்றன. அந்த நெல் எங்கே கடத்தப்பட்டது, யாரால் கடத்தப்பட்டது என்பதற்கு பழைய கோப்புகளை எடுத்துப் பரிசீலிக்க வேண்டும் என்று இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன். அந்த மாவட்டத்து மக்கள் அந்த வேதனைக்கு என்ன காரணம் என்று அறியத் துடிக்கிறார்கள் என்பதை இந்த அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்கூட ஒரு நாள் பாரதப் பிரதம அமைச்சர் மொரார்ஜி தேசாயிடமிருந்து மொழிப் பிரச்சினை சம்பந்தமாக தமிழ்நாடு முதலமைச்சருக்கு என்ன கடிதம் வந்தது என்று கேட்டார்கள். மொழிப் பிரச்சினையில் அவர்களுக்கு இருக்கும் ஆர்வத்தில், நான் கேட்க விரும்புவது பீகார் மாநிலத்தில் அரசு அலுவலகங்களில் இந்தியை மட்டுமே அமல்படுத்த வேண்டுமென்று அந்த அரசாங்கம் முயற்சி செய்ததை கேட்டு அவர்களுக்கு விளக்கம் கேட்டு கடிதம் எழுதாமல்



தமிழகத்திற்கு மட்டும் கடிதம் எழுதிய காரணம் என்ன? அது ஓர வஞ்சனையாகச் செயல்படுவது அல்லவா என்று கேட்டிருந்தால் வரவேற்றிருப்பேன்.

திரு. மு. கருணாநிதி : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பதைவிட, எதிர்க்கட்சித் தலைவராக வீற்றிருக்கிற நான் கேட்பதைவிட, இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் முதலமைச்சர் அந்தக் கேள்வியைக் கேட்டால் உறுப்பினர் கேட்பதைவிட, நான் கேட்பதைவிட அது அதிக சக்தி வாய்ந்த கேள்வியாக இருக்குமே, அப்படி முதலமைச்சர் கேட்டிருக்கலாமே, அப்படி அவர் கேட்டிருப்பாரானால் அது தமிழகத்திற்கு அதிக லாபத்தைக் தந்திருக்குமே என்ற அடிப்படையில்தான் அவரிடத்தில் விளக்கத்தைக் கேட்டேன்.

திரு. மா. சுப்பிரமணியம் : நான் இங்கே கூற விரும்புவதெல்லாம், இங்கே தமிழுக்கு, தமிழ்ச் சமுதாயத்திற்குத் தீங்கு ஒன்று வருமானால் இந்த உயிரையும் துச்சமாக மதித்து என்று கூறினார்கள், அது உண்மையானால் அவர்கள் இந்தக் கேள்வியை, ஓரவஞ்சனையாகச் செயல்படுகிறார்கள் என்ற நிலைமையை எழுப்பியிருப்பார்களானால்..........

திரு. மு. கருணாநிதி : பிரதமர் மொரார்ஜி அவர்கள் முதலருக்கு எழுதிய கடிதத்தில் தமிழுக்குக் கேடு வருகின்ற நிலை தெரிவிக்கப்பட்டிருக்குமானால், இந்தி திணிக்கப்படுவதில் உறுதியாக இருக்கிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டிருக்குமானால், கவர்னர் உரையிலே இருமொழிக் கொள்கையை வலியுறுத்தியது தவறு என்று குறிப்பிட்டு இருப்பார்களானால் நிச்சயமாகச் சொல்கிறேன், திராவிட முன்னேற்றக் கழகம் ஆளுங் கட்சியோடு சேர்ந்து போராடும் என்பதை இப்போதும் சொல்லிக்கொள்கிறேன். ஆனால், இருக்கிற சங்கடமே முதல்வர் அந்தக் கடிதத்தை இன்னும் வெளியிடாமல் வைத்திருக்கிறார்கள் என்பதுதான்.

திரு. மா. சுப்பிரமணியம் : இந்த மாமன்றத்திலே எதிர் கட்சித் தலைவர் அவர்கள், இங்கே புரட்சித் தலைவர் அவர்கள் இரட்டைக் குழல் துப்பாக்கி........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்தக் கடிதத்தைப் பற்றிய பிரச்சினையை விட்டு விட்டு வேறு பிரச்னையைப் பற்றி பேசுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மா. சுப்பிரமணியம் : இந்த நிதிநிலை அறிக்கையிலே எவையெவை முக்கியமானவையோ அவற்றை வலியுறுத்திக் குறிப்பிடுகின்ற சூழ்நிலையில்தான் நான் கூறினேன். இந்த நிதி

நிலை அறிக்கையிலே என்ன புரட்சி இருக்கிறது, என்ன புதுமை இருக்கிறது என்றெல்லாம் இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் கேட்டார்கள். நான் அவர்களுக்கெல்லாம் இந்த நிதிநிலை அறிக்கையிலே என்ன புரட்சி இருக்கிறது, என்ன புதுமை இருக்கிறது என்று கேட்டவர்களுக்கெல்லாம் அந்தப் புரட்சியையும் புதுமையையும் பற்றி சில நாளேடுகளில் வந்திருக்கின்ற செய்திகளை நான் பேரவைத் துணைத் தலைவரின் அனுமதியோடு குறிப்பிடலாம் என்று நினைக்கிறேன். 'மெயில்' நாளேட்டிலே A Welfare Budget என்ற தலைப்புக் கொடுத்து,

'' Those who have chosen to describe the Tamil Nadu Budget as disappointing are looking at it with coloured glasses. Finance Minister Manoharan has sought to do a grand job, but if he had not been able to do so quately, it is because of the inherent weakness so far as Tamil Nadu is concerned.

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த அடிப்படையிலே பத்திரிகைகள் நிதிநிலை அறிக்கையைப்பற்றி விமரிசித்திருந்தாலும், இங்கே பேசிய சில மாண்புமிகு உறுப்பினர்கள் இதை வரவேற்றுப் பேசாமல் இதிலே என்ன புரட்சி இருக்கிறது, என்ன புதுமை இருக்கிறது என்று திரும்பத் திரும்பக் கேட்டிருக்கிறார்கள். நான் அவர்களுக்கெல்லாம் இப்போது எதிர் கட்சித் தலைவராக இருப்பவர் நிதியமைச்சராக இருந்தபோது இந்த மாமன்றத்திலே நிதிநிலை அறிக்கையைச் சமர்பித்தபோது அதன்மீது நடந்த பொது விவாதத்தின்போது என்ன கூறினார்கள் என்பதைப் படித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன். நான் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் அனுமதியோடு இதைப் படிக்கிறேன்''

''இந்த விவாதத்திலே கலந்துகொண்டு உரையாற்றிய உறுப்பினர்களில் பலர் உள்ளபடியே இந்த நிதிநிலை அறிக்கை தங்களுடைய உள்ளத்துக்கு மகிழ்ச்சி அளிக்கிறது என்பதை அவர்களுடைய மனச்சாட்சியே கூறினாலும், இந்த மன்றத்திலே அவர்கள் எதிர்கட்சி வரிசையிலே அமர்ந்து இருக்கின்ற காரணத்தால், எதிர்த்துத் தீர வேண்டிய அவசியத்திற்கு ஆளானார்கள் என்பதையும் நான் மறந்துவிடவில்லை. –இதிலே புரட்சி எதுவுமே இல்லை, புதுமை எதுவுமே இல்லை என்று பத்திரிகைக்குத் தலைப்புச் செய்தியை முதலில் கொடுத்துவிட்டு, நம்முடைய மாண்புமிகு திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் தன்னுடைய உரையைத் தொடங்கினார்கள். இதிலே புரட்சியும் புதுமையும் இருக்கிறதா இல்லையா என்பதை இந்த அறிக்கையிலே சுட்டிக் காட்டப்பட்டிருக்கிற திட்டங்கள் நடைமுறைக்கு வருகின்ற நேரத்திலேதான் தெரியுமே அல்லாமல், நாம் நிதிநிலை அறிக்கையைப் படித்து



முடிந்ததும், உடனடியாக இந்த மாமன்றம் தலைகீழாகச் சுழன்று ஒரு பெரிய புரட்சிகரமாக மாறும் என்று நானும் எண்ணவில்லை. மாண்புமிகு பொன்னப்ப நாடார் அவர்களும் எண்ணியிருக்கமாட்டார்கள் என்றே நான் கருதுகிறேன்.''

என்று இன்றைக்கு எதிர்க் கட்சித் தலைவராக இருக்கின்றவர் அன்று நிதியமைச்சராக பொறுப்பேற்று இருந்த நேரத்திலே முதல் ஆண்டிலே பேசிய கருத்துக்களை நான் இந்த நிதிநிலை அறிக்கையைப்பற்றிக் குறை சொன்னவர்களுக்குப் பதிலாக வைத்து இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்கள் அமல்படுத்தப்படுகிற நேரத்திலே பெருவாரியான மக்களுக்குப் புதுமையான பல மாற்றங்கள் ஏற்படுத்தப் போகிறது என்று கூறி இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்றுப் பேசுவதற்கு வாய்ப்பளித்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைக் கூறி அமைகிறேன். வணக்கம்.

*<u>திரு. பி. எஸ். திருவேங்கடம் :</u> பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1977-78ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களை நான் இங்கே சொல்ல விழைகிறேன். தேர்தல் காலத்திலே ஆளுங்கட்சியினர் கிராமங்களிலே உள்ள விவசாயிகளுக்கு எல்லாம் மின்சாரக் கட்டணத்தைக் குறைப்போம் என்று சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு கிராமங்களிலே உள்ள விவசாயிகள் ஆட்சியினர் மின்சாரக் கட்டணத்தைக் குறைப்பார்கள் என்று நம்பிக்கையோடு எதிர்பார்த்த நேரத்திலே நிதிநிலை அறிக்கையிலே அது குறிக்கப்படாத காரணத்தால் இன்றைக்கு அவர்கள் பெருத்த ஏமாற்றம் அடைந்திருக்கிறார்கள் என்பதைத் தங்கள் மூலமாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதனால் இன்றைய தினம் விவசாயிகள் எல்லாம் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள்.

[பிற்பகல் 1–10]

நான்காண்டுக் காலமாக குறிப்பாக திருவண்ணாமலை கோட்டத்திலுள்ள என்னுடைய தொகுதியான கலசப்பாக்கம் தொகுதியில் பருவ மழை தவறியிருக்கிறது. இந்த நேரத்தில் குடிக்கக்கூட தண்ணீர் இல்லாத ஒரு நிலை அந்தப் பகுதியில் ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் உங்கள் மூலம் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இதைப்பற்றி எடுத்துச் சொல்கின்ற நேரத்தில் ஆளுங்கட்சித் தரப்பிலேயிருந்து, நாங்கள் பதவிக்கு வந்து ஒரு மாதம்தான் ஆகிறது, ஏன் முந்திய அரசு செய்யவில்லை என்று கேட்கிறார்கள். முந்திய அரசு இப்படிப்பட்ட வறட்சிக் காலங்களில் ஏராளமான பணத்தை ஒதுக்கி கிணறுகளை ஆழப்படுத்தினார்கள், ஆங்காங்கு குழாய்க் கிணறுகளையெல்லாம் அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு வறட்சி அதிகமாக இருக்கின்ற

காரணத்தினாலே இன்னும் கிணறுகளை ஆழப்படுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதே போன்று போடப்பட்ட குழாய்கள் ரிப்பேராகி இருக்கின்றன. சமீபத்தில் ஆளுநரின் ஆட்சியின்பொழுது அந்தக் குழாய்களைப் பழுது பார்க்கின்ற பொறுப்பு ஊராட்சி மன்றத்திற்கு இருந்ததை குடிநீர் வாரியத்திடம் ஒப்படைத்திருக்கிறார்கள். அந்த அதிகாரிகள் அதைக் கவனிக்காத காரணத்தினால் ஒரு குழாய் அமைக்கப்படுகின்ற நேரத்தில் அரசுக்கு 10,000 ரூபாய் செலவாகின்றது. கிராமங்களிலே குடிமக்களுடைய குடி தண்ணீர்ப் பிரச்னைகளை முக்கியமாகக் கருதி அந்தக் குழாய்கள் அமைக்கப்பட்டிருந்தாலும் இன்றைய தினம் அவைகள் பழுதடைந்து பல்வேறு கிராமங்களில் குடிப்பதற்குக்கூட தண்ணீர் இல்லாத ஒரு நிலைமை இருக்கிறது. அரசுப் பொறுப்பேற்றிருக்கின்ற ஆளுங்கட்சியினர் அவைகளிலே மெத்தனமாக இருக்காமல் சுறுசுறுப்போடு கிராமங்களிலே உள்ள குடி தண்ணீர்ப் பிரச்னையைத் தீர்க்க வேண்டுமென்று இந்த நேரத்திலே உங்கள் மூலமாகப் பணிவன்போடு தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதே போன்று இன்றையதினம் விவசாயிகள் புதிது புதிதாக விவசாயத்திற்கு மின் இணைப்பைக் கேட்டு மின்சார வாரியத்தை அணுகும் நேரத்தில் நில நீர்க் கோட்டப் பொறியாளரின் சான்றிதழ் பெற்றுவர வேண்டுமென்று வற்புறுத்தப்படுகிறது என்பதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். ஒவ்வொரு கிராமத்திலும் இருக்கின்ற விவசாயி மின்சார வாரியத்தை அணுகி, அங்கிருக்கின்ற அதிகாரிகளை அணுகி இணைப்பு கேட்கின்ற நேரத்தில் அவர்கள் நில நீர் கோட்டப் பொறியாளரிடத்திலிருந்து சான்றிதழ் பெற்று வர வேண்டுமென்றால் அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அளவில் சென்று ஒவ்வொரு விவசாயியும் பெற்று வருவது மெத்த சிரமமான காரியம் என்பதைச் சொல்லி அப்படிப்பட்ட உத்தரவை ரத்து செய்து விவசாயிகளுடைய சிரமங்களைப் போக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் அரசைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதே பேன்று விவசாயிகளுக்கு முந்தைய அரசு எத்தனையோ திட்டங்களைச் செய்து வந்தது. இங்குகூட பல மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள், நெல் விதைகளுக்கு கருணா, பத்மா என்று பல பெயர்களை விளம்பரப்படுத்தியதாகக் கூறினார்கள். ஒன்றை மட்டும் இங்கிருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் உணர வேண்டும். முந்தைய அரசு பேரறிஞர் அண்ணா தலைமையிலே இயங்கிய காலத்திலேயும், கலைஞர் தலைமையிலே இயங்கிய காலத்திலேயும் வேளாண்மைத் துறையில் அதிகமான கவனத்தைச் செலுத்தியது என்பதை யாரும் மறுக்க





இயலாது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். வேளாண்மைக்கு அதிகமான முக்கியத்துவம் கொடுத்து, விவசாயிகளுடைய கவனத்தையெல்லாம் ஈர்த்து, இப்படிப்பட்ட பொறுக்கு விதைகளைக் கொடுத்து விவசாயிகளுக்கு நெல்லுக்கு போனஸ் திட்டங்களை அறிவித்து ஊக்குவித்ததன் காரணமாக, ஆளுநர் காலத்திலும், இன்றைய தினம் அரசுப் பொறுப்பேற்றிருக்கின்ற காலத்திலும் உணவு நிலைமை சீராக இருக்கிறது என்பதை ஒத்துக்கொள்ள வேண்டுமென்று பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த நேரத்தில் நெல்லுக்குப் போதிய விலை இல்லை என்பதை நம்முடைய பேரவைத் தலைவரவர்களின் மூலமாக அரசுக்குத் தெரிவித்து அவர்களுக்கு வழங்கி வந்த போனஸ் திட்டத்தை மறுபடியும் வழங்க வேண்டுமென்று நான் மெத்தப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல உரத்தின் விலையை மத்திய அரசாங்கம் உயர்த்தியிருந்தாலும் மாநில அரசு உரத்தினுடைய விலையைக் குறைக்காவிட்டாலும், அதற்கு ஒரு மானியமாவது தந்து விவசாயிகளை ஊக்குவிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் அரசைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று முந்திய அரசு கிராமச் சாலை திட்டத்தின் கீழ் ஏராளமான பணத்தை ஒதுக்கி, 1,500 மக்கள் தொகை கொண்ட இடங்களுக்கு தார்ச்சாலை போடும் திட்டத்தைச் செயல்படுத்தி வந்தார்கள். அதைத் தொடர்ந்து நடத்துவதோடு அல்லாமல் அதை நல்ல முறையிலே நடத்த வேண்டுமென்று நான் அரசைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அதே போன்று, கிராமங்களில், அரசு சாலை அமைத்திருக்கிறது. சாலை அமைத்து முடிந்ததற்குப் பிறகு அதைப் பராமரிக்கின்ற பணியை ஊராட்சிகளிடம் ஒப்படைத்து விடுகிறார்கள். ஊராட்சிகளுக்குப் போதிய நிதியில்லாத காரணத்தால், அந்தச் சாலைகளையெல்லாம் சரியாகப் பராமரிக்க முடியாத நிலையில் சாலைகள் பாழடைந்து விடுகின்ற சூழ்நிலை ஏற்பட்டு விடுகின்றது.

நம்முடைய அரசு, கிராமங்களிலே உள்ள சாலைகளில் குறிப்பிட்ட தூரம்தான் ஊராட்சிகள் பராமரிக்க வேண்டுமென்ற வகையில் பணியை ஒப்படைக்க வேண்டும். அதே போன்று குறிப்பிட்ட தூரம்தான் ஊராட்சி ஒன்றியங்கள் சாலைகளைப் பராமரிக்க வேண்டும் என்று குறிப்பிட வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு, நல்ல முறையிலே சாலைகளைப் பராமரிக்க வேண்டு மென்று அரசை நான் மெத்த வற்புறுத்தி இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைய தினம், கிராமங்களிலே பஸ்கள் விட வழி வகைகளைக் காண்கிறோம் என்று சொல்லும்போது அந்தத் திட்டத்தை நான் வரவேற்கிறேன். ஏற்கெனவே, கிராமங்

[திரு. பி. எஸ். திருவேங்கடம்] [1977 ஜூலை 30

களிலே பல்வேறு மார்க்கங்களை மாவட்ட ஆட்சித் தலைவர்
அவர்கள் திறந்து புதிய பஸ்கள் விடுகின்றார்கள்,
பஸ்ஸை விட்டாலும், எனக்கு முன் பேசிய ஆளுங்கட்சி உறுப்பினர்
குறிப்பிட்டார், நட்டம் ஏற்படுகிறது. அதனால் பஸ் உரிமை
யாளர்கள் பஸ்களை விடுவதில்லையென்று, அதுபோல், பஸ்
விடுவதில்லை. ஆகவே பொதுமக்கள் கஷ்டத்திற்கு உள்ளாகின்றார்
கள். அதற்கு அரசு ஒரு நல்ல வழியைக் காணலாம். பஸ்கள்
செல்லுகின்ற சாலையை இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.
ஒன்று அதிகமாக வருவாய் வருகின்ற பாதைகளில் உள்ள
வரியை உயர்த்தி, வருவாய்க் குறைவாக இருக்கிற மார்க்
கங்களில் வரியைக் குறைத்து, பஸ் ஓனர்களுடைய நட்டத்தைக்
குறைத்தால், கிராமங்களிலே பஸ்கள் தவறாமல் செல்லும், பொது
மக்களுடைய கோரிக்கைகள் நிறைவேறும், குறைகள் தீரும் என்று
இந்த நேரத்திலே அரசுக்கு என்னுடைய கருத்தாகச் சொல்ல
விரும்புகிறேன்.

அதே போன்று, என்னுடைய கலசப்பாக்கம் தொகுதியில்
உள்ள ஜவ்வாது மலையிலும் அங்கே இருக்கிற மலைவாழ் மக்களுக்
காக தனி ஊராட்சி ஒன்றியம் ஒன்று அமைக்கப்பட வேண்டு
மென்று சொல்லி, மாவட்ட வளர்ச்சிமன்றக் கூட்டங்களில் அதற்
கான தீர்மானங்களை நிறைவேற்றினார்கள். ஆகவே, ஊராட்சி
ஒன்றியத் தேர்தல் நடைபெறுவதற்கு முன்னாலே, ஜவ்வாது மலை
யிலே வாழ்கின்ற மலைவாழ் மக்களுக்காகத் தனி ஊராட்சி
ஒன்றியம் அமைத்துத் தரவேண்டுமென்று தாழ்மையாகக்
கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலுள்ள ஜவ்வாது மலையில் ஜமுனா
மாத்தூர் என்ற கிராமத்திலே மலைவாழ் மக்களுக்காக, வனத்
துறை சார்பாக, உயர்நிலைப்பள்ளி ஒன்று 1968 லேயிருந்து நடத்
தப்பட்டு வருகின்றது. அந்த உயர்நிலைப்பள்ளியில் மலைவாழ் மக்
களைச் சேர்ந்த 28 ஆரம்பப் பாடசாலையைச் சேர்ந்த மாணவர்கள்
பயில்கின்றார்கள். ஆனால், என்ன காரணத்தாலோ அங்கு பணி
புரிகின்ற ஆசிரியர்கள் பணியில் நிரந்தரப் படுத்தப்படாமலும்
ஊதிய உயர்வு அளிக்கப்படாமலும் இருக்கிறது என்பதை இந்த
நேரத்திலே அரசின் கவனத்திற்குக்கொண்டு வந்து, அங்கே அந்த
பள்ளியில் பணிபுரிகின்ற ஆசிரியர்களை நிரந்தரமாக்க வேண்டு
மென்றும், அவர்களுக்கு ஊதிய உயர்வு கொடுக்கவேண்டு
மென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

போளூர் வட்டாரத்திலே ஒரு சர்க்கரை ஆலை வேண்டு
மென்று பல்லாண்டுகாலமாக விவசாயப் பெருமக்கள் கேட்டுக்
கொண்டிருக்கிறார்கள். அதனை, போளூர் வட்டத்திலே அமைந்
திருக்கிற கலசப்பாக்கத்திலே அமைத்துத் தரவேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.



1977 ஜூலை 30] [திரு. பி. எஸ். திருவேங்கடம்]

வட ஆற்காடு மாவட்டம் பெரிய மாவட்டமாக இருக்கிற காரணத்தால், அதனை இரண்டாகப் பிரித்து, திருவண்ணாமலையைத் தலைநகரமாக அமைத்து, ஒரு மாவட்டத்தை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டு, நன்றி கூறி விடை பெறுகிறேன், நன்றி, வணக்கம்.

* திரு. கு. அ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1977-78-ம் ஆண்டு இந்தக் குறுகிய காலத்தில் இவ்வளவு சிறப்புமிக்க ஓர் அறிக்கையை தயாரித்த நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சருக்கு முதற்கண் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக, என்னுடைய தொகுதிக்குப் பக்கத்திலே இருக்கிற ஈரோட்டிலே ரூ. 3 இலட்சத்தில் ஒரு பால் பண்ணையை நிறுவுவதற்காக அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது என்று சொன்னால், அந்தப் பகுதியிலே இருக்கிற ஏறத்தாழ 5 இலட்சம் மக்கள் பால் வளத்தால் நன்மை பெறமுடியும் என்பதையும் அதே நேரத்தில் படித்து பட்டம் பெற்ற ,வேலையில்லாமலிருக்கிற நண்பர்களுக்கும், இரண்டாயிரத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்பதையும் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 1-20)

அதுமட்டுமல்ல. மின் இணைப்புத்·திட்டத்திற்காக முந்தைய ஆண்டில் 14 கோடியாக இருந்ததை இப்போது 28.5 கோடியாக உயர்த்தி இருக்கிறார்கள். குறிப்பாக ஏழை எளிய விவசாயிகள் தங்களுடைய நிலத்திலே இருக்கிற நீரை வெளியே எடுக்கச் செலவு செய்கிறபோது—குறிப்பாக ஆயில் இன்ஜின் மூலமாக செலவு செய்கிறபோது—செலவு அதிகமாகிறது. அப்படிப்பட்ட நிலைமை இருக்கக் கூடாது என்பதற்காகத்தான் நம்முடைய அரசு 2 மடங்காக அந்த நிதியை உயர்த்தி மின் இணைப்புத் திட்டத்திற்கு ஒதுக்கியிருக்கிறார்கள். அப்படி இருக்கிற காரணத்தினாலே எல்லா பகுதியிலேயும் இருக்கிற விவசாயிகளுக்கு நல்ல முறையில் மின் இணைப்பு கிடைக்கும் என்று தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தொழில் அபிவிருத்தியில் முந்தைய அரசு 4 ஆயிரம் தொழிற்சாலைகளை நிறுவ திட்டம் ஏற்படுத்தியிருந்தது. இந்த ஆண்டு நம்முடைய அரசு 10 ஆயிரம் சிறு தொழிற்சாலைகளை நிறுவுவதற்கு திட்டம் தீட்டப்படுகிறது. சிறு விவசாயிகள் இருக்கிறவர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லாமல் இருக்கிறவர்களுக்கு இந்தத் தொழிற்சாலைகளில் வேலை வாய்ப்புத் தரும் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[திரு. கு. அ. செங்கோட்டையன்] [1977 ஜூலை 30

அதே நேரத்தில் சமுதாய நலப்பணி என்கின்ற அடிப்படையில்
குடிநீர் வசதி, கல்வி வசதி, சுகாதார வசதி, வீட்டு வசதி
போக்குவரத்து வசதி ஆகிய திட்டங்களை நம்முடைய அரசு
செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். என்
னுடைய தாளவாடி தொகுதியிலும், அதன் பக்கத்திலே உள்ள
கிராம பகுதியைப் பொருத்தவரையிலும் அங்கு வாழ்கிற மக்கள்
எந்தச் சலுகையுமே பெருமல் மலைவாழும் மக்கள் கஷ்டப்பட்டுக்
கொண்டிருக்கிருர்கள். அவர்களுக்குச் சுகாதார வசதி கிடையாது:
கல்வி வசநி கிடையாது மருத்துவ வசதி கிடையாது.
இப்படி அவர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டி
ருக்கிருர்கள். தாளவாடி பகுதியில் 27,000 . பேர்
இருக்கிருர்கள். அந்த மக்களுக்குச் சுகாதார வசதிகள்
இருக்கின்றனவா என்ருல் இல்லை. அவர்கள் கிட்டத்தட்ட 20
மைல் சுற்றளவிலுள்ள மக்கள் தாளவாடி மருத்துவ மனைக்குத்தான்
வந்து சிகிச்சை பெறமுடியும். அங்கேயும் மருத்துவ வசதி
நல்ல முறையில் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன். தூக்கநாக்கியன்பாளையம் ஊராட்சி ஒன்றியத்தைச்
சேர்ந்த பகுதிகளிலும், மேலும் குன்றி கூத்தியாளத்தூர் போன்ற
பகுதிகளிலும் அடர்ந்த காடுகள் இருக்கின்றன. அங்கு ரோடு
வசதி இல்லை. மக்கள் அவதிப்பட்டுக்கொண்டிருக்கிருர்கள்.
அங்கே அடர்ந்த காடுகளில் நடந்தே செல்லுகிருர்கள். பஸ்
வசதி இல்லை. குடிநீர் வசதியில்லை. கல்விச்சாலைகள் இல்லை.
இதுபோன்ற எந்தத் திட்டமும் இதுவரையில் இருந்த எந்த
அரசாங்கத்தாலும் அந்த மலைவாழ் மக்களுக்குச்செய்யப்படவில்லை.
பின்தங்கிய மக்களுக்கு அரசு தனிக் கவனம் செலுத்த வேண்டு
மென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

விவசாயிகளுக்கு வரியைக் குறைத்திருக்கிறீர்கள். 12லிருந்து
10 ஆகவும், 10லிருந்து 8 ஆகவும், 20லிருந்து 15 ஆகவும் அரசு
குறைத்திருக்கிறது. ஏக்கருக்கு எவ்வளவு குறைத்தார்கள்? ஒரு
ஏக்கருக்கு எவ்வளவு ரூபாய் செலுத்தப்படவேண்டும் என்பது
எல்லாகிராமங்களிலுமிருக்கும்பின்தங்கியவிவசாயிகளுக்குத் தெரிய
வில்லை. அங்கே உள்ள கிராம அதிகாரிகள் வி. எம்., கர்ணம்
பணத்தை வாங்கிக் கொள்கிருர்களே தவிர, ஒரு ஏக்கருக்கு
எவ்வளவு கந்தாயம் செலுத்தவேண்டும் என்பதைச் சொல்வது
இல்லை. இந்த நிலையை மாற்றுகின்ற வகையில் அரசு தனிக்
கவனம் செலுத்தி ஒரு ஏக்கருக்கு குறைக்கப்பட்டு உள்ளது எவ்
வளவு என்பதைக் கிராமங்களில் விளம்பரம் மூலம் தெரிவித்தால்
நலமாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்:

பழங்குடியினர், அரிசனக் குடிமக்கள், மீனவர்கள் ஆகியோர்
பிள்ளைகளுக்குப் புத்தகங்கள் வாங்கவும் அவர்கள் பள்ளி
இறுதி வகுப்பு பயிலும் வரை இலவசமாகப் புத்தகங்கள் வழங்
குவதும் சிறப்புக் கட்டணங்களையும தேர்வு கட்டணங்களையும்



1977 ஜூலை 30] [திரு. கு. அ. செங்கோட்டையன்]

ரத்து செய்து இருப்பதை நான் வரவேற்கிறேன்
ஏன் என்று சொன்ருல், அரிசன மக்கள், பின்தங்கிய மக்கள்
அங்கே இருக்கின்றவர்கள் 10 சத வீதம் கூட கிராமப்புறங்களில்
இருப்பவர்கள் கல்வி கற்ற நிலையில் இல்லை. அவர்களுக்கு இது
வரையிலும் இருந்த அரசாங்கம் தனிக் கவனம் செலுத்தாமல்
இருந்ததால் அவர்கள் பின்தங்கிய நிலையிலேயே இருக்கிருர்கள்:
பின்தங்கிய நிலை என்று சொன்ருல். அங்கே இருக்கும் அரிசன
மக்கள் எல்லாம் இன்றைய தினம் எந்த அளவுக்கு இருக்கிருர்கள்
என்று சொல்லப்போனுல், அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை
எந்த முறையிலும் உயர்த்தாத அளவிற்கு இருக்கிறது. அந்த
நிலையை இந்த அரசு மாற்றி அமைக்கவேண்டுமென்று நான்
இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, இப்படிப்பட்ட
நல்ல பல திட்டங்களை இருக்கிற நிதிநிலை அறிக்கையில் நம்முடைய
அரசு தந்ததற்காக நம்முடைய அரசுக்கும், நிதி அமைச்சருக்கும்,
என்னுடைய நன்றியை தெரிவித்து வணக்கத்தைத் [illegible]றி வி[illegible]
பெறுகிறேன். நன்றி. வணக்கம்.

## (2) அறிவிப்புகள் (தொட[illegible]சி)

### (இ) எதிர்க்கட்சித் தலைவருக்குச் ச[illegible]கைகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு கலைஞர் கரு[illegible]நிதி அவர்
கள் இந்த அவையில் எதிர்க் கட்சித் தலைவராக ஏ[illegible]கொள்ளப்
பட்டு, அவ்வாறு இயங்கி வருகிருர். அவருக்கு த[illegible]ழ் நாடு
உறுப்பினர்கள் சம்பளம் வழங்கும் சட்டத்தின் கீழ் (Tamil Nadu
Payment of Salaries Act) உள்ள சலுகைகளுடன், கீழ்க்கண்ட
சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன:—

சலுகைகளாவன :

1. ஒரு சுருக்கெழுத்தாளருக்குப் பதிலாக அதை உயர்த்தி
ஒரு நிருபரை அவர் கேட்டதற்கு இணங்கக் கொடுக்கப்பட்டுள்ளது

2. ஓர் ஊர்தியும், மாதம் 1-க்கு 100 லிட்டர் பெட்ரோலும்
அவ்வூர்திக்கான ஓர் ஓட்டுநரும் கொடுக்கப்பட்டுள்ளது.

3. வீட்டில் ஒரு தொலைபேசியும், தொலைதூர டிரங்க் கால்
களுக்கு மாதம் 1-க்கு ரூ. 100-ம் வழங்கப்பட்டுள்ளது.

4. கடைநிலை ஊழியர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளது.

5. கோட்டையில் ஒரு அலுவலக அறை ஒதுக்கப்பட்டுள்ளது.

சம்பள வசதிகளை அவர் 1977-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 8-ஆம் தேதி முதல் அதாவது ஆளுநர் உரைக்கான முதல் கூட்டத்திலிருந்து அவர் பெற உரிமை பெறுகிறார் என்றும் அதற்குண்டான உத்திரவுகள் சம்பளம் வழங்கும் அலுவலகத்திற்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றது. 1977ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 1-ஆம் தேதி திங்கட்கிழமை காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-28க்கு ஒத்திவைக்கப்பட்டது.

### (5) பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### A. *Statutory Rules and orders.*

13. Notification issued in G.O. Ms. No. 910, Commercial Taxes and Religious Endowments, dated the 13th May 1977 in regard to the exemption in respect of the tax payable by the Victoria Technical Institute, Anna Salai, Madras under the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959) on the sales of goods on order made by the South Korean Ambassador at New Delhi, during his visit to Madras in November 1976, and supplied to him later in March 1977. (Laid on the Table of the House under section 53(5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).

### B. *Reports, Notifications and other papers.*

**NIL.**

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

### திங்கட்கிழமை, 1977, ஆகஸ்ட் 1.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

*Premier Electro Fabricator Industry, Red Hills.*

*5Q.—THIRU K. SUPPU : Will the Hon. the Minister for Labour be pleased to state :

(*a*) whether the Government are aware that the 'Premier Electro Fabricator' Industry near Red Hills remains closed for the past three months ; and

(*b*) if so, the steps taken by the Government to give relief to the affected workers ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம் 1977ஆம் ஆண்டு மே மாதம் 20ஆம் தேதியிலிருந்து இத்தொழிற்சாலை மூடப்பட்டுள்ளது.

(இ) தொழிலாளர் நல உதவி ஆணையாளர் இரு தரப்பினரையும் வைத்து சமரசப் பேச்சுவார்த்தைகள் நடத்தினார். உடன்பாடு எதுவும் ஏற்பட இயலாமையால் பேச்சு முறிவு அறிக்கை ஒன்றை அவர் அனுப்பியுள்ளார். இந்தப் பிரச்சினை 22—7—77ஆம் நாளிட்ட அரசு ஆணையில் நடுவர் தீர்ப்புக்காக சென்னை தொழிலாளர் நீதிமன்றத்திற்கு விடப்பட்டுள்ளது.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்சாலை 3 மாத காலமாக மூடப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஏற்கனவே கோர்ட்டுக்குப் போய்

தீர்ப்பாகி வருவது என்றால் காலதாமதம் ஆகும். அதனால் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அத்தொழிற்சாலையை உடனடியாக திறக்க நடவடிக்கை எடுக்கப்படுவதோடு, பாதிக்கப்பட்டிருப்பவர்களுக்கு நிவாரணம் அளிக்க ஏற்பாடு செய்வார்களா? இப்போது ஏதாவது நிவாரணம் அளிக்கப்படுகிறதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இந்தத் தொழிற்சாலையை மூடியது 1977-ம் ஆண்டு மே மாதம் 20-ம் தேதி. மூடிய தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்கு எல்லாம் நிவாரணம் கொடுப்பது என்றால் அதற்குப் பெரிய நிதி வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மத்திய அரசிடம் இருந்து அதை வாங்கிக் கொடுத்தால் அதற்கு ஏற்பாடு செய்யலாம்.

திரு. க. அன்பழகன் : அமைச்சர் அவர்கள் விடை அளித்த முறையில் ஒரு கேள்வி கேட்க விரும்புவதால் தாங்கள் அனுமதிப்பீர்கள் என்று கருதுகிறேன். பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு அரசாங்கம் நிவாரணம் அளிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்கிற கேள்விக்கு, மாண்புமிகு உறுப்பினர் மத்திய அரசிடம் இருந்து நிதி வாங்கிக் கொடுத்தால் ஏற்பாடு செய்யலாம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியென்றால் மத்திய அரசிடம் இருந்து நிதி வாங்குவதற்கு, அவருக்கு அமைச்சர் பதவி அளிக்க உத்திரவாதம் அளிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இந்த யோசனையைச் சொல்லியிருக்கமாட்டேன். முன்பு ஆட்சி புரிந்தவர்கள்

* * * *

காரணத்தினால் இதைச் சொல்ல வேண்டிய துர்ப்பாக்கியம் ஏற்பட்டது.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவர் அவர்களே, திரு. அன்பழகன் குறிப்பிட்ட யோசனைப்படி கட்சி தாவுகிற அளவு அந்த உறுப்பினர் இருக்கமாட்டார் என்று சொல்ல விரும்புகிறேன்.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சியைச் சார்ந்த உறுப்பினர் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு அரசு நிவாரணம் அளிக்குமா என்று கேட்கிறார். இதுபோன்று தொழிலாளர்கள் பாதிக்கப்பட்ட நிலையில் மாநில அரசு தொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்கியிருப்பது வரலாற்றில் இருக்கிறது. அப்படி தொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்கப்படுமா என்று உறுப்பினர் கேட்கிறார் என்றால் அதற்குப் பதிலாக, 'மாண்புமிகு

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க முற்பகல் 9-00—9-05-இல் சில வரிகள் அகற்றப் பெற்றன.





உறுப்பினர் அவர்கள் மத்திய அரசிடம் இருந்து அதை வாங்கிக் கொடுத்தால் அதற்கு ஏற்பாடு செய்யலாம்' என்று அமைச்சர் பதிலளிப்பது, பொருத்தமான விடைதானா என்பதை ஆளுங் கட்சியைச் சார்ந்த அவை முன்னவர் எண்ணிப்பார்ப்பார்களா என்று கேள்வியாகக் கேட்கிறேன்.

(பதில் இல்லை).

திரு. ஏ. உமாநாத் : சபாநாயகர் அவர்களே, இப்படி அடிக்கடி ஏற்படும் தொழில் சச்சரவுகளை, விவாதித்து முடிந்த அளவிற்குத் தீர்ப்பதற்கு முத்தரப்புக் கமிட்டிகள் (ட்ரைபார்ட்டைட் கமிட்டி) அமைப்பதுண்டு. மத்திய சர்க்காரிலும் அப்படிப்பட்ட கமிட்டி அமைக்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட முத்தரப்புக் கமிட்டிகளை அமைத்து தகராறுகளுக்குப் பைசல் காண்பதோடு, லேபர் அட்வைசரி கமிட்டி அமைக்கும் யோசனை உண்டா? உண்டு என்றால் எப்போது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, காம்ப்ரெஹென்சிவ் (Comprehensive) லேபர் லெஜிஸ்லேஷன் மத்திய அரசால் ஏற்படுத்தப்பட, 'இண்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட்'' போன்றவைகளைத் திருத்தம் செய்வதற்கு ஒரு குழு அமைக்கப்பட்டு, அது சம்பந்தமாக நமது மாநில தொழிலாளர் நல இயக்குநர் அவர்கள் டெல்லி சென்றிருக்கிறார்கள். அதுபோன்று தொழிலாளர் சம்பந்தமான சட்டங்களை முறையாக திருத்தம் செய்யும் நடவடிக்கைகளை நாம் மேற்கொள்கிறபோது திரு. உமாநாத் போன்றவர்களைக் கலந்தே செய்வோம். நான் முன்பே இந்த மன்றத்தில் சொன்னதுபோல, இந்த சட்டமன்றத் தொடர் கூட்டம் முடிந்த பிறகு முக்கியமான தொழிலாளர்களது தலைவர்களை எல்லாம் அழைத்து கலந்துபேசி, அவர்களது ஆலோசனைகளை ஏற்று, பிறகு இங்கே தக்க தொழிலாளர் நல சட்டங்களைத் திருத்த வகை செய்யலாம். ''லேபர் அட்வைசரி போர்டு'' ஏற்கனவே இருக்கிறது. அது ஒரு கன்சல்டேடிவ் குழுமாதிரிதான் திரு. உமாநாத் அவர்கள் கூறிய யோசனைகள் கருத்தில் கொள்ளப்படும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

திரு. ப. உ. சண்முகம் : அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும் போது ஏற்கனவே இருந்த அரசாங்கம் [ * * ] என்று சொன்னார்கள். ஏற்கனவே தமிழகத்தில் ஒன்றரை ஆண்டுக் காலம் ஜனாதிபதி ஆட்சி நடந்துகொண்டிருந்தது. ஜனாதிபதி ஆட்சிக் காலத்தில் [ * * * ] என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்களா ?

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு உறுப்பினர் ப.உ.ச. அவர்கள் ஆட்சியைத்தான் சொன்னேன்.

திரு. ப.உ. சண்முகம் : ஒன்றரை ஆண்டுக் காலம் இங்கு ஜனதிபதி ஆட்சி நடந்துகொண்டிருந்தது என்பதை அமைச்சர் அவர்கள் மறந்து விட்டார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : ஞாபகத்தில் இருக்கிறது. ஆனல் உங்களை என்னல் மறக்கவே முடியாது. உங்கள் ஆட்சிக் காலத்தில் அவ்வளவு அட்டூழியங்களும், ஊழல்களும் நடந்திருக்கிறது என்பதை டெல்லியில் எங்கள் புரட்சித் தலைவர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் என்பதை இதழ்களில் படித்துத் தெரிந்துகொண்டிருப்பீர்கள்.

THIRU P. U. SHANMUGAM: Sir, I strongly protest against what the Hon. Minister has stated.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்து கேள்வியின் மீது போனல் நல்லது. கேள்வியையொட்டி பதிலும், பதிலையொட்டி துணைக் கேள்விகளும் கேட்டால் நல்லது.

திரு. ப.உ. சண்முகம் : டெல்லியில் பேசியிருப்பதாகச் சொன்னர்கள். அதற்கு என்ன ஆதாரம் என்று தெரியாது. என்ன பேசினர்கள் என்று சொல்ல முடியாது. ஏற்கனவே இருந்த அரசு [ * * * ] என்று சொன்னர்கள். ஒன்றரை ஆண்டுக் காலம் தமிழ்நாட்டில் ஜனதிபதி ஆட்சி நடந்திருக்கிறது. அப்போது [ * * * ] என்று பொருளா ? திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஊழல் நடந்தது அட்டூழியங்கள் நடந்தது என்று சொல்வது முறைதான, சரிதான ? ஏற்கனவே தமிழ்நாட்டில் ஒன்றரை ஆண்டுக் காலம் ஜனதிபதி ஆட்சி இருந்தது என்பதை அமைச்சர் அவர்கள் மறந்துவிட்டார்களா?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : எழுகிற கேள்விக்கு தரப்படுகிற பதிலை எதிர்பார்த்துத்தான் இங்கு உறுப்பினர்கள் இருக்கிறார்களே தவிர தேவையற்ற சர்ச்சைகளுக்கு கேள்வி நேரத்தை பயன்படுத்துவது இரு சாராருக்கும் உசிதம் அல்ல என்பதை பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : இந்தத் தொழிற்சாலை 1977ஆம் ஆண்டு மே மாதம் 20 ஆம் தேதி முதல் மூடப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இதில் பணியாற்றுகிற தொழிலாளர்களுக்கு இந்த மூடப்பட்ட காலத்தில் அவர்களுக்கு வாழ்வதற்கான வசதிகளை நிர்வாகமோ அல்லது

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க முற்பகல் 9-05—9-0?-ல் அகற்றப்பெற்றன.





அரசோ ஏற்படுத்திக்கொடுக்க முன்வருமா ? அடுத்து, இந்தத் தொழிற்சாலையை, அரசே மேற்கொண்டு நடத்துவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மூடப்பட்ட தொழிற்சாலைகளில் வேலை செய்யக் கூடிய தொழிலாளர்களுக்கு நிதி வசதி அரசாங்கத்திலிருந்து கொடுப்பது என்பதற்கு சாத்தியக் கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அரசு ஏற்று நடத்துவது என்றல், அதுவும் இப்போது அரசாங்கமே ஏற்று நடத்துவது என்று சொன்னல் அவர்களுக்கு பாங்கிலிருந்து பணம் கொடுக்கச் சொல்லி அந்த பாங்க்குக்கு நாம் காரண்டி கொடுக்க வேண்டும். ஏற்கனவே இருந்த தொகையை மிஸ் மானேஜ்மென்ட் செய்து அல்லது வேறு தவறன காரியங்களில் அவர்கள் ஈடுபட்டு அந்தத் தொழிற்சாலை மூடப்படும் அளவிற்கு இருந்தவர்களுக்கு இந்த மாதிரி பாங்க் காரண்டி கொடுத்து மறுபடியும் நடத்தச் சொல்வது என்பது அவ்வளவு உசிதம் என்று கருதவில்லை. இப்போது மூடப்பட்ட தொழிற்சாலைகளை தொழிலாளர்கள் ஏற்று நடத்துவது என்று மத்திய அரசு இண்டஸ்ட்ரீஸ் மினிஸ்டர் சொன்ன ஒரு ஆலோசனையை, இந்த அரசாங்கத் தலைவர் அவர்கள், முதல் அமைச்சர் அவர்கள், பரிசீலித்து வருகிறர் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. ஆறுமுகம்: மூடப்பட்டிருக்கும் தொழிற்சாலையைப் பற்றி கேள்வி கேட்கிறபோது அமைச்சர் அவர்கள் ஏற்கனவே இருந்த அரசு [ * ] என்றும் ஊழல்கள் நடந்திருக்கின்றன என்றும் சொன்னர்கள் .....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கனவே பேசி முற்றுப் புள்ளி வைத்தாகிவிட்டது. துணைக் கேள்வி ஏதாவது இருந்தால் கேளுங்கள்.

திரு. சி ஆறுமுகம் : அமைச்சர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருந்துதான் அந்தப் பக்கத்திற்குச் சென்றவர்கள். புதிதாக வந்த உறுப்பினர் அல்ல என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது கேள்வியா ? இது கேள்வி அல்ல, உங்கள் கருத்து.

[முற்பகல் 9-10]

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, நிவாரணம் கொடுப்பது சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் பதில் சொன்னர்கள். அங்கங்கே மேலும் மேலும் பல தொழிற்சாலைகள்

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க (முற்பகல் 9-05-9-09இல் சில சொற்கள் அகற்றப்பெற்றன.

மூடப்பட்டு தொழிலாளர்களுக்கு நெருக்கடி ஏற்படுகின்ற நேரத்தில் நிவாரணம் அளிப்பது சமூகக் கடமையாக கருதப்படுகிறது. அந்த முறையில் புதிய அணுகு முறையில் ஏதேனும் திட்டத்தை உருவாக்க முடியுமா ? ஏதோ [ * * * ] என்று சொன்னார்கள். அப்படியென்றால் [ * * * ] அமைச்சர்கள் எப்போது வேண்டுமென்றாலும் எடுத்துக்கொள்ளலாமா, அப்படித் திறந்து கிடக்கிறதா நம்மைப் போன்றவர்கள் அள்ளிக்கொண்டு போகலாமா ?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : அரசு ஏற்று நடத்துவதில் உள்ள சிக்கலைப் பற்றி சொன்னேன். தொழிலாளர்கள் ஏற்று நடத்துவதைப் பற்றி மத்திய அரசும், மாநில அரசும் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது என்பதைக் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : நிவாரணம் அளிக்க முடியவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். முன்னால் கோவையில் இப்படிப்பட்ட தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டபோது, முதலமைச்சர் நிதியிலிருந்து ஒவ்வொருவருக்கும் நூறு ரூபாயும், கடனாக 100 ரூபாயும் வழங்கப்பட்டது. அந்த மாதிரி ஏதாவது நிவாரணம் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு அளிக்காவிட்டால், அவர்களது வாழ்க்கை மிகவும் மோசமாகப் போய்விடும். ஆகவே அவர்களுக்கு நிவாரணம் அளிக்க ஏதாவது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதை கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : ' ஸ்டேட் வைட் ஸ்ட்ரைக், ' ஸ்டேட் வைட் க்ளோஷர் ' என்று வரும்போது லட்சக்கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள். அப்படிப்பட்ட நேரத்தில் ஏதாவது உதவி கொடுப்பது வழக்கம். அதே முறையில் இப்போதும் 200 ரூபாய் கொடுக்கப்படுகிறது என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். ஆனால் பல்வேறு இடங்களில் பல்வேறு தொழிற்சாலைகள் மூடப்படுகின்றன. லாக் அவுட், க்ளோஷர் என்ற முறையில் பல்வேறு இடங்களில் நடைபெறுகின்றன. அவற்றுக்கெல்லாம் இதுபோன்று உதவி செய்ய ஆரம்பித்துவிட்டால், மீண்டும் இது போன்ற செயல்களில் ஈடுபட முதலாளிகள் வந்துவிடுவார்கள். மேலும், பணம் கொடுப்பதற்கும் அரசாங்கத்திடம் பணம் இல்லை என்று சொன்னேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்தத் தொழிற்சாலையை தொழிலாளர்களே ஏற்று நடத்த முன்வர வேண்டும் என்றுள்ள கருத்தைச் சொன்னார்கள்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க முற்பகல் [illegible] இல் சில சொற்கள் அகற்றப்பெற்றன.



இந்த நிலையில் இந்தத் தொழிற்சாலையை நடத்துவதற்கு தொழிலாளர்கள் முன் வந்தால், அரசாங்கம் எந்த முறையில் உதவி அளிக்கும் என்பதைச் சொல்லுவார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இந்த நல்ல கொள்கை அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு என். சங்கரய்யா : அமைச்சர் அவர்கள், இந்தத் தொழிற்சாலையை தொழிலாளர்களே ஏற்று நடத்துவது பற்றி அரசு யோசனை செய்வதாக சொன்னார்கள். அவ்விதம் தொழிலாளர்கள் ஏற்றுக்கொள்ளவது என்றால், இதற்கான மூலப் பொருட்கள் கிடைக்க அரசு உதவி செய்யுமா ? இதற்கான தொழில் வல்லுநர்களை அளிக்குமா, உற்பத்தி செய்கின்ற பண்டங்களை—ஏகபோக முதலாளிகளிடம் சிக்கிக் கொள்ளாமல் விற்பனை செய்வதற்கு உதவி செய்யுமா ? இப்படிப்பட்ட உதவிகளை செய்ய அரசாங்கம் முன் வருமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : இதில் மானேஜ்மென்ட் எக்ஸ்பெர்டைஸ்-நோ ஹௌ (know how) இவைகள் எல்லாம் அவசியம், பி.எச்.எல்-ல். ஏறத்தாழ 100 பேர்கள் இருக்கிறார்கள். அவர்களை உபயோகப்படுத்த அரசாங்கம் ஆலோசிக்கும்.

திரு. சி. கோவிந்தராசன் : அமைச்சர் அவர்கள் சொல்லும்போது, ஆயிரம் பேர், 10 ஆயிரம் பேர்கள் மாநில அளவில் தொழிலாளர்கள் பாதிக்கப்படுவதாக இருந்தால் நிதி கொடுக்க முன் வரும் என்று சொன்னார்கள். பல இடங்களில் சிறு தொழில்களாக இருந்தாலும், சரி, பெரிய தொழிற்சாலைகளாக இருந்தாலும் சரி, 2,000 பேர்கள் 3,000 பேர்கள் பழிவாங்கப்படுகின்ற முறையில் தொழிற்சாலைகள் தொடர்ந்து மூடப்படுகின்றன. இந்த இடங்களில் அரசு உதவி கொடுக்க வரவில்லையென்றாலும், அவர்களுடைய சொந்தக் கணக்கிலிருந்து, அதாவது அவர்களது சொந்த பிராவிடென்ட் பண்ட் நிதியிலிருந்து பணம் பெறுவதற்கு, வழி செய்யுமா ? இப்படிப்பட்ட உதவி வேண்டுமென்று கேட்கும்போது, அது அப்படி மூடப்பட்டது லீகலா அல்லது இல்லீகலா என்றெல்லாம் பார்க்காமல் இந்த உதவியை அளிப்பதற்கு அரசு தலையிட்டு அவர்களுக்கு பணம் கிடைக்க ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, நாடுதழுவிய அளவிலே இப்படிப்பட்ட நிலைமை வரும்போது அரசு உதவி கொடுக்க முன்வரும் என்பதைத்தான் சொன்னேன் .......... (Now there is a new re-thinking) டோல் கொடுத்து உதவி செய்ய முடியுமா என்று ஆலோசித்துக் கொண்டிருக்கிறோம். சட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். இது பற்றி ஆலோசிப்பதற்காக மாநில அரசு கமிட்டி அமைப்பதாக

இருக்கிறது. அப்போது அந்த கமிட்டியில் மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் நல்ல பல ஆலோசனைகளைச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே' இம்மாதிரி தொழிற்சாலைகளை தொழிலாளர்களே ஏற்றுக்கொண்டு நடத்துவது என்பது மத்திய சர்க்காரின் திட்டமில்லை என்று திரு மோகன் தாரியா அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தொழிற்சாலைகளை தொழிலாளர்களே ஏற்று நடத்த இந்த அரசு ஆதரவு தர இருப்பதாகக் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். அதனால் இந்த அரசாங்கத்திடம் இது சம்பந்தமாக ஏதாவது காங்கிரீட் புரொபோசல் இருக்கிறதா ? அது எந்தவகையில் நிறைவேற்றப்படும் என்று தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு சாதிக் பாட்சா அவர்கள் சொன்ன கருத்து திரு. மோகன் தாரியா அவர்கள் இந்த இலாகாவிலே இருந்தபோது சொன்னது. அதற்கு பின்னர் இப்போது திரு ஜார்ஜ் பெர்னாண்டஸ் அவர்கள் இண்டஸ்ட்ரீஸ் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பின்னர் தொழிற்சாலைகளை தொழிலாளர்களே ஏற்று நடத்துவதாக இருந்தால், 'Even financial help can be given to the State Governments' என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த அருமையான யோசனைக்கு 'we have jumped at the suggestion' அது பற்றி இந்த அரசு ஆலோசனை செய்துகொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## கள்ளிப்பட்டு சாவடியில் கட்டண வசூல்

*6 வினா: திரு. சி. கோவிந்தராசன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பண்ருட்டி—சென்னை சாலையில் கள்ளிப்பட்டு என்ற ஊரிலுள்ள சாவடியில் எல்லா வாகனங்களுக்கும் பல ஆண்டுகளாக கட்டணம் வசூலிக்கப்படுவது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், எத்தனை ஆண்டுகள் இவ்வாறு வசூலிக்கப்படும் ?

மாண்புமிகு திரு சி. பொன்னையன் ; (அ) ஆம். சென்னை கும்பகோணம்-தஞ்சாவூர் சாலையில் மைல் 104/2-6 (கி.மீ.169/2.8) ல் பொன்னையாறு குறுக்கிடும் இடத்தில் கட்டியுள்ள மூழ்கு பாலத்திற்கு அருகில் உள்ள கள்ளிப்பட்டு சாவடியில் எல்லா வாகனங்களுக்கும், சுங்கக் கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது

(இ) குறிப்பாக மேற்சொன்ன பாலம் கட்டி முடிக்க செலவாகியுள்ள தொகை ரூ. 16,11,821/— ஆகும். 31-3-77 வரை வசூலான அதாவது 8,19,402 ரூபாய். மீதியும் ரூ. 7,92,419 ரூபாயும் வட்டியுடன் திரும்பப் பெறும் வரை அரசு ஆணைப்படி சுங்கக் கட்டணம் வசூலிக்கப்படும்.



திரு. சி. கோவிந்தராசன் : அங்கே கட்டப்பட்டிருப்பது Causlway பாலம்தான். அதற்கு 16 லட்ச ரூபாய் செலவழிக்கப்பட்டிருப்பதாகக் கூறி யிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 1964ஆம ஆண்டிலிருந்து 13 ஆண்டு காலமாக இந்த வரி வசூலிக்கப்படுகிறது தினசரி சராசரி என்ன வசூல் ஆகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்ல முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் ; இதற்குத் தனிக் கேள்வி போடவும். சுங்கத் தொகை 1971-ஆம் ஆண்டிலிருந்து தான் வசூலிக்கப்படுகிறது. ஆண்டிற்கு 1,68,400 ரூபாய் கட்டணமாக வசூலிக்க கண்டமங்கலம் ஒன்றியத்திற்கு உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, இது அதிகமான தொகையாகத் தெரியவில்லை.

திரு. என். கிட்டப்பா ; தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பல இடங்களில் பொருளாதார நெருக்கடியின் காரணமாக, பாலங்கள் கட்டப்படாமல் இருக்கின்றன. எல்.ஐ.சி. போன்ற நிறுவனத்திடமிருந்து கடன் தொகை பெற்று, இத்தகைய பாலங்களைக் கட்டிவிடுவது என்கின்ற முறையிலே அரசு ஆலோசனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய யோசனை அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சௌ.வே. வரதராஜன் : தலைவர் அவர்களே, இந்த சுங்க வரி என்பது ஜனங்கள் மீது விதிக்கப்படும் கூட்டு அபராதம் என்றே பொதுவாக மக்களால் கருதப்படுகிறது. ஒரே மனிதனுடைய தலையில் பலவிதமான வரிகளை விதிப்பதற்குப் பதிலாக, ஒரு வரியை வசூலிக்கலாம் என்கிற கருத்து மத்திய-மாநில அரசுகளின் கருத்தாக உருவாகி வருகின்ற நேரத்திலே, இப்படிப்பட்ட வரிகளை கைவிட்டு, போக்குவரத்துத் துறையிலே ஒரே வரியை வசூலிப்பதற்கு இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி, பொன்னையன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனை பரிசீலனையில் இருந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரை கலியமூர்த்தி : கொள்ளிடம் பாலத்திலே ஏறக்குறைய 15 வருட காலமாக இத்தகைய சுங்கவரி இதுவரை வசூலிக்கப்பட்டருப்பதாகத் தெரிகிறது. இதை எப்போது நிறுத்துவார்கள் என்பதை அறிவிக்க முடியுமா ?

1977 ஆகஸ்ட் 1]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தனிக் கேள்வி போடவும்.

திரு. ரா. மார்க்கபந்து ; செய்யாற்றிலே இப்படிப்பட்ட பாலம் கட்டப்பட்டு, ஏறக்குறைய 10 ஆண்டுகளுக்கு மேலாக சுங்க வரி வசூலிக்கப் பட்டு வருகிறது. இன்னும் எத்தனை காலத்திற்கு இப்படி வசூலித்துக் கொண்டிருப்பார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு சி. பொன்னையன் ; தலைவர் அவர்களே, இதற்கும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு தனிக் கேள்வி போடவும்.

(முற்பகல் 9–20)

திரு. சி. கோவிந்தராசன் : நான் கேட்ட கேள்வியை ஒட்டி அந்த வரியை வசூலிப்பது அந்தப் பாலத்தைக் கட்டிய காண்டி ராக்டரா அல்லது அரசே நேரடியாக வசூலிக்கிறதா ? காண்டி ராக்டர் வசூலித்தால் அந்தக் கணக்குகளை எல்லாம் ஒழுங்கான முறையில் கொடுக்கிறாரா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அவைத் தலைவர் அவர் களே, 1971-ஆம் ஆண்டிலிருந்து 1974ஆம் ஆண்டு வரை நெடுஞ் சாலைத் துறை இதனை வசூல் செய்தது. 1974ஆம் ஆண்டு முதல் 1977ஆம் ஆண்டு வரை கண்டமங்கலம் ஒன்றியத்திற்குச் சுங்கம் வசூலிக்கும் உரிமை 1,68,400 ரூபாய்க்கு விடப்பட்டிருக்கிறது. 1977-ஆம் ஆண்டு முதல் 1980ஆம் ஆண்டு வரை மீண்டும் கண்ட மங்கலம் ஒன்றியத்திற்கே சுங்கம் வசூலிக்கும் உரிமை விடப்பட் டுள்ளது.

திரு. எஸ். ஆர். இராதா: கும்பகோணம் செல்லுகிற அந்தப் பாதையில் அமைக்கப்பட்டிருக்கின்ற அந்தப் பாலத்திற்கு நீண்ட நாட்களாக கட்டணம் வசூலிக்கப்படுகிறது. அதேபோல் கொள்ளி டத்திற்குப் போகிற பாலத்திற்கும் வசூலிக்கப்படுறது. அப்படி வசூல் செய்கின்ற முறையை ரத்து செய்வது பற்றி அரசாங்கம் பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அப்படிப்பட்ட உத்தேசம் ஒன்றும் இப்போது இல்லை.

புலவர் கா. கோவிந்தன் : இப்படிச் சுங்கம் வசூலிக்கின்ற முறை ஸ்டேட் ஹைவேஸ்களில் இருக்கிற பாலங்களுக்கு மட்டும் தான் இருக்கிறது என்றும், தேசிய நெடுஞ்சாலைப் பாலங்களுக்கு அஸ்லை எனும் நிலை இருக்கிறது அப்படி அரண்டி விதமான நிலை இருப்பதைக் கைவிட அரசு முற்படுமா ?



1977 ஆகஸ்ட் 1]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : உறுப்பினர் கூறியது பற்றி செய்தி தெரிந்து பரிசீலிக்கப்படும்.

திரு. எம். ஏ. லத்தீப் : சில ஆண்டுகளுக்கு அரசாங்கமே இந்த வசூல் வேலையைச் செய்த பிறகு ஒப்பந்தக்காரர்களுக்கு இது விடப்பட்டிருக்கிறது. அரசாங்கமே வசூல் செய்து வந்ததை ஒப்பந்தக்காரர்களிடம் விடும் முடிவு ஏன் எடுக்கப்பட்டது ? ஒப்பந்தக்காரர்களுக்கு இந்த உரிமையைக் கொடுத்ததை விட அரசாங்கமே வசூலித்த தொகை குறைவா அதிகமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அரசாங்கம் வசூலித்த போது 1971-ம் ஆண்டிலிருந்து 1974-ஆம் ஆண்டு வரை 1,04,834 ரூபாய் தான் வசூலிக்கப்பட்டது. கண்ட மங்கல ஒன்றியத்திற்கு விடப்பட்டு 1,68,400 ரூபாய்க்கு வசூலிக்கப்பட்டிருக்கிறது.

திரு. கெ. சொக்கலிங்கம் : என்னுடைய திருப்போரூர் தொகுதியில் இதற்கு முன்னால் இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு தமிழகத்தின் தானைத் தலைவர் கலைஞர் அரசில் ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வி சம்பந்தப் பட்டதாக துணைக் கேள்வி இருக்கவேண்டும். பாலத்திற்கு வரி வசூலிப்பதைப் பற்றிய கேள்வி இது.

திரு. எஸ். ஜே. இராமசாமி : இப்படி பாலங்களுக்கு வரி வசூலிப்பது என்பது கடந்த ஐந்தாறு ஆண்டுகளாகவும், அதற்கு முன்பாகவும் நடந்து வருகிறது. இதற்கு முடிவு கட்ட அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது இதை அறவே ரத்து செய்ய முற்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : அவைத் தலைவர் அவர்களே, இந்த முறையை அறவே ரத்துசெய்ய எந்தவித உத்தேசமும் அரசாங்கத்திடத்தில் இல்லை.

திரு. என். சங்கரய்யா : இந்தப் பாலங்கள் கட்டுவதற்காக ஆகக்கூடிய செலவுகள் வசூலிக்கப்பட்டவுடன் கொள்கை ரீதியில் அந்த வசூலிப்பை நடத்தாமல் இருக்க, தொடர்ந்து அதை வசூலிக்க மாட்டோம் என்று அரசாங்கமே சொல்ல முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஆன செலவு தொகை யைவிட அதிகமாக இதுவரை வசூல் செய்ததாகத் தகவல் இல்லை. அப்படி எதுவும் இந்த அரசு வசூல் செய்யாது என்று கூற விரும்புகிறேன்.

[1977 ஆகஸ்ட் 1

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இதுபோன்ற சுங்கவரி வசூலிக்கும்போது கட்டை வண்டிகள், மாட்டு வண்டிகளுக்கு விதிவிலக்கு இருக்கிறது. லாரிகள், டிராக்டர்களுக்கு மட்டுந்தான் இந்த வரி வசூலிக்கப்படுகிறது. வளர்ச்சித் திட்டங்களுக்கு இந்த நிதியைப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் இது போன்ற வரியைத் தொடர்ந்து வசூல் செய்ய அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : கட்டை வண்டிகளுக்கு விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது அரசுக்குத் தெரியும். லாரி போன்ற வாகனங்களுக்குக் கட்டணம் வசூல் செய்வது தொடர்ந்து அமலில் இருக்குமென்று கூறிக்கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, பாலங்கள் அமைக்கப்படுகின்ற போது சில நெடுஞ்சாலைகளிலே முதலில் 20 அடி அகலமுள்ள பாலம் கட்டுகிறார்கள். அதற்குப் பிறகு 2, 3 ஆண்டுகள் கழிந்தவுடனே மீண்டும் விஸ்தரிக்கப்படுகிற வேலையைச் செய்கிறார்கள், இப்படிப்பட்ட போக்கை அரசாங்கம் மாற்ற நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : துணை வினாக்கள் கேட்கின்ற உறுப்பினர்கள் அவர்கள் இடங்களில் இருந்துகொண்டு தான் கேட்கவேண்டும். திரு ரா. கிருஷ்ணன் அவர்களுடைய இடத்திலிருந்து கேள்வி கேட்கவில்லை என்று கருதுகிறேன், வேறு இடத்திலே அமர்ந்து கேட்கிறார், ஏனென்றால் அதுபற்றி குறிப்பிலே இல்லை. இருந்தாலும் பரவாயில்லை, இனிமேலாவது இருக்கையில் இருந்து கேள்வி கேட்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் + உடுக்குறி இடப்பட்டிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. அவையுரிமைப் பிரச்சினை.

## 'அண்ணா' நாளிதழ் மீது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. க. அன்பழகன், திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா ஆகியோர் பேரவையின் விதி 184-ன் கீழ் கீழ் குறித்த உரிமைப் பிரச்சினையை பேரவையில் கொண்டுவர அனுமதி கோரி அறிவிப்பு ஒன்றைக் கொடுத்துள்ளார்கள். அது 'அண்ணா' பத்திரிகையில் வந்துள்ள செய்தியைப் பற்றியது.





1977-ம் ஆண்டு ஜூலை மாதம் 27-ம் தேதி அன்று சட்டமன்றப் பேரவையில் திரு. க. அன்பழகன் அவர்கள் உரையாற்றிக்கொண்டு இருந்தபோது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் " . . . . . . . . . . . . நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்டபொழுது தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தது. நெருக்கடி நிலையை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அங்கீகரித்ததா அல்லது எதிர்த்ததா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன் . . . . . . . . . . . ." என்று கேட்டபோது, அதற்கு, திரு. அன்பழகன் அவர்கள், "எங்களைப்பற்றி மத்திய அரசிலே இருந்தவர்களுக்கு மிக நன்றாகத் தெரிந்த காரணத்தாலே தான் ஜனவரி 31 வந்தது, ஆகவே, நாங்கள் ஆதரித்திருந்தால் ஜனவரி 31 வந்திருக்காது" என்று பதில் அளித்தார்.

இச்செய்தியை அண்ணா நாளிதழ், சென்னை 1977-ம் ஆண்டு ஜூலை மாதம் 27-ம் தேதியிட்ட நாளேட்டில், திரு. அன்பழகன் கூறியதாகப் பின்வருமாறு செய்தி போடப்பட்டுள்ளது :

"எங்களைப்பற்றி மத்திய அரசு தெரிந்து வைத்திருந்தது, ஜனவரி 31-ந் தேதி எங்கள் ஆட்சியை நீக்கியது. வேறு ஏதாவது செய்திருந்தால் அதற்கு முன்பே தி.மு.க. ஆட்சி இருந்திருக்காது." – 'அண்ணா' பத்திரிக்கையில் வந்துள்ள கடைசி சொற்றொடர்கள் 'வேறு ஏதாவது செய்திருந்தால் அதற்கு முன்பே தி.மு.க. ஆட்சி இருந்திருக்காது' என்பவை அவைக் குறிப்பேட்டில் இல்லை.

இது எப்படி அவை உரிமை மீறிய செயல் ஆகும் என்று சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் படிக்கிறபோது அப்படிப்பட்ட உரிமை மீறப்பட்டிருக்கிறது என்று படித்துக் காட்டினீர்கள். எனக்குப் பேசுவதற்கு உரிமை இருக்கிறது என்பதால் என்னைப் பேசச் சொல்லியிருக்கிறீர்கள் என்று கருதுகிறேன். ஜனவரி 31-ஆம் தேதி அன்றைக்கு இருந்த ஆட்சி கலைக்கப்பட்டு, சட்டமன்றம் கலைக்கப்பட்டது என்பது மத்திய அரசு கொண்டு வந்த நெருக்கடி நிலைப் பிரகடனத்திற்கு இந்த அரசு மாறாக இயங்கியதினுடைய விளைவுதான் என்ற கருத்தை நான் சொன்னேனே தவிர, மத்திய அரசினுடைய அவசரநிலைப் பிரகடனத்தை நாங்கள் எதிர்த்து இருந்தால் எங்கள் ஆட்சி அதற்கு முன்னாலேயே கலைக்கப்பட்டு இருக்கும், நாங்கள் வேறு விதமான நடவடிக்கையிலே ஈடுபட்டிருந்தால் ஆட்சி கலைக்கப்பட்டிருக்கும் என்று நான் சொன்னதாக வருகிற கருத்து ஒரு உள்நோக்கத்தை அடக்கிய சொற்றொடராக இருக்கிறது.

[திரு. க. அன்பழகன்] [1977 ஆகஸ்ட் 1

முதலில், உறுப்பினர் வெளியிடாத கருத்தை பத்திரிகை வெளியிடுவது நியாயமல்ல. இரண்டாவது, சொல்லப்பட்ட கருத்துக்கு மாறான கருத்தை வெளியிடுவது என்பது வேண்டுமென்றே செய்யப்படுகிற காரியம். அதுவும் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பெயரைத் தாங்கி நடத்தப்படுகின்ற பத்திரிகை என்ற காரணத்தால் அது அறிஞர் அண்ணா அவர்களுடைய பெயருக்கே களங்கம் கற்பிப்பதாக அமைகிறது, ஆகவே அதிலே உரிமை மீறப்பட்டு இருக்கிறது என்பதைத் தலைவராகிய தாங்கள் படிக்கிறபோதே தெரிவித்து இருக்கிறீர்கள்.

எனவே சட்டமன்றத்திலே குறிப்பிடாததையும், சட்டமன்றக் குறிப்பேட்டில் இல்லாததையும், நான் நினைக்காததையும், நான் வெளியிட்ட கருத்திற்கு முரண்பட்ட முறையிலேயும் வெளியிட்டிருப்பது திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இழுக்கு கற்பிப்பதாகவும், குறிப்பாக எனக்கும் இழுக்கு கற்பிப்பதாகவும் இருப்பதால் பேரவைத் தலைவர் அவர்கள் இதிலே உரிமை மீறல் இருக்கிறது என்ற காரணத்தாலே அதை ஏற்று மேல் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 'அண்ணா' நாளேட்டில் அவைக் குறிப்புகளில் உள்ள வாக்கியங்கள் அவ்வாறே வெளியிடப்படா விட்டாலும், திரு. க. அன்பழகன் அவர்கள் கூறிய மையக் கருத்தை வெளியிட்டுள்ளார்கள். உறுப்பினர் கூறியது, தி.மு.க. ஆட்சி அவசர கால நிலையை ஆதரிக்காத காரணத்தினால்தான் சனவரி 31 வந்தது (அதாவது ஆட்சி கலைக்கப்பட்டது) என்றும், ஆகவே நாங்கள் அதை ஆதரித்து இருந்தால் சனவரி 31 வந்து இருக்காது என்றும் கூறியிருக்கிறார். இதுபற்றி நாளிதழ் ஆசிரியரை விளக்கம் கேட்டதற்கு அவருடைய கடிதத்தில் பின்வருமாறு விளக்கம் அளித்துள்ளார்.

"........... வேறு ஏதாவது தி.மு.க. ஆட்சி செய்திருந்தால் தி.மு.க. ஆட்சி இருந்திருக்காது' என்று வெளிவந்த வார்த்தை உறுப்பினர்கள் பேராசிரியர் திரு. அன்பழகன், திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா ஆகியோர் குறிப்பிட்டதைப் போல எந்த உள்நோக்கத்துடனும் பிரசுரிக்கவில்லை. வார்த்தைகள் மாறினாலும் கருத்து மாறவில்லை என்பதைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறோம்."

"பின்னால் குறிப்பிட்டுள்ள ஒரு வாக்கியம் முன் குறிப்பிட்ட கருத்தை வலியுறுத்தும் வகையில்தான் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அவையில் அவசர அவசரமாக குறிப்பெடுத்து அன்றே பிரசுரிக்கும் நிலை இருப்பதால் எழுத்துக்கு எழுத்து அப்படியே பிரசுரிக்க முடியாத நிலை இருக்கிறது. இதனால் அவைக்கோ, உறுப்பினர்களுக்கோ எந்த உள்நோக்கமும் கற்பிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். இதில் தவறு இருப்பின் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவிக்கிறோம்."





[முற்பகல் 9-30]

"வேறு ஏதாவது தி.மு.க. ஆட்சி செய்திருந்தால் தி.மு.க. ஆட்சி இருந்திருக்காது" என்ற சொற்றொடரை உறுப்பினர் பேசவும் இல்லை, அவைக் குறிப்பிலும் இல்லாததால் இம்மாதிரியாகப் பிரசுரிப்பது, உறுப்பினரது கருத்துக்கு வேறுவிதமாகப் பொருள் கற்பிப்பதற்கு ஏதுவாக முடிந்துவிடும். ஆகவே, இதுபோன்று அவையில் சொல்லாத சொற்றொடர்களை, உறுப்பினர்கள் வாயிலாகக் கூறுவதுபோல் பத்திரிகைகள், குறிப்பாக 'அண்ணா' பத்திரிகை, வெளியிடாமல் இருக்க வேண்டுமென எச்சரிக்கிறேன்.

## 3 அறிவிப்புகள்

### (அ) கவன ஈர்ப்பு ஒத்திவைத்தல் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து 41-வது விதியின் கீழ், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து கவன ஈர்ப்பு தீர்மானம் ஒன்றினை திரு. மா. மீனாட்சிசுந்தரம் அவர்கள் கொடுத்துள்ளார்கள். மாண்புமிகு அமைச்சரவர்களின் வேண்டுகோளுக்கிணங்க அந்த கவன ஈர்ப்புத் தீர்மானம் ஒத்திவைக்கப்படுகிறது.

## 4. அரசினர் தீர்மானங்கள்.

### (அ) மதிப்பீட்டுக் குழுவிற்கான தேர்தல்

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 164-வது விதியின் கீழ் 1977-78 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

[1977 ஆகஸ்ட் 1

### 3 அறிவிப்புகள்—(தொடர்ச்சி).

### (ஆ) மதிப்பீட்டுக் குழுவிற்கான தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு அறிவிப்பு, ஒற்றைமாற்று வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின் கீழ், மதிப்பீட்டுக் குழுவிற்கு (Committee on Estimates) பதினறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க, வேட்பாளர்கள் வேட்புத் தாள்களை 8—8—1977 திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். வேட்புத்தாள் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

வேட்புத் தாள்கள் 1977 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 9-ந் தேதி, செவ்வாய்கிழமை முற்பகல் 11 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 1977 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 10-ந் தேதி புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது பதினறுக்கு மேற்படுமாயின் 1977 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 12-ந் தேதி, வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கும், பிற்பகல் 1 மணிக்கும் இடையே தலைமைச் செயலகத்திலுள்ள பேரவைக் குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

### 4. அரசினர் தீர்மானங்கள் (தொடர்ச்சி.)

### (ஆ) உரிமைக் குழுவிற்கான தேர்தல்

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவரவர்களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 183-வது விதியின் கீழ் 1977-78-ஆம் நிதியாண்டுக்குரிய உரிமைக் குழுவின் உறுப்பினர்களாய் இருக்கும்படி பதினன்கு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

### 3. அறிவிப்புகள் (தொடர்ச்சி)

### (இ) உரிமைக் குழுவிற்கான தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு அறிவிப்பு. ஒற்றைமாற்று வாக்குமுறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின் கீழ், உரிமைக் குழுவிற்கு (Commitee of Privileges)



1977 ஆகஸ்ட் 1] [பேரவைத் தலைவர்]

பதினன்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க, வேட்பாளர்கள் வேட்புத் தாள்களை 8-8-1977 திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். வேட்புத் தாள்களை செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

வேட்புத்தாள்கள் 9-8-1977, செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 10-8-1977, புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது பதினன்குக்கு மேற்படுமாயின் 12-8-1977, வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே தலைமைச் செயலகத்திலுள்ள பேரவைக் குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

### 4. அரசினர் தீர்மானங்கள் (தொடர்ச்சி)

### (இ) அவைக் குழுவிற்கான தேர்தல்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே, கீழ்க் கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

"தமிழ்நாடு சட்ட மன்றப்பேரவையின் 221 ( ஆவது விதியின்கீழ் 1977-78-ஆம் நிதியாண்டுக்கு அவைக் குழுவின் உறுப்பினர்களாய் இருக்கும் பதிமூன்று உறுப்பினர்களை மாண்புமிகு பேரவை தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

### 3. அறிவிப்புகள் (தொடர்ச்சி)

### (ஈ) அவைக் குழுவிற்கான தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு

ஒற்றைமாற்று வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின் கீழ், அவைக் குழுவிற்கு (House Committee) பதிமூன்று உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க, வேட்பாளர்கள் வேட்புத்தாள்களை 8-8-1977 திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். வேட்புத்தாள்களை செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

வேட்புத்தாள்கள் 9-8-1977, செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 10-8-1977 புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிச்கைக்கு, தாவது பதிமூன்றுக்கு மேற்படுமாயின் 12-8-1977, வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே தலைமைச் செயலகத்திலுள்ள பேரவைக் குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

## 5. ஒழுங்குப் பிரச்சினை

### வினா எண் 5-இன்கீழ் துணை வினாவிற்கு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அளித்த விடை குறித்து

திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, ஒரு ஒழுங்குப்பிரச்சினையை நான் இங்கு எழுப்ப விரும்புகின்றேன். கேள்வி நேரத்தின் பொழுது தொழிலாளர்களுக்கு நிவாரணம் அளிக்கப்படுமா—மூடிக் கிடக்கின்ற தொழிற்சாலைகளில் இருக்கிற தொழிலாளர்களுக்கு நிவாரணம் அளிக்கப்படுமா—என்ற கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி எழுப்பிய நேரத்தில் அதன் தொடர்ச்சியாக தொழிலாளர் நல அமைச்சர் அளித்த பதிலில் ஏற்கனவே இருந்த கழக அரசு * என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்கள் எந்த ஆதாரத்தோடு அதைச் சொன்னார்கள் என்பது விளக்கப்பட வேண்டும். ஏனென்றால், நிதிநிலை அறிக்கையில் பற்றாக்குறை பட்ஜெட் சமர்ப்பிக்கப்படுகிற நேரத்தில், துண்டு விழுகிற நிதிநிலை அறிக்கை என்று சொல்லப்படுகின்ற காரணத்தாலேயே * * பொருள் அல்ல. எனவே, ஏற்கனவே இருந்த அரசு * * என்ற குற்றச்சாட்டு மிகவும் மிகவும் பயங்கரமான குற்றச்சாட்டாகும். அப்படி * * அந்தக் காரணத்தைக் காட்டிக்கூட ஓர் அரசைக் கலைக்க முடியும். ஆனால் கழக அரசைக் கலைத்த டெல்லியிலுள்ள மத்திய அரசுகூட அப்படிப்பட்ட ஒரு காரணத்தை அப்பொழுது குறிப்பிடவில்லை. எனவே, அந்தப் பயங்கரமான குற்றச்சாட்டு உரிமைப் பிரச்சினைக்கே கூட உரிய ஒன்றாகும். அதை உரிமைப் பிரச்சினையாக நான் எழுப்பாமல் தங்களுடைய மேலான முடிவிற்கு விடுகின்றேன். தங்களுடைய கருத்து என்ன, அது பற்றி என்ன நடவடிக்கை எடுக்கிறீர்கள் என்பதை அறிய நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.



மாண்புமிகு திரு. கி. மனோகரன் : எதிர்க்கட்சித் தலைவர் கிளப்பிய அந்த விவாதத்திலே வலுவில்லையென்று நான் சொல்லவில்லை. கனம் அமைச்சரவர்கள் பேசியபொழுது ஒரு வகையில் உணர்ச்சி வயப்பட்டு, ஒரு வேளை பேசியிருக்கக்கூடும் என்று நான் கருதுகிறேன். நோக்கத்தைக் கற்பிப்பதற்கோ அல்லது களங்கத்தைக் கற்பிப்பதற்கோ அவர் நினைத்து நிச்சயம் அதைப் பேசியிருக்க மாட்டார் என்று நான் மனதார நம்புகின்றேன்.

* * * * இது பரவலாகத் தமிழ் நாட்டில் பேசப்பட்டு வந்த வார்த்தைகள். தி.மு.கழக ஆட்சியில் * * * என்று ஊர்தோறும், தெருதோறும் எல்லோரும் பேசினார்கள் என்பதைவிட பலபேர் பேசினார்கள் என்ற உண்மையை மறைப்பதற்கில்லை. ஆனால், அதன் ஒரு அடையாளமாக அல்லது எதிரொலியாக அப்படிப்பட்ட பேச்சு அமைச்சரிடம் இருந்து வந்திருக்கும் என்று நான் கருதுகிறேன். புண்படுகிற அளவுக்கு அந்த வார்த்தை இருந்திருக்குமானால் அதை நிச்சயமாகக் குறிப்பிலிருந்து எடுத்துவிடுவதற்கு எனக்கு ஆட்சேபணையில்லையென்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் இந்த அவைமுன் தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, புண்படுகிற விதத்திலே வந்தது என்று நான் கூறவில்லை. உண்மைக்கு மாறாக ஒன்று சொல்லப்பட்டது என்பதற்காகத்தான் சொல்லுகின்றேன். ஏனென்றால் சரியான தகவல்களைப் பொறுப்பிலே இருக்கிற அமைச்சர்கள் இங்கே தரவேண்டும். அது சரியான தகவல் அல்ல, உண்மைக்கு மாறான தகவல். கேள்வி நேரத்தின்போது—உங்களுக்குத் தெரியும்—ஒரு ஆட்சியைப்பற்றி அல்லது ஒரு கட்சியைப் பற்றிக் குறிப்பிட்டு இங்கே குறைகளைச் சொல்லக் கூடாது.

கேள்விக்கு சம்பந்தப்பட்ட விவகாரங்களை மட்டுமே இங்கே எழுப்பவேண்டும். அதற்குரிய பதில்களைத் தான் சொல்லவேண்டுமென்பதைத் தாங்கள் இந்த அவையிலே நீண்டகாலமாக இருந்த அனுபவத்திலிருந்து அறிந்திருக்கிறீர்கள்.

திரு. அழகர்சாமியும், திரு.ப.உ.ச.வும் கேட்ட கேள்வி, இடைக்கால நிவாரணம் தொழிலாளர்களுக்கு அளிக்கப்படுமா என்பதாகும். ஏற்கனவே, அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுது, ரூ. 1 இலட்சம் கோவை மில் தொழிலாளர்களுக்கு நிவாரணமாக அளிக்கப்பட்டது. அதற்குப் பிறகு நான் அந்தப் பொறுப்பிலே இருந்தபொழுது முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ரூ. 5 இலட்சம் ஆலைத் தொழிலாளர்களுக்கு அளிக்கப்பட்டது. அந்த அடிப்படையில் எழுந்த கேள்விக்கும் இதற்கும் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது. ஆகவே, ஏற்கனவே இருந்தஅரசை-

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க முற்பகல் 9-37-9-40ல் சில சொற்கள் அகற்றப்பெற்றன.

அந்த அரசை நடத்திய கட்சியைப் பற்றி கேள்வி நேரத்தின் போது குறிப்பிடுவது முறையல்ல, உண்மைக்கு மாறான தகவலைக் குறிப்பிடுவது முறையல்ல என்றுதான் குறிப்பிட விரும்புகிறேன்.

[முற்பகல் 9-40]

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : உண்மைக்கு மாறானது என்ற கருத்து, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தெரிவிக்கின்ற கருத்து. உண்மை நிலை எப்படிப்பட்டது என்பதைத் தெரிந்து கொள்ளவேண்டிய பொறுப்பு, சபையிலே இருக்கிற நம்மைச் சார்ந்தது. உண்மை நிலை என்ன என்பது பற்றி இன்றைக்கு ஆட்சி பொறுப்பை எடுத்திருக்கிற அனைத்திந்திய அண்ணா தி.மு.க. அரசு எப்படிக் கருதுகிறது என்பதைப் பற்றித் தெளிவாக, திட்ட வட்டமாக இது உண்மைக்குப் புறம்பானதா அல்லது உண்மையானதா என்று தெரிவிக்கின்ற பொறுப்பு முதலமைச்சர் அவர்களுக்கு இருக்கிறது. ஆகையினால் இவைகள் எல்லாம் தெரிந்ததற்குப் பிறகு உண்மைக்குப் புறம்பானதா இல்லையா என்பதைப் பற்றி நாம் முடிவு செய்யவேண்டுமே தவிர, திடீரென்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்ன கருத்தை, அவரிடத்தில் இருக்கிற அன்பின் காரணமாக ஒருவேளை ஏற்றுக்கொள்ள வேண்டுமானால் நான் ஏற்றுக்கொள்ள வேண்டுமே தவிர, தயவு செய்து தீர விசாரித்து ஒரு முடிவு எடுப்பதுதான் நியாயம் என்று நான் கருதுகிறேன். அதுவரை இந்தப் பிரச்சினையைப் பற்றித் தொடர்ந்து பேசாமல், முதலமைச்சரைக் கலந்து, கேட்டுத் தெரிந்ததற்குப் பிறகு இதுபற்றி ஒரு முடிவு எடுக்கலாம் என்று சொன்னேன். ஏற்கனவே, * * * என்ற அந்த வார்த்தை புண்படும்படி இருக்குமேயானால் அதை மாற்ற வேண்டுமென்று நான் சொன்னதற்குக் காரணம் உண்மைக்குப் புறம்பானது என்று அவர் சொன்ன கருத்தை, முடிவு செய்ததற்குப் பின்னாலே, பார்த்துக் கொள்ளலாம் என்பதற்காக சொன்னேன் என்பதையும் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, முன்னவர் அவர்கள் தந்திருக்கிற விளக்கம், இது உண்மையா இல்லையா என்று தெரிந்ததற்குப் பிறகு முடிவெடுக்கலாம் என்பது. உண்மையா, இல்லையா என்று தெரியாமலேயே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லலாமா என்பதை முன்னவர் அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : நான் ஏற்கனவே சொன்னேன். இது தமிழகத்திலே பரவலாகப் பேசப்பட்ட பேச்சு (குறுக்கீடு) நான் ஏற்கனவே சொன்னேன். தமிழகத்திலே பரவலாகப் பேசப்

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



பட்ட பேச்சு. பரவலாகப் பேசப்பட்டது என்பதைவிட, அந்தப் பேச்சை நியாயமாகக் கருதினார்கள் என்ற காரணத்தினால் அனைத்திந்திய அண்ணா தி.மு.க.வை மக்கள் ஆட்சிக் கட்சியாக ஆக்கினார்கள் என்றும் . . . .

(திரு. மு. கருணாநிதி எழுந்தார்) I am not Yielding. அப்படியும் ஒரு கருத்து இருக்கிறது என்பதைச் சொல்வதற்காக நான் சொல்லுகிறேன். இந்தப் பரவலான கருத்துக்களில் இருந்து மக்கள் அனைத்திந்திய அண்ணா தி.மு.க.வை ஆட்சிக் கட்சியாக மாற்றினார்கள் என்று நினைத்து இந்தக் கருத்தை மாண்புமிகு அமைச்சர் இராகவானந்தம் அவர்கள் சொல்லியிருக்கக் கூடும். புண்படும் விதத்தில் இது அமைந்திருந்தால் அவைக் குறிப்பிலே இருந்து என்பதை மாற்றிவிடலாம் என்றும் சொல்லியிருக்கிறேன். ஆனால் உண்மையை உணர்ந்த பிறகு முடிவு எடுத்துக் கொள்ளலாம் என்றும் நான் சொல்லியிருக்கிறேன். ஆத்திரப்படாமல், அவசரப் படாமல் ரொம்பக் களங்கம் ஏற்பட்டுவிட்டது என்று கவலை கொள்ளாமல், பேச வேண்டும் எனது பெருமதிப்பிற்குரிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இவ்வளவு கோபமாக எழுந்து பேசுவார் என்று நான் எதிர்பார்க்கவில்லை. அந்த அளவுக்கு அவர் ஆத்திரப்படக்கூடாது. அனுபவம் மிக்க அவரிடத்திலே இருந்து பலவற்றைக் கற்றுக் கொண்டாக வேண்டுமென்று நான் கருதுகிறேன். அதிலே முக்கியமான ஒன்று அமைதி காக்கின்ற பண்பாடு. அதை அவரிடத்திலே கற்றுக் கொள்வதற்கு அவர் வாய்ப்பளிப்பார் என்றும் நம்புகிறேன்.

(திரு. க. அன்பழகன் எழுந்தார்).

திரு. ஏ. ரகுமான்கான் : பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் பேசுகிறாரா ? நீங்கள் பேசுகிறீர்களா ?

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, நாங்கள் எழுப்பிய பிரச்சினை, எதிர்க் கட்சித் தலைவர் என்ன சொன்னார்கள் என்ற அடிப்படையில் பிறந்ததல்ல. முன்னவர் அவர்கள், நிதியமைச்சராக இருப்பவர்கள்—இந்த அவையில் வரவு-செலவுத் திட்டத்தை வழங்கி இருக்கிறார்கள். வரவு-செலவுத் திட்டத்தின் முழு விவரங்களை வழங்குகிற ஏடுகளைப் பார்த்தால், 1975-76-ஆம் ஆண்டு வரவு-செலவு அறிக்கை, 1976-77—இலே தரப்பட்டுள்ள அறிக்கையிலே புள்ளி விவரங்களோடு முன்னவர் அவர்களாலே தரப்பட்டிருக்கின்றது—நிதியமைச்சராலே தரப்பட்டிருக்கின்றது;

---

(மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க முற்பகல் 9-44-9-45ல் சில சொற்கள் அகற்றப்பெற்றன)

[திரு. க. அன்பழகன்] [1977 ஆகஸ்ட் 1

எல்லா விவரங்களும் அரசாங்கத்தாலே தரப்பட்டு, அந்த நிதிநிலை அறிக்கைக்கு உள்ளாக கடந்த ஆண்டு நடைபெற்ற முழுவிவரங்களும் இருக்கின்றன. அப்படி இருக்கிறபோது, ஒரு அமைச்சர், * * * என்று கேள்வி நேரத்திலே, பொருத்தம் இல்லாமல், வரம்பு கடந்து, முறை தவறி சொல்வதும், முன்னவர் அவர்கள், அப்படி முறை தவறி சொல்லப்பட்ட கருத்து உண்மையா, தவறா, எதெது தவறு—உண்மை எது, தவறு எது என்பதை முடிவு செய்ய எவ்வளவு காலம் விவாதித்தாலும் சில விஷயங்களில் முடிவுகள் ஏற்படுவதில்லை—அப்படிப் பார்க்கும்போது, அவையின் மரபுக்கேற்ப, தரப்பட்ட பதில் இருந்ததா, அல்லது கடந்து இருந்ததா என்பதை—அவை முன்னவர், அனைவரின் சார்பில் பொறுப்பேற்று முன்வருகிற காரணத்தால் கூறவேண்டும். மனம் புண்பட்டிருந்தால் என்று சொல்வது—தனிப்பட்ட ஒருவர் மனம் புண்படுவது என்பது— அவைக் கருத்தல்ல, அவைக்கு அப்பாற்பட்டதாகிறது என்பதை முன்னவர் அவர்கள் கருதி, இது அவைக் குறிப்பிலே இடம்பெறக்கூடாது என்று முன்னவர் அவர்களே முன்மொழிய வேண்டுமென்று வலியுறுத்துகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே, இதைக் கேள்வி நேரத்திலே கூட கேட்டிருக்கலாம். காலம் கடந்த ஞானோதயம் என்று கருதுகிறேன்.

* * * * என்ற வார்த்தையை சபைக் குறிப்பிலிருந்து எடுத்து விடுங்கள் என்று நான் மீண்டும் வலியுறுத்தி, தயவு செய்து அவைத் தலைவரவர்கள் அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, விவாதத்திற்கு ஒரு முற்றுப் புள்ளி வைக்கக் கேட்டுக்கொள்கிறேன். அந்த வார்த்தைகள் மட்டுமே தவிர, அது தொடர்பான விஷயங்கள் அல்ல * * * * என்று வார்த்தைகளை மட்டும் நீக்க வேண்டும் என்று நான் தெரிவிக்கிறேன் மீதி, நிச்சயம் அவைக் குறிப்பில் இடம் பெறவேண்டுமென்ற தாழ்மையான அபிப்ராயத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : * * * என்ற பேச்சினை, குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டுமென்று உத்திரவிடுகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்களாக இருந்தாலும், அமைச்சர்கள் யாராக இருந்தாலும், எந்தப் பிரச்சினையில் எந்தக் கேள்வி கேட்கப்படுகிறதோ, அதை ஒட்டியே தங்களுடைய தகவல்களைச் சேகரிக்க வேண்டுமே தவிர, வாதப் பிரதிவாதங்கள் செய்வது நமது மரபுக்கு அழகல்ல. ஆகவே அமைச்சர்களும் சரி, உறுப்பி

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது



[1977 ஆகஸ்ட் 1

னர்களும் சரி, எந்தப் பிரச்சினை, எந்தக் கேள்விக்கு எழுப்பப்படுகிறதோ அதையொட்டி தகவல்கள் சேகரித்துத் தந்தால் மக்களுக்குப் பயன்படுகிற வகையில் அமையும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். (ஆரவாரம்)

## (6) 1977-78-ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது புலவர் கோவிந்தன் அவர்கள் பேசுவார்கள்.

புலவர் கா. கோவிந்தன் : பேரவைத் தலைவரவர்களே, 1977-78-ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு மனோகரன் அவர் இங்கே அளித்திருக்கிறார்கள். நிதிநிலை அறிக்கையை வைத்துத்தான் இந்த அரசினுடைய நிதிநிலைத் தன்மையை நாட்டு மக்கள் உணரக் கடமைப்பட்டிருக்கிறார்கள். "தி.மு.க. அரசு ஆட்சி செய்து, ஆட்சியிலிருந்து அகற்றப்பட்டபோது தமிழகத்தினுடைய" * * * என்ற குற்றச் சாட்டை இங்கே சொல்லி இருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்ட, முடிந்து போன விவாதத்தை புலவர் அவர்கள் ஆரம்பிக்கிறார்கள் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : புலவரின் பேச்சில் * * என்ற வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படவேண்டும்.

புலவர் கா. கோவிந்தன் : 1976-77-இல் இந்த மாநிலத்தின் வரவுசெலவுத் திட்டத்தை மாண்புமிகு திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் கொண்டு வந்தபோது அந்த நிதிநிலை அறிக்கையிலே பற்றாக்குறை இருந்தது.

[முற்பகல் 9—50.]

அவர்களுடைய நிதிநிலை அறிக்கையில் பற்றாக்குறையாக இருந்தது 9.98 கோடிதான். ஆனால் திரு. மனோகரன் அவர்கள் இந்த அவையில் இப்போது தந்திருக்கிற நிதி நிலை அறிக்கையில் உள்ள பற்றாக்குறை இருபதுக்கும் முப்பதுக்கும் இடையேயிருக்கிற கோடி ரூபாயாகும் என்பதை நான் அவைக்கு நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அப்போது அவர்கள் சொன்னார்கள், நிதி நிலை சரியாக இருப்பதால்தான் ரூபாய் 9.98 கோடி பற்றாக்குறை உள்ள நிதிநிலை அறிக்கையை ஆளும் கட்சியினர், குடியரசுத் தலைவர் ஆட்சியில் இருந்தவர்கள் அளிக்க முடிந்திருக்கிறது என்று. இப்போது இருபதுக்கும் முப்பதுக்கும், அதாவது இருபது கோடிக்கும் முப்பது

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க முற்பகல் 9-45—9-50 இல் சில சொற்கள் அகற்றப்பெற்றன.

[புலவர் கா. கோவிந்தன்] [1977 ஆகஸ்ட் 1

கோடிக்கும் இடையே பற்றாக்குறை உள்ள ஒரு நிதிநிலை
அறிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள் என்றால் அது இடைப்பட்ட
காலத்தில் தமிழகத்தின் நிதிநிலையைக் குறிப்பிட்டுக் காட்டுகிறது
என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். திரு. மனோகரன் அவர்
கள் மீது குறை கூற நான் முன்வரவில்லை, மாறாக பாராட்டக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசாங்கக் கருவூலத்தில் நிதி வழிகின்ற நேரத்தில் கேட்
கின்ற தொகையை, உங்களுக்கு எவ்வளவு வேண்டும் கேளுங்கள்
தருகிறேன் என்று சொல்லக்கூடிய நேரத்தில் ஒரு நிதிநிலை
அறிக்கையைத் தர அமைச்சர் அவர்களுக்கு நிறைய திறமை
தேவையில்லை, நிதித் துறை செயலாளருக்கும் நிறைய திறமை
தேவை இல்லை. நிதி இல்லை என்ற நிலைமையில் நிதி ஒதுக்க
வில்லை என்று சொல்கிற அளவிற்கு நிதி நிலை அறிக்கை கொண்டு
வருவதற்கும் அமைச்சர் அவர்களுக்கோ அல்லது நிதித்துறை
செயலருக்கோ நிறைய திறமை தேவை இல்லை. ஆனால் நிதி
இல்லாமல், எந்தத் துறைக்கும் நிதி ஒதுக்கக் கூடாது, ஆனால்
பார்க்கக்கூடியவர்கள் ஏராளமாக நிதி ஒதுக்கியிருக்கிறார்கள்
என்று சொல்லக்கூடிய அளவிற்கு ஒரு நிதி நிலை அறிக்கை
அளிக்கப்படுகிறது என்றால் அதற்கு நிச்சயமாக அந்தத் துறை
அமைச்சர் அவர்களுக்கும் நிதித் துறை செயலருக்கும் நிறைய
திறமை வேண்டும். அப்படிப்பட்ட திறமை நமது மாண்புமிகு
மந்திரியவர்களுக்கும், நிதித்துறை செயலருக்கும்
நிறைய இருக்கிறது என்பதற்காக அவர்களைப் பாராட்ட நான்
கடமைப் பட்டிருக்கிறேன். அதற்கு இரண்டொரு உதாரணங்
களைக் கூறவிருப்புகிறேன்.

நான் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுக்கு இங்கே
ஒரு பணிவான வேண்டுகோளை விடுக்க விரும்புகிறேன். இப்
போது ஆட்சிப் பீடத்தில் அவர்கள் அமர்ந்திருக்கிறார்கள்.
அவர்களை அங்கே அமர்த்தியவர்கள் ஹரிஜன மக்களும், மகளிரும்
தான் என்பதை நான் மறந்தாலும் அவர்கள் மறுக்க மாட்டார்
கள் என்பதை நான் கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.
நம்முடைய முதல் அமைச்சர் அவர்களிடம் இருந்து அவர்கள்
நிறைய எதிர்பார்த்தார்கள்.

திரு. செ. கிருஷ்ணன் : புலவர் அவர்களின் இந்தப் பேச்சுக்கு
என்ன ஆதாரம் இருக்கிறது என்று கேட்க விரும்புகிறேன்.

புலவர் கா. கோவிந்தன் : ஹரிஜன மக்களும் மகளிரும் நம்
முதல் அமைச்சர் அவர்களிடத்திலிருந்து ஏராளமாக எதிர்
பார்த்தார்கள். அவர்களுடைய வாழ்க்கை நிலை உயருவதற்கு
வாரி வாரி வழங்கப் போகிறார்கள் என்றெல்லாம் நினைத்தார்கள்.
நினைந்து வாக்களித்தார்கள். நாங்களும் இந்த நிதிநிலை
அறிக்கையில் அவர்கள் வாரி வாரி வழங்கப் போகிறார்கள் என்று
தான் எண்ணியிருந்தோம்.



1977 ஆகஸ்ட் 1] [புலவர் கா. கோவிந்தன்]

ஆனால், நிதிநிலை அறிக்கை அதற்கு மாறாக இருக்கிறது. ஹரி
ஜனங்களுக்கு வாரி வழங்கியிருக்கிறார்கள். என்னென்ன
கொடுத்திருக்கிறார்கள்? அவர்கள் பள்ளி இறுதி வகுப்பு
பயிலும் வரை இலவசமாகப் புத்தகங்கள் வழங்குவது என்றும்,
சிறப்புக் கட்டணங்களையும், தேர்வுக் கட்டணங்களையும் இலவச
மாக்குவதென்றும் முடிவு செய்துள்ளார்கள். இது ஹரிஜனங்
களுக்குக் கொடுத்திருக்கிற ஒரு பெரிய கொடை. இது இப்போது
நடைபெறவில்லையா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.
பள்ளிக்கூட இறுதி வகுப்பு வரையில் அவர்களுக்கு இப்போது
புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. மாநிலத்தில் இருக்கிற
அந்தத் துறை இயக்குநரின்கீழ் இருக்கிற மாவட்ட ஹரிஜன
நலத்துறை அதிகாரிகளின் மூலம் அது வழங்கப்படுகிறது. இரண்
டாவதாக, 'தேர்வுக் கட்டணம், சிறப்புக் கட்டணத்தைப் பொ
றுத்தவரையில் ஹரிஜன நலத்துறை அதிகாரியிடத்தில் இருந்து
இவர் ஏழைதான் என்று ஒரு பரிந்துரை பெற்றுவருவார்களே
யானால் தேர்வுக் கட்டணம், சிறப்புக் கட்டணம் இவை தேவை
யில்லை என்பது விதி. அந்த விதி இப்போதே இருக்கிறது.
முன்பு ரூ. 2,500 என்று ஒரு வருமான வரம்பு வைக்கப்பட்டிருக்
கிறது என்பது தான் வேறுபாடு. ஆனால் ரூ. 2,500 க்கு மேல்
ஆண்டு வருமானம் உள்ள ஹரிஜன மக்கள் தமிழ் நாட்டில்
எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை.

அடுத்து, கல்லூரியில் அவர்கள் கட்டணம் இன்றி பயில வசதி
அளித்திருக்கிறார்கள். இப்போது புகுமுக வகுப்பிற்கு ஹரிஜனங்
கள் மட்டுமல்ல எல்லோருக்குமே கட்டணம் கிடையாது.
அதற்குமேல் பட்டப்படிப்பு சம்பந்தப்பட்டமட்டில் ஹரி
ஜனங்களுக்கு, மாவட்ட ஹரிஜன நல அதிகாரியிடமிருந்து
ஒருவர் "இவர் ரூ. 2,500-க்கு மேல் ஆண்டு வருவாய் உள்ளவர்
அல்ல' என்ற பரிந்துரையைப்பெற்று வந்தால் அவர்களுக்கு
எந்தக் கட்டணமும் இல்லை. பெற்றோர் வருமானம் ஆண்டு
ஒன்றுக்கு ரூ. 2,500-க்கு மேல் இருக்கக்கூடாது என்ற வரம்பு
உள்ளது. எனவே இப்போது இருக்கிற நிலை ஏதோ இதுவரை
யில் ஒன்றும் இல்லாததைப்போல் காட்டி நாங்கள் இதை
ஹரிஜனங்களுக்காகச் செய்யப் போகிறோம் என்று சொல்லக்
கூடியநிலை இருக்கிறது என்பதைத்தான் சுட்டிக்காட்டுகிறேன்,
வாரிவழங்குவதுபோல் காட்டவேண்டும், ஆனால் வாரி வழங்கக்
கூடாது.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே,
மாண்புமிகு முன்னாள் சட்டமன்றத் தலைவரும்,
இந்நாள் சட்டமன்ற உறுப்பினருமான திரு. புலவர்
கோவிந்தன் அவர்கள் சொல்லுகின்ற கருத்தெல்லாம்
நிதி இல்லாமல் ஒரு அறிக்கையை தயார் செய்வதற்குநிதி
அமைச்சர் அவர்களுக்கும், நிதித்துறை செயலாளருக்கும் நிரம்ப

அறிவு இருக்கவேண்டும். என்றும், நிதி இருந்து அறிக்கையைத் தயாரிப்பதற்கு அறிவே தேவையில்லை என்றும் சொல்லுகிறார்கள் என்று நினைக்கிறேன். ஆக நிரம்ப அறிவு இருப்பதாக ஒப்புக்கொண்டதற்கு என் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

புலவர் கா. கோவிந்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டது, நிதி எதுவும் இல்லாமல் எதுவும் கொடுக்க முடியாது, நிதி எதுவும் கொடுக்கக் கூடாது. ஆனால் நிதி கொடுத்ததாக காட்டவும் வேண்டும் என்ற முறையில்....

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : புலவர் அவர்களுடைய பேச்சில் குறுக்கிடு செய்வதற்கு மிகவும் வருந்துகிறேன். தயவு செய்து அனுபவம் மிக்க அந்தப் பெரியவர் பேசும்போது, இதில் உள் நோக்கம் கற்பித்துப்பேச வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். மக்களுக்கு உதவி செய்கின்ற நிலையில் திட்டங்களைச் சொல்லும் போது, நிதி வழங்கவே கூடாது என்று எந்த அரசாவது நினைத்து நிதிநிலை அறிக்கையைத் தயாரிக்குமானால் அதைவிட படுமோசமாக எந்த அரசும் இராது. ஆகவே மேற்கொண்டு பேசும்போது புலவர் அவர்கள் ஏற்கனவே கட்டிக்காத்து வந்த பாரம்பரிய உணர்வோடு பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புலவர் கா. கோவிந்தன் : மாண்புமிகு மனோகரன் அவர்கள் குறிப்பிட்டது போல் நான் எந்தவிதமான உள்நோக்கமும் கற்பித்து இதில் பேசவில்லை. அப்படிப் பேசிப் பழகியவனும் இல்லை. நான் கூற வந்தது, அரிசனங்களுக்கு அளிக்கப்படுகின்ற சலுகைகளைப் பற்றி நிதி நிலை அறிக்கையில் 17-ம் பக்கத்தில் கொடுத்திருக்கிறார்கள். சலுகை அளிப்பதைப் பற்றி சொல்லும்போது, முன்பு பெற்றோரின் வருவாய் இவ்வளவு இருந்தால் அதற்கு மேல் சலுகை கிடையாது என்றிருந்தது. இப்போது பெற்றோரின் வருவாய் எவ்வளவு இருந்தாலும் இச்சலுகை அளிக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. முன்பு வருவாய் அளவு ஆண்டுக்கு 2,500 ரூபாய் வருமானத்திற்கு மேல் இல்லாமல் இருக்கவேண்டும் என்று இருந்தது. நடைமுறையில் இருக்கின்ற நிலைமை என்ன என்று பார்த்தால், ரூ. 2,500-க்கு மேல் வருவாய் உள்ள அரிசனங்கள் தமிழ்நாட்டில் எத்தனை பேர்கள் இருப்பார்கள்? இதனால் நன்மை பெறக்கூடியவர்கள் எத்தனை பேர்கள் இருப்பார்கள்? ஆகவே இவையெல்லாம் முன்பு இருந்த சலுகைகள் தான், புதிதாக எதுவும் செய்துவிடவில்லை. வேண்டுமென்றால் இப்போது சொல்லப்படுகின்ற சலுகையால் ஒரு சிலருக்கு கூடுதலாக நன்மை கிடைக்கலாம், அது நல்லது தான் என்கின்ற முறையில் தான் பேசுகிறேனே தவிர, நான் இதில் குறை காணவில்லை.





இரண்டாவது அரிசன மக்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கும் திட்டத்தில், முன்னாள் முதல்வர் டாக்டர் கலைஞர் முதலமைச்சராக இருந்த காலத்தில், தமிழ்நாட்டில் உள்ள ஐந்து லட்சம் அரிசனங்களுக்கும், காற்றாலோ, தீயாலோ, மழையாலோ பாதிக்கப்படாத வகையில் 4000, 5000 ரூபாய் மதிப்புள்ள வீடுகள் இலவசமாக கட்டிக்கொ வேண்டும் என்று திட்டமிட்டு, ஆண்டு ஒன்றுக்கு ஒரு லட்சம் வீடுகள் கட்டப்பட வேண்டும் என்று முடிவு செய்து, 1975-ம் ஆண்டு முடிகிற வரையில், 30 ஆயிரம் வீடுகளை கட்டுவதற்கு நிதி ஒதுக்கி கிட்டத்தட்ட 40 ஆயிரம் வீடுகள் கட்டப்பட்டன. மத்திய அரசிலிருந்து வந்த அமைச்சர்கள் இவற்றைப் பார்க்கின்ற நேரத்தில், இப்படிப்பட்ட வீடுகள் எல்லாம் ஊரின் ஓரத்தில் கட்டிக்கொடுத்திருக்கிறார்கள், இவற்றையெல்லாம் ஊரின் நடுவே கட்டியிருக்கவேண்டாமா என்று கேட்டார்கள். அவர்களது வழியில் வந்த இவர்களும் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கின்ற வகையில், இங்கே அமைச்சர்களாக வந்திருக்கிறவர்கள், இந்த நிதி நிலை அறிக்கையில், ஊருக்கு மத்தியில் அரிசனங்களுக்கு ஏராளமான வீடுகளை கட்டித்தருவார்கள் என்று எதிர்பார்த்தோம். ஆனால் இப்போது ஒதுக்கப்பட்டிருக்கும் ரூபாய் 3 கோடி என்பது போதாது என்பதை முன்னால் பலரும் தெளிவாக பேசியிருக்கிறார்கள். முக்கியமாக அரிசனங்களுக்கு வீடுகள் கட்டிக் கொள்வதற்காக வட்டியில்லாக் கடன் கொடுக்கப்படும் என்று சொல்லப்பட்டிருப்பதைப் பார்க்கும் போது, அரிசனங்களுக்கு இலவசமாக வீடு கட்டிக்கொடுக்கும் திட்டம் அரசிடம் இருந்திருக்குமானால், இந்த வட்டியில்லாக் கடன் கொடுக்கும் திட்டத்திற்கு இடமிருந்திருக்காது. எனவே இலவசமாக வீடு கட்டிக்கொடுக்கப்படுமா என்பதில் ஐயம் ஏற்படுகிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, மகளிருக்காக ஏராளமாக செய்வார்கள் என்று எதிர்பார்த்தார்கள். 1,000 மகளிர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு 150 ரூபாய் சுருக்கெழுத்து, தட்டெழுத்து பயிலுவதற்கு கொடுக்கப்படும், அதாவது மாதம் 12½ ரூபாய் கொடுக்கப்படும், இதைப் பார்த்தால், ஆண்டு ஒன்றுக்கு 1 லட்சத்து 50 ரூபாய் செலவு செய்யப்படும் என்று தெரிகிறது, இதைப் பார்க்கும் போது என்ன தோன்றுகிறது என்றால், திருமண வீடுகளில், திருமணம் முடிந்த பின்னால் மொழி எழுதுவதாக சொல்லி, பெயரை நீட்டமாக சொல்லி, திருமணப் பரிசு ''கெட்டி வராகன்'' ஒன்று என்று சொல்வார்கள். கெட்டி வராகன் என்றால் இரண்டு அணா என்று பொருள். இப்படி காலையிலிருந்து மாலை வரை கெட்டி வராகன் ஒன்று, கெட்டி வராகன் ஒன்று என்று சொல்லிக்கொண்டிருப்பார்கள். அதைப் போன்று ஆண்டு தோறும் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் இதற்கு செலவு செய்வதை சொல்லியிருக்கிறார்கள். இதற்குப் பதிலாக சுருக்கெழுத்து, தட்டெழுத்து பயின்றவர்களுக்கு ஆண்டுதோறும்

[புலவர் கா. கோவிந்தன்] [1977 ஆகஸ்ட் 1

ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு தரப்படும் என்று சொல்லியிருந்தால் மகளிர் குலம் இதனை பாராட்டியிருக்கும்.

[முற்பகல் 10·00.]

கைம்பெண் சிறார்களுக்கு இலவசப் புத்தகம் அளிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். இலவசப் புத்தகம் அளிக்கப்படும் என்று சொல்கிற நேரத்தில் ஏழை எளிய மக்களுக்கு இந்த இலவச புத்தகம் அளிப்பதால் எவ்வளவு பேர் பயன் அடைவார்கள் என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும். இதை நான் சொல்கிற நேரத்தில் நிதி அமைச்சர் அவர்கள் என்மீது கோபித்துக் கொள்ளாமல் எவ்வளவு பேர் நம்மீது நம்பிக்கை வைத்து வாக்களித்தார்களோ அவர்களுக்கு எல்லாம் நாம் செய்தது போதுமா என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, வரியே போடாத பட்ஜெட் என்ற கருத்தைச் சொன்னார்கள். இப்போது வரிவிதிப்பு முறையில் புதிய முறை கையாண்டு வருகிறார்கள். நேர்முக வரி, மறைமுக வரி என்பவற்றை மக்கள் நல்ல முறையில் புரிந்து கொண்டு இருக்கிறார்கள். ஆனால் இப்போது போடுகிற புதிய முறை வரி சாணக்கிய முறை வரி விதிப்பாகும். சாணக்கிய முறை வரிவிதிப்பு என்றால் ஒரு நாட்டின் அரசுக் கருவூலம் காலியாகிவிட்டது என்றால், அந்த நாட்டின் அரசர் உடனே மந்திரியை அழைத்து என்ன செய்யலாம் என்று கேட்ட நேரத்தில், அவர் ஒரு புதிய வழியைச் சொன்னார். இந்த ஊரிலே உள்ள மந்தைவெளியில் உள்ள வயதான மரத்தில் இருக்கிற பொந்தில், அரசுக்கு நம்பிக்கையுள்ள ஒருவன் புகுந்து கொண்டு பயங்கரமாகக் கூச்சல் போட்டு கும்பல் கூட்டவேண்டும். அப்போது அந்த ஊரிலே ஒரு பயங்கர அச்சம் ஏற்படும். அப்படிப்பட்ட நேரத்தில் வேறொரு சாமியார் வரவேண்டும். என்ன உங்கள் குறை என்று கேட்க வேண்டும். அவர்கள் தங்களுடைய குறையைக் கூறிய பின் அவர் சொல்வார், அந்த மரத்தில் சொர்ண பூதம் இருக்கிறது, அதற்கு பசி அதிகமாகி விட்டது, வீட்டிற்கு இவ்வளவு தங்கம் அதனுள் கொட்டினால் பசி அடங்கிவிடும் என்று சொல்வார். ஊர் மக்களும் அந்த பொந்திலே கொண்டு வந்து தங்கத்தைக் கொட்டு[illegible]ர்கள். கருவூலம் நிரம்பிவிடும். இதுதான் சாணக்கிய மு[illegible]ற வரிவிதிப்பாகும். அதைப் போல் இந்த அரசாங்கமும் ரூ. 1 கொடு, ரூ. 1 லட்சம் தருகிறோம் 15 ரூ. தாருங்கள் 10,000 தருகிறோம் என்று சொல்கிறது. இது நல்ல முறையல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ரூ. 15 கொடுத்தால் ரூ. 10,000 அல்லது ரூ. 20,000 என்ற கேள்வி முன்னே எழுப்பி



1977 ஆகஸ்ட் 1] [புலவர் கா. கோவிந்தன்]

னார்கள். அது எப்படி இருந்தாலும், ரூ. 15 கொடுத்தால் அரசு ரூ. 10,000 அல்லது ரூ. 20,000 தருகிறேன் என்று சொல்வது நான் உமி கொண்டு வருகிறேன், நீ அரிசி கொண்டு வா, நான் அதைச் சேர்த்து ஊதி ஊதி தருகிறேன் என்று கிராமத்திலே பழமொழி உண்டு. அதைப் போல் இது ஒரு மறைமுகமான வரிவிதிக்கும் முறை என்பதை மாத்திரம் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடைசியாக என்னுடைய தொகுதியைப் பற்றி ஒரிரு கருத்தைச் சொல்லி என் உரையை முடிக்கலாம் என்று கருதுகிறேன். சர்க்கரை ஆலை அமைப்பதைப் பற்றி ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். வடாற்காடு மாவட்டத்தில் சர்க்கரை ஆலை வேண்டும் என்று கோரிக்கை நீண்டகாலமாக இருக்கிறது. அந்தக் கோரிக்கை அரசின் முன்னே வைத்த நேரத்தில் அந்தச் சர்க்கரை ஆலைத் துறையிலே உள்ள வல்லுநர்கள் எல்லாம் சேர்ந்து செய்யாறு பகுதிக்கு வந்து ஆய்வு செய்தார்கள். அவர்கள் யார் என்றால்—

Joint Director of Sugar (Projects),Joint Director of Sugar (Cane)., Deputy Director of Agriculture (Sugarcane Development). District Agricultural Officer, Cane Development, Managing Director, Dharmapuri District Co-operative Suger Mills. Chief Cane Officer, Madurantakam Co-operative Sugar Mills.

1975 ம் ஆண்டு நவம்பர் 15 ம் தேதி அவர்கள் சுற்றிப் பார்த்தார்கள். சுற்றிப் பார்த்து விட்டு அவர்கள் ஒரு பரிந்துரை செய்து இருக்கிறார்கள். இப்போது பெரிய சர்க்கரை ஆலைகளைத் தான் அமைக்கிறோம். பெரிய சர்க்கரை ஆலைகளை அமைப்பதைக் காட்டிலும், சிறிய சிறிய சர்க்கரை ஆலை அமைப்பது முறையானது என்று கருத்து தெரிவித்து இருக்கிறார்கள். அவர்களுடைய பரிந்துரை.

After detailed examination of more than a dozen areas in the State, this Committee is of the view that no more large size sugar factories should be set up in the State in addition to those already recommended as the establishment of any more large size sugar factories will affect the existing and proposed sugar mills and may also result in substantial diversion from food crops. The Government of Tamil Nadu have also accepted the findings of the Survey Committee that there would be no scope for setting up of any more large sized sugar mills in the State vide letter No. 75084/MID. 3/74-5, Industries Department, dated 23rd August 1975 addressed tothe Managing Director, Tamil Nadu Sugar Corporation Limited.

Assuming 30 tonnes of sugarcane yield per acre, it would be sufficient if a compact cane area of 2,000/3,000 acres is available for a mini plant.

குறைந்த ஆட்களைக்கொண்டு நிலங்களைப் பார்வையிடலாம்.

Arrangements for provision of production credit and supervision of cane cultivation will be very convenient for the factory as the area and the number of persons to be serviced would be small and compact.

என்று கொடுத்து விட்டு, பிறகு சிறிய சர்க்கரை ஆலை அமைக்க என்னென்ன நியாயங்கள் இருக்கின்றன என்பதை அவர்கள் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். (கையிலுள்ள குறிப்பைக் காட்டி) இது அவர்கள் அரசுக்கு அளித்துள்ள அறிக்கையின் காப்பியாகும். அவர்கள் சொல்கிறார்கள், குறைந்த ஏக்கர் போதும்.

கரும்பு ஆலைக்கு கொண்டு செல்வதிலே காலதாமதம் ஏற்படாது.

Large sized sugar factories are depending upon lorries for transporting major portion of the cane. Roughly, the transport cost comes to about 15 per cent of the cost of the cane. Against this, a mini sugar factory having a compact area within a radius of say 8 Kms. will be able to get the entire cane even in bullock carts. In addition to this advantage, these factories will be able to get fresh cane also, which would help increase sugar recovery.

என்றும்,

பெரிய ஆலை ஒன்றை ஏற்படுத்துவதற்குப் பதிலாக, 7 சிறிய ஆலைகள் அமைக்கலாம் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது; அமைப்பு செலவு குறைவு ஆகும்.

The present cost of a 1,250 TCD factory is said to be around Rs. 750 lakhs. By spending this enormous amount, it will be possible to develop only one area and provide employment opportunities for people of that area only.

If a mini sugar plant could be set up with an investment of say Rs. 100 lakhs, seven such units could be set up with the same amount of investment required to set up one single 1,250 TCD plant, and develop seven areas against developing only one area.

அதிகக் கரும்பு அரைக்கலாம்.



Further the crushing capacity for all the seven mini factories established within the total investment required for a single 1,250 TCD factory put together will be 21,00 tonnes per day against 1,250 tonnes per day. Therefore crushing capacity per unit of investment will also be increased by about 68 per cent,

என்றும், உற்பத்திச் செலவு குறைவதற்கு,

Similarly the capital cost per tonne of cane crushed would also come down from Rs. 60,000 in a 1,250 TCD plant to Rs. 33,000 in a 300 TCD plant

என்று சொல்லப்பட்டிருக்கிறது.

One other very important matter relating to setting up of mini-units is worthy of mention. As per notification S.O. 98(E)/DRS/29B/73-1, dated 16th February 1973, of the Ministry of Industrial Development, Government of India.

இதன்படி, சிறிய ஆலை அமைக்க இந்திய அரசின் லைசென்ஸ் தேவையில்லை.

mini sugar plants with capital investment of Rs. 1 crore per plant and machinery and connected civil works need not get licences from the Government of India. The mini units will only have to be registered with the Chief Director of Sugar and Vanaspathi, Government of India, New Delhi

என்றும் பரிந்துரை செய்துள்ளார்கள்.

ஒரு சிறிய ஆலையை அமைப்பதுதான் நல்லது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதை நம் அரசும் ஏற்றுக்கொண்டிருக்கின்ற கருத்தைக் கூறி, அதன்படி செய்யாற்றில் அமைப்பதற்கு வாய்ப்பாக இருக்கும் என அக்குழு பரிந்துரை செய்துள்ளது.

As recommended by the team of officers who visited the Cheyyar area on 15th November 1975, there would be good scope for setting up a mini sugar factory with 300 TCD capacity in Cheyyar taluk in North Arcot district. The team of officers after inspecting various possible locations for the factory have recommended a site on the bank of river Cheyyar at a distance of 3 Kms. from Cheyyar town in the village by name Vellai either on the right or left side of the road from Cheyyar: Cheyyar anicut.

—என்ற பரிந்துரையைச் செய்திருக்கிறார்கள். பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பரிந்துரையை உங்கள் மூலமாக, அவையின் முன்னவர் அவர்களுக்கு அளிக்கிறேன். இதை அரசு ஏற்றுக்

கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இன்னும் என்னுடைய தொகுதியைப் பற்றிய முக்கியமானப் பிரச்னைகளை பேச வேண்டி இருந்தாலும், பின்னர் பேசிக் கொள்கிறேன் என்று சொல்லி, இத்துடன் முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*திரு. ஆ. வெள்ளைச்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், ஆத்தூர் சட்டமன்றத் தொகுதியின் சார்பாக இந்தப் பேரவையின் உறுப்பினராகப் பணியாற்றும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த தானைத் தலைவர், புரட்சித் தலைவர் அவர்களுக்கும், என் தொகுதியின் வாக்காளர் பெருமக்களுக்கும் முதற்கண் என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு என் கன்னிப் பேச்சை துவக்கயிருக்கிறேன்.

கடந்த வாரம், சென்னை நகரில் மாணவர்களிடையே ஒரு பதட்ட நிலை காணப்பட்டது. அந்தப் பதட்ட நிலை அவர்களுடைய உரிமைக்காக ஏற்பட்டது என்பது ஒருபுறம் இருந்தாலும், அந்த பதட்ட நிலைமைக்கு இங்கே இந்த மாமன்றத்திலே கண்ணீர் வடித்தார்களே, ஓங்கி குரல் கொடுத்தார்களே, அவர்கள் கடந்து வந்த பாதை என்ன என்பதைத் தெரிவித்துக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

இங்கே கடந்த வாரம் மாணவர்களுக்காக குரல் கொடுத்தார்களே, அவர்கள் கடந்த காலத்திலே எந்த அளவுக்கு மாணவச் சமுதாயத்தினருக்கு அநீதிகள் இழைத்தார்கள், கொடுமைகள் புரிந்தார்கள் என்பதைத் தெளிவாக இங்கே எடுத்துக்கூற கடமைப் பட்டிருக்கிறேன். அப்படிக் கூறுகின்ற வகையிலே அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில், உதயகுமார் என்ற மாணவனுடைய மண்டை கபாலத்தை பிளந்து, அவரது உடலை குளத்திலே தூக்கி எறிந்தார்கள். அன்றையத் தினம் டாக்டர் பட்டம் பெறுவதற்காகக் கலைஞர் அவர்கள் அங்கு அன்று சென்றபோது, காவல்துறையினரால் இந்த உதயகுமாரின் மண்டைக் கபாலம் பிளக்கப்பட்டு, உடலைக் குளத்திலே தூக்கி எறிந்தார்கள்.

[முற்பகல் 10–10]

இதைவிடக் கொடுமை என்னவென்றால் பெற்ற தந்தை கூட என்னுடைய மகன் என்று கூறிக்கொள்ள முடியாத அவலநிலை கடந்த ஆட்சியில் இருந்தது. இப்படிப்பட்ட ஒரு கொடுமை மாணவர் சமுதாயத்திற்கு அந்த ஆட்சியில் இழைக்கப்பட்டது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

பாளையங்கோட்டையில் உரிமைக்காகப் போராடிய மாணவர்கள் தாம்பிரபரணி ஆற்றின் இரு கரைகளிலும் காவல் துறையினர் நின்று கொண்டு மாணவர்களின் மண்டைக் கபாலங்களை



உடைத்தெறிந்தனர். தாம்பிரபரணியாறு ரத்த ஆறாக ஓடியது. அப்படி அன்று இருந்த ஆட்சி மாணவர்களுக்குத் தீங்கிழைத்தது. லூர்துநாதன் என்ற மாணவத் தோழன் தாம்பிரபரணி ஆற்றில் தூக்கி எறியப்பட்டுக் கொல்லப்பட்டான்.

அதற்கடுத்து திருச்சி கிளைவ் ஹாஸ்டலில் பச்சிளம் பாலகர்களின் எலும்புகள் நொறுக்கப்பட்டன. திருச்சி கிளைவ் விடுதியில் இன்னும் அந்த ரத்தம் உறைந்து கிடக்கிறது. ஏதும் அறியாத பாலகர்கள் தாக்கப்பட்ட ஒரு கொடூரமான ஆட்சி கடந்த காலத்தில் நடைபெற்றது.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அருமை அடலேறு மாணவத் தோழன் பாலசுந்தரம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் வளர்க்கின்ற அரணாக இருக்கிறானே, புரட்சித் தலைவர் புகழைப் பரப்புகிறானே என்ற காரணத்தால் அந்த பாலசுந்தரத்தை மாறுகால், மாறுகை வெட்டிக் கொன்றார்கள். இப்படிப் பல கொடுமைகளை மாணவ சமுதாயத்திற்கு இழைத்தவர்கள்தான் இன்றையதினம் மாணவ சமுதாயத்திற்காக நீலிக் கண்ணீர் வடிக்கிறார்கள் ; மாணவ சமுதாயத்திற்காக ஓங்கிக் குரல் கொடுக்கிறார்கள்.

புரட்சித் தலைவர் அரசு மாணவர் பிரச்சினைகளை அனுதாபத்துடன் பார்க்கக்கூடிய அரசு. ஆனால் கடந்த கால ஆட்சியில் மாணவர்கள் கோட்டைக்குள்ளே நுழைந்து குறைகளைத் தெரிவிக்க வந்தபோது அவர்கள் என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்பது எல்லாருக்கும் தெரியும். 1974 ஆம் ஆண்டு என்று கருதுகிறேன். சட்டமன்றத்தில் சில கல்லூரி மாணவர்கள் காலரியிலிருந்து, மாணவர்களைத் சந்திக்க முதலமைச்சர் மறுத்த காரணத்தால் ' கருணாநிதியே ராஜினாமா செய் ' என்று துண்டுப் பிரசுரங்களை வீசினார்கள். துண்டுப் பிரசுரங்களை வீசிய மாணவர்களை சபாநாயகர் அறைக்கு அழைத்துச் சென்று அன்றையதினம் ஆட்சியில் இருந்த திராவிட முன்னேற்றக்கழக சட்ட மன்ற உறுப்பினர் அந்த மாணவர்களைத் தாக்கிய கொடுமை நடந்தது. சட்டமன்ற உறுப்பினர் அன்று மாணவர்களைத் தாக்கினார்.

புலவர் கா. கோவிந்தன் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போது, சென்ற ஆட்சியில், இந்த அவை நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது யாரோ மாணவர்கள் மாடியிலிருந்து துண்டுப் பிரசுரங்களை வீசிய நிகழ்ச்சிக்காக அவர்களைப் பேரவைத் தலைவருடைய அறைக்கு அழைத்து சென்று அடிக்கப்பட்டார் என்ற கூற்றைச் சொல்லுகிறார். அப்படிப்பட்ட நிகழ்ச்சி எதுவும் அப்போது நடைபெறவில்லை என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே அன்று இழைக்கப்பட்ட கொடுமைக்காக நாங்கள் 26,000 மாணவர்களை சென்னை நகரில் அனைத்துக் கல்லூரிகளையும் மூட வைத்து

அன்றைய முன்னாள் முதல்வர் கருணாநிதி அவர்களைச் சந்திப்பதற்காக நேத்தாஜி அவர்களும், பட்டுக்கோட்டை ராமசாமி அவர்களும், அருமை சட்டமன்ற உறுப்பினர் வெள்ளைச்சாமி அவர்களும், நானும் அந்த 26,000 மாணவர்களுடன் அணி வகுத்து வந்து மதிப்பிற்குரிய முதல்வர் அவர்களைச் சந்திப்பதற்காகவும், எங்களுடைய கோரிக்கைகளைக் கொடுப்பதற்காகவும் நாங்கள் அனுமதி கேட்டோம். ஆனால் எங்களுக்கு அனுமதி தர மறுத்தார்கள். எங்களுக்கு ஜனநாயக உரிமைப்படி நாங்கள் கேட்ட கோரிக்கைகளுக்கு அவர் நிவாரணம் தந்திருக்க வேண்டும். ஆனால் எங்களைச் சந்திக்க மறுத்த காரணத்தால் நாங்கள் மறு தினம் 7 பேர்கள்—அதிலே நானும் ஒருவன்—சட்டமன்ற பார்வையாளர் பகுதியில் புகுந்து நோட்டீசை வீச வேண்டிய சூழ்நிலைக்கு ஆளாக்கப்பட்டோம். அது தவறா இல்லையா என்பதைப் பற்றி இங்கே நான் பேசத் தயாராக இல்லை. இருந்தாலும் எங்களுடைய உள்ளக் கிடக்கையை, எழுச்சியின் வேகத்தைத் தாங்க முடியாத காரணத்தால் அன்று அந்த நிலைக்கு ஆளாக்கப்பட்டோம்.

அதன் பிறகு சட்டசபை சபாநாயகர் அறைக்கு எங்களை அழைத்துச் சென்றார்கள். அழைத்துச் சென்ற எங்களைப் பார்த்து மதிப்பிற்குரிய உறுப்பினராக இருக்கிற துரை முருகன் அவர்கள், 'என்னடா நினைத்துக்கொண்டிருக்கிறீர்கள்,' என்று கேட்டார்கள். நாங்கள் போகிற வழியில் அப்போது உறுப்பினராக இருந்த வீராசாமி அவர்கள் தம்முடைய கைவிரல் மோதிரத்தால் என்னுடைய கன்னத்தைக் கிழித்தார்கள், இப்படி சபாநாயகர் அறையிலேயே தொல்லைக்கு ஆளான. அடிக்கப்பட்ட மாணவர்களில் நானும் ஒருவன் என்பதை நான் முன்னாள் சபாநாயகர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புலவர் கா. கோவிந்தன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் பேரவைத் தலைவராக இருந்தபோது அந்த அறையிலே அடிக்கப்பட்டார்கள் என்பதை நான் மறுக்கிறேன். வேறு இடத்திலே என்ன நடந்தது என்பது எல்லாம் எனக்குத் தெரியாது. இங்கே நோட்டீஸ் வீசினார்கள் நான் இருக்கிற போது, அவையிலே நான் வேறு ஒருவரை உட்கார வைத்துவிட்டு என்னுடைய அவைக்குச் சென்ற நேரத்திலேயும் சரி, அதற்கு முன்பும் நான் அவையில் இருந்த நேரத்திலேயும் என்னுடைய அறையிலே யாரும் துன்புறுத்தப்படவில்லை, வெளியே நடந்தது எல்லாம் எனக்குத் தெரியாது. பேரவைத் தலைவர் அறையிலே அடித்தார்கள் என்பதை நான் வன்மையாக மறுக்கிறேன்.

* திரு எஸ். ஆர். இராதா : திரு. வெள்ளைசாமி அவர்களும், திரு. வின்சென்ட் அவர்களும் சொன்னதை முன்னாள் சபாநாயகர் அவர்கள் அறையிலே நடந்ததாகச் சொன்னபோது, முன்னாள்





சபாநாயகர் முன்னிலையில் அடித்தார்கள் என்று அவர்களிலே யாரும் சொல்லவில்லை, அவர்களுடைய அறையிலே அடித்தார்கள் என்றுதான் சொன்னார்களே தவிர, அவர்களுடைய முன்னிலையில் அடித்ததாகச் சொல்லவில்லை. முன்னாள் சபாநாயகர் அவர்களும் அதையேதான் சொல்கிறார்கள். ஆகவே அவர் இருக்கும்போது அடிககவில்லையென்று அவர்கள் சொல்வது ஏற்றுக் கொள்ளவேண்டிய ஒன்று.

புலவர் கா. கோவிந்தன் : அவைத் தலைவர் அறையில் இல்லாத போது நடந்திருக்கும் என்ற கருத்துப்படப் பேசுகிறார்கள். அந்த அறையிலே நான் இல்லாதபோது வேறு யாரும் நுழைவதற்கு இடம் தருவதில்லை, யாராவது நுழைய வேண்டுமானால் செயலாளரையோ அல்லது எனக்குத் துணைபுரியக்கூடியவர்களையோ கேட்டு அனுமதிபெற்றுதான் நுழையவேண்டும், அனுமதியில்லாமல் நுழைய முடியாது. நான் இருக்கிறபோதும், நான் இல்லாத போதும் அறையிலே அடிக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரை முருகன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தான் படிக்கிற காலத்திலேயே தான் நோட்டீஸ் வீசிய பிரதாபத்தை எடுத்துச் சொன்னார்கள். நான் அதைப்பற்றி இப்போதுதான் கேள்விப்படுகிறேன். அந்த நண்பர் இப்போது உறுப்பினராக வந்திருக்கிறார். நான் ஏதோ என்னடா என்று கேட்டதாக எல்லாம் சொல்கிறார், அது மட்டுமல்ல, அவையில் இல்லாத திரு. வீராசாமி அவர்களைப்பற்றி குறிப்பிடுகிறார். அந்த நிகழ்ச்சி நடந்த போது நோட்டீஸ் போட்டது இவர்தானா என்று தெரியவில்லை, அப்படிப்பட்ட நல்ல காரியத்தைச் செய்தவர்தான் இங்கு உறுப்பினராக வந்திருக்கிறார் என்று நினைக்கிறேன். அவரை நான் அப்போது பார்க்கவே இல்லை. தவறான கருத்தை இந்த அவையிலே சொல்கிறார், அப்படிச் சொல்வதை அனுமதித்தால் வெளியே மக்களுக்கு என்மீது தவறான எண்ணம், கருத்து ஏற்படும், ஆகவே என்னைப்பற்றியும், இந்த அவையில் இல்லாத திரு. வீராசாமி பற்றியும் சொன்னதை அவைக்குறிப்பில் இருந்து நீக்கிவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. மி. வின்சென்ட் : அன்றைய தினம் பேசும்போது குறிப்பிட்டார்கள். கிளைவ் விடுதிச்சம்பவங்களையும், பாளைப் படுகொலைகளையும்பற்றி விசாரணை நடத்தி அவர்கள் கொடுத்த தீர்ப்பிலே சொல்லியிருக்கிறார்கள்..........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதைப்பற்றிப் பேச வேண்டாம். நீங்கள் சம்பந்தப்பட்ட உறுப்பினர் என்பதால் அனுமதி கொடுக்கப்பட்டது. இந்தச் சம்பவம்பற்றி மட்டும் கருத்துக்கள் இருந்தால் சொல்லவும்.

திரு. மி. வின்சென்ட்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே நான் பேசியது ஆதாரமற்ற உண்மைக்கும் புறம்பான கருத்து என்று துரைமுருகன் அவர்கள் சொன்னால், அது முற்றிலும் தவறு என்றும், அந்தச் சம்பவம் நடந்தது என்றும், சபாநாயகர் அறைக்குள்ளே எங்களைப் பார்த்து அவர்கள் அந்த வார்த்தைகளைச் சொன்னார்கள் என்பதும் உண்மைதான் என்பதையும் நான் தெளிவாகச் சொல்லிக்கொள்கிறேன்.

[முற்பகல் 10.20]

திரு. துரை முருகன்: துணைச்சபாநாயகரவர்களே, அத்தகைய நிகழ்ச்சிகள் நடக்கும்பொழுது நான் சபாநாயகர் அறைக்குச் செல்லவும் இல்லை, இவரை நான் பார்க்கவும் இல்லை, அப்படிப் பட்ட எந்த நிகழ்ச்சியிலேயும் நான் பங்கேற்கவும் இல்லை என்பதைத் திட்ட வட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அன்று நடந்ததாகச் சொல்லப்படும் இந்தச் சம்பவத்திலே ஒரு தரப்பிலேயிருந்து நடந்தது என்றும், மறுதரப்பிலேயிருந்து அது நடைபெறவில்லை என்றும் இருவரும் சொல்லுகின்ற அந்த நேரத்திலே என்ன நடந்தது என்பது எனக்குத் தெரியாது என்ற காரணத்தினால், இந்த நேரத்திலே நீங்கள் இருவரும் சொன்னதும் பத்திரிகையிலே வரும். ஆகவே, அவர் சொல்லியது உண்மையாக இருக்குமானால் அவருக்குச் சாதகமாகவும், அவர் சொல்லியது உண்மை இல்லை என்றால் உங்களுக்குச் சாதகமாகவும் இருக்குமாதலால் அவை அப்படியே இருக்கட்டும் என்று சொல்லி, தொடர்ந்து அதைப்பற்றிப் பேசாமல் மாண்புமிகு உறுப்பினர் திரு வெள்ளைச்சாமி அவர்களைப் பேச அழைக்கிறேன்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இங்கே நடந்த ஒரு சம்பவத்தைப்பற்றி நான் குறிப்பிட்டேன். குறிப்பிட்ட சம்பவத்திற்கு நான் அந்த நேரத்திலே, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலே இருந்த நேரத்திலே நடந்தவற்றிற்குச் சாட்சியை வைத்திருக்க முடியாது. அடிபட்ட 6 மாணவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் சாட்சி சொல்லுவார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினருக்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்தப் பிரச்னைக்கு முடிவு சொல்லியாகிவிட்டது. எனவே, மேற்கொண்டு தொடர்ந்து அதைப்பற்றிப் பேசாமல் வேறு விஷயங்களைப் பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி: அந்தப் பிரச்னையை இத்துடன் விட்டுவிட்டுக் கடந்த காலத்திலே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே அந்த அளவிற்கு மாணவ சமுதாயத்திற்குக் கொடுமை



கள் விளைவிக்கப்பட்டன என்பதைத் தெரிவித்துக்கொண்டு, 1977–78 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின் மீது என்னுடைய உரையைத் துவங்கலாம் என்று கருதுகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே முதலிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசு கொடுக்கின்ற நிலையிலேயும், மாநில அரசு வாங்குகின்ற நிலையிலேயும் இருக்கிறது என்று தெளிவாகக் கூறப் பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலைகள் மாற்றியமைக்கப் பட்டாக வேண்டும். மாநிலங்கள் எந்த அளவிற்கு வரியை மத்திய அரசுக்குத் தருகிறதோ அந்த அளவுக்குப் ப்ரப்போர்ஷனேட்டாக மாநிலங்களுக்கு மத்திய அரசு கொடுக்க வேண்டுமென்டதை இந்த நேரத்திலே தெளிவாகக் கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

"சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்" என்று குறிப்பிட்டிருக்கிறார் வள்ளுவப் பெருந்தகை. அதன்படி இந்த நிதிநிலை அறிக்கையில் வேளாண்மைத் துறைக்கு முக்கியத்துவம் கொடுக்கப் பட்டிருக்கிறது. இந்த நேரத்தில் ஒன்றைக் கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். கிராமங்களிலே வெட்டப்படும் கிணறுகளுக்கு மின்சார இணைப்பு கொடுப்பதாக இருந்தாலும், கடன் உதவி கொடுப்பதாக இருந்தாலும் ஒரு கிணற்றுக்கும் இன்னொரு கிணற்றுக்கும் இடையில் 735 அடி இருக்க வேண்டுமென்று கூறுகிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையால் விவசாயிகள் பாதிக்கப் படுகிறார்கள். ஆகவே, அந்தவொரு சட்டத்தை மாற்றியமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். அந்த இடைவெளி கணக்கு எக்ஸிஸ்டிங் வெல்லுக்கு அதாவது முன்னால் இருந்த கிணற்றுக்கு இல்லாமல் இருக்க வேண்டும். எக்ஸிஸ்டிங் வெல்லுக்கு கடன் உதவியும், மின்சாரமும் கொடுக்க வேண்டுமெனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உணவுப் பொருள்களைப் பொறுத்தவரையில் நாம் தன்னிறைவு பெற்றிருக்கிறோம் என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. அதை விநியோகிக்கும் முறையில் எந்த ஊழலும் நடைபெறாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். கடந்த ஆட்சிக் காலத்திலே அண்டை நாட்டுக்கெல்லாம் உணவுப் பொருட்கள் கடத்தப்பட்டது என்று கேள்விப்படுகிறோம். அப்படிப்பட்ட சூழ்நிலை வருங்காலத்திலே வராமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று தெளிவாகக் கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எங்கள் பகுதியான கிழக்குத் தொடர்ச்சி மலையிலே மஞ்சள் பரப்பு, ஆடலூர், சோளக்காடு ஆகிய பகுதிகளில் வாழைகளுக்கு இனம் தெரியாத நோய் வந்திருக்கிறது. அதனால் மிகுந்த சேதம் ஏற்பட்டிருக்கிறது. அந்த நோய்க்கான மருந்தைக் கண்டுபிடித்து அந்தப் பகுதியிலுள்ள வாழையைப் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் பூச்சிமருந்து தெளிக்கும் நேரத்தில் எந்தவிதமான ஊழலும் நடைபெறாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று தெளிவாகக் கூறிக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

மேலும் கிழக்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் சித்திரேவு, கன்னிவாடி போன்ற பகுதிகளில் விவசாயிகள் மலைக் காடுகளை வெட்டி விவசாயம் செய்து பிழைத்து வந்தார்கள். ஆனால் கடந்த ஒரு மாத காலமாக அந்த விவசாயிகளுக்குத் தடை விதிக்கப் பட்டிருக்கிறது. அவர்கள் கைது செய்யப்படுகிறார்கள். எனவே, அவர்களுக்கு நல்லதொரு பாதுகாப்பைக் கொடுத்து மலைக் காடுகளை வெட்டி விவசாயம் செய்து அவர்கள் பிழைக்க இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று தெளிவாகக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மின்சாரம் இன்றையதினம் அத்தியாவசியமான ஒன்றாகி விட்டது என்ற காரணத்தினால் மின்சாரத்தை எந்த அளவிற்கு அதிகமாக உற்பத்தி செய்ய முடியுமோ அந்த அளவிற்கு உற்பத்தி செய்ய வேண்டும். ஹைட்ரோ எலக்ட்ரிசிட்டி டராசஸை மட்டும் நம்பிக்கொண்டிராமல் தெர்மல் ஸ்டேஷன்களையும் அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கம்பியை மட்டும் நீட்டி வீட்டு அங்கே மின் கட்டுப்பாட்டைக் கொண்டுவருவது சாலச் சிறந்ததாக இருக்காது. ஆகவே, அனல் மின்சார நிலையங்களை ஏற்படுத்த இந்த அரசு முன் வரவேண்டுமென்று தெளிவாகக் கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

கிராமங்களிலே இருக்கிற விவசாயிகள் 3 மாதகாலம் அவர்களுடைய விவசாயப் பணிகளைச் செய்கிறார்கள். மீதமிருக்கிற 9 மாத காலம் விவசாயிகள் எந்த தொழிலுமில்லாமல் மிகவும் கஷ்டமான நிலையில் வாழ்க்கையை போக்கிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட விவசாயிகள் ஊக்கம் பெறுகின்ற வகையிலே, அவர்களுடைய வாழ்க்கையில் வசதிகளை அளிக்கின்ற வகையிலே விவசாயிகளுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையிலே கூறப்பட்டிருப்பதை வரவேற்கிறேன்.

தமிழகத்திலே, நெசவாளர்கள் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டு வருகிறார்கள். தற்பொழுது கைத்தறி துணிகளை உபயோகிப்பவர்கள் நாளுக்கு நாள் குறைந்து வருகிறார்கள். இதே நிலை தொடர்ந்து சென்றால், ஒருகால கட்டத்திலே கைத்தறி துணியை அணிகின்றவர்களே இல்லாவிட்டால், அந்த நெசவாளர்களுடைய நிலை என்னவாகும் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். அவர்களுக்கு ஆதரவும் பாதுகாப்பும் அளிக்கின்ற வகையிலே, கைத்தறி நெசவாளர்களுடைய முன்னேற்றத்திற்காக நல்ல திட்டம் தீட்டிப் பாதுகாக்க வேண்டுமென்று தெளிவாகக் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அண்ணா அவர்கள் கனவை நனவாக்குகின்ற எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்கின்ற வகையிலே நலிந்த புலவர்களுக்கு மாதம் ரூ. 75 உபகாரச் சம்பளமாகக் கொடுக்கப்படும் என்பதை வரவேற்கிறேன்.



என்னுடைய ஆத்தூர் தொகுதியிலே குடிநீர்ப் பிரச்னை மிகக் கடுமையாக இருக்கிறது. குடிநீருக்காகத் தாய்மார்கள் 1 மைல், 2 மைல் நடக்கின்ற சூழ்நிலை இருக்கின்றது. அப்படிப் பட்ட சூழ்நிலையை மாற்றுகின்ற வகையிலே குடிநீர்ப் பிரச்னையைத் தீர்க்க இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆத்தூர் தொகுதியிலே இதுவரையிலே எந்தவித வைத்திய வசதியும் இல்லை. அங்கே அரசு மருத்துவ மனையே இல்லை. பிரைமரி ஹெல்த் சென்டர் ஒன்றே ஒன்று இருக்கிறது. ஆகவே, என்னுடைய ஆத்தூர் தொகுதியிலே சித்தையன் கோட்டையிலே அரசு மருத்துவ மனையைத் துவக்கவேண்டுமென்று கேட்டு, இந்த நிதிநிலை அறிக்கையை ஆதரித்து வரவேற்று அமர்கிறேன்.

<u>திரு. ஏ. ரகுமான்கான்</u> : ஆன் எ பாய்ன்ட் ஆஃப் கிளாரிபிகேஷன். நம்முடைய ஆளுங்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் அவர்கள் தன்னுடைய கன்னிப் பேச்சில் ஒரு கருத்தைத் தெளிவாக்கினார்கள். இப்பொழுது நான் அவரிடத்திலே தெரிந்து கொள்ள விரும்புவது, அண்மையில் காவல் துறை....

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : உட்காருங்கள். விதி சம்பந்தப்பட்ட மாறுபாடு இருக்கிறது என்றால் அதைக் கேட்கலாம். இதையே சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி உங்களுடைய கருத்தைச் சொல்வது முடியாது.

<u>திரு. ஏ. ரகுமான்கான்</u> : கிளாரிபிகேஷன் என்று நான் சொல்லும்போது அவர்கள் பேசியிருக்கிற பேச்சிலிருந்து சில விளக்கத்தைப் பெற விரும்புகிறேன். என்னுடைய கருத்தை நான் சொல்ல விரும்பவில்லை.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : அவருடைய பேச்சு கன்னிப் பேச்சு. ஆதலாலே, அவருடைய கருத்தை இங்கே சொல்கின்ற பொழுது, அவருடைய விளக்கங்களைச் சொல்லும் போது, ஏதாவது சட்ட விதிகளுக்கு முரண்பட்டிருக்குமானால் நீங்கள் குறுக்கிட்டு ஒழுங்குப் பிரச்னை எழுப்புங்கள். அதிலே தீர்ப்பு சொல்ல நான் தயாராக இருக்கிறேன். அவர் சொன்னதற்கு உங்களுடைய கருத்தைச் சொல்ல வேண்டுமென்று நீங்கள் விரும்பினால், உங்களுடைய பேச்சில் நீங்கள் அதுபற்றிச் சொல்லலாம். இப்பொழுது கிளாரிபிகேஷன் என்ற பெயரிலே, அதிலே தலையிடவேண்டாமென்று கூறிக்கொண்டு அடுத்த உறுப்பினர் திரு. கே. கந்தசாமி அவர்களைப் பேச அழைக்கிறேன்.

<u>திரு. எம். ஏ. லத்தீப்</u> : நான் இப்பொழுது சொல்லுகின்ற கருத்தையும் குறிப்பிலிருந்து எடுத்துவிடும்படித்தான் சொல்கிறேன். உறுப்பினர் திரு. வின்சென்ட் அவர்கள் 'நான் வீசினேன், துண்டுப் பிரசுரங்களை நான் வீசினேன்' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உட்காருங்கள். நான் விளக்கம் சொல்கிறேன். ஏற்கெனவே நான் முடிவு கூறியது பற்றித் தயவு செய்து எழுப்பாதீர்கள். இப்போது நீங்கள் மீண்டும் 'நான் பேசப்போவதை நீக்கிவிடுங்கள்' என்று சொல்லிவிட்டு, நீக்கப் போவதைப் பேசுவது எந்த விதத்திலே நியாயம் என்று கேட்க விரும்புகிறேன்.

திரு. ஏ. ரகுமான்கான் : சார், . . . . . . . .

(திரு. எம். ஏ. லத்தீப் நின்று கொண்டிருந்தார்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தயவு செய்து உட்காருங்கள். நீங்கள் பேசும்பொழுது சொல்லுங்கள் . . . .

திரு. எம். ஏ. லத்தீப் : இப்பொழுது ஒரு உறுப்பினராக இந்த அவையிலே இருக்கிறவர் 'நானே இந்தத் துண்டுப் பிரசுரங்களை வீசினேன்' என்று சொல்லிய அந்தப் பகுதி குறிப்பேட்டில் இருக்குமானால், வருங்காலத்தில் யாராவது துண்டுப் பிரசுரங்கள் வீசுவார்களானால், உறுப்பினர் என்ற முறையிலே அதைக் கண்டிக்கவும் தடுக்கவும் கடமைப்பட்டிருக்கிற நிலையிலே அந்தப் பகுதியையும் நீக்கிவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 'நான் வீசினேன்' என்று சொன்ன பகுதியை நீக்கிவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், பின்னால், அது உதவிகரமாக இருக்கும். 'நான் வீசினேன்' என்ற வார்த்தையைக் குறிப்பேட்டிலிருந்து நீக்கிவிடுவது என்பது நல்லது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அது முடிந்துவிட்ட பிரச்னை. அதை இப்பொழுது எழுப்ப வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, திரு. கே. கந்தசாமி அவர்களைப் பேச அழைக்கிறேன்.

[முற்பகல் 10·30]

*திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சபையின் முன்பு 1977-78 வருஷத்தின் நிதி நிலை அறிக்கையை நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருப்பதை இந்திய தேசிய பார்வார்டு பிளாக் கட்சியின் சார்பாக வரவேற்றுப் பேசுகிற நேரத்திலே, கீழ்க்கண்ட கருத்துக்களைக் குறிப்பிட விரும்பு கிறேன். அமைச்சர் அவர்கள் தங்களுடைய கற்ற அறிவையும் அனுபவத்தையும் வைத்து மிகக் குறுகிய காலத்திலே சிறப்பாகவும் தெளிவாகவும் ஒரு நிதி நிலை அறிக்கையை அறிவித்திருப்பதை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. 'Cut the coat according to cloth' என்று பொருளாதாரத்திலே ஒரு maxim உண்டு. அதைப் போல துணிக்கு உகந்த முறையில் கோட்டைத் தைத்திரு கிறார்கள். அதைப் பாராட்டுகிறேன். இன்று நவீன அரசியல் மாற்ற காலத்தில் 'டெபிசிட் பட்ஜட்' Deficit Budget has become a virtue or fashion. But deficit budgeting at home is bad.





என்ற அந்த அளவுக்கு நாட்டில் ஒரு நிலைமாறி வருவதை நாம் அறிகிறோம். At the same time deficit Budgeting at home is bad. வீட்டிலே கணவன் மனைவி நடத்துகின்ற குடும்ப வாழ்க்கையில் நிதிப் பற்றாக்குறை ஏற்படுமேயானால் அது தவறாகும். வளர்ந்து வருகிற சமுதாயத்தைப் பாதுகாப்பதில் அக்கறை கொண்டுள்ள அரசு, பற்றாக்குறை நிதிநிலை அறிக்கையை வெளியிட்டதுதான் மிகச் சிறந்த ஒன்றாகும் என்று அறிஞர்கள் பாராட்டுகிற நிலையில், இன்று பற்றாக்குறை என்பதன் பேரில் அதிகமான வரிச்சுமைகளை ஏழை மக்கள் தாங்க முடியாத அளவுக்கு ஏற்படுத்தி விடாமல், எதிர்க் கட்சித் தலைவர்கள் குறிப்பிட்டது போல, முன்னவர் அவர்கள் மிகத் தயக்கத்தோடு ஆனால் மிகக் கவனத்தோடு தயாரித்திருக்கிறார்கள். இந்த பட்ஜெட் அறிக்கையைப் பார்க்கிற போது அவர்கள் மிகத் தயக்கம் காட்டியதற்குக் காரணம், நாம் தயாரித்துள்ள இந்த நிதிநிலை அறிக்கையில் ஏழை எளிய மக்கள் பாதிக்கக் கூடிய அளவுக்கு தாங்க முடியாத அளவுக்கு இருக்கிற வரிச்சுமையை ஏற்படுத்திவிடக் கூடாது என்ற எண்ணத்தை மையமாகக் வைத்து நல்ல பல திட்டங்களை நிறைவேற்றுகின்ற ஆர்வத்தில், வேண்டாத விளைவுகளை ஏற்படுத்தக் கூடிய, 'சூழ்நிலை உருவாகிவிடாமல் நாம் பார்த்துக் கொள்ளவேண்டுமென்று கவனத்தோடு, பொறுப் பில் உள்ள ஒரு அமைச்சர் என்ற முறையில் இந்த அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்கள். அது 18·89 கோடி ரூபாய் பற்றாக்குறை என்று அறிவிக்கப்பட்டிருந்தாலும், இறுதி மூலதனத்தின் மூலமாகவேறு நிரந்தரமாகச்செலவு செய்யப்பட்ட தொழிற் ஸ்தாபனங்களின் மூலமாக வரவு வருவதையும், இன்னும் இந்தியாவில் தயாரிக்கப்பட்டு உள்நாட்டிலே தயாரிக்கப் பட்டு, வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிற மது வகைகள் . மீது விதிக்கப் படுகின்ற வரிகளையும் சேர்த்துப் பார்த்தால் ஏறக் குறைய 5 கோடி ரூபாய் துண்டு விழுகிறதாக அறிவித்திருக்கிறார் கள். அதை நான் மிக மகிழ்ச்சியோடு வரவேற்றுப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். காரணம் என்னவென்றால், நன்மை பயக்கத்தக்க வகையில் நல்ல பல திட்டங்களை அறிவித்திருக்கிறார் கள். தமிழ் அறிஞர்களுக்கு, புலவர்களுக்குப் பென்ஷன் தொகை கொடுக்கத் திட்டம் அறிவித்திருக்கிறார்கள். கைம் பெண்களுக்கு உதவித் தொகை கொடுக்கும் திட்டம் அறிவித் திருக்கிறார்கள். அதே போல் மீனவர்கள் கடலில் சென்று மீன் பிடிக்கும்போது இறந்துபோனால் எந்தப் பாதுகாப்பும் அற்று இறந்து போனவர்களது குடும்பத்திற்கு உடனே ரூ. 5,000 அவர்கள் குடும்பம் தொழில் செய்ய வாய்ப்பு அளிக்கின்ற வகையில் 5 ஆயிரம் ரூபாய் வழங்கும் திட்டம் போன்ற மிக மிக நல்ல பல திட்டங்களை எல்லாம் அறிவித்திருக்கிறார்கள் என்று சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அந்த அளவுக்கு விவசாயிகளுக்குக் கூட நான் எதிர்பார்த்த அளவில் நன்மை செய்ய இயலவில்லை என்றாலும் ஓரளவு அவர்கள் பாதிக்கப்படாமல் வரிகக் குறைத்திருக்கிறார்கள். இருந்தாலும்

வெல்லத்தைப் பொறுத்த வரையில் வரி போடவேண்டிய அவசியமே இல்லை. இடைக் காலத்தில் இருந்த மத்திய ஆட்சியின் பிரதிநிதிகள் வெல்லத்திற்கு 20 சதவீதம் என்று போட்டு இருந்ததை இப்போது 15 சதவீதம் என்று ஆக்கி, 5 சதவீதம் குறைத்து இருக்கிறார்கள். அந்த 15 சதவீதம் வரியையும் அறவே நீக்கினால் விவசாயிகளுக்கு பல நன்மைகள் கிடைக்கும், என்னுடைய இந்த வேண்டுகோளை அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகள் இந்த நாட்டின் முதுகெலும்பாக இருக்கிறார்கள். இந்த வரவு செலவு திட்டத்தைப் பற்றி நாம் விவாதிக்கும்போதாவது அந்த விவசாயிகளின் வரவு செலவு பற்றியும் சிந்தித்து பார்ப்பது நல்லது என்று கருதுகிறேன். மைனாரிட்டிகளாக இருக்கும் நம்மைப் போன்ற ஒயிட் காலர்டு ஜாப்பில் இருப்பவர்கள், கன்சியூமர் ஆக இருப்பவர்கள் 100–க்கு 30 பேர்தான். இந்த 30 பேர்தான், இந்த மைனாரிடியினர் தான் மெஜாரிடி மக்களை டாமினேட் செய்துகொண்டிருக்கிறார்கள். இந்த மெஜாரிட்டி பகுதியினர் எத்தனையோ ஆண்டு காலமாக இன்னும் அன்-ஆர்கனைஸ்டாகவே இருந்து வருகிறார்கள். நாம் விவரம் அறிந்தவர்கள், அதிகாரத்திலுள்ளவர்கள் அந்த மெஜாரிட்டி மக்களை டாமினேட் செய்துகொண்டு வருகிறோம். நாட்டின் முதுகெலும்பாக நின்று அவர்கள் பொருளாதாரத்தை உற்பத்தி செய்து நிரந்தரமாக இந்த நாட்டு மக்களை இந்திய சமுதாயத்தைக் காப்பாற்றி வருகிறார்கள். அப்படிப்பட்ட நிலையில் அவர்கள் இதுவரையில் இருந்தபோதிலும் அவர்களுக்கு நியாயமாகச் செய்ய வேண்டியதை நாம் இதுவரை செய்யவில்லை என்பதை நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். எல்லாத் துறைகளிலும் உள்ள பொருள் உற்பத்தி செய்பவர்கள் தாங்கள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு விலையை நிர்ணயம் செய்யும் உரிமை இருக்கிறபோது இந்த விவசாயிகளுக்கு மாத்திரம் அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு அவர்கள் உற்பத்தி செலவு எவ்வளவு செய்தாலும் அதை நாம் கவனத்தில் கொள்ளாது நாம் சர்வாதிகாரமாக, அந்தத் தன்மையில், நம்முடைய மைனாரிட்டி சமுதாயத்தின் நலத்தின் அடிப்படையில், அந்தப் பொருள்களுக்கு விலையை நிர்ணயம் செய்கிறோம். உதாரணமாக ஒரு குவின்டால் நெல் ரூ. 120 க்கு நமக்கு வேண்டுமென்றால் அந்த விலையைத் தான் நிர்ணயம் செய்கிறோம். விவசாயிகள் அந்த விலைக்கு நமக்கு கொடுக்கவேண்டியிருக்கிறது. அதே நேரத்தில், அதை வாங்கும் ஏஜெண்டாக இருப்பவர்கள் ஒரு குவிண்டாலுக்கு ரூ. 2 லாபம் வேண்டும், அதுவும் சாக்கோடு சேர்த்து என்று செல்லுகிற நேரத்தில் அவர்களுக்கு நாம் கொடுத்துவிடுகிறோம். அப்படி செய்யவில்லையென்றால் அவர்கள் உடனே அமைச்சர்கள், மற்ற சட்டமன்ற உறுப்பினர்கள், பிறகு யார் யாரைப் பார்க்க வேண்டுமோ அவர்களை எல்லாம் பார்க்கிறார்கள். அப்படியும் இல்லவே இல்லை என்றால் உடனே ஸ்ட்ரைக் செய்கிறார்கள். அதே போல்தான



வியாபார சமுதாயத்தினரும் செய்கிறார்கள். தொழிலதிபர்கள் செய்கிறார்கள். இன்னும் வேறு எந்தெந்தத் துறையில் உற்பத்தி செய்கிறார்களோ அவர்களும் இதே நிலையைத்தான் மேற்கொள்ளுகிறார்கள். ஆனால் இந்த விவசாயத் துறையில் இருப்பவர்களை மாத்திரம் அதிகாரவர்க்கம் மிகவும் அவதிக்கு ஆளாக்குகிறது.

The dominant minority is exploiting the weak majority which remained unorganized for generations in the past, and it still remains so to-day. They feel that they inherit this right but this majority community is not feeling about this. We also, the so called repersentatives of the majority, do not seem to think of their fate at all.

நாமும் ஏழை விவசாயிகளிடத்தில் சென்று, அந்த மெஜாரிட்டி மக்களிடம் சென்று ஓட்டு கேட்டு, அவர்கள் வாக்கைப் பெற்று இங்கே வருகிறோம். அந்த மெஜாரிட்டி ஏழை மக்கள் உழைத்து உண்ணத் தயாராக இருக்கிறார்கள். அப்படி இருந்தும் அவர்கள் உழைத்து உற்பத்தி செய்த நெல்லுக்கு மாத்திரம் குவிண்டால் 1-க்கு ரூ. 120 என்று வைத்துவிட்டு அவர்கள் வரவுசெலவு பார்க்கிற நேரத்தில் செலவு ரூ. 125 வரை ஆகியிருக்கிறது. ஒரு 10% உயர்த்தி தாருங்கள் நாங்கள் 5% லாபத்திற்கு விற்கிறோம் என்று சொன்னால் அதை நாம் தருவதில்லை. இதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். இதை யாரும் இதுவரையில் அந்த விவசாய வர்க்கத்திற்காகக் கேட்டதாக என் கவனத்திற்கு வரவில்லை. அமைச்சர்கள் மட்டுமல்ல நம் போன்ற சட்டமன்ற உறுப்பினர்களும் இந்த விஷயத்தில் தகுந்த கவனம் செலுத்தி அந்த விவசாயிகளுக்கு ஒரு பரிகாரம் காண வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதுமாத்திரமல்ல,

Why they are left alone ? Are they not our citizens ? Are they not paying taxes? Are they not helping the Government? When poor agriculturists fail to pay a kist of Rs. 5 are we leaving them out of mercy. We do not leave them at all. Tahsildar goes there with armed police and effects 'japti'. He takes away even worn-out vessels by saying, 'I am bound to collect them. Otherwise, I cannot safely safeguard my job'. While so, my dear comrades, why not you take action against the thousands of tax-evaders belonging to the business community or the industrialists who evade taxes by adopting illegal and unlawful means? They are able to successfully run the machinery of their business.

[முற்பகல் 10-40]

அந்த நிலைமையை நாம் அனுமதிக்கிறோம். 1957 இலேயே இந்த மாமன்றத்திலே அண்ணா அவர்கள் பேசியதை இப்போது நான் பார்த்தேன். 200 கோடியிலிருந்து 300 கோடி வரை டைரக்ட் டாக்சேஷனை முதலாளிகள் ஏமாற்றி இருக்கிறார்கள் என்று

சொல்லியிருக்கிறார்கள். 1957 இலேயே 300 கோடி என்றால் இன்று ஏறக்குறைய 600, 700 கோடி. ஏன் ஆயிரம் கோடிக்கு இருக்கும். இதைப் பார்த்துக்கொண்டிருப்பது நியாயம்தானு, இதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டாமா? நாளைக்கு பாக்கெட், சிகரெட் பெட்டியிலே பாக்குக்கு வரிபோடுவார்கள் என்று எந்தக்கும் வந்தால், ஒரு ரூபாய்க்கு விற்றுக்கொண்டிருந்த சிகரெட் பாக்கெட்டை 1-25 என்று விற்கிறார்கள். இது பாமரரிடம் போய் முடிகிறது.

The poor consumer, he may be a daily coolie. He smokes unfortunately beedi.

அந்த பீடிக்கு அதிகம் கொடுக்கவேண்டியிருக்கிறது. என்ன செய்வது! அந்தபீடிக்கு ஒருகாசு அதிகம் கொடுக்கவேண்டியிருக்கிறது. அதிகாரிகளும், நம்மைப் போன்றவர்களும் நியாயபூர்வமாக இவற்றை எண்ணிப்பார்க்கவேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன். இவைகளால் கிராமத்திலே உள்ள விவசாயப் பெருங்குடி மக்களுக்கு எந்தவகையப் பாதிப்பு ஏற்படுகிறது என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். "உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே." அந்தவகைய உண்டி கொடுப்போருக்கு நாம் பாதுகாப்பு கொடுக்க வேண்டாமா, வேண்டாமா? என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது) விரைவாக முடித்துக்கொள்கிறேன். விவசாயிகள் என்ற பிரச்சினையாதலால் அதிகமாகிவிட்டது. அந்த விவசாயிகளைப் பாதுகாப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம் என்று முதல்வர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்தவகைய முறையில், கிராம மக்களுக்காக, அவர்களின் பிரச்சினையைத் தீர்க்கும் முறையில் தயாரிக்கப்பட்டிருக்கும் இந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்டுகிறேன்.

Unless we divert the West-flowing rivers to the East, there is no permanent solution. There is no other solution to save the southern districts. My humble submission to the Ministry headed by our Puratchi Thalaivar—

புரட்சி என்ற வார்த்தையைப் பற்றி இங்கே பேசினார்கள். புரட்சி எங்கே என்று கேட்டவர்களுக்கு நான் சொல்லிக்கொள்வேன் சமுதாயப் புரட்சி நாட்டில் நடந்து, பொருளாதாரப் புரட்சியை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

அதற்கு ஒரு உதாரணத்தைக் கூற விரும்புகிறேன். மேற்கு நோக்கிச் செல்லும் ஆறுகளை திசைதிருப்பிவிட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அமெரிக்காவில் வாஷிங்டனிலிருந்து செல்லும் நதி நீரை, பாம் வைத்து பாறையை உடைத்து திசையைத் திருப்பியிருக்கிறார்கள். மெக்சிகோவிலும் நதிகளின் டைரக்ஷனை மாற்றி இருக்கிர்கள். ரஷ்யாவிலும் கூட இப்படி செய்திருக்கிறார்கள்.



Why not we We? must save the Humanity at large.

இங்கே 200 அடி, 300 அடி, 1000 அடி தோண்டியும் தண்ணீர் வராமல் விவசாயிகள் கஷ்டப்படுகிற காட்சியைப் பார்க்கிறோம். எனவே விவசாய மக்களின் நன்மையைக் கருதி, அரசு மேற்கே ஓடுகிற தண்ணீரைத் திசை திருப்பி விவசாயிகளுக்கு தண்ணீர் கிடைக்கும் முறையில் செய்ய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆக, இப்படி, தண்ணீர் பிரச்சினை, மொழிப் பிரச்சினை என்று மக்கள் பிரச்சினைகளை நல்லமுறையிலே ஆராய்ந்து செயல்பட்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்க முடிகிறது.

இதற்காக இந்தியப் பிரதமர் மொரார்ஜி தேசாய் அவர்களின் செல்வாக்கையும் ஜனதா உறுப்பினர்களுடைய செல்வாக்கையும் முதலமைச்சரின் செல்வாக்கையும் பயன்படுத்தி மேற்கே போகிற தண்ணீரை மாற்றிவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் விவசாயிகளுக்கு பாதுகாப்பு அளிக்க முடியும். வாட்டர் டிவைனர் யோசனைப்படி கிணறு தோண்டியும் 10, 15 அடி எடுத்த உடனே பாறை வந்து மேற்கொண்டு கிணறு தோண்ட கஷ்டப்படும் விவசாயிகளுக்கு அவர்கள் அந்தக் கிணற்றை எடுப்பதற்காக கஷ்டப்படும் நிலைமையில் உள்ளதை எல்லாம் விற்று, மனைவியின் நகைகள், மூக்குத்தி உட்பட விற்று, கிணறு தோண்ட வேண்டிய நிலை—இவைகளை எல்லாம் கருத்தில் கொண்டு விவசாயிகளுக்காக இந்த காரியத்தை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆகவே இதையும் கவனிக்கவேண்டும். ஆசிரியர்கள், தொழிலாளர்கள், என்.ஜி.ஓ.-க்கள் எல்லோரும் யூனியன் வைத்திருக்கிறார்கள். டிமாண்ட் பட்ஜெட் என்பது மாடேர்ன் கவர்ன்மென்டின் பாஷனாக இருக்கிறது.

Demands by different organisations and even officials have become the fashion of the day or the order of the day.

என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் பிரதமராக இருந்தபோது தொழிலாளர்களின் கோரிக்கையைப் பற்றிக் குறிப்பிடும்போது—கம்பல்சரி டெப்பாசிட்டை நிறுத்தவேண்டும், கட்டியதைத் திரும்பத் தரவேண்டும் என்றெல்லாம் கோரிக்கைகள் வந்தபோது—சொன்னார்கள்.

"I really sympathise with my dear friends and children, million and millions of our countrymen are ready to work for 24 hours but no work

சொல்லுகிறோம். இவைகளுக்கெல்லாம் காரணம் என்ன என்று பார்க்கும்போது, சில விஷயங்களை நாம் உன்னிப்போடு சில விஷயங்களை மேற்கொள்வதின் மூலமாக சில நடவடிக்கைகள் எடுக்க முடியும். குறிப்பாக நீர்ப் பற்றுக்குறை எங்கும் இருந்து கொண்டிருக்கிறது. அவற்றினை சில நடவடிக்கைகள் மூலம் இப்படிப்பட்ட பற்றுக்குறையைத் தடுக்க முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நில நீர் மட்டமானது மேலும் மேலும் கீழே சென்றுவிட்ட காரணமாக கிணறுகளில் நீரைப் பார்க்க முடியாத அளவுக்கு இருந்து கொண்டிருக்கிறது. நான் கோயம்புத்தூர் பகுதிக்குச் சென்றிருந்தபோது கிணற்றைப் பார்க்கின்ற போது, தண்ணீர் எங்கே இருக்கிறது என்று கேட்கின்ற அளவில் தண்ணீரைக் கண்டு பிடிக்க முடியாத அளவுக்கு இருந்து கொண்டிருக்கிறது. அந்த நிலைமை தான் வட ஆற்காடு மாவட்டத்திலும் இருக்கிறது. என்னுடைய தொகுதியில் பயிர்கள் எல்லாம் உலர்ந்து போயிருக்கின்ற நிலைமை வந்திருக்கிறது. இப்படி வெட்டு வெட்டென்று வெட்டிப் பார்த்து தண்ணீரைக் காண முடியாத நிலைமையில் விவசாயிகள் எல்லாம் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். சரியான காலத்தில் தண்ணீர் இல்லாது இந்தப் பிரச்னைகளை எப்படிச் சமாளிப்பது என்கின்ற நிலைமையில் இருக்கிறார்கள். அந்த அளவுக்கு தண்ணீர் இல்லாத அளவுக்கு அச்சமேற்பட்டிருக்கிறது. குறிப்பாக கசிவு நீர்த் திட்டத்தின் மூலமாக நீர் மட்டத்தை மேலே கொண்டு வர முடியும் என்று சொல்லப்படுகிறது. இதை முக்கியமாக அரசு கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக ரிசர்வாயர் திட்டங்கள் என்று சொல்லுகிறார்கள். இரண்டு மலைகளுக்கு இடையில் குறுக்கே அணை கட்டுவதின் மூலமாக தண்ணீரை தேக்கி வைப்பதின் மூலமாக கசிவு நீர் ஏராளமாக வரும், அதன் மூலமாகத் தண்ணீர் மட்டத்தை உயர்த்த முடியும், கிணறுகளிலும் நீர் மட்டம் உயரும், இதன் மூலமாக மின்சாரத்தைப் பயன்படுத்தி பம்பு செட்டுகள் மூலமாகத் தண்ணீர் எடுத்துக் கொள்ள முடியும். செலவும் குறையும். இதன் மூலமாக தண்ணீர் தட்டுப்பாடு நீக்கப்பட்டு, புஞ்சைநிலங்களாக இருக்கின்ற நிலங்களை எல்லாம் நஞ்சை நிலமாக மாற்றுவதற்குரிய நிலைமையும் ஏற்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக ஒன்று சொல்லுகிறேன். வட ஆற்காடு மாவட்டத்தில் பாலாறு நதி ஓடுகிறது. இதிலிருந்து பல கிளை நதிகளும் ஓடுகின்றன. இதில் பல மலைகளிலிருந்து வந்து உப நதிகளாக வந்து பாலாற்றில் சேருகிறது. ஆனால் இந்த உப நதிகளில் குறுக்கே அணை கட்டக்கூடாது என்று விதி இருக்கிறது. ஆனால் இப்படிப்பட்ட உப நதிகளில் பல இடங்களில் அணை கட்டினால் அங்கங்கு இருக்கின்ற ஏரிகளுக்குத் தண்ணீரை திருப்பிவிட்டு, அந்த நீரை விவசாயத்திற்குப் பயன்படுத்த முடியும். ஆனால் இப்படிப்பட்ட உப நதிகளில் குறுக்கே அணை கட்டக்கூடாது



என்று பாலாறு பேசின் ரூல்ஸ் இருக்கிறது. இதைப் பற்றியும் அரசு கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நான் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிற அணைக்கட்டு பகுதியில் மேலரசம்பட்டு என்ற இடத்தில் ஒரு அணை கட்ட வேண்டும் என்று முடிவு செய்து அதற்காக 15 ஆண்டுகளுக்கு முன்பே சர்வே செய்து இப்போது எஸ்டிமேட் செய்து வேலையைத் துவக்குவதற்கு முடிவு செய்யப்பட்டிருந்தது. ஆனால் அது இப்போது நிறுத்தப்பட்டிருக்கிறது. இதற்கு என்ன காரணம் என்று கேட்கின்ற நேரத்தில் பாலாறு பேசின் சட்டத்தின் காரணமாகத் தான் இது நிறுத்தப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள்.

இப்போது இந்தச் சபையினருக்கு ஒன்றைக் கூறிக்கொள்ள விழைகின்றேன். மாண்புமிகு தலைவர் அவர்களும் இதை உன்னிப்பாகக் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். காரணம், 15 ஆண்டுகளுக்கு முன்னரே ஆரம்பிக்கப்பட்ட இந்த திட்டமானது கைவிடப்படக் கூடிய நிலைமை இருக்கிறது என்று சொன்னால், அங்கே, வட ஆற்காடு மாவட்டத்திலே பல்லாயிரக்கணக்கான ஏக்கர்கள் பயிரிட முடியாத நிலைமை ஏற்படும், அதிலே நாம் அக்கறை செலுத்த முடியாமல் போய்விடும். ஆனால், அந்தத் தண்ணீரானது, பாலாற்றில் விடப்பட்டு, அங்கு 2, 3 அணைகள் கூடக் கட்டப்படவில்லை. வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகின்ற காலத்திலே, அந்தத் தண்ணீரானது கடலிலே வீணாகப் போய் விழக்கூடிய நிலைமை ஏற்படுகின்றது. இங்கே அணைகள் கட்டுவதன் மூலம் 15 அல்லது 20 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பயன் அடையக் கூடும்.

அதேபோன்று, பாங்கர் ஏரி, மேல் அரசு என்ற இடத்திலே உள்ளது. அங்கே நான் ஏரியைக் கட்டச் சொல்லவில்லை. இரு மலை முகடுகளுக்குக் குறுக்கே ஒரு தடுப்புச் சுவர் கட்டுவதன் மூலம், பல்லாயிரக்கணக்கான நிலங்கள் பயிரிடுவதற்கு அங்குள்ள நீர் மட்டும் உதவும் எ பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோன்று, அகரம் ஆற்றிலே செக் டாம்ஸ் கட்டினால், அதன் விளைவாக உற்பத்தி அதிகமாவதற்கு வாய்ப்பு ஏற்படும் சூழ்நிலை உண்டாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோன்று, இந்தக் குடிநீர் பிரச்சனைக்காக இந்த வரவு செலவு திட்டத்திலே அதிகமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. இந்தக் குடிநீர்த் திட்டத்தை அமுல்படுத்துவதற்கு இப்போது ஒவ்வொரு கிராமங்களிலேயும் குடிநீர்க் கிணறுகள் வெட்டப்படும். சின்ன கோவிந்தம்பாடி என்ற கிராமத்திலே ஒரு விழாவிலே கலந்துகொண்டு நான் திரும்பி வருகின்றபோது, அங்குள்ள மக்கள் கிணற்றிலே உள்ள நீர்

ஆழத்தை எனக்குக் காண்பித்தார்கள். அந்தக் கிணற்றை நான் எட்டிப் பார்த்தபோது பாறாங்கல் தான் தெரிந்தது; தண்ணீர் மிகவும் அடியிலே காணப்பட்டது. அங்குள்ள அரிசன மக்கள் அந்தக் கிணற்றிலே இருந்துதான் தண்ணீர் எடுத்துச் செல்ல வேண்டும். மற்றவர்கள் வாழ்கின்ற, அதாவது ஜாதி இந்துக்கள் வாழ்கின்ற பகுதிகளுக்குச் சென்று தண்ணீர் எடுக்க வேண்டுமானால், இன்று அவர்கள் பலவாறாகப் பேசப்படுகின்ற நிலைமைதான் இன்றும் இருக்கின்றது. இம்மாதிரியான சூழ்நிலை, வட ஆற்காடு மாவட்டத்தில் இன்னும் பல இடங்களில் இருந்து கொண்டிருக்கிறது.

உதாரணமாக, ஒவ்வொரு யூனியனிலும் இம்மாதிரியான கிணறுகள் வெட்டுவதற்காக ஒரு குறிப்பிட்ட தொகையை ஒதுக்கி விடுகிறார்கள். அதாவது, 10 ஆயிரம், 15 ஆயிரம் என்று தொகை ஒதுக்கப்பட்டுவிடுகிறது. ஒரு பகுதியில் நீர்மட்டம் எப்படியிருந்தாலும், அந்த 10 ஆயிரம் ரூபாய்க்குள் அந்தக் கிணறு வெட்டப்பட வேண்டும். அப்படி அந்தக் தொகைக்குள் கிணறு வெட்டப்படும்போது, நீர் கிடைப்பதில்லை. இந்தத் தொகையைத்தான் அரசாங்கம் சாங்ஷன் செய்திருக்கிறது. ஆகவே இந்த 30 அடியோடு நான் விட்டு விடுகிறேன் என்று காண்டிராக்டர் அந்த அளவோடு விட்டு விடுகிறார். எனவே, தண்ணீர் இல்லை. மேற்கொண்டு வெட்ட வேண்டுமானால், அதற்கு நிதி இல்லை. அதன் காரணமாக, காண்டிராக்டர் அப்படியே விட்டுவிடுகிறார். மேலே வெட்டுவதற்கு அடிஷனலாக அடுத்த ஆண்டில் நிதி ஒதுக்கீடு செய்யும்போது, வெட்டியதும் தூர்ந்து விடுகிறது. எனவே, அப்போதும் தண்ணீர் எடுக்க முடியாத ஒரு நிலைமை ஏற்படுகிறது. இப்படி இருக்கின்ற காரணத்தினாலே, எந்த ஒரு நல்லெண்ணத்தில், குடிதண்ணீர் வழங்கவேண்டுமென்று நாம் வெட்டுகின்றோமோ அந்த எண்ணம் பிரதிபலிக்க முடியாமல் போய்விடுகிறது. எனவே, அரசாங்கம் வாட்டர் டிவைனர்களை, நிபுணர்களைக் கலந்து, அவர்கள் எந்த ஆழத்திலே தண்ணீர் இருக்கிறது என்று சொல்லுகிறார்களோ அதற்குத் தகுந்தாற்போல, அதற்குத் தேவையான நிதியை நிதிநிலை அறிக்கையிலேயே ஒதுக்கித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் மற்றொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்த மட்டிலும், பயங்கரமான சூழ்நிலை உருவாகிக் கொண்டு வருகிறது. வட ஆற்காடு மாவட்டத்திலே தோல் பதனிடும் தொழிற்சாலைகள், இதனால் ஒருவகையில் வேலைவாய்ப்புக்கள் ஏற்பட்டாலும் குறிப்பாக ஆம்பூர் பகுதியிலே கடந்த 6,7 ஆண்டுகளாக இந்தத் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டு நடந்து வருகின்றன. அதிலே வருகின்ற கழிவு நீரை எவ்வளவு முயற்சித்தும் நல்ல முறையிலே வெளியேற்றுகின்ற திட்டம் இல்லாமையால், அந்த



கழிவு நீர் ஊறி 15 மைல்கள் வட்டாரத்திற்கு உப்பு நீராக மாற்றப்படுகிறது. அந்தத் தண்ணீரை அங்குள்ள மக்கள் குடிப்பதால், உடம்பிலே சொறி போன்ற வியாதிகள் ஏற்படக்கூடிய நிலைமை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. 'வாட்டர் பொல்லியூஷன்' ஏற்படுவதை இன்றைக்கு தடுக்க முடியாத நிலை அங்கிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்திலே, வேலை வாய்ப்புத் திட்டத்தைப் பற்றி, பல தொழிற்சாலைகள் அமைப்பதன் மூலமாக, நல்ல சூழ்நிலையை உண்டாக்க முடியும் என்று சொல்லப்படுகிறது. இந்த நல்ல எண்ணம் நமக்கு இருக்கிறது. இந்தச் சமயத்தில் நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். பஞ்சாப் மாநிலத்திலே ஒவ்வொரு விவசாயியும், தான் விவசாயம் செய்கின்ற இடத்திற்கு அருகிலேயே ஒரு லேத் மெஷினையும் வைத்திருக்கிறார்கள்.

[முற்பகல் 11-00]

அந்த லேத் மிஷினிலே அரசாங்கம் குறிப்பிடுகிற குறிப்பிட்ட பொருள்களை அவர்கள் தயாரிக்கிறார்கள். மோட்டார் வாகனத்திற்குத் தேவையான பொருள்கள், மற்றப் பொருள்களை அவர்கள் இந்த முறையில் தயாரிப்பதில் வெற்றி பெற்றிருக்கிறார்கள். அந்த நிலைமைகளைத் தமிழகத்தில் ஏற்படுத்தியாகவேண்டும். குறிப்பாக, படித்த மாணவர்கள் இருக்கிறார்கள்; வேலை வாய்ப்பற்ற மாணவர்களுக்குத் தொழிற்கல்வி முறையில் வேலை வாய்ப்புகள் தரப்படவேண்டும். நான் இருக்கும் பகுதியில் ஒரு தொழிற் பயிற்சிக் கூடம் இருக்கிறது. அந்தத் தொழிற் பயிற்சிக் கூடத்தின் முதல்வர் அவர்களை, இந்தத் தொழிற் பயிற்சிக் கூடத்தில் எத்தனை மாணவர்கள் தங்கிப் படிக்கக் கூடிய வசதிகள், உபகரணங்கள் இருக்கின்றன என்று கேட்டபோது 450 மாணவர்கள் படிக்க வாய்ப்புகள், உபகரணங்கள் இருக்கின்றன என்றும் 330 பேர்களுக்கு மேல் நாங்கள் சேர்க்கவில்லை என்றும் சொன்னார்கள். அவ்வளவுதான் சேர்க்கச் சொன்னார்கள் என்று சொல்லுகிறார்கள். அங்கே 120 மாணவர்கள் மேலும் படிக்கின்ற வாய்ப்பு இருந்தும் சேர்க்கப்படவில்லை. அந்த வகையில் தமிழகத்தில் இருக்கும் தொழிற் பயிற்சிக் கூடங்களில் 4,500 மாணவர்களைச் சேர்க்க வாய்ப்புக்கள் இருக்கின்றன என்றும் சொன்னார்கள். ஏன் சேர்க்கவில்லை என்பதற்குப் பதில் சொல்ல முடியவில்லை. இருக்கின்ற தொழிற் பயிற்சிக் கூடங்களில் முழு அளவுக்கு மாணவர்களைச் சேர்ப்பதுடன் தொழிற் பயிற்சிக் கூடங்களை மிகப் பரவலாக அதிகமாக்கலாம். இன்றைக்கு எம். பி. பி. எஸ். படிப்புக்குக் கூட இடம் கிடைத்து விடுகிறது. ஆனால் ஒன்பதாவது படித்துவிட்டு ஐ. டி. ஐ.-ல் சேர இடம் கிடைக்கவில்லை என்ற நிலை இருக்கிறது. பஞ்சாப் மாநிலத்தில் உள்ளது போன்ற நிலைமையை உருவாக்க ஒவ்வொரு விவசாயக் குடும்பத்தில் இருக்கக்கூடியவர்களுக்கும் ஐ.டி.ஐ.-யில் பயிற்சி பெற வாய்ப்புக் கொடுக்கவேண்டும்,

அப்படித் தருவதன் மூலம் சிறு நிலத்தை வைத்துக் கொண்டு பம்ப் செட் வைத்துக் கொண்டிருந்தால், அந்தக் குடும்பத்தினர் அதிலே லேத் மெஷின் போன்ற உபகரணங்களை வைத்துக் உற்பத்தி கொண்டு செய்ய வாய்ப்பு ஏற்படும், அவர்களுக்கு வேலை வாய்ப்பு தரும் நிலைமை ஏற்படும்.

வட ஆற்காடு மாவட்டத்தில் ஏற்கனவே ஆளுநர் உரையின் போது சொன்னது போல் ஜவ்வாது மலை இருக்கிறது, சந்தன மரங்கள் ஏராளமாக இருக்கின்றன. அங்கு ஒரு சந்தனத் தைலம் தயாரிக்கும் தொழிற்சாலை ஏற்படுத்தலாம். அதோடு காகிதத் தொழிற்சாலை அமைப்பதற்கு வேண்டிய மூலப் பொருள்களும் இருக்கின்றன. மூங்கில் இருக்கிறது; கருவேல மரங்கள் இருக்கின்றன நீலகிரித் தைல மரங்கள் இருக்கின்றன. கரும்பு சக்கைகள் இருக்கின்றன. எனவே, ஒரு பேப்பர் மில்லை வட ஆற்காடு மாவட்டத்தில் அமைக்க வாய்ப்புகள் இருக்கின்றன.

விதவைகளுக்கும். மகளிருக்கும் நிதிநிலை அறிக்கையில் ஏராளமான உதவிகளைச் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதை உன்னிப்பாகப் பார்த்து சிலவற்றைச் செய்ய முடியும். பால்வள நிறுவனங்களை அதிகமாக்க வேண்டும். பெண்டிர்களுக்கு வங்கிகளின் மூலம் கடன் உதவி செய்வதன் மூலம் அந்தப் பகுதியிலுள்ள பெண்கள் கறவை மாடுகளை வாங்கி பாலை அந்த நிறுவனங்களுக்குத் தர முடியும். ஏறக்குறைய ஆறு மாத காலத்திற்கு முன்பு ஜோலார்பேட்டை பகுதியில் ஒரு பால்வள நிறுவனத்தை அமைக்க வேண்டுமென்பது பற்றிய செய்தி, 'இந்து' பத்திரிக்கை போன்ற பத்திரிகைகளிலும் வந்தது. ஆனால் அது இப்போது கைவிடப்பட்டு ஈரோடு பகுதியில் ஏற்படுத்துவதாகச் சொல்லியிருக்கிறார்கள். நான் அந்த இடத்தில் அமைப்பதைப் பற்றிக் குறை சொல்லவில்லை. ஆனால், ஏற்கனவே ஜோலார்பேட்டை பகுதியில் ஏற்படுத்துவதாக இருந்தது என்னவாயிற்று? (மணி அடிக்கப்பட்டது).

பலவிதமான பிரச்சினைகளை எடுத்துச் சொன்னேன். இன்னும் ஒரு சில பிரச்சனைகள் தான் இருக்கின்றன. அதையும் சொல்லி முடித்துவிடலாம் என்று கருதுகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பாக மாஜி ராணுவத்தினரைப் பற்றிச் சொல்லாமல் விடப்பட்டிருக்கிறது. அதைச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வெல்லத்திற்குப் பலமுனை வரி விதித்திருக்கிறார்கள். விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படுகிற வெல்லமானது சாதாரண மக்கள் பயன்படுத்துவது. அதற்குப் பலமுனை வரியிலிருந்து விதிவிலக்குச் செய்வது நலமாக இருக்குமென்று தெரிவித்துக்



கொள்கிறேன். அதே போன்று சாலை வசதிகளையும் பிரிட்ஜ்களையும் பற்றிச் சொல்லியாக வேண்டும். எங்கள் பகுதியிலே கீரகுட்டை கிராமமும் சிவநாதபுரம் என்ற கிராமமும் தனியான இடங்களாக ஒதுக்கப்பட்டுவிட்ட காரணத்தால் அந்த மக்களுக்கு வசதியில்லாத நிலைமை இருக்கிறது, அவைகளையும் கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நேரத்திலே ஒன்றை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நெசவாள மக்களுக்கு பாதுகாப்பு தரப்படும் என்று சொல்லப்பட்டிருந்தாலும், அவர்களுக்குக் கொடுக்கிற பாதுகாப்பை மாஸ்டர் வீவர்ஸ் என்பவர்கள்தான் பயன்படுத்துகிறார்கள். ஒரு ஷேருக்கு 50 ரூபாய் என்று சொல்லி வாங்குகிறார்கள். அன்றாடம் தொழில் செய்யக்கூடிய நெசவாளி 50 ரூபாய் கட்டி ஷேர்ஹோல்டர் ஆகமுடியாது, ஆகவே வசதியுள்ளவர்கள் மாஸ்டர் வீவர்ஸ் அந்தத் தொகைகளைக் கட்டி அதன் மூலம் அவர்களின் பெயரால் அதிகமான லாபத்தைப் பெறக்கூடிய நிலைமை இருக்கிறது. ஏறக்குறைய 100 தறிகளை அந்தந்தப் பகுதிகளிலே சென்டர்கள் என்ற முறையிலே பிரித்து வைத்து அவர்களுக்கு அதன் மூலம் வருகின்ற லாபத்தை அவர்களே அடையக்கூடிய நிலைமையை ஏற்படுத்தி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்லி முடித்துக் கொள்ளலாம் என நினைக்கிறேன். அர்பன் லேண்ட் சீலிங், அது அரசாங்கத்தின் உத்திரவுப்படி 1–1–1976 அன்று அமலுக்கு வந்திருக்கவேண்டியதை தமிழக அரசு 3-8-1976 அன்று அமலுக்குக் கொண்டுவந்தார்கள். நிலத்தை மாற்றுவதற்கு கட்டணமாக நகரப் பகுதிகளில் 100-க்கு 13 ரூபாய் வீதம் வசூலிக்கிறார்கள். கிராமப்பகுதிகளிலே 100-க்கு 10 ரூபாய் என்று வசூலிக்கிறார்கள். நகரங்களைப் பொறுத்தவரையில் Tr nsactions h ve been fo:bidden; they h ve been stopp d. இப்படி நிறுத்தி வைத்திருப்பதன் மூலமாக அரசாங்கத்திற்கு வருமானம் குறைகிறது. அதே நேரத்திலே கட்டடத் தொழிலிலே ஈடுபட்டிருக்கின்ற தொழிலாளர்கள் 7½ லட்சம் பேர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே டிரான்ஸ்பர் ஆப் ப்ராப்பர்டிஸ் மீது உள்ள பேனை, தடைகளை, நீக்கவேண்டுமென்று கேட்டு அதன் மூலமாக 7½ லட்சம் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதன் மூலம் அரசாங்கத்திற்கும் வருமானம் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இதையும் கவனித்து நீங்கள் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு வாய்ப்பளித்ததற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வணக்கம்,

[1977 ஆகஸ்ட் 1

திரு. சு. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நாஞ்சிலார் அவர்கள் 25 ஆம் நாள் அன்று ஆற்றிய உரையை வரவேற்று அதன்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். பாசனத்திற்காக 24.7 கோடி ஒதுக்கீடு செய்து புதியதாக 7 பாசனத் திட்டங்களை நிறைவேற்ற எடுத்திருக்கும் முயற்சி பாராட்டத் தக்கது. அந்தத் திட்டங்களுடன் பாண்டியாறு புன்னம்புழா திட்டத்தையும் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி நிறைவேற்றினால் அதன் மூலம் 4 ஜில்லாக்களிலே உள்ள சுமார் 4 லட்சம் ஏக்கர்கள் சாகுபடி செய்யக்கூடிய பாசன வசதி கிடைக்கும்.

அடுத்து கிராமப்புறங்களுக்கு 30 ஆயிரம் பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கும் நல்ல திட்டத்தை வரவேற்கிறேன். அதோடு பவானி ஆற்றில் நெல்லித் துறை என்ற இடத்தில் மின்சாரம் எடுக்க முன்பிருந்த திட்டத்தை இப்போது நிறைவேற்றினால் மின்சார பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு முயற்சி எடுத்ததாகும்.

எங்கள் பகுதியில் தோளம்பாளையம் பள்ளம், ஏழு எருமைப் பள்ளம், காந்தைப் பள்ளம், தட்டைப் பள்ளம், தும்பைப் பள்ளம் போன்ற பள்ளங்களில் வரும் தண்ணீரை ஏரி, குளங்கள் வெட்டித் தடுத்தால் விவசாயிகளுக்கு கிணற்றில் தண்ணீரும், பொதுமக்களுக்கும் குடிக்கத் தண்ணீர் வசதியும் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, விவசாயிகளுக்காக வேளாண்மையும், தொடர்பான துறைகளையும் ஊக்குவிக்கும் வகையில், மக்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களை அதிகமாக உற்பத்தி செய்வதற்கு மேற்கொண்ட திட்டங்களை வரவேற்கிறேன். இந்தத் திட்டம் விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்கு வழிகோலும், மண்வளப் பாதுகாப்பிற்கு 302 லட்சம் செலவு செய்து, காய்கறி, எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியைப் பெருக்கவும், வேலைவாய்ப்பளிக்கவும் உதவுகிறது.

[முற்பகல் 11.10].

மீன்ளத் துறையைப் பொறுத்தவரையில் இடைத்தரகர்களை நீக்குவதால் மீனவர்களுக்கு நல்ல விலை கிடைக்கும் திட்டத்தை வரவேற்பதோடு இயற்கையின் தாக்குதலால் அகால மரணமடையும் மீனவர்களுக்கு மானியம் வழங்குவதால் அவர்கள் குடும்பம் சிறப்புற வாழ வேண்டும் என்ற எண்ணத்தையும் வரவேற்காமல் இருக்க முடியாது.

நெசவாளர்களுக்கு இந்த நிதிநிலை அறிக்கையில் கைத்தறி வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளித்திருப்பதையும், கைத்தறி துணியை கொள்முதல் செய்வதற்கும் விற்பனை செய்வதற்கும்



1977 ஆகஸ்ட் 1] [திரு. சு. பழனிச்சாமி]

தேவையான நிதி உதவியை அளிக்க அரசு முன் வந்திருப்பதையும் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தீவிர கைத்தறி வளர்ச்சியை கோவை மாவட்டத்திலும் ஏற்படுத்த வேண்டுமெனக் கேட்டுக் கொள்வதோடு என்னுடைய தொகுதியில் அதிகமாக வாழுகின்ற நெசவாளிகளின் நிலையை அரசுக்குத் தெரியப்படுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

விடியற்காலை 5 மணிக்கு எழுகின்ற நெசவாளிகள் இரவு 10 மணி வரையில் நெய்தல் தொழிலைச் செய்தாலும் மாதம் ஒன்றுக்கு 200 ரூபாய், 300 ரூபாய்தான் சம்பாதிக்க முடிகிறது. அந்த 200 ரூபாய், 300 ரூபாய்க்கு கணவன், மனைவி, குழந்தைகளும் சேர்ந்து பாடுபட வேண்டுமென்பது அந்தச் சமுதாயத்தின் துர்ப்பாக்கியம் என்றுதான் சொல்ல வேண்டும். நெசவாளர் சமுதாயத்திற்கு நல்லது கெட்டது எது நடந்தாலும் அவர்களுக்கு கிடைக்கக் கூடிய வருமானம் பாதிக்கவே செய்யும்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் நெசவாளர்கள் செய்த போராட்டத்தில் ஆயிரக்கணக்கானவர் சிறையில் அடைக்கப்பட்டும் அந்த அரசு அந்தச் சமுதாயம் முன்னேற வழி செய்யவில்லை என்பதை இந்த நேரத்தில் சுட்டிக் காட்டி, இந்தச் சமுதாயம் வாழ அடுத்துச் சொல்லப்படும் நல்ல திட்டங்களை நமது அரசு செய்தால் அந்த ஏழைச் சமுதாயம் எந்தத் தலைமுறைக்கும் மறக்காது என்பதைத் தெரியப்படுத்திக் கொள்கிறேன். கைத்தறிக்கு ஒதுக்கப்பட்ட ரகங்களை விசைத்தறியில் தயார் செய்யாமல் இருக்க கடுமையான கண்காணிப்புடன் இருத்தல் வேண்டும். மேலும் கைத்தறி நெசவாளர்களுக்குத் தேவையான நூல், பட்டு, ஜரிகை மற்றும் சாயங்களின் விலைகளை அரசாங்கம் கண்டிப்பாக கட்டுப்படுத்த வேண்டும். நெசவாளர்கள் உபயோகிக்கும் சிட்டா நூல் அனைத்துக்கும் விற்பனை வரியை நீக்க வேண்டும். நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் இறந்துபோன மெம்பர்களுக்கு ரூ. 500 வழங்கப்படுவதை ரூ. 5,000 ஆக உயர்த்தித் தர வேண்டும். கடந்த ஆண்டுகளில் தள்ளுபடி செய்து விற்பனை செய்த வகையில் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கு ஈடாக அரசு பங்குத் தொகையாக முதலீடு செய்துள்ளதை மானியமாக அறிவிக்க வேண்டும். இவர்களுக்கு மாற்றுத் தொழில் யாதாவது கொடுத்தாலும் பரவாயில்லை.

அரிஜனங்கள், பின் தங்கிய மக்களுக்காக மொத்தம் ரூ. 23.57 கோடி ரூபாய் வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டு அவர்களுக்கு கல்லூரிப் படிப்புவரை படிப்புக் கட்டணமின்றி பயில வசதியளித்திருப்பதும் பள்ளி இறுதி வகுப்புவரை இலவச புத்தகங்கள் வழங்குவது என்றும் நிதி அறிக்கையில் குறித்திருப்பது சிறப்பு அம்சமாகும். மேலும் 26 இலட்சம் ஒதுக்கப்படும் என்று குறிப்பிட்டுள்ளதை வரவேற்கிறேன். அரிஜனங்களுக்கு வீடு கட்டு

வதற்கு வட்டியில்லாக் கடன்கொடுப்பதைப் பாராட்டாமல் இருக்க முடியாது. இவர்களின் வாழ்க்கைத்தரம் உயர போதிய வருவாய் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமெனப் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

கோவை மாவட்டத்தில் மேட்டுப்பாளையம் தொகுதியில் அதிக மாக விவசாயம் செய்பவர்களும், நெசவாளிகளும், அரிசன மக்களும், ஆதிவாசிகளும் மேலும் பல தொழில்கள் செய்பவர்களும் உள்ளனர். மேட்டுப்பாளையம், காரமடை, சிறுமுகைப் பகுதிகளில் குடிதண்ணீர் பிரச்னை குறைவாக இருந்தாலும், சிறுமுகைக்கு கிழக்கே இரும்பொறை பகுதிகளிலும் காரமடைக்கு மேற்கே வெள்ளியங்காடு தோளம்பாளையம் பகுதிகளிலும், பெரியநாய்க்கன்பாளையம், வீரவாண்டி, கோவனூர் பகுதிகளிலும் குடிதண்ணீருக்கும், தண்ணீர் வசதியில்லாமல் விவசாயத்திற்கும் மக்கள் அவதிப்படுகிறார்கள். இதனால் அன்றாடம் கூலி செய்து பிழைக்கும் அரிஜன மக்கள், ஆதிவாசிகள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை அரசுக்குத் தெரியப்படுத்தி இந்தப் பகுதிகளுக்குக் குடிநீர் வசதி, பாசன வசதி ஏற்படுத்தி உதவ வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் என்னுடைய தொகுதியில் ஆதிவாசிகள் போக்குவரத்து வசதியில்லாமல் படிப்பு வாசனை குறைந்து இருக்கின்றனர். அவர்களுடைய பகுதிகளுக்கு சாலை வசதிகளும், சிறு போருந்து வசதிகளும் ஏற்படுத்த உதவுவதோடு மேட்டுப்பாளையத்திலிருந்து சிறுமுகை வழியாக சூலூர் மட்டம் பாதையை அமைத்தோம் என்றால் 15 மைல்களுக்கு மேட்டுப்பாளையத்திலிருந்து சோத்தகிரிக்கு உள்ள தூரம் குறைகிறது என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொள்கிறேன். கரந்தை, சூலூர், உலியூர் ஆகிய ஊர்களில் வாழும் இருளர்கள் சமுதாயத்திற்கு இது நன்மை பயக்கும்.

மேலும், தோளம்பாளையம், பகத்தூர் போன்ற இடங்களில் கண்டிப்பாக பாலங்கள் அமைத்தே தீர வேண்டுமென்ற நிலையிருப்பதை அரசுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பெண்கள் சமுதாயத்திற்கு உதவ வேண்டுமென்ற எண்ணம் நமது அரசுக்கு அதிகம் இருப்பதை வரவேற்று என்னுடைய தொகுதியில் சிறுமுகை, காரமடை, பெரியநாய்க்கனபாளையம் போன்ற இடங்களில் பிரசவ ஆஸ்பத்திரி அவசியம் ஏற்படுத்த வேண்டுமென்றும் மேட்டுப்பாளையத்தில் தற்போது இருக்கும் பிரசவ ஆஸ்பத்திரியை விரிவுபடுத்த வேண்டுமென்றும் அரசு தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் பள்ளிக்கூடங்கள் அமைக்க வழி செய்ய வேண்டுமென்று தொகுதியின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.





என்னுடைய தொகுதியில் உள்ள தொழிற்சாலைகளில் அடிக்கடி கதவடைப்பு ஏற்பட்டு தொழிலாளர்களைக் கடன் சுமையில் தள்ளுவதை நிவர்த்திக்க வேண்டுமென்றும், தற்சமயம் எல்.எம்.டபிள்யூ பாக்டரி மூடப்பட்டு தொழிற்சங்கங்கள் சிதறடிக்கப்பட்டு தொழிலாளர்கள் துன்பப்படுகிறார்கள் என்பதையும் அரசுக்குத் தெரியப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசு ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு என்று குறிப்பிட்டுள்ளதையும் 30-6-1977 அன்று முடிவுற்ற பசலி ஆண்டில் வரி வசூல் தள்ளி வைக்கப்பட்டது வசூல் செய்யப்பட மாட்டாது என்று தீர்மானித்துள்ளதையும், பாசனக் கட்டணங்களைக் குறைத்திருப்பதையும், பருத்தி உள்ளாடை நூல் மீதான விற்பனை வரியைக் குறைத்திருப்பதையும் வரவேற்று, பஞ்சாயத்துக்களிலுள்ள நிலங்களுக்கு, தியேட்டர்களுக்கு ஒருமுனை வரி விதிப்பதால் அரசுக்குச் சுமார் ரூ. 6 கோடி வருமானம் அதிகம் வரும் என்பதையும் தெரிவித்து, எனக்கு வாய்ப்பளித்த துணை சபாநாயகருக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

* **திரு. ஒ. சுப்பிரமணியன்** : மாண்புமிகு அவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கு பல தரப்பட்ட விஷயங்கள்பற்றி, அதுவும் குறிப்பாக, விவசாயத்தைப் பற்றி நண்பர் கந்தசாமி அவர்கள் சொல்லிவிட்டார்கள். இருந்தாலும், நானும் அதைப் பற்றி ஒருசில சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். விவசாயிகளுக்குத் தகுந்த விலை கிடைக்கவில்லையென்ற குறை மட்டுமல்லாது, விலை உயர்வினால் விவசாயிகளுக்கு எந்த இலாபமும் கிடைப்பதில்லை. இடைத்தரகர்கள், வியாபாரிகள், முன்கூட்டியே பொருள்களை வாங்கி ஸ்டாக் செய்வதால் விலை உயர்வின் பலனை அவர்கள்தான் அடைகிறார்கள். விவசாயப் பொருள்களுக்கு நல்ல நியாய விலை கிடைக்க, டைரக்டரேட் ஆஃப் அக்ரிகல்ச்சுரல் மார்க்கெட்டிங் என்ற ஒரு அமைப்பை ஏற்படுத்தி, அந்த அமைப்பின்மூலம் மார்க்கெட்டிங் செய்வோம் என்று நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. இதுவரையில் இருந்த மார்க்கெட்டிங் கமிட்டிகள் என்ன செய்திருக்கின்றன, எந்த அளவிற்கு விவசாயிகளுக்கு உதவியிருக்கிறார்கள் என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

இராமநாதபுரம் மாவட்டம் கடந்த பல ஆண்டுகளாக வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும். அங்கு விவசாயமே ஒரு சூதாட்டம் போலத்தானிருக்கிறது. கால மழை பல ஆண்டுகளாகப் பொய்த்ததால், ஆடுமாடுகள் இவற்றையும் விற்றுக் கூட பிழைப்பு நடத்த முடியாமல், கிடைக்கவேண்டிய தண்ணீர் கிடைக்காமையால், அங்கு பயிர்கள் மிகவும் பாழடைந்து வாடிப் போகக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிற காரணத்தினால், அந்த பயிர் காப்புறுதி திட்டம் நிச்சயம் கொண்டு வரப்பட வேண்டும். பயிர் காப்புறுதித் திட்டம் மாநிலம் முழுவதும் செயல்

படுத்தப்படவேண்டும். குறிப்பாக, இராமநாதபுரம் போன்ற பின்தங்கிய மாவட்டங்களில், கண்டிப்பாக பயிர் காப்புறுதித் திட்டத்தைச் செயல்படுத்தவேண்டும். அதை மத்திய சர்க்கார் செய்யவில்லையென்றாலும் கூட, மாநில சர்க்கார், விவசாயிகள் நன்மையை கணக்கில்கொண்டு, பயிர் காப்புறுதித் திட்டத்தை அமுலுக்குக்கொண்டுவரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மீனவர் பிரச்னையை எடுத்துக்கொண்டால், நாட்டுப் படகுக்காரர்களுக்கும் விசைப் படகுக்காரர்களுக்கும் பல இடங்களிலே போட்டி ஏற்பட்டு, சண்டை நடப்பதை சர்க்கார் அறிந்திருக்கலாம். அங்கங்கு, சில இடங்களில், தனிப்பட்ட முறையில், பஞ்சாயத்து மூலமாக, ஏதோ தீர்வு செய்கிறார்களே தவிர, நிரந்தரமான தீர்வு காண்பதில்லை. ஆகவே, அரசு நிரந்தர தீர்வு காண முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இராமநாதபுரம் பகுதியிலேதான் இறால் கிடைக்கிறது. நம் நாட்டு மீனவர்கள் கச்சத் தீவைச் சுற்றியுள்ள பகுதிகளில் மீன் பிடிக்கச் செல்லும்போது, இலங்கை இராணுவ அதிகாரிகளும் போலீஸ் அதிகாரிகளும் அத்துமீறி வந்து அவர்களைத் துன்புறுத்தி பல்வேறு சிரமங்களுக்கு ஆளாக்குகிறார்கள். அதற்கு மத்திய சர்க்கார் மூலமாக ஒரு நிரந்தர நிவாரணம் செய்ய வேண்டுமென்று இந்த அரசைத் தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 11–20].

மேலும் இந்த இறால்கள் இங்கே பிடிக்கப்பட்டு, அதிகம் கேரளாவிற்கு எடுத்துச் சென்று அங்கே பதனப்படுத்தப் பட்டு வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். அதை இராமேஸ்வரம் பகுதியிலே இறால்களை பதனப் படுத்த ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்திக் கொடுத்தால் தமிழ்நாட்டு மக்களுக்கு லாபமாக இருக்கும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, ஈரோட்டில் பால் மாவு தயாரிக்க 3 கோடி ரூபாயில் திட்டமிடப்பட்டிருப்பதை வரவேற்கிறோம். அதே நேரத்தில் ஏற்கெனவே, மதுரையில் பால் திட்டத்தின் கீழ் உள்ள சொசைடிகளுக்கு லோன் வழங்கப்படுவது கிடையாது. காரணம்கேட்டால் தேவைக்கு அதிகமாக பால் இருக்கிறது. ஆகவே புதிதாக சொசைட்டி ஆரம்பிக்க யோசனை இல்லை. லோன் கிடையாது என்று சொல்கிறார்கள். ஆகவே இருக்கிற பால் திட்டத்தை இன்னும் விஸ்தரித்து, அதிகம் உற்பத்தி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



தமிழ்நாட்டிலே இருந்து சிறந்த கால்நடைகள் வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்படுகிறது. அந்தக் காலத்திலே அடிமாடுகள் என்று சொல்லப்பட்ட-வயது மிகுந்த உடல் மெலிந்த மாடுகளே அடிமாடுகள் ஆக்கப்படும். ஆனால் இப்போது கேரளாவில் நல்ல விலை கொடுக்கின்ற காரணத்தால் ஆயிரக்கணக்கான கால்நடைகள் பல்வேறு பகுதியிலிருந்து வெளியேறுவதைக் கண்டோமானால், தமிழ்நாட்டிலே இன்னும் சில ஆண்டுகளில் விவசாயம் பாதிக்கின்ற அளவுக்கு அங்கே ஏற்றுமதியாகின்றது. அதைத் தடை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பாசனத்தைப் பற்றி நண்பர்கள் குறிப்பிட்டார்கள். கேரளாவில் மேற்கு நோக்கி கடலில் விழுகின்ற தண்ணீரை, திருப்பி விட்டால் பல மாவட்டங்களுக்கான ஏக்கர் நிலங்கள் பாசனத்திற்கு வரக்கூடிய வாய்ப்பிருக்கிறது. அதிலும் குறிப்பாக [illegible] பந்தப்பட்ட போக்கு வாய்க்காலிலே நாம் இடுக்கியிலிருந்து மின்சாரம் கொடுக்கிறோம். அவர்கள் தண்ணீர் கொடுக்கிறார்கள், என்ற பிரச்னை வந்தது. அதே மாதிரி, கோவையிலிருந்து நாம் உணவைக் கொடுத்து நமக்குத் தேவைப்பட்ட தண்ணீரை அவர்கள் கொடுக்கவேண்டுமென்ற பண்டமாற்று முறையை ஏன் செய்யக்கூடாது. அதற்கான முயற்சி ஏன் எடுத்துக் கொள்ளக் கூடாது என்று கேட்க விரும்புகிறேன். இராமநாதபுரம் பகுதியில் நல்ல தண்ணீரும், ஊற்றுத் தண்ணீரும் உள்ள இடங்களை சென்று ஆய்ந்து ஆழ் குழாய் கிணறுகள் போட்டபோது தெரிய வந்தது. அதையும் விவசாயத்திற்கு பயன்படுத்தினால், இராமநாதபுரம் போன்ற வறட்சிப் பகுதிகளுக்கு உபயோகமாக இருக்கும். பெரியாறு விஸ்தரிப்பு, வைகை அணைக்கட்டு மூலம் இராமநாதபுரம் மாவட்டத்திற்குத் தண்ணீர் கிடைக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. (மணி அடிக்கப்பட்டது) இப்போதுதான் ஆரம்பித்தேன். 5 நிமிடம் கூட ஆகவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எட்டு நிமிடம் பேசி இருக்கிறீர்கள். இன்னும் 2 நிமிடம் பேசலாம்.

திரு. ஓ. சுப்பிரமணியன் : தண்ணீர் விடும்போது ஒரு கண்மாயிலிருந்து மற்றொரு கண்மாய்க்கு விடுகிறார்கள் ரெகுலர் சேனல் மூலம் விட்டால் தண்ணீர் சேதம் இல்லை. அதன் மூலம் மக்களுக்குள் ஏற்படும் சண்டைகள் தவிர்க்கப்படுமென்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

நிலவள வங்கிகளை பொறுத்த வரையில் கிணறு வெட்டக் கடன் கொடுக்கிறார்கள். நல்ல தண்ணீரும் நல்ல ஊற்றும் இல்லாத இடத்திலே அவர்களுக்கு லோன் செய்யப்பட்டிருப்பதாக

சொல்லப் படுகிறது. ஆனால் எங்கு கேட்டாலும் கொடுப்பதாகத் தெரியவில்லை. அதற்கு ஒரு நிபுணர் குழு ஏற்படுத்தி, கோடைக் காலத்திலும், மழைக் காலத்திலும் தண்ணீரே இல்லை என்றால்தான் கொடுப்போம் என்று சொல்கிறார்கள். மழைக் காலத்திலே வரண்ட கிணற்றிலேயும் சிறிதளவு தண்ணீர் இருக்கும். ஆகவே இந்த விவாதங்கள் நிவாரணம் கொடுக்காமல் இருப்பதற்கு ஒரு வாதமே தவிர, வேறு ஒன்றும் இல்லை. உண்மையிலே இது விவசாயிகளுக்கு உதவிகரமாக இல்லை. அத்துடன் தனியாரிடம் கடன் வாங்கும்போது கூடுதலாக வட்டி வாங்கும்போது தண்ணீர்க் காப்பு இருக்கிறது. அரசு மூலமும் கூட்டுறவு ஸ்தாபனங்களின் மூலமும் வாங்கும்போது, காலங்கடந்த கடன்களுக்கு பீனல் இன்டரஸ்ட் என்று தண்ட வட்டி வசூல் செய்கிறார்கள். அது எந்த அளவுக்கு நியாயம் என்று தெரியவில்லை. அமைச்சர் அவர்களுக்கு ஒன்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். சட்டத்தில் இருக்கலாம். ஆனால் அந்தக் காலத்திலே தீர்வை பாக்கிக்காக முன்னும் வட்டி போட்டு வாங்குவதாக எனக்குத் தெரியவில்லை. கடந்த 2, 3 ஆண்டுகளுக்கு முன்னும் இருப்பதற்கான பகுதியில் தொடர்ந்து 2, 3 ஆண்டு வரட்சி இருந்தும் இந்த வருஷத்தில் தீர்வை பாக்கிக்கு வட்டி போட்டு வசூல் செய்யும் கொடுமையை அனுபவிக்கிற பகுதி மக்கள் தெரிவித்திருக்கிறார்கள். இவ் வட்டியை ரத்து செய்யும்படி கேட்டு இந்த நேரத்தில், காலங் கடந்த பாக்கிக்கு வட்டி போடுவதும், வசூல் முறையும் நியாயம் இல்லை.

இராமநாதபுரம் மாவட்டத்தில் பெரிய தொழிற்சாலை எதுவும் இல்லை. ஆனால் எங்கே பார்த்தாலும் புகை புகைந்து கொண்டே இருக்கும். அந்தப் பகுதியில் காட்டுக் கருவேலம் மிகுதியாக இருக்கிறது. அதை வைத்து கரி மூட்டை தயாரிக்க அந்த மரத்தை உபயோகிப்பார்கள். அந்தப் பகுதியில் வேறு எந்தத் தொழிலும் இல்லை. அந்தப் பகுதியில் கனரகத் தொழில் ஆரம்பிக்க கனிவளம் இருப்பதாகக் கூறுகிறார்கள். அந்த நிலைமையை அந்தப் பகுதியில் உருவாக்கினால் கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மக்களுக்கு நல்ல முறையில் வேலை வாய்ப்பு கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிவகெங்கைப் பகுதியில் செராமிக் இன்டஸ்டிரீஸ் ஆரம்பிக்க வாய்ப்பு அதிகம் இருப்பதாகக் கூறுகிறார்கள். அதற்குத் தகுந்த மண் வளம் அங்கே இருப்பதாகச் சொல்கிறார்கள். அப்படி ஒரு இன்டஸ்டிரீஸ் அமைக்க முன்பு நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்தது. ஆனால் என்ன காரணத்தாலோ அது நிறுத்தப்பட்டு விட்டது. ஆகவே, மீண்டும் அந்தப் பகுதியில் சிவகெங்கைப் பகுதியில், ஒரு செராமிக் இன்டஸ்டிரீஸ் அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது).





மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லோரும் பேசவேண்டும். அதனால்தான் சொல்கிறேன். உங்கள் கட்சியில் பேச வேண்டியவர்கள் இருந்தாலும் பரவாயில்லை. சீக்கிரம் முடியுங்கள்.

திரு. ஓ. சுப்பிரமணியன்: எங்கள் கட்சியில் ஆள் இல்லை என்பதால் அதிக நேரம் கொடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போதே நேரம் இல்லை. உங்கள் தலைவர் பேசுவதற்கே நேரம் கிடைக்குமா என்பது சந்தேகமாயிருக்கிறது. சீக்கிரம் முடியுங்கள்.

திரு ஓ. சுப்பிரமணியன்: சிவகங்கை பகுதியில் நிறைய கரும்பு சாகுபடி இருக்கிறது. அங்கே உற்பத்தி செய்யப்படும் கரும்பை பல மைல் தூரத்திற்கு எடுத்துச்சென்றுதான் கரும்பு ஆலைகளுக்கு கரும்பு தரமுடியும். ஆகவே அந்த சிவகெங்கைப் பகுதியில் ஒரு கரும்பு ஆலை ஏற்படுத்தினால் மிகவும் வசதியாக இருக்கும் என்று எடுத்துச்சொல்லி, பலவேறு விஷயங்கள் பேச வேண்டியிருக்கிறது. அதுவும் குறிப்பாக, நம்முடைய முதலமைச்சரும், நிதி அமைச்சரும் தென்பாண்டி நாட்டிலிருந்து தேர்ந்து எடுக்கப்பட்டு வந்திருக்கிற காரணத்தால் அங்கே உள்ள வறட்சி நிலைமையை நன்கு அவர்கள் அறிந்து இருப்பார்கள் என்ற காரணத்தால், அடுத்து வருகிற நிதி நிலை அறிக்கையிலாவது தென் பிராந்தியத்திற்கு அதிகமாக நிதி ஒதுக்கீடு செய்து தந்து, அங்கே வறட்சியால் வாடும் மக்களுக்கு உதவி செய்யவேண்டும் என்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. க. மருதாசலம் : மதிப்பிற்குரிய சட்டப் பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் மாண்புமிகு அண்ணன் நாஞ்சிலார் அவர்கள் 1977–78-ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையை இந்த மாமன்றத்திலே சமர்ப்பித்து இருக்கின்றார்கள். இந்த நிதிநிலை அறிக்கையின் மீது கோவை மாவட்டம் தொண்டாமுத்தூர் சட்டமன்றத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவன் என்ற முறையில் நான் அதைப் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கின்றேன். இந்த சிறப்புமிகு நிதி நிலை அறிக்கையைப் பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் காழ்ப்பு உணர்ச்சியோடு இந்த நிதிநிலை அறிக்கையில் உப்பும் இல்லை, சப்பும் இல்லை என்று ஒரு சிலரும், இன்னும் சில உறுப்பினர்கள் புரட்சியும் இல்லை, புதுமையும் இல்லை என்று எல்லாம் கோடிட்டுக் காட்டி பேசியிருக்கிறார்கள். உண்மையிலேயே நான் சொல்லிக் கொள்வேன். இதற்கு முன்பு பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த 2 ஆண்டு காலத்திலே மிகச் சிறப்பான பட்ஜெட்டை அளித்தார்கள். அண்ணா சமர்ப்பித்த பட்ஜெட் ஒரு சில உறுப்பினர்கள் பேசுகிற நேரத்தில்

[திரு. க. மருதாசலம்] [1977 ஆகஸ்ட் 1

டிருப்பீறகு நம்முடைய புரட்சித் தலைவர் தலைமையில் அமைந்து இருக்கிற சிறப்புமிகு ஆட்சியில் நான் நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் மிகச் சிறப்பான வரலாற்றுச் சிறப்பு மிக்க பட்ஜெட்டை சமர்ப்பித்து இருக்கிறார்கள். இன்றைக்கு இந்த நிதி நிலை அறிக்கையிலே நாட்டு மக்கள் எதிர்பார்த்த எல்லா அம்சங்களும் காணப்படுகின்றன.

குறிப்பாக பார்த்தால் கிராமப் புற வேலை வாய்ப்புத் திட்டத் திற்காக நமது அரசு 51 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. இந்த நாட்டு ஏழை எளிய நடுத்தர மக்கள் அதனைப் பாராட்டி வரு வேற்கிறார்கள். அது மட்டுமல்ல. தாழ்த்தப்பட்ட ஏழை அரி சனங்களுக்காக இந்த பட்ஜெட்டிலே காட்டப்பட்டு இருக்கிற சலுகைகள் பாராட்டுவதற்குரிய ஒன்றாகும். பல்கலைக் கழக மானியக் கமிஷன் செய்துள்ள சிபார்சு பற்றியும் இந்த பட்ஜெட் டில் குறிப்பிட்டுக் காட்டி உள்ளார்கள். தமிழகத்தின் உடனடி உயிர் பிரச்சனையான குடி நீர் பிரச்னை பற்றியும் நமது அரசு எடுத்துக்கொள்ள இருக்கிற நடவடிக்கைகளைப் பற்றியும் குறிப் பிட்டுக் காட்டியுள்ளார்கள். இப்போதுள்ள பிரச்சினை நமது தமிழகத்திற்கு குடி நீர் மிகவும் அவசியம். அதற்கான திட்டத்தை நிறை வேற்ற வேண்டும் . என்பதற்காக மிக அதிகமான நிதியை ஒதுக்கி இருக்கிறார்கள். அதே போல் மொத்தத்தில் இந்த பட் ஜெட் எதிர்பார்த்த எல்லா அம்சங்களும் நிறைந்து காணப்படு கிறது. அது மட்டுமல்லாமல் நிலத்தடி நீர்ப்பாதுகாப்பு நடவடிக் கை, பயிர்பாதுகாப்புத் திட்டம், படித்தமக்களுக்கு வேலைவாய்ப்பு இளிக்கும் திட்டம் ஆகியவைகள் இந்த வரவுசெலவு திட்டத்திலே இடம் பெற்று இருப்பது மிகவும் வரவேற்கத்தக்கதொன்றாகும்.

[முற்பகல் 11·30]

மேலும், ரூ. 200-க்கு அதிகமாக மாத வருமானம் பெறுகின்ற அரசு ஊழியர்களுக்கு ரூ. 10 சம்பள உயர்வு அளித்திருப்பது மிகுந்த பாராட்டுவதற்கு உரிய ஒன்றாகும். ஆகவே, இந்த பட்ஜெட், ஏழை மக்கள் மற்றும் நடுத்தர வகுப்பு மக்களின் எண்ணங்களை பிரதிபலிக்கின்ற பட்ஜெட்டாக இருக்கிறது.

கிராமப் புறங்களில் வாழும் 80 சதவிகிதத்தினராக ஏழை விவசாயிகள் பயன் பெறவும், நெசவாளர்கள் எதிர் காலத்தில் தன்னம்பிக்கையுடன் செயல் படவும், நல்ல திட்டங்கள் வகுக்கப் பட்டிருக்கின்றன. இதனை நல்ல மனதுள்ளவர்கள் பாராட்டாமல் இருக்க முடியாது. ஆனல் நேற்றைக்கு முன் தினம் பல உறுப் னர்கள் பேசுகின்ற நேரத்தில் இந்த பட்ஜெட்டில், உப்பில்லை, ப்பில்லை என்று குறிப்பிட்டார்கள். குறிப்பாக, மாண்புமிகு உறுப்பினர் சாதிக் பாட்சா அவர்கள் பேசுகின்ற நேரத்தில், அனைத்திந்திய அ.தி.மு.க. தேர்தல் நேரத்தில், நாங்கள் ஆட்சிக்கு வந்தால், புரட்சி வரும், புதுமை உண்டாக்குவோம் என்று சொன்



1972 ஆகஸ்ட் 1] [திரு. க. மருதாசலம்]

னர்கள். புரட்சியைப் பற்றியும், புதுமையைப் பற்றியும், அறியா தவர்கள் தான் இங்கே புரட்சித் தலைவரின் திட்டத்தை ஏளன மாகப் பேசியிருக்கிறார்கள். ஆனல் தமிழகத்திலே உள்ள மக்கள் புரட்சித் தலைவரின் தலைமையிலே அமைந்திருக்கின்ற இந்த அரசினுடைய நல்ல திட்டங்களைப் பாராட்டிக் கொண்டிருக்கி றார்கள். நேற்றைக்குக் கோவைக்குச் சென்றிருந்த நேரத்திலே அங்கே இருக்கின்ற மக்கள் எல்லாம் புரட்சித் தலைவரும், நம் முடைய நாஞ்சிலார் அவர்களும் சமர்ப்பித்திருக்கின்ற இந்த பட்ஜெட்டைப் படித்த மக்கள் எல்லாம் பாராட்டுகிற முறை யில் என்னிடத்தில் சொன்னார்கள். இந்த பட்ஜெட்டைப் பொறுத்த அளவில் வேளாண்மை தொடர்புள்ள துறைகள், பாசனம், மின்சக்தி, தொழில்கள், கிராமப் புறங்களில் தொழில் வளர்ச்சி, கைத்தறித் தொழிலாளர் பிரச்சினை, கிராமக் குடிநீர் வழங்குதல், கிராம வீட்டு வசதிகள், கிராமச் சாலைகள், கிராம மருத்துவ வசதி, தொழில் வளர்ச்சி, நகர்ப்புற வளர்ச்சி, வேலை வாய்ப்பு போன்ற நல்ல பல திட்டங்களை இந்த அரசு அறிவித்தி ருக்கின்றது. ஆகவே, மக்கள் இந்த அரசைப் பாராட்டிக் கொண் டிருக்கிறார்கள்.

நான் இந்த அரசின் கவனத்திற்கு, எனது தொகுதியான தொ...முத்தூர் தொகுதியின் சார்பில் தெரிவித்துக்கொள்கி றேன். தொ...முத்தூர் சட்டமன்றத் தொகுதியில் சின்னத் தடாகம் பகுதி இருக்கிறது. அந்தப் பகுதியில் கட்டப்பட்டுள்ள வெள்ளத் தடுப்பு அணையொன்று சிறுவாணித் திட்டத்தின் கீழ் ரூ. 53 லட்சம் மதிப்பீட்டில், 1975-76 இல் துவக்கப்பட்டிருந்தது. இதற்குப் பூர்வாங்க வேலைகள் முடிவடைந்த நிலையில் அப்போதைய எங்கள் தொகுதி சட்ட மன்றத் தொகுதி தி.மு.க. உறுப் பினரின் தலையீட்டின் பேரில் இத் திட்டம் நிறைவேருமல் தடை செய்யப்பட்டு விட்டது. 100 அடி, 200 அடி கிணறு தோண்டி விவசாயம் செய்யும் கோவை மாவட்டத்து விவசாயிகளுக்கு இத் திட்டம் ஊற்று நீராக உதவக் கூடிய நிலை இருக்கும். ஆனல், இத்தகைய திட்டம் ஒரு சிலரது சுயநலன்களுக்காக நிறைவேற்றி வைக்கப்படாமல் இருந்தது அப்பகுதி மக்களின் துரதிர்ஷ்டமே யாகும். ஆகவே, இத்திட்டதைப் பற்றி, நமது அரசு மறு பரிசீ லனை செய்து, இத்திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும், இத்திட்டத்தை நிறை வேற்று வதன் மூலமாக, விரைவில் மாநகராட்சியாக இருக்கும் கோவை நகரத்தில், அடிக்கடி ஏற்படும் வெள்ளச் சேதத்தைத் தடுக்க முடி யும் என்ற நம்பிக்கையும் நிம்மதியும் அந்நகர மக்களுக்கு ஏற்படும். ஆகவே, கிராம மக்கள், விவசாய மக்கள், நகரத்து மக்கள் ஆகிய எல்லோருக்கும் பயன்படுகிற இத்திட்டத்தை, கிராம முன்னேற்றத்திற்கு பெரும் முக்கியத்துவம் அளித்திடும் நமது அரசு நிறைவேற்றித் தரவேண்டுமென்று அத்தொகுதி உறுப்பினர் என்ற முறையில் வற்புறுத்திக் கூறக் கடமைப்பட்டி ருக்கிறேன். மேலும், இத்திட்டம், அப்பகுதியில், வேலைவாய்ப்பு அளிக்கவும் பேருதவியாக இருக்கும்.

மின்சாரக் கட்டணம் தமிழ்நாட்டு விவசாயிகளுக்கு ஒருபெரும் சுமையாகக் கருதப்பட்டாலும் 180 அடி, 200 அடி வரையில் ஆழக்கிணறு வெட்டி விவசாயம் செய்யும் கோவை விவசாயிகளுக்கு தனிப்பட்ட முறையில் பிரத்தியேக சலுகை அளிக்க வேண்டியது அவசியம். விவசாயிகளுக்கு மின்சாரக் கட்டணச் சலுகை பற்றி பரிசீலித்து வருவதாக அரசு அறிவித்துள்ளதை கோவை மாவட்ட விவசாயிகள் பேரார்வத்துடன் வரவேற்றுள்ளார்கள். விவசாயிகளுக்கு மின்சாரம் விநியோகிப்பதில் ஏற்கெனவே பலகோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டாலும் இது நலிந்து போன விவசாயிகளுக்கு உதவுவதற்காகவும் உணவு உற்பத்திக்காகவும் ஏற்றுக்கொள்ள வேண்டிய அத்தியாவசியச் செலவாகவே அரசு கருத வேண்டும். மேலும் இதில் சலுகை அளித்து விவசாயிகளுக்கு உதவ வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதியில் சுமார் 200-க்கு மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. பெரும்பாலும் விவசாயக் கூலியை நம்பி வருடத்திற்கு பாதி நாட்கள் வேலை இல்லாமல் அவதிப்படும் ஏழை மக்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தித்தர இப்பகுதியில் அரசுத் துறையில் ஒரு தொழிற்சாலை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு கோவை நகரிலும் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் இனவெறியைத் தூண்டிவிட்டு சிலர் பேசிக் கொண்டிருக்கிறார்கள். இன்று தமிழக அரசு வரவு-செலவுத் திட்டத்தில் தமிழர்களின் பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் காப்பாற்ற ஏற்பாடு செய்திருக்கும்போது தமிழின் வரலாற்றுப் பாதுகாப்பு முன்னணி என்ற பெயரில் ஒரு பொதுக் கூட்டத்தை கோவையில் போட்டு அங்கு இன வெறியை கிளப்பியிருக்கிறார்கள். தமிழன்—மலையாளி என்ற இன வெறியை மீண்டும் தூண்டிவிட்டு மக்களின் அமைதியைக் குலைத்து குழப்பத்தை ஏற்படுத்த முயற்சி செய்கிறார்கள். அதைச் செய்கிறவர்கள், புலவர் மருதுவாணன், திரு. விடுதலை விரும்பி, திரு. ஆ. இறையன், தென்மொழி ஆசிரியர் புலவர் பெருஞ்சித்தனார் ஆகியோர் ஆவர். இவர்கள் இன வெறியைத் தூண்டிவிடும் கூடிய முறையில் பேசுகிறார்கள். குழப்பத்தை உருவாக்குகிற இவர்கள் மீது இந்த தமிழக அரசு தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். 23—7—77-ல் ஒரு கூட்டத்தில் பேசி இன வெறியைக் கிளப்பியிருக்கிறார்கள். இன வெறியை கிளப்பிக் கொண்டிருக்கும் இந்த நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் கூட்டங்களுக்கு அனுமதி மறுக்கப்படவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். எனக்கு பேச இந்த சந்தர்ப்பத்தை அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன். வணக்கம்.

திரு. கோ. இளங்கோவன் : பாயின்ட் ஆப் ஆர்டர். அவையில் இல்லாதவர்களைப் பற்றி இந்த அவையில் குறிப்பிடுவதற்கு உறுப்பினருக்கு அதிகாரமுண்டா?





மாண்புமிகு பேரவைத் தலைவர் : பெயரைச் சொல்லியிருக்க வேண்டியதில்லை. மேலும் இதைப்பற்றிப் பேசி பெரிதாக்காமல் இருப்பது நலமாயிருக்கும். ஆகவே இதைத் தொடர்ந்து யாரும் பேசாமல் இருப்பது நலம்.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : இனவெறி அடிப்படையில் பிரசாரம் நடக்கிறது என்றால் அதை இந்த அவையின் முன்னால் சுட்டிக்காட்டுவது உதவியாக இருக்காதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பெயரைச் சொல்லியிருக்க வேண்டியதில்லை என்று சொன்னேன். பேசுகிற பேச்சை பெரிதாக்காமல் இருக்கவேண்டுமென்று சொன்னேனே தவிர, இது குறித்து மேலும் வாதிட்டுக்கொண்டு போனால் அதற்கு மேலும் வலுவூட்டுவது போலாகும் என்பதால் பேச வேண்டாம் என்று சொன்னேன். பெயரைக் குறிப்பிட வேண்டாம் என்பது முதல் யோசனை.

திரு. க. மருதாசலம் : இதற்கு என்று ஒரு அமைப்பை கோவை மாவட்டத்தில் தி.மு.க. பின்னணியில் வைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 11-40.]

*திரு. என். பழனிவேல் : மதிப்பிற்குரிய சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, 1977-78-ம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின் மீது பேசுகின்ற நேரத்தில் இங்கே இருக்கின்ற உறுப்பினர்கள் பலர் குறைகளைச் சொன்னார்கள். பலர் பல நல்ல திட்டங்கள் இருப்பதாகச் சொன்னார்கள். சிலர் இதில் ஒன்றுமேயில்லை என்று சொன்னார்கள். அந்த வாதங்களுக்கெல்லாம் நான் செல்ல விரும்பவில்லை. நமக்கு இருக்கின்ற அதிகாரங்களை வைத்துக் கொண்டு, நம்முடைய செலவு 663 கோடி ரூபாயாகவும், நம்முடைய வருமானம் 633 கோடி ரூபாயாகவும் இருக்கின்ற நிலையில் நாம் நிலைமையை சமாளிக்க வேண்டியிருக்கிறது. இதில் இருக்கக்கூடிய பல சிக்கல்களையும் நாம் பார்க்கவேண்டியிருக்கிறது. நாம் போடுகின்ற திட்டங்கள் அடித்தளத்திலுள்ள மக்களை கீழ்மட்டத்திலுள்ள மக்களை சிறிதும் எட்டிப்பார்க்கவில்லை. இதைப்பற்றி எங்கள் மார்க்ஸிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியின் தலைவர் உமாநாத் அவர்கள் மிகத்தெளிவாக கூறியிருக்கிறார்கள்.

குறிப்பாக, மக்களுக்கு வசதி செய்து கொடுக்கின்ற முறையில் சென்னையிலுள்ள ஹைகோர்ட்டுக்கு தென்மாவட்ட மக்கள் மிகவும் கஷ்டத்தோடு வரவேண்டியிருக்கிறது. ஆகவே இந்தக் கஷ்டத்தைப் போக்குகின்ற அளவில் மதுரையில் ஒரு பிரிவு ஏற்படுத்தித்தர வேண்டும் என்று இந்த மன்றத்தின் மூலமாக நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மேலும் திண்டுக்கல், பழனி,

நிலக் கோட்டை, வேடச்செந்தூர், பெரியகுளம் போன்ற தாலுகாக்களை எல்லாம் இணைத்து, திண்டுக்கல் மாவட்டம் என்று தனி ஒரு மாவட்டத்தை ஏற்படுத்தி அங்குள்ள மக்களுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல், பல இடங்களிலும் கோவிலுக்குச் சொந்தமான பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன. அதன் மூலமாக ஏராளமான வருமானம் தமிழகத்திற்கு வந்து கொண்டிருக்கிறது. இந்தக் கோவில் நிதியிலிருந்து மாணவர்களுக்கு குறிப்பாக அரிசன மாணவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். இப்போது, அரிசன மாணவர்கள் எந்தவித வசதியும் இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். இன்று பழனி தண்டாயுதபாணி தேவஸ்தானத்தில் சுமார் ஒன்றரைக் கோடி ரூபாய் அளவுக்கு வருமானம் வருகிறது. அதிலிருந்து லட்சக் கணக்கான ரூபாய்களை மாணவர்களுக்கு ஒதுக்கி அவர்களுக்கு நல்ல சீருடை வழங்கவும், புத்தகங்கள் வழங்கவும் இது போன்று பல வசதிகளை வழங்கவும், இதன் மூலமாக கல்வியில் ஓரளவுக்கு அந்த மாணவர்கள் முன்னுக்கு வரவும் வழி செய்ய முடியும். நாம் ஏதோ சிறு சிறு தொகைகளை ஒதுக்கி அதன் மூலமாக புத்தகம் வாங்கிக்கொடுக்கவும், மதிய உணவு கொடுப்பதும் போன்ற காரணங்களால் பிரச்னைகள் தீர்ந்து விட போவதில்லை. ஆகவே கோவில் நிதியிலிருந்து பெரும் தொகை ஒதுக்கி முழுக்க, முழுக்க அரிசன மாணவர்களுக்கு செலவு செய்யவேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல், அரசாங்கம் செய்யக்கூடிய ஒவ்வொரு வேலைக்கும் காண்டிராக்ட் முறையில் வேலைகள் நடைபெற்று வருகின்றன. இந்த முறையால் தொழிலாளர்களுக்கு சரியான முறையில் கூலி கிடைப்பதில்லை. அதோடு கான்ட்ராக்டர்கள் அதிகாரியோடு தொடர்பு கொண்டு பல காரியங்களை செய்வதால் மோசடிகளும் நடைபெறுகின்றன. ஆகவே, இதைத் தடுக்கும் முறையில் அரசே எல்லா வேலைகளையும் நேரடியாக எடுத்துச் செய்வதற்கு ஏற்பாடுசெய்யவேண்டும்என்றுகேட்டுக்கொள்கிறேன்.

மேலும், போக்குவரத்துத் துறையில், பல்லவன் போக்குவரத்து என்றும், சேரன் போக்குவரத்து என்றும், அண்ணா போக்குவரத்து என்றும் இருந்து கொண்டிருக்கிறது. இதையெல்லாம் ஒன்றாக இணைத்து, ஒரே கார்ப்பரேஷனாக ஆக்கிவிட்டால், தொழிலாளர்களுக்கு ஒரே விதமான சம்பளம் கிடைக்கும். ஒரே நிர்வாக அமைப்பும் இருக்கும். ஆகவே இந்தத் துறையை ஒன்றாக இணைக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல், அப்பளம், ஐஸ் போன்றவைகளுக்கும் வரிவிலக்கு அளிக்கவேண்டும். பழங்கள் அழுகும் பொருட்களில் சேர்ந்திருக்கிறது, அதற்கு வரி கிடையாது. நொறுங்கிப் போகக்கூடிய அப்பளம், உருகி போகின்ற ஐஸ் போன்றவைகளுக்கு வரிவிலக்கு பூரணமாக கொடுத்து சிறு தொழில்களை பாதுகாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



அடுத்து மருத்துவ மனைகளில் பல ஒழுங்கீனங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அவற்றை போக்குவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். படுக்கை வசதிகள் போதிய அளவில் இல்லை. ஒரு லட்சம் மக்கள் கொண்ட பழனி நகரத்தில் உள்ள மருத்துவ மனையில் 100, 110 படுக்கைகள்தான் இருக்கின்றன. படுக்கை வசதியில்லாத காரணத்தால் பெஞ்சுகளுக்கு அடியில் நோயாளிகளை படுக்க வைக்கிறார்கள். இதைப் பார்க்கும்போது மிகுந்த வேதனையாக இருக்கிறது. அந்தந்த இடங்களில் இருக்கக்கூடிய மக்கள் தொகைக்குத் தகுந்தவாறு மருத்துவ மனையில் படுக்கை வசதி செய்து கொடுக்கவேண்டும். உதாரணமாக பிரசவத்திற்கு போகக்கூடிய பெண்களை குழந்தை பிறந்த மறுநாளே வீட்டுக்கு அனுப்பிவிடுகிறார்கள். என்ன கொடுமை! குழந்தை பிறந்த அடுத்த நாளே அந்த தாய் பச்சை உடம்போடு வீட்டுக்கு அனுப்பப்பட்டு விடுகிறார்கள். அதே நேரத்தில் வசதிபடைத்த தாய்மார்கள் தனியார் மருத்துவ மனைகளில் ஒழுங்காக பல நாட்கள் இருந்துவிட்டு வீட்டுக்குப் போகிறார்கள். ஏழை மக்களுக்கு இந்த நிலைமை ஏற்படுகிறது, குறைந்த அளவு ஒரு வார காலத்திற்காவது ஆஸ்பத்திரியில் தங்கியிருக்கக்கூடிய அளவுக்கு வசதி செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஹோட்டல்களை எடுத்துக்கொண்டால், அங்கு சாப்பிடும்போது, ரூபாய்க்கு நான்கு காசு வரியும் வாங்கிக்கொள்கிறார்கள். நாம் காசு கொடுத்து சாப்பிடுகிறோம் நாமே அதற்கு வரியும் கொடுக்கவேண்டியிருக்கிறது இதை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசாங்கத்திலிருந்து விவசாயிகளை ஊக்குவிப்பதற்காக, ஆயிரம், பத்தாயிரம் என்று கடன் வாங்கி கிணறுகளை வெட்டுகிறார்கள். ஆனால் விவசாயி கடனைப் பெற்று கிணறு வெட்டும்போது, தண்ணீர் இல்லாமல் போய்விட்டால் அதற்கு யார் பொறுப்பு? விவசாய உற்பத்தியை பெருக்கவேண்டும் என்று நினைத்து கிணற்றை வெட்டுகிறார்கள். ஆனால் சில இடங்களில் தண்ணீர் இல்லாமல் போய் விடுகிறது. அப்படிப்பட்ட நிலைமை வரும்போது, அரசாங்கம் கொடுத்திருக்கின்ற கடனை விவசாயிடமிருந்து வசூலிக்காமல் அரசாங்கம் அந்த கடனை தள்ளுபடி செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கிராமப் பஞ்சாயத்தை எடுத்துக் கொண்டால், இன்றையத் தினம் போதுமான நிதி வசதி இல்லாமல் இருக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. அங்கு வரக்கூடிய வருமானம், நிர்வாகச் செலவுக்கு அதாவது அதிகாரிகளின் சம்பளம், ஸ்வீப்பர் சம்பளம், மற்றுமுள்ள சிப்பந்திகள் சம்பளத்திற்கே போதவில்லை என்று சொல்கிறார்கள். இதற்கே போதவில்லையே, எப்படி அபிவிருத்தி வேலைகள் மற்றும் சுகாதார வேலைகள் செய்வது என்று அதிகாரி சொல்கின்றார். இந்தக் கூக்குரலைத்தான் அங்கே

கேட்கின்றோம். ஆகவே, இந்த அரசாங்கம் பஞ்சாயத்துக்களுக்குப் போதிய மானியம் அளித்து, மற்ற வசதிகளைச் செய்து தரவேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், இந்த கூட்டுறவுச் சங்கங்களில் கட்டாயமாக பூச்சி மருந்துகளை நீ வாங்க வேண்டுமென்று விவசாயிகளை வற்புறுத்துகின்றார்கள். நானும் அவர்கள் அப்படி வாங்க வேண்டாம் என்று கூறவில்லை. அந்த விவசாயிகள் எந்த பூச்சி மருந்து வேண்டுமென்று சொல்கின்றார்களோ, அந்த பூச்சி மருந்தை அவர்களுக்குக் கொடுப்பதில்லை. அவர்கள் ஒன்றைக் கேட்டால் இவர்கள் ஒன்றைக் கொடுக்கின்றார்கள். இதை வாங்கினால்தான் கடன் கிடைக்கும், இல்லாவிட்டால் கடன் கிடையாது என்று சொல்கின்றார்கள். இந்த முறையை மாற்றவேண்டும். கூட்டுறவுச் சங்கத்தலைவரோ அல்லது அதன் செயலாளரோ ஒரு மருந்து கம்பெனியிடம் ஒப்பந்தம் செய்து கொள்கிறார்கள். ஆயிரத்திற்கு இவ்வளவு கமிஷன் என்று வாங்கிக் கொள்கிறார்கள். ஆகவேதான், இந்த விவசாயிகள் மீது இந்த மருந்தைத்தான் வாங்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தக்கூடிய முறை உள்ளது. எனவே, ஒன்று விவசாயிக்கு தான் கேட்கக்கூடிய பூச்சி மருந்தைக் கொடுப்பதாக இருக்கவேண்டும், இல்லாவிட்டால் அவர்களுக்கு உரிய பணத்தைப் பணமாகக் கொடுக்கவேண்டும் என்று இந்தச் சமயத்திலே இதை வற்புறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியிலே, பழனியை சுற்றி 25 கண்மாய்கள் இருக்கின்றன. இந்தக் கண்மாய்களில் மீன்பிடிக்கும் உரிமையை காண்ட்ராக்ட் விடுவதன் மூலம் 12,500 ரூபாய் வருமானம் வருகின்றது. இந்த காண்ட்ராக்டை அந்த நகரத்திலே இருக்கக்கூடிய முக்கியப் பிரமுகர்கள் எடுத்துக் கொள்கிறார்கள். அவ்வாறு அவர்கள் அதை எடுத்துக்கொண்டு, மறு ஏலத்தில் அதையே 32,000 அல்லது 33,000 ரூபாய்க்கு விடுகின்றனர். இதன் மூலம் வரக்கூடிய அதிகப்படியான 20,000 ரூபாய் சர்க்காருக்கும் வருவதில்லை, அதிலே உள்ள உறுப்பினர்களுக்கும் போய்ச் சேருவதில்லை. அங்குள்ள மீன் பிடிக்கும் மக்கள் இதனால் எங்களுக்கும் பிரயோஜனம் இல்லை, சர்க்காருக்கும் எந்தவிதமான பிரயோஜனமும் இல்லை, உறுப்பினர்களுக்கும் சேர்வதில்லை என்று வருத்தப்படுகிறார்கள். இதன் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று, எனக்கு மனு அனுப்பியிருக்கிறார்கள். எனவே, இந்த முறையை மாற்றி உரிய முறையில் சம்பந்தப்பட்ட இலாகாவிற்கு தகவல் அனுப்பி, உடனடியாக தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வீட்டு அடி மனையை எடுத்துக்கொண்டால், அரிசன பழங்குடி மக்களுக்காக பட்ஜெட்டில் 23.57 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இன்றையத் தினம் அரிசனங்களின் நிலையைப்



பற்றி நாம் யோசித்தால், மிகவும் பயங்கரமான நிலைதான் இருக்கிறது. இதைப்பற்றி பேசுவதாக இருந்தால், நாள் முழுவதும் பேசலாம். ஆனால், இந்த நேரத்திலே அதற்குச் சந்தர்ப்பம் இல்லை. வீட்டு அடி மனைக்காக ஒருவர் மனு போட்டால், ஒரு வருடம் அல்லது இரண்டு வருடமானாலும் எவ்வித பதிலும் தெரிவதில்லை. எனவே, அரிசனங்கள் வீட்டு அடி மனை வேண்டுமென்று மனுப் போட்டால், அவைகள் உடனடியாக கிடைப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே, சட்டப்பாறை வரதாபட்டிணம் ரோடுகள் சாங்ஷனாகி இருக்கிறது. எனக்கு முன்னால் இருந்த மாண்புமிகு உறுப்பினர் பெருமுயற்சி எடுத்துக்கொண்டு, இந்த ரோடுகள் போடுவதற்கு ஏற்பாடுகள் செய்தார். ஆனால், அதற்குப் பிறகு எந்தவிதமான பராமரிப்பும் இல்லாமையால், குண்டும் குழியுமாக, அந்த ரோடுகளில் அரிப்பு ஏற்பட்டு, இன்றைக்கு அழிவுப் பாதையை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது. எனவே, அந்த ரோடுகளைச் செப்பனிட்டு தார் ரோடுகள் போட்டுத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வரதாபட்டிணம் ரோடு 15 ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்டு, கல் ரோடாகவே இருக்கின்றது. அதுவும் எந்தவிதமான மராமத்தும் செய்யப்படாமல், பழுதடைந்த நிலையில் உள்ளது. இப்போது அந்த ரோடு பஞ்சாயத்து யூனியனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது, யூனியனில் போதிய நிதி இல்லை. அதைச் செப்பனிட பல லட்சக்கணக்கான ரூபாய் செலவாகும். எனவே, பஞ்சாயத்து யூனியனால் முடியாது. எனவே அரசாங்கம் இந்த ரோட்டைச் செப்பனிடாவிட்டால், அங்கு செல்லும், கழுதை ஆடு மாடுகள் எல்லாம் கீழே விழுந்து இறந்து போகக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. விறகுச் சுமையை தலையிலே ஏற்றிக் கொண்டு வரும் மக்கள், மேலும் செல்ல முடியாமல், அப்படியே நின்று விடுகிறார்கள். ஆகவே, இந்த அவல நிலையைப் போக்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய பகுதியில், பச்சை ஆறு, குதிரை ஆறு ஆகியவற்றில் அணைகள் கட்டவேண்டுமென்பது அந்தப் பகுதியிலுள்ள மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்து வருகிறது, இதை நிறைவேற்றினால், அந்தப் பகுதியிலே உள்ளவர்களுக்கு பாசன வசதி கிடைக்கும். தவிர, அந்தப் பகுதியிலே உள்ளவர்களுக்கு குடிநீர்ப்பிரச்சினைக்கு நிரந்தரமான வசதி செய்ய முடியும். இத்திட்டம் ஏற்கனவே பரிசீலனையில் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதையும் உரிய முறையில் நிறைவேற்றித் தரும்படி கேடடுக் கொள்கிறேன்.

[திரு. என். பழனிவேல்] [1977 ஆகஸ்ட் 1

[முற்பகல் 11-50]

இன்றையதினம் வரதமாநதி அணைக்கட்டில் இருந்து கிழக்கு முகமாக 8 கிலோ மீட்டர் தூரம் புதிய வாய்க்கால் வெட்டிக் கொடுத்தால் இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட புஞ்சை நிலங்களுக்குப் புதிய பாசன வசதி பெற வாய்ப்பு இருக்கிறது. அந்தப் பகுதியில் இருக்கும் நிலங்கள் பூராவும் அரிசனங்களுக்குச் சொந்தமான நிலங்கள். (மணி அடிக்கப்பட்டது) கடைசியாக ஒரே ஒரு வார்த்தை. தலைவர் அவர்கள் மன்னிக்க வேண்டும்.

எங்கள் பகுதியில் குடிநீர்ப் பிரச்சினை மிகவும் கடுமையான பிரச்சினையாக இருக்கிறது. என் பகுதி மட்டுந்தான் அப்படி இருக்கிறது என்று சொல்லவில்லை, நாடு முழுவதும் அப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. இருந்தாலும் எங்கள் பகுதி வறண்ட ஏரியா, அந்தப் பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்புக் கிடையாது; அவர்கள் கத்தாழைச் கள்ளியை விற்றுக் கொண்டிருக்கிறார்கள். குடிதண்ணீர் கிடையாது. தனியார் கிணற்றில் தண்ணீர் எடுத்தால் மாதத்திற்கு ஐந்து ரூபாய் கேட்கிறார்கள் அல்லது ஓரிரு நாட்கள் அங்கே வேலை செய்தால்தான் தண்ணீர் எடுக்கலாம் என்று சொல்லுகிறார்கள். எனவே சண்முகா நதி அங்கே போகிறது. அந்த நதியின் ஓரத்தில் நரிக்கல்பட்டி பக்கம் பெரிய கிணற்றை வெட்டி மோட்டார் வைத்து, குழாய்கள் அமைத்தால் ஆறு ஏழு மைல்களுக்குக் கொண்டு செல்வதன் மூலம் ஆறு ஏழு கிராமங்களுக்கு நகரியம்பட்டி, மேலகரம்பட்டி போன்ற முக்கியமான கிராமங்களுக்கு குடிநீர் வசதி கிடைக்கும். பத்தாயிரம் மக்களின் குடிநீர்ப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்க்க முடியும்.

என்னுடைய தொகுதியின் மேற்குக் கோடியில் அமராவதி பேப்பர் மில் என்று ஒன்று இருக்கிறது. அவர்கள் உபயோகிக்கக் கூடிய கழிவு நீரை ஆற்றிலே விடுகிறார்கள். மக்கள் அந்தத் தண்ணீரைத்தான் குடிக்கிறார்கள், ஆடுமாடுகள் குடிக்கின்றன. இதனால் விஷ வியாதிகள் ஏற்பட்டு மக்கள் இறந்து விடுகிறார்கள். இதைப் போக்க பல முறை அந்தப் பகுதி மக்கள் எவ்வளவோ முயற்சித்தும் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படாமல் இருப்பதாகத் தெரியவருகிறது. அதைப் போக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. அ. மா. பரமசிவன்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களின், குறிப்பாக ஏழை எளிய மக்களின் நலனில் பெரிதும் ஆர்வம் காட்டி 1977-78 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தந்திருக்கிறார்கள்; அதை மேலூர் சட்டமன்றத் தொகுதி சார்பிலும், பொதுமக்கள் சார்பிலும் பாராட்டி வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1977 ஆகஸ்ட் 1] [திரு. அ. மா. பரமசிவன்]

விவசாயிகள், விதவைகள், நெசவாளப் பெருமக்கள், தாழ்த் தப்பட்டோர், பழங்குடியினர், பின்தங்கியோர், அரசு ஊழியர் கள், மாணவர்கள், தொழிலாளர்கள் மற்றும் தாழ்ந்து கிடக்கும் அனைத்து மக்களின் நலன்களுக்காக ஆவன செய்யவேண்டுமென்ற நோக்கத்துடன் புரட்சித் தலைவர் அரசு நிதிநிலை அறிக்கையைத் தயாரித்திருக்கிறது என்பதைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

மேலூர் சட்டமன்றத் தொகுதியில் பெரும்பகுதி வறட்சிப் பகுதியாக உள்ளது. விவசாயம் மேம்பட, பெரியாறு மேம் பாட்டுத் திட்டத்தை விரைந்து செயலாற்ற அரசு முன்வந்ததை மேலூர் தொகுதியின் சார்பில் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன். இதனால் ஏற்கனவே பாசனம் பெற்று வரும் நிலங்களுக்குப் பாசன வசதி உறுதிப்படுத்தப்படுகிறது என்பதால் இதனை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கிணறுகளுக்கு மின் இணைப்புத் தரப்படாமல் இருந்த குறை நீங்குமென்ற நம்பிக்கையை இந்த நிதிநிலை அறிக்கை அளிக்கிறது. மேலூர் தொகுதியில் குளங்களைத் தூர் வாரி சீரமைப்புச் செய்யவும், கிராமப் புற மக்கள் குடிதண்ணீர் இன்றித் தவிப்பதை நீக்க அரசு தீவிர கவனம் செலுத்தியிருப்பதைப் பெருமையுடன் பாராட்டுகிறேன். பல கிராமங்களுக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலம் ஆவன செய்து உதவி செய்ய வேண்டும். மேலூர் நகருக்கு பாலாறு குடிநீர்த் திட்டம் சுமார் 44 லட்சம் ரூபாய் செலவில் செய்யப்பட்டும் பயனற்று பரிதவிக்கும் நிலைமை நீக்கிட உடனே மாற்று ஏற்பாடுகள் செய்து, நிரந்தர தீர்வுகாண அரசைக் கேட்டுக் கொள்கிறேன். 12 மாதங்களுக்குள் கிராமங்களில் ஓரளவு குடிநீர்ப் பிரச்சினை தீர்க்கப்படும் என்று குறிப்பிட்டுள்ளது பாராட்டுக்குரியது.

அரிசன பழங்குடி மாணவர்கள் படிப்புக் கட்டணம் இன்றிப் பயில வசதி அளிக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. மேலூர் தொகுதியில் பல கிராமங்களுக்குப் பாதையே இல்லை. வரப்பு வழியாக நடந்து செல்லும் நிலைமைதான் இருக்கிறது. இந்த நிலைமை நீக்கப்பட்டு கிராம இணைப்புச் சாலைகள் அமைக்கப் படவும், மினிபஸ் போக்குவரத்துக்கு ஏற்பாடு செய்யவும் திட்ட மிட்டிருப்பதை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காட்டாறுகளின் குறுக்கே சிறு பாலங்களைக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கொட்டாம்பட்டியில் தனியார் கட்டிடத்தில் இருக்கும் அரசு மருத்துவ மனைக்காக மூன்று ஏக்கர் நிலமும், 15,000 ரூபாய் நன்கொடையும் தரப் பட்டிருக்கிறது. ஆனால் அது இன்னும் நிறைவேற்றப்படாமலே இருக்கிறது.

ஆகவே இப்போதுள்ள புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு விரைவில் அதற்கு சொந்தக் கட்டடம் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து வெள்ளலூர் கருங்காலக் குடியில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திருவாதவூர், ஏ. வெள்ளாளபட்டியில் அரசினர் மருத்துவ மனை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலூரில் உள்ள அரசினர் கலைக் கல்லூரியில் பட்டப்படிப்பையும் மாணவர் விடுதியையும் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நாடு தழுவிய எழுத்தறிவை பெருக்குவதும் பள்ளிக்கு வெளியே கல்வி புகட்டும் திட்டத்தின்மூலம் எழுத்தறிவை விளக்குவதும் வரவேற்கத் தக்க திட்டங்களாகும். விளையாட்டு களிலும் உடற்பயிற்சியிலும் தனிநாட்டம் செலுத்தியிருப்பது பாராட்டுக்குரியதாகும். தமிழ் இலக்கியம், கலை ஆகியவற்றைப் போற்றிப் பாதுகாக்கிற திட்டங்களை எல்லாம் பார்த்தால் இந்த அரசு தமிழின்பால் வைத்துள்ள அக்கறை தெரியும். அதே போன்று நகரப்புற வளர்ச்சிக்கும் கவனம் செலுத்தப்பட்டு உள்ளது.

அடுத்து, பரிசுச் சீட்டுகளின் மூலம் கிடைக்கும் தொகை குடிநீர்த் திட்டங்களுக்காகச் செலவழிக்கப்படும் என்று அறிவித்திருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும். அறிஞர் அண்ணு அவர்களின் வழியில் புரட்சித் தலைவர் தலைமையில் அமைந்துள்ள அரசு நிதி நிலை அறிக்கையைக் கொண்டு வந்திருப்பது வரவேற்கத் தக்கதாகும். கிராமங்களிலே தொழில் வளர்ச்சியைப் பெருக்கவும், கிராமங்களிலே உள்ள தொழிலாளர்கள் சொந்தக் தொழில் செய்யக்கூடிய திட்டங்கள் வகுத்து இருப்பது பாராட்டுக்குரியவையாகும். நிலப்படை அமைப்பு என்பதும் வரவேற்புக்குரியதாகும். கொட்டாம்பட்டியில் ஒரு கயிற்றுத் தொழிற்சாலை ஏற்படுத்திஞல் அங்கேயுள்ளவர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சேக்கிப்பட்டியிலும், திருவாதவூரிலும், புறக் காவல் நிலையங்களையும், மேலூரில் தீ அணைப்பு நிலையங்களையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அரபிக் கடலில் விழுகின்ற அளவில் மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து விழுகின்ற தண்ணீரை மதுரைக்கும், ராமநாதபுரம் நெல்லை மாவட்டத்திற்கும் திருப்பி விட்டால் அதன் மூலம் மேலூர் தொகுதி நல்ல வளம் பெறும் என்பதையும் அதற்காக அரசு ஆக்கப் பணிகளைச் செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.



அரசு ஊழியர்களுக்கு பல நன்மைகளை அரசு அறிவித்திருக்கிறது. அதே போல 200 ரூபாய்க்குக் கீழே மாத வருமானம் பெறுகின்றவர்களுக்கும் அகவிலைப்படியை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மொத்தத்தில் சமுதாயத்தின் அனைத்து மக்களுக்கும் பயன் தருகின்ற வகையில் எல்லா மக்களும் போற்றி வரவேற்கின்ற நிதிநிலை அறிக்கையைப்பற்றிப் பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்காக நான் பெருமைப்படுகிறேன்.

இறுதியாக மாணவர்களுடன் நெருங்கிய தொடர்புகொண்ட பொறுப்பில் இருந்தவன் நான் என்ற முறையிலே சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். பேரறிஞர் அண்ணு அவர்களின் இதயக் கனியாக இருக்கின்ற புரட்சித் தலைவர் அவர்கள் மாணவர்களுடைய பிரச்னையைத் தீர்க்க அவர்களோடு தொடர்பு கொண்டு அவர்களுடன் அன்புடன் கலந்துரையாடி அவர்களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுகிற முறையில் செயல்படுவதற்காக மாணவர்கள் சமுதாயம் நன்றி பாராட்டுகிறது. சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் இது என்னுடைய கன்னிப்பேச்சாக இருந்தாலும் பேரறிஞர் அண்ணு அவர்களின் உண்மைத் தம்பி புரட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் உள்ள அமைச்சரவை இந்த நிதிநிலை அறிக்கையை அளித்து இந்த நாட்டை ஆளத் தகுதி உடையவர்கள் என்பதைக் காட்டியிருக்கிறுர்கள். இந்த நிதி நிலை அறிக்கை ஏழை எளிய மக்களுக்கு வரியில்லாத அறிக்கை என்பதால் இதை நான் பாராட்டிப் பேச வாய்ப்பளித்த இந்த மாமன்றத்தின் தலைவருக்கு நன்றிகூறி அமைகிறேன், வணக்கம்.

*<u>திரு. துரை. கலியமூர்த்தி</u> : தலைவர் அவர்களே, இந்த நிதி நிலை அறிக்கையின்மீது பேசுவதற்கு..........

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : 5 நிமிடங்களில் முடித்துக் கொள்ளுங்கள்.

<u>திரு. துரை. கலியமூர்த்தி</u> : வாய்ப்பளித்ததற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்காத்த தோழர்களுக்கு எங்களுடைய வணக்கத்தைக் கூறி தமிழகத்திலே தமிழ்காத்த அந்த வீரர்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்த உதவித் தொகை நிறுத்தப்பட்டிருக்கிறது, அதை மீண்டும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். புலவர்களுக்கு மானியம் 75 ரூபாய் அளிக்கப்பட்டு இருக்கிறது. அதே நேரத்திலே செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கும், புகுமுக வகுப்பு படித்த புலவர்களுக்கும் வேலைக்கு தேர்வு நடக்கும்போது வித்தியாசம் காட்டப்படுகிறது. வித்தியாசம் இல்லாமல் அவர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ள ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாணவர்களுடைய புரட்சியைப் பற்றி இந்த அவையிலே பேசினார்கள். இந்த அரசு வந்து ஏறத்தாழ 30 நாட்கள்தான் ஆகிறது என்றாலும் அதற்குள்ளே மாணவர்களுடைய கொதிப்பை வெளியே அதிகமாகக் காட்டக்கூடிய அளவிற்கு இந்த அரசாங்கம் அவர்களை நடு வீதியிலே அடித்துக் காயப்படுத்திய நிலைமையை நாம் காண்கிறோம்.

[நண்பகல் 12-00]

பிச்சாவரம் காடு சுற்றுலா இடமாக அமைக்க வேண்டுமென்று அண்ணா அவர்கள் தெரிவித்திருந்தார்கள். 1957-லும் 1958-லும் அறிஞர் அண்ணா இரண்டு தடவையும் 1967-ஆம் ஆண்டிலே நடந்த உலகத் தமிழ் மாநாட்டிற்கு வந்திருந்த வெளிநாட்டு தமிழ் அறிஞர்களும், 1969-லே நமது பெருமதிப்பிற்குரிய ஜனாதிபதி ஜாகீர் உசேன் அவர்களும் அங்கே வருகை தந்தார்கள். அதற்கான நடவடிக்கை இந்த பட்ஜெட்டிலே எடுக்கப்படவில்லை.

லாட்டரி சீட்டு, குதிரைப் பந்தயம் ஆகியவைகளை ஒழிப்பதற்கான எந்தவிதமான காரியத்திலும் ஈடுபடவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பின் தங்கியவர்களுக்குச் சலுகை அளிக்கும்பொழுது சரியான முறையில் அளிக்கவேண்டும். நாட்டிலே உள்ளவர்களில் மூன்றில் இரு பங்குக்கு மேல் பின் தங்கியவர்கள் இருக்கிறார்கள் என்றாலும் அவர்களுக்கு வேண்டிய சலுகைகள் கொடுக்கப்படவில்லை. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இனமாக வீடு கட்டும் திட்டத்தை முந்தைய அரசாங்கம் செய்திருந்தாலும் இப்பொழுது இவர்கள் அதை இலவசமாகச் செய்யாமல் கடனுக்கு வீடு கட்டிக் கொடுக்கிறோம் என்று சொல்கிறார்களே அதை இனமாகச் செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு பின் தங்கியவர்களுக்கும் அந்தச் சலுகையை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடிநீரைப் பொறுத்தவரையில் பின்தங்கிய வகுப்பினர், தாழ்த்தப்பட்ட பழங்குடி மக்களுக்கு 12 மாத காலத்திலே போதிய அளவில் குடிநீர் ஆதாரங்களை ஏற்படுத்துவதே நமது நோக்கமாகும் என்று கூறியிருக்கிறார்கள். ஆகவே, வேறு எந்தக் காரணத்தையும் காட்டாமல், மத்திய அரசிடமிருந்து 3 கோடி, 4 கோடி எதிர்பார்த்தோம். கிடைக்கவில்லை. ஆகவே, நிறைவேற்றப்படவில்லை என்ற காரணத்தைக் கூறாமல் அதனை நிறைவேற்ற வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்திலே, கிராமச் சாலைகளைப் பொறுத்தவரையில் நல்ல நிலைமைகள் அமையவேண்டும். யூனியன் அமைப்பில்லாத காரணத்தால் யூனியன் சாலைகளை அரசாங்கச் சாலைகளாக எடுத்துச் சீர் செய்ய வேண்டும். அவ்வாறு சீர் செய்தால் தான்





மினி பஸ்களை விடுவதற்கு ஏற்றதாக அமையும். மினி பஸ் விடுவது என்றால் அது கஷ்டமாக இருக்கும். வரவு-செலவைப் பார்த்தால், வரவு 200 ரூபாய், 210 ரூபாய்க்குள்ளாக இருக்கும், ஆனால், செலவு ஏறக்குறைய 250 ரூபாய் ஆகும் என்ற நிலையிலிருக்கிறது. தனியார்துறை இதை எடுத்து விடுவதற்கு முன் வர மாட்டார்கள். எனவே, அரசாங்கமே அதற்கான பொருள் செலவைப் பார்க்காமல் மக்கள் வசதிக்காகவும், கிராம மக்களின் வசதிக்காகவும் அதை நிறைவேற்ற வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கடலூரிலிருந்து சிதம்பரம் செல்லும் பெருவழிச் சாலையிலே வெள்ளாற்றின் குறுக்கே B. முட்லூர்— C. முட்லூர் இணைத்து வெள்ளாற்றில் பாலம் கட்டுவது பற்றி 1962-ம் ஆண்டிலே ஆய்வுக்கு எடுக்கப்பட்டது. அதை இப்பொழுது எடுத்து நிறைவேற்றினால் சிதம்பரத்திலிருந்து கடலூர் செல்லுவதற்கு 6, 7 மைல் தூரம் குறையும். ஆயிரக்கணக்கான பஸ்கள், லாரிகள், கார்கள் செல்கின்றன, ஆகவே, பஸ்கள் செல்லும் தூரம் குறைந்தால், மிகவும் குறைந்த நேரத்திலே வந்தடைந்தால் மிகவும் இலாபகரமாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து பரங்கிப்பேட்டையில் 1850-ம் ஆண்டிலே சேலத்திலிருந்து இரும்புக் கனிகளைக் கொண்டு வந்து உருக்கி இலண்டன் மாநகரத்திற்கு தேனிரும்பு ஏற்றுமதி செய்ததாகச் சரித்திரம் இருக்கிறது. அப்போது அது ஏற்றுமதித் துறைமுகமாக இருந்தது. அங்கு வேலை வாய்ப்பும் இருந்தது. ஆனால், இப்போது அங்கு எந்தவிதமான வேலையும், தொழிலும் இல்லாமல் பரிதாபத்துக்குரிய மக்களாக இருக்கிறார்கள். அங்கு தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்தி மக்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்க வழி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு என்னுடைய தொகுதியில் கீரப்பாளையம் யூனியனில் உள்ள பாளையங்கோட்டையில் ஒரு ஆஸ்பத்திரி ஏற்படுத்துவதாக இருந்தது. அது 1962-லே ஆய்வு செய்யப்பட்டும், நிலம் வாங்கப்பட்டும் இருந்தது. தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. மீண்டும் அதை ஆய்வு செய்து நல்லமுறையிலே அந்த ஆஸ்பத்திரியைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

சேத்தியாதோப்புக்கு கிழக்கே வெள்ளாற்றில் வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டவேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருக்கிறது. இப்பொழுது வெள்ளம் வரும் காலத்தில் உடைப்பு எடுப்பதுடன் பயிர்கள் பாழாகின்றன. அதனால் ரோடுகளும் பழுதடைந்து போக்குவரத்து வசதி பாதிக்கப்பட்டு இருக்கிறது. வெள்ளாற்றில் தடுப்புச் சுவர் எழுப்பாத காரணத்

தால் அங்கே வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு அந்தப் பகுதியே மிகவும் சீர்கெட்டுப் போயிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது தொகுதியிலே ஸ்ரீமுஷ்ணம் பிர்க்கா மிகவும் பின் தங்கிய நிலையில் இருக்கிறது. அங்கே போர் வெல் சப்-ஆர்டிஷன் ஆர்டிஷன் பயன்படுத்தி விவசாயம் செய்கிறார்கள். பெரும் செலவுசெய்து ஆர்டிஷன் போடும்போது தண்ணீர் வரவில்லை எனில் விவசாயிகளுக்கு பெரும் நஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே, அரசாங்கம் உதவி அளித்து, முன்னுரிமை அளித்து, அவர்கள் தண்ணீர் பெற்று விவசாயம் செய்யத்தக்க ஏற்பாடுகளைச் செய்து பாதுகாப்பு அளிக்கவேண்டும். அதன்மூலம் அங்குள்ள பின்தங்கிய மக்களை முன்னுக்குக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அவர்கள் மிக பின்தங்கியவர்களாக இருக்கிறகாரணத்தால் அவர்களுக்கு இந்த வசதிகளை அவசியம் செய்து தரவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். பின்தங்கிய மக்களுக்கு எந்த வித சிறப்பான வசதியும் நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப் படவில்லை. அவர்களுடைய நிலை நாட்டில் மிகவும் மோசமாக இருக்கிற காரணத்தால், அவர்களுக்கு அளிக்கவேண்டிய முன் னுரிமை கொடுத்து வசதிகளை அளிக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே தெரிவித்து, விடைபெறுகிறேன். வணக்கம்.

* திரு. க. நாச்சிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு நிதி அமைச்சர் மாண்புமிகு திரு. நாஞ்சி லார் அவர்களால் கொண்டுவரப்பட்ட 1977-78 ஆம் ஆண்டிற் கான நிதிநிலை அறிக்கையைப் பாராட்டி எனது பொங்கலூர் தொகுதியின் சார்பாகவும்,

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

எனது சார்பாகவும், சுருக்கமாகச்சொல்லக் கடமைப்பட்டிருக் கிறேன்.

தமிழ் நாடு நிதியமைச்சர் மாண்புமிகு திரு. நாஞ்சிலார் அவர்கள் நமக்கு அளித்திருக்கின்ற வரவுசெலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அம்சங்களை நான் பெரிதும் பாராட்டுகின்றேன். குறிப்பாக, கிராமப்புற பகுதிகளை வளப்படுத்தும் பல திட்டங்களை உள்ளடக்கிய இந்த நிதிநிலை அறிக்கையை கிராமப் பகுதிகளை மட்டுமே உள்ளடக்கிய எனது பொங்கலூர் தொகுதியின் சார்பில் இரட்டிப்பு மகிழ்ச்சியோடு வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வேளாண்மை வளர்ச்சிக்கென இந்த நிதிநிலை அறிக்கையில் ரூ. 30.2 கோடி ஒதுக்கீடு செய்திருப்பதைப் பாராட்டி, இந்த நிதி அறிக்கையில், அரசு விதைப் பண்ணைகளை விரிவுபடுத்தி, அதன்மூலம் பயன்தரும் பயிர் விதைகள் அதிக அளவில் கிடைக்கவும், மண்வளப் பாதுகாப்பிற்கும், பெரி தும் ஒதுக்கியுள்ளது விவசாயிகளுக்கு பெரும் மகிழ்ச்சிக்குரிய தாகும் என்ற வகையில் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.



அடுத்தபடியாக, பாசன வசதிக்கு இந்த அரசு ரூ. 24.7 கோடி ஒதுக்கியிருப்பதையும், மின்சார வசதிக்கு ரூ. 28·5 கோடி ஒதுக்கியிருப்பதையும் பாராட்டி வரவேற்கக் கடமைப்பட்டிருக் கிறேன். மேலும், எனது பொங்கலூர் தொகுதிக்கு, குறிப்பாக கோயம்பத்தூர் மாவட்டத்தில் உள்ள பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டம் நல்ல பயன் அளிக்கும் திட்டமாகும். அந்தத் திட்டம் ஏற்கெனவே இருந்த அரசால், 1,15,000 ஏக்கர் நிலங்களுக்குப் பயன் அளிக்கத்தக்க வகையில் விஸ்தரிப்புக்குத் திட்டமிடப்பட்டு பிறகு என்னுடைய பொங்கலூர் தொகுதியில் ஏற்கனவே இருந்த சட்டமன்ற உறுப்பினரால் நிறுத்தப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தால் ஏற்கெனவே இருந்த உறுப்பினருக்கு ஒரு சில குறைகள், அதாவது, அவருக்குச் சொந்தமான சில பகுதி களுக்குப் பாய்ச்சல் வராத காரணத்தால், அந்தத் திட்டம் கைவிடப்பட்ட நிலையில் வைக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே இருந்த அரசால் விஸ்தரிப்புக்கு ஒப்புக்கொள்ளப்பட்ட அந்தத் திட்டத்தை, இந்த அரசு உடனடியாக, கண்டிப்பாக நிறைவேற்றி அங்குள்ள ஏழை விவசாயிகளுக்குப் பயனளிக்க வகை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தை நிறைவேற்றினால் குடிநீர் வசதியும் அந்தப் பகுதிக்குக் கிடைக்கும் என்பதைத் தெரிவித்து, நிறுத்திவைக்கப்பட்டிருக்கிற அந்தப் பரம்பிக்குளம் ஆளியாறு திட்டத்தை உடனடியாக நிறைவேற்றித் தரவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பாண்டியாறு, புன்னம்புழா என்ற ஒரு திட்டம் கோயம்புத்தூர் ஜில்லாவிற்கு ஒரு பெரிய திட்டமாகும். அந்தத் திட்டத்தால், கேரளாவிலே 1,500 டி.எம்.சி. கன அடி தண்ணீர் தற்போது அரபிக் கடலிலே போய்ச் சேருகின்ற சூழ்நிலை இருக்கிறது. அந்த 1,500 டி.எம். சி. கன அடி தண்ணீரிலே கேரளாவிற்கு 500 டி.எம்.சி. கன அடி தண்ணீர் உபயோகப் படும். மீதி, 1,000 டி.எம்.சி. கன அடி தண்ணீர் கண்டிப்பாக வேஸ்ட்டாகி, கடலிலே போய்ச்சேருகின்றது. நமது அரசு, கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு பயன்படும் வகையில், பாண்டி யாறு, புன்னம்புழா திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மின்சாரத்தைப் பொறுத்தவரையில் எங்கள் பொங்கலூர் தொகுதியிலே ஒரு பெரும் குறை இருக்கிறது. அதாவது ஒரு நாளைக்கு 14 மணி நேரம், அதுவும் இரவு நேரத்தில்தான் மின் சப்ளை கொடுக்கிறார்கள். அந்த இரவு நேர சப்ளை மிகவும் பாதிப்பாக இருக்கிறது. ஆகவே, இந்த மின் சப்ளை நேரத்தை

கண்டிப்பாக உயர்த்தி, அதாவது, ஒரு நாளைக்குக் குறைந்தது 20 மணி நேரமாவது கொடுத்தால், அதையும் பகல் நேரத்தில் கொடுத்தால், கிராமப்பகுதிகளிலுள்ள எங்கள்பகுதி விவசாயிகளுக்கு மிகவும் சௌகரியமாயிருக்குமென்று தெரிவித்து அதைச் செய்துகொடுக்குமாறு இந்த நேரத்திலே அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய பொங்கலூர் தொகுதியில் நகரப் பகுதியே கிடையாது. கிட்டத்தட்ட சுமார் 500 சிறுகிராமங்களைக் கொண்ட தொகுதி அது. குறிப்பாக சிறு விவசாயிகளும், நெசவாளர்களும், அரிசனங்களும்தான் அங்கு அதிகமாக இருக்கின்றார்கள். செருப்புத் தைப்போர், நெசவாளர், சிறு விவசாயிகள், நூல் நூற்போர் ஆகியவர்களுக்கு ஊக்கமும் உதவியும் அளித்தால்தான் அவர்கள் வாழ்க்கை நடத்தமுடியும். பின்தங்கிய அந்தப் பகுதியில் கண்டிப்பாக, சிறுதொழில்கள் கைத்தொழில்கள் செய்ய பெரும் அளவில் உதவி அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12–10]

மேலும் என்னுடைய தொகுதியில் முக்கால் பகுதியினர் மழையை நம்பி விவசாயம் செய்கின்றனர். மழை இல்லாத காலங்களில் குடிப்பதற்குக் கூட தண்ணீர் கிடைப்பதில்லை. கிராமத்தில் இருந்து 4 மைல் 5 மைல் சென்று குடிநீர் கொண்டு வரவேண்டியிருக்கிறது. யாராவது வசதியுள்ளவர்கள் தோட்டத்தில் உள்ள கிணறுகளில்தான் தண்ணீர் கிடைக்கும். அங்கு சென்றால் தோட்டத்திற்கு வேலைக்கு வரவில்லை, வேறு கட்சியினருக்கு ஓட்டுப் போட்டாய் என்று சொல்லுகிற அளவுக்கு ஏழை மக்கள் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையை நீக்கி கஷ்டப்படுகிற அரிசனங்களுக்கும், ஏழை மக்களுக்கும் குடிநீர் வசதி செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராமங்களில் வீட்டுவசதிக்கான திட்டங்களில் பொங்கலூர் தொகுதியைப் பொறுத்தவரையில் நிறைவேற்றப்படவில்லை. ஏற்கனவே இருந்த சட்டமன்ற உறுப்பினரால் எந்தவிதமான நன்மையும் நிறைவேற்றப்படவில்லை. ஏழை எளியவர்கள் அரிசனங்கள் வாழ்கின்ற இந்தப் பகுதியில் கண்டிப்பாக அதிக அளவில் குறிப்பாக அரிசனங்கள் அனைவருக்கும் வீட்டு வசதிகள் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அரிசன, பழங்குடி மாணவர்களுக்கு பள்ளியிறுதி வகுப்பு வரையில் இலவசமாக புத்தகம் வழங்குவதையும், கல்லூரிப் படிப்பு வரை கட்டணமின்றி பயிலவசதியளிப்பதையும் பெரிதும் பாராட்டி வரவேற்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.





என்னுடைய தொகுதியிலுள்ள கிராமங்களில் ரோடு வசதிகள் மிகவும் மோசமாக உள்ளது. கிட்டத்தட்ட கிராமப் பகுதிகளையே கொண்டுள்ள இந்தப் பகுதியில் பஸ் போக்குவரத்து வசதியே இல்லை. ஆகவே இந்தப் பகுதியில் ரோடு வசதியும், பஸ் வசதியும், கண்டிப்பாக செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தாராபுரம் தாலுக்காவில் குண்டடம்—பொன்னுபுரம் செல்லும் வழியில், வெல்லம்பட்டிக்கும் மருதூருக்கும் இடையில் ஒரு பெரிய ஆறு செல்லுகிறது. மழைக்காலத்தில் மக்கள் ஊர் செல்ல முடியாத நிலையில் அவதிப்பட வேண்டிய நிலை இருக்கிறது. இந்தப் பகுதிக்கு போக்குவரத்து வசதி செய்து தரப்படவேண்டும். ஆகவே இதை இந்த அரசு கவனத்தில் கொண்டு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

30 ஆயிரம் நெசவாளர்களைக் கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டு வரும் திட்டத்தையும், சேலம், மதுரை, குறிஞ்சிப்பாடி ஆகிய இடங்களில் கைத்தறி வளர்ச்சித் திட்டங்கள் தொடங்கப்பட இருப்பதையும் நான் வரவேற்றுப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். மேலும் நெசவாளர்களுக்கு நான் ஒரு திட்டத்தையும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். டெக்ஸ்டைல்ஸ் கார்ப்பரேஷன் இருப்பதைப் போல, நெசவாளர்களுக்கு வீவர்ஸ் கார்ப்பரேஷன் ஏற்படுத்தவேண்டும். அந்த கார்ப்பரேஷன் மூலம் தேவையான அந்த நெசவாளர்களுக்குத் தேவையான நூலைக் கொடுத்து வாங்குவோரின் தேவைக்கான கைத்தறித் துணியைத் தயார் செய்யும்போது துணி தேக்கம் அடைய முடியாது. ஏனென்றால் வாங்குவோரின் கைத்தறித் துணியின் தரத்தை அனுசரித்து தேக்கமில்லாமல் அதற்கேற்ற நூலைக் கொடுத்து உற்பத்தி செய்யும் பொருட்டு நெசவாளர்களுக்கு வேலை இல்லை என்ற குறையும் இராது. கார்ப்பரேஷன் மூலம் நூலைக் கொடுப்பதால் நூல் விலை ஏறுவதற்கும் இராது. அந்த கார்ப்பரேஷன் மூலம் கைத்தறி நெசவாளர்களுக்குக் கடனுதவியும் அளிக்கலாம். ஆகவே வீவர்ஸ் கார்ப்பரேஷனை உடனடியாக ஏற்படுத்தி கைத்தறி நெசவாளர்களின் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

கடைசியாக உணவுப் பிரச்சினை பற்றி ஒரு சின்னக் கருத்தைச் சொல்ல நான் ஆசைப்படுகிறேன். ஒரு மாவட்டத்திலிருந்து இன்னொரு மாவட்டத்திற்கு நெல் அல்லது அரிசி எடுத்துச் செல்ல வேண்டுமானால் முதலிலே 'என்.ஓ.சி.' (நோ அப்ஜக்ஷன் சர்ட்டிபிகேட்) வாங்க வேண்டுமென்று விதி வைத்து இருக்கிறார்கள். அதாவது ஒருவர் தஞ்சை மாவட்டத்திலிருந்து கோவை மாவட்டத்திற்கு நெல்-அரிசி கொண்டு செல்லவேண்டுமானால், முதலில் அவர் கோவை மாவட்டத்திலுள்ள தாலுக்கா தாசில்தாரிடம் சென்று அனுமதி பெற்று பிறகு கோவை மாவட்ட கலெக்டரிடம் சென்று 'என்.ஓ.சி.' வாங்கி அதற்குப்

பிறகு தஞ்சை மாவட்டக் கலெக்டருக்கு அந்த 'என்.ஓ.சி.ஐ' அனுப்பி, அவர்கள் அதன் பேரில் ஏதாவது ஒரு தாலுக்காவிலிருந்து பர்சேஸ் செய்வதற்கு அனுமதி அளிப்பார்கள். அந்த அனுமதியைப் பெற்றுத்தான் தஞ்சை மாவட்டத்திலுள்ள கலெக்டர் சொல்லும் ஒரு தாலுக்காவிலிருந்து மாத்திரம் அவர் கொள்முதல் செய்து கோவை மாவட்டத்திற்கு அரிசி நெல் எடுத்துச் செல்ல முடியும். இதன் காரணமாக தஞ்சை மாவட்டத்தில் ஒரு தாலுக்காவில் விலை அதிகம் ஏறிவிடுகிறது. விலை ஒரே சீராக எல்லா இடத்திலும் இருக்கவும், விலை ஏறாமல் இருக்கவும் இந்த 'என்.ஓ.சி.' முறையை எடுத்து விட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த 'என்.ஓ.சி.' முறையினால் ஒரு தாலுக்காவில் விலை அதிகம் ஏறுகிறது. ஏனெனில் வியாபாரிகள் ஒரே தாலுக்காவில்தான் கொள்முதல் செய்கிறார்கள். ஆகவே, இந்த 'என்.ஓ.சி.' முறை உடனடியாக ரத்து செய்யப்படவேண்டும் என்று கேட்டு, இந்த அரசாங்கம் அளித்துள்ள 1977–78-ம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தை வரவேற்று பாராட்டி விடைபெறுகிறேன். வணக்கம்.

*திரு. பொ. உத்திராபதி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1977–78-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை இந்த மாமன்றத்திலே நிதி அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு இருக்கிறது. இந்த நிதிநிலை அறிக்கையைப் பார்க்கிறபோது— நான் திரும்பத் திரும்பப் படித்துப் பார்த்தேன்— தமிழகத்திலே கணிசமாக உள்ள பகுதிமக்கள் விவசாயத் தொழிலாளர்கள்; அந்த விவசாயத் தொழிலாளர்களைப்பற்றி இந்த நிதிநிலை அறிக்கையிலே கொஞ்சம் கூட ஒன்றும் காணப்படவில்லை. விவசாயத் தொழிலாளி என்று சொல்லக்கூடிய நேரத்திலே தமிழகத்திலே அரிசனப் பகுதியைச் சேர்ந்த மக்கள் மிக அதிகமாக இந்தத் தொழிலில் ஈடுபட்டு இருக்கிறார்கள். அந்த விவசாயத் தொழிலாளர்கள் நிலைபற்றி அரசு இந்த அறிக்கையில் எந்த ஒரு வழியையும் சொல்லவில்லை என்பதைப் பார்க்கிறபோது மிகவும் வருத்தமாக இருக்கிறது என்று சொல்லவேண்டிய அவசியம் இருக்கிறது என்பதை நான் கூற விரும்புகிறேன். அந்த விவசாயத் தொழிலாளர்கள் அரிசனப் பகுதி மக்களாக பெரும்பாலோர் இருக்கிறார்கள், அந்த அரிசனப் பகுதி மக்கள் நந்தனார் காலத்தில் எப்படி இருந்தார்களோ அதே போல்தான் இன்றும் இருக்கிறார்கள். இதற்கு முன்னால் இருந்த அரசு கூட அரிஜனங்களுக்குத்தான் நாங்கள் இருக்கிறோம், அரிசனரின் சம்பந்தி என்றெல்லாம் கூறினார்கள். ஆனால் அந்த அரிசன விவசாயத் தொழிலாளர்கள் சென்ற காலத்திலும் சரி, ஒவ்வொரு காலக்கட்டத்திலும் அவர்களுடைய வாழ்க்கைக்காக அவர்களுடைய கூலி உயர்வுக்காக அவர்களுடைய கோரிக்கைகளைக் கேட்கக்கூடிய காலத்திலே, தமிழ்நாட்டு மக்களுக்கும் உங்களுக்கும் தெரியும், அரிசன சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள், அவர்களுடைய வாழ்க்கைக்கு உத்தர



வாதம் இருந்ததா? அவர்களுடைய வாழ்க்கையை மேம்படுத்த கூலி உயர்வு கேட்ட நேரத்தில் என்ன நடந்தது என்பது உங்களுக்குத் தெரியும். கீழ்வெண்மணியில் 44 பேர் உயிர் இழந்த சம்பவம். பூந்தாழங்குடி பக்கிரி வையகாதர் இப்படி நூற்றுக்கணக்கான விவரங்கள் என்னால் சொல்ல முடியும். இப்படி கஷ்டப்படக்கூடிய அரிசனக் குடும்பங்கள், அரிசன விவசாயக் கூலிகள் அவர்கள் வாழ்க்கைக்கு உத்தரவாதம் இந்த அறிக்கையில் காணப்படவில்லை, என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதேபோல் கூலி நிர்ணயம் அரசால் அறிவிக்கப்பட்ட போதிலும் அந்த கூலிச் சட்டம் சரியாக அமல் செய்யப்படவில்லை. குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் பெரும்பகுதியோர் விவசாயத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களில் பெரும்

[பிற்பகல் 12-20]

பகுதியினர் அரிசன மக்கள். அவர்கள் தங்கள் கோரிக்கையை நிறைவேற்ற ஒரு இயக்கத்தை நடத்தினார்கள். 4,200 பேர்கள் சிறை சென்றார்கள். நாகூரான் என்பவர் திருச்சி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு பலியானார். குருவேங்கடம் சிறையில் பலியானார். அந்தப் போராட்டத்தில், 200 தாய்மார்கள் சிறை சென்றார்கள். சிறைசென்ற ஒரு ஐந்து மாத கர்ப்பிணியின் கரு சிதைக்கப்பட்டு அழிக்கப்பட்டது. இத்தகைய சிறைக் கொடுமைகள், போராட்டங்களுக்குப் பின்னால், குறைந்தபட்சக் கூலிச் சட்டம் முன்னாள் தி.மு.க. அரசால் அறிவிக்கப்பட்டது. அந்தக் கூலியும் தஞ்சை மாவட்டத்தில் பெரிய நிலப் பிரபுக்களால் கொடுக்கப்படாமல் போலீஸ் அந்த முதலாளிகளுக்கு சாதகமாக இருந்து செயல்பட்ட காரணத்தால் தான் இவ்வளவு இழப்புகளும் ஏற்பட்டன. ஆகவே, அந்த குறைந்தபட்ச விவசாயக் கூலியை ஆளுநர் ஆட்சியில் தமிழ்நாடு பூராவும் கொடுக்கப்படும் என்ற ஒரு உத்தரவாதத்தை அளித்தார்கள். ஆனால் அமுல் ஆகவில்லை. இந்த அரசு அமுல் படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயத் தொழிலாளர்களுக்கு, மற்ற விவசாயிகளுக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக கேரளாவைப்போல் விவசாயத் தொழிலாளர்களுக்கும் பிரச்சினை தீர்க்க லேபர் ஆபீசர் இருப்பது போல, விவசாயிகளுக்கும் லேபர் ஆபீஸ் ஒன்று ஏற்படுத்த இந்த அரசு உத்தரவாதம் அளிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அரிசனத் தொழிலாளர்களுக்கு, தி.மு.க. சர்க்காரால் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. காங்கிரஸ் ஆட்சியிலும் வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டன. பல வீடுகள் இடிந்து விட்டன. பல இடிந்துகொண்டிருக்கின்றன. கட்டப்பட்டுள்ள வீடுகள், ஒரு சென்டிலிருந்து 5 சென்டுகள் வரையிலான மனைகளில் கட்டப் பட்டுள்ளன. இது போக மீதி இடங்களை மிராசுதார்கள் எடுத்துக்கொண்டு அவர்கள் தான் இத்திட்டத்தின் மூலம் லாபம் பெறும் வகையில் இத்திட்டம் அமைந்து பாக்கி

இடங்களுக்கு நீதிமன்றங்களுக்குச் செல்ல வேண்டிய நிலை
இருக்கிறது. ஆனால் சாதாரண மக்களால் நீதிமன்றத்
திற்குச் செல்ல முடியவில்லை. இன்றைக்குக் கூட தஞ்சாவூரில்
அப்படிப்பட்ட பல வழக்குகள் நடந்து கொண்டிருக்கின்றன.
ஆகவே, வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கும்போது, குடும்பத்தின்
அளவுக்கேற்ப வழங்கப்பட வேண்டுமென்று உத்திரவாதத்தின்
இந்த அரசு அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வீடுகள் கட்டிக்கொள்வதற்கு இந்த அரசு கடன் கொடுப்
பதாக அறிவித்திருக்கிறார்கள். தி.மு.க. ஆட்சியில் 40 ஆயிரம்
வீடுகள் கட்டிக் கொடுத்திருப்பதாக அறிவித்திருக்கிறார்கள்.
அது உண்மைதான். ஆனால், 200 ஆண்டுகளுக்கு முன்பாக
அரிசனக் குடும்பங்களுக்கு எப்படி ஒதுக்குப்புறமாக வீடுகள்
கட்டிக் கொடுக்கப்பட்டனவோ, அதேபோலவே இந்த வீடு
களும் அமைந்திருக்கின்றன. இந்த வீடுகளைக் கட்டிக்கொடுக்கும்
பொறுப்பு காண்டிராக்ட்காரர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அந்
தக் காண்டிராக்ட்காரர்கள் கொள்ளை அடித்திருக்கிறார்கள். எங்கள்
பகுதியில் இந்த வீடுகள் காண்டிராக்ட்காரர்களால் சரியான
முறையில் கட்டிக்கொடுக்கப்படாததால், ஒவ்வொரு கல்லாக
சரிந்து விழுந்து கொண்டிருக்கிற காட்சியைக் காணலாம். ஆகவே,
இனியாவது இந்த வேலையை காண்டிராக்டர்களிடம் ஒப்படைக்
காமல் விவசாயத் தொழிலாளர்கள் சொந்த முறையில் வீடுகள்
கட்டிக்கொள்ள மக்கள் கமிட்டிகள் மூலம் ஒரு உத்திரவாதத்
தினை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நேற்றுகூட முதலமைச்சர் அவர்கள் அரிசன சமுதாயத்
தினருக்கு மற்றப் பகுதியில் உள்ளவர்களோடு வீடுகள் கட்டிக்
கொடுக்க உறுதி அளித்திருக்கிறார்கள். அந்த வாக்குறுதியை
நிறைவேற்றுகின்ற வகையில் அரிசனங்களுக்கு வீடுகள்
கட்டிக் கொடுக்க வேண்டும். மேலும், இந்த வேலையை காண்ட்
ராக்டர்களிடம் ஒப்படைக்கக்கூடாது. என்று நான் இந்திய கம்யூ
னிஸ்ட்கட்சியின் சார்பில் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.
அப்போதுதான் அது விவசாயத் தொழிலாளர்களுக்கு பயனுள்ள
தாக இருக்கும். இதை, இந்த அரசாவது செய்ய வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

ஆரிசன மக்களுக்கு இலவசமாக புத்தகங்கள் கொடுப்பதாக
அறிவித்திருக்கிறார்கள். அரிசன மாணவர்கள் ஹாஸ்டலில்
தங்கிப் படிக்கிறார்கள். அவர்களுக்கு இப்போது வழங்குகிற
நிதி ரூ. 65. நாள் ஒன்றுக்கு இரண்டு ரூபாய் சொச்சம் வருகி
றது. அது போதாது. யு. பி., குஜராத், உத்தரப்பிரதேசம்
போன்ற மாநிலகளில் ஹாஸ்டலில் தங்கிப்படிக்கும் அரிசன
மாணவர்களுக்கு ரூ. 120 வழங்குகிறார்கள். அந்தத் தொகையை
யாவது நமது மாநிலத்திலும் வழங்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.



வேலைவாய்ப்பைப் பொறுத்தமட்டில் ஹரிஜன மாண
வர்களுக்கு 18 சதவீதம் இடம் ஒதுக்கப்படுகிறது. அது
போதாது. இன்றைய நிலையில் ஹரிஜன மாணவர்கள் அதிக
மாகப் படித்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே அவர்களுக்கு
வேலைவாய்ப்புத் திட்டத்தில் இன்னும் அதிகப்படியான இடங்கள்
ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கு ஒரு
இயக்குநர் அலுவலகம் ஏற்படுத்தப் போவதாக கூறப்
பட்டுள்ளது. தஞ்சை மாவட்டத்தில் குறுவை
சாகுபடி காலத்தில், மழைக் காலத்தில் விவசாயிகள்
கஷ்டத்திற்குள்ளாகிறார்கள். அங்கு இந்த நெல்லை சிவில்
சப்ளைஸ் இலாகா மூலமாகவோ அல்லது புட் கார்ப்பரேஷன்
மூலமாகவோ கொள்முதல் செய்யவேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன். அரசாங்கம் மூலமாகவே நெல் கொள்முதல்
செய்யப்பட வேண்டும். தனி வியாபாரிகளுக்கு எந்தக் கார
ணத்தைக் கொண்டும் இடம் கொடுக்காமல் அரசு நிர்ணயிக்கும்
விலைக்கு கொள்முதல் செய்ய வேண்டும். திருத்துறைப்பூண்டி
தொகுதியில் டெல்டாப் பகுதியில் வடிகால் வசதி இல்லாததால்
மழைக்காலத்தில் குறுவை அறுவடை பாதிக்கப்படுகிறது. தாளடி
பயிர்களும் பாதிக்கப்படுகிறது. எனவே அரசாங்க பொதுப்பணித்து
றையில் வடிகால் வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன். தண்ணீர் விவசாயத்திற்கு வருவதற்கு
முன்பாக சமுதாயக் குழாய் கிணறுகள் அமைத்துக் கொடுத்தால்
தான் நாற்றை காலத்தோடு நட்டு நல்லமுறையில் விவசாயம்
செய்ய உத்தரவாதம் அளிக்கமுடியும்.

அடுத்தபடியாக, கிராமங்களிலிருந்து நகரங்களுக்கு குடி
பெயர்வதைத் தடுக்க வேண்டும் என்பது நல்ல
நோக்கம்தான். அந்த நோக்கம் நிறைவேற
வேண்டுமென்றால்— கிராமங்களில் வேலையில்லை. உழுப
வனுக்கு நிலம் சொந்தமாகவில்லை. உழுபவனுக்கே நிலம்
சொந்தமாக்கப்பட வேண்டும். நில உச்சவரம்பு பற்றி இந்த
நிதிநிலை அறிக்கையில் ஒன்றும் குறிப்பிடப்பட வில்லை. முன்னாள்
முதல் அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள், ''ஏரோட்டும்
விவசாயிகள் ஏங்கித் தவிக்கையிலே தேரோட்டம் எதற்கு
தியாகராஜா'' என்று அவர்கள் முன்னால் கூறியிருப்பதாகக் கேள்
விப்பட்டிருக்கிறேன். ஆனால் அதே முதல்வர்தான் அந்தத்
தேரை ஓட்டிக் காண்பித்தார்கள். அந்த தியாகராஜர் சுவா
மிக்கு 1001 வேலி நிலம் சொந்தமாக இருக்கிறது. தமிழகத்
தில் 4½ லட்சம் ஏக்கர் நிலங்கள் கோவில்களுக்கும் மடங்களுக்கும்
சொந்தமாகவுள்ளன. இந்த 4½ லட்சம் ஏக்கர் நிலங்களையும்
அரசாங்கமே எடுத்து அந்தந்த கிராமங்களில் உள்ள ஏழை எளிய
மக்களுக்கு பகிர்ந்து கொடுத்தால்தான் கிராமங்களில் இருந்து
மக்கள் நகரங்களுக்கு வரக்கூடியதைத் தடுக்கமுடியும் என்ற என்
ஆலோசனையைக் கூறிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கூட்டுறவு நாணயச் சங்கத்தில் இந்த ஆண்டு ஒத்திவைத்திருக்கிறார்களே தவிர பெரும்பாலான விவசாயிகளுக்கு ஒத்திவைப்பு கிடைக்கவில்லை. காரணம், கிராம கர்ணத்திற்கு எந்த விவசாயி பணம் கொடுக்கிறாரோ அவருக்குத்தான் அடங்கல் சர்டிபிக்கட் கொடுக்கிறார்கள். பணம் கொடுக்கவில்லை என்றால் அதைக் கொடுக்கமாட்டார்கள். தஞ்சை மாவட்டத்தில் பெரும்பாலான விவசாயிகளுக்கு ஒத்திவைப்பு கிடைக்கவில்லை. சிங்களாந்தி என்ற கிராமத்தில் 50 பேர்களுக்கு ஒத்திவைப்பு கிடைக்காமல் கடனும் கிடைக்கவில்லை. அதனால் ஆயிரக்கணக்கான விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களிடம் வந்திருக்கும் மனுவைக் கொடுத்திருக்கிறேன். மறுபரிசீலனை செய்து அந்த விவசாயிகளுக்கு கடன் வழங்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திருத்துறைப்பூண்டி நகரப் பஞ்சாயத்து இருக்கிறது. அதை நகரசபையாக்க வேண்டும் என்று அரசு பரிசீலனையில் இருப்பதாகத் தெரியவருகிறது. அதை நகரசபையாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். திருத்துறைப்பூண்டியில் ஒரு அரசு மருத்துவ மனை இருக்கிறது. அந்தத் தாலுகா பூராவிற்கும் ஒரு அரசு மருத்துவமனைதான் இருக்கிறது. அங்கு வரக்கூடிய மருந்துகள் 21 நாட்களுக்குத்தான் காண்கிறது. மீதி ஒன்பது நாட்கள் ஏழை மக்கள் மருந்து வாங்கமுடியாமல் கஷ்டத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். அந்த அரசு மருத்துவ மனையை விரிவுபடுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது.)

[பிற்பகல் 12-30]

எனது தொகுதியில், வீராக்கியிலிருந்து ஆலத்தூர், ஆலத்தம்பாடி வழியாகப் போகின்ற ரோட்டில் தார் (Tar) அமைத்துக் கொடுக்கவேண்டும். கொடுக்கை பஞ்சாயத்தில் சேர்ந்த அடப்பாற்றில் ஒரு பாலம் கட்டிக்கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். முத்துப்பேட்டை யூனியனில் ஒரு பஸ் நிலையம் அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆதிச்சபுரம் ஆர்ச் வளைவிலிருந்து கும்பிட்டிதிடல் ரோடு மிகவும் மோசமாக இருக்கிறது. அதில் தார் போட்டுக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். கோட்டூரில் புதிய ஒரு அரசு மருத்துவமனை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இங்கு பேச வாய்ப்புத் தந்த துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

திரு. ப. சந்திரன் : பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, இந்த அவையில் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்திருக்கின்ற நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவற்றைப்பற்றி உழைப்பாளர் முன்னேற்றக் கழகத்தின் சார்பாக பேச என் உரையை துவக்குகின்றேன். இந்த நிதிநிலை அறிக்கையைப் படிக்கின்ற நேரத்தில் கிராமப்புற மக்களின் மீது மிகுந்த கவனம் செலுத்தப்





பட்டிருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது. குறிப்பாக குடி தண்ணீர் பிரச்னையைப்பற்றி பேசும்போது, குடி தண்ணீர் திட்டத்தை கிராமப்புறங்களுக்கு விஸ்தரிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருப்பது மிகவும் வரவேற்கத்தக்கதாகும்.

என்னுடைய பெரணமல்லூர் தொகுதியில் கிராமங்கள் நிறைந்திருக்கின்றன. இதில் பெரிய நகரம் என்று சொல்லக்கூடிய அளவில் சேத்துப்பட்டு, தேசூர் போன்ற இடங்களில் குடி தண்ணீர் வசதியில்லாத நிலையில் இருக்கிறது. குடி தண்ணீர் விஸ்தரிப்புத்திட்டத்தை இவைகளுக்கு தந்து உதவவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அங்குள்ள மக்கள் குளத்து நீரைத்தான் பருகுகிறார்கள். ஒரு குடம் தண்ணீர் 20 காசு என்று விலைக்கு வாங்குகிறார்கள். குளத்து நீரைக் குடிப்பதால், எலிபெண்டியாஸிஸ், மஞ்சள் காமாலை போன்ற நோய்கள் வருகின்றன. ஆகவே குடி தண்ணீர் விஸ்தரிப்புத் திட்டம் வர விருப்பதை நாங்கள் மிகவும் வரவேற்கிறோம்.

அடுத்து கிராமப்புறங்களில் தொழில் வளர்ச்சி பெருக வேண்டும் என்று இந்த நிதிநிலை அறிக்கையில் சொல்லியிருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது. அப்படி வரவேற்கின்ற நேரத்தில் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நகரப்புறங்களில் நிறுவப்படுகின்ற தொழிற்சாலைகளை, ஒவ்வொரு தொகுதிக்கும் ஒரு தொழிற்சாலை என்ற முறையில் ஏற்படுத்தி, அதன் மூலம் அங்குள்ள மக்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்க வேண்டும் என்று எங்கள் கட்சியின் சார்பாக தெரிவித்துக்கொள்கிறேன்.

கல்விச் சலுகை வழங்குவதைக் குறிப்பிடுகின்ற நேரத்தில், கல்வியில் மிகுந்த சிரத்தை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். முக்கியமாக அரிசன மாணவர்களுக்கு முன்பு ஆண்டு ஒன்றுக்கு 2,500 ரூபாய்க்கு கீழ் வருமானம் உள்ளவர்களுக்கு கல்விச் சலுகைகள் வழங்கப்பட்டது. 2,500 ரூபாய் வருமானத்தில் எப்படி ஒரு குடும்பம் வாழ்க்கை நடத்துவது It is impracticable.

இதையும் நாம் பரிசீலிக்கவேண்டும். ஆகவே குறைந்தபட்சம் 3,500 ரூபாய் வருமானம் என்ற அளவுக்கு மாற்றிக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, தமிழில் படிக்கின்ற மாணவர்களுக்கு உதவித் தொகை கொடுப்பதற்கு சட்டம் அமைக்கப்பட்டிருந்தது. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோது இச்சட்டம் அமைக்கப்பட்டது. ஆனால் சட்டக் கல்லூரியில் தமிழில் படிக்கின்ற மாணவர்களுக்கு இந்தத் தொகை கொடுக்கவில்லை. இந்தக் கோரிக்கையைத்தான் சட்டக் கல்லூரி மாணவர்கள் நமது முதலமைச்சர் அவர்களிடம் கொடுத்தார்கள். அவர்களும் ஒருசில தினங்களுக்குள் இதுபற்றி பதில் சொல்வதாகச் சொன்ன

தாகத் தெரிகிறது. இந்தச் சட்டத்தை இயற்றியவர்கள் அதைச் செயல்படுத்துகின்ற முறையில் இதற்கான உதவித் தொகையை கொடுக்காத நிலையில் இந்த அரசாவது இதை செயல்படுத்து கின்ற வகையில் தொடர்ந்து இந்த தொகையை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பின்தங்கியோர் பட்டியல் மிகவும் நீண்டு போய்க் கொண்டிருக்கிறது. முக்கியமான சில சமுதாயங்களுக்கு இந்தப் பட்டியலிலுள்ள சலுகைகள் கிடைப்பதில்லை. இந்த நிலைமை மாற 39 சமுதாயத்தை பிற்பட்ட சமுதாயப் பட்டியலில் அங்கீகரித்து, அதற்குரிய சலுகைகளை வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். முக்கியமாக இவர்களுக்கு 18 சதவீதம் அளவுக்கு எல்லாத் துறைகளிலும் சலுகைகள் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அரசு ஊழியர்களில் ரூ.200-க்கு மேல் சம்பளம் பெறுகின்ற ஊழியர்களுக்கு மட்டும் பத்து ரூபாய் உயர்வு கொடுத்திருக்கிறார்கள். இதை கடைநிலை ஊழியர்களுக்கும் சேர்த்து எல்லோருக்கும் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஓய்வூதியத்தைப் பொறுத்தவரையில் அதற்கு 15 ரூபாய் பிடிக்கின்ற நிலையை மாற்றி 10 ரூபாய் என்று குறைத்துக் கொள்ள வேண்டும் என்று எங்கள் கட்சியின் சார்பாக சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

யூனியன் ஆசிரியர்களுக்கு வழங்கப்படுகின்ற சலுகைகளைப் போலவே மற்ற ஆசிரியர்களுக்கும் சலுகைகள் வழங்கப்பட வேண்டுமென்று கூறிக்கொள்கிறேன்.

அடுத்ததாக, கிராமங்களுக்குச் செல்கின்றபோது, அங்குள்ள பள்ளிகளில் இருக்கின்ற ஆசிரியர்கள் வரவேற்கின்றபோது, பல குறைகளை எங்கள் முன் வைக்கின்றார்கள். எங்கள் பள்ளிக் கூடங்களிலே போதிய சுகாதார வசதி இல்லை; கழிவிடங்கள் இல்லை என்றெல்லாம் சொல்கிறார்கள். அந்த நிலையை மாற்றி, கிராமப் பள்ளிக்கூடங்களிலே நல்ல சுகாதாரமான வசதிகளுடன் கட்டிடங்கள் கட்டித்தர வேண்டுமென்றும் இந்த அரசு இதிலே கவனம் செலுத்த வேண்டுமென்றும் கூறிக்கொண்டு, எங்களுடைய உழைப்பாளர் முன்னேற்றக் கட்சியின் சார்பாக, இந்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்டுகிறேன். வணக்கம். நன்றி.

*திரு. க. இரா. சின்னராசு: பெருமதிப்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே நிதி அமைச்சர் அவர்கள் 1977-78-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை வாசித்துத் தந்தார்கள். அந்த நிதிநிலை அறிக்கையில் நல்லவிதமாக இந்த நாட்டினுடைய மக்களின் அடிப்படைத் தேவைகளுக்கான திட்டங்களைத் தீட்டி, அதற்கான வழிவகைகளை



வகுத்துத் தந்திருக்கிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கை பேரறிஞர் அண்ணா அவர்கள் கனவு கண்ட நாட்டை உருவாக்குகின்ற வகையிலே, இந்த நாட்டிலே உள்ள ஏழைச் சமுதாயம் மேம்பாடடையக்கூடிய வகையிலே, அதற்கான திட்டங்கள் எல்லாம் வகுத்து. அந்தத் திட்டங்கள் மூலம் ஏழை எளியவர்கள் எல்லாம் மேம்பாடடைய எவ்வளவோ நல்ல வழிவகைகளை வகுத்துத் தந்திருக்கிறார்கள். அப்படிபட்ட இந்தநிதிநிலை அறிக்கையைப் பாராட்டி வரவேற்கின்ற நேரத்திலே, எனது ஒரு சில கருத்துக்களை எடுத்து வைக்க ஆசைப்படுகிறேன்.

மண்வளப் பாதுகாப்புக்கு நிதி ஒதுக்கீடு செய்து, அதற்கான வழிவகை இந்த நிதிநிலை அறிக்கையிலே செய்திருக்கின்றதை வரவேற்கின்றபோது நல்ல விதமான விதைகளைத் தயாரித்து, அமோக விளைச்சலைத் தரக்கூடிய விதையைத் தயாரித்து – இதற்கு முன்னாலே இருந்த அரசு தங்களுக்குத் தேவையான பெயர்களை எல்லாம் வைத்துக் கொண்டார்கள் என்று சுட்டிக்காட்டினார்களே, அப்படியில்லாமல்—நல்ல விளைச்சல் தரும் விதையை தயாரித்து அந்த விதைக்கு பேரறிஞர் அண்ணா அவர்கள் பெயரைச் சூட்ட வேண்டுமென்று இந்த அமைச்சர் அவையைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்தில், பயிர் பாதுகாப்புத் திட்டத்தை மத்திய அரசு கொண்டு வரும் என்று இந்த நிதிநிலை அறிக்கையிலே கூறியிருக்கிறார்கள். மத்திய அரசு கொண்டு வரும்வரை நாம் காத்திருக்கத் தேவையில்லாத காரணத்தால், இந்த அரசே பயிர் பாதுகாப்புத் திட்டத்தை வகுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்தில், தனியார் துறையிலே கடன் கொடுப்பதை தற்போது நிறுத்தி வைத்திருக்கிறார்கள். அரசுத் துறையிலே கொடுக்கப்படுகின்ற கடனுக்கு எவ்வளவு வட்டியை நாம் பெறுகின்றோமோ, அதே வட்டியை தனியார் துறையிலும் கொடுக்கலாம் என்பதற்கு ஒரு சட்டம் போட்டு, தனியார் துறையிலும் கடன் கொடுப்பதற்கு வழிவகை செய்தால், விவசாய மக்கள், பாமர மக்கள் நல்லதொரு பயன் அடைவார்கள். அதற்கு நல்லதொரு வழிவகை காணவேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்தில், விவசாயத்திற்கு மிக முக்கியமான நீர்ப்பாசன வசதிக்கு இந்த நிதிநிலை அறிக்கையிலே வழிவகை செய்திருக்கிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கையிலே 7 பெரிய திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதை வரவேற்கின்ற இந்த நேரத்திலே, சிறுபாசனத் திட்டங்களுக்கும் நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். சிறுபாசனத் திட்டத்தின் கீழ் என்னுடைய தொகுதியிலே

[திரு. க. இரா, சின்னராசு] [1977 ஆகஸ்ட் 1

ஏற்கெனவே திட்டமிட்டிருக்கின்ற பல சிறுபாசனத் திட்டங்களை செயல்படுத்த வேண்டுமென்று நான் இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

படேதுல்லா ஏரியில் நீர் நிரம்பினால், விளைச்சல் இரண்டு போகம் ஏற்படக்கூடிய நிலைமை முன்பு இருந்தது. இப்போது அது நிறைய தூரடைந்து பழுதடைந்து இருப்பதால், அந்த ஏரியின் கரையை இன்னும் 4 அடி உயரத்திற்கு உயர்த்தி—அதன் கால் வாய்கள் தற்போது சேதம் அடைந்துள்ளன—அவைகளை சீர் படுத்தி, அவைகளை நல்லமுறையிலே சிக்கனமாக பாசனத்திற்கு ஏற்றவகையிலே செய்வதற்கு இந்த அரசு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[பிற்பகல் 12.40]

அதற்காக அரசாங்க அதிகாரிகள் 1,56,000 ரூபாயில் திட்டம் தீட்டியிருக்கிறார்கள். இந்த ஆண்டு அதனை நடைமுறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வேப்பனப்பள்ளி பஞ்சாயத்து யூனியனில் பீமண்டபள்ளியில் ஒரு ஏரி கட்ட 4,50,000 ரூபாயில் கணக்கிட்டு திட்டம் தீட்டி யிருக்கிறார்கள். அதே பஞ்சாயத்து யூனியனில் திம்மம் சேர்வை என்ற ஏரியும் இருக்கிறது. பழைய ஏரி. அதைச் சீர்படுத்திக் கட்ட நான்கு லட்சம் ரூபாய் செலவில் திட்டம் தீட்டியிருக்கி றார்கள். இந்த ஆண்டு அதனைச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வேப்பனப்பள்ளியில் கங்கமடகு டாம் திட்டம் இருக்கிறது. அதையும் செயல்படுத்த வேண்டும்.

வேப்பனப்பள்ளி பஞ்சாயத்து யூனியன் வறண்ட பகுதியாக இருக்கும் காரணத்தால் இந்த மூன்று நான்கு ஏரிகளைக் கட்டினால் கிணற்று நீர் மேம்பாட்டுக்கு இது நல்ல திட்டமாக அமையும். அங்கே கிணறு தோண்டினால் 60 அடி, 70 அடிக்குக் கீழேதான் தண்ணீர் கிடைக்கிறது. இந்த ஏரித் திட்டங்களை நிறைவேற்று வதன்மூலம் அங்குள்ள கிணறுகளில் நிலத்தடி நீர் கிடைக்க வாய்ப்பு ஏற்படும்.

நிம்மல்வாடி அருகே ஏரி கட்ட இரண்டு லட்சம் ரூபாயில் அதிகாரிகள் திட்டம் தீட்டியிருக்கிறார்கள். அதனைச் செயல் படுத்தவேண்டும். கொண்டேகாணப்பள்ளி என்ற பகுதியில் கிரா மக் காட்டாறு வருகிறது. அதை நிறைவேற்றுவதற்காக 7,30,000 ரூபாயில் ஒரு திட்டம் தீட்டி வைத்திருக்கிறார்கள். அதையும் செயல்படுத்த வேண்டும்..

கிருஷ்ணப்பநாயக்கபுதூர் அருகே ஏரி கட்ட 1,50,000 ரூபா யில் திட்டம் தீட்டியிருக்கிறார்கள். அதையும் செயல்படுத்த வேண்டும். சிக்கபுவத்தியில் குருதொட்டனூர் அருகே ஏரி கட்ட



1977 ஆகஸ்ட் 1] [க. இரா. சின்னராசு]

2,80,000 ரூபாயில் திட்டம் தீட்டியிருக்கிறார்கள். அதனையும் செயல்படுத்த வேண்டும். ஆலப்பட்டிக்கு அருகே வெலஹள்ளி என்னும் இடத்தில் மூன்று லட்சம் ரூபாய் செலவில் ஏரிகட்ட திட்ட மிட்டிருக்கிறார்கள். அதை இந்த ஆண்டில் இல்லாவிட்டாலும் அடுத்த ஆண்டிலாவது நிறைவேற்ற வழிவகை செய்ய வேண்டும்.

குடிநீர்ப் பிரச்சினை பற்றி நமது அரசு நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதை வரவேற்கிறேன். குடிநீர் வசதி என்னுடைய தொகுதியில் பெரும்பாலான கிராமங்களுக்கு இல்லாமல் இருக் கிறது. அந்தக் காலத்தில் பெரிய மேட்டுப் பகுதியில் குடியேறி யிருக்கிறார்கள். அங்கெல்லாம் குடிநீர் கிடைக்க வசதி இல்லை. ஊரிலிருந்து இரண்டு மூன்று பர்லாங் தூரத்தில்தான் கிணற்றில் நல்ல நீர் கிடைக்கிறது. அங்கே குடி தண்ணீர் தொட்டி கட்டி கிணற்றிலிருந்து குடிநீர் கொடுத்தால் வசதியாக இருக்கும். எங்கள் தொகுதியில் பல கிராமங்களில் குடிநீர் இல்லாது இருக்கும் காரணத்தால் அந்தக் குறையைச் சீர்படுத்த வேண்டுமென்று அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் மருத்துவத்திற்கு முக்கியத் துவம் தரப்பட்டிருக்கிறது. கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனை விரிவாக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 20 மைல் சுற்றளவில் எந்தவிதமான மருத்துவ மனையும் இல்லாமல் இருப்பதால் அத்தனை மக்களும் கிருஷ்ணகிரிக்கு மருத்துவம் செய்ய வருகிறார்கள். அங்கு ஏழு மருத்துவர்கள்தான் இருக்கிறார்கள். இட வசதி குறைவாக இருக்கிறது. அதனால் சீரான முறையில் மருத்துவ வசதியும் மருந்தும் கிடைக்கவில்லை. இதைச் சீர்படுத்த ஆவன செய்யவேண்டும். அந்த மருத்துவ மனையில் காலையில் அரை மணி நேரம் மட்டும்தான் குழாயில் தண்ணீர் வருகிறது. இதனால் நோயாளிகள் தண்ணீர் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். அதை யும் நமது அரசு கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தர்மபுரி மாவட்டம் பின் தங்கிய மாவட்டமாக இருக்கிறது. இம் மாவட்டத்தில் இருப்பது இரண்டு கல்லூரிகள்தான். கிருஷ்ணகிரியிலே ஒன்றும், தர்மபுரியிலே ஒன்றும் இருக்கின்றது. எங்கள் மாவட்டத்தில் மகளிர் கல்லூரி ஒன்றுகூட இல்லை, அந்தக் குறையைப் போக்க கிருஷ்ணகிரியில் ஒரு மகளிர் கல்லூரியை அமைத்துத் தரவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். அந்த அளவிலே—அறிஞர் அண்ணா அவர்கள், இருந்தபோது கிருஷ்ணகிரியில் கல்லூரி அமைப் பதற்கான மானியத் தொகையை அரசே கொடுக்கச் செய்து அமைத்துக் கொடுத்தார்கள்—அதைப்போலவே கிருஷ்ணகிரியில் ஒரு மகளிர் கல்லூரியை ஏற்படுத்தி அந்த அடிப்படையிலே கல்வியை வளர்ப்பதற்கு முக்கியத்துவம் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அரிசன மக்களுக்காக நிதிநிலை அறிக்கையில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைக் குறிப்பிட்டு—அரிசன மக்களுக்காக எவ்வளவோ வசதிகளைச் செய்து தந்திருக்கிறார்கள். பார்வேர்ட் இனத்தைச் சேர்ந்தவர்களாயினும் அன்றாடச் சோற்றுக்குக்கூட வசதியற்றவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கும் வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டு, கடைசியாக ஒரு கருத்தைச் சொல்லி முடிக்கலாம் என நினைக்கிறேன்.

படித்துவிட்டு பட்டம் பெறுகின்ற மாணவர்களுக்கு வேலைக்குச் செல்வதற்கு வயது வரம்பு வைத்திருக்கிறார்கள். ஆனால் படித்தவர்களுக்கு வேலை கிடைப்பது என்பது குதிரைக் கொம்பாக இருக்கிற இந்தக் காலத்தில் அவர்கள் குறிப்பிட்ட வயதுக்குள் வேலை பெற முடியவில்லை. ஆகவே, அந்த வயது வரம்பை இன்னும் 5 ஆண்டுகளாவது தளர்த்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்குப் பேச வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து முடிக்கிறேன். வணக்கம்.

திரு. செ. சொக்கலிங்கம்: பெருமதிப்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் முதல் முறையாக நான் பேசுவதற்கு வாய்ப்பளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனக்கு இங்கே பேசுவதற்கு சந்தர்ப்பம் கொடுத்த என்னுடைய கழகத்தின் தானைத் தலைவர் கலைஞர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியை நான் இந்த மன்றத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். என் தொகுதியைப் பொறுத்தமட்டில் இதற்கு முன்னால் இங்கே பேரவைத் தலைவராக இருக்கிறவர்கள் முன்னாலே அந்தத் தொகுதி உறுப்பினராக இருந்திருக்கிறார்கள்; அந்தத் தொகுதியிலிருந்து நான் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறேன் என்பதை பெருமையோடு இந்த மன்றத்திலே கூறிக்கொள்கிறேன். அதற்குப் பின்னாலே நான் தேர்ந்தெடுக்கப்பட்டேன். அந்தத் தொகுதி மக்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மாமன்றத்திலே நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் 1977-78ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை அறிவித்து அதற்குப் பின்னர் பல உறுப்பினர்கள் பல கருத்துக்களை இங்கே சொல்லியிருக்கிறார்கள். நான் ஒரு சில கருத்துக்களை, என்னுடைய தொகுதி—ஒரு பின்தங்கிய பகுதி—பற்றிய கருத்துக்களைச் சொல்லலாம் என நினைக்கிறேன். திருப்போரூர் தொகுதியிலே கோவளம் என்ற கிராமத்திலே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கும் திட்டத்திலே இன்னும் வீடுகள் கட்டப்பட்டு பாதியிலே நிறுத்தப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டம் இன்னும் பூர்த்தியாகவில்லை. அந்தத் தொகுதியிலே உள்ள மக்கள் நாங்கள் எல்லாம் சென்றபோதுகூடச் சொன்னார்கள், தானைத் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியிலே வீடுகள் கட்டிக





கொடுத்தார்கள், மீனவர்களுக்கும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் வீடுகள் கட்டிக்கொடுக்க திட்டமிட்டார்கள், ஆனால் அது பாதியிலே நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது. கழக அரசு இருந்தபோது தாழ்த்தப்பட்ட மக்களுக்காக தனி வாரியம் அமைத்து செயலபட்டது. இந்த அரசு அதைப்பற்றி இந்த நிதிநிலை அறிக்கையிலே ஒன்றும் சொல்லவில்லை. அரிசனங்களுக்கு வீடுகளைக் கட்டித்தர கேட்டுக்கொண்டார்கள். அரிசன மாணவர்களுக்கு படிப்பதற்காக புத்தகம் வாங்குவதற்காக சலுகைகள் கொடுத்திருக்கிறார்கள்.

[பிற்பகல் 12-50]

அதற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். அதேநேரத்தில் அரிசனங்கள் விவசாயம் செய்வதற்கென்று முந்தைய அரசு இரண்டு ஏக்கரா நிலம் இருந்தால் அவர்களுக்கு கிணறு எடுத்து பயிர் செய்வதற்கான திட்டங்களை முன்னேற்றக் கழக அரசு நிறைவேற்றியிருக்கிறது. ஆனால் அப்படிப்பட்ட திட்டங்கள் இதிலே இருக்கிறதா என்பது எனக்குச் சந்தேகமாக இருக்கிறது.

அதேநேரத்திலே இன்னொன்றையும் சொல்லிக்கொள்கிறேன். அரசு ஊழியர்களைப்பற்றி எனக்கு முன்னால் எங்களுடைய கழகத்தின் பொதுச் செயலாளர் மிகவும் விளக்கமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அது உண்மைதான். 200 ரூபாய்க்கு மேற்பட்டவர்களுக்கு அந்த 20 ரூபாய் என்று இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அடித்தளத்திலே இருக்கின்ற ஏழைகளுக்காக நாங்கள் இருக்கிறோம் என்று அவர்கள் சொல்லிக் கொள்கிறார்கள். நாங்கள் ஏழைப்பங்காளர்கள், ஏழைகளுக்காகவும், நடுத்தர மக்களுக்காகவும் இருக்கிறோம் என்று சொல்லி பொறுப்பிலே வந்தவர்கள் 200 ரூபாய்க்குக் கீழே சம்பளம் பெறுகின்ற, குறிப்பாக, வெட்டி, தலையாரிகளுக்கு கழக ஆட்சியிலே 50 ரூபாய் என்பது 100 ரூபாயாக ஆக்கப்பட்டு, இன்றைக்கு 100 ரூபாய், 150 ரூபாய் என்று பெற்றுக் கொள்கிறார்கள் என்றால் அவர்களுக்கு உயர்வு கிடைக்கவில்லை. எனவே, ஏழைகளுக்கு, பின்தங்கிய வகுப்பினருக்கு, குறைவாகச் சம்பளம் வாங்குபவர்களுக்குச் சலுகை தரப்படவில்லை என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதற்கடுத்தாற்போல் இன்னொன்றையும் சொல்கிறேன், என்னுடைய தொகுதியிலே குறிப்பாக காயாறு கிராமத்திலே, தையூர் கிராமத்திலே 7 அரிசனக் காலனிகள் இருக்கின்றன. அந்தப் பகுதியிலே இதுவரையிலே ஒரு விளக்கு வசதியும் இல்லை, ரோடு வசதியும் இல்லை. அந்த ரோட்டைப் போடுவதற்கு போன வாரம் என்று சொல்லிக்கொள்வேன், அங்கே நமது சபாநாயகர் விழாவை நடத்தி, அந்த விழாவிலே மாவட்ட ஆட்சித் தலைவரவர்களும் கலந்து கொண்டிருக்கிறார்கள். அந்த விழாவிற்கு என்னை அழைக்கவில்லை., அதற்காக நான் வருத்தப் படவில்லை. ஆனால் அந்த விழாவிலே—நான் பஞ்சாயத்துத்

தலைவராக இருந்த காலத்தில், பெருமதிப்பிற்குரிய இன்றையதினம் நமது தலைமைச் செயலகத் தலைமைச் செயலாளராக இருக்கின்ற கார்த்திகேயன். அவர்களின் சொந்த ஊர் அந்த வழியிலே இருப்பதால் அவர்களும் அதற்குத் துணையிருந்து திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் 13 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருந்தார்கள்—ஆனால் இப்பொழுது அந்த விழாவிலே சொல்லியிருக்கிறார்கள், இதை நாங்கள்தான் செய்தோம் என்று. அதற்காக நான் வருத்தப்படவில்லை. யார் செய்தது என்பது பிரச்னை அல்ல. அந்த விருத்தி செய்ய ஆவன செய்ய இந்த அரசு முன்வரவேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

அதேநேரத்தில் என்னுடைய தொகுதியில் 115 ஆம் எண்ணுள்ள பஸ் சென்னையை ஒட்டிய பகுதியாக இருக்கின்ற காரணத்தால் அந்த 115 ஆம் எண்ணுள்ள பஸ் சென்னையிலிருந்து திருப்போரூர் வரை செல்கிறது. ஒரு நாளைக்கு 3 பஸ்கள்தான் அந்த வழியாகச் செல்கிறது. நான் பஸ்ஸிலே வருபவன். நேற்றைய தினம் நான் கூட்டத்திற்குச் செல்லும் நேரத்தில் மூன்று மணி நேரம் நிறுத்தப்பெற்றது. எனக்கே அந்த நிலைமை என்றால் பொதுமக்கள் எவ்வளவு கஷ்டப்படுவார்கள் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். இதுபற்றி பலமுறைச் சொல்லியும், முதலமைச்சருக்கு மனு அனுப்பியும் உத்தரவோ அல்லது வேறு பதிலோ வரவில்லை. அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சைதாப்பேட்டையிலிருந்து நாவலூருக்கு 19-பி பஸ் செல்கிறது. அப்படி நாவலூர் வரை செல்கின்ற அந்த பஸ்ஸை திருப்போரூர் வரையிலாவது செல்ல வகை செய்தால் நான் மிக்க நன்றியுள்ளவனாக இருப்பேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோன்று என்னுடைய தொகுதியிலே ஒத்தேரி என்ற இடம் பெரும்பாலும் தாழ்த்தப்பட்ட மக்கள் இருக்கும் பகுதியாகும். அங்கே குறிப்பாக ரோடு வசதி இல்லாமல் தீவுபோல இருக்கிறது. தொழிற்சாலைக்கு அங்குள்ளவர்கள் செல்லவேண்டுமென்றால் அதற்கு ரோடே இல்லை. இப்படிப்பட்ட பிரச்னைகள் நீண்ட நாள் குறையாக இருந்து வருகிறது. அந்தத் தொகுதியில் சபாநாயகர் இருந்த நேரத்திலும், நான் வந்ததற்குப் பிறகும் யாருமே இல்லாத நாதியற்ற தீவு போல அந்தப் பகுதி இருக்கின்றது. இதை இந்த அரசு கவனித்து அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று மிகுந்த பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

முதலமைச்சரவர்கள் சொல்கிறார்கள், நான் அரிசனங்களுக்காகவே பாடுபடுவேன் என்று. நான் ஒன்றைச் சொல்லிக் கொள்கிறேன். கோயில்களிலே, திருப்போரூரிலே அறங்காவலராக இருந்தவன். திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்



பேற்ற பிறகு அரிசனங்கள் அந்தக் கோயில்களில் அர்ச்சகராக வேண்டுமென்ற உத்தரவைப் பிறப்பித்து, நான் அறங்காவலராக இருந்திருக்கிறேன். அதைப்பற்றி இங்கே முதலமைச்சரவர்கள் அவருடைய இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிடவில்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொண்டு இன்னொன்றையும் சொல்லிக்கொள்கிறேன். பஸ் போக்குவரத்து என்னுடைய தொகுதியிலே பெரும் குறையாக இருக்கிறது. அதை உடனடியாகக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்த துணைத் தலைவரவர்களுக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன், வணக்கம்.

திரு. வி. கொ. சின்னசாமி : மதிப்புக்கும் மரியாதைக்கும் உரிய சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த ஜூலை திங்கள் 25-ம் நாளன்று இச்சட்டமன்றப் பேரவையிலே மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள் அறிவித்த 1977-78 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீது, அதனை ஆதரித்து, பல கருத்துக்களைக் கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

நம்பியூர் ஊராட்சி ஒன்றியத்தில் கூட்டுக் குடி நீர் திட்டத்தின்கீழ், கடந்த 5 ஆண்டுகாலமாக ஒரு திட்டம் நிறைவேற்றப் படாமலிருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நம்பியூர் ஊராட்சி ஒன்றியம் மற்றும் இதர 10 ஊராட்சிகளுக்கு குடிநீர் வழங்க ஆய்வு வேலைகள் முடிக்கப்பட்டு, ரூ. 30.30 இலட்சம் அளவிற்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, கோவை குடிநீர் வடிகால் வாரிய நிர்வாகப் பொறியாளரால் கோவை குடிநீர் வடிகால் வாரிய மேற்பார்வை பொறியாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்த நிலையில் எந்தவிதமான முடிவும் இன்னும் எடுக்கப்படவில்லை யென்பதையும் இந்தச் சபையின் முன் கூற நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்பியூரில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் தற்பொழுது மாத வாடகையில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. அந்த ஆரம்பச் சுகாதார நிலையம் வாடகைக் கட்டடத்தில் இருப்பதால் வசதிக் குறைவாக இருப்பதால், மக்கள் மிகவும் கஷ்டப்படக் கூடிய நிலையுள்ளது. அந்தச் சுகாதார நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டும்பொருட்டு, பொது மக்கள் பங்குத் தொகையாக ரூ. 10,000மும் 5 ஏக்கர் நிலமும் மக்களால் ஏற்கனவே அரசினரிடம் ஒப்படைக்கப்பட்டும் கடந்த அரசு எந்த வேலையும் செய்யவில்லையென்பதைக் கூறி, அதை உடனடியாக அரசு ஏற்று நடத்திக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, எலத்தூர் செட்டிபாளையம் கிராமப்புற மருந்தகத்தை 1975-ம் ஆண்டு ஜனவரி மாதம் 10-ம் தேதி அரசினர் ஆணை எண். 99 படி, அரசினர் பராமரிப்புக்கு ஏற்றுக்கொள்ளப்

பட்டு உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி மக்கள் நன்கொடையாக ரூ. 50,000மும் ஊராட்சி ஒன்றிய நன்கொடையாக ரூ. 25,000மும் அரசுக்கு செலுத்தப்பட்டுள்ளது. இதற்குத் தேவையான 2 ஏக்கர் நிலமும் செலுத்தப்பட்டது. அப்படி இருந்தும் இது நாள் வரை மாவட்ட மருத்துவ அலுவலரால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. ஆகவே, இதை உடனடியாக அரசு ஏற்று நடத்த ஆவனச் செய்யுமாறு இந்த நிதிநிலை அறிக்கையிலே பேசும் பொழுது நான் கேட்டுக்கொள்கிறேன்.

அரிசனங்கள் வீட்டு வசதியில்லாமல் துன்பப்படுகிற நிலையிலே அந்த மக்கள் குடியிருக்கக் கட்டிடம் கட்டிக் கொடுக்குமாறு அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

நீர்ப்பாசனம் குறித்து ஒருசில கூற ஆசைப்படுகிறேன். என்னுடைய தொகுதியிலே பவானிசாகருக்கு அணைக்கட்டு இருக்கிறது. இருப்பினும் கடந்த 2 ஆண்டுகளாக அணையிலிருந்து தண்ணீரை பவானிக்குத் திறக்காமல் ஆற்றிலே விட்டு, அதனால் விவசாயிகள் மிகவும் அவதிப்படுகிறார்கள். கடந்த 20 ஆண்டுகளாக அப்படிப்பட்ட நிலைமை இந்த அணையிலே ஏற்படவில்லையென்றும் மீண்டும் அப்படிப்பட்ட நிலைமை ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்றும் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமின்றி மின்சார இணைப்பு கொடுப்பதிலும், கோவை மாவட்டத்திலே நிலத்தடி நீர் ஆய்வுக் குழுவினரால் தாமதம் ஏற்படுகிறது. இருந்தாலும், பவானிசாகருக்கு உட்பட்ட ஆயக்கட்டு பகுதிகளிலே கிணறுகளிலே நீர் நிறைய உள்ளது. இருப்பினும் அதிகாரிகளை அணுகினால், கோவை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் மின் இணைப்பு கொடுப்பதில் தாமதம் ஆகிறது. ஆகவே, நீர் உள்ள எங்கள் பகுதியிலே மின் இணைப்பு விரைவாகக் கிடைக்க ஆவன செய்ய வேண்டும் என்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

கிராமம் முன்னேறினால்தான் நாடு முன்னேறும் என்ற அடிப்படையில் இந்த நிதிநிலை அறிக்கையை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். எனது தொகுதியிலுள்ள கார்ட் போர்ட் பேப்பர் மில் கடந்த 2 ஆண்டுகளாக மூடப்பட்டிருக்கிறது. அதிலே 320 தொழிலாளர்கள் வேலை செய்து வந்தனர். இப்பொழுது அவர்களுக்கு வேலையில்லாததால், அவர்களுடைய குடும்பங்கள் பட்டினியால் கஷ்டப்படுகிறார்கள்.

[பிற்பகல் 1-00]

அந்த கார்டுபோர்டு பேப்பர் மில்லை உடனடியாக திறப்பதற்கு அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். எனது தொகுதி பெரும்பகுதி கிராமங்கள் நிறைந்த பகுதியாதலாலே ரோடுகள் முழுவதும் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்டு இருக்கின்றன. ஊராட்சி ஒன்றியங்களுடைய நிதிநிலை எல்லா ரோடுகளையும் நல்ல முறையில் பராமரிக்க போதுமானதாக இல்லை என்ற காரணத்தினால் அந்தப் பேருந்து செல்லும் பாதைகளை பராமரிக்கும் பொறுப்பை நெடுஞ்சாலை கிராமப் பணித்துறை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



அதோடு மட்டுமல்ல, கிராமங்களில் விவசாயிகள் கிணறு தோண்டுவதற்காக இன்று கம்ப்ரசர்கள் வைத்து கிணறு வெட்டுகிறார்கள். குழாய் மட்டும் போட்டுக்கொள்ளவேண்டும். ஆனால் தோட்டா போடுகின்ற பொறுப்பு விவசாயிகளிடத்தில் இல்லை. அவர்கள் ஒவ்வொரு கோடவுனுக்கும் போய் தோட்டா வைத்திருக்கிறவர்களிடம் சென்று நேரடியாக தோட்டாக்களை வாங்கி உபயோகப்படுத்துகிற நிலை அவர்களுக்கு உள்ளது. ஆனால் கம்ப்ரசர் வைப்பவர்கள் தோட்டாக்களுக்கு மத்திய அரசிலே லைசன்ஸ் வாங்கவேண்டிய நிலை உள்ளது. ஆகவே அந்த தோட்டாக்களுக்கான பர்மிஷனை மத்திய சர்க்காரிடம் இருந்து மாநில சர்க்காருக்குக் கொடுப்பார்களானால், அந்த நிலை ஏழை விவசாயிகளுக்கு சலுகையாக இருக்கும் என்று கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமின்றி, அரிசன நல ஹாஸ்டல்கள் ஏற்படுத்திக் கொடுக்க அரசு ஏற்பாடு செய்திருக்கிறது. எனது தொகுதியில் நம்பியூரில் அரிசன ஹாஸ்டல் இல்லை. ஆகவே அங்கே ஒரு அரிசன ஹாஸ்டல் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்திலே, குழந்தைகளை சேர்ப்பதற்கு ஆர்.டி.ஓ. மூலமாகத் தான் சேர்க்கவேண்டுமென்று விதி இருக்கிறது. அதிகமாக குழந்தைகள் வந்து விட்டால் ஆர்.டி.ஓ. அவர்களால், சேர்த்துக் கொள்ளவும் முடியவில்லை. வீட்டுக்கு அனுப்பவும் முடியவில்லை. அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதிகப்படியான குழந்தைகளை சேர்ப்பதற்கு கலெக்டரிடத்தில் ஒப்புதல் பெறவேண்டுமென்று விதி இருக்கிறது. ஆகவே நேரடியாகவே, ஆர்.டி.ஓ. அவர்களே அதிகமாக வருகின்ற குழந்தைகளைச் சேர்த்துக் கொள்ள ஆவன செய்யவேண்டுமென்று கூறி, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

*திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1977–78 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையின் மீது என்னுடைய ஒரு சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். என்னுடைய பகுதியிலே உள்ள பெரும்பாலான நிலங்கள் இரு போக சாகுபடி நிலங்களாகும். பருவ மழை பொய்த்ததன் காரணமாக வசதியுள்ள விவசாயிகள் வருமானம் அதிகம் தரக்கூடிய கரும்பைப் பயிரிட ஆரம்பித்திருக்கிறார்கள். வசதியற்ற பெரும்பான்மையான விவசாயிகள் நெல் பயிரிடுவதையே நம்பியிருக்கிறார்கள். இப்போதுள்ள விவசாயக் கூலி,

உர விலை பூச்சி மருந்து விலை இவைகளைக் கணக்கெடுத்துப் பார்த்தால், இப்போது தரப்படும் நெல் விலைக் கட்டுப்படியாக வில்லை, அதை உடனடியாக, இந்த அரசு நெல் விலையை அதிகமாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போதே நெல் விலையை அதிகரிக்க வேண்டுமென்று தஞ்சை மாவட்ட விவசாயிகள் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த அரசு நெல் விலையை அதிகரித்தால், தஞ்சை மாவட்ட விவசாயிகளுடைய பாராட்டு கிடைக்கும் என்று இந்த சந்தர்ப் பத்தில் கூற ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக என்னுடைய பகுதியிலே வாய்க்கால் வடி கால் பிரச்சினை பெரிய பிரச்னையாக இருக்கிறது. இது பற்றி பலமுறை வளர்ச்சி மன்றக் கூட்டங்களில் சொல்லியும், எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருக்கிறது. ஒரே வாய்க்கால் ஒரு சில கிராமங்களுக்கு பாய்ச்சலாகவும், ஒரு சில கிராமங் களுக்கு வடிகாலாகவும் இருக்கிறது. அதனால் கொஞ்சம் மழை பெய்தால் கூட ஒரு கிராமத்தில் பயிர்களுக்குத் தண்ணீர் தேவைப் படும். ஒரு கிராமத்திலே பயிர்கள் மூழ்கி முழு நாசம் அடைந்து விடும். இதனால் இந்தப் பிரச்சனை என் பகுதியிலே மட்டும் இல்லாமல், காவிரி டெல்டா பகுதிகள் முழுவதிலும் இருந்து வருகிறது. ஆகவே இதற்கு ஒரு தனி அதிகாரியை நியமித்து அதனை சர்வே செய்து ஒரு நல்ல முடிவை எடுத்தால் அங்குள்ள விவசாயிகள் பலனடைவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

எங்கள் பகுதியில் உள்ள கொங்கன் வாய்க்கால் காவிரி ஆற்றிலிருந்து பிரிந்து பல மைல்களுக்கு செல்ல வாய்ப் பிருந்தாலும் சாகுபடிக்கு ஏற்றவாறு தண்ணீர் பாய்வதற்கு வழி இல்லை. அதைப்பற்றி அரசு உடனடியாக கவனிக்க வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள் கிறேன்.

பல கிராமங்களில் மின்சாரம் கொடுக்க கம்பங்கள் நடப் பட்டு பல ஆண்டுகள் ஆகியும் கம்பி இழுக்கப்பட்டு மின் இணைப்பு கொடுக்கப்படாமல் இருக்கிறது. இதன் காரண மாக அந்தப் பகுதி மக்களிடையே ஒரு அதிருப்தி ஏற் பட்டு இருக்கிறது. ஆகவே அரசு உடனடியாக அந்தக் கம்பங் கள் நடப்பட்டுள்ள பகுதிக்கு மின் இணைப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பம்ப் செட் மோட் டார் பொருத்தி பல இடங்களில் வைத்து இருக்கிறார்கள். அதற்கும் இது வரையில் மின் இணைப்பு கொடுக்கப்படவில்லை. அதற்கும் மின் இணைப்பு கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். வீடுகளுக்கு மின் இணைப்பு பெற்றுள்ளவர்கள் எல்லோரும் வசதி உடையவர்கள் என்று கருதக்கூடாது. வசதி இல்லாதவர்களும் வீடுகளுக்கு மின் இணைப்பு போட்டு





இருக்கிறார்கள். ஆகவே, வீடுகளுக்கு கொடுக்கப்படும் மின் இணைப்புக்கு கட்டணம் குறைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பியூஸ் (fuse) எடுத்து விட்டால் மறுபடியும் பியூஸ் (fuse) பொருத்த ரூ. 6 கேட்கிறார்கள். இது மிகவும் அதிகம். இதைக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எங்கள் பகுதியில் இதற்கு முன்பு மீட்டர் வாடகை 8 அணா செலுத்தி வந்தோம். ஆனால், இப்போது ரூ 2 வசூலிக்கிறார்கள். இது மிகவும் அதிகம். அந்த மீட்டர் வாடகை கொடுப்பதை கணக்கில் எடுத்துக் கொண்டால் மீட்டர் விலைக்கு மேல் போய்விடும் என்று கருதுகிறேன். ஆகவே பழையபடி அந்த மீட்டர் வாடகையை வீடு ஒன்றுக்கு 8 அணா விற்குக் குறைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வீட்டு மின்சாரத்திற்கு ஒரு மாத மின் கட்டணத்தை முன்பு டிபாசிட்டாக வாங்கி இருந்தார்கள். பல ஆண்டுகாலமாக இந்த நிலை இருந்தது. இப்போது 4 மாத கட்டணத்தை டிபாசிட்டாக வாங்கி இருக்கிறார்கள். அதிகம் வாங்கிய 3 மாத கட்டண டிபாசிட்டை திருப்பி அளிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் என்னுடைய தொகுதியில் வீர மாங்குடி என்ற ஊருக்கு வரும் பஸ் நிறுத்தப்பட்டு விட்டது. அது திரும்பவும் கொண்டு வர பல முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டும் எந்தவிதமான நடவடிக்கையும் அதிகாரிகள் மேற்கொள்ள வில்லை. அது பல கிராம மக்களுக்கு பயனுள்ள வகையில் அமையும் பஸ் என்ற காரணத்தால், உடனடியாக அந்த பஸ்ஸை அந்த பகுதிக்கு விடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்

பாபநாசம் நகரத்தில் பஸ் ஸ்டாண்ட் கட்டும் விஷயம் பற்றி ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். பஸ் ஸ்டாண் டுக்கு இடத்தை ரயில்வேக்கு சொந்தமாக உள்ள பகுதியி லிருந்து மத்திய அரசின் அனுமதி பெற்று பல ஆண்டுகள் ஆகியும் இங்கே கட்டிடம் கட்டுவதற்கு வேண்டிய நடவடிக்கை கள் மேற்கொள்ளப்பட்டு, எஸ்டிமேட்டுகள் தயாரிக்கப்பட்டு, மேல் அதிகாரிக்கு அனுப்பப்பட்டும் எஸ்டிமேட் சாங்ஷன் பெற முடியாமல் இருக்கிறது. இந்த எஸ்டிமேட் சாங்ஷன் செய்யும் முறையில் மாற்றம் தேவை என்று கருதுகிறேன். ஒரு லட்ச ரூபாய்க்கு மேல் செலவாகும் எஸ்டிமேட்டுகளுக்கு சீப் இன்ஜினீயர் சாங்ஷன் வேண்டும் என்று வைத்துக்கொள்வோம். அந்த எஸ்டி மேட்டை யூனியன் இன்ஜினியர் தயாரித்து பிறகு அதை எ.இ. பார்த்து பிறகு டி. இ., எஸ. இ, பார்த்து, பிறகு தான் சீப்இன்ஜினீயர் அலுவலகத்திற்கு போகிறது. இதனால் கால தாமதம் ஏற்படுகிறது. இந்த காலதாமதத்தை தவிர்க்க ஒரு அதிகாரி ஒரு குறிப்பிட்டத்தொகைக்கு சாங்ஷன் செய்யவேண்டு மென்று அதிகாரம் இருந்தால் அந்த அதிகாரிக்கே அந்த எஸ்டிமேட்டை நேரடியாக அனுப்பி வைத்தால் இந்த கால

தாமதம் தவிர்க்கப்படும் என்று கருதுகிறேன். ஆகவே, அந்த வகையில் நான் கூறும் புதிய திட்டத்தை உடனடியாக அமுல் செய்ய ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரிசனங்களுக்குக் கொடுக்கப்படும் சகல சலுகைகளும் கிருத்துவ மதத்தைச் சார்ந்த அரிசனங்களுக்கும் கொடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அரிசனங்கள் என்னென்ன தொழில் செய்கிறார்களோ அதே தொழிலைத்தான் கிருஸ்துவ அரிசன மக்களும் செய்கிறார்கள். ஆகையால் அவர்களுக்கும் அந்தச் சலுகைகள் அளிக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[பிற்பகல் 1·10]

அடுத்தபடியாக, உள்ளாட்சித் துறையில் பணிபுரிகிற, ஒரு சிலவேலையில் இருப்பவர்கள் பதவி உயர்வு ஏதுமற்ற நிலையில் பல்லாண்டுகாலமாக ஒரே வேலையில் ஒரே அந்தஸ்தில் இருக்கிற நிலை இருக்கிறது. நகர பஞ்சாயத்து, முனிசிபாலிடி ஆகியவற்றில் பணி புரியும் சானிடரி இன்ஸ்பெக்டர்கள், சானிடரி இன்ஸ்பெக்டர்களாக கடைசி வரையில் பணிபுரிய வேண்டிய நிலை இருக்கிறது. அவர்களுக்கு பதவி உயர்வு போன்ற சலுகைகள் இல்லை. அதேபோல, கிராம சேவக்குகளும் 15, 16 ஆண்டுகள் கிராம சேவக்குகளாகவே இருக்க வேண்டி இருக்கிறது. அவர்களுக்கு ஃப்யூசர் (Future) ஏதுமில்லாத நிலை இருக்கிறது. அதேபோல கோயிலில் வேலை செய்யும் நிர்வாக அதிகாரிகள், கடைசி வரை கோயில் நிர்வாக அதிகாரியாகவே பணியாற்றி ஓய்வு பெற்ற பலரை நான் பார்த்திருக்கிறேன். இதையெல்லாம் அரசு கவனித்து அவர்களுக்கு ஒரு மாதிரியான, பிற்காலத்தில் ஊதிய உயர்வு, பதவி உயர்வு போன்ற சலுகைகளை பெறத் தக்க வகையில் ஏதாவது செய்யவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரையில் இத்துறை தான் பல ஊழல்களுக்குக் காரணமாக, ஊழல்கள் நடைபெற ஏதுவாக அமைந்துள்ளது. ஆகவே, இந்தக் சட்டத்தையே மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கூட்டுறவே நாட்டுயர்வு என்று சொல்லிக்கொள்ளும் நேரத்தில், கூட்டுறவு மூலம் சகல நன்மைகளையும் மக்கள் பெறக்கூடிய ஒரு நிறுவனம் என்பதை யாரும் மறுக்க முடியாது. அத்தகைய கூட்டுறவுத் துறை நல்ல முறையில் இயங்க ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பொதுப் பணித்துறையைப் பொறுத்தவரையில் பெரும்பாலான வேலைகளை அரசே எடுத்துச் செய்ய வேண்டும். உதாரணமாக காண்ட்ராக்டர்கள் மூலம் மன்னியாறு சீரமைப்



புத் திட்டத்துக்கு ரூபாய் 60 லட்சம் வரை செலவு செய்யப்பட்டும், அது மக்களுக்குப் பயன்படக் கூடிய முறையில் இல்லாமல், அடுத்த ஆண்டே பிரயோசனம் இல்லாமல் போய் விட்டது. அரசாங்கமே இது மாதிரிவேலைகளை எடுத்துச் செய்தால் இதனால் மக்களுக்கும் நன்மை ஏற்படும். அரசிற்கும் லாபகரமாக இருக்கும். சில சமயங்களில் பி. டபிள்யூடி. வில், ஆற்றில் தண்ணீர் வருவதற்கு கொஞ்ச நாள் முன்பு பி.டபிள்யூ.டி, மூலமாக ரிவிட்மண்ட் கட்டுவார்கள். அடுத்த வருஷமே அது இருக்காது பாழடைந்து விடும். இந்த மாதிரி வேலைகளை பொறுப்போடு கவனித்து நல்ல விதமாக மக்களுக்குப் பயன்படும் முறையில், அரசின் பணம் விரயமாகாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

வேலைவாய்ப்பைப் பொறுத்தவரையில், ஏழைப் புலவர்களுக்குப் கொடுப்பது போலவே, படித்து பல ஆண்டுகள் வேலையற்று இருக்கும் பட்டதாரிகளுக்கு நிதி உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

* திரு. வ. மு. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையின் பொது விவர்தத்தில் பங்குகொள்ள வாய்ப்புப் பெறுவதன் மூலம் என் தொகுதியின் குறைகளை இந்த மன்றத்தில் வைத்து அவற்றை கோரிக்கைகளாக ஏற்று இந்த அரசு தீர்க்கும் என்ற நோக்கத்துடன் நான் சில பிரச்சினைகளைச் சொல்ல முன் வந்துள்ளேன்.

முதலாவதாக குடிநீர்ப் பிரச்சினை ; இங்கே உள்ள உறுப்பினர்கள் அனைவரும் எல்லாத் தொகுதிகளிலும், குடிநீர்ப் பிரச்சனையை முக்கிய பிரச்சனையாக எடுத்து வைத்திருக்கிறார்கள். எனது மானாமதுரை தொகுதி முகவை மாவட்டத்தி லுள்ளது. வறட்சிக்கு பெயர் போன தொகுதி, மற்ற மாவட்டங்களிலேயே வறட்சி கொடுமையாக இருக்கும்போது. எங்கள் மாவட்டம் எப்படி இருக்கும் என்பதை கற்பனை செய்து பார்த்தாலே தெரியும். அப்படிப்பட்ட வறட்சி நிலவுகிறது. ஏற்கெனவே இயற்கையால் வழங்கப்பட்ட வளங்களைக் கூட செயற்கையின் மூலம்—அரசின் நடவடிக்கைகளின் மூலம்—பறித்து விட்டார்கள். வைகையாறு பாசனம் இராமநாதபுரத்திற்கு பயன்படும். ஆனால், அது, வைகை அணை கட்டியதின் மூலம் அது மதுரை மாவட்டத்திற்கு பயன்படுகிற நிலைமை இருக்கிறது. வைகையில் முதல் தரப்பில் பாய்கின்ற தண்ணீரை எங்கள் பகுதிக்கு பாசனமாகப் பயன்படும்.

வைகை அணைக் கட்டு கட்டிய பிறகு அந்தத் தண்ணீர் எங்களுக்கு வந்து சேரவில்லை. அதனால் அங்கு வறட்சி நிலை அதிகரித்து விட்டது.

அடுத்தபடியாக, அருப்புக்கோட்டை குடிநீர் திட்டம், சிவகங்கை குடிநீர் திட்டம் என்று இரண்டு திட்டங்களை ஏற்படுத்தி வைகை ஆற்றில் உள்ள நிலத்தடி தண்ணீர் நூறு, இரு நூறு அடி ஆழத்தில் குழாய்கள் வைத்து குடி தண்ணீர் எடுத்துச் செல்கிறார்கள். நிலத்தடி தண்ணீர் 100, 200 அடி சென்றுவிடுவதால் பம்ப் செட்ஸ் மூலம் தண்ணீர் எடுத்தால்கூட தண்ணீர் சரிவர கிடைப்பதில்லை. பம்ப் செட்ஸ் மூலம் இறைத்தால் கூட தண்ணீர் கிடைப்பது அரிதாக இருக்கிறது. குடிநீர் கிணறுகளில் தண்ணீர் கிடைப்பது என்பது கஷ்டமாக இருக்கிறது. குடிநீர் கிணறுகளில் தண்ணீர் கிடைப்பதில்லை. வைகை ஆற்றுத் தண்ணீரைத் திறந்து விட்டால் ஊற்றுகள் மூலம் தண்ணீர் பயன்படுத்தமுடியும். விசைப் பம்புகள் மூலம் தண்ணீர் எடுக்க முடியும். மதுரைக்கு மட்டும் இரண்டு மூன்று போகத்திற்குத் தண்ணீர் வருகிறது. அவர்கள் சாகுபடி செய்யும் தண்ணீரைத்தான் நாங்கள் குடிப்பதற்காகக் கேட்கிறோம். என் தொகுதியில் அருப்புக்கோட்டைக்கு அருகில் உள்ள முக்குலம், ஆளாத்தூர், புல்வாய்கரை, ஓளாத்தூர் போன்ற வானம் பார்த்த பூமிகள் உள்ள இடங்களில் தண்ணீரை பார்க்க முடியவில்லை. எவ்வளவு ஆழமாகக் கிணறுகளைத் தோண்டினாலும் உப்புத் தண்ணீர்தான் தென்படுகிறது. அதை மக்களால் பருகமுடியவில்லை. ஆகவே அருப்புக்கோட்டைக்குச் செல்லும் குடிநீர் அந்தப் பகுதிகளுக்கும் பயன்படும் அளவில் அங்குள்ள குடிநீர் பிரச்சனைக்கு தீர்வு காணமுடியும் என்று நம்புகிறேன்.

அடுத்தபடியாக, மானாமதுரை ஏறக்குறைய 20,000க்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட ஒரு டவுன் பஞ்சாயத்து. அங்கு மருத்துவமனையே கிடையாது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். அங்கு நமது அரசு ஒரு மருத்துவமனையை ஏற்படுத்தி அங்குள்ள மக்களுக்கு மருத்துவ வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என் தொகுதியில் சாலைப் போக்குவரத்து என்பது அதிகமாக இல்லை. அங்கு சாலைகளை பார்ப்பதே அரிது. பஞ்சாயத்துக்கள் மூலம் போடக் கூடிய இணைப்புச் சாலைகள் மூலம் ஓரளவிற்கு மாட்டு வண்டிகள் செல்வதற்குப் பயன்படுகிறதே தவிர நவீன வாகனங்கள் செல்ல முடியாத நிலையில் இருக்கிறது, அங்கு பஸ் போக்குவரத்து ஏற்படுவதற்கான நிலைமை இல்லை. அதற்கு பொறுப்பு இந்த அரசா அல்லது அங்குள்ள மக்களின் குறைகளை எழுப்பாமல் இருந்துவிட்டார்களா என்பது ஒரு கேள்விக்குறியாக இருக்கிறது. அங்குள்ள மக்கள் அறியாமையில் உள்ள மக்கள். அவர்களுக்கு வாக்குச் சாவடிக்குச் சென்று வாக்களிக்கத் தெரியுமே தவிர அவர்களுக்கு கோரிக்கைகளை அல்லது அவர்களது குறைகளை எழுப்பத் தெரியாது.

சர்க்கரை ஆலை ஒன்று சிவகங்கை தாலுக்காவில் நிறுவ அரசு





கவனத்தில் இருப்பதாகத் தெரிகிறது. திருப்புவனம் பகுதியில் ஐயாயிரம் ஏக்கருக்கு மேல் கரும்பு பயிராகிறது. கரும்பு நல்ல முறையில் விளையும் பகுதியில் அந்த சர்க்கரை ஆலையை வைத்தால்தான் அது லாபகரமாக இயங்கும். அதையும் செய்ய வேண்டும். அடுத்தபடியாக, ஹரிஜனங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவதில் மிகக் காலதாமதம் ஏற்படுகிறது. அந்த காலதாமதத்திற்குக் காரணம் அரசு நடைமுறையில் உள்ள சிக்கல்கள்தான். ஒரு கிராமத்தில் வீட்டுமனைப் பட்டா வேண்டுமென்று மனுக் கொடுத்தால் அதை எடுத்துக் கொள்ள ஐந்தாண்டுகளாகின்றன. காலதாமதம் ஏற்படுவது தவிர்க்கப்படவேண்டும்.

[பிற்பகல் 1–20]

எடுத்துக்கொண்டாலும், ஹைகோர்ட் வரையிலும் போய் ஸ்டே வாங்கி விடுகிறார்கள். இது முடிவதற்கு 10 ஆண்டுகள் ஆகி விடுகிறது. அப்படியென்றால் தாழ்த்தப்பட்ட மக்கள் எப்படி வீடுகளை கட்டிக்கொள்ளமுடியும். இப்படி வீடுகளை கட்டவேண்டும் என்றால் பத்து ஆண்டுகள் ஆகும் என்றால், என்ன நியாயம், என்ன ஜனநாயகம், மக்கள் நம்மைப்பற்றி என்ன நினைப்பார்கள், மக்களுக்கு நம் மீது நம்பிக்கை இருக்குமா என்பதை நாம் சிந்தித்துப்பார்க்கவேண்டும். வீட்டு மனைக்காக மனு போட்டு பல ஆண்டுகள் ஆகியும் பட்டா தரப்படவில்லை. அது மட்டுமல்ல, இருக்கின்ற இடத்தில் சிறு வீடுகளையும் போட்டுக்கொள்ள முடிவதில்லை. இரண்டு சென்ட், ஐந்து சென்ட் என்று தனியாக அவர்களுக்கு கொடுத்துவிட்டால் மட்டும் அவர்கள் எப்படி வீடுகளை கட்டிக்கொள்வார்கள் என்பதை மிகவும் அழுத்தத்துடன் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். வீடுகட்டிக்கொடுக்க அரிசன வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக ஒரு பிளாக்குக்கு இரண்டு கிராமங்களில் தேர்ந்தெடுத்து வீடுகளை கட்டிக் கொடுத்து வந்தார்கள். அப்படியானால் விடுபட்டபோன கிராமங்கள் எல்லாம் என்ன ஆவது ? அவர்கள் எல்லாம் வீடு இல்லாமல் தவிக்க வேண்டுமா ? அரிசனங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று எல்லோரும் சொல்லுகிறார்கள். சட்டமன்றத்திலும் எல்லா உறுப்பினர்களும் அரிசனங்கள் முன்னேற வேண்டும் முன்னேற வேண்டும் என்று சொல்லுகிறோமே தவிர, உண்மையில் அரிசனங்கள் முன்னேறியதாகத் தெரியவில்லை. இதை நான் சபையில் சொல்லுவதற்காக மன்னிக்கவேண்டும்.

அடுத்தபடியாக; திருப்புவனத்தில் மகளிர் பள்ளி திறக்கவேண்டும் என்று சொல்லப்பட்டு பள்ளியும் திறக்கப்பட்டது. ஆனால் போதுமான மாணவிகள் வரவில்லை. சுற்றியுள்ள பல கிராமங்களிலிருந்தும் பெண்கள் வரவேண்டும். அதற்கு அங்கு போக்குவரத்து வசதி கிடையாது. பெண்கள் நடந்து வரவேண்டுமென்றால்

என்ன ஆகும் என்பதை சொல்ல வேண்டிய தேவையில்லை. பெண்கள் முன்னேற வேண்டும் என்றுதான் இப்படிப்பட்ட வாய்ப்பை அளிக்கின்றோம். ஆகையால் வசதிகளும் அளிக்க வேண்டும். அந்த முறையில் அங்கு ஒரு மகளிர் விடுதியை ஏற்படுத்தி, அதற்குரிய எல்லா வசதிகளையும் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எங்கள் தொகுதியில், அதிகமாக வேலை வாய்ப்பு எதுவும் இல்லாத காரணத்தால், கடந்த மூன்று ஆண்டுகளாக மக்கள் மிகவும் அவதிக்கு ஆளாகியிருக்கின்றார்கள். அங்கு காட்டுகருவேலம் மரங்களை கரியாக்கி அந்த கரியை கொண்டு வந்து விற்று தனது கருகிய குடலை கழுவிக் கொண்டிருக்கிறார்கள். அந்த அப்பாவி மக்களுக்கு எந்தவிதமான வாய்ப்பும் இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறது. அங்குள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கின்ற முறையில் அங்கு தொழிலை ஏற்படுத்த வேண்டும், அப்படி செய்தால்தான் அங்குள்ள மக்களுக்கு மூன்றுவேளை சோறு இல்லாவிட்டாலும் ஒரு வேளை சோறாவது கிடைக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

திரு. வ. துலுக்காணம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கை மீது பேச வாய்ப்பு தந்தமைக்கு என் நன்றியை தங்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன். தாழ்த்தப்பட்ட மக்களுக்காக இந்த அரசு பதவி ஏற்றிருக்கின்றது. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அளிக்கப்படும் வட்டியில்லாக்கடன் என அரசு அறிவித்து விட்டு சொத்து ஜாமீன் கேட்கின்றார்கள். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு குடியிருப்பு மனைகளே கிடையாது. அப்படியிருக்கும்போது ஜாமீனுக்கு அவர்கள் எங்கே போவார்கள். ஆகவே சொத்து ஜாமீன் கொடுக்க வேண்டும் என்றிருப்பதை நீக்கிவிட்டு, தனி நபர் ஜாமீன் கொடுத்தால் போதும் என்று சட்டத்தை திருத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தாழ்த்தப்பட்ட மக்களுக்காக டாக்டர் கலைஞர் அவர்கள் கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு ஊக்கம் அளித்தார்கள். அரசு புறம்போக்கு நிலங்களை கொடுத்து வந்தார்கள். பட்டாக்களும் கொடுத்து வந்தார்கள். அதே போன்று குடியிருப்பு இல்லாத அரிசன மக்களுக்கு வீடுகள் கட்டி கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அத்துடன் அரிசனங்களுக்கு இப்போது கொடுக்கப்படும் 18 விழுக்காடு சலுகையை 25 விழுக்காடு என்று உயர்த்த வேண்டும் என்று அரசை கேட்டுக் கொள்கிறேன். உளுந்தூர்பேட்டை பகுதியில் எந்த விதமான முன்னேற்றமும் இல்லாமல் இருக்கிறது. தென்னார்காடு மாவட்டத்தில் முக்கியமான இடமாகிய உளுந்தூர்பேட்டையின் முன்னேற்றகரமான பல காரியங்களைச் செய்யவேண்டும்.





தியாகதுருகம் யூனியனில், மினி பஸ் ரூட்டும் நரிபாளையம், குன்னத்தூர், உளுந்தூர்பேட்டை ஆகிய இடங்களுக்கு ஒரு மினி பஸ் விட ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

இதேபோல், இன்றைக்கு கிராமங்களை எடுத்துக்கொண்டால், பல கிராமங்களில் பள்ளிக்கூடங்களே இல்லாமல் இருக்கின்றது, குறிப்பாக, தியாகதுருகம் யூனியனில் வாழவந்தான்குப்பம் என்ற கிராமத்தில் பள்ளிக் கட்டிடம் கட்டி பாதியிலேயே கடந்த இரண்டு வருடங்களாக இருக்கின்றது. இதை யூனியனிலுள்ள அதிகாரிகளிடம் சொன்னபோது, அவர்கள் சரிவர பதில் சொல்வதில்லை. தக்க நடவடிக்கை எடுக்க மறுக்கிறார்கள். அதைப் போலவே, பரிந்தல், புகைப்பட்டி, மலையனூர், மழவராயனூர் போன்ற பல கிராமங்களில் பள்ளிக்கூடக் கட்டிடமே இல்லாமல், பள்ளிகள் நடத்தப்பட்டு வருகின்றன. பள்ளியே இல்லாத கிராமங்கள், தியாகதுருகம் யூனியனிலே மேட்டுக்குப்பம், கொங்கராய பாளையத்திற்கு பக்கத்து கிராமம் ஆகியவைகளிலே உள்ளது. பள்ளியே இல்லாத கிராமங்கள் இருக்கக்கூடாது என்று நினைக்கும் இந்த அரசு, இதற்குத் தக்க நடவடிக்கை எடுத்து, பள்ளிகள் திறக்கப்படவேண்டுமென்றுகேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய உளுந்தூர்பேட்டைத் தொகுதியிலே பல ஏரிகள், ஆறுகள் இருக்கின்றன. அவைகளை இணைப்பதற்கான பாலங்களோ ரோடுகளோ இல்லை. சித்தனூர் கிழக்குப் பகுதி, மேற்குப் பகுதி கிராமம் இணைய ஒரு பாலம் கட்டவேண்டும். அதே போல், விருகாவூரிலிருந்து கள்ளக்குறிச்சி மெயின் சாலையை இணைக்கும் குறுக்குச் சாலையில் ஒரு பாலம் போட வேண்டும். அதே போல், உச்சிமேடு, உடையாநாச்சியில் ஒரு பாலமும், வரஞ்சகம் கிராமத்தை இணைக்க கோமுகி நதியில் ஒரு பாலமும் கட்ட வேண்டும். அதே போல் கூத்தகுடியில் தெற்கு பாகத்தில் உள்ள கிராமங்கள் இணையவும் ஒரு பாலம் கட்டவேண்டும். இந்தப் பாலங்கள் அனைத்தையும், உடனடியாகக் கட்டவேண்டும். கிராமங்களுக்கு சாலைவசதிகள் செய்யப்படும் திட்டத்தில் இவைகளைச் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். உளுந்தூர்பேட்டை யூனியனில் பல கிராமங்களில் இணைப்புச் சாலைகள் இல்லாமல் இன்னும் கஷ்டப்படுகிறார்கள். குறிப்பாக, குன்னத்தூர், நரிப்பாளையம், அத்திப்பாக்கம், வடமாம்பாக்கம், கிளியூர், பில்ராம்பட்டு, தேன்குணம் போன்ற இன்னும் பல கிராமங்களில் இந்த நிலைமை உள்ளது. ஆகவே, கிராமச் சாலைகள் திட்டத்தின்கீழ் தக்க நடவடிக்கை எடுத்து, சாலைகள் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக, உளுந்தூர்பேட்டையிலே ஒரு தீ அணைப்பு நிலையம் ஏற்படுத்த வேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நாட்களாக

இருந்து வருகின்றது. அதற்கு அரசாங்கம் அங்கீகாரம் தெரிவித்திருக்கிறது. அதையும் உடனடியாக அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உளுந்தூர்பேட்டையிலே உள்ள அரசாங்க மருத்துவ மனையிலே 50 படுக்கைகள் உள்ளது. ஆனால், அங்கு 5 நர்ஸ்கள் பணியாற்ற வேண்டிய இடத்திலே இப்போது ஒரே ஒரு நர்ஸ்தான் இருக்கிறார். ஐந்து நர்ஸ்கள் அதற்கு அங்கீகரிக்கப்பட்டு இருப்பதால், உடனடியாக நான்கு நர்ஸ்களை அங்கே போடவேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன். மேலும் நாட்டு செக்கு பிண்ணாக்கு, எண்ணெய்க்கு வரி விதிக்க இருப்பதாக இந்த அரசு அறிவித்திருக்கிறது. இதனால் கிராம மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, இந்த வரி விதிப்பை நீக்கிவிட வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

செருப்புத் தைப்போர், தையற் கலையில் ஈடுபடுவோர், சலவைத் தொழிலாளர், பொற்கொல்லர், கருமார், தச்சர், நீர்க் குழாய் பணியாளர், பழுதுபார்ப்போருக்கு ஊக்கமும், உதவியும் அளிக்கும்போதும், கடன் வழங்கும்போதும், அவர்களுக்கு செக்கியூரிட்டி இல்லாமல், ஜாமீன் இல்லாமல், நபர் ஜாமீனில் கடன் கொடுத்து உதவ வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிக் கொடுத்து உதவினால்தான், வேலையில்லாப் பிரச்னைக்கு குறிப்பாக தொழிற்கல்வி படித்த இளைஞர்களிடையே வேலையற்ற பிரச்னை குறையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலே, பல கிராமங்களில், பல அரிசன காலனி மக்கள் குடிநீர் கிடைக்காமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். குறிப்பாக, அசகொளத்தூர் காலனி, பூலாம்பாடி அரிசன காலனி, செருவாத்தூர் காலனி, புக்களம் காலனி போன்ற பல கிராமங்களில் தண்ணீர் வசதியே கிடையாது. அங்குள்ள மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, அரிஜன காலனிகளுக்கு குடிநீர் வழங்குவதற்கு முன்னுரிமை தந்து, இந்தத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக, இந்த பட்ஜெட்டை கன்னி பட்ஜெட் என்று சொல்கிறார்கள். கன்னியானவள் பார்ப்பதற்கு மிகவும் அழகாக அலங்காரமாக இருப்பாள். ஆனால் விஷயத்தில் ஒன்றும் இல்லாமல் போய்விடுவாள். அதேபோல், இந்த பட்ஜெட்டில் பல திட்டங்கள் அலங்காரமாக பல சொற்கள் மூலம் போடப்பட்டிருக்கிறது. ஆனால், கன்னி எப்படி கல்யாணம் செய்து, நாட்டிற்குப் பயன்படுகிறாளோ, அதைப்போன்று இந்த பட்ஜெட்டிலே உள்ள திட்டங்கள் நாட்டு மக்களுக்குப் பயன்படவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கன்னி கல்யாணமாகி, கல்யாணமானவருக்குப் பயன்படட்டும்; நாட்டிற்குப் பயன்பட வேண்டாம். (சிரிப்பு)

## 3. அறிவிப்புகள்—(தொடர்ச்சி.)

### (உ) மானியக் கோரிக்கைகளுக்கு வெட்டுத் தீர்மானங்கள் கொடுப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை விதி 156 (3)-க்கு இணங்க, 9—8—1977ஆம் தேதிவரை எடுத்துக் கொள்ளப் பெற இருக்கும் மானியக் கோரிக்கைகள் மீதான வெட்டுத் தீர்மானங்கள் இன்று (1—8—1977) பிற்பகல் 3 மணிக்குள் கொடுக்கப்பட வேண்டும்.

உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கிணங்க, ஏனைய மானியக் கோரிக்கைகள் மீதான வெட்டுத் தீர்மானங்கள் 2—8—1977 ஆம் தேதி பிற்பகல் 3 மணிக்குள் கொடுக்கவேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-30க்கு ஒத்தி வைக்கப்பெற்றது.

## 7. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

### A. Statutory Rules and Orders.

14. Notification issued in Memo. No. 31335/AMI/77-4, Agriculture, dated 18th June 1977, in regard to an amendment to the Agriculture Department Notification II-1 No. 910 of 1973, dated the 19th January 1973, published at pages 115—119 of Part II—Section 1 of the Tamil Nadu Government Gazette, dated the 7th March 1973 [Laid on the Table of the House under section 29 (4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959)].

15. Notification issued in G.O. Ms. No. 1768, Home (Transport-I), dated 17th June 1977, in regard to appointment of Karnataka Officers or the purpose of issue of tax free token on behalf of the Tamil Nadu in respect of the transport vehicles of Karnataka State covered by countersignature granted under reciprocal agreement to ply on inter-state routes between Tamil Nadu and Karnataka [Laid on the Table of the House under section 26 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (Tamil Nadu Act 13 of 1974)].

16. Notification issued in G.O. Ms. No. 1705, Home (Transport-I), dated6th June 1977, in regard to reduction of motor vehicles tax payable in respect of short wheel base buses to be operated by Thiruvalargal Pandian Roadways Corporation Limited, Madurai in Rameswaram Island in Ramanathapuram district [Laid on the Table of the House under section 26 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (Tamil Nadu Act 13 of 1974)].

17. Notification issued in G.O. Ms. No. 1292, Home (Transport-I), dated 29th April 1977, in regard to concessional rate of motor vehicles tax payable in respect of the vehicle MDJ 7208 belonging to Christian Follows up Leprosy Hospital, Santhipuram, Madurai [Laid on the Table of the House under section 26 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxtion Act, 1974 (Tamil Nadu Act 13 of 1974)].

18. Notification issued in G.O. Ms. No. 1619, Home (Transport-I), dated 28th May 1977, in regard to concessional rate of motor vehicle tax payable in respect of the vehicle MEA 3623, belonging to Mother Therasa's Sisters, Vellore [Laid on the Table of the House under sectian 26 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (Tamil Nadu Act 13 of 1974)].

*B. Reports Notifications and other papers.*

Nil.

---

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை:**

செவ்வாய்க்கிழமை, 1977, ஆகஸ்டு 2.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

கூட்டுறவு மத்திய வங்கித் தலைவர், வேலூர்.

*7 வினா :—திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) 1975-76-ல் வட ஆற்காடு மாவட்டம், வேலூரில் உள்ள கூட்டுறவு மத்திய வங்கியின் தலைவர் மீது அறிஞர் அண்ணா அவர்களின் சிலை வைப்பதற்கு டிக்கட் போட்டு முறைகேடாக வசூல் செய்தார் என்பதைப் பற்றி அரசாங்கத்திற்குப் புகார் ஏதேனும் வந்ததா ?

(இ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் :— (அ) ஆம். இது பற்றி தனி விசாரணைக் குழு அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தது.

(இ) கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் மேற்கொண்டு புலனாய்வுக்கும், குற்றவாளிகளின்மீது வழக்குத் தொடரவும் காவல் துறையிடம் இதை ஒப்படைத்தார். இது சம்பந்தமாக வங்கியின் முன்னாள் தலைவர் மற்றும் 8 நபர்கள் மீதான புகார் காவல் துறை வர்த்தக குற்றப் புலனாய்வுப் பிரிவு, குற்ற புலனாய்வுத் துறையிடம் தாக்கல் செய்யப்பட்டு புலன் விசாரணையில் உள்ளது.

திரு. எஸ். ஜே. இராமசாமி : தலைவர் அவர்களே, இந்த அறிஞர் அண்ணா அவர்கள் சிலைக்கு எவ்வளவு தொகை வசூலிக்கப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் சொல்வார்களா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கியின் மூலமாக ரூ. 5, 10, 15, 20, 25, 50 ஆகிய கட்டணங்களுக்கு ரசீது அச்சடித்து ஏறக்குறைய 1½ லட்சம் ரூபாய் வசூலிக்கப்பட்டிருக்கிறது. ஒழுங்கான கணக்குகள் இன்னும் வந்து சேரவில்லை;

திரு. வி. கே. கோதண்டராமன் : ஏற்கெனவே அரசுக்கு இது தெரிந்து அவர்கள் நடவடிக்கை எடுத்திருப்பதாகச் சொல்லப்படுகிறதே, அது உண்மைதானா? என்ன நடவடிக்கை எடுத்துள்ளார்கள் ?

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே 1965 ஆம் ஆண்டே அப்போது இருந்த அரசு அவர்கள் மீது நடவடிக்கை எடுத்துள்ளது.

திரு. எஸ். ஜே. இராமசாமி : இதிலே வங்கிகளுடைய சிப்பந்திகள் எத்தனை பேர் ஈடுபட்டிருக்கிறார்கள்? அவர்கள் மீது விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் : மத்திய கூட்டுறவு வங்கியினுடைய அலுவலர்கள் இதற்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறார்கள் என்பது தெரிய வருகிறது. ஆனால் யார், யார் எவ்வளவு பேர்கள் என்கிற புள்ளி விவரம் தெரியவில்லை. அது பற்றியும் புலனாய்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திரு. என். வரதராஜன் : கூட்டுறவுத் துறைகளை உபயோகப் படுத்தி இப்படி பல்வேறு விதமான வசூல்களில் ஈடுபடுகிற போக்கைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று அரசு இனி மேலாவது உத்திரவிடுமா ?

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் : புதிதாக ஏற்படுத்தப்பட்டிருக்கிற அரசு அதில் கவனமாக இருக்கிறது. மாவட்ட அதிகாரிகளுக்கு அது பற்றி கண்டிப்பான உத்திரவுகளை அரசு பிறப்பித்திருக்கிறது

திரு. எஸ். ஜே இராமசாமி : அந்த வங்கியின் தலைவர் எத்தனை ஆண்டுகள் பதவியில் இருந்தார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரோ எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, அதனுடைய தலைவர் பெயர் எம். வி. வடிவேலு என்பதாகும். அவர்கள் எத்தனை ஆண்டுகள் பதவியில் இருந்தார்கள் என்பது குறிப்பில் இல்லை. இந்தக் குற்றச்சாட்டு அரசின் கவனத்திற்கு வந்தபின், அவர் அந்தப் பொறுப்பில் இருந்து நீக்கப்பட்டிருக்கிறார்.

திரு. மு. அம்பிகாபதி : அந்த வங்கியின் தலைவர் மீது தற்சமயம் வழக்கு ஏதாவது பதிவு செய்யப்பட்டிருக்கிறதா? அதன் நிமித்தம் அவர் கைது செய்யப்பட்டிருக்கிறாரா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் : அந்த வங்கியில் தலைவர் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டு விசாரணை நடந்து கொண்டிருக்கிறது. கைது செய்யப்பட்டிருக்கிறாரா என்பதற்கான குறிப்புகள் என்னிடத்தில் இல்லை.

குறுகிய கால கடன்களுக்கான கால வரம்பு.

*8 வினா—திரு. எ. சுவாமிநாதஸ் : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா ?

கூட்டுறவுச் சங்கங்களின் வழியாக நெற்பயிர்செய்யும் விவசாயிகளுக்கு வழங்கப்படும் குறுகிய கால கடன்களுக்கான கால வரம்பினை ஓராண்டாக உயர்த்தும் செயற் குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா ?

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் : இல்லை.

திரு. எ. சுவாமிநாதஸ் : தலைவர் அவர்களே, நெற்பயிருக்கு மட்டும் குறுகிய காலக் கடன் 6 மாதங்களுக்கு நாம் கொடுக்கிறோம். அதனால் நெற்பயிர் சாகுபடி செய்கிற விவசாயிகளுக்கு பல இடர்கள் இருக்கின்றன. காரணம் சில நேரங்களில் கடன் கேட்டு, காலங்கடந்து கிடைக்கிறது. ஒரு மாதம் 2 மாதம் காலம் கடந்துவிட்டால், நான்கைந்து மாதம் ஆனவுடன் திரும்பச் செலுத்த வேண்டியிருப்பதனால், நெற்பயிருக்கு மட்டும் குறுகிய காலக் கடனுக்கான வரம்பினை ஓராண்டாக உயர்த்த அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் : மூன்று மாத காலத்திற்குள்ளாக வசூலிக்கப்படுகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுவது சரியல்ல. அறுவடைக்குப்பின் இரண்டு மாதங்கள் கழித்துத்தான் வசூல் செய்யப்படுகிறது. குறைந்தபட்சம் ஆறு மாதங்கள் அவகாசம் தரப்படுகிறது.

திரு. சி. கோவிந்தராஜன் : நெல் பயிரிடக்கூடிய விவசாயிகளுக்கு சில சமயங்களில் சாவியாகப் போகக்கூடிய காரணத்தால் கடன்களைக் காலாகாலத்தில் கொடுக்க முடியவில்லை. வேறு
* சில கடன்களைக் கன்வர்ட் பண்ணி அவர்களுக்கு நீண்ட காலத் தவணையாக மாற்ற முடியும். அப்படிப்பட்ட நிலை இல்லாததால் அவர்கள் கடன்களைத் திருப்பிக் கட்டாததால் அந்தப் பிரதேசம் முழுவதுமே சொசைட்டி கடன் கொடுக்கப்படாத நிலைமை இருப்பதாகத் தகவல் வந்துள்ளது. அந்த அடிப்படையில் அந்தக் கடன்களை நீண்ட காலக் கடன்களாக, குறைந்த பட்சம் ஓராண்டுக் காலமாவது நிர்ணயிப்பது பற்றி அரசு பரிசீலிக்குமா ?

[1977 ஆகஸ்டு 2

மாண்புமிகு திரு. க. உ.ரொ. எட்மண்ட் : ஓராண்டுக் காலமாக நீடிக்க அரசாங்கத்திடம் எந்தவிதமான பரிசீலனையும் இப்போது இல்லை.

திரு. ஆர். உமாநாத் : எனக்கு முன்னால் கேள்வி கேட்ட திரு. கோவிந்தராஜன் குறிப்பிட்ட பல காரணங்களுக்காக கொடுக்கப்பட்ட கடன்களைக் காலாகாலத்தில் திருப்பிக் கொடுக்க முடியாததால் அதன் விளைவாக ஜப்தி நோட்டீசுகள் போய்க் கொண்டிருக்கின்றன. தனிப்பட்ட முறையில் அப்படிப்பட்ட கேஸ்களைக் கொண்டு வந்தால் கவனிப்போம் என்று சொன்னார்கள். தனி கேஸ்கள் ஒவ்வொன்றாகக் கொண்டு வந்து டீல் பண்ணுவதை விட அட்டாச்மென்டை நிறுத்தி வைக்க வேண்டுமென்று பொது உத்தரவை அரசாங்கம் பிறப்பிக்குமா? அது எல்லா விவசாயிகளுக்கும் தெரியக்கூடிய முறையில் பத்திரிகையில் பிரசுரிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. உ.ரொ. எட்மண்ட் : உண்மையிலேயே கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத சூழ்நிலையில் இருக்கும் விவசாயிகள் அனுவாரி சர்டிபிகேட் கொடுக்கும் நேரத்தில் பரிசீலனை செய்து அவர்கள் மீது எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவேண்டாம் என்று அரசு ஏற்கெனவே உத்திரவிட்டுள்ளது.

திரு. எஸ். ஜே. இராமசாமி : குறுகிய காலக் கடனில் உரம் எவ்வளவு, கடன் எவ்வளவு என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதை மாற்றி உரமாகவே கொடுக்க அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. க. உ.ரொ. எட்மண்ட் : இது கொள்கை அளவில் முடிவு செய்ய வேண்டிய விஷயம்.

THIRU N. RAMACHANDRA REDDI: Sir, collections will be done just at the time of harvest and it is but natural that during harvest, there has been delay there. So may I request whether the Government may be pleased to extend the time of collection by at least two to three months.

மாண்புமிகு திரு. க. உ.ரொ. எட்மண்ட் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுவது போல் அறுவடை முடிந்த உடனே வசூல் செய்கிற நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொள்வதில்லை. விவசாயிகள் உற்பத்தி செய்த தானியங்களை விற்பனை செய்ய இரண்டு மாதம் அவகாசம் கொடுத்த பிறகுதான் கடன் வசூலிக்கப் படுகின்றது.

திரு. சோ. அழகர்சாமி : அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது இந்தக் கடன்களுக்கு ஒரு வருஷம் தவணை கொடுக்க வேண்டுமென்பது பற்றி அரசிடம் திட்டம் இல்லை



[1977 ஆகஸ்டு 2]

என்று சொன்னார்கள். நெல் இரு போகம் உள்ள இடங்களில் ஆறு மாதத் தவணை நிர்ணயித்தவுடன் திரும்பக் கடன் கொடுப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது. கடன் வழங்கி ஒரு வருஷத் தவணை என்று சொல்லிவிட்டால் ஒரு வருஷம் முடிந்தவுடன் கடனைச் செலுத்தி விடுவார்கள். அமைச்சர் அவர்கள் இது பற்றிக் கவனித்துப் பரிசீலிப்பார்களா?

மாண்புமிகு திரு. க.உ.ரொ. எட்மண்ட்: தற்போதே அதிகபட்சம் 9 மாத அவகாசம் தரப்பட்டிருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் குறுவை சாகுபடி முடிந்தவுடன் தாளடிப் பயிர் செய்வதால் குறுவை சாகுபடிக்குப் பிறகு 50 சதவிகிதக் கடன்தான் வசூலிக்கிறார்கள். மீதி 50 சதவிகிதம் உரங்களுக்காக ஒதுக்கிவிடுகிறார்கள், அடுத்த தாளடி சாகுபடி முடிந்து மொத்தத்தில் 9 மாதம் கழித்துத்தான் கடன்களை வசூலிக்கும் நடவடிக்கையை அரசு எடுக்கிறது.

திரு. கே. கந்தசாமி : கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகக் கொடுக்கப்படக்கூடிய கடன்கள் குறுகிய காலக் கடன், மிட் டர்ம் லோன், லாங் டர்ம் லோன் என்று மூன்று வகைகளாக இருக்கின்றன. அதை வாங்குவதில் நடைமுறையில் சிக்கல்கள் இருக்கின்றன என்பதை அரசு அறியுமா? உடனடியாக அதிகாரிகளுக்கு உள்ளூர் கர்ணம் சிபாரிசு செய்ய வேண்டுமென்று இருக்கிறது. கர்ணம் சிபாரிசு செய்வதில் வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்ற நிலைமைகள் ஏற்படுவதால் தாசில்தார் போன்ற அதிகாரிகள் உடனடியாகச் சென்று பரிசீலிக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்வார்களா? மிட் டர்ம் லோன, லாங் டர்ம் லோன் ஆகியவற்றில் பல இடங்களில் சிக்கல்கள் இருக்கின்றன. அனுவாரி சர்டிபிகேட் வாங்கிக் கொடுக்க வேண்டியிருக்

(முற்பகல் 9·10]

கிறது. மிட் டர்ம் லோனை லாங்க் டர்ம் லோனாகவும், ஷார்ட்-டர்ம் லோனை மிட் டர்ம் லோனாகவும் மாற்றினாலும்கூட 3, 4 ஆண்டுகள் ஆகி விடுகின்றன, சர்வ தேச வங்கியின் நிபந்தனையின் காரணமாக சில சங்கடங்கள் ஏற்படுகின்றன. ஆகவே இதற்காக ஒரு நிபுணர் குழுவை அமைத்து அந்தக் குழு கொடுக்கின்ற பரிந்துரையின் மேல் நடவடிக்கை எடுத்து இந்தச் சிக்கல்களை நீக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க.உ.ரொ. எட்மண்ட் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனை கவனத்தில் கொள்ளப்படும். இதைப் பரிசீலனை செய்து, ஆராய்ந்து அரசு முடிவெடுக்கும்.

திரு மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட வங்கிகள் மூலமாக இந்தக் கடன் வழங்கும்போது ரிசர்வ் வங்கியிலிருந்து கூட்டுறவு வங்கிகள், கிராம வங்கிகள் என்று

போகிறபோது வட்டி விகிதம் அதிகமாக வசூலிக்கப்படுகிறது. எனவே, மாவட்ட அளவிலே உள்ள வங்கிகளை நீக்கிவிட்டு நேரடியாக மாநில வங்கிகளிலிருந்து கிராம வங்கிகளுக்குப் பணத்தைக் கொடுத்துவிட்டால் வட்டி விகிதம் குறையும். மாவட்ட வங்கிகள் மூலமாக உள்ள அரசியல் செல்வாக்குப் பிரயோகமும் நீக்கப்படும். இந்தக் காரணங்களினால் மாவட்ட வங்கிகள் கலைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக் கொண்டபடி விவசாயிகளுக்குத் தகுதியின் அடிப்படையிலே கடன் கொடுப்பதற்கும், அதிலே அரசியல் தலையீடு இல்லாமல் பார்த்துக் கொள்வதற்கும் அரசு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரின் மற்ற யோசனைகள் அரசாங்கத்தின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எ. சுவாமிநாஸ் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது அறுவடை முடிந்து இரண்டு மாதம் அவகாசம் கொடுக்கிறோம் என்று குறிப்பிட்டார்கள். ஆனால் அப்படி அல்ல, கடன் வாங்கி, அந்தக் காலக் கெடு முடிந்தவுடனே நோட்டீஸ் அனுப்புகிறோம், நோட்டீஸ் அனுப்பி 15 நாட்கள் ஆனவுடன் ஜப்தி நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஆகவே இரண்டு மாத அவகாசம் கொடுப்பது இல்லை. ஆகவே இதைப் மறுபரிசீலனை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியபடி எந்தவிதமான புகார்களும் அரசுக்கு வரவில்லை. வந்தால் பரிசீலிக்கப்படும்.

திரு. பி. எஸ். திருவேங்கடம் : தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் சில வங்கிகளில், கூட்டுறவுச் சங்கங்களில் கடன்கள் தவணை கடந்து விடுகின்றன. ஆனால் அந்தச் சங்கத்தின் உறுப்பினர்களாக உள்ள விவசாயிகளுக்கும் தவணை கடவாத விவசாயிகளுக்கும் கடன் கொடுக்க மறுக்கிறார்கள். அவர்களுக்கு இந்தக் கடன் கொடுக்க ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : இந்தப் பிரச்னைகளிலே கடன் வழங்குவதற்குப் பெரிய சிக்கல் இருக்கிறது, பணம் வசூல் செய்து தான் ரிசர்வ் பேங்கில் கட்ட வேண்டும். இப்படி சிக்கல்கள் இருப்பது மாண்புமிகு அங்கத்தினர்களுக்கும் தெரியும். இருந்தாலும் அரசு இதைப் பரிசீலிக்கும்.



திரு. செ. சிவசாமி : குறுகிய காலக் கடன் என்பது ஒரு வருஷத்திற்குத் தான் அனுமதிக்கப்படுகிறது. ஆனால் கரும்பு போன்ற பயிர்கள் பலனுக்கு வருவதற்கு 14 மாதங்கள் ஆகின்றன, ஆகவே அந்தக் கடன்களைத் திருப்பிக் கொடுக்க 14 மாதங்கள் அல்லது 15 மாதங்கள் என்று நீடிக்க அரசு உத்திரவிடுமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு உறுப்பினருடைய யோசனை கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும்

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம் ; பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கடனைப் பொறுத்தமட்டில் பயிர் விளைச்சலுக்குப் பிறகு கொடுக்கப்படுகிறது, பயிர்கள் ஏற்றுவதற்கு முன்னதாகவே இந்தக் கடன் அளிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : அதற்கு முன்னலேதான் கடன் கொடுக்கிறார்கள்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம் : தலைவரவர்களே, அந்த மாதிரி கிடைக்கவில்லை என்று மத்திய வங்கியிலிருந்து மந்திரிக்குப் புகார் வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க.உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, அப்படிப்பட்ட புகார்கள் இந்த அமைச்சரவைக்கு இதுவரைக்கும் வரவில்லை.

திரு. ப.உ. சண்முகம் : தலைவரவர்களே, ஒரு கூட்டுறவு நாணயச் சங்கத்தில் ஒருவர் கடன் பாக்கியைச் செலுத்தாமல் இருந்தால் அவருக்கு மட்டும் கடன் கொடுக்கக் கூடாது, மீதியுள்ள உறுப்பினர்களுக்குக் கொடுக்கலாம் என்று ஏற்கெனவே இருந்த அரசு உத்தரவு போட்டிருந்தது. ஆனால் அமைச்சரவர்கள், ஒருவர் கொடுக்காவிட்டாலும் அந்தக் கூட்டுறவு நாணயச் சங்கத்தில் உள்ள அத்தனை பேருக்கும் கொடுக்க முடியாது என்று பதில் சொன்னார்கள். ஏற்கெனவே இருந்த அந்த உத்தரவுதான் அமலில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, நான் மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன கருத்தில் சொல்லவில்லை. முந்தைய அரசு எந்த நிலையிலே இருந்ததோ அதை இந்த அரசு கையாள்கிறது.

திரு. இரெ. இராசமாணிக்கம் : பேரவைத் தலைவரவர்களே, கூட்டுறவுச் சங்கம் மத்திய வங்கியிலேயிருந்து வாங்கிய கடன் முழுவதையும் திருப்பிச் செலுத்திய பிறகுதான் அந்தச் சங்கத்

ற்கு மத்திய வங்கி கடன் வழங்குகிறது. ஆகவே, கூட்டுறவுச்
சங்கங்களில் கடனைத் திருப்பிச் செலுத்திய விவசாயிகள் திரும்பவும்
கடன் வாங்க முடியாமல் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, ஒரு
விவசாயி கூட்டுறவுக் கடனைத் திருப்பிச் செலுத்திவிட்டால்
அவருக்கு உடனடியாகக் கடன் கொடுக்க அரசு ஆவன
செய்யுமா?

மாண்புமிகு திரு. க.உரொ. எட்மண்ட் : பேரவைத் தலை
வரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்கின்ற அந்த
நிலை இப்பொழுது இல்லை. விரைவில் கடனைத் திருப்பிச்
செலுத்த வேண்டிய நிலைமை ஏற்படுகிற சூழ்நிலையில், கொடுக்க
வேண்டிய தொகைக்கு, அரசு மேற்கொண்டும் கடன் வழங்க
உண்டான வசதிகளைச் செய்யும்.

திரு. துரை. கலியமூர்த்தி : பேரவைத் தலைவரவர்களே
கிள்ளை கூட்டுறவு நாணயச் சங்கத்தில் குறுகிய காலக் கடன்
பெற்று அனுவாரி சர்ட்டிபிகேட் கொடுத்தால் நீண்ட காலத்
தவணையாக மாற்றிக் கொடுப்பதாகச் சொன்னார்கள். அது மார்ச்
முடிவோடு முடிந்து விடுகிறது. இப்பொழுது மாற்றிக் கொடுப்
பதற்கு இல்லை. இப்பொழுது குறுகிய காலப் பயிருக்கு குறுவை
பயிருக்குக் கடன் கொடுப்பதை நிறுத்தி வைத்திருக்கிறார்கள்.
அதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர
வர்களே, இது பொதுவான ஒரு பிரச்னை. கிள்ளை கூட்டுறவுச்
சங்கத்தைப் பொறுத்த மட்டில் தனியாகக் கேள்வி போட்டால்
பதில் சேகரித்துச் சொல்வதற்குத் தயாராக இருக்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : பேரவைத் தலைவரவர்களே
கூட்டுறவுக் கடன்களை வசூல் செய்யும் அதிகாரிகள் காரிலேயும்,
ஜீப்பிலேயும் போகிறார்கள், அப்படிப் போகும்பொழுது ஏற்
படுகின்ற செலவுகளுக்கும் விவசாயிகளிடமிருந்து வசூல் செய்
யப்படுகிறது. அதனால் ஏற்கெனவே கஷ்டப்படுகின்ற விவசாயி
கள் இன்னும் படுபயங்கரமான விதத்தில் அதிகமான பணத்தைச்
செலுத்த வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு ஆளாகிறார்கள். இப்
படிப்பட்ட சூழ்நிலைகளை மாற்றியமைக்க அரசாங்கம் தயாராக
இருக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர
வர்களே, குறிப்பிட்ட சம்பவம் பற்றி மாண்புமிகு உறுப்பின
ரவர்கள் எந்தச் சமயத்தில் எந்த அதிகாரி அப்படி நடந்து
கொண்டார் என்பதைத் தெரிவித்தால் தகுந்த நடவடிக்கை
எடுக்கப்படும்.



ஆயில் இஞ்சின்கள் வாங்க மானியம்.

*9 வினா : திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு உணவு-
கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினா
விற்கு விடையளிப்பாரா—

விவசாயத்திற்குப் பயன்படுத்தும் ஆயில் இஞ்சின் வாங்க
அரசு அளித்து வந்த மானியம் மீண்டும் கிடைக்க என்ன நட
டிக்வகை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : டீசல் என்ஜின்
வாங்க மானியம் அளிப்பதற்கான திட்டத்தை மீண்டும் முழு
அளவில் செயல்படுத்துவதற்கான குறிப்பு எதுவும் அரசின்
பரிசிலனையில் இல்லை.

ஆனால் பிரதம நிலவள வங்கிகளால் மின்சார என்ஜின்கள்
வாங்குவதற்காக கடன் கொடுக்க சேகரிக்கப்பட்ட சில மனுக்
களில் குறிப்பிட்ட கிணறுகள் மின் வழங்கு கருவிகளுக்கு (Trans-
former) 200 மீட்டர் தூரத்திற்கு வெளியே உள்ளதால்
அவைகட்கு மின் இணைப்புத் தருவது சிக்கனமற்றதென மின்வாரி
யம் இணைப்புத் தர மறுத்துவிட்டது. இம்மனுதாரர்கட்கு
மட்டும் மின் இன்ஜின்கள் வாங்குவதற்குப் பதிலாக டீசல் என்
ஜின் வாங்க மானிய திட்டத்தைச் செயல்படுத்தலாமா என்
னும் குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளது.

திரு. மா. மணிமாறன் : மாமன்றத் தலைவரவர்களே, ஆயில்
என்ஜின் வாங்கும்பொழுது இப்பொழுது தஞ்சை மாவட்
டத்தை பொறுத்த வரையில் பலவிடங்களில் பில்டர் பாயிண்ட்
டுக்குக் குறைவாகத் தண்ணீர் இருக்கிறது. நாற்றுப் பயிருக்கு
உதவும் வகையிலே டீசல் என்ஜின் பயன்படுகிறது. அதை
வாங்கும் நேரத்தில் முந்தைய அரசு மானியத் தொகை
கொடுத்து வந்தது. இப்பொழுது அது நிறுத்தப்பட்டிருக்கிறது.
அந்த மானியத் தொகையைத் தந்தால் குறுவைப் பயிருக்கு
நாற்று நடுவதற்கு வசதியாக இருக்கும். இதை அரசு
கவனிக்குமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலை
வரவர்களே, மின்சார சக்தி கொண்டு என்ஜின்களைப் பொறுத்தக்
கூடிய வசதியுள்ள இடங்களில் மின்சார வாரியம் சிபாரிசுகளைச்
செய்தால் அப்படிப்பட்ட இடங்களில் டீசல் என்ஜின்களைப்
பொருத்த எந்தவிதமான திட்டமும் அரசிடம் இல்லை.

திரு. கு. ரமணி : தலைவரவர்களே. இந்த டீசல் என்ஜின்
களைப் பொருத்துவது என்பது சௌகரியமாக விவசாயிகளுக்கு
இருக்குமேயானால் ஏற்கனவே இருந்து வந்த ஒரு சலுகையை

நிறுத்தாமல் தொடர்ந்து நடத்துவதற்கும், அதன்மூலம் விவசாயி கள் மட்டுமல்ல, ஆயில் என்ஜின்களை ஏராளமாக உற்பத்தி செய் யும் சிறு என்ஜினீயரிங் தொழிலில் வேலையில்லாத் திண்டாட் டத்தையும் தவிர்க்கலாம்; வேலை வாய்ப்பைப் பெருக்கலாம் என்பதையும் கணக்கில் எடுத்துக் கொண்டு விவசாயிகளுக்கு மானியம் வழங்க அல்லது குறைந்த தவணையில் நீண்ட காலக் கடன் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா ?

[முற்பகல் 9-20]

மாண்புமிகு திரு க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலை வர்வர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனை கருத்திலே கொள்ளப்படும்.

திரு யா. சை. மு. யூசுப் : தலைவரவர்களே, தற்பொழுது மின்சாரத் தட்டுப்பாட்டின் காரணமாகப் பம்ப் செட்கள் சரியாக இயங்கவில்லை. அந்தச் சூழ்நிலையில் சிங்கிள் பர்ப்பஸ் லோன் என்று சொல்லி, ஆயில் இன்ஜின்களை நிலவள வங்கிகள் மூலம் கொடுக்கத் திட்டமிருக்கிறதா ?

மாண்புமிகு திரு க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, அப்பேர்ப்பட்ட திட்டம் எதுவும் தற்பொழுது அர சிடத்திலே இல்லை.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவரவர்களே, கூட் டுறவு நிலவள வங்கி மூலம் ஒரு டீசல் இன்ஜின் கொடுக்கிறார் களென்று சொன்னால், அதனுடைய அரசாங்க மதிப்பு சுமார் ரூ. 4,000 என்றிருக்கிறது. ஆனால், அது வெளியிலே ரூ. 3,000-க் குக் கிடைக்கிறது என்று சொல்லப்படுகிறது. இந்த நிலையில் ஒருவருக்கு ரூ. 1,000 மானியயாகக் கொடுக்கிறோம் என்று சொல்லப்படுகிற தொகை, விவசாயிக்குச் செல்லவில்லை என்று சொல்லப்படுகிற கருத்தை அரசு பரிசீலிக்குமா, விளக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : அரசு மேற் கொண்டிருக்கிற திட்டத்திற்கும் இந்தக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை.

திரு. சி. கோவிந்தராசன் : தலைவரவர்களே, பம்ப் செட்டு களுக்கு மின் இணைப்புக் கொடுப்பதில் காலதாமதம் ஆவதாலும், பல நேரங்களில் அது கிடைக்காமலிருக்கிற சூழ்நிலை இருப்ப தாலும் பயிர்கள் பூராவும் பாழாகக் கூடிய நிலைமையிருக்கிறது. எனவே, ஆயில் இன்ஜின்கள் பயன்படுத்த, பழைய அரசு மானியம் கொடுத்தது. அது இப்பொழுது நிறுத்தப்பட்டது என்று கருது கிறேன். அதனை மீண்டும் கொண்டு வருகிற திட்டத்தை அரசு செயலாக்குமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, டிரான்ஸ் பார்மர்கள் இருக்கிற இடத்திலேயிருந்து 200 மீட்டர் தூரத்திற்கு மேலேயிருந்தால், அங்கே டீசல் என்ஜின் கொடுக்கிற திட்டத்தை அரசு யோசித்து வருகிறது. டிரான்ஸ் பார்மர்கள் இருக்கிற இடத்திலேயிருந்து 200 மீட்டர் தூரத்திற்குள்ளே இப் படிப்பட்ட இன்ஜின்களைப் பொருத்த வேண்டிய நிலைமை ஏற் பட்டால் மின் வாரியத்தின் மூலமாகச் செய்ய வேண்டும். மாண்பு மிகு மின்சாரத் துறை அமைச்சரவர்கள் இங்கே இருக்கிறார்கள், அவர்கள் அதைக் கவனத்தில் கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

திரு. எஸ். ஜே. இராமசாமி : தலைவரவர்களே, இப்பொழுது மத்திய வங்கியிலும் மற்ற வங்கிகளிலும் கடன் வாங்கி, பம்ப் செட்கள் வைத்து, மின் இணைப்புத் தராமல் சும்மாவே இருக் கிறது. அதற்குக் கூட வசூல் செய்ய அரசாங்கம் ஆணை பிறப் பித்திருக்கிறதா ? இப்பொழுது வசூலை நிறுத்தி வைக்க வேண்டு மென்பதற்கு, புதிய இரத்தத்தைப் பாய்ச்ச வேண்டுமென்று சொல்கிற, கூட்டுறவுத் துறை அமைச்சரவர்கள் பதில் சொல் வார்களா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு உறுப் பினரவர்களுடைய இந்தக் கேள்விக்கு, பொதுப் பணித்துறை அமைச்சரவர்கள் தான் பதில் சொல்ல வேண்டும்.

திரு. எ. சுவாமிதாஸ் : தலைவரவர்களே, மின்சார பம்ப் செட்டுக்கு நாம் கடன் வழங்குகிறோம். அதே நேரத்தில், ஆயில் பம்ப் செட்டுகளுக்குக் கடன் வழங்க மறுக்கிறோம். காரணம் என்ன என்பதை அமைச்சரவர்கள் விளக்குவார்களா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலை வரவர்களே, பிரதம நிலவளவங்கிகள் டீசல் இன்ஜின் வாங்கு வதற்குக் கடன் வழங்குகின்றன. ஆனால் டீசல் இன்ஜின் வாங்கு வதற்கு அரசு அளித்துவந்த மானியம் மட்டும் நிறுத்தப் பட்டுள்ளது.

*Prodatturpet-Kancheepuram bus route.*

* 10. *Q.*—Thiru A. EAKAMBARA REDDY: Will the Hon. the Minister for Transport be pleased to state that the reason for not resuming bus service on route No. 212 between Prodatturpet and Kancheepuram (via) Pallipet which was abruptly stopped?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : காஞ்சீபுரத்திலிருந்து புரோதட்டூர்பேட்டை இடையில் உள்ள (தடம் எண்: 212-ல்) தடத்தில் மீண்டும் பல்லவன் போக்குவரத்துக் கழக புறநகர்

பிரிவால் 15–7–1977 முதல் பேருந்து ஓட்டப்பட்டு வருகிறது. இதற்குமுன் இத்தடத்தில் சட்ட ரீதியாக சில இடைஞ்சல்கள் ஏற்பட்டதால் பேருந்து ஓட்டுவது இயலாமல் இருந்தது.

Thiru A. EAKAMBARA REDDY: Mr. Speaker, Sir, while thanking the Hon. Minister for Transport for resuming the bus service on route No. 212 between Prodatturpet and Kancheepuram, may I request him to make arrangements for that route bus to touch Vanganur?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, இதுபோன்று எமர்ஜென்ஸி காலத்தில் கட்ட பொம்மன் கார்ப்பரேஷன் 30க்கும் அதிகமான ரூட்டுகளை திடீரென்று நிறுத்தி இருக்கிறார்கள். அவற்றைத் திரும்பவும் ஓட்டுவதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் இதற்குத் தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. எஸ். ஜே. இராமசாமி: 212-இ என்று ஒரு ரூட் இருக்கிறது. அது இப்போது நின்று போயிருக்கிறது. அதை புதிய தடங்களில் விடுவதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் இதற்கும் தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, கோவை போன்ற பெரிய நகரங்களில் இரவு 11-00 மணி 11-30 மணிக்கு மேல்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக்கேள்வியை ஒட்டி துணைக் கேள்வி போடுங்கள்.

திரு. கு. ரமணி: இந்தக் கேள்வியும் இதே கேள்விக்குட்பட்டதுதான், டிரான்ஸ்போர்ட்டு சம்பந்தமானதுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குறிப்பிட்ட அந்த ரூட்டைப்பற்றிய துணைக் கேள்வி போட முடியுமா என்று பாருங்கள்.



திரு. கு. ரமணி: இந்த ஒரு ரூட்டைப்பற்றி ரொம்பக் குறுகலாகக் இக்கேள்வி இருக்கிறது. ஆதலால் வேறு கேள்வி வந்தது. வேறு கேள்வி வந்திருப்பதால் இந்த அமைச்சர் சம்பந்தப்பட்ட —வேறு ரூட் சம்பந்தப்பட்ட கேள்வியைப் போடுகிறேன். நான் வேறு விஷயத்தைக் கேட்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஏகாம்பர ரெட்டியார் அவர்கள், அந்த ரூட்டிலே ஏற்பட்ட சட்ட சிக்கலைப் பற்றி எழுப்பிய கேள்வி. அதை ஒட்டிய வேறு துணைக் கேள்வியைக் கேளுங்கள். உறுப்பினர் வேறு இடத்தைப் பற்றிக் கேட்டால் அமைச்சரிடத்தில் தகவல் இல்லாமல் இருக்கலாம். நேரத்தை வீணாக்காமல் கேளுங்கள்.

திரு. கு. ரமணி: ரூட்டு என்பது ஒரு 'காமன்' விஷயம் என்கிற நிலைமை இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் ரூட்டிலே இருந்து ரூட்டு மாறுகிறீர்கள். அதே ரூட்டிலே இருங்கள்.

திரு. கு. ரமணி: நான் குறிப்பிட்ட ரூட் பஸ் ஓட்டுவதைப் பற்றிக் கேட்க வேண்டுமென்று சொன்னால், கேள்வி கேட்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. திருவேங்கடம்.

திரு. பி. எஸ். திருவேங்கடம்: என்னுடையதும் வேறு கேள்வி.

திரு. எஸ். ஜே. இராமசாமி: தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் 212-இ பற்றி கேட்டேன். காஞ்சிபுரத்திலிருந்து அம்மையார் குப்பத்திற்கு விடப்பட்டது. இப்போது அது நின்றுவிட்டது. அது மீண்டும் ஓட்டப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: 212 வழித் தடம் பற்றித்தான் முதல் கேள்வி போடப்பட்டது. உறுப்பினர் அவர்கள் கூறுகின்றதைப் பற்றி எந்தவிதமான தகவலும் இல்லை. தகவல் வந்தால் கவனிக்கப்படும்.

திரு. என். வரதராஜன்: இந்த பஸ் ரூட்டுகளை எல்லாம் 6 மாதம் ஒரு வருஷம் பஸ்கள் ஓடிய பிறகு கூட திடீரென்று பஸ்களை நிறுத்தி விடுகிறார்கள். ஒன்று லாபம் வரவில்லை என்று காரணம் சொல்கிறார்கள். சில பகுதிகளில் தேவையான

ஊனங்கள் இல்லை என்று சொல்கிறார்கள். குறுகலான பாதைகளில் வசதியில்லாத மக்களுக்கு லாபத்தை மட்டும் கருதாமல் பஸ்களை விட அரசு முயற்சி எடுக்குமா? அந்தக் கொள்கையை அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: அவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களின் ஆலோசனை பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. மு. அம்பிகாபதி: அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்த வழித் தடத்தில் விடுவதில் சட்ட சிக்கல் இருக்கிறது என்று கூறினார்கள். அரசாங்கத் துறையைச் சார்ந்த பஸ்களை விடு வதற்கு அந்தச் சட்டம் கொஞ்சம் ஒதுங்குகின்ற அளவுக்கு நாம் செய்தால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: இந்தக் குறிப்பிட்ட வழித் தடத்திலிருந்து மகாபலிபுரத்திலிருந்து காஞ்சிபுரம் வழி யாக பள்ளிப்பட்டுக்கு 4 அரசு பேருந்துகள் தற்காலிக உரி மம் பெற்று ஓட்டப்பட்டு வந்தன. இந்தத் தடம் பயணிகளுக்கு வசதியாக அமையாத காரணத்தால் இதனை காஞ்சிபுரத்தில் இருந்து புரோதட்டூர்பேட்டை வரை 14-5-1973-ல் இருந்து நீடிக்கப்பட்டு பேருந்துகள் விடப்பட்டு வந்தன. தற்காலிக உரிமம் பெற்று அதிக காலம் இயங்கி வந்ததை மண்டல போக்குவரத்து அதிகாரி ஒப்புக் கொள்ளாததால், 17-7-1976 அன்று அதா வது தற்காலிக உரிமம் முடிவு அடையும்போது தற்காலிக உரிமம் பெற்று இயங்கப்பட்டு வந்த இந்த பேருந்துகளெல்லாம் ஓட்டப் படாமல் கைவிடப்பட்டன.

கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம்.

*11. வினா: திரு. எ. சுவாமிதாஸ்: மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா?

கட்டப்பொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் 1976–77 ஆம் ஆண்டின் நிகர லாபம் அல்லது நட்டம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: 1976–77 ஆண்டின் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் நிகர லாபம் ரூ. 15·64 லட்சம் என தணிக்கைக்கு முன் உள்ள கணக்குப்படி மதிப்பிடப்பட்டிருக்கிறது. 31—3—1976-வரை இந்தக் கழகத் திற்கு ஏற்பட்ட நட்டம் ரூ. 140·84 இலட்சமாகும்.

திரு. எ. சுவாமிதாஸ்: தலைவர் அவர்களே, கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகமாக மாற்றுவதற்கு முன்னாலே, இது கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு போக்குவரத்துக் கழகமாக



இயங்கியபோது மகத்தான லாபம் வந்ததாகச் சொல்லப்பட்டதே. இப்போது அத்தகைய லாபம் வராததற்கு என்ன காரணம் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: இக்கழகம் 1974-ம் ஆண்டு சனவரி திங்கள் 1-ம் நாளில் செயல்படத் தொடங்கியது. 1974-75 ஆம் நடப்பாண்டில் ரூ. 64·99 லட்சம், 1975–76-ம் ஆண்டில் 75·85 லட்சம் நட்டத்தில் இயங்கியது. இந்த நட் டத்திற்குக் காரணம், பரிசீலனையில் இருக்கிறது.

[முற்பகல் 9-30]

திரு ஆர். உமாநாத்: தலைவரவர்களே, கட்டபொம்மன் போக்குவரத்தில் வேலை செய்யக்கூடிய ஊழியர்களின் கோரிக்கைக்குத் தீர்வு காணாவிட்டால், இந்த நட்டம் அவர்கள் வேலைநிறுத்தத்தால் அதிகமாகும். ஆகையால் அந்தக் கோரிக்கை களை சீக்கிரம் பைசல் செய்ய என்ன நடவடிக்கை அரசு எடுத்து இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு சி. பொன்னையன்: அவைத் தலைவரவர்களே, கட்டபொம்மன் கழகத்தின் ஊழியர்களின் கோரிக்கைகள் அர சின் பரிசீலனையில் இருந்து வந்தபோதிலும், அந்த நஷ்டத்திற்குப் பிறகு ஊழியர்கள் கோரிக்கை விட்டதற்குப் பிறகு, 1977–ம் ஆண்டு 15 லட்சத்து 64 ஆயிரம் ரூபாய் லாபத்தில் அது ஓடிக் கொண்டு இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன அந்தக் கணக்கில் ஏறத்தாழ 15 லட்சத்திற்கும் அதிகமாக லாபம் வந்து இருக்கிறது என்று கூறினார்கள் இந்த ஓராண்டுக் காலத்தில் ஏறத்தாழ 800-க்கும் அதிகமான தொழிலா ளர்களை காரணம் இன்றி அந்தக் கார்ப்பரேஷன் வேலை நீக்கம் செய்து இருக்கிறது. அவர்களது கோரிக்கைகளும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு இருக்கிறது. அவர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டு இருக்கிறார்கள். அது சம்பந்தமாக அரசு என்ன முடிவு எடுத்து இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: அவைத் தலைவரவர் களே, கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்திலே 10 சத வீதம் உபரி பேருந்துகளும், 1976-மார்ச்சு மாதத்தில் 447 உபரி பணியாளர்களும் கணக்கில் இருந்தார்கள். அதிகப் படியான ஊழியர்கள் சிலரை அக்கழகம் ஆட்குறைப்பு செய்தது. அதன் பிறகு 101 உபரி பணியாளர்கள் 1977-ம் ஆண்டில் ஆட்குறைப்பு செய்துள்ளார்கள். உறுப்பினர் கூறிய கோரிக்கைகளும் அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

<u>திரு. சோ. அழகர்சாமி:</u> தலைவரவர்களே, இந்தக் கட்டபொம்மன் போக்குவரத்திலே அவசர கால நிலையை ஒட்டி பல தொழிலாளர்கள் அதிகாரிகளுக்கு ஏதோ ஒருவகையில் பிடிக்காது இருந்த காரணத்தால் வேலை நீக்கம் செய்யப்பட்டதன் காரணமாக போதிய ஆட்கள் இல்லாததால் எங்கே பார்த்தாலும் கட்டபொம்மன் பஸ் அதிகமான இடங்களில் ரிப்பேர் ஆகி இருக்கிறது. அது தான் அதிகமான நஷ்டத்திற்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது. அந்தக் கார்ப்பரேஷன் சீராக நடப்பதற்கு வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை அளிக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா?

<u>மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:</u> அவைத் தலைவரவர்களே, நட்டத்தைக் குறைப்பதற்கான வழிவகைகள் என்னென்ன தேவையோ அவற்றை அரசு பரிசீலனை செய்து வருகிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>திரு கே. கந்தசாமி:</u> பேரவைத் தலைவரவர்களே, இந்தக் கேள்வி கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்ததாக இருந்தாலும் இதில் ஏற்படுகிற நட்டத்தைப் போல், வேறு பல கார்ப்பரேஷன்களிலும் நட்டம் ஏற்பட்டுக் கொண்டே இருக்கிறது. இன்றைய அரசின் கொள்கை, பொதுப் பணியில் இருக்கிற ஸ்தாபனங்களை அரசு மேற்கொண்டு சோசலிச திட்டத்தை அமலாக்க வேண்டும் என்பதுதான். இப்படி பொதுத்துறையில் இருக்கிற ஸ்தாபனங்களில் நட்டம் ரிக்கரிங் அண்டு கன்டினியூஸ் லாஸ் என்று தரக்கூடிய நிலைமை இருப்பதால், இதனை நிரந்தரமாகத் தீர்க்க அரசு எக்ஸ்பர்ட் கமிட்டி ஒன்றை நிறுவி அவர்களது ஆலோசனைகளைப் பெற்று செயல்பட்டால் நிரந்தரமான ஒரு பரிகாரம் கிடைக்கும் என்று கருதுகிறேன். இதை அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து தீர்வு காண்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு சி. பொன்னையன்:</u> அவைத் தலைவரவர்களே, போக்குவரத்து வாரியங்கள் 8 வாரியங்களாகப் பிரிக்கப்பட்டு இருக்கின்றன. அவற்றில் 3 வாரியங்கள்தான் நட்டத்தில் ஓடுகின்றன இருப்பினும் உறுப்பினர் அளித்த ஆலோசனையை அரசு கருத்தில் கொண்டு நடைமுறைபடுத்தும் என்று கூறிக் கொள்கிறேன்.

<u>திரு இ. ராமலிங்கம்:</u> தலைவரவர்களே, போக்குவரத்து நிர்வாகத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் பொதுப்பணித்துறையைச் சார்ந்த இன்ஜினியர்களாக இருக்கிறார்கள். அனுபவம் இல்லாத நிர்வாகத்தின்கீழ் அவை இயங்குவதால்தான் நட்டம் ஏற்படுகிறது. ஆகவே அந்தத் தலைமையிலே இருக்கிற நிர்வாக



இயக்குநர்களைமாற்றி போக்குவரத்துத் துறையிலே பணியாற்றுகிற ஊழியர்களுக்குப் பதவி உயர்வு கொடுத்து அதனை சீர்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு சி. பொன்னையன்:</u> அவைத்தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தைப் பற்றி இப்பிரச்சினையை எழுப்பியுள்ளாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>திரு ஜே. ஜேம்ஸ்:</u> தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் லாபநட்டக் கணக்கைச் சொல்கிறார்கள். போக்குவரத்து என்பது லாப நட்டக் கணக்கு பார்க்காமல், "பப்ளிக் யுடிலிடி சர்வீஸ்" என்ற அடிப்படையில் நட்டம் ஏற்பட்டாலும் பொது மக்களின் தேவையைக் கணக்கில்எடுத்துக்கொண்டு செயல்பட வேண்டும். அப்படிப் பார்க்கும்போது, மீண்டும் இந்தத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்திக்கொள்ள அரசு முன் வருமா? லாபம் ஏற்படுவதற்கு இன்னும் காரணங்கள் உண்டு. தேவையான பல ரூட்டுகள் கான்சல் செய்யப்பட்டு சில பஸ்கள் சில ரூட்டுகளில் நாள் பார்த்து—செவ்வாய், வியாழன். . . .

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> அனுபவம் வாய்ந்த உறுப்பினர் சுருக்கமாகப் பேச வேண்டும்.

<u>திரு. ஜே. ஜேம்ஸ்:</u> இப்படி சில குறிப்பிட்ட நாட்களில் பஸ்ஸை விடுகிற கரணத்தால், பொது மக்களுக்கு இடையூறுகளை விளைவித்து லாபம் சம்பாதிக்கிறார்கள். ஆகவே, பொது மக்களின் நன்மையைக் கருதி, கான்சல் செய்யப்பட்ட ரூட்டுகளை விடுவதோடு, வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்களை மீண்டும் வேலைக்கு அமர்த்திக் கொள்ள அரசு ஆவன செய்யுமா?

<u>மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:</u> தலைவரவர்களே, வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ளவேண்டும். கான்சல் செய்யப்பட்ட ரூட்டுகளை மீண்டும் ஏற்று நடத்த வேண்டுமென்று சொன்னார்கள். எந்தெந்த தொழிலாளர்கள் வேலைநீக்கம் செய்யப்பட்டார்கள் எந்தெந்த ரூட்டுகள் கான்சல் செய்யப்பட்டன போன்ற சரியான குறிப்புகளைத் தந்தால் அவை கவனிக்கப்படும்.

<u>திரு. மு. அம்பிகாபதி:</u> தலைவரவர்களே, கட்டபொம்மன் கழகம், அதைப் போன்று எட்டு கழகங்கள் இருக்கின்றன என்று கூறினார்கள் இவ்வளவு கழகங்கள் இருந்தும், தனியார் பஸ்கள் நல்ல லாபத்தில் ஓடுகின்றன, அரசு நிறுவனங்கள் நட்டத்தில் ஓடுகின்றன. இந்த நட்டத்தைத் தவிர்க்க, எக்ஸ்பர்ட்ஸ் கமிட்டி வேண்டாம்—ஏனெனில் அதன் முடிவு விரைவில் வராது—தொழிலாளர்களைக் கொண்ட ஒரு கமிட்டி நியமித்து இந்த நிறுவனங்களை லாபகரமாக நடத்த அரசு யோசிக்குமா?

மாண்புமிகு திரு சி. பொன்னையன்: அவைத் தலைவரவர்களே, தனியார் துறை லாப நோக்கத்தோடு செயல்படக் கூடிய ஒன்று. ஆனால் அரசுத் துறை, பொது மக்களில் நன்மையைக் கருதி செயல்படுவது. லாபகரமாக நடத்தப்படுவதற்கு யோசனைகள் கூறப்படுமானால் அவை தீவிரமாகப் பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு நா. சுந்தரராஜ் : தலைவரவர்களே, போக்குவரத்துக் கழகங்கள் சம்பந்தமாக ஒரு குழு நியமிக்கப்பட்டு அக்குழு அரசுக்கு பரிந்துரைகள் செய்திருக்கின்றதா, அப்படியானால் அரசு அதன் மீது என்ன முடிவுகளை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, உறுப்பினர் இதற்கு தனிக் கேள்வி போடவேண்டும்.

திரு பி.கே. மூக்கையா தேவர்: தலைவரவர்களே, பல்வேறு போக்குவரத்துக் கழகங்களையும் ஒன்று சேர்த்து ஒரே கழகமாக அமைக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, இதற்கும் தனி கேள்வி போடவேண்டும். இருந்தாலும், சொல்கிறேன் பட்டாபிராமன் கமிட்டி, இந்தக் கழகங்களை இணைப்பதால் பல்வேறு இடையூறுகள் ஏற்படும் என்று கூறியிருக்கிறார்கள். அரசு, அந்த பட்டாபிராமன் கமிட்டியின் அறிக்கையின் அடிப்படையில் சில முடிவுகளை எடுக்க உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(2) ஒத்திவைப்புத் தீர்மானங்கள்.

(அ) சென்னை மருத்துவக் கல்லூரிக்கு முன்னால் பல் இயந்திரக் கம்மியர் மற்றும் உடல் நல கோட்பாடு மருத்துவர்கள் உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து:

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 29—7—1977 முதல் சென்னை மருத்துவக் கல்லூரி முன் உண்ணாவிரதம் இருந்துவரும் பெண்கள் உட்பட 16 டென்டல் மெக்கானிக்ஸ் அண்டு ஹைஜீ



னிஸ்ட்'' களின் நிலை குறித்தும் அதனால் ஏற்பட்டுள்ள நிலை குறித்தும் விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று திரு ஜே. ஜேம்ஸ், திரு கே. கந்தசாமி, திரு சோ. அழகர்சாமி, திரு ஆர். உமாநாத் ஆகியோர் ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளார்கள். இது எப்படி அவையை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய அவசர முக்கியமானது என்பதை சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது திரு ஜேம்ஸ் அவர்கள் அதைப்பற்றிச் சுருக்கமாகக் கூறுவார்கள்.

திரு ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, மருத்துவக் கல்லூரியில் பல் மருத்துவப்பிரிவில், டென்டல் மெக்கானிக்குக்கள் ஹைறஜினிஸ்ட்ஸ் என்ற பயிற்சி பெற்றவர்கள், 1969 முதல் நாளது வரையில் வேலையில் அமர்த்தப்படாமல் ஏறத்தாழ 132 பேர்கள் இன்றைய தினம் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

(முற்பகல் 9-40)

1966 க்குப் பிறகு இந்தப் பயிற்சி பெற்றவர்கள் 12 பேர்கள் தான் இதுவரையில் வேலையில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். இவர்களுக்கு அரசாங்க லோன் கொடுக்கப்பட்டிருக்கிறது. தனிப்பட்ட முறையிலும் இவர்கள் லோன்ஸ் வாங்கி பயிற்சி பெற்றிருக்கிறார்கள். ஆக இவ்வளவு நாட்களாக வேலையில்லாமால் பல்வேறு மனுக்களை அரசுக்குக் கொடுத்தும் அதற்கு எந்த விதமான நிவாரணமும் இவர்களுக்குக் கிடைக்காத காரணத்தால் கடைசியாக அவர்கள் அரசாங்கத்திற்கு நோட்டீஸ் கொடுத்துவிட்டு இன்றைய தினம் உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருக்கிறார்கள். 1977ம் ஆண்டு ஜூலை மாதம் 29ம் தேதி முதல் சென்னை மருத்துவமனை முன்பு பெண்கள் உட்பட பத்து பேர்கள் உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருக்கிறார்கள். அவர்களில் பலரது நிலைமை இன்று மோசமாக இருக்கிறது. அவர்கள் நிலைமை மோசமாகியிருப்பதால் இன்றைய தினம் அவர்கள் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். மருத்துவ மனையில் கூட சிலரது உடல்நிலை கவலைக்கிடமாக இருக்கிறது என்பதைத் தங்களது கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

அது மட்டுமல்ல. அவர்கள் உண்ணாவிரதம் இருந்த ஷெட்டைக் கூட போலீசார் சென்று பிரித்திருக்கிறார்கள். ஆக ஷெட் இல்லாத காரணத்தால் வெட்டாந்தரையில் வெளியிலே அவர்கள் உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த உரிமைகூட இந்த அரசாங்கத்தில் இருந்து கொடுக்கவில்லையே என்று நான் வருத்தப்படுகிறேன்

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1977 ஆகஸ்டு 2

இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருப்பது அரசாங்கத்தின் மீது குறை கூறுவதற்காக அல்ல. இந்தக் கடைசி கட்டத்திலாவது இவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க அரசு முன் வரவேண்டும், இது மிகவும் முக்கியமான பிரச்னை என்ற காரணத்தால் ———— இவர்கள் தனியாக ப்ரைவேட் ப்ராக்டீஸ் செய்வதற்குக் கூடத் தடை இருப்பதாகச் சொல்கிறார்கள் ———— அவர்கள் படித்தும் அரசாங்கம் வேலை கொடுப்பதாக இல்லை, தனியாக வேலை பார்க்கலாம் என்றாலும் அதற்கு சட்டம் இடம் கொடுக்காத காரணத்தால் ———— இப்போது இந்தப் பயிற்சியை நிறுத்திவிட்டார்கள் ———— இந்தப் பயிற்சி பெற்றவர்களுக்கு அரசாங்கம் வேலைவாய்ப்பு அளிக்க வேண்டும்.

ஏற்கெனவே இந்தப் பயிற்சி பெற்றவர்கள் 132 பேர்கள் இருக்கிறார்கள். இது ஒரு முக்கியமான பிரச்சினையாக இருப்பதால் அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுகிறேன்.

திரு. கே. கந்தசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இன்று சென்னையில் உள்ள அரசினர் மருத்துவ மனைக்கு முன்னால் டெண்டல் மெக்கானிஸ்ட் அண்ட் ஹைஜீனிஸ்ட்ஸ் அசோஸியேஷனைச் சேர்ந்த 132 பேர்களில் 16 பேர்கள் 1977 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29-ம் தேதி முதல் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அவர்கள் உண்ணாவிரதம் இருப்பதன் நோக்கம் அவர்கள் பயிற்சி பெற்று முடித்து கடந்த எட்டு ஆண்டுகளாக வேலை ஒன்றும் கிடைக்கவில்லை. ஆகவே அவர்கள் தங்களுக்கு வேலை கொடுக்க வேண்டும்; இல்லையென்றால் சாகும் வரையில் உண்ணாவிரதம் இருப்போம் என்று விரதம் பூண்டிருக்கிறார்கள்.

எனக்குக் கிடைத்துள்ள தகவல்படி, பத்துபேர்கள் பெயரைக் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அவர்களது உடல்நிலை மிகவும் கவலைக்கிடமாக இருப்பதாக தகவல் வந்துள்ளது. ஆக, இது ஒரு உயிர்ப்பிரச்னையாக இருக்கிற காரணத்தால் எண்ணிக்கை குறைந்தவர்களாக இருந்தாலும் பொதுமக்களின் நன்மையைக் கருதியும், இது லா அண்ட் ஆர்டர் ப்ராப்ளத்தை எழுப்பக்கூடிய காரணத்திற்காகவும் அரசாங்கம் உடனடியாக இந்தப் பிரச்னையின்மீது உறுப்பினர்களின் கருத்துக்களை அறிந்து, கடந்த எட்டாண்டுகளாகப் புறக்கணிக்கப்பட்டு வந்திருக்கிற இந்தப் பிரச்னைக்கு உடனடியாக தீர்வு காணவேண்டும் என்றும் இது பொது முக்கியத்துவமும், அவசரமும் வாய்ந்த பிரச்னையாக இருப்பதால் சபை அலுவல்களை உடனடியாக ஒத்திவைத்து இதுபற்றி விவாதிக்க தங்கள் அனுமதியைக் கோருகிறேன்.



1977 ஆகஸ்டு 2]

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்கள் இருவரும் விளக்கமாக சொல்லி விட்டார்கள். இந்த டெண்டல் மெக்கானிக்ஸ் அண்ட் ஹைஜீனிஸ்ட்ஸ் என்று சொல்லக்கூடியதற்கு 1966-ல் இந்தப் பயிற்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. ஆண்டு ஒன்றுக்கு 12 பேர்கள் இந்தப் பயிற்சியைப் பெற்று வந்திருக்கிறார்கள். முதன்முதலாக இந்தப் பயிற்சி பெற்றவுடன் வேலை இல்லை என்று சொன்னவுடன் 1967–68ல் வேலை வேண்டுமென்று கோரி அப்போதிருந்த அமைச்சர் திரு. சாதிக் பாட்சா அவர்களிடம் கேட்டபோது அவர்கள் சொன்னார்கள். இந்த போஸ்ட்ஸ் சாங்க்ஷன் ஆகவில்லை, க்ரியேட் செய்யவில்லை என்று, அப்போது பாஸ் செய்தவர்களுக்கு, 12 பேர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டு சென்னை தலைமை மருத்துவமனையில் தான் பணியாற்றுகிறார்கள். தாலூகா ஹெட்க்வார்டர்ஸ் ஆஸ்பத்திரிகளில் டென்டல் டாக்டர்ஸ் இருக்கிறார்கள், அவர்களுக்கு உதவியாக கம்பவுண்டர்கள் மாதிரி இவர்கள் வேலை செய்கிறார்கள்.

ஆகவே இவர்கள் படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கிறார்கள். இவர்களில் பலருக்கு ஸ்டைபண்டும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவர்களுக்குப் பயிற்சி அளித்து ஏறத்தாழ 130 பேர்கள் வேலையில்லாமல் ஏழு அல்லது எட்டு ஆண்டு காலமாக. இருக்கிறார்கள். முதலில் 12 பேர்களுக்கு மட்டுமே வேலை கிடைத்தது. அதாவது முதல் செட்டுக்கு கிடைத்தது, அடுத்த செட்டிலிருந்து வேலை கிடைக்கவில்லை. இதன் காரணமாக தங்கள் கோரிக்கைகளை தெரிவித்து இவர்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். 31-ம் தேதி நான் போய் பார்த்தேன். கன்னியாகுமரி ஜில்லாவிலிருந்து சென்னை ஜில்லா வரைக்கும் இருக்கின்ற பிரதிநிதிகள் 16 பேர்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள்.

இந்த மாணவர்களுக்கு எப்படி உண்ணாவிரதம் இருக்க வேண்டும் என்று தெரியாது. டாக்டர்களிடம் சொல்லி முன்பே எனிமா போன்றவை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதெல்லாம் அவர்களுக்குத் தெரியாது. இதனால் உண்ணாவிரதம் இருந்த மாணவர்கள் கிறங்கிப் போய் இருந்தார்கள். அங்கு டி.எம்.இ. போய் பார்த்துவிட்டு வந்திருக்கிறார்கள். எங்களுக்கு உடனே வேலை கொடுங்கள் என்று அவர்கள் கேட்டிருக்கிறார்கள். டைரக்டர் ஆபீஸுக்கு வரும்படி சொல்லிவிட்டு டி.எம்.இ. போய் இருக்கிறார். மாணவர்களும் டைரக்டர் ஆபீஸுக்கு காலை 11 மணிக்குப் போய் 2 மணிவரை காத்திருந்தார்கள். ஹெல்த் செக்ரட்டரி வருவதாகச் சொல்லியிருந்தார்களாம். அவர்கள் வரவில்லை. பின்னால் மாணவர்கள் காத்து இருந்து அலுத்துப்போய் திரும்பிப்போய் மாலையில்

[திரு. சோ. அழகர்சாமி] [1977 ஆகஸ்டு 2

உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருக்கிறார்கள். 
இரண்டு பேரை மருத்துவமனைக்குக் கொண்டுபோயிருப்ப இதில்
தாகவும் தெரிகிறது......

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> சபை நடவடிக்கையை
ஒத்திவைத்தபின்னால் இவ்விதம் விளக்கமாகப் பேச வேண்
டும். இப்போது சுருக்கமாகப் பேசுங்கள்.

<u>திரு. சோ. அழகர்சாமி :</u> ஆகவே இதில் சம்பந்தப்பட்ட
அதிகாரிகள் அங்கு சென்று மாணவர்களுக்கு ஏதாவது வாக்
குறுதியைக் கொடுத்து உண்ணாவிரதத்தை நிறுத்தச் செய்
வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். முக்கியமாக இவர்
களுக்கு வேலை கொடுப்பதற்கு ஏதாவது உத்தரவாதம்
கொடுக்க வேண்டும். இப்போதுள்ள 130 பேர்களையும் ஹெட்
குவார்ட்டர்ஸ் ஆசுபத்திரியில் போட்டுவிட்டாலேயே இந்தப்
பிரச்னை தீர்ந்துவிடும்......

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> ரொம்ப நீண்டு போகிறதே,
சுருக்கமாகச் சொல்லுங்கள்.......

<u>திரு. சோ. அழகர்சாமி :</u> எனவே இவர்களுக்கு வேலை
கொடுப்பதற்கு ஏதாவது உத்திரவாதம் அளித்து இவர்களு
டைய உண்ணாவிரதத்தைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை
எடுக்க வேண்டும், இதுசம்பந்தமாக உள்ள விஷயங்களை
விவாதிப்பதற்காக சபை நடவடிக்கைகளை ஒத்தி வைக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

<u>திரு. ஆர். உமாநாத் :</u> பேரவைத் தலைவர் அவர்களே, பல்
சம்பந்தபட்ட டென்டல் மெக்கானிக் அண்ட் ஹைஜீனிஸ்ட்ஸ்
பயிற்சி பெற்ற மாணவர்கள் இப்போது தங்களுக்கு வேலை கிடை
க்கவேண்டும்என்றுகூறி உண்ணாவிரதம்இருக்கிறார்கள். மாநிலத்தில்
உள்ள எல்லா ஆசுபத்திரிகளிலும், பஞ்சாயத்து யூனியன்களிலு
முள்ள எல்லா மெடிகல் இன்ஸ்டிட்யூஷன்களிலும், பப்ளிக்
ஹெல்த் சென்டர்களிலும் இவர்களை நியமித்து விட்டால் இந்தப்
பிரச்னை தீர்ந்துவிடும். வெளியிலிருந்து டென்டல் டைட்ட
னிங்-க்கு வரவேண்டுமென்றால் சென்னைக்குத்தான் வர
வேண்டியிருக்கிறது. திருச்சி போன்ற இடங்களிலிருந்து
டென்டல் டைட்டனிங்-க்கு இங்கேதான் வருகிறார்கள்.
இப்படியில்லாமல் முக்கியமான மூன்று நான்கு இடங்களில்
இவர்களை அப்சார்ப் செய்துவிட்டால் அங்கேயே இவர்கள்
கவனித்துக்கொள்வார்கள். கேரளா, கர்நாடகம் போன்ற
மாநிலங்களில் எல்லா பிரைமரி பப்ளிக் ஹெ
சென்டர்



1977 ஆகஸ்டு 2] [திரு, ஆர். உமாநாத்]

களிலும் இவர்களை அப்ஸார்வ் பண்ணியிருக்கிறார்கள். ஆனால்
பல இடங்களில் பிரைவேட் டென்டல் ஹெல்த் சென்டர்
களுடைய வெஸ்டட் இன்ட்ரஸ்ட் இருப்பதால். ஓரளவு
இவர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்று எண்ணுகிறேன். இதை
அமைச்சர் அவர்கள் முக்கியமாக கவனிக்க வேண்டும்.

இந்த மாணவர்களுடைய உண்ணாவிரதத்தில் போலீசார்
தலையிட்டிருப்பதை அமைச்சர் அவர்கள் கடுமையாக தடுத்து
நிறுத்தி வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.
ஆகவே இவர்களை அப்ஸார்ப் செய்து கொள்வதற்கு வேண்
டிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்
கிறேன். இப்படிப்பட்ட ஹங்கர் ஸ்டிரைக் தொடர்ந்து
கொண்டு போனால் உள்ளே இருக்கின்ற ஸ்டாப்களிடத்திலும்
அதிருப்தி ஏற்படும். பின்னால் மெடிக்கல் காலேஜ் ஸ்டூடன்ட்
களிடத்திலும் இது பரவும். அதற்கெல்லாம் இடம் கொடுக்
காத முறையில் இதைத் தீர்த்து வைக்க அரசாங்கம் நட
வடிக்கை எடுக்க வேண்டும். ஆகவே இதைப்பற்றி விவாதிக்க
சபை நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன் :</u> பேரவைத் தலைவர்
அவர்களே, பல் இயந்திர கம்மியர் மற்றும் உடல் நல கோட்பாடு
மருத்துவர்களுக்கு -வேலைவாய்ப்பு அளிக்கப்படாததனால் ஏற்பட்
டுள்ளஅவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னை குறித்து
விவாதிக்க வேண்டும் என்பது பிரச்னை. வேலையில்லாத 132
பல் இயந்திர கம்மியர் மற்றும் உடல் நல கோட்பாடு மருத்துவர்
கள் தங்களுக்கு இம்மாநிலத்தில் வேலை வாய்ப்பு அளிக்கப்பட
வில்லை என்றும், கர்நாடகா, கேரளா, ஆந்திரம் போன்ற
மாநிலங்களில் தம்மைப் போன்றவர்களுக்கு மாவட்ட தலைமை
மருத்துவமனைகளிலும், ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும்
வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறது என்றும் இம்மாநிலத்தில்
6 பேர்களுக்கு மட்டுமே சென்னை மருத்துவமனையில் வேலை
கொடுக்கப்பட்டுள்ளது என்றும் அரசுக்குத் தெரிவித்துள்ளனர்.
தங்கள் கோரிக்கையை ஏற்காவிட்டால் கால வரையறையின்றி
தங்கள்கோரிக்கைகளை ஏற்கும்வரை உண்ணாவிரதம் மேற்கொள்ளப்
போவதாகவும் வேலையில்லாத பல் இயந்திர கம்மியர் மற்றும்
உடல்நல கோட்பாடு மருத்துவர்கள் சங்கம் அறிவித்திருக்கிறது.

[முற்பகல் 9-50]

எல்லா மருத்துவக் கல்லூரிகளிலும் பல் மருத்துவப் பகுதியில்
பல் இயந்திர கம்மியர் மற்றும் உடல் நல கோட்பாடு மருத்துவர்
கள் இருக்க வேண்டும். ஆனால், செங்கற்பட்டு, தஞ்சாவூர்,

[திரு. கி. மனோகரன்] 1977 ஆகஸ்டு 2

கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் மாவட்ட தலைமை, மற்றும் வட்ட மருத்துவமனைகளிலும் இவ்விதமான மருத்துவப் பதவிகள் இல்லை. இம்மருத்துவப் பதவிகள் இந்தக் கல்லூரி களிலும், மாவட்ட தலைமை மருத்துவமனைகளிலும் ஏற்படுத்தப் பட்டால், அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படும் என மருத்துவக் கல்லூரி இயக்குநர் கூறியுள்ளார்.

பல் கம்மியர்களுடைய வேலைகள்: ஆய்வுக் கூடங்களில் பல் கட்டுமானத்திற்கு வேண்டிய வேலைகளைக் கவனித்தல்; மற்றும் பல் உதவி மருத்துவர்/மருத்துவர் இட்ட பணிகளைச் செய்தல்.

உடல் நல கோட்பாடு மருத்துவர்களுடைய வேலைகள்: பற்களைச் சுத்தம் செய்தல்; பாலிஷ் செய்தல்; பற்களின் இடுக்குகளை தற்காலிகமாக நிரப்புதல்; மருந்து வைத்து கட்டுதல் போன்றவைகள்.

இவர்களுடைய சம்பள விகிதம்: ரூ. 250—10—400.

வேலையில்லாமல் இருக்கும்படியான 103 பல் இயந்திர கம்மியர் மற்றும் உடல் நல கோட்பாடு மருத்துவர்களுக்கு ஆதிகப்படியான பதவிகளை ஏற்படுத்தி, அவர்களை வேலையில் அமர்த்த வேண்டுமானால், அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 5.38 லட்சம் செலவாகும். இவர்களுடைய வேலையில்லாத கஷ்டத்தை நீக்க உடனடியாக 20 பதவிகளை தோற்றுவித்து, கூடிய விரைவில் இவர்களை வேலையில் அமர்த்தலாம் என கல்லூரி மருத்துவ இயக்குநர் கூறுகிறார். பல் இயந்திர கம்மியர், மற்றும் உடல் நல கோட்பாடு மருத்துவ பயிற்சி பெற்ற எல்லோருக்கும் வேலை கிடைக்க வகையில்லாததால், மேலும் இப்பயிற்சியை அளிக்கும்படியான திட்டத்தை 3 வருடங்களுக்கு நிறுத்தி விடலாமென மருத்துவக் கல்லூரி இயக்குநர் கூறியுள்ளார்.

மேலே கூறப்பட்ட மருத்துவக் கல்லூரி இயக்குநர் அவர்களின் கருத்தை ஏற்று, மருத்துவக் கல்லூரிகளிலும், மாவட்ட தலைமை மருத்துவ மனைகளிலும் இவ்விதமான கூடுதல் பதவிகளை ஏற்படுத்தி அவர்களுக்கு வேலை அளிக்கும் முயற்சியை இவ்வரசு மேற்கொள்ளும்.

எனவே, இந்நிகழ்ச்சி குறித்து விவாதிக்க பேரவையின் மற்ற வேலைகளை ஒத்தி வைக்கவேண்டிய அவசியமில்லை,

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> மாண்புமிகு அவையின் முன்னவர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து, விவாதிக்க வேண்டிய தேவை இல்லையென்ற காரணத்தினால் இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.



1977 ஆகஸ்டு 2]

<u>திரு. சோ. அழகர்சாமி:</u> அவர்கள் உண்ணாவிரதத்தை நிறுத்திவிட்டார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> முடிந்த பிறகு பிரச்னையை எழுப்பக் கூடாது. அதுபற்றி ஏற்கனவே தீர்ப்புக் கொடுத்தாகி விட்டது. முடியுமானால் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லலாம்.

<u>மாண்புமிகு திரு. கி. மனோகரன்:</u> உண்ணாவிரதத்தை கைவிடும்படி கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது. பெரும்பாலும் அதை ஏற்று, விட்டுவிடுவார்கள் என்று நான் நம்புகிறேன்.

<u>(ஆ) சென்னையில் ஆசிரியர்கள் கைது செய்யப்பெற்றுள்ளதால் தோன்றியுள்ள பதட்ட நிலை குறித்து.</u>

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> அடுத்து, "30—7—1977 அன்று மாலை 4½ மணி அளவில் சென்னையில் 133 ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டதும், அதுபற்றி எழுந்துள்ள பதட்ட நிலை குறித்தும்" விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று திரு. மு. அம்பிகாபதி அவர்களும், திரு. கே. கந்தசாமி அவர்களும் தீர்மானம் கொடுத்துள்ளார்கள். இது எப்படி அவையின் பிற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டிய அவசர முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைச் சுருக்கமாக விளக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

<u>திரு. மு. அம்பிகாபதி:</u> பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே 133 ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் அப்படி கைது செய்யப்பட்டு, காவல் நிலையத்திலே எந்தவிதமான பராமரிப்பும் செய்யப்படாமல், அலட்சியம் செய்யப்பட்டிருக்கிறார்கள். இந்த அலட்சிய முறையைப் பற்றிச் சுட்டிக்காட்டியபோது, அதிகாரிகள் தவறாகப் பேசியதாகத் தகவல் கிடைத்திருக்கிறது.

இப்படி ஆசிரியர்கள் இந்தச் சூழ்நிலையிலே, இந்தக் காலத்திலே அவர்களை கைது செய்தது சரியல்ல. எனவே, இந்த அவையை ஒத்தி வைத்து, 133 ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டது பற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

<u>திரு. கே. கந்தசாமி:</u> பேரவைத் தலைவர் அவர்களே, மாநில ஆசிரியர்கள் கூட்டணி சார்பாக ஏற்கனவே நடந்து கொண்டிருந்த ஒரு மாநாட்டைத் தடுக்க வேண்டுமென்று இவர்கள் போனபோது கைது செய்யப்பட்டதாகவும் அவர்கள் பின்னால் விடுதலை செய்யப்பட்டதாகவும் கூறுகிறார்கள்.

திரு. மா. மீனாட்சிசுந்தரம்: தலைவரவர்களே, சென்ற வருஷம் 3 இலட்சம் ரூபாய் மத்திய வங்கி பணம் தந்து, கிட்டத்தட்ட 200 அங்கத்தினர்கள் விவசாயிகளிடமிருந்து புகையிலை கொள்முதல் செய்தது. இந்த அளவிற்குப் பணம் போதவில்லை என்று சொல்கிறார்கள். அமைச்சரவர்கள் அந்தக் கூட்டுறவுச் சங்கத்தில் "ஓன் பண்ட்ஸ்" (சொந்தப் பணம்) குறைவாக இருக்கிறது என்று காரணம் சொன்னார்கள். இருந்தாலும் இது புதிய சங்கமாக இருப்பதால் தனியாகக் கவனம் செலுத்தி அதிகப் பணத்தை எப்படியாவது தந்து அந்தப் புகையிலையைக் கொள்முதல் செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. உ. மொ. காட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, இது புதிய சங்கம் என்ற ஒரே காரணத்திற்காக இருக்கின்ற விதிமுறைகளைத் தளர்த்த முடியாது.

(ஆ) தமிழ் நாட்டிலுள்ள உயர்நிலைப் பள்ளிகளில் 1978-79-ம் ஆண்டு முதல் பதினோராம் வகுப்பு நீக்கப்படுவது குறித்தும் ஆசிரியர்கள் வேலை இழக்கும் அபாயம் குறித்தும்.

திரு. பி. ஈஸ்வர மூர்த்தி என்கிற சொரணம் : தலைவரவர்களே, 41-ஆவது விதியின் கீழ் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

"தமிழ் நாட்டில் உள்ள உயர்நிலைப்பள்ளிகளில் 1978-79 ஆம் ஆண்டு முதல் பதினோராம் வகுப்பு நீக்கப்படுவதால் பல்லாயிரக்கணக்கான உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் வேலையிழக்கும், அபாயம் குறித்து"

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, பத்தாண்டுப் பள்ளிப் படிப்பு அடிப்படையிலான புதிய பாடத்திட்டம் தமிழ் நாட்டுப் பள்ளிகளில் 1972-73ஆம் ஆண்டு முதலே படிப்படியாகச் செயல்படுத்தப்பட்டு 1976-77-க்குள் 1 முதல் 10 வகுப்புகளில் அப்பாடத் திட்டம் நடைமுறைக்கு வந்துவிட்டது. தமிழ் நாட்டில் 10—2—3 ஆண்டுப் படிப்பைப் புகுத்தி 1976 நவம்பரில் அரசு ஆணை வெளியிடப்பட்டது. 1977-78 ஆம் ஆண்டு 10ஆம் வகுப்புக்கு வந்துள்ள மாணவர்கள் தாம் 10 ஆண்டுப் பள்ளிப் படிப்பு படித்து வெளிவரும் முதல் தொகுதியினராக இருப்பார்கள். அவர்கள் 1978 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் 10 ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு எழுதுவார்கள். அவர்கள் 1978-80 ல் இரண்டாண்டு ஹையர் செகண்டரி படிப்பு படிப்பார்கள்.





2. 1977-78 ஆம் ஆண்டு 11 ஆம் வகுப்பில் உள்ள மாணவர்களும் புதிய பாடத்திட்டத்தின்படி தான் பயில்கின்றனர். அவர்களுக்கு அப்பாடத்திட்டம் முதன் முதலாக 9 ஆம் வகுப்பில் 1975-76 ஆம் ஆண்டு புகுத்தப்பட்டதால் அவர்களுக்கு இடர்ப்பாடு இல்லாமல் இருக்க வேண்டுமெனக் கருதி 9-10 இரு வகுப்புகளில் புதிய பாடத் திட்டத்தின்கீழ் பயில வேண்டுவதை 1975-76, 1976-77, 1977-78 ஆகிய மூன்று ஆண்டுகளில் 9-11 வகுப்புகளில் பயில அனுமதி அளிக்கப்பட்டது. அவர்கள் 1978 ஆம் ஆண்டு மார்ச்சில் 11 ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு எழுதுவர். அவர்களுக்கு 1978-79 ஆம் ஆண்டு (ஓராண்டு) புதுமுகவகுப்பு நடத்தப்படும். (அவர்கள் தான் கடைசியாக பதினோராண்டு எஸ்.எஸ்.எல்.சி.யும் ஓராண்டு புதுமுக வகுப்பும் பயில்வோராவர்.)

3. தமிழ் நாட்டில் 1976-77 ஆம் ஆண்டு இருந்த மொத்த உயர்நிலைப் பள்ளிகள் எண்ணிக்கை 3,020 அவற்றுள் மைய அரசின் செகண்டரி கல்வி போர்டு உடன் இணைந்த பள்ளிகள், மெட்ரிகுலேஷன் பள்ளிகள் போன்றவை நீங்கலாக மற்ற சாதாரண உயர்நிலைப் பள்ளிகள் 2,874 ஆகும். இந்த 2,874 பள்ளிகளில் பணி செய்து அந்த ஆசிரியர்களின் எண்ணிக்கை 68,497 ஆகும். இவர்களுள் 1978-79 ஆம் ஆண்டு முதல் 11 ஆம் வகுப்பு நீங்குவதால் பாதிக்கப்படுவோர் சுமார் 7,000 பேர் இருக்கலாம்.

4. 10+2+3 ஆண்டு வரம்பில் இரண்டாண்டு ஹையர் செகண்டரி படிப்பைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் வைத்துக் கொள்ளலாம் என்று கருதப்படுகிறது. எத்தனைப் பள்ளிகள், எத்தனைக் கல்லூரிகள் என்பது குறித்த இறுதி முடிவை அரசு விரைவில் அறிவிக்கும். ஆண்டு வரம்பு மாற்றத்திற்கு ஆகும் செலவை ஈடுகட்ட மைய அரசுக் கல்வித் துறை எந்த அளவுக்கு நிதி உதவி தரும் என்பது தெளிவாகவில்லை. இறுதி முடிவு எடுக்கும்பொழுது இதுவும் கருத்திற் கொள்ளப்படும். தற்பொழுது 11 ஆம் வகுப்பில் பயிற்சி அளிக்கும் ஆசிரியர்கள் தக்கக் கல்வித் தகுதி உடையோரை ஹையர் செகண்டரி வகுப்புக்கு நியமிப்பது குறித்தும் அரசு ஆலோசிக்கும். மற்றவர்களைப் பொறுத்த வரையிலும் கூட ஆண்டு வரம்பு மாற்றத்தினால் எவரும் பாதிக்காதபடி பள்ளிக் கல்வித்துறை பார்த்துக்கொள்ளும். எந்தெந்த உயர்நிலைப் பள்ளிகளில் ஆசிரியர், மாணவர் விகிதம் இடம் தருகிறதோ அங்கெல்லாம் 11 ஆம் வகுப்பு ஆசிரியர் பதவிகளை 1978-79 ஆம் ஆண்டில் அந்தந்தப் பள்ளியில் 8 முதல் 10 வகுப்புகளுக்கு மாற்றியும், ஆசிரிய மாணவர் விகிதப்படி கூடுதல் ஆசிரியர் பதவிகள் தேவைப்படும் வேறு பள்ளிகளுக்கு மாற்றியும் அந்த 11 ஆம் வகுப்பு ஆசிரியர்கள் 1978-79 முதல் வேலை இழக்காதபடியும் இடர்படாதபடியும் பார்த்துக்கொள்ள பள்ளிக் கல்வித் துறை நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1977 ஆகஸ்டு 2

(முற்பகல் 10-10)

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: வெளியே எடுக்கப்படுவது எந்த முறையில் என்பது பற்றி அரசு ஏதாவது கொள்கை வகுத்து உத்திரவிட்டிருக்கிறதா? 11 ஆவது வகுப்பு அமுல் நடத்துவதன் விளைவாக பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் எந்த முறையிலே வெளியே எடுக்கப்படுவார்கள்?'

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அதுபற்றிய விவரமான மான அறிக்கையைத்தான் நான் இப்பொழுது வாசித்தேன்.

(இ) தஞ்சை மாவட்டம், மன்னார்குடி, ஜெயலட்சுமி விலாஸ் நடுத்தரப்பள்ளி நிர்வாகத்தினரின் போக்கு குறித்து.

திரு. மு. அம்பிகாபதி: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு,

" தஞ்சை மாவட்டம், மன்னார்குடி நகரத்தில் உள்ள ஜெயலட்சுமி விலாஸ் நடுத்தரப் பள்ளி நிர்வாகம் விரைவில் பள்ளியை மூடவும், மாணவர்களையும், ஆசிரியர்களையும் நீக்கவும், அரசு அதிகாரிகள் உத்திரவை அமுல்படுத்த மறுப்பதும் குறித்த " பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, தஞ்சை மாவட்டம் மன்னார்குடி நகரத்தில உள்ள ஜெயலட்சுமி விலாஸ் நடுநிலைப்பள்ளி நிர்வாகி, அப்பள்ளியை 1977 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 1 ஆம் நாள் முதல் மூடிவிடுவதாக, அப்பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு 1977 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 29 ஆம் நாள் அன்று அறிவிப்பு ஒன்றினைக் கொடுத்துவிட்டு, கல்வி அலுவலரிடம் பள்ளியை 1977 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 1 ஆம் நாள் முதல் மூடிவிடுவதற்கு அனுமதி கேட்டிருந்தார்.

தமிழ் நாடு தனியார் பள்ளிகள் சட்டம் 1973 பிரிவு 29 விதி 20-ன் படி பள்ளி நிர்வாகி ஆறுமாதங்களுக்கு முன்னரே பள்ளியை மூடுதல் குறித்து அச்சட்டத்தில் குறிப்பிட்டுள்ள கல்வி அதிகாரிக்கு தெரிவித்தல் வேண்டும். மேலும் அந்த அறிவிப்பில் அப்பள்ளி மாணவர்கள் தொடர்ந்து படிப்பதற்கு என்ன மாற்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதையும் தெரிவித்தல் வேண்டும்

மேலும், மேற்கூறிய சட்டத்தின்படி பள்ளியை மூடுவதாய் இருந்தால் பள்ளி ஆண்டு முடிந்த பின்னர்தான் மூடுதல் வேண்டும். மேற்சொன்ன பள்ளியை நிர்வாகி 1977 ஆம் ஆண்டு ஜூன்



திங்கள் 1 ஆம் நாள் முதல் பள்ளியை மூடுவதாயிருப்பின், அவர் 1976 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1 ஆம் நாளிலேயே கல்வித் துறைக்கு தெரியப்படுத்தியிருந்தல் வேண்டும். ஆனால், பள்ளி நிர்வாகி பள்ளியை மூடுதல் குறித்து 1977 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 29 ஆம் தேதியன்று தெரிவித்துள்ளார்.

மேலும் இவர் கொடுத்த அறிவிப்பில் அப்பள்ளி மாணவர்கள் தொடர்ந்து படிப்பதற்கு என்ன மாற்று ஏற்பாடுகள் செய்துள்ளார் என்பதனையும் தெரியப்படுத்தவில்லை. எனவே, இவருக்கு, இப்பள்ளியை 1977 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 1 ஆம் நாள் முதல் மூடுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. இப்பள்ளி 1977 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 20 ஆம் தேதி அன்று திறக்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்று வருகிறது. ஆனால் இப்பள்ளியின் நிர்வாகி பள்ளியை 1978 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 1 ஆம் நாள் முதல் மூட இருப்பதாக 1977 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 1 ஆம் நாள் அன்றே மீண்டும் தஞ்சை மாவட்டம் முதன்மைக் கல்வி அலுவலருக்கு அறிவிப்பு கொடுத்துள்ளார். இப்பள்ளியில் படிக்கும் மாணவர்களை அண்மையில் உள்ள பள்ளிகளில் சேர்க்க தகுந்த நடவடிக்கைகள் எடுத்துள்ளதாகவும் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளார். இப்பள்ளியை 1978 ஆம் ஆண்டு ஜூன் திங்கள், 1 ஆம் நாள் முதல் மூடுவதற்கான நிர்வாகியின் அறிவிப்பு முதன்மைக் கல்வி அலுவலரின் பரிசீலனையில் இருக்கிறது. அப்பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர்களை நீக்க அப்பள்ளி நிர்வாகி அவர்களுக்கு தக்க முறையில் அறிவிப்பு கொடுக்க வேண்டும். அவ்வாறு அப்பள்ளியின் ஆசிரியர்களை நீக்குவதில் முறைகேடுகள் ஏதாவது இருப்பின் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் முதன்மைக்கல்வி அலுவலரிடம் முறையீடு செய்யின் சட்ட ரீதியாக அவர் நடவடிக்கை எடுப்பார்.

திரு. மு. அம்பிகாபதி: பேரவைத் தலைவர் அவர்களே, மன்னார்குடி ஜெயலட்சுமி விலாஸ் நடுநிலைப் பள்ளியில் 148 மாணவர்களுக்கு டி.சி. கொடுக்கப்பட்டிருக்கிறது. மேலும் அந்த நிர்வாகத்தைப் பொறுத்த அளவில் ஆசிரியர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். 1977-ம் ஆண்டு ஜூன் மாதம் 16-ம் தேதி ஆர். வேலாயுதம், 1977-ம் ஆண்டு ஜூலை மாதம் 9-ம் தேதியில் பி. லலிதா, 1977-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19-ம் தேதியில் சிவசுந்தரி, 1977-ம் ஆண்டு ஜூலை மாதம் 19-ம் தேதியில் சுகந்தி, ஜெபக்னி ஆகிய ஆசிரியர்கள் சட்ட விரோதமாக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். இன்ஸ் பெக்டர் ஆப் ஸ்கூல்ஸ், நிர்வாகம் வேலை நீக்கம் செய்தது தவறு என்று சுட்டிக் காட்டியும் அவர்களுக்கு வேலை கொடுக்கவில்லை. மாவட்ட கல்வி அதிகாரி இதிலே தலையிடுவதிலே மெத்தனமாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இந்த வேலை நீக்கம் செய்யப் பட்டவர்களுக்கு உடனடியாக மீண்டும் வேலை கிடைக்கின்ற வகை

[திரு. மு. அம்பிகாபதி] [1977 ஆகஸ்டு 2

யில் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் துரிதமான நட
வடிக்கை எடுக்க வேண்டும் என்றும், இந்தப் பள்ளியை துரிதமாக
அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொள்
கிறேன்.

இப்படிப்பட்ட தனியார் பள்ளிகளில் சில ஆசிரியர்களிடம்
5 ஆயிரம், 2 ஆயிரம் என்று பணத்தை வாங்கிக் கொண்டு
வேலைக்குச் சேர்க்கிறார்கள். பிறகு ஓராண்டு 10 மாதம் கழித்து
நீக்கி விடுகிறார்கள். இந்த நிலை இருப்பதால் நடவடிக்கை எடுக்க
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தப் பள்ளி பற்றி
அரசு துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அரசை
நான் வற்புறுத்துகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: நீக்கப்பட்ட ஆசிரி
யர்கள் முறைப்படி முறையீடு செய்வார்களானால், சட்டப்படி
நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
சொன்ன மற்ற யோசனைகள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும்.

## 6. ஒழுங்குப் பிரச்சினைகள்.

### முதலமைச்சர்கள் மகாநாட்டின் முடிவுகளை முதல்வர் அவைக்கு அறிவிக்காததும், அவைக்கு வராததும் குறித்து.

திரு. ஜே. ஜேம்ஸ்: பாயிண்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு
முதலமைச்சர் அவர்கள், டெல்லியிலே முதலமைச்சர் மாநாட்
டிற்கு சென்று வந்தார்கள். முதலமைச்சர் மாநாட்டில் என்
னென்ன தீர்மானங்கள் விவாதிக்கப்பட்டன என்பதை இந்த
அவைக்கு அவர்கள் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறார்கள். ஆனால்
அவர்கள் சொல்வதும் இல்லை. அவர்கள் இந்த அவைக்கு வரவும்
இல்லை. அதற்கு என்ன காரணம் என்பதை இந்த அவையிலே
அறிவிப்பீர்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர்களுக்கு உடல் நலம்
சரியில்லாத காரணத்தால், அவர்களுடைய அலுவல்களைக்கூட
அவை முன்னவர் அவர்கள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.
அவர்கள் நாளை வரும்போது, நீங்கள் கேட்ட தகவல் அவரிடம்
இருக்குமானால் பதில் சொல்வார்கள்.

## 7. 1977-78 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏறக்குறைய 26 பேர்கள்
பேச வேண்டும். அதிலே குறிப்பாக எதிர்க்கட்சித் தலைவர்
களிலே சில பேர்கள்—முக்கியமானவர்கள்—பேச வேண்



1977 ஆகஸ்டு 2] [திரு. பேரவைத் தலைவர்]

அத்தனை பேரும் சுருக்கமாக, நேரத்தை வீணாக்காமல் முடித்துக் கொண்டால் நலம். எதிர்கட்சித் தலைவர்கள் ஒவ்வொருவருக்கும் 15 நிமிடம் அனுமதித்திருக்கிறேன். மற்ற மற்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் 5 நிமிடம் அனுமதித்திருக்கிறேன். அதை ஒட்டி 26 பேர்களும் தங்கள் கருத்தை சொல்வதற்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: ஏற்கனவே எங்களுக்கு ஒதுக்கப்பட்ட சமயத்தைக் கொடுக்க வேண்டும். 15 நிமிடங்கள் என்பது நிச்சயமாகப் போதாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து உறுப்பினர் அவர்கள் கணக்கிட்டுப் பார்த்தால், உங்களுக்கே பேசுவதற்கு நேரம் இல்லை. உங்கள் ஜனதா கட்சிக்குக் கொடுக்கப்பட்ட நேரம் ஏற்கனவே தீர்ந்து விட்டது. எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தங்களுடைய கருத்தைத் தெரிவிக்க வேண்டுமென்பதற்காக 15 நிமிடம் தருகிறேன்.

(பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் 1977-78 ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையை வைத்திருக்கிறார்கள். அதன் மீது நான் சார்ந்திருக்கிற ஜனதா கட்சியின் சார்பில் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். நிதி நிலை அறிக்கையைப் பார்க்கின்றபோது அது ஏறக்குறைய 30·16 கோடி துண்டு விழுகிற நிதி நிலை அறிக்கையாகக் காட்சி அளிக்கின்றது. ஆனால் 1976-77 ஆம் ஆண்டிற்கான அறிக்கையையும் இத்தோடு சேர்த்துக் கொடுத்திருக்கிறார்கள். 1976-77 கணக்கில் காட்டிய அறிக்கையை சமர்ப்பித்த போது 17·28 கோடி துண்டு விழுகிற நிலையிலே இருந்தது. ஆனால் இறுதியில் 9·8 கோடி ரூபாய் உபரி பட்ஜெட்டாக அமைந்திருக்கிறது.

(முற்பகல் 10-20)

ஆக, துண்டு விழுகிற நிலையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிற நிதி நிலை அறிக்கை, இதில் வருவாய் வருகிற முறை மாற்றப்பட்டு இருப்பதோடு மட்டுமல்ல, இந்த நிதி நிலை அறிக்கையைத் தயார் செய்த அதிகாரிகள் அதிக ஜாக்கிரதையாக இருந்து இது உபரி நிலையை அடையக் கூடாது என்ற நிலையில் இதை துண்டு விழுகிற பட்ஜெட்டாக தயாரித்ததாக இருக்கிறதே தவிர சென்ற ஆண்டைப் போல் இதுகூட துண்டு விழும் நிலையில் இருக்காது என்கிற கருத்தை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1977 ஆகஸ்டு 2

வரி இல்லாத நிதி நிலை அறிக்கை என்று கூறியிருக்கிறார்கள். அப்படி இல்லாத காரணத்தால் இது பாராட்டுவதற்குரியதொன்றாகாது என்பதை தங்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்கு விரும்புகிறேன். ஏனெனில் வரி விதிப்பது என்பது பெரிய பாவம் என்று கருதிக் கொண்டு இருக்கிறார்கள். வரி விதிக்கும் நிலையினைப் பார்க்கிறபோது, வரி விதிக்கப்பட வேண்டும். தாங்கும் சக்தி உள்ளவர்களுக்கு வரி விதிக்கப்பட வேண்டும், மற்றவர்களுக்கு வரி விலக்களிக்கப்பட வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, உண்மையிலேயே நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் அந்த எண்ணத்தோடு இதைக் கொண்டு வந்து இருக்கிறார்கள் என்று நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

வசதி உள்ளவர்கள்மீது வரி விதித்தாலும்கூட அவர்கள் வரி செலுத்துவதிலிருந்து எப்படியோ தப்பித்துக் கொள்கிறார்கள் என்பதை உங்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்கு விரும்புகிறேன். ஆனால் ஏழை எளிய மக்கள்மீது சுமத்தப்படும் வரி அவர்கள் எந்த விதத்திலாவது கட்ட வேண்டி வந்து விடுகிறது. ஆகவே, இது வரி இல்லாத பட்ஜெட் என்ற காரணத்தால் பாராட்டுவதற்குரியது அல்ல என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். ஒரு வேளை வரி இல்லை என்று சொன்னாலும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கூறியது போல் எப்படியோ முயற்சித்து வரி விதிப்பதற்கு ஒரு "வேலை" செய்து அந்த முயற்சியில் வெற்றி கண்டு இருக்கிறார்கள் என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். அவர்கள் வெற்றி கண்ட நிலையைப் பார்க்கிறபோது தாங்குகிறவர்களுக்கு வரி விதிப்பதற்குப் பதிலாக தாங்குவதற்கு சக்தி அற்றவர்கள்மீது வரி விதித்து இருக்கிறார்கள் என்று சொன்னால் அது பொருத்தம் உடையதாக இருக்கும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

காரணம் என்னவென்றால் அவர்கள் முயற்சியில் எந்த அளவுக்கு வெற்றி கண்டு இருக்கிறார் என்று சொன்னால் வெல்லத்தின் மீதும், நாட்டு சர்க்கரை மீதும், இதுவரை ஒரு முனை வரியாக இருந்ததை பல முனை வரியாக மாற்றி அமைத்ததன் காரணமாக அதிக வருவாயை எதிர்பார்க்கிறார்கள். வெல்லம், நாட்டுச் சக்கரைப் போன்ற பொருட்கள் சாதாரண ஏழை, எளிய மக்கள் வாங்கும் பொருட்கள். ஆகவே, அவர்கள்மீது அதிக வரி விதித்து இருக்கிறார்கள் என்று சொன்னால் உண்மையிலேயே, டெல்லியிலிருந்து இங்கே வந்து இருக்கிற காரணத்தால் பட்டணத்தில் வசதியோடு உள்ளவர்களைத்தான் நிதி அமைச்சர் அவர்கள் பார்க்கிறார்கள். கிராமத்தில் உள்ளவர்களைப் பற்றி, அங்கேயுள்ள ஏழை எளிய மக்களைப் பற்றி அவர்கள் சிந்தித்துப் பார்க்கவில்லை என்பதைத்தான் நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.



1977 ஆகஸ்டு 2] [திரு. ஜே. ஜேம்ஸ்]

அடுத்ததாக வரி இல்லை என்று சொன்னால் வருவாயைக் கூட்டுவதற்கு பல வழிமுறைகள் இருக்கின்றன என்பதை நான் இந்த அரசாங்கத்திற்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஏனெனில் இப்போது எல்லாம் சாதாரணமாக கறுப்புப்பணம் வைத்திருப்பவர்கள் நமது மத்தியில் அதிகமாக இருக்கின்றார்கள். அந்தக் கறுப்புப் பணத்தை தேடி எடுத்தால் இன்னும் நமக்கு அதிகமாக நிதி வருவதற்கு வழி இருக்கிறது. சாதாரணமாக சினிமாத் தொழிலில் கறுப்புப் பணம் அதிகமாக இருக்கிறது என்பதை நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நன்கு அறிவார்கள். ஆகவே, அதைப் பற்றி நான் அதிகம் கூறத் தேவையில்லை. ஒரு சினிமாவிற்கு 5 6 லட்சம், 7 லட்சம், 8 லட்சம் என்று கான்டிராக்ட் பேசிவிட்டு கணக்கில் வருவது 1 லட்சம் 2 லட்சம் என்றுதான் இருக்கிறது. இந்த பிளாக் மணி நல்ல முறையில் வசூலிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, கறுப்புப் பணம் யார் வசூலிக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வற்புறுத்துகிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: மத்திய அரசாங்கம் அதை வசூலிக்க வேண்டும் என்று சொன்னாலும் மாநில அரசு அதற்கு வழி வகுத்துக் கொடுத்தால், உதவி செய்தால், நிச்சயமாக நமக்கு ஏராளமான பணம் வர வழி இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே மாநில அரசு அத்தகைய அதிகாரத்தைப் பெறுவதற்கு உரிய வழிவகைகளைக் குறித்து இந்த மன்றத்தில் பேசியும், தீர்மானம் போட்டும் இருக்கிறோம். அந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் இங்கே இருந்தார்கள் என்ற காரணத்தால் நினைவூட்ட விரும்புகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: அனைத்தும் தெரிந்துதான் குறிப்பிட்டேன். அந்தக் கறுப்புப் பணத்தை வெளியில் கொண்டு வருவதற்கு மாநில அரசாங்கம் உதவி செய்தால் மத்திய அரசாங்கம் நிச்சயமாக வசூலிப்பதற்கு வழி வகுக்கும். உதவி செய்யாமல் விட்டால், மத்திய அரசாங்கம் நினைத்தாலும் அதை வசூலிக்க வழி இல்லாமல் போய்விடும். ஆகையால் தான் இப்போது பொறுப்பில் இருக்கும் முதலமைச்சர் அவர்கள் அந்தக் கறுப்புப் பணத்தைப் பற்றி நன்றாக அறிந்தவர்கள் என்ற காரணத்தால், அவர்கள் நினைத்தால் அந்தப் பணத்தை வெளிக் கொணர முடியும் என்பதற்காக நான் சுட்டிக் காட்டினேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மீண்டும் மீண்டும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள் அதையே சொல்கிறார். ஒரு மாநிலத்தில் முதலமைச் சர் நினைத்தால் கருப்புப் பணத்தை வெளிக் கொண்டுவர முடியும் என்பது சரியான கருத்தல்ல.

திரு. ஜே. ஜேம்ஸ் : அடுத்து, முதலமைச்சர் அவர்கள் உண்மையிலேயே, செய்ய வெண்டிய காரியங்களை வந்தவுடன் செய்து விட்டார்கள். தான் அரசியலில் இந்த இடத்தைப் பெறுவதற்கு எது துணையாக இருந்ததோ, அதற்கு வரிச் சலுகை செய்திருக்கிறார் என்று சொல்லும்போது குறை தேவையில்லை. கேளிக்கை வரியைக் குறைத்திருக்கிறார். கூறத் வளர்ச்சிக்கு மானியம் கொடுத்திருக்கிறார். நாட்டில் மருத்துவ மனைகளில் மருந்து வாங்கிக் கொடுக்க வழியில்லாமல் பட போது, மாணவர்களுக்கு உணவு, உடை கொடுக்க முடியாமல் இருக்கும் இருக்கும்போது, சினிமாத் தொழில் வளர்ச்சி பெற முதலமைச் சர் அவர்கள் இவ்வளவு அக்கறை எடுத்துக்கொண்டு விட்டார்கள் என்றால், அது ஏன் என்ற காரணத்தை இந்த நாட்டு மக்கள் அறிந்திருக்கிற காரணத்தால், மேலும் குறை கூற நான் விரும்பவில்லை.

திரு. ஆர். சௌந்திரராஜன் : தலைவரவர்களே, சினிமாத் துறைக்கு மானியம் அளித்திருப்பதை குறைகூறிப் பேசிக் கொண் டிருக்கிறார். இச்சலுகை இம்மாநிலத்தில் மாத்திரம் கொடுக்கப் பட்ட சலுகை அல்ல. பல்வேறு அரசுகளாலும், பல்வேறு மாநிலங்களில், குறிப்பாக ஆந்திராவிலும், கர்நாடகத்திலும் இச்சலுகை தந்திருக்கிறார்கள். அரசுக்கு நல்ல வருமானத் தைத் தந்து கொண்டிருக்கும் இத்தொழிலை ஊக்குவிப்பதற் காக இந்த மானியம் தரப்படுவது பொருத்தமே என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : இப்படிக் குறுக்கிட்டால், நான் மேலும் சிறிது நேரத்தை எடுத்துக் கொண்டால், அதற்கு காரணம் நானல்ல.

அடுத்து, அரசாங்கத்தின் கொள்கை ஆளுநர் உரையிலே உறுதியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஊழலற்ற ஆட்சியை அமைப்பது என்று ஆணித்தரமாகக் கூறப்பட்டிருக்கிறது. லஞ்ச ஊழலில் அதிகாரிகள் அல்லது அரசியலில் இருக்கின்றவர்கள் ஈடுபடாமல் இருப்பதற்காக பல்வேறு சட்டங்கள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. இதற்காக ஒரு அரசாங்கம் வேண்டியதில்லை. இந்த அரசு வந்த பிறகு, இந்தச் சட்டங்களைப் பயன்படுத்தி, ஊழலற்ற அரசை அமைக்குமானால், உண்மையிலேயே பாராட்டு வேன், அந்தச் சந்தர்ப்பத்தில்—ஓராண்டு கழித்து, அதற்கு விளக்கத்தை நாம் பெற்றுக்கொள்ளலாம்.





ஆனால், என்னுடைய கவலை எல்லாம், இந்த அரசு ஊழலற்ற ஒரு அரசை, நிர்வாகத்தை, நிச்சயமாக அமைக்க முடியாது என்பதனை நான் கூற விரும்புகிறேன். காரணம் நாங்கள் ஊழல் என்று தி.மு.க.வை குற்றம் சாட்டியபோது, எங்கே ஊழல் என்று இங்கே இருந்த பல நண்பர்கள்—முன்னர் இருந்த, முதலமைச்சர் கூட அதைக் கேட்கவில்லை. ஆனால், மதுரையில் நடந்த தி.மு.க. மாநாட்டில், தற்போதைய முதலமைச்சர் அங்கே கூடியிருந்த மக்களைக் கேட்டார்கள்; "காங்கிரஸ்காரர்கள் தி.மு.க. ஊழல் நிறைந்த கட்சி என்று கூறுகிறார்கள், நீங்கள் என்ன சொல்கிறீர்கள்" என்று கேட்டபோது மக்கள் தீர்ப்பளித்தார்கள், இல்லை, இல்லை என்று. உடனே, மக்கள் தீர்ப்பளித்து விட்டார்கள், தி.மு.க. ஊழல் நிறைந்த ஆட்சி அல்ல, மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு" என்று எல்லாம் கூறி விட்டுச் சென்ற முதலமைச்சர் அவர்கள் அடுத்த நாள் அதே அரசு—தி.மு.க. அரசு—ஊழல் நிறைந்த அரசு என்று கூறினார் என்றால், இதில் என்ன அர்த்தம் இருக்கிறது என்பதனை நான் அறிய விரும்புகிறேன். ஆகவேதான் நான் கூற விரும்புகிறேன், இங்கே இருக்கின்ற அரசோ அல்லது இங்கே இருக்கின்ற மந்திரி சபையோ, நிச்சயம் ஊழலை ஒழிக்க முடியாது. ஏனென்று சொன்னால், ஊழல் புரிந்தவர்கள் பலர் இருக்கிறார்கள், ஊழல் பட்டியலில் இடம் பெற்றவர்கள் பலர் இங்கே இருக்கின்ற போது ஊழல் இல்லாத அரசினை எப்படி அமைக்க முடியும் என்ற ஐயப்பாடு இருக்கின்றது என்பதனைத் தங்கள் மூலம் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தாங்கள் விவாதிக் கும்போது, குறை கூறும்போது, பொதுவாகக் கூறாமல், குறிப்பிட்டுக் கூறினால் நலமாக இருக்கும். இல்லாவிட்டால் இந்த விவாதத்தின் போக்கு மாறுபடும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : மிகவும் பொறுப்புணர்ச்சியோடு தான் வார்த்தைகளைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறேன். இந்த அளவு வார்த்தைகளைப் பயன்படுத்திப் பேசாமல் விளக்கமாகப் பேச முற்படுவேனேயானால் நன்றாக இருக்காது என்பதற்காக இந்த நிலையிலே கூறினால் நன்றாக இருக்கும் என்று பலரது நன்மை யைக் கருதிப் பேசுகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையைப் பார்க்கும்போது, பொது மக்களின் நன்மையைப் பாதிக்கின்ற திட்டங்கள் பல இருக்கின்றன. குறிப்பாக, பரிசுச் சீட்டுத் திட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஏற்கனவே இங்கே இருந்த அரசு அமல் படுத்திய அத்திட்டத்தை மேலும் தொடர்ந்து நடத்தாமல் மக்களுக்கு உதவாத அத்திட்டத்தை இந்த அரசு கைவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1977 ஆகஸ்டு 2
[முற்பகல் 10-30].

குறிப்பாக திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்கள் இங்கு வந்தபோது இந்த அரசை அவர்கள் வேண்டிக் கேட்டுக் கொண்டதன் காரணமாக, இந்தத் திட்டம் ஏழைகளைப் பாதிக்கும், ஆகவே இதை கைவிட்டுவிடவேண்டும் என்று அவர்கள் கேட்டுக் கொண்டதன் காரணமாக, இந்தத் திட்டத்தை அரசு கைவிட்டுவிட்டது என்பதைத் தங்கள் மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்தப் பரிசுத் திட்டத்தினால் பாதிக்கப்படக்கூடியவர்கள் ஏழை மக்கள்தான். அன்றாடம் கூலி வேலை செய்து சம்பாதிக்கக்கூடிய மக்கள் தங்கள் வீடுகளில் உள்ள நகைகள், தட்டுமுட்டுச் சாமான்களையெல்லாம் விற்று பரிசுச் சீட்டுகள் வாங்குகிற ஒரு நிலை அன்றிருந்தது. அதன் காரணமாக அதைக் கைவிட்டுவிட வேண்டும் என திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க இந்தத் திட்டம் கைவிடப்பட்டது. ஜே. பி. அவர்களின் கொள்கைகளை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்று இங்கு சாதாரணமாகச் சொல்கிறார்கள் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள். ஆனால் ஜே. பி. அவர்களின் கொள்கைகள் நாட்டுமக்களுக்கு, நாட்டுக்கு உகந்ததாக இருந்தால் அதை ஏற்றுக்கொள்வது நலம் என்று கருதுகிறேன். ஜே. பி. அவர்கள் இந்த நிலையில் இருக்கிறார்கள் என்று சொன்னேன். ஒருவேளை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் வரிசையில் அவர்கள் வரவில்லை என்றாலும், ஒரு தியாகியாக, நாம் பெற்ற சுதந்திரம் பறிபோகிற சூழ்நிலையில் இந்த நாட்டுக்கு இரண்டாவது முறையாக சுதந்திரத்தைப் பெற்றுத் தந்த, அண்ணல் காந்தியடிகளுக்கு அடுத்தபடியாக இந்தத் தேசத்தில் இருக்கிற தேசப் பிதா என்ற காரணத்தால் ஜே. பி. அவர்களின் கொள்கைகளை இந்த அரசு ஏற்றுக் கொள்வது நலம் என்று நான் கருதுகிறேன்.

ஒருவேளை இந்திரா காந்தி அம்மையாருக்கு அல்லது எமர்ஜென்ஸிக்கு இந்த அரசு ஆதரவு கொடுத்திருக்கலாம்; ஆனால் இன்றையதினம் மத்திய அரசின் நாயகராக இருக்கிற ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்களைக் குறை கூறுவதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். நாம் மத்திய அரசோடு உறவாகினால்—இன்றையதினம் நம் மாநிலத்திற்கு மத்திய அரசின் உதவிகள் எந்தளவிற்குக் கிடைக்கிறது என்பதை உணர்ந்து இதுவரையில் மத்திய அரசால் புறக்கணிக்கப்பட்டு வந்த நமது திட்டங்களுக்கு, பல திட்டங்களுக்கு இன்றையதினம் மத்திய அரசு பணம் கொடுக்கிறது, பல கோடி ரூபாய் கொடுத்திருக்கிறார்கள் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்—இந்த அளவிற்கு மாநில உறவு இருக்கவேண்டும் என்று விரும்புகிற மத்திய அரசோடு நமது மாநில அரசு உறவாகினால் இந்த மாநிலத்தை, இந்த மாநிலத்து மக்களை அது பாதிக்கும் என்று நான் கூறுகிறபோது மத்திய



1977 ஆகஸ்டு 2] [திரு. ஜே. ஜேம்ஸ்]

மாநில அரசுகள் உறவு நல்லமுறையில் இருக்கவேண்டும் என்று மத்திய அரசு விரும்பினாலும் அதற்கு மாறாக இந்த அரசு செயல்பட்டால் அதை மத்திய அரசு கண்காணித்துக் கொண்டிருக்கும் என்பதை நான் இங்கு எச்சரிக்க விரும்புகிறேன்

அடுத்தபடியாக, வேளாண்மை, பாசனம் ஆகியவற்றிற்காக பல திட்டங்கள் வைத்திருக்கிறார்கள், வரவேற்கிறேன். எங்கள் பகுதியில் மூன்று நீர்பாசனத் திட்டங்கள் உள்ளன. கோதையாறு திட்டம், பெருஞ்சாணித் திட்டம், நெய்யாறு இடதுகரை கால்வாய்த் திட்டம். இவை பழுது பார்க்கப்படாமல், அணையில் தண்ணீர் இருந்தாலும் விவசாயம், பயிர் சேதம் அடைகிற நிலைதான் இருக்கிறது. அங்குள்ள அதிகாரிகளை இதுபற்றிக் கேட்டால் பணம் ஒதுக்கவில்லை என்று கூறுகிறார்கள். ஆகவே குமரிமாவட்டத்தைப் பொறுத்த வரையிலும் அந்தக் கால்வாய்களில் தூர் எடுக்க அதிகப் பணம் ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விவசாயிகளுக்கு லோன் கொடுக்கப்படுகிறது. அங்கு மரச்சீனிக் கிழங்கு பயிர் செய்கிறார்கள். லோன் கொடுக்கிறபோது உரம் வாங்கவேண்டும் என்று நிர்ப்பந்தம் செய்யப்படுகிறது. அங்குள்ள விவசாயிகள் உரத்தை தாங்களாகவே தயார் செய்துகொள்கிறார்கள். எனவே லோன் கொடுக்கும்போது அந்தக் கண்டிப்பும் வைக்காமல் லோன் கொடுக்கவேண்டும்.

நெய்யாறு இடதுகரை கால்வாய்க்குத் தண்ணீர் கேரளா மாநிலத்திலிருந்து விடப்படுகிறது. இப்போதுள்ள நிலையில் கேரளாவில் பயிர்களுக்குத் தண்ணீர்விட்டு முடிந்த பிறகு பல மாதங்கள் கழிந்த பிறகுதான் குமரி மாவட்டத்திற்குத் தண்ணீர் விடப்படுகிறது. எனவே, கேரள அரசோடு பேச்சுவார்த்தைகள் நடத்தி அவர்கள் அங்கு தண்ணீர் விடுகிற அதே நேரத்தில் எங்கள் மாவட்டத்திற்கும் தண்ணீர் விடுவதற்கு வகை செய்யவேண்டும். எங்கள் மாவட்டத்தைப் பொறுத்த வரையில், அங்கே ஒரு விவசாயக் கல்லூரி அமைக்கவேண்டும் என்றும், அதற்காக அரசுக்குச் சொந்தமான நூறு ஏக்கர் நிலம் இருக்கிறது என்றும் கூறிக்கொண்டு வந்துள்ளோம். விவசாயக் கல்லூரி ஒன்று அங்கே அமைப்பதற்கு வழி இல்லை என்று சொன்னால் பணப் பயிர் அதிகமாக விளைகிற எங்கள் பகுதியில் ஒரு 'இன்டஸ்ட்ரியல் பேஸ்டு அக்ரிகல்சரல் பாலிடெக்னிக்' காவது ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக மீனளத் துறையைப் பற்றிக் கூறுகின்றபோது, மீனவர்களுக்கு பல நன்மைகள் செய்ய முன் வந்திருப்பதை நான் பார்க்கின்றேன். ஆனால் கடந்த 15-ம் தேதி 100

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1977 ஆகஸ்டு 2

மீனவர்கள் கடலில் மீன் பிடிக்கப்போய், அவர்கள் புயலால் அடித்துச் செல்லப்பட்டார்கள். அவர்களைப் பற்றி 30 மணி நேரமாக எந்தவிதமான தகவலும் இல்லாமல் இருந்தது. சில நாட்கள் கழித்து கரையில் வந்து சேர்ந்தார்கள். இதைப் பற்றி ஒரு வாரம் கழித்து பத்திரிகையில் பார்க்கும்போது, இது சம்பந் தப்பட்ட அதிகாரிகளுக்கு இது சம்பந்தமான தகவல் எதுவுமில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே புயல் காலங்களில் அதைத் தெரிந்து முன்கூட்டியே மீனவர்களுக்கு அறிவிக்கின்ற வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விபத்துக்களில் மாண்டு போகின்ற மீனவர் களுக்கு அவர்களின் குடும்பங்களுக்கு 5,000 ரூபாய் கொடுப்ப தாகவும், தொழில் செய்வதற்கு 5,000 ரூபாய் கொடுக்கவிருப்ப தாகவும் தெரிகிறது. அதைப் போன்று மரம் ஏறுகின்ற தொழி லாளர்கள் இறந்து போனால் அவர்களுக்கும் இது போன்ற உதவித் தொகை கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்தபடியாக, தொழில்துறையைப் பொறுத்தளவில், இப் போது அண்மையில் எங்கு பார்த்தாலும் தொழில் அமைதி குறைந்து கொண்டு வருகிறது. பல்வேறு தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்ற என்பதை அரசு நன்றாக அறிந்திருக்கிறது. தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் இந்த அரசு போட்டி ருக்கும் திட்டமானது, ஆடுகளை மோத விட்டுவிட்டு ஓநாய் தண்ணீர் குடிப்பது போன்று இருக்கக்கூடாது. அரசியல் காரணங்கள் எவ்வளவுதான் இருந்தாலும் உற்பத்தி பாதிக்கக் கூடாது.

இப்போது பாடியில், சுந்தரம் கிளேட்டன் மூடப்பட்டிருக் கிறது. இதனால் மோட்டார்களுக்கு வேண்டிய உப பொருட் கள் எல்லாம் உற்பத்தி செய்வது பாதிக்கப்படுகின்றது. டிஃபன்ஸ்க்கு வேண்டிய பல பொருட்களும் இங்கே உற்பத்தி செய்யப்படுவதாகத் தெரிகிறது. இப்படிப்பட்ட பொருள் உற் பத்தி பாதிக்கப்பட்டால் அது மாநிலத்திற்கு மட்டுமல்ல, தேசமே பாதிக்கப்படும் என்பதை நாம் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். அரசியல் கட்சிகள் தங்களுக்குள் வேறுபாடுகள் இருந் மாலும், உற்பத்தி பாதிக்கப்படாமல், சட்டம் ஒழுங்கு கெடா மல், பார்த்துக்கொள்வது நம் கடமை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக வேலையில்லாத் திண்டாட்டம் பெருகிக் கொண்டிருக்கிறது. இதைத் தீர்ப்பதற்கு இதில் பெரிய அளவில் எதுவும் இல்லை. ஆனால் நிலப்படை என்று ஒன்றை அமைத் திருக்கிறார்கள். ஏற்கனவே இருந்த சேரணிப் படை போன்று



1977 ஆகஸ்டு 2] [திரு. ஜே. ஜேம்ஸ்]

தான் இயங்குமா, இதனுடைய செயலைப் பார்க்கின்ற நேரத்தில் இதற்கு ஆள் எடுக்கின்ற நேரத்தில், அல்லது இதற்காகப் பணம் செலவு செய்கின்ற நேரத்தில், முன்பு சேரணியில் ஏற் பட்ட தில்லுமுல்லுகள் இதிலும் இருக்கக்கூடாது. அரசாங்க ஊழியர்களுக்குள்ள விதிமுறைகள் எல்லாம் இவர்களுக்கும் இருக்கின்ற முறையில், இவர்களைக் கட்டுப்படுத்தக்கூடிய அளவில் அமைந்திருக்கவேண்டும்.

இளைஞர் அணியில் இருந்த 3,000 பட்டதாரிகள் வேலை யின்றி கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு வேலை வேண்டும் என்று அவர்கள் போராட்டம் நடத்துகிறார்கள். இவர்களுக்கும் வேலை கொடுக்க ஏதாவது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக பட்டதாரி ஆசிரியர்கள், செகண்டரி கிரேட் ஆசிரியர்கள் பலபேர் வேலையிழந்திருக்கிறார்கள். அவர் களுக்கும் வேலை கிடைப்பதற்கு அரசாங்கம் ஏதாவது நட வடிக்கை எடுக்கவேண்டும்.

அடுத்து, கைத்தறி நெசவாளர்களுடைய பிரச்னையைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. அவர்களுடைய நிலைமை மிகவும் மோசமாகிக்கொண்டிருக்கிறது. இவர்களுடைய விமோசனத் திற்கும் ஏதாவது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏற்கனவே இவர்கள் வாங்கிய கடனுக்காக, பாங்குகள், சொஸைட்டிகள் கடனை வசூல் செய்வதற்காக நெசவாளர்களிடம் கெடுபிடி செய்கிறார்கள். இதையெல்லாம் நிறுத்தி வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், பல விஷயங்களிலும் மிகவும் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது என் பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தொழில் துறையில் எடுத்துக் கொண்டால் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கின்ற வகையில், எந்த விதமான பெரிய பாக்டரியோ அல்லது தொழில் வாய்ப்போ எங்கள் மாவட்டத்தில் கிடையாது. எங்கள் மாவட்டத்தில் ரப்பர் அதிகமாகக் கிடைக்கின்ற காரணத் தால் அங்கு ஒரு ரப்பர் பாக்டரி ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டோம். ஆனால் எங்கள் மாவட்டத்தில் அமைப்பதற்குப் பதிலாக இராமநாதபுரத்தில் ஒரு ரப்பர் பாக்டரி அமைக்கப் பட்டு இப்போது அது செயல்படாமல் இருக்கிறது. அந்த பாக்டரியை கன்னியாகுமரி மாவட்டத்தில் அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அத்துடன் பார்ட்-(2)-ஸ்கீமில் பல திட்டங்கள் ஏற்படுத்து வதற்கு அரசாங்கத்தின் அனுமதியைக் கேட்டு இங்கு கோட்டையில் வந்து தூங்கிக்கொண்டு இருக்கிறது. பி. டபிள்யூ. டி. இலாகாவைப்

பொறுத்தும், கல்வி இலாகாவைப் பொறுத்தும் பல திட்டங்கள், கட்டிடங்கள் கட்டுவது, அணைகள் கட்டுவது போன்ற பல திட்டங்கள் இதில் இருக்கின்றன. இவற்றுக்கெல்லாம் அரசாங்கம் உடனடியாக அனுமதி கொடுத்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நெருக்கடி காலத்தில் பாதிக்கப்பட்ட பல அரசு ஊழியர்கள் இருக்கிறார்கள். ஃபேம்லி பிளானிங் திட்டத்தில் இறந்தவர்கள் பலர் இருக்கிறார்கள். இவர்களுக்கு எல்லாம் பரிகாரம் தேடும் வகையில், ஒரு கமிஷனை அமைத்து, விசாரிக்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-40)

தேர்தல் காலத்திலே பலவிதமான நிகழ்ச்சிகள் நடந்து, அது குறித்து நடவடிக்கை தொடர்ந்து, பல வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, என்னுடைய பகுதியிலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், அவர்களுக்கு ஆதரவான கட்சிகளும் சேர்ந்து சாதாரணமாகத் தேர்தல் காலங்களிலே நடக்கக்கூடிய நிகழ்ச்சிகள் எல்லாம் நிகழ்ந்த காரணத்தினாலே, பல வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. தேர்தல் சுமுகமாக நடந்து முடிந்த பிறகு, இப்போது இந்த வழக்குகளை எல்லாம் வாபஸ் செய்வது நல்லதாக இருக்கும். ஏனென்றால், இன்றைக்கு அரசு நிறுவியபின் தேர்தல் காலத்திற்கு முன் எப்படி மக்கள் வாழ்ந்தார்களோ அப்படி அவர்கள் வாழ்வதற்கு உதவியாக இருக்கும். ஆகவே, இந்த வழக்குகளை வாபஸ் வாங்கிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி ஜில்லாவில் அரசு ரப்பர் தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு இது வரையிலும் கட்டாய சேமிப்பு திருப்பிக் கொடுக்கப்படவில்லை. நூற்றுக் கணக்கான சி.எல்.ஆர். தொழிலாளர்கள் வேலை வாய்ப்பு இல்லாமல் தவிக்கின்றனர். சி. டீ. உடனடியாகக் கொடுக்க வேண்டும். சி.எல்.ஆர்.க்கும் வேலை அளிக்க வேண்டும். தனியார் தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு இல்லை. பல தோட்டங்களில் சத்தியாகிரகம், உண்ணாவிரதப் போராட்டங்கள் நடைபெறுகின்றன அவற்றில் அரசு தேவையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

எனது தொகுதியில் திற பரப்பு இடதுகரைச் சானலிலிருந்து சிதறால் கால்வாய் வெட்ட வேண்டுமென காங்கிரஸ் அரசு முடிவு செய்திருந்து, தி.மு.க. அரசு இத்திட்டத்தைக் கைவிட்டது. இந்தக்





கால்வாய் சிதறால், வெள்ளாங்கோடு கிராமங்களுக்கு மிகவும் அவசியம். இந்த அரசு சிதறால் கால்வாய் வெட்ட ஏற்பாடு செய்யவேண்டும்.

பனைமரம் ஏறும் தொழிலாளர்களுக்கான 'பாம்கர் பெடரேஷன்' இப்போது கலைக்கப்பட்டிருக்கிறது. அதை மீண்டும் அமைத்து, அந்தத் தொழிலாளர்களுக்கு விறகு, பாத்திரங்கள் கொடுப்பதோடு, ஆண்டு ஒன்றுக்கு 1000 ரூபாய் கடன் கொடுக்க வேண்டும்.

கன்னியாகுமரி ஜில்லாவை தொழில் துறையில் பின்தங்கிய மாவட்டமாக அறிவிக்கவேண்டும்.

கடைசியாக, எல்லைப் போராட்டத்திலே கலந்து கொண்ட தியாகிகளுக்கு ஏற்கனவே கொடுக்கப்பட்டு வந்த பென்ஷன் நிறுத்தப்பட்டிருக்கிறது. இந்த எல்லைப் போராட்டத்திலே கலந்து கொண்ட தியாகிகளுக்கு பென்ஷன் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, விடை பெறுகிறேன்.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : பேரவை உதவித் தலைவர் அவர்களே, 1977–78 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தை மாண்புமிகு நிதி அமைச்சர் மனோகரன் அவர்கள் இந்த அவையின்முன் வைத்துள்ளார்கள். இதில் அவருடைய திறமையும், நிதானமும் தெளிவாகத் தெரிகிறது. பொதுவாக, மாமூலாக வைக்கப்படுகின்ற அறிக்கையாக இருந்தாலும், முதன் முறையாக இவ்வறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, குறுகிய காலத்திலே அத்தனைப் பிரச்னைகளையும் அவர்கள் தெரிந்து கொண்டு, அதற்குத் தீர்வு காண்கின்ற முறையில், அத்தனை தரப்பினருக்கும் திருப்தி அளிக்கின்ற முறையிலே, இதைக் கொடுத்துள்ளார்கள்.

இது பொதுவாக வரியில்லாத ஒரு வரவு செலவுத் திட்டம். போட்டிருந்த வரிகளிலும் சில குறைக்கப்பட்டிருக்கின்றன. அது மட்டுமல்ல. ஏழை எளிய மக்களுக்கு ஓரளவுக்கு நிவாரணம் அளிக்கின்ற வகையிலே இந்த அறிக்கை கொடுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, கிராமவாசிகளுக்கு மிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, நான் இதை வரவேற்று, அதுவும் குறிப்பாக முதன் முறையாக இதனைச் சமர்ப்பித்த நிதி அமைச்சர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக, ஒரு முக்கியமான கருத்தை இந்தச்சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நமது தந்தை பெரியார் அவர்கள் அடிக்கடி எழுதியும், பேசியும் வந்திருக்கிறார்கள். அதாவது, 'தேர்தலில் கட்சிகள் நிற்பதும், வெற்றி பெறுவதும்,

[திரு. பி. கே. மூக்கையா தேவர்] [1977 ஆகஸ்டு 2

அரசு அமைப்பதும், அமைத்தவுடன் மக்களுக்கு நல்வாழ்வு அளிக்க வேண்டுமென்ற எண்ணத்தை விட்டு, அடுத்த ஐந்தாண்டு முழுவதும் அடுத்து வருகின்ற தேர்தலில் எப்படிக் கட்சியை வெற்றி பெறச்செய்வது என்ற எண்ணத்திலே இருப்பார்கள். இதனால் நல்லாட்சி மக்களுக்குக் கிடைப்பது கடினமாகி விடுகிறது. இது ஒழிய வேண்டுமென்று' சொல்லியிருக்கிறார்கள். இந்தக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு, புதிதாகப் பதவியேற்றுள்ள நமது மாண்புமிகு முதல்வர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் இந்த அரசின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு, அதற்கான ஒரு வழியிலே போகின்ற அறிகுறியைக் காண்கிறேன். அந்த வழியில் நடக்க வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

காரணம், பொதுவாக இன்றைக்கு இருக்கின்ற நிலையில் பல பிரச்னைகள் எழுந்துள்ளன. உதாரணமாக, இந்தப் புதிய அரசு வந்தவுடன் பல சோதனைகள் வந்தன. மாணவர்கள் போராட்டம், அடுத்தது எம்.பி.பி.எஸ்., தேர்வு. இந்த இரண்டும் மிக முக்கியமானது. இதற்கு மிக அழகாக, நல்ல முறையிலே அவர்கள் இதை அணுகி, இதற்குத் தீர்வு கண்டிருக்கிறார்கள். அதுவும், குறிப்பாக எம்.பி.பி.எஸ்., தேர்வில் எந்தத் தலையீடும் இல்லாத, ஓரளவுக்குக் குறைபாடு இல்லாத வகையிலே நிறைவேற்றியிருப்பதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் இன்னொன்றையும் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். காவிரிநீர்ப் பிரச்சினையில் அதிக விவகாரத்தை வளர்க்காமல் குறுகிய காலத்தில் நல்ல முறையில் உடனடியாகத் தண்ணீரை விடுகிற அளவுக்கு ஒரு ஏற்பாட்டைச் செய்திருக்கிறார்கள். அது நிரந்தர நிவாரணமாக இல்லாது போனாலும் உடனடியாகத் தண்ணீர் விடுகிற அளவுக்கு ஒரு ஏற்பாட்டைச் செய்திருக்கிறார்கள். தற்காலிக சாந்தியாக அது அமைந்திருக்கிறது.

முதல்வர் அவர்களுக்கு அண்டை மாநில மக்களிடத்திலும், அரசிடத்திலும் நன்மதிப்பு இருக்கிறது. அந்த நன்மதிப்பை நல்லபடியாக, நாட்டினுடைய நலனுக்காக உபயோகப்படுத்துவார், உபயோகப்படுத்த வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ளுகிறேன். காரணம் இன்றைக்கு உயிர்ப் பிரச்சினையாக இருப்பது தண்ணீர்ப் பிரச்சினை. இன்றைக்குத் தண்ணீர் என்பது மனிதனுக்கு வேண்டிய மூன்று முக்கியமானவற்றில் ஒன்று. ஒன்று காற்று, இரண்டாவது தண்ணீர், அடுத்தது உணவு. உணவு இல்லாமல் பல நாட்கள் இருக்கலாம். தண்ணீர் இல்லாமல் ஒரு நாள், இரண்டு நாட்களுக்கு மேல் இருக்க முடியாது. காற்று இல்லாமல் ஒரு நிமிஷம் இரண்டு நிமிஷம் கூட இருக்க முடியாது. அவ்வளவு உயிர்ப் பிரச்சினையாக இருக்கும் தண்ணீர், பெரும் விவகாரத்தைக், குறிப்பாகத் தமிழ் நாட்டில் ஏற்படுத்தியிருக்கிறது.



1977 ஆகஸ்டு 2] [திரு. பி. கே. மூக்கையா தேவர்]

இன்றைக்கு வடநாட்டை அதே காலத்தில் பார்த்தால் ஐந்தாறு மாநிலங்கள் வெள்ளத்திலேயே மிதப்பதைப் பார்க்கலாம், டிரெயினில் போனால் பார்க்கலாம். வெள்ளச் சேத நிவாரணத்திற்காக வருஷத்திற்கு ஐந்தாறு கோடி ரூபாய் செலவழிக்கப்படுகிறது. தென்னாட்டில், குறிப்பாகத் தமிழ்நாட்டைப் பார்க்கும்போது வறட்சிப் பகுதிக்கு 100 கோடி, 200 கோடி என்று செலவழிக்கப்படுகிற நிலை இருக்கிறது. வேறு எந்த நாட்டிலும் இப்படிப்பட்ட நிலைமை கிடையாது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மக்களின் பெரும் நம்பிக்கைக்குப் பாத்திரப்பட்டவர்கள். அண்டை மாநிலங்களில் உபரியாகப் போகின்ற நீரைப் பெற்றுத் தர வேண்டும். குறிப்பாக கேரளாவில்—டெக்னோ எகனாமிக் சர்வே என்று உலகப் பொருளாதார நிபுணர் லோகநாதன் அவர்கள் ரிப்போர்ட் கொடுத்திருக்கிறார்கள்—எத்தனை ஆண்டுகளானாலும் தனக்கு மிஞ்சி இருக்கும் தண்ணீரைத் தமிழ்நாட்டுக்குத் தந்தால் 5 லட்சத்திலிருந்து 10 லட்சம் ஏக்கர் வரை பாசன வசதி பெற முடியும். அதே போல் எத்தனை ஆண்டுகளுக்கு ஆந்திர மாநிலம் தன்னுடைய தண்ணீரைத் தனக்கு உபயோகித்துக் கொண்டது போக உபரி நீரைத் தமிழகத்திற்குத் தந்தால் 20 லட்சம் ஏக்கர் நிலம் தமிழ்நாட்டில் பாசன வசதி பெறும் என்பது பற்றியெல்லாம் தெள்ளத் தெளிவாக அவர்கள் எழுதியிருக்கிறார்கள். ஆனால் அது ஒரு கனவாகவே இருக்கிறதே தவிர, நினைவாகும் சாத்தியக்கூறு இல்லை. ஆகவே, இன்றைக்குள்ள பிரச்சினை அண்டை மாநிலங்களை அணுகி நல்ல விதமாகத் தண்ணீரைத் தமிழ்நாட்டுக்குத் திருப்பும் வகையில் காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு நம் நாட்டில் கிரவுண்ட் வாட்டர் ஸ்கீம் போடப்பட்டிருக்கிறது. நிலத்தடி நீரைப் பற்றி ஆராய்கிறவர்கள் நம்முடைய மாநிலத்தில் பல பகுதிகளை ஆராய்ந்தார்கள், கோவையில் ஆராய்ந்தார்கள், தென்னாற்காடு, வட ஆற்காடு பகுதிகளில் ஆராய்ந்தார்கள், பழனி பக்கத்தில் ஆராய்ந்தார்கள். அவர்கள், இந்த நிலத்தடி நீர் வெகு விரைவில் வற்றிவிடும், வறண்டு விடும், தமிழ்நாட்டின் பல பகுதிகள் பாலைவனமாகப் போய்விடும் என்று திட்டவட்டமாக ஆராய்ந்து சொல்லியிருக்கிறார்கள்.

குறிப்பாக, வெளிநாடுகளில் இருந்து வந்து ஆராய்ந்தவர்கள் குறித்து வைத்திருக்கிறார்கள். கோவையில் ஒரு பகுதி 15 ஆண்டுகளுக்குள் பாலைவனமாகிவிடும் என்று எழுதியிருக்கிறார்கள். அந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. நம்முடைய கடமையை எண்ணிப் பார்க்கும்போது நம்முடைய மாநில அரசு இன்றைக்கு இருக்கும் நிலையில் மலைகள், மரங்களற்று பாறைகளாகக் காட்சியளிக்கும் நிலையை மாற்ற வேண்டும். இது நாம் செய்ய வேண்டிய கடமை. ஃபாரஸ்ட் டிப்பார்ட்மெண்ட் இருக்கிறது. இவர்கள் எங்கே மரம் நடுகிறார்கள்? ரோடுகளில் நடுகிறார்கள். ரோடில் நடப்படுகிற அந்தச் செடிகள் மறுநாள் இருப்பதில்லை.

பஞ்சாயத்து மரங்களைப் பாதுகாக்கிறதா அல்லது மரங்கள் பஞ்சாயத்தைப் பாதுகாக்கிறதா என்று தெரியவில்லை. அடிமரம் இருக்கும்போது மேல் மரம் போய்விடும். இந்த மலைகள் மரங்களற்று பாறைகளாக இருப்பதால் வெயில் படும்போது ரிப்ளெக்ஷனில் க்ளவுட்ஸ் இருப்பதில்லை.

(முற்பகல் 10-50)

ஆகவே பாலைவனமாகின்ற நிலை உருவாகிவிட்டது. மணலைக் கொண்டுவந்து கீழே தள்ளிவிடுகிறது, அதை எடுப்பதற்குக் கோடிக் கணக்கான ரூபாய்களைச் செலவழிக்கிற நிலைமை ஏற்படுகிறது. ஆகவே மலையைப் பாதுகாக்க வேண்டும், பாறைகளுக்கு இடையே மரங்களை நடவேண்டும், மரங்களை வளர்த்தால்தான் மழை பெய்யும். நாம் இயற்கைக்கு விரோதமாக நடநது கொண்டிருக்கிறோம். வைசாக்கில் பாறைகளில் மரங்களை நட்டு இன்றைக்கு ஒரு சோலைவனமாக மாறியிருக்கிற காட்சியை நாம் எல்லாம் பார்க்கிறோம். ஆகவே அந்த வகையிலே இந்த அரசு ஈடுபடவேண்டும்.

அது மட்டுமல்ல, சராசரி மழையின் அளவே தமிழ்நாட்டில் குறைந்து விட்டது. நிலத்தடி நீரால் இனிமேல் எந்தவிதமான பிரயோஜனமும் இல்லாமல் இருக்கிறது, ஆகவே இன்றைக்கு இந்தியாவின் தாரக மந்திரமே, அது எந்த அரசாக இருந்தாலும், எந்தக் கட்சியாக இருந்தாலும், எவ்வளவு திறமைகள் இருந்தாலும், கங்கை-காவிரி இணைப்புத் திட்டத்தை நிறைவேற்றியாக வேண்டும், இல்லாவிட்டால் தண்ணீர்ப் பிரச்னையைத் தீர்க்க முடியாது, எந்த அரசும் நிலைக்க முடியாது. எனவே நம்முடைய தாரக மந்திரமே கங்கை-காவிரி இணைப்பு என்பதாகத்தான் இருக்க வேண்டும்.

இங்கே திரு. உமாநாத் அவர்கள் சொன்னதுபோல் இது மத்திய சர்க்காருடைய கடமையாக இருந்தாலும்கூட நாம் அடிக்கடி சுட்டிக் காட்ட வேண்டிய கடமையிலே இருக்கிறோம். இதுபற்றி நான் பாராளுமன்றத்திலே பேசியிருக்கிறேன், பரம்பரை பரம்பரையாக 2 ஆயிரம் 3 ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக சொல்லப்பட்டு வருகிற நெல் களஞ்சியம் தஞ்சாவூர் கூடிய விரைவில் பாலைவனமாகிவிடுமென்ற நிலைமை மக்கள் கருதக்கூடிய நிலைமை இன்றைக்கு இருக்கிறது. ஆகவே இதிலே அரசியல் வேறுபாடுகள் கருதாமல் பிரச்னையை உடனடியாகத் தீர்க்க வேண்டும். நாட்டிலே பிரச்னைகள் அதிகமாக அதிகமாக, விவகாரங்கள் அதிகமாக அதிகமாக பிரச்னையை நீட்டிக்கொண்டு போகக்கூடாது. நீட்டிக்கொண்டு போனால் பிரச்னைகள் அதிகமாகிக் கொண்டேபோகும்; ஆகவே இதை அரசியல் பிரச்னையாகக் கருதாமல் தமிழ்நாட்டைப் பாதிக்கும் பெரும் பிரச்னையாகக் கருதி, அத்தனை



பேர்களும் ஒன்றுகூடி அரசியலுக்கு அப்பாற்பட்ட முறையிலே இந்தப் பிரச்னையைத் தீர்க்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு நம்முடைய அன்புக்குரிய முதலமைச்சர் அவர்கள் பல துரிதமான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருந்தாலும் இன்னும் பல திட்டங்களைப் போட்டாக வேண்டும். மக்களுடைய எதிர்பார்ப்புகளை நிறைவேற்றக்கூடிய முறையிலே திட்டங்களைப் போட வேண்டும். இங்கே உள்ள அத்தனை பேர்களும் மொத்தமாக நல்லவிதமாக ஒன்றுகூடி தமிழ்நாட்டின் பொதுப் பிரச்னைகளை, நாட்டிலே முன்னணியிலே நிற்கக்கூடியதாக தமிழ்நாட்டை ஆக்கக்கூடிய விதத்தில் நடந்து கொள்ள வேண்டும். இந்தச் சட்டசபையைப் பார்க்கிறபோது, இருவர் போராட்டமாக அமைந்திருப்பது போல் வெளியே உள்ளவர்கள் கருதக்கூடிய நிலைமை இருக்கக்கூடாது, இதைப் போராட்டக் களமாக்கிவிடக் கூடாது. எந்தப் பிரச்னையையும் நாட்டின் பிரச்னை, மக்களின் பிரச்னை என்று நினைத்து அணுக வேண்டும்.

அடுத்தபடியாக வரவு-செலவுத் திட்டத்தில் பல திட்டங்களைப் பொறுத்த வரையில் ஆங்காங்கே கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள்; ஆரம்ப நிதிநிலை அறிக்கையாக இருப்பதால் அந்தப் பிரச்னைகளையெல்லாம் ஆங்காங்கே கட்டிக்காட்டி இருக்கிறார்கள். தமிழ்நாட்டிலே தண்ணீர்ப்பஞ்சம் ஒரு பக்கம், அடுத்த பக்கம் நமக்கு இருக்கிற வாய்ப்பை நாம் புரிந்துகொள்ளாமல் இருப்பது.

தமிழ்நாடு ஒரு நீண்ட கடற்கரையைப் பெற்றிருக்கிறது, இதை நான் மட்டுமல்ல, மற்றவர்களும் கருதிக் கொண்டிருக்கிறார்கள். நிலத்திலே extensive and intensive cultivation is already over என்ற நிலைமைக்குப் போய்விட்டது. எவ்வளவுதான் நாம் உரப்பொடியைப் போட்டு கஷ்டப்பட்டு ரத்தத்தைத் தண்ணீராக இறைத்து விவசாயம் செய்தாலும்கூட இன்னும் பற்றாக்குறை இருந்து கொண்டிருக்கிறது. நமக்கு வாய்ப்பாக இருப்பது நீண்ட கடற்கரை. கடல்படு பொருள்கள் என்ன என்ன, கடலிலே என்ன என்ன இருக்கின்றன என்பதே நமக்குத் தெரியாது—உலகத்திலே இல்லாத முத்துக் குளிப்பு இங்கே நடக்கிறது, உலகத்திலே ஏற்றுமதி செய்யப்படுகின்ற மீன்கள் இங்கே இருக்கின்றன—எவ்வளவு சாத்தியக்கூறுகள் இருக்கின்றன, கடலிலே என்ன என்ன கிடைக்கின்றன, எப்படி எப்படி பயன்படுத்தலாம் என்பதைப்பற்றியெல்லாம் ஒரு மாஸ்டர் பிளான் இன்னும் தீட்டப்படாமல் இருக்கிறது.

இன்றைக்கு ஒரு உதாரணத்திற்காகச் சொல்கிறேன். இருப்பதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்குக் கச்சத் தீவு நம் கையை விட்டுப் போய்விட்டது. அது கையை விட்டுப் போகின்றபொழுது பார்லிமென்டிலே அதற்காகப் பெரும் சப்தம் போட்டு

எதிர்ப்பு தெரிவித்தோம். ஆனால் பிரயோசனமில்லை. அந்த விவகாரம் என்ன என்றே புரியவில்லை. 'பேரன் ட்ராக்' என்று நினைக்கிறார்கள். இரண்டு கோடி டன் ஆயில் ப்ளோ பெட்ரோல் இருக்கிறது என்று ரிப்போர்ட் வந்திருக்கிறது. அந்த அளவிற்கு உள்ள நிலைமைகளை இழந்து விட்டோம்.

இன்றைக்கு அந்தப் பகுதியில் உலகப் பிரசித்திபெற்ற மீன்கள் பிடிக்கப்படுகின்றன. 1,500 போட்கள் சுற்றி நிற்கின்றன. அத்தனை பேருக்கும் வேலை வாய்ப்பு இல்லை. அந்தப் பகுதியில் அவர்கள் நுழைய முடியாது. வேறு பகுதிகளைத் தான் மீன் பிடிப்பதற்காகப் பார்க்க வேண்டும். அதற்கான ஒரு திட்டத்தை நாங்கள் கொடுத்திருக்கிறோம். முதுகுளத்தூர் பகுதியிலே, பாம்பன் பகுதியில் இருக்கும் ஆயிரம் படகுகள் இருக்கும் மீனவர்கள் உள்ள இடத்தில் பாதுகாப்பு அளிக்கும் அளவிற்கு மீன்பிடி இடங்களாக மாற்றிக் கொடுக்க வாலிநோக்கம் என்ற இடம் இருக்கிறது. அது இயற்கைத் துறைமுகம். மூக்கையூர் என்ற பகுதி இருக்கிறது. பிஷிங் போட் நிற்கும் அளவிற்குப் படகுத் துறைமுகமாக அது அமைக்கப்பட வேண்டுமென்று கூறியிருக்கிறேன். சேர்ந்தாற் போல பாம்பனிலிருந்து முதுகுளத்தூர் வரைக்கும் அந்தத் திட்டத்தை நிறைவேற்றும் வகையில் திட்டம் வந்திருக்கிறது. இது பரிசீலனையில் இருந்துகொண்டே இருக்கிறது. தயவுசெய்து உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன். இதற்கு முதலிடம் கொடுத்து இந்த அரசு நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதனால் இரண்டு பிரச்னைகள் தீர்கின்றன. ஒன்று மீனவர்களுக்குப் பாதுகாப்பு கிடைக்கும். இரண்டாவதாக, முதுகுளத்தூர் பஞ்சப் பகுதி, புறக்கணிக்கப்பட்ட பகுதி. தேசத்திற்காகப் பாடுபட்ட பெரிய தலைவர் முத்துராமலிங்கத் தேவர். அந்தப் பகுதியைச் சேர்ந்தவர். அப்படியிருந்தும் அந்தப் பகுதி புறக்கணிக்கப்பட்டு வந்திருக்கிறது. அதற்கு ஒரு நிவாரணம் கிடைக்கும் இந்தத் திட்டத்தின் மூலம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்குப் பிற்பட்ட பகுதி என்று மாநிலத்திலே பல பகுதிகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அதில் தென் ஜில்லாக்கள் புறக்கணிக்கப்படுகின்றன என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன். மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டத்தில் ஒரு பகுதி ஆகியவை அப்படியிருக்கின்றன. உதாரணத்திற்கு எடுத்துக் கொண்டால் இன்றைக்கு உசிலம்பட்டி தாலுக்காவிலே அல்லது முதுகுளத்தூர் தாலுக்காவிலே அல்லது சங்கரன்கோயில் தாலுக்காவிலே எத்தனை இன்ஜினியர்கள் படித்து இருக்கிறார்கள், எத்தனை டாக்டர்கள் பட்டம் பெற்றிருக்கிறார்கள் என்று சுதந்திரம் பெற்று முப்பதாண்டுக் காலத்திற்குப் பிறகு பார்த்தால் ஆச்சரியமாக இருக்கிறது. அநேக சலுகைகள் கொடுக்கப்பட்டன, ஆனால் அவைகள் நடைமுறையில் கிடைக்கவில்லை.





அதுமட்டுமல்ல, முதுகுளத்தூர் தாலுக்காவிலே ஒரு சதுர மைலுக்கு 200 பேர் குடியிருந்தவர்கள் இன்றைக்கு 90 பேர்தான் இருக்கிறார்கள். அப்படிக் குடிபெயர்ச்சி ஆரம்பித்துவிட்டது. தஞ்சம் பிடிக்க இடமில்லை. மலேயா, சிங்கப்பூர், பர்மா போன்று தஞ்சம் கொடுக்கப் பகுதி இல்லை. எனவே, அவர்கள் இன்றைக்குச் சென்னையை நோக்கிப் பயணத்தைத் துவங்கியிருக்கிறார்கள். 6, 7 கிராமங்கள் ஏற்பட்டிருக்கின்றன முதுகுளத்தூரிலிருந்து மட்டும் வந்தது. இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்பட்டால் the problem of the city is problem of India என்று ஆகும். வேறு ஒரு பிரச்னை இருக்க முடியாது.

அந்த நிலைமைகளைப் போக்குவதற்காக அந்தப் பகுதி மக்களுக்குச் சில திட்டங்களை நிறைவேற்ற வேண்டும். குறிப்பாக முதலமைச்சரவர்கள் அந்தப் பகுதியினரின் சேவைக்கு என்று வந்திருக்கிறார்கள். அவரிடம் நாங்கள், அந்த மக்கள் பெரிதும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்தச் சந்தர்ப்பத்திலாவது அந்த மக்களுக்கு ஒரு நன்மை ஏற்படுமென்று கருதுகிறேன். நல்ல முறையில் நடக்க வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய பகுதியாகிய உசிலம்பட்டியைப்பற்றி ஒருசில வார்த்தைகள் சொல்லி முடித்துவிடுகிறேன். அதாவது உசிலம்பட்டியைப்பற்றி உங்களுக்கெல்லாம் தெரியும். அங்கே எந்தத் தொழிலும் கிடையாது. அங்கே ஒரு கூட்டுறவு மில் ஏற்படுத்த வேண்டுமென்று ஏறக்குறைய 1952 ஆம் ஆண்டிலிருந்து முயற்சி செய்து அது இடையில் வந்து அதற்காக ஒரு நாள் நிலங்கள் வாங்கப்பட்டு, ஜீப்புகள் வாங்கப்பட்டு கடைசியிலே என்ன காரணத்தினாலோ அது மேலூருக்குப் போய்விட்டது. அடுத்து மீண்டும் முயற்சித்தார்கள். அதற்காக இடங்கள் வாங்கப்பட்டு, அதிகாரிகள் நியமிக்கப்பட்டு மீண்டும் அது எங்கேயோ போய்விட்டது. ஆகவே, அந்தக் கூட்டுறவு மில் வேண்டுமென்ற அவசியமான நீண்ட நாள் மக்களுடைய கனவு நிறைவேற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல் உசிலம்பட்டி தாலூகா பகுதியும், அம்மையார் அவர்கள் இன்றைக்கு அங்கத்தினராக வந்திருக்கின்ற திருமங்கலம் பகுதியும் குடிதண்ணீருக்காகப் படாத பாடு பட்டுக்கொண்டிருக்கிறது. சென்ற ஆண்டு 110 அடிக்குக் குழாய் போட்டு அடித்தார்கள். இன்றைக்கு 110 அடி இருக்கிற இடமே தெரியவில்லை. வெறும் குழாய்தான் இருக்கிறது., தண்ணீர் கீழே இறங்கிவிட்டது.

(முற்பகல் 11-00)

அதுமட்டுமல்ல, திருமங்கலம் என்கின்ற அந்தப் பகுதி தொத்துநோய் நிறைந்திருக்கிற ஒரு பகுதி என்று அரசுத் தரப்பிலே தெரிவிக்கப்படுகிறது. ஆகவே, பாதுகாக்கப்பட்ட தண்ணீர் அப்பகுதிக்கு அவசியம் என்றும் கூறப்படுகிறது. அப்படி இருக்கிற நேரத்திலே திருமங்கலத்திற்கு ரூ. 75 இலட்சத்தில் ஒரு திட்டத்திற்கு எஸ்டிமேட் போடப்பட்டது. எஸ்டிமேட், எஸ்டிமேட்டாகவே இருக்கிறதே தவிர, நடப்பு வேலை எதுவுமே இல்லை.

அதே போல் உசிலம்பட்டிக்கு வைகையிலிருந்து தண்ணீர் கொண்டுவர ரூ. 25 இலட்சத்தில் திட்டம் தீட்டப்பட்டது. அது திட்டமாகவே இருக்கிறதே தவிர, நடைமுறைக்கு வருவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை. ஆகவே, இப்பொழுது நான் சொன்ன கருத்துக்களை மனதில் கொண்டு, திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று வேண்டி, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நிதி அமைச்சரவர்கள் இங்கு முன்மொழிந்துள்ள நிதிநிலை அறிக்கை பற்றி ஏற்கனவே, எங்கள் கட்சியினுடைய பல உறுப்பினர்கள் பல ஆலோசனைகளைக் கொடுத்துப் பேசியிருக்கிறார்கள். இன்று அவைகளையெல்லாம் ஒட்டுமொத்தமாகத் தொகுத்து, எங்களுடைய கட்சியின் சார்பிலே பின்வரும் கருத்துக்களை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முதலில், இந்திய நாட்டில், மிசா சட்டம் போன்று சனநாயகத்துக்கு விரோதமான சட்டங்களை இந்திய அரசியலமைப்புச் சட்டத்திலேயிருந்தும், சட்டப் புத்தகங்களிலேயிருந்தும், சட்டத்தினுடைய அட்டவணையிலேயிருந்தும் நீக்குவதற்காக நாம் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது என்பதை மீண்டும் நான் வலியுறுத்த விரும்புகிறேன். இன்றைக்குப் பொருளாதாரக் குற்றங்களைப் புரிபவர்கள், அவர்களுக்கு எதிராக மிசா சட்டம் போன்ற நடவடிக்கைகள் வேண்டுமென்ற பெயரில் ஒரு காரணம் சொல்லப்படுகிறது. ஆனால், அப்படிப்பட்டவர்களைச் சமாளிப்பதற்கு அத்தியாவசியப் பண்டங்கள் சட்டத்தின் கீழே கடுமையான நடவடிக்கைகள் எடுப்பதன் மூலம் சமாளித்துக் கொள்ளலாம். அல்லது பொருளாதாரக் குற்றங்கள் புரிபவர்களைத் தண்டிப்பதற்கென்று வேறு விசேஷமான சட்டத்தைக் கொண்டு வரலாம். ஆனால் செய்யவேண்டாத செய்கையிலே கடந்த காலத்திலே மத்திய அரசாங்கத்தை நடத்திக் கொண்டிருந்த அரசு நாட்டைச் சர்வாதிகாரப் போக்கிலே கொண்டு செல்வதற்காக வைத்திருந்த மிசா சட்டம் போன்றவை நீடிக்கக்கூடாது என்ற எண்ணம் நம்முடைய நாட்டிலே பெருகி வருகிறது. நம்முடைய அரசாங்கமும், நம்முடைய சட்ட மன்றமும் அதைப் பிரதிபலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





இங்கே அவசரகால நிலைமை மீண்டும் ஏற்படாதவண்ணம் ஒன்றிணைந்து தடுத்து நிறுத்துவதற்கான சிபாரிசுகளை நாம் செய்ய வேண்டிய நிலைமையிலேயிருக்கிறோம். அதே போல், 42-வது அரசியல் சட்டத் திருத்தத்தினை நீக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டியது அவசியம் என்பதை இந்த மாநில அரசு இந்த மாநில சட்டப் பேரவை மூலம் அதற்கான தீர்மானத்தை இந்த மன்றத்திலே பிறிதொரு நேரத்திலே கொண்டு வரவேண்டுமென்றும் நான் இந்தச் சட்டமன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

நிதிநிலை அறிக்கையைப் பற்றி கூறுகின்றபொழுது, எங்களுடைய கட்சியினுடைய துணைத் தலைவர் தோழர் உமாநாத் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். இந்திய ஏகபோக முதலாளிகளுக்குச் சொந்தமான தொழிற்சாலைகளையும் அயல் நாட்டுப் பெரு முதலாளிகளுக்குச் சொந்தமான தொழிற்சாலைகளையும் நாட்டுடைமையாக்காமல், முக்கியமான அத்தியாவசியப் பண்டங்களிலே, இந்திய அரசாங்கமும் மாநில அரசாங்கங்களும் அந்த வியாபாரத்தைத் தங்கள் கையிலே வைத்துக் கொள்ளாமல், வெளிநாட்டிற்குக் கொடுக்க வேண்டிய கடன்களுக்கான வட்டியைத் தற்காலிகமாக நிறுத்தாமல் இருப்பதால் மத்திய அரசுக்கே நிதி ஆதாரத்திற்கு வழியில்லையென்று கூறினார்கள். அதை மீண்டும் வலியுறுத்துகிற நேரத்தில், நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக மாண்புமிகு உறுப்பினர் சாதிக் பாட்சா அவர்கள் மேற்கு வங்க முதலமைச்சர் ஜோதி பாசு அவர்களுடைய உரையையும், மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுச் செயலாளர் திரு. ஈ. எம். எஸ். நம்பூதிரிபாத் அவர்கள் உரையையும் மேற்கோள் காட்டி, மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்களும், நிதி வசதிகளும் கொடுக்கப்பட வேண்டுமென்று கூறினார்கள். அந்தக் கருத்துக்களோடு எங்களுக்குப் பூர்ணமான உடன்பாடு இருக்கிறது என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல்தான் இன்றைக்கு ஆளுங்கட்சியாக இருக்கிற அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்களும் வசதிகளும் வேண்டுமென்பதிலே தெளிவான கொள்கைகளை வைத்திருக்கிறார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன். மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று கூறுகின்ற கட்சிகள் அனைத்தும் இந்தப் பிரச்னையிலே ஒன்றாக நிற்க வேண்டும். அதேபோன்ற கொள்கைகளைக் கொண்டிருக்கிற மாநில அரசாங்கங்களும் ஒன்று சேர்ந்து, மத்திய அரசாங்கத்தை வற்புறுத்த வேண்டும். அந்தக் காரியங்களை நடத்த முன்வந்தால் அதை நான் ஆதரிக்கிறேன். நான் மகிழ்ச்சி அடைந்திருப்பேன், திராவிட முன்னேற்றக் கழகச் சார்பிலே, இந்தியாவிலேயிருக்கிற ஏகபோக முதலா

ளிகளின் தொழில்களையும் அயல் நாட்டுப் பெரு முதலாளிகளின் தொழில்களையும் நாட்டுடைமையாக்க வேண்டுமென்ற சிபாரிசையும் நாங்கள் சொல்வதைப் போல் அவர்கள் சொல்லியிருந்தால் மாநில அரசாங்கத்திற்கு நிதி கிடைக்கத்தக்க வழி சொல்லியிருக்கிறார்களென்று நாங்கள் நம்பி இருப்போம். மகிழ்ச்சி அடைந்திருப்போம். இன்றைக்கும் காலம் கடந்துவிடவில்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் நாளைக்குப் பேசும் பொழுது ஏகபோக தொழில்களைப் பட்டியல் போட்டு, அவர்களுடைய பிடியிலிருந்து நாட்டை மீட்டு, மத்திய அரசாங்கத்திற்கும் மாநில அரசாங்கத்திற்கும் அதிக நிதி கிடைக்க, இந்தக் கொள்கையை திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரிக்கிறது என்ற நிலையிலே அவர்கள் கருத்து தெரிவிப்பார்களென்று நான் எதிர்பார்க்கிறேன்.

இன்றைக்கு அதேபோல் நம்முடைய உணவுப் பெருக்கத்திலே வரக்கூடிய ஆண்டிலே 1976–77லே, 74 லட்சம் டன்னாக இருந்தது 1977–78லே 84 லட்சம் டன் குறியளவுக்கு உயரவேண்டுமென்று திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது நிதி அமைச்சர் அவர்களுடைய உரையில். ஆனால் அதைச் செய்யவேண்டும் என்றால் டெக்னிக்கல் எய்டு மட்டும்—தொழில் நுட்ப அபிவிருத்தி மூலமாக மட்டும் செய்ய முடியாது. காரணம் கடந்த காலத்திலே இந்தியாவிலே பொருளாதார நிபுணர்கள் எச்சரித்திருக்கிறார்கள். பசுமைப் புரட்சி என்று 'கிரீன் ரெவலூஷன்' என்று சொல்லி அரசாங்கப் பணத்தையும் கூட்டுறவுப் பணத்தையும் கிராமப்புறத்திலேயிருக்கிற நிலச்சுவாந்தார்கள் தங்கள் பக்கம் எடுத்துக்கொண்டு, பசுமைப் புரட்சி என்று உற்பத்தியைப் பெருக்கினால் அது யாருக்குப் போகிறது என்பது மிகப் பெரிய பிரச்சினையாகும். ஆகவே, அன்றைக்கே கூறினார்கள். இந்த நாட்டிலே இருக்கிற நிலச்சுவாந்தார்களுக்கு மட்டும் பசுமைப் புரட்சி என்று அரசாங்கப் பணத்தையும், கூட்டுறவுப் பணத்தையும் கொடுத்தால், அது சிவப்புப் புரட்சியிலே போய்முடியும் என்று எச்சரிக்கை கொடுத்திருக்கிறார்கள்.

உணவு உற்பத்தியைப் பெருக்குகிறோம் என்று சொல்லும் போது, அதிலே ஈடுபட்டிருக்கிற உழவர் பெருமக்களுக்கு நிலம் கிடைப்பதற்குத் தீவிரமான நிலச்சீர்திருத்தத்தை நாம் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது.

நிலச்சீர்திருத்தத்தைப் பொறுத்தவரையில் பெரும் அளவுக்கு மாநில அரசுகளுக்கே பொறுப்பு இருக்கிற காரணத்தால் நம்முடைய அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு வருகின்ற காலத்திலே விரிவாக அதுபற்றி, விரைவான, தீவிரமான நிலச்சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டு வருவார்கள் என்று நம்புகிறேன்.



அதே போல லாண்ட் ஆர்மி என்று கூறுகிறார்கள். இன்றைக்குக் கிராமப்புறத்திலே மட்டுமல்ல, பல தொழில்களிலும் பல மக்களுக்கு வேலை இல்லை. அவைகளை யெல்லாம் பட்டியல் எடுத்து, நாட்டிற்கும் கிராம மக்களுக்கும் நல்ல பல திட்டங்களைத் தீட்டி, அரசாங்கப் பொறுப்பிலேயே எடுத்து, கான்ட்ராக்டர்களுக்கு விடாமல், வேலையில்லாமலிருக்கும் மக்களுக்கு, குளம் குட்டைகளை வெட்டுதல், விவசாயத்திலே ஈடுபடுத்துதல் போன்ற காரியங்களிலே ஈடுபட்டால், நாட்டுச் செல்வங்கள் பெருகும், விவசாய மக்களுக்கும் வேலை கிடைக்கும்.

அது மட்டுமல்ல, தொழில் துறையிலும், கூட்டுறவுத் துறையிலும் இந்த ஆண்டு அரசாங்கம் கவனம் செலுத்தும் என்று கூறியிருக்கிறார்கள். ஜாயின்ட் செக்டார் என்று சொல்கிறார்கள். ஆனால், அது என்ன ஜாயின்ட் செக்டாராக இருக்கிறது. பணம் போட வேண்டியது அரசு நிறுவனங்களுடைய பொறுப்பு, மாநில சர்க்கார், மத்திய சர்க்கார், இந்திய அரசாங்கத்தினுடைய பினான்ஷியல் இன்ஸ்டிட்யூஷன்ஸ்—பண முதலீட்டு நிறுவனங்கள்—இவைகளெல்லாம் பணம் போடும். ஆனால் ஜாயின்ட் செக்டார் என்று சொல்லும் அந்தக் கூட்டு செக்டாரில் நிர்வாகத்தை நடத்தக்கூடிய பொறுப்பு ஏகபோக முதலாளிகளிடத்திலே விடப்பட்டிருக்கிறது.

கடந்த காலத்தில், ஸ்பிக் நிறுவனத்தில்—தூத்துக்குடியிலே இருக்கிற இரசாயன உரத் தொழிற்சாலையிலே ரூ. 60 கோடிக்கு மேல் மாநில அரசாங்கத்தினுடைய, மத்திய சர்க்காரினுடைய நிதி வழங்குகின்ற ஸ்தாபனங்கள் முதலீடு செய்திருக்கின்றன. ஆனால், அதிலே ரூ. $1\frac{3}{4}$ கோடிதான் தனிப்பட்ட முதலாளிகள் முதலீடு செய்திருக்கிறார்கள். ஆனால் 10 ஆண்டுகளாகத் தனிப்பட்ட முதலாளிகளிடம் அந்த கம்பெனியினுடைய மானேஜிங் டைரக்டர் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இது கடந்தகால அரசால் செய்யப்பட்டிருக்கிறது. இது எவ்வளவு பாதகம் என்பதை பப்ளிக் அக்கவுன்ட்ஸ் கமிட்டியிலே கூறியிருக்கிறோம். அன்றைக்கு அதிகாரிகள் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். பணம் போடுவது அரசாங்கம், ஆகவே, நிர்வாகம் தனிப்பட்ட முதலாளிகளிடத்திலே இருக்கக் கூடாது. அரசாங்கம் எந்த விகிதாசாரத்திற்குப் பணம் போடுகிறதோ அந்த விகிதாசாரத்திற்கு ஏற்ற வகையிலே அதை ஏற்று நடத்துகிற பொறுப்பையும் அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று நான் கூறவிரும்புகிறேன்.

அடுத்தபடியாக, தொழிலாளர் பிரச்சினைக்குப் போவதற்கு முன்னால் ஒன்றைக் கூற விரும்புகிறேன். இன்றைக்கு நாட்டிலே வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி வருகிறது. அது முக்கியமாக சமுதாயத்தைப் பாதித்து பெரிய குழப்பத்தை உண்டாக்கக்கூடிய நிலையை ஏற்படுத்துகிறது. விலைவாசி

உயர்ந்து கொண்டே போகிறது. இந்த நேரத்திலே நாம் கூறுகிறோம், சோஷலிச நடவடிக்கையை, தீவிரமான சட்டத்தை (shift to the left) சமத்துவக் கொள்கையிலே இன்றைக்கு இருப்பதைக் காட்டிலும் முற்போக்கான தீவிரமான கோடிக்கணக்கான மக்களின், சாதாரண வாழ்க்கையை உயர்த்த வேண்டுமென்ற மாற்றுப் பாதையிலேதான் இந்த நாட்டு பிரச்னைகளைத் தீர்க்க முடியும் என்று மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி திட்டவட்டமாக நம்புகிறது.

குண்டு சட்டியிலே குதிரை ஓட்டுவதைப் போல இன்றைக்கு இந்த நாட்டிலே இருக்கிற கோடிக்கணக்கான மக்களின் பிரச்னைகளைத் தீர்க்க முடியாது. இந்த நாட்டிலே உள்ள தொழில்கள் நாட்டுடைமை ஆக்கப்பட வேண்டும். நிலச்சீர்த்திருத்தம் விரைவிலே கொண்டு வரப்பட வேண்டும். இன்றைக்கு வெளிநாட்டு ஏற்றுமதி இறக்குமதியை அரசாங்கம் சொந்தமாகச் செய்தால் தான் அரசாங்கத்திற்குப் பணமும் கிடைக்கும், திட்டங்களையும் நிறைவேற்ற முடியும். ஆகவே, இன்றைக்கு நாட்டிலே இடது சாரித் தரப்புக் கொள்கையைப் பின்பற்ற இந்த அரசும் பொறுப்பான எதிர்க்கட்சிகளும் வழிவகை காணுவார்கள் என்று நம்புகிறேன்.

அடுத்து, மிக முக்கியமான பிரச்னையை எடுத்து கொள்கிறேன். சுந்தரம் கிளேட்டன் தொழிற்சாலையிலே கதவடைப்பு நடைபெறுகிறது. அதுபற்றி பல பேசப்படுகிறது. ஆனால், உண்மை என்ன? நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் டெல்லியிலே பேசி இருக்கிற பேச்சு ஆகஸ்ட் 1 ஆம் தேதி இந்தியன் எக்ஸ்பிரஸில் வெளியிடப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 11-10)

Mr. Ramachandran said that in some industrial units in the State where there was lock-out the industrialists were maintaining goondas inside the factories. When the State Government asked them not to indulge in such aotivities, they told the State Government that they would solve their problems with the help of Central Government. The Centre should not yield to the opinion of these people, he added.

இதிலிருந்து என்ன தெரிகிறது? இந்த மாநிலத்தின் முதலமைச்சர் அவர்களுக்கு எல்லாவிதமான செய்திகள், திட்டங்கள், நடவடிக்கைகள் ஆகியவற்றைத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பிருந்தும், இந்த லாக்-அவுட் செய்யும் முதலாளிகள் அந்த பாக்டரியில் குண்டர்களை வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். அந்தக் குண்டர்கள் வேண்டாம் என்று மாநில அரசு சொன்னால், மத்திய அரசாங்கத்தின் துணைகொண்டு நாங்கள் அந்தப் பிரச்னையைத் தீர்த்துக் கொள்வோம் என்று சொல்கிறார்கள். மத்திய அரசாங்கம் இப்படிப்பட்ட முதலாளிகளுக்கு உதவி செய்ய



கூடாது என்று மாநில முதலமைச்சர் அவர்கள் சொல்லவேண்டிய நிலைமை ஏற்பட்டு இருக்கிறது என்று சொன்னால், பாடியில் நடைபெற்று இருக்கும் நிகழ்ச்சியின் பின்னணி என்ன? குண்டர்களை வைத்துக்கொண்டு இன்று பாடியில் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட நேரத்தில் சில அரசியல் கட்சிகள் அங்கே இருக்கும் தொழிலாளிகள்தான் பலாத்காரத்தில் ஈடுபடுகிறார்கள் என்று சொல்கிறார்கள். இது எவ்வளவு பொருத்தமற்றது என்பதை நான் அவர்களின் கவனத்திற்கும் இந்த அரசாங்கத்தின் கவனத்திற்கும் கொண்டு வர விரும்புகிறேன்.

நான் கேட்க விரும்புவது, அந்த முதலாளிகள் அங்கே குண்டர்களை வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். இந்த அரசாங்கத்தின் முதலமைச்சர் அவர்களும் அங்கே குண்டர்களை வைத்து இருப்பதாகக் கூறுகிறார்கள். இதிலே முதலாளி தொழிலாளி பிரச்னை எங்கே வந்தது? அங்கேயிருக்கும் ஏகபோக முதலாளி தொழிலாளர்களைத் தாக்குவதற்காக குண்டர்களை வைத்துக் கொண்டு இருக்கிறார். அந்தக் குண்டர்கள் வெளியேற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கையை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக அழுத்தந்திருத்தமாக நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

உண்மை நிலைமை இப்படியிருக்க, தொழிலாளிமீது பழி போடுகிறார்கள். நேற்றைய தினம் மேலவையில் நடந்த விவாதத்தில் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் அந்தப் பிரச்னை குறித்து தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் தேர்தல் உடன்பாடு இருக்கக் கூடிய காரணத்தால் அந்தக் கட்சியின் சார்பில் நடத்தும் தொழிற்சங்கத்திற்கு உதவி செய்வதற்காக பாடியில் இருக்கும் ஏகபோக முதலாளிகள் மீது குற்றம் சாட்டுகிறார்கள் என்று சில அரசியல் கட்சிக்காரர்கள் சொன்னார்கள். முன்னால் பேசிய ஜனதா கட்சி உறுப்பினர் கூடக் குறிப்பிட்டார்கள். நான் திட்டவட்டமாகக் கூறிக்கொள்கிறேன், அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் தேர்தல் உடன்பாடு உள்ளதால் இந்த நிலை ஏற்படவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். நாங்கள் நியாயத்தின் அடிப்படையில் கேட்கிறோம். தொழிற்சங்க உரிமையின் அடிப்படையில் கேட்கிறோம். இங்கே மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் இருக்கிறார்கள். அவர் திராவிட முன்னேற்றக் கழக தொழிற்சங்கத் தலைவர். அங்கே நடைபெற்றது என்ன என்பதை அவர்கள் அறிவார்கள். மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களும் அதைக் குறித்து குறிப்பிட்டார்கள். அங்கே நடந்தது என்ன? அங்கே வேலை நிறுத்தம் ஜூன் 7ஆம் தேதி நடந்தது. அந்த முதலாளி ஜூன் 10ஆம் தேதி லாக்-அவுட் செய்தார். தோழர் வி. பி. சிந்தன் அவர்கள் அந்தத் தொழிற்சங்கத்திற்குத் தலைவராக தேர்ந்

தெடுக்கப்பட்டது ஜூன் 12ஆம் தேதி. தோழர் வி. பி. சிந்தன்
தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதால் வேலை நிறுத்தம்
ஏற்பட்டதா? வேலை நிறுத்தம், லாக்-அவுட் ஏற்கெனவே நடை
பெற்று விட்டதால், அதனை பொறுப்பேற்று நடத்தக்கூடிய
திறமை படைத்தவர் வி. பி. சிந்தன் என்று தொழிலாளர்கள்
கருதியதால் அவரைத் தேர்ந்தெடுத்தார்கள். அந்த உரிமை
தொழிலாளிக்கு இல்லையா? ஆகவே, சில நடவடிக்கைகள்
அங்கே தெரிந்தோ தெரியாமலோ நடைபெற்று விட்டன.
ஆகவே, இது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில்
நடத்தப்படும் தொழிற்சங்கம் என்ற காரணத்தால் சலுகைகள்
கொடுக்கப்படுகின்றன என்று சொல்வது உண்மைக்குப் புறம்
பானது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

வேறு சிலர் சொன்னார்கள். இதிலே கோரிக்கை இல்லை.
தொழிற்சங்கப் போராட்டம், தொழிற்சங்கங்களில் பகைமை
என்று சொன்னார்கள். அது உண்மை அல்ல. தொழிலாளர்
நல அமைச்சர் கூறியது போல், 'இன்டர்நேஷனல் லேபர் ஆர்கனை
சேஷன்' சர்வதேச லேபர் ஆர்கனைசேஷன் ஒரு ஸ்டாண்டர்ட்
நிர்ணயித்து இருக்கிறார்கள். சென்ற ஆண்டைக் காட்டிலும் 5 சத
வீதம் உற்பத்தித் திறனை அதிகரிக்கலாம் என்று. ஆனால் இவர்
கள் 75 சத வீதம் உயர்த்தி இருக்கிறார்கள். 70 சத வீதம்
உயர்த்தலாம் என்பது தான் இன்டர்நேஷனல் லேபர் ஆர்கனை
சேஷன் ஸ்டாண்டர்ட். இவ்வளவு உயர்த்தி இருந்தும், அதற்கு ஈடு
கொடுங்கள் என்று தொழிலாளர்கள் கேட்கிறார்கள். இது
தொழிலாளி முதலாளி பிரச்னை இல்லை. அவர்கள் சொல்கிறார்
கள், 1976 டிசம்பர் மாதத்தில் எந்த ஓர்க்லோட் செய்தார்களோ
அதைச் செய்ய வேண்டும் என்றுத் தொழிலாளர்கள் சொல்கிறார்
கள். 1976 செப்டம்பர் மாதத்தில் இருந்து உற்பத்தித் திறனை
நாங்கள் செய்கிறோம் என்று. இது தான் உண்மை நிலை.
இதைத் தீர்ப்பதற்குப் பதிலாக, அங்கே குண்டர்களை வைத்துக்
கொண்டு தொழிலாளியைத் தாக்கிக் கொண்டு இருக்கிறார்கள்.
அதற்கு முதலாளிக்கு ஆதரவாக சில அரசியல் கட்சிகள் ஒரு சில
அரசியல் காரணங்களுக்காக செய்து கொண்டு இருக்கிறார்கள்.
இந்தப் பிரச்னை எல்லாக் கட்சிகளுக்கும் வரக்கூடிய பிரச்னை தான்
என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

பாடி தொழிற்சாலையில் 1,320 தொழிலாளர்கள் வேலை
செய்யும் இடத்தில் 700 தொழிலாளர்கள் மீது மேனேஜ்மெண்ட்
சார்ஜ் ஷீட் கொடுத்து இருக்கிறது. 50 சதவீத தொழிலாளர்
கள் மீது நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள். இந்த நிலைமை
இருந்தால் எப்படித் தொழில் அமைதி ஏற்படும். அந்த பாடி
மேனேஜ்மெண்ட்ஸ் பிரிட்டிஷ் கம்பெனி ஆதரவு இருப்பதால்
மத்திய அரசாங்கத்தின் துணையோடு அதைச் சமாளித்து விடலாம்
என்று பார்க்கிறார்கள். ஜனதா கட்சியின் அரசாங்கம் கடந்த
காலத்தில் இருந்து வந்த தவறான ஆட்சியைக் கண்டித்து,





மக்கள் ஆதரவு பெற்று ஆட்சிக்கு வந்து இருக்கும்
எதிர்த்து, மக்கள் ஆதரவு பெற்று ஆட்சிக்கு வந்து இருக்கும்
கட்சியாகும். ஆனால் இப்படிப்பட்ட முறையில் அந்த முதலாளி
களுக்கு ஆதரவாக இருக்குமானால், ஒரு மாநில அரசாங்கம்
நடவடிக்கை எடுப்பதற்குத் தடையாக மத்திய அரசாங்கம்
இருக்குமானால், அது உள்ளபடியே வருந்தத் தக்கது என்பதை
நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்** : தலைவரவர்களே, மத்திய அரசு கண்
காணிக்கும் என்று நான் கூறியது இந்தப் பிரச்சினையில் அல்ல.
ஜே. பி.-யின் கொள்கைக்கு எதிராக, மத்திய அரசின் சம்பந்தப்
பட்ட கொள்கைகளுக்கு எதிராக இந்த மாநில அரசு செயல்
பட்டால், அதை இந்த மாநில அரசு சரியாகச் செய்யவில்லை
என்றால், மத்திய அரசாங்கம் இந்த அரசாங்கத்தின் போக்கைக்
கண்காணிக்கும் என்று தான் குறிப்பிட்டேன்.

**திரு. என். சங்கரய்யா** : பேரவைத் துணைத் தலைவரவர்களே,
நண்பர் ஜேம்ஸ் அவர்களுடைய கட்சியின் சார்பில் ஒரு தொழிற்
சங்கம் இருக்கிறது. அவருடைய கட்சியைச் சேர்ந்த தோழர்
கே. எஸ். நாராயணன் அவர்கள் அதற்குத் தலைவராக இருக்
கிறார்கள். அது, என்பீல்ட் இண்டியா தொழிற் சங்கம்—நம்பர்
2264—அந்தத் தொழிற் சங்கத்தின் சார்பில், முதலமைச்சருக்குக்
கொடுத்த மனுவில் என்ன கூறியிருக்கிறார் என்றால், 1974-75-
76-ஆம் ஆண்டு போனஸ் கொடுக்கப்படவில்லை—ஒன்று. இரண்
டாவது, எல்லாத் தொழிலாளர்களுக்கும் உரித்தான ஏழு நாட்
கள் வேலை செய்தால் ஒரு நாள் விடுமுறை என்ற அந்த ஒரு
நாள் விடுமுறையும் இல்லாமல், ஏழு நாட்களும் உற்பத்திசெய்து
கொடுத்திருக்கிறார்கள். அந்த ஒரு நாளுக்குச் சம்பளம் கூட
பிரிவு பிரிவாகக் கொடுக்கப்பட்டது. அப்படிப்பட்ட நிலையில்
இருக்கிறது ஜனதா கட்சியைச் சேர்ந்த கே. எஸ். நாராயணன்
தலைமையிலுள்ள தொழிற் சங்கம் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

இப்படிப்பட்ட நிலையில், போராட்டம் என்றால், மார்க்சிஸ்ட்
கம்யூனிஸ்ட் கட்சி தூண்டி விடுகிறார்கள் என்று கூறினால் அது
சரிதானா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

அடுத்தது, காவிரி நீர்ப் பிரச்சினை. இதைப் பற்றி எல்
லோரும் கூறிக் கொண்டிருக்கிறார்கள். எங்கள் கட்சி அகில
இந்தியக் கட்சி. பல்வேறு அகில இந்தியக் கட்சிகளும் இருக்
கின்றன. தி.மு.க.-வும் அகில இந்திய அண்ணா திராவிட
முன்னேற்றக் கழகமும் தமிழ்நாடு தவிர மற்றும் சில இதர
மாநிலங்களில் கிளைகளை வைத்துக் கொண்டிருக்கின்ற கட்சிகள்.
அப்படிப்பட்ட நிலையில், காவிரி நீர்ப் பிரச்சினையைப் பொறுத்த
வரையில், தமிழகத்தின் உரிமை பாதுகாக்கப்பட வேண்டுமென்று
கூறுகிறோம். எந்த ஒரு ஒப்பந்தம் என்றாலும், தமிழகத்தின்
உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என்று கூறுகிறோம்.

ஆனால் இதிலே ஒரு கருத்து என்னவென்றால், கவர்னர் உரையின் மீது பேசிய போதும் குறிப்பிட்டோம், இந்த அரசாங்கம் எந்த ஒரு ஒப்பந்தம் கையெழுத்திடுவதற்கு முன்பு எல்லாக் கட்சிகளையும் கலந்து சம்மதத்தைப் பெற்று, பிறகு இதைச் செய்ய வேண்டுமென்று. இதை விட்டு விட்டு, தமிழ் நாட்டு மக்களின் நலனைக் காப்போம் என்று வீர உணர்வுகளைத் தூண்டி விட்டு இதர மாநிலங்களுக்கு உரிமை கிடையாது என்று பேசுவதால் பலனேதுமில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். காரணம் என்னவென்றால், இன்றைக்கு, கொடுக்கின்ற மாநிலங்களான கர்நாடக மாநிலத்திற்கும் கேரள மாநிலத்திற்கும் இதனால் பிரயோசனம் ஒன்றுமில்லை. ஆகவே அவர்களுக்கு ஒன்றும் கொடுக்கக் கூடாது என்ற தன்மையில் ஒருதலைப்பட்சமாகக் கேட்க முடியாது. முன்பு 1967-70ல் நான் இந்தச் சபையில் இருந்தபோது மாண்புமிகு நண்பர் கருணாநிதி அவர்கள் தலைமையில், காவிரி நீர்ப் பிரச்சினை சம்பந்தமாக எத்தனையோ கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறார்கள். ஆனால், அன்றிலிருந்து இன்று வரை, இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவு காணப்படவில்லை. ஆகவே, இதைத் தவிர, வேறெந்த விதமாகவும், வார்த்தைகளால், பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

பல்வேறு பிரச்சினைகளைப் பேசுகின்ற நேரத்தில், நிதியமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போதும் அவரால் பதில் கூற முடியாத ஏராளமான யோசனைகள் இங்கே உள்ள உறுப்பினர்களால் சொல்லப்படுகின்றன. அப்படி, இந்த அவையிலும், மேலவையிலும் கூறப்படுகின்ற யோசனைகளுக்கு, உறுப்பினர்களின் சந்தேகங்களுக்கு—அத்தனைக்கும் அமைச்சரே பதில் சொல்ல முடியாத காரணத்தால், அரசு தரப்பிலிருந்து சம்பந்தப்பட்ட உறுப்பினர்களுக்கு ஒரு அதிகாரி விளக்கம் தெரிவித்தால் அது பயனுள்ள காரியமாக இருக்கும் என்ற என் யோசனையை இந்த நேரத்திலே வற்புறுத்திக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படி, அந்த உறுப்பினர்களுக்கு, தனியாக, ஒரு கடிதத்தின் மூலம் பதில் எழுதினால், யோசனைகள் சொல்வதற்கு ஊக்கம் பிறக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அப்படிச் செய்தால், இந்த மன்றத்தில் சொல்லக் கூடிய உறுப்பினர்களின் கருத்துக்கள், யோசனைகள் என்ன ஆகின்றன என்று தெரியாமல் இருக்கின்ற சூழ்நிலை மாற்றப்பட்டு உறுப்பினர்கள் நல்ல கருத்துக்களைச் சொல்ல ஒரு வாய்ப்பாகவும் இருக்கும்.

[முற்பகல் 11-20]

அடுத்தபடியாக, ஜனநாயக உரிமைகள் பிரச்னைபற்றி ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். இந்த மாநிலத்தில் சிறையில் இருக்கிற நக்ஸலைட்ஸ் குறித்து அனுதாபத்துடன் கவனித்து அவர்





களை விடுதலை செய்ய வேண்டும் என்று ஏற்கனவே நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன். இப்போது மேற்கு வங்க சர்க்கார் நக்ஸலைட்ஸ்களை விடுதலை செய்திருக்கிறார்கள். தமிழ் நாட்டில் கலியபெருமாள் என்ற ஆசிரியரின் குடும்பமே ஆயுள் தண்டனைக் கைதிகளாக இருக்கிறார்கள். அவரது புதல்வர்கள் நம்பி, வள்ளுவன் ஆயுள் கைதிகளாக இருக்கிறார்கள். ஒரு குடும்பமே சிறையில் வாடுகிறது. மற்றும் பல நக்ஸலைட்ஸ் தோழர்கள் இன்று சிறையில் வாடுகிறார்கள். அவர்களது கொள்கைகளை நான் ஏற்றுக் கொள்ளவில்லை ஆனால் நாம் ஏன் அவர்களுக்குப் பயப்பட வேண்டும்? அவர்கள் பொது மக்களிடம் அவர்கள் கொள்கைகளை சொல்லட்டுமே. நாம் ஏன் பயப்பட வேண்டும் அவர்களுக்குப் புதிய உணர்ச்சி ஏற்படும் வகையில் இந்த நக்ஸலைட்டுகளை விடுதலை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கு சிறைகளில் நடந்த கொடுமைகள் பற்றிப் பேசினார்கள். சிறைச்சாலைகளை சீர்திருத்தம் செய்ய வேண்டியது அவசியம் தான். சாதாரண குற்றவாளிகளை சிறையில் தள்ளாமல் அவர்களை ஜாமீனில் விடவேண்டும். டிருபிக் கேஸ் போன்ற சிறு கேஸ்களுக்காக வழக்குப் போட்டு தண்டனை அளிக்கப்படுகிறது. போலீஸார் டிருபிக்கை கண்ட்ரோல் செய்ய வேண்டியது அவசியந்தான். ஆனால் ரோட்டில் போகிறவர்கள் கீழே நடந்து சென்றால் சார்ஜ் செய்வது என்றால், இந்த அதிகாரம் துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது. ஆகவே மாநில ரீதியில் இது தடுக்கப்பட வேண்டும். ஒழுங்காகப் போங்கள் என்று மைக் மூலம் பிரசாரம் செய்யலாமே தவிர அவர்கள் மீது வழக்கு போட்டால் அதனால் ஏழை மக்கள் தான் பாதிக்கப்படுகிறார்கள். ரோடில் போகிறவர்கள் ஏழை மக்கள்தான், காரில் போகிறவர்கள் இதனால் பாதிக்கப்பட மாட்டார்கள். அப்படி கார் மீது கேஸ் ஏதாவது போட்டாலும் டிரைவர்தான் பாதிக்கப்படுவார். எனவே இந்த டிருபிக் வழக்குகளை எல்லாம் போட வேண்டாம். மக்களிடம் ரோடு விதிகள், ஒழுங்குமுறை விதிகள் பற்றி பிரசாரம் செய்தால் போதும், இந்த சிறு குற்றத்திற்காக வழக்குகள் போட வேண்டாம்.

இனி ஒன்றை மட்டும் கூறி முடித்துக் கொள்கிறேன். வித்தியாசாகர் அவர்களும், ஜெயிலரும் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்க வேண்டும். இவ்வளவு பெரும் குற்றம் புரிந்தவர்களை சஸ்பெண்ட் செய்திருக்க வேண்டும். அப்படி சஸ்பெண்ட் செய்யப்பட்ட பிறகு விசாரணை நடத்தியிருக்க வேண்டும். கமிஷனில் அவர்கள் நடந்து கொள்ளும் முறை பற்றி பாதகமான ரிமார்க்ஸ் கூறி இருக்கிறார்கள். எந்த ஆட்சியாக இருந்தாலும் சரி, அல்லது எந்தக் கட்சியாக இருந்தாலும் மனிதர்கள் மனிதர்களாக நடத்தப்பட வேண்டும். அப்படித் தமிழ் நாட்டிலே நடத்தப்படுவார்கள் என்ற உத்தரவாதத்தை ஏற்படுத்த இந்தக் காரியத்தைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஜாதிப் பெயர்கள். ஜாதியை ஒழிக்கவேண்டும் என்று விரும்புகிறோம். பள்ளிக் கூடங்கள், கல்லூரிகள் அட்மிஷன் பாரத்தில் ஜாதிப் பெயரைக் கேட்கிறார்கள். அட்டவணைப் பிரிவினர், ஹரிஜனங்கள் அல்லது பழங்குடி, பிற்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்களா என்று மட்டும் கேட்டால் போதும். இந்த மக்கள்—இந்த மற்றவர்களைப் பற்றி ஏன் கேட்க வேண்டும். கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களின் பிள்ளைகளுக்கு என்ன ஜாதி என்று போடுவது? எனவே இது கலப்பு மணம் செய்துகொண்ட தம்பதிகளுக்கு ஒரு பிரச்னையாக இருக்கிறது. ஏன் இப்படி ஜாதிப் பெயர்களைக் கேட்க வேண்டும்? எனவே பிற்பட்ட வகுப்பினரா, ஹரிஜனங்களா அல்லது பழங்குடி மக்களா என்று கேட்பதோடு மட்டும் போதும்; பிற ஜாதிகள் பற்றி கேட்க வேண்டியதில்லை. இன்னின்ன ஜாதிகளுக்கு இன்னின்ன சுடுகாடு என்றிருக்கிறது. அதையெல்லாம் ஜாதியின் பெயரால் பங்கிட்டுக் கொள்ள வேண்டுமா? ஆங்கிலப்பட்டிகள், பஞ்சாயத்துக்கள் இவற்றின் மீது இருந்தால் மூலம் இந்த சீர்திருத்தத்தைச் செய்துவிடலாம்.

அடுத்தபடியாக, என்.ஜி.ஓ.-க்களிடம் 15 ரூபாய் பிடித்தம் செய்வது சம்பந்தமாக என்.ஜி.ஓ.-க்களிடம் நல்ல அபிப்பிராயம் இல்லை என்று தெரிகிறது. எனவே அவர்களோடு, என்.ஜி.ஓ.-க்கள் ஸ்தாபனங்களோடு கலந்துகொண்டு ஒரு முடிவு செய்ய வேண்டும்.

ரெட் டேப்பிஸம் பற்றி ஒரு வார்த்தை கூறிவிட்டு முடித்துக் கொள்கிறேன். க்ரோம்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் ஒரு டெலிவிஷன் வாங்குவதற்கு இரண்டு ரூபாய், நான்கு ரூபாய் என்று ரூ. 3,000 மாணவர்களிடம் இருந்து வசூலித்து ஒரு வருடமாகிறது. இன்னும் அங்கு டெலிவிஷன் வரவில்லை. அதைப் பற்றி மாணவர்கள் கேட்டபோது, எந்த டெலிவிஷன் வாங்க வேண்டும் என்று உத்தரவு வரவில்லை என்று சொல்லுகிறார்கள். ரெட் டேப்பிஸத்திற்கு இது ஒரு சிறிய உதாரணம்.

அடுத்தபடியாக, மதுரையில் காமராஜபுரம் என்ற இடம் இருக்கிறது. அங்கு 34 ஏக்கரில் பல வீடுகள் கட்டப்பட்டு விட்டன. மதுரை கார்ப்பரேஷனிலிருந்து ரோடு போட்டாகி விட்டது, தண்ணீர் சப்ளையும் கொடுத்தாகி விட்டது. 1954-ல் வி. என். பெருமாள் என்பவருக்கு நாலேமுக்கால் க்ரவுண்ட்ஸ் ஒதுக்கப்பட்டிருந்தது. அவர் அதை எடுக்கவில்லை. அது குறித்து அவர் சிவில் கோர்ட்டுக்கு போய் அங்கிருக்கும் வீடுகளை—கொடுத்திருப்பதை ரத்து செய்து—காலி செய்து கொடுங்கள் என்று உத்தரவு வாங்கியிருக்கிறார்கள். அவர் நிலத்திற்கான கிரயத்தைக் கொடுத்து விடுவதோ தவிர காலி செய்யச் சொன்னால் இப்போதிருப்பவர்கள் என்னாவது? இது டார்க்மென் கேட் விஷயம் மாதிரி இருக்கிறது. கட்டப்பட்டிருக்கும் வீடுகளை இடிப்பது





சாத்தியமல்ல. இதை ரெவின்யூ அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். வேறு நகரங்களிலும் சரி, ஏழை மக்களுக்காக வேறு ஒன்றும் செய்து கொடுக்க முடியவில்லை என்றாலும் அவர்கள் குடியிருக்கும் நிலங்களையாவது அவர்களுக்குப் பட்டா செய்து கொடுக்க வேண்டும். இது பலரைப் பாதிக்கும் பிரச்னை என்று கூறி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. ப. உ. சண்முகம்: பாயிண்ட் ஆப் பர்சனல் எக்ஸ்பிளனேஷன், மதிப்பிற்குரிய மார்க்ஸிஸ்டு கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் திரு. சங்கரய்யா அவர்கள் தெரிந்தோ தெரியாமலோ முதலாளிகளை ஆதரிக்கின்ற வகையில் நான் பேசியதாகத் தெரிவித்தார்கள். அது அவர் கருத்து. இருந்தாலும் தொழிலாளர்கள் அடிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். யார் அடிக்கிறார்கள் என்பது அல்ல பிரச்னை, அது ஐ.என்.டி.யு.ஸியைச் சேர்ந்தவர்களா, அல்லது ஸி.ஐ.டி.யு.ஸி.யை சேர்ந்தவர்களா, என்பதல்ல என்னுடைய பிரச்னை. தொழிலாளர்கள் அடிபட்டிருக்கிறார்கள் என்பதை கம்யூனிஸ்டு கட்சி தலைவர் அவர்களே ஒத்துக் கொண்டார்கள். தொழிலாளர்கள் அடிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவேதான் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டாமா என்ற குற்றச்சாட்டை நான் சொன்னேனே தவிர முதலாளிகள் அடித்தால் நடவடிக்கை எடுக்க வேண்டாம். கம்யூனிஸ்ட் கட்சியினர் அடித்தால் நடவடிக்கை எடுங்கள், அல்லது ஐ.என்.டி.யு.ஸி.-யை சேர்ந்தவர்கள் அடித்தால் வழக்குப் போடுங்கள் என்று நான் சொல்ல வரவில்லை. பொதுவாக தொழிலாளர்கள் அடிக்கப்படுகிறார்கள். அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்காமல் காவல்துறை பார்த்துக்கொண்டு இருக்கக் கூடாது என்றுதான் சொன்னேனே தவிர நான் எந்த தொழிற் சங்கத்தினரையும் குற்றம் சொல்வதற்காக இதைச் சொல்லவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தொழிலாளர்கள் எல்லோருக்கும் பாதுகாப்பு தரப்பட்டுள்ளது. சில இடங்களில் நடந்திருக்கின்ற குற்றங்களுக்காக இரு சாரார் மீதும் வழக்குகள் தொடரப்பட்டிருக்கின்றன. நான் இரு சாரார் என்று குறிப்பிட்டது, ஐ.என்.டி.யு.ஸி.-யை சேர்ந்தவர்கள் மீதும், சி.ஐ.டி.யு.ஸி.யை சேர்ந்தவர்கள் மீதும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா: ஒரு தன்னிலை விளக்கம் அளிக்க விரும்புகிறேன். திரு ப. உ. சண்முகம் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஒருவர் அடிபட்டால் அதில் இரண்டு பேர்கள் சம்பந்தப்படுகிறார்கள். ஒருவன் அடிபடுகிறான், ஒருவன் அடிக்கிறான்

[திரு. என். சங்கரய்யா] [1977 ஆகஸ்டு 2

ஒரு கொலை நடந்தது என்று சொன்னால் ஒருவன் கொலை செய்
யப்படுகிறான், ஒருவன் கொலை செய்கிறான். இதில் கொலை செய்
தவன் யார், கொலை செய்யப்பட்டவன் யார் என்பது வேறு
பிரச்னை. தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் சட்டம் அத
னுடைய நீண்ட கரங்களை நீட்டி அதன் மூலம் தகுந்த நடவடிக்கை
எடுத்திருக்கிறது என்று சொன்னார்கள். அதைப் பற்றி எனக்கு
ஆட்சேபனை எதுவும் இல்லை. ஆனால் இங்கு முதலாளிகள்
குண்டர்களை உள்ளே வைத்திருந்தார்கள் என்று முதலமைச்சர்
அவர்கள் கூறினார்கள். அதை திரு. சண்முகம் அவர்கள்
ஏற்றுக்கொள்கிறார்களா இல்லையா என்பதைத் தெரிந்து கொள்ள
விரும்புகிறேன்.

<u>திரு. ப. உ. சண்முகம்:</u> இதிலுள்ள ரகசிய விவரங்கள்
எல்லாம் எனக்குத் தெரியாது. நான் தெரிவித்தது எல்லாம் அங்
கேயிருக்கிற தொழிலாளர்கள் அடிக்கப்படுகிறார்கள். அங்
கிற தொழிலாளர்களுக்குப் பாதுகாப்புக் கொடுங்கள். அடிபடு
தான் வற்புறுத்தினேன். அடித்தவர்கள் யார் என்பதோ என்று
லது கொலை செய்தது யார் என்பதோ வேறு பிரச்னை. பாதுகாப்பு அல்
வேண்டும் என்பதைத்தான் நான் முக்கியமாகத் தெரிவித்தேன்
என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

<u>திரு. ஜே. ஜேம்ஸ் :</u> தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு
கொடுக்கப்பட்டிருப்பதாக இங்கு அமைச்சர் அவர்கள் சொன்னார்
கள். அப்படியானால் 17 பேர் ரத்த காயங்களோடு மருத்
துவ மனையில் சிகிச்சை பெற்று வருவது ஏன்? பாதுகாப்பு கொடுக்
கப்பட்டிருந்தால், இப்படி நடைபெற்றிருக்க முடியுமா என்
பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :</u> துணைத் தலைவர்
அவர்களே, 17 பேர் மருத்துவ மனையில் இருக்கிறார்கள் என்று
சொல்வது சரியல்ல என்றும், நாகலிங்கம் என்ற அகில இந்திய
அண்ணா திராவிட முன்னேற்றக் கழக பாடி அமைப்பாளர் தான்
மருத்துவ மனையில் இருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக்
கொள்கிறேன். எவ்வளவு தான் எச்சரிக்கையோடு இருந்தா
லும், கொலை, களவு, காமம் போன்ற குற்றங்கள் நடை பெற்று
விடுகின்றன. இதில் தவறு செய்கின்றவர்கள் மீது வழக்
கும் தொடரப்படுகின்றது. கொலை செய்தால் தூக்குத் தண்
டனை உண்டு என்று எல்லோருக்கும் தெரியும். இருந்தாலும்
கொலைகள் நாட்டில் நடைபெற்றுக் கொண்டு தான் இருக்கின்றன.
இருந்தாலும் எந்த அளவுக்கு எச்சரிக்கையாக இருக்க முடியுமோ
அந்த அளவுக்கு எச்சரிக்கையாக இருந்து பாதுகாப்பும் கொடுக்
கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1977 ஆகஸ்டு 2]

<u>திரு. டி. ராமசாமி :</u> பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனக்குத் தந்திருக்கின்ற ஐந்து நிமிடங்களில் எனது கருத்துக்களைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தேர்தல் அறிக்கையிலும் ஆளுநர் உரையிலும் விவசாயிகளுக்குப் பூச்சி மருந்து, உரம் போன்றவைகளுக்கு விலை குறைக்கப்படும் என்று கூறியிருந்தார்கள். ஆனால் இந்த நிலைநிதி அறிக்கையில் அதைப் பற்றி எதுவும் குறிப்பிடாமல் இருப்பது வருந்தத்தக்கது. ஆகவே அதை மறுபரிசிலனை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போன்று குடிதண்ணீர் கஷ்டத்தைக் குறிப்பிட்ட ஒரு காலவரையறைக்குள் தீர்த்து வைக்க பட்ஜெட்டில் திட்டம் சமர்ப்பிக்கப்படும் என்று கூறப்பட்டிருந்தது. அந்த மாதிரியான திட்டம் எதுவும் இதில் கூறப்படவில்லை. பட்ஜெட்டில் 663 கோடி செலவு செய்யப்பட்டிருப்பதில், குடிதண்ணீருக்காக ஒதுக்கப்பட்டிருப்பது 6.65 கோடி தான். இதன் மூலம் வருடம் ஒன்றுக்கு 2,000 கிராமங்களுக்கு குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க முடியும். அப்படியானால் எல்லாக் கிராமங்களுக்கும் தண்ணீர் வசதி செய்து கொடுக்க குறைந்தது எட்டு ஆண்டுகளாவது ஆகும். ஆகவே குடிதண்ணீருக்கு இன்னும் அதிக நிதி ஒதுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

கோவை மாவட்டத்தில், நிலத்தடி நீரைத்தான் அதிகப்படியாகப் பயன் படுத்த வேண்டும். இதன் காரணமாக இன்னும் சில காலங்களுக்குள் கோவை மாவட்டமே பாலைவனமாகப்போகும் என்று நிபுணர்கள் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். மேலும், பரம்பிக்குளம் ஆளியாறு விஸ்தரிப்புத் திட்டம், பாண்டியாறு புன்னம்புழா திட்டம், அமராவதி சானல் திட்டம் இவை பற்றி எதுவும் இதில் சொல்லப்படவில்லை.

[முற்பகல் 11-30]

கோவை மாவட்ட மக்கள் மிகவும் ஏமாற்றத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். பலவீனமாக உள்ள அந்த மாவட்டத்தை அனுதாபத்துடன் அணுகி, அதற்கு வேண்டிய தீர்வுகள் செய்து கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

மின்சாரத்தைப் பொறுத்தவரையில், 2,364 மெகோ வாட் உற்பத்தியாகி இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் மின்சார வெட்டு 30 சதவீதம் இருக்கிறது. அப்படி இருக்கும்போது இன்னும் 700 மெகோ வாட் உற்பத்தி இருந்தால்தான், இந்த வெட்டைச் சரிக்கட்ட முடியும். அப்படி இருக்கும்போது, இந்த அறிக்கையிலே, 30,000 பம்பு செட்டுகளுக்கும், 10,000 புதிய

தொழில்களுக்கும், ஏற்கனவே உள்ள தொழில்களுக்கும் உற்பத்திக்கான மின்சாரத்தைக் கொடுக்க இருப்பதாக குறிப்பிட்டிருப்பது, எந்தவகையிலும் ஒவ்வாததாக இருக்கின்றது என்பதைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

கைத்தறியைப் பொறுத்த மட்டில், நெசவாளர்களுக்குத் தேவையான நூல் நியாயமான விலையில் கிடைப்பதில்லை. உற்பத்தியை அதிகரிக்க வேண்டுமென்று பேசுகின்ற இந்த நேரத்திலே இதைப்பற்றி ஒன்றும் நிதிநிலை அறிக்கையிலே தெரிவிக்கவில்லை. அதுமட்டுமல்ல. முந்திய அரசு, தறி வாங்குவதற்கும், தறிகளைச் சரிப்படுத்துவதற்கும் கடன் உதவி கொடுத்தது. ஆனால் இந்த அறிக்கையிலே அது பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை. இதைத்தவிர, ரிபேட் பற்றியும் ஒன்றும் குறிப்பிடவில்லை. நெசவுத் தொழில் மிக முக்கியமான தொழில். விவசாயத்திற்கு அடுத்தபடியாக, நெசவுத் தொழில் இருக்கின்ற காரணத்தினாலே, இவைகளையெல்லாம் பரிசீலித்து நெசவாளர்களுக்குத் தேவையான அவர்களது பிரச்னைகளையெல்லாம் தீர்க்க வேண்டுமென்று இந்த நேரத்திலே இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அரசு பல திட்டங்களைப் புதிதாகப் போட்டிருக்கிறது. இவ்வளவு திட்டங்கள் கொடுத்திருந்தாலும், நான் இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன். முன்னாள் பாரதப் பிரதமர் ஏற்கெனவே 20 அம்சத் திட்டத்தைக் கொடுத்திருக்கிறார்கள். இந்த 20 அம்சத் திட்டத்தில், தொழில் சம்பந்தமாகவும், ஏனைய சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கும், குறிப்பாக ஏழை எளியவர்களுக்கும், அரிசன மக்களுக்கு வாழ்வளிக்கக்கூடிய திட்டங்கள் இருந்தன. ஏற்கனவே, நாடாளும் மன்றத் தேர்தலிலே அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரும், இந்நாள் முதல்வரும், முன்னாள் பாரதப் பிரதமர் அவர்கள் கொடுத்த திட்டத்தை ஏற்றுக்கொள்வதாக, தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். அந்த முறையில் இந்த 20 அம்சத் திட்டத்தை ஏற்று, அதைச் செயல்படுத்தினால் ஏழை மக்களுக்கு, மற்றுமுள்ள சமுதாயத்தினருக்கு பயனுள்ளதாக அமையும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

கடைசியாக, லோயர் பவானி புராஜெக்டிலே, ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 1-ம் தேதி தண்ணீர் திறந்து விடுவது வழக்கம். ஆனால் இந்த ஆண்டு இன்னும் திறந்து விடவில்லை. எனவே, 2, 3 நாட்கள் கவனித்து, அதைத் திறந்துவிட உத்தரவிட வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். இதனால், 1,25,000 ஏக்கர் நிலங்கள் இப்போது





தெரிவித்துக்கொள்ள விரும்புவதெல்லாம் இன்றையதினம் பேசுகிறபோது பேராசிரியர் அவர்கள் எந்த உணர்வுகளைக் குறிப்பிட்டார்களோ அந்த உணர்வுகளின் அடிப்படையில் கடந்த காலத்தில் இருந்த ஆட்சியில் எந்தெந்த அளவில் இந்த நாட்டில் கொடுமைகள் நடைபெற்றிருந்தன என்று குறிப்பிட்டிருந்தால் உள்ளபடியே நான் மெத்த மகிழ்ச்சியடைந்திருப்பேன்.

காரணம், பேராசிரியர் அவர்களோடு நீண்ட காலம், நான் இளைஞனாக இருந்தபோதே, உறவோடு பழகியவன்; அவர்களுடைய வீர உரைகளை எல்லாம் பல நேரங்களில் கேட்டு மகிழ்ந்தவன் என்ற காரணத்திற்காக அவர்களுக்கு ஒன்றை நான் நினைவூட்ட விரும்புகிறேன். நேப்பியர் பூங்காவில் பேசும்போது ஒரு கருத்தை அவர்கள் வெளியிட்டார்கள். மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்களைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு அவர்கள் பேசுகிறபோது தெளிவாகச் சொன்னார்கள். "நான் கலைஞர் கருணாநிதி அவர்களை தலைவனாக ஏற்றுக் கொள்ளமாட்டேன். வேண்டுமானால் தளபதியாக ஏற்றுக் கொள்வேன்", என்று வீர உரையாற்றினார். அந்த அளவிற்கு வீரத்திற்குப் பேர்போன பேராசிரியர் அவர்கள் ஆட்சியில் இருந்தபோது இந்த நாட்டில் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் கொடுமைப்படுத்தப்பட்டார்கள். சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார்கள். சொல்லப்போனால் என் தொகுதியில் திருச்சி க்ளைவ் ஹாஸ்டலில் மிகக் கொடுமையான ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. அங்கே பத்து பதினைந்து வயது பாலகர்கள் இளம் சிறார்கள், இளம் தளிர்கள், நான்கு சுவர்களின் மத்தியில் அடைக்கப்பட்டு காவல் துறையினரால் கொடுமைப்படுத்தப்பட்டு அவர்கள் ரத்தம் கொட்டப்பட்டது அந்த ஆட்சிக் காலத்தில் நடைபெற்றது. அதை பேராசிரியர் அவர்கள், வீர உரை ஆற்றுகிறவர்கள், கண்டித்திருப்பார்களேயானால் நிச்சயமாக இந்த நேரத்தில் ஜனாதிபதி ஆட்சிக் காலத்தில் நடந்ததைக் கண்டிக்கும் அந்த உணர்வைப் பெற்றிருக்கிறார்கள் என்று கூறலாம். ஆனால் ஏனோ பேராசிரியர் அதைப் பெறவில்லை என்பதற்காக வருந்துகிறேன். அந்த வகையில் அவர்கள் ஆட்சி இருந்திருந்தால் அதை வரவேற்றிருக்கக்கூட முடியும், அவற்றையெல்லாம் செய்ய அவர்கள் தவறிவிட்டார்கள்.

திரு. க. அன்பழகன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னுடைய பேச்சைக் குறிப்பிட்டுச் சொன்ன காரணத்தால் நான் இப்போதாவது விளக்கவேண்டும் என்று விரும்புகிறேன். "தனிப்பட்ட முறையில் எனக்கு தலைவராக நான் கலைஞரை ஏற்றுக் கொள்ளவில்லை ; அவரை விட நான் வயதானவன் என்று சொன்னேன். இப்போதும் அதே நிலைதான். தனிப்பட்ட முறையில்—இன்டிவிடுவல் கப்பாஸிட்டியில்— அது ; ஆனால் கட்சி என்ற முறையில் அவரைத் தலைவராக, தளபதியாக ஏற்றுக் கொள்கிறேன் கட்சிக்குள், மறுக்கவில்லை" என்று அந்தக் கூட்டத்திலேயே சொல்லியிருக்கிறேன். அது ஒரு பெரிய பிரச்சினை அல்ல.

இருந்தாலும் அறிவிக்கப்பட்ட கொள்கையை சரியாக அமல் நடத்தவேண்டுமென்று சொன்னால் தைரியமாக மத்திய சர்க்காரை எதிர்த்து உறுதியாக நிற்க வேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மத்திய சர்க்காரில் ஆட்சிக்கு வந்திருக்கக்கூடிய கட்சியானது மக்களிடத்தில் தேர்தல் காலத்தில் சொன்ன வாக்குறுதிகளுக்கு நேர் மாறாகச் செல்கிறது. மிசாவைப் பயன்படுத்த மாட்டோம் என்றவர்கள் விலைவாசிகளைக் குறைக்க மிசாவைப் பயன்படுத்தலாமா என்று யோசிக்கிறார்கள். தொழில் கொள்கையில் மூடிய மில்களை அரசாங்கம் எடுத்து நடத்தாது என்ற அறிவிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு அறிவிப்பை நம்முடைய அமைச்சர் அவர்களும் கொடுத்திருக்கிறார்கள். அரசாங்கம் எடுத்துக் கொள்ளாது, தொழிலாளர்களே நடத்த வேண்டுமென்று சொன்னால் அது எப்படி நடத்த முடியும்? அன்று நிதியமைச்சராக சி. சுப்பிரமணியம் இருந்தபோது கூட தொழிலாளர் துறை என்ற போக்கே சரியில்லை என்று சொன்னோம். மில் முதலாளிகள் வேண்டுமென்றே தொழிலாளர்களைப் பழி வாங்குவதை தடுத்து நிறுத்தி அரசாங்கம் அவற்றை ஏற்று நடத்த முன்வரவேண்டும். அதை மத்திய சர்க்கார் எடுத்தால் மத்திய சர்க்காரை எதிர்த்துப் போராடத் தயாராக இருக்கவேண்டும்.

தற்போது விலைகள் அதிகமாக உயர்ந்து கொண்டே வருகின்றன. ஜனதா அரசாங்கத்தின் கொள்கை காரணமாக தமிழகத்தைப் பொறுத்தவரை விலைவாசி உயர்வு சிறிது குறைவாக இருந்தாலும் பொதுவாக வேறு மாநிலங்களில் தாறுமாறாக உயர்ந்து கொண்டிருக்கின்றன. இங்கும் பல பொருள்களின் விலைகள் உயர்ந்து கொண்டு வருகின்றன. நியாயமான விலையில் பொருள்களை மக்களுக்கு வழங்க வேண்டுமென்ற நிலையில் 16,000 ரெவின்யூ கிராமங்களில் நியாய விலைக் கடைகளைத் திறந்து நியாயமான விலையில் உணவுப் பொருள்களைக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. மொத்தமாக உற்பத்தி செய்யப்படும் பொருள்களை அரசாங்கமே கொள்முதல் செய்யால், மொத்த வியாபாரத்தையும் அரசாங்கம் எடுத்துக் கொள்ளாமல் இதைச் செய்ய முடியாது. விலைவாசிகள் சீரான முறையில் இருக்க இந்தக் காரியத்தை உடனடியாக அரசு செய்ய வேண்டும்.

உணவு உற்பத்தியைப் பொறுத்தவரை கடந்த ஆண்டு 74 லட்சம் டன் என்ற இலக்கு இந்த ஆண்டு 84 லட்சம் டன் என்று அறிவித்திருக்கிறார்கள். பருத்தி 3.6 லட்சம் டன்னாக இருந்தது இந்த ஆண்டு 4 லட்சம் டன் இருக்கும் என்று கூறியிருக்கிறார்கள். கரும்பு 13 லட்சம் டன்னாக இருந்தது. இந்த ஆண்டு 14 லட்சம் டன் இருக்கும் என்று கொடுத்திருக்கிறார்கள். இப்படி இலக்கை கூறியிருக்கிறார்களே தவிர, உணவு உற்பத்தி பெருகுவதற்கு அஸ்தி





வாரமாக என்ன சொல்லியிருக்கிறார்கள்? ஒன்றும் இல்லை. எங்கு பார்த்தாலும் நிலத்தில் வேலை செய்யக்கூடியவர்கள், சாகுபடிதாரர்கள் வெளியேற்றப்படுகிறார்கள். சாகுபடிதாரர் என்று சரியாகப் பதிவு செய்யப்படவில்லை. கோயில், மடங்களின் நிலங்கள் அதில் சாகுபடி செய்யக்கூடியவர்களுக்குச் சேரவேண்டுமென்று சட்டம் போட்டும் அந்தச் சட்டம் கோயில்களுக்கும் மடங்களுக்கும்தான் சாதகமாக இருக்கிறது. இந்த நிலையை மாற்றி அதிலே சாகுபடி செய்கிறவர்களுக்கான உரிமையைக் கொடுக்க இந்த அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். கோயில் மடங்களுக்குச் சொந்தமாக 4½ லட்சம் ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன. அதைச் சாகுபடி செய்கிறவர்களுக்கே சொந்தமாக்க வேண்டும். முன்னாள் முதலமைச்சர் திரு. பக்தவச்சலம் கூட அது சரிதான் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த 4½ லட்சம் ஏக்கர் நிலத்தையும் சாகுபடிதாரர்களுக்கே சொந்தமாக்கும் சட்டத்தைக் கொண்டு வந்து அமல் நடத்த வேண்டும்.

கிராமங்களிலிருந்து நகரங்களுக்கு குடி வருகிறவர்களைத் தடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். எப்படித் தடுக்கப் போகிறோம் என்று சொல்லவில்லை. கரும்புக்கு வேறு மாநிலங்களில் விலை அதிகம், இங்கு குறைவு. வெல்லத்திற்கு வரி போட்டிருப்பதன் காரணமாக கரும்பாலைகளுக்குத்தான் லாபம். கரும்பை வைத்து வெல்லம், நாட்டுச் சர்க்கரை காய்ச்சக் கூடிய விவசாயிகளுக்கு நஷ்டம் வரும். சர்க்கரை ஆலைகளை அரசாங்கமே எடுத்துக் கொள்ள வேண்டுமென்று முன்பு மத்திய சர்க்காரில் ஒரு முயற்சி இருந்தது. சர்க்கரை ஆலைகளை அரசு எடுத்துக் கொண்டால்தான் கரும்பு விவசாயிகளுக்கு நியாயமான விலை கொடுக்க முடியும். அப்போதுதான் ஒழுங்கான முறையில் சர்க்கரையை விநியோகம் செய்ய முடியும்.

(முற்பகல் 11-40)

இன்றைக்கு விளைபொருள்கள் விற்பனைக்காகத் தனி இயக்குநர் போடப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். தனி இயக்குநரைப் போட்டால் நியாயமான விலை கிடைக்குமா? தமிழகத்திலே தொடர்ந்து சொல்லிக் கொண்டு வருகிறார்கள் விவசாயிகளுடைய போராட்டமே பிரதான போராட்டமே நியாயமான விலை விளைபொருட்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்பதுதான். உற்பத்தியாகிற விளைபொருட்கள் விவசாயிகளிடமிருந்து வியாபாரிகளுக்குச் சென்று அங்கே விலை மூன்று பங்கு உயர்ந்துவிடுகிறது. அதைத் தடுக்க வேண்டும். விளைபொருட்களுக்கு ஒரு நியாயமான விலையை அரசாங்கமே நிர்ணயித்து அரசாங்கமே வாங்க வேண்டும். மகாராஷ்டிர மாநிலத்திலே செய்து இருக்கிறார்கள். பருத்திக் கொள்முதலை ஏகபோகமாக அரசாங்கமே செய்து, அதிலே அதிகமான லாபம், விவசாயிகளுக்கு கிடைத்திருக்கின்ற

உண்மையை நாங்கள் கேட்டுத் தெரிந்திருக்கிறோம். அது போன்று இந்த அரசும் செய்து மொத்தமான வியாபாரத்தை அரசாங்கம் கையில் எடுக்க வேண்டும். அதுபோல, விற்பனை வரிகள் பலமுனை வரிகளுக்குப் பதிலாக ஒரே முனையிலே விவசாயப் பொருட்களுக்கு வாங்கவேண்டும். சகல பொருட்கள்மீதும் பல முனை வரிகள் போடப்பட்டிருப்பதால் விற்பனை வரியென்ற பெயராலே வியாபாரிகள் ஏகபோகத் தொல்லைகளுக்கு ஆளாகிறார்கள், ஆகவே ஒரு முனை வரியாகப் போடவேண்டும். அதுமட்டுமல்ல, இதிலே லஞ்சம், ஊழலைத் தடுப்பதற்காக விற்பனை வரியிலே மாறுதலைச் செய்ய இருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். வருமானம் 1 லட்சத்திற்குட்பட்டவர்கள் கம்பவுண்டிங் செய்து கொள்ளலாம் என்று இருக்கிறது. ஆனால் பல முனை வரிகள் இருக்கிறபோது லஞ்சம் ஊழல் இல்லாமல் எப்படிப் போகும்? விற்பனை வரியைப் பொறுத்தமட்டில் ஓரளவிற்கு ஊழலைத் தடுக்க வேண்டுமென்றால் பலமுனை வரியாக இருப்பதை ஒருமுனை வரியாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நிலவள வங்கிகளுக்கு 18 கோடி ரூபாய் கடன் வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டு 145 லட்சம் ரூபாய் சர்க்கார் கொடுப்போம் என்று சொல்லி இருக்கிறார்கள். பல நிலவள வங்கிகளைப் பொறுத்தமட்டில் அதிகமாகக் கடன் கொடுக்கப்பட்டு, அவையெல்லாம் வசூல் ஆகாமல் அவர்களுக்குத் திரும்பக் கடன் கொடுக்கப்படக்கூடிய நிலைமை இல்லை. எனக்குத் தெரிந்த மட்டில் பல நிலவள வங்கிகளில் பிரைமரி லேண்ட் டெவலப்மெண்ட் பாங்குகள் கடன் கொடுக்க முடியவில்லை. ஆகவே இப்போது கொடுக்கப்பட்டிருக்கின்ற கடன்களை அவர்கள் வறட்சி காரணமாகவும் கஷ்டம் காரணமாகவும் செலுத்த முடியவில்லை, அந்தக் கடன்களையெல்லாம் நீண்டகாலக் கடன்களாக மாற்ற வேண்டும். அப்படி மாற்றிவிட்டு புதிதாகக் கடன்கள் கொடுக்கக்கூடிய நிலைமையை வங்கிகளுக்கு ஏற்படுத்த வேண்டும்.

அடுத்தபடியாக, விவசாயிகளுக்காகக் கடன் நிவாரணச் சட்டம் கொண்டு வரப்பட்டது. ஆனால் விவசாயிகளுடைய வருமானம் மாதம் 200க்குக் குறைந்து உள்ளவர்களின் கடன்களுக்குதான் நிவாரணம் என்று சொல்லப்பட்டது, ஆகவே அந்தச் சட்டம் வந்ததே தவிர, முழுமையாக அது நிறைவேற்றப்படவில்லை. அதிகாரிகள் கடன் கொடுத்தவர்களுக்கு அனுசரணையாக ஏதோ ஒரு காரணத்தால் இருந்துகொண்டு கடன் ரத்து செய்யப்படவேண்டுமென்று அவர்கள் மனுக் கொடுத்தால் கூட அந்த மனுக்களை, புருஷனுக்கும், பெண்டாட்டிக்கும் 10 ரூபாய் ஒரு நாளைக்கு வருமானம் வருகிறது. ஆகவே வருமானம் மாதத்திற்கு 200க்கு மேல் வருகிறது. கடன் நிவாரணம் இல்லை என்று சொல்லக்கூடிய நிலைமை, அந்த மனுக்களைத் தள்ளிவிடக்கூடிய நிலைமைதான் இருக்கிறது. ஆகவே இதையெல்லாம் மாற்றியமைக்கக் கூடிய வகையில் மக்கள் கமிட்டி அமைத்து நிவாரணம்



கொடுக்க ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். அந்தச் சட்டம் ஜூலை வரை இருந்தது இப்போது ஜனவரி வரையிலும் நீடிக்கப்பட்டிருக்கிறது, இருந்தாலும் வருகிற ஜனவரியில் இந்தச் சட்டம் அவர்கள்மீது பாயும். ஆகவே இப்போதே அதைப்பற்றி எல்லாக் கட்சித் தலைவர்களையும் கூட்டி வைத்து விவாதித்து முறையான ஒரு நல்ல கடன் நிவாரணச் சட்டத்தைக் கொண்டுவர ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பாசனத்திற்காக போன தடவை 11 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. இந்தத் தடவை 24 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள், எங்கள் பகுதியைப் போன்ற இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்கள் எல்லாம் வறட்சியான பகுதிகள். இப்போது உள்ள சர்க்கார் அண்டை மாநிலங்களுடன் நல்ல உறவைக் கொண்டிருக்கிறது என்று நான் கருதுகிறேன். கேரளம், மைசூர் ஆகிய மாநிலங்களோடு நல்ல உறவை வைத்துக் கொண்டு, காவிரி நீர்ப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும், அதைப் போலவே மேற்குத் தொடர்ச்சி மலையில் இருந்து வருகின்ற தண்ணீரைப் பயன்படுத்துகிற அளவில் கீரியாறு, பம்பையாறு திட்டங்களையும் நிறைவேற்றவேண்டும். இதுபற்றிப் பல நேரங்களிலே சொல்லப்பட்டது என்றாலும் நிறைவேற்றப்படவில்லை, இப்போதாவது அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக சிறப்புச் சிறுபாசனத் திட்டங்களுக்காக 4.7 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். வறட்சி மிகுந்த பல இடங்களில் மழைக்காலங்களில் பெய்யக்கூடிய தண்ணீர் வீணாகச் சென்று சமுத்திரத்திலே விழுவதைத் தேக்க கண்மாய்களை அமைக்கலாம். கடந்த காலத்தில் இது சம்பந்தமாக என்ன கொள்கை கடைப்பிடிக்கப்பட்டது என்றால், வறட்சி என்று அறிவிக்கப்பட்டு அந்த நேரத்தில் எவ்வளவு பணம் வேண்டுமானாலும் செலவழிக்கலாம், அப்படி இல்லாத காலத்தில் கட்டுபடியாகக்கூடிய திட்டமாக அது இருக்க வேண்டும், இல்லையென்றால் 'அன்எகனமிக்' திட்டம் என்று அதைத் தள்ளி விடுவார்கள்: ஒரு டன்னுக்கு 3,000 ரூபாய்க்குமேல் செலவழிக்கக் கூடாது, அதற்கு மேல் எஸ்டிமேட் போட்டால் அன்எகனமிக் என்று தள்ளிவிடுவார்கள். இப்படி இருக்கக் கூடாது. ஏனென்றால் உணவு தானிய உற்பத்தியைப் பெருக்குவதற்கும், வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கும் இதைத் தருகிறோம். நீண்ட நெடுங்காலமாக இருக்கின்ற வறட்சி போகின்றது, வேலை கிடைக்கிறது, மக்கள் வேறு ஜில்லாக்களுக்குப் போகாத நிலைமை ஏற்படுகிறது. இப்படி, வறட்சிப் பகுதிகளில் எல்லாவிதமான முன்னேற்றத்திற்கும் வேண்டிய பாசன வசதிகளை ஆராய்ந்து சகல காரியங்களையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்காக, வறட்சி பகுதிகளுக்காக என்று ஒரு வாரியத்தையாவது ஏற்படுத்தி அல்லது தனியாக ஒரு ஸ்தாபனத்தை

ஏற்படுத்த முன் வர வேண்டும். வீணாகப் போகின்ற தண்ணீரைத் தேக்க அணை என்று இல்லாவிட்டாலும் கண்மாய்கள் வெட்டி பாசன வசதி எற்படச் செய்தால் வேலைவாய்ப்பும் ஏற்படும். உணவு உற்பத்தியும் பெருகும், நாட்டுக்கு வேண்டிய செல்வமும் பெருகும். எனவே, இதைப்பற்றி ஆராய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிணறு வெட்ட பணம் அதிகமாகக் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். இதை அரசாங்கமே செய்து 200 ரூபாய், 300 ரூபாய் செலவு செய்து போட்டால் 10 ஏக்கர், 20 ஏக்கர்களுக்குத் தண்ணீர் பாயும். எனவே, அரசாங்கமே தனி ஸ்தாபனத்தை ஏற்படுத்தி, வாட்டர் போர் செய்து கொடுத்து அதன்மேல் தண்ணீர்த் தீர்வையைப் பெற்றுக் கொள்ளலாம் ஒரு ஏக்கருக்கு இவ்வளவு என்று. ஏனென்றால், ஒரு ஏக்கருக்குக் கிணறு வெட்டுவது என்றால் 3,000 ரூபாய் ஆகும். பிறகு கரண்ட் சார்ஜ் வேறு ஆகும். எனவே, அப்படிப்பட்ட இடங்களுக்குச் சமுதாயக் கிணறுகளைத் தோற்றுவிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, 30,000 பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கப்படும் என்று சொல்கிறார்கள். ஆனால் எங்கள் மாவட்டத்திலே ஒரு இடத்திலே கூட மின் இணைப்புக் கிடைப்பதில்லை. காரணம் என்னவென்றால் கிரவுண்ட் வாட்டர் டைரக்டரிடம் அனுமதி வாங்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அந்த முறை வேண்டாம். இருக்கின்ற கிணறுகளுக்குக் கொடுக்கவில்லை என்றாலும், ஆயில் என்ஜின்களை வைத்துப் போடுகிறார்கள், கவலைகளை வைத்துப் போடுகிறார்கள். ஆனால் ஏழை மக்கள் கஷ்டப்படுகிறார்கள், வசதி இருக்கின்றவர்கள் ஆயில் என்ஜின்களை வைத்து இறைத்துக் கொள்கிறார்கள். எனவே, இருக்கின்ற கிணறுகளுக்குத் தடங்கல் இல்லாமல் மின் இணைப்புக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக மின் இணைப்புக்கு அதிகமான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அது வரவேற்கக் கூடிய விஷயம். அப்படிச் செய்வதைத் துரிதமாகச் செய்ய வேண்டும். அதோடு மின் சாரக் கட்டணத்தையும் குறைக்க வேண்டும். முன்பு மின் சாரக் கட்டணத்தைக் குறைக்க வேண்டுமென்று போராட்டம் நடந்தது. மின் கட்டணத்தைக் கூட்டிவிட்டார்கள் என்று போராடியவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன், திரு. பா. ராமச்சந்திரன் அவர்கள் இந்தப் போராட்டத்தில் அப்பொழுது எங்களோடு இருந்தார்கள். அவரே மின் கட்டணத்தைப் பொறுத்த வரையில் 5 ரூபாய் என்று இருந்ததை 2½ ரூபாய் என்று றத்திருக்கிறாரே தவிர அறவே எடுக்கவில்லை. ஹார்ஸ் பவ 2½ ரூபாய். இறைத்தாலும் இறைக்காவிட்டாலும்



கொடுக்க வேண்டும். அதை எடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மீட்டர் சார்ஜ் மாதம் 5 ரூபாய் வசூல் செய்கிறார்கள். வருஷத்திற்கு 60 ரூபாய் ஆகிறது. அதையும் குறைக்க வேண்டும், மின் கட்டணத்தையும் குறைக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

சர்க்கரை ஆலை ஆரம்பிப்பதைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். திருநெல்வேலி மாவட்டத்திலே வாசுதேவநல்லூரில் ஆரம்பிக்கலாம். மற்றொரு இடம் எங்கேயாவது ஆரம்பிக்கலாம். அப்படி ஆரம்பித்தால் அங்கேயுள்ள கரும்பு விவசாயிகளுக்குப் பயன் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து தமிழ்நாட்டில் 50,000 சிறு தொழிற் கூடங்கள் இருந்தாலும் பல தொழிற்கூடங்கள் மூடிக் கிடக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். மூடி இருக்கின்ற அந்தத் தொழிற் கூடங்களை எப்படித் திறக்கப் போகிறார்கள் என்ற விவரத்தையும் தெரிவித்தால் நல்லது. அவைகளை விரைவில் ஆரம்பிக்க வேண்டும். இருக்கின்ற தொழில்கள் சீராக நடக்க ஆவன செய்வதோடு ஏன் மூடியிருக்கின்றன என்பதையும் ஆராய வேண்டும்.

கைவினைஞர்களுக்குக் கடன் கொடுப்பதைப் பற்றி முந்தைய அரசாங்கத்தில் பேசப்பட்டது. பேங்குகளில் கடன் கொடுக்கிறார்கள் என்பதைக் கேள்விப்பட்டு சந்தோஷமடைந்தேன். அதற்காக அதிகாரிகள் நியமிக்கப்பட்டார்கள், 200 ரூபாய், 300 ரூபாய்க்கென்று மனுக்கள் வந்தன. அதிகாரிகள் மனுக்களைப் பெற்றார்களே தவிர, கடனை மக்கள் பெறவில்லை. ஒருவராவது கடன் பெறவில்லை. இப்பொழுதும் அம்மாதிரி போகக் கூடாது. பேங்கிலே கடன் வாங்கிக் கொடுத்தாவது, கூட்டுறவுச் சங்கம் மூலமாவது இதைச் செய்ய யோசிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கைத்தறியை எடுத்துக் கொண்டால் 30,000 நெசவாளர்களைக் கூட்டுறவு அமைப்புக்குள் கொண்டு வரத் திட்டமிட்டுள்ளதாகக் கூறியிருக்கிறார்கள். இப்பொழுது இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் சரியாக இயங்கவில்லை. உற்பத்தியான துணி தேக்கம், நூல் விலை உயர்வு என்பன போன்ற கஷ்டங்கள் இருக்கின்றன. இதையெல்லாம் சரி செய்து கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கினால் நெசவாளர்களுக்கு வருஷம் பூராவும் வேலை கிடைக்கும்.

அடுத்து அரிசனங்கள்—பழங்குடி மக்களுக்கு (மணியடிக்கப்பட்டது) நான் தலைவர் என்ற முறையில் இன்னும் கொஞ்சம் நேரம் கொடுங்கள்.

[1977 ஆகஸ்டு 2

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுக்கு 15 நிமிடங்கள் கொடுத்தாகி விட்டது. தயவு செய்து ஒரு நிமிடத்தில் முடித்துக் கொள்ளுங்கள். இன்னும் 24 பேர்கள் பேச இருக்கிறார்கள்.

[முற்பகல் 11-50]

திரு. சோ. அழகர்சாமி : ஒரு நிமிஷத்திலே எப்படி முடிக்க முடியும் ?

அரிசனங்களுக்கு வீடு கட்ட, கடன் கொடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள், அந்தப் பணத்தில் வீடு கட்டவே முடியாது. அவர்களுக்கு வீடுகளை இனமாகக் கட்டிக் கொடுக்க வேண்டும். 4,010 வீடுகள் கட்ட இருக்கிறார்கள் என்று சொன்னால், ஒரு யூனியனுக்கு 3 குடியிருப்புக் கூட வராது. ஆகவே, அரிசனங்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கத் தாராளமாக மானியம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மீனவர்களுக்கு ரூ. 5,000 மானியம், இறந்தவர் குடும்பத்திற்குக் கொடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த மாதிரி கிணறு வெட்டும்போது சாகிறவரது குடும்பத்துக்கு குடும்பப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டும்.

1,100 ஆசிரியர்களுக்கு வேலை அளிக்கப் போவதாகச் சொல்லி இருக்கிறார்கள். மொத்தம் 30,000 ஆசிரியர்கள் வேலை இல்லாமலிருக்கிறார்கள். ஆகவே, 20 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற நிலையை ஏற்படுத்தினால், அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க முடியும். அவர்களுக்கு வருஷப்படி கொடுக்கலாம். 10 வருஷமாக வேலை செய்தவர், அடுத்து வேலை செய்தவர் என்ற வகையில் வேலை கொடுங்கள். 1,100 பேருக்கு வேலை வாய்ப்பு என்பது போதாது. அப்படிக் கணக்குப் போட்டால், 100-க்கு 3 பேர்தான் என்று வருகிறது. ஆகவே, அதிகமானவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்க வழிவகை செய்ய வேண்டும்.

வரலாற்றுச் சின்னங்களை, போற்றத்தக்கச் சின்னங்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை வரவேற்கிறோம். அதே போல், எட்டயபுரத்தில் உள்ள பாரதியார் வீட்டைப் பொருட்காட்சியாக்க, முந்தைய அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. வெளிநாட்டுக்காரர்கள் எங்கே பாரதியார் வீடு என்று கேட்டால், அது மூடிக் கிடக்கிறது. ஆகவே, அதைப் பாதுகாத்து, நல்ல வரலாற்றுச் சின்னமாக ஆக்கி, பாரதியாருடைய பெயருக்கேற்ற வகையிலே நிலையான பொருட்காட்சி ஒன்றை அங்கே ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1977 ஆகஸ்டு 2] [திரு. சோ. அழகர்சாமி]

லாண்ட் ஆர்மி என்று ஆரம்பிக்கப் போகிறோம் என்று சொல்லி இருக்கிறார்கள். முன்னாலே அது மாதிரி ஒன்று ஆரம்பித்து, எல்லோருக்கும் வேலையில்லாமல் போய்விட்டது. இப்பொழுதாவது, சரியான முறையிலே ஆரம்பிக்க வேண்டும்.

தொழிற் பயிற்சி நிலையங்களை ஆரம்பிக்கப் போகிறார்கள். குறிப்பாக, ஜமீனை நம்பி பாழடைந்த, எட்டயாபுரம் போன்ற பகுதிகளிலே தொழிற்பயிற்சி நிலையங்கள் ஆரம்பிக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, கனரா பாங்கில், ரெக்கரிங் டெப்பாசிட்டில் மாதம் ரூ. 15 போட்டால், ரூ. 20,068, 25 வருடங்கள் பொறுத்துக் கிடைக்கும். ஆகவே, அரசாங்க ஊழியர்களிடம் பிடிக்க இருக்கும் ரூ. 15ஐ ரூ. 10 ஆகக் குறைக்க வேண்டுமென்று சொல்லிக் கொள்வதோடு, இப்பொழுது சேர்ந்து இன்னும் 4 வருஷத்திலே ரிட்டையர் ஆகிறவர்களுக்கும் ரூ. 10,000 கிடைக்கும் வகையில் திட்டத்தை மாற்ற வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன். ரூ. 15 மாதம் என்றால், 25 வருடங்கள் கழித்து ரூ. 20,000 ஆகிறது, பாங்குகளில். ஆகவே, அதைக் கவனிக்க வேண்டும். அதோடு, வெளிநாட்டிற்குப் போட்டுள்ள வரியை நீக்க வேண்டுமென்று சொல்லி, தலைவர் நேரம் கொடுக்காததால் இத்துடன் முடித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : பேரவைத் தலைவரவர்களே, 1977-78-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை குறித்து என்னுடைய சில கருத்துக்களையும் இணைத்துக் கொள்ள விரும்புகிறேன். நல்ல ஒரு பட்ஜெட்டாக இது அமைந்திருக்கிறது. இன்றைய தேவைகளை அனுசரித்தும், நாட்டிலே இன்றைக்கு நிலவுகின்ற ஏற்றத் தாழ்வுகளை கவனத்தில் கொண்டும் அந்த ஏற்றத் தாழ்வுகளைக் குறைக்கும் வகையிலும் சமூகத்திலே எல்லாத் தரப்பினருக்கும் நீதி செய்யும் வகையிலும் இந்த பட்ஜெட் அமைந்திருக்கிறது என்று சொல்வதிலே எனக்கு மெத்த மகிழ்ச்சி ஏற்படுகிறது.

குறைந்த அளவுக்கு வரிகளை விதித்து, அதே நேரத்தில் சமுதாயத்திற்குத் தேவையான மற்ற காரியங்களையும் நிறைவேற்றும் வகையில் பற்றுக்குறை பட்ஜெட்டாக இந்த நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு நிதி அமைச்சரவர்கள் தயார் செய்திருக்கிறார்கள். டாக்டர் டால்டன் அவர்களுடைய தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு, பேராசிரியர் ஜான் மேனார்டு கீன்ஸ் அவர்களுடைய தத்துவத்தைப் பொருளாக வைத்து, இந்த பட்ஜெட்டை நம்முடைய நிதியமைச்சரவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். குறைந்த அளவுக்கு வரி போட்டு எந்த பட்ஜெட் நிர்ணயிக்கப்படுகிறதோ அந்த பட்ஜெட்தான் சிறந்த பட்ஜெட் என்ற ஒரு கருத்தைப் டாக்டர் டால்டனுடைய தத்துவ

மாகும். அந்தத் தத்துவத்தினுடைய அடிப்படையில் இதை வரிகளே இல்லாத பட்ஜெட்டாக அமைத்திருக்கிறார்கள். அதே நேரத்தில், துண்டு பட்ஜெட் வேண்டும், வளரும் நாடுகளுக்கு, வளரும் பொருளாதாரத்திற்குத் துண்டு பட்ஜெட்தேவை என்று சொல்லக்கூடிய அளவில் இன்றைக்கு ஒரு தனி அம்சமாக இது அமைந்திருக்கிறது. அதைக்கூட பெயருக்குச் சேர்த்துத் தயார் செய்திருப்பது நாட்டினுடைய இன்றைய தேவைக்கொப்ப இது அமைந்திருக்கிறது என்பது வெளிப்படை.

ஆனால், அதே நேரத்தில், சமுதாயத்தில் நாம் அதிகமான செலவினங்களை, பற்றாக்குறை பட்ஜெட்டின் வாயிலாகச் செய்ய, பணத்தைச் செலவினங்களின் வாயிலாகப் பொருளாதாரத்தில் நாம் செலாவணிக்கு விட்டு, அப்படி செலவாணிக்குச் செல்வதன் வாயிலாக, பொருளாதாரத்தில் ஏற்படுகின்ற விளைவுகள் அதனால் நாம் எதிர்பார்க்கின்ற அதிகமான முதலீடுகள், அதிகமான வருமானங்கள் இவைகளெல்லாம் ஏற்படும்போது, அது விலைவாசியை பிரைஸ் லைன் எவ்வளவு தூரம் பாதிக்கிறது, பொருளாதார வளர்ச்சிக்கு எவ்வளவு தூரம் உதவுகிறது என்பதை எல்லாம் கவனத்தில் வைத்துத்தான் நாம் பட்ஜெட்டைத் தயாரிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். எந்தப் பணத்தை நாம் செலாவணியில் விடுகிறோமோ, அந்தப் பணத்தை மீண்டும் ஓரளவு திரும்பப் பெற்றால்தான், பிரைஸ் லைன் விலை நிர்ணயம் —விலைவாசியை நாம் கட்டுப்படுத்த முடியும் என்ற தத்துவத்தை கவனத்தில் கொண்டு பட்ஜெட்டை—நிதிநிலை அறிக்கையை—தயார் செய்யக் கூடியவர்களாக இருக்கிறார்கள்.

இந்த பட்ஜெட்டின் வாயிலாக, சமுதாயத்தில் பொருளாதாரத்தில் ஏற்படக் கூடிய விளைவுகள், ஏற்படும் நிலை என்ன என்பதை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துறையினரிடம் சரியாக விளக்கம் கேட்டுத் தயாரித்திருக்கிறார்களா என்று தெரியவில்லை. அப்படி அவர்கள் துறையினரிடம் விளக்கம் கேட்டு, தயார் செய்திருப்பார்களானால் அதற்கான விளக்கத்தை இங்கே வைத்திருக்க வேண்டுமென்று நான் கருதுகிறேன். அதை வைத்திருக்கவில்லை. வைத்திருந்தால் நன்றாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். இந்த 2 நிலைமைகளிலே நல்ல விளைவுகளும் ஏற்படுகின்றன. தீய விளைவுகளும் ஏற்படுகின்றன. இவைகளை எல்லாம் ஆராய்ச்சி செய்து நாம் நிதி நிலை அறிக்கையையும், வரி விதிப்பு முறைகளையும், அதே நேரத்தில் வரிக்கான கொள்கையையும் வகுத்துக் கொள்வது நன்றாக இருக்கும். அதற்கான விரிவான திட்டங்களை ஆய்வுரையை நிதி அமைச்சர் அவர்கள் நடத்தியிருக்கிறார்களா என்று நமக்குத் தெரியவில்லை. ஆகவே விலைவாசி குறைய வேண்டுமென்று நாம் சொல்லும்போது இதையும் நாம் கவனத்தில் கொண்டால்தான் விலையைக் குறைக்க நமக்கு ஏதுவாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.





இந்த பட்ஜெட்டிலேகூட மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்றைக்குப் பண வீக்கம் என்று சொல்லக்கூடிய அந்தத் தீய விளைவு பொருளாதாரத்திலே தலை தூக்க ஆரம்பித்திருக்கிறது என்று ஒப்புக் கொள்கிறார்கள் இதற்கு இந்த மாநிலத்தில் மட்டும் நாம் நம்முடைய காரியங்களால் தடுத்து விட முடியுமா என்றால் நிச்சயமாக முடியாது. அது அகில இந்திய அளவிலே செய்யக்கூடிய காரியம் என்பதையும் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். அது உண்மைதான். ஆனால் அகில இந்திய அளவில் இத்தகைய பண வீக்கத்தையும், பொருளாதாரச் சீர்கேடுகளையும் விலைவாசி உயர்வையும் தடுக்க வேண்டுமென்று சொன்னால், அகில இந்திய அளவில் ஒரு கோ-ஆர்டினேஷன் கமிட்டி, ஒருங்கிணைப்பு கமிட்டி மாதிரி, மாநிலங்களையும், மத்திய அரசாங்கமும் கொண்ட ஒரு கமிட்டியை அமைத்து அது அவ்வப்போது பொருளாதார விளைவுகளை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு அதன் அடிப்படையில் ஃபிஸ்கல் பாலிசியையும், மற்ற வரிவிதிப்புக் கொள்கையையும் நிர்ணயித்துக் கொள்வது நம்முடைய மாநிலத்திற்கும், மற்ற மாநிலங்களுக்கும் —இந்தியா பூராவும் பயன் உடையதாக இருக்கும் என்பதை இந்த அரசு கவனத்தில் கொண்டு அதை National Development Council போன்ற கூட்டங்களில் எடுத்துச் சொல்லி, மற்ற மாநிலங்களின் ஒப்புதலையும், மத்திய அரசினுடைய ஒப்புதலையும் பெற இந்த அரசு முயற்சி எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஏனென்றால் ஏழாவது நிதிக் கமிஷன் நியமித்திருக்கிறார்கள். எந்த அளவுக்கு நம்முடைய மாநிலம் தங்களுடைய உரிமைகளை பெறப் போகிறது என்பதை இப்போதே நாம் கவனத்தில் வைத்து செயல்பட வேண்டும். சென்ற ஆறு நிதிக் கமிஷன்களின் பாதகங்களை நினைவிலே கொண்டு அவைகள் எல்லாம் ஏற்படாவண்ணம் இப்போது ஏற்பட்டு வருகிற வளர்ச்சியைக் கவனத்தில் கொண்டு எந்த அளவுக்கு நிதிப் பற்றாக்குறை ஏற்படுகிறது, எந்த அளவு வளர்ச்சித் திட்டங்களுக்கு நிதி தேவைப்படுகிறது என்பதை ஆய்வு செய்து அதை முறையாக அந்த கமிஷனிடத்தில் வற்புறுத்தி, முயற்சிகள் எடுப்பதற்கு ஏதுவாக, நம்முடைய மாநிலத்தில் இருக்கிற எல்லாத் துறைகளுக்கும் தாக்கீது அனுப்பி அவைகளுடைய ஆலோசனைகளையும் கருத்துக்களையும் பெற்று, இப்போதிருந்து தயார் நிலையில் இருக்க வேண்டுமென்று அரசினைக் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த முக்கியமான கருத்தினிடையே இங்கு வேறு சில கருத்துக்களும் சொல்லப்பட்டிருக்கின்றன. நம்முடைய மாண்புமிகு ஜனதா கட்சித் தலைவர் திரு. ஜேம்ஸ் அவர்கள், '' மத்திய ஆட்சி உங்களைக் கண்காணித்துக்கொண்டு இருக்கிறார்கள் என்று நான் எச்சரிக்கிறேன் '' என்று பேசினார்கள். இந்தப் பேச்சு அவ்வளவு வரவேற்கத்தக்க பேச்சாக இருக்காது. அவர்கள் அதை நல்ல எண்ணத்திலேதான் சொல்லியிருப்பார்கள் என்று கருதுகிறேன்.

[திரு. எம். ஏ. லத்தீப்] [1977 ஆகஸ்டு 2

[நண்பகல் 12—00]

ஆனால் அரசியல் சட்டம் வரையறுத்து இருக்கிற நம்முடைய அதிகாரங்களையும் கண்காணித்து, நம்மீது நடவடிக்கைகளை எடுக்காத அளவிற்கு, நீங்கள் ஜாக்கிரதையாக இருங்கள் என்ற கருத்தில் அவர்கள் சொல்லியிருப்பார்கள் என்று நினைக்கிறேன்.

நான் தெளிவாகச் சொல்கிறேன், அது எந்தக் கட்சியாக இருந்தாலும் சரி, சென்ற காலத்தில் இருந்த இந்திரா காந்தி அம்மையாரின் கட்சியாக இருந்தாலும் சரி, இப்போது இருக்கும் நம்முடைய மாண்புமிகு தலைமையமைச்சர் மொரார்ஜி தேசாய் அவர்களின் கட்சியாக இருந்தாலும் சரி, மத்தியில் எந்தக் கட்சி ஆட்சியாக இருந்தாலும் சரி, தமிழ் நாடு மட்டுமல்ல, இந்தியாவில் இருக்கும் எந்த மாநிலமும் எத்தகைய தவறான தலையீடுகளையும் ஒருக்காலும் ஒத்துக்கொள்ளாது, இதிலே கட்சி வேறுபாடு கிடையாது, இதிலே தமிழ் நாட்டிலே இருக்கிற 4½ கோடி மக்களும், இந்த ஆட்சிக்கு ஆதரவாக எழுந்து நிற்பார்கள் என்பதை மாத்திரம் நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த மாதிரி திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் செய்ய மாட்டார்கள். அவர்களுடைய பேச்சை நான்கூடப் பார்த்தேன். ' Not only the Centre must be strong but also the S ate must be s rong.'' என்று அவர்கள் மிக நல்ல முறையில் பேசியிருக்கிறார்கள். அவர்கள் தவறான முறையில் மாநில ஆட்சியின் விவகாரங்களில் தலையிடமாட்டார்கள் என்ற நம்பிக்கை உண்டு. அந்த நம்பிக்கையின் அடிப்படையில் அவர்களுடைய பேச்சுக்கு இந்த அவையின் வாயிலாக நான் மாண்புமிகு தலைமையமைச்சர் அவர்களைப் பாராட்டுவதோடு, அதை மனப்பூர்வமாகவும் வரவேற்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் மதுவிலக்கைப் பற்றி திரு. மொரார்ஜி தேசாய் அவர்கள் தெரிவித்து இருக்கும் கருத்துக்கு, தமிழ் நாட்டு மக்கள் மட்டுமல்ல, இந்தியாவில் இருக்கும் 60 கோடி மக்களும் தங்களுடைய நல் உணர்ச்சியையும் நன்றி உணர்வையும் தெரிவிப்பார்கள். நம்முடைய பாரதப் பிரதமர் மொரார்ஜி தேசாய் அவர்களுக்கு பொறுப்புள்ள உறுப்பினன் என்ற முறையில் தமிழ் நாட்டின் சார்பாக இந்த அவை மூலம் நானும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் டெல்லியில் மதுவிலக்கைப் பற்றி பேசும்போது தந்த விளக்கங்கள், மதுவிலக்கை அவர்கள் தீவிரமாக அமல் நடத்த மேற்கொள்ள இருக்கும் நடவடிக்கைகள் ஆகியவற்றில் அவர்கள் தமிழ் நாட்டின் சார்பாகப் பேசும் போது தமிழ் மக்களின் உணர்வினை நன்றாகப்பிரதிபலித்து இருக்கிறார்கள் அதற்காக அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.



1977 ஆகஸ்டு 2] [திரு. எம். ஏ. லத்தீப்]

இந்தக் கருத்துக்களை மட்டும் நான் இங்கே தெரிவித்தால் மட்டும் போதாது. என்னுடைய தொகுதி மக்களுக்காகவும் நான் சிலவற்றைச் சொல்ல வேண்டியிருக்கிறது. அதைச் சொல்லாவிட்டால் நான் இந்த பொது விவாதத்தில் கலந்து கொண்டது முழுமை பெறாது என்று கருதுகிறேன்.

என்னுடைய பகுதியில் கமண்டல ஆறு என்று ஒன்று இருக்கிறது. இதில் ரூ. 3·35 கோடி செலவில் நிறைவேற்ற ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டது ; அதற்கான அனுமதியும் வழங்கப்பட்டு இருப்பதற்கான நான் பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் இங்கே காவிரியைப் பற்றிச் சொன்னார்கள். காவிரி நீர் தஞ்சை மாவட்டத்திற்கும், திருச்சி மாவட்டத்திற்கும் எவ்வளவு முக்கியமானது என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மையாகும். அதே நேரத்தில் என்னுடைய, மாவட்டத்தில் ஓடும் ஒரே ஆறு பாலாறுதான். அந்தப் பாலாற்றில் தண்ணீர் கண்ணால் பார்க்க முடியாது. உணரத்தான் முடியும். நிலத்தடி நீர்தான் அங்கே இருக்கிறது. வாய்க்கால் கரையோரம் உள்ள நிலத்தடி நீரை எடுத்துத்தான் நாம் இப்போது பல பகுதிகளுக்குக் குடிநீர் கொடுத்து வருகிறோம். அந்தக் கால்வாயில் புல்லூர் என்ற பகுதியில் அதிகமாக மழை காலங்களில் நீர் வருகிறது. அந்தப் பகுதியில் ஒரு அணைக்கட்டு கட்ட வேண்டுமென்று நீண்டகாலமாகக் கோரிக்கை எழுப்பப்பட்டு அது அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. பல அமைச்சர்கள் வந்து அதைப் பார்வையிட்டு இருக்கிறார்கள். பார்வையிட்ட அமைச்சர்கள் எல்லாம் இங்கே வீற்றிருக்கிறார்கள். சீப் இன்ஜினியர் கூட வந்து பார்த்திருக்கிறார். அந்தப் புல்லூர் திட்டம் என்னுடைய தொகுதியில்கூட அல்ல. என்னுடைய தொகுதிக்கு அடுத்தாற்போல் வருகிறது. என்னுடைய மாவட்டத்திற்கு என்பதால் அந்தப் புல்லூர்த் திட்டத்தை உடனடியாக எடுத்துக் கொள்வதற்கு அமைச்சர் அவர்கள் முன் வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல் ஆண்டியப்பனூர் திட்டத்தைப் பற்றியும் குறிப்பிட விரும்புகிறேன். கடந்த காலத்தில் அதை பொதுப்பணித் துறை அமைச்சர்களாக இருந்த திரு. ப. உ. சண்முகம் அவர்களும், சாதிக் பாட்சா அவர்களும் வந்து பார்த்து இருக்கிறார்கள். 1974—75ஆம் ஆண்டில் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற நிதிநிலை அறிக்கையில் வழிவகை செய்து இருக்கிறார்கள். அது ஏற்றுக் கொள்ளப்பட்ட திட்டமாக இருந்தும் இதுவரையில் பிரிலிமினரி இன்வஸ்டிகேஷன் என்று சொல்லுகிறார்களே அந்த நிலைகூட நடத்தப்படாத நிலையில் உள்ள திட்டமாக அது இருக்கிறது. ஆகவே, அந்தத் திட்டத்தையும் நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, ஆலங்காயம் பெரிய ஏரியைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். ரூ. 98 இலட்சம் செலவில் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற பட்ஜெட் ப்ரோவிஷன் செய்து இருக்கிறார்கள். அப்படி இருந்தும் அந்தத் திட்டம் இன்னும் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. அது எங்களுக்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது. ஆகவே, அந்த ஆலங்காயம் பெரிய ஏரித் திட்டத்தையும் உடனடியாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆலங்காயத்தில் வெள்ளைக்குட்டை காணாறு என்ற திட்டம் இருக்கிறது. அது நீண்டகாலமாக காணாத திட்டமாகவே இருந்து வருகிறது. அந்தத் திட்டத்தைக் காணும் திட்டமாக ஆற்றும் ஆற்றல் நம்முடைய பொதுப்பணித்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. இராமச்சந்திரன் அவர்களுக்கு இருக்கிறது என்பது எனக்குத் தெரியும். ஆகையால் அதைக் காணும் திட்டமாக மாற்ற வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

தொழில் பற்றி பல நல்ல திட்டங்களை இந்த பட்ஜெட் உரையிலே காண்கிறோம். ஆலங்காயத்தில் சந்தனத் தைலத் தொழிற்சாலை ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும். ஜவ்வாது மலையில், மாநிலத்தில் கிடைக்கின்ற சந்தன மரத்தில் 80 சதவீதம் கிடைக்கின்றது. இந்தச் சந்தன மரத்தை வைத்துக் கொண்டு சந்தனத் தைலம், சந்தன சோப் மற்றும் மணமுள்ள பொருள்கள் ஏற்றுமதிக்கான பொருள்களைச் செய்யலாம். மேலும் அந்தப் பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கவும் இது வழி செய்யும். தவிரவும், இந்த மலையில் கிடைக்கும் சந்தன மரங்கள் கள்ளக் கடத்தலால் போய் விடுகின்றது. ரூ. 3 கோடி அளவுக்கு இந்த சந்தன மரங்கள் வருமானத்தைக் கொடுக்கிறது என்றால், 27 கோடி ரூபாய் மதிப்புள்ள சந்தனக் கட்டைகள் கடத்தப்படுகிறது என்று புள்ளி விவரங்கள் கூறுகின்றன. பத்திரிக்கையிலும் போடுகிறார்கள். இதற்கு எந்தவிதமான முடிவும் இதுவரை ஏற்படவில்லை. அப்பகுதியில் ஒரு சந்தனத் தைலத் தொழிற்சாலையை ஏற்படுத்துவதன் மூலம் இந்தக் கள்ளக்கடத்தலையும் தடுக்க முடியும். ஆகவே, ஒரு சந்தனத் தைலத் தொழிற்சாலையை ஆலங்காயம் பகுதியில் ஏற்படுத்த வேண்டும். மணமுள்ள காரியம்—ஆகவே, தயவு செய்து செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னும் 18 பேர்கள் பேச வேண்டும். 15 நிமிடங்களாகப் பேசிக்கொண்டிருக்கிறீர்கள்; தயவு செய்து முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. எம். ஏ. லத்தீப் : இன்னும் இரண்டு நிமிடங்களில் முடித்து விடுகிறேன்.





வாணியம்பாடி தோல் தொழிற்சாலைக்கு புகழ் பெற்ற ஒரு இடமாகும். அங்கே ஒரு ஃபினிஷிங் யூனிட்டை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நான்காண்டுகளுக்கு முன் ரூ. 100 கோடிக்கு தோல் பொருள்கள் ஏற்றுமதியாயிற்று. இன்றைக்கு ரூ. 400 கோடி என்று சொல்லத்தக்க அளவுக்கு உயர்ந்திருக்கிறது. அதிலேயும் 90 சதவீதம் தமிழ்நாட்டிலிருந்து ஏற்றுமதியாகிறது. இங்கே ஒரு ஃபினிஷிங் யூனிட்டை ஏற்படுத்த, மத்தியிலே இருப்பவர்கள் என்ன காரணத்தாலோ, இத் தொழிற்சாலை இங்கே ஏற்படா வண்ணம் தொந்தரவு செய்து வருகிறார்கள். இரண்டு முறை தீர்மானங்கள் நிறைவேற்றி இருக்கிறோம். அதற்கு "பாலோ ஆப் ஆக்ஷன்" எடுத்து அங்கே ஒரு ஃபினிஷிங் யூனிட்டை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆம்பூரில் ஒரு "ஷூ"—செருப்புத் தைக்கும் தொழிற்சாலை ஏற்படுத்த வாய்ப்பு இருக்கிறது. அத் தொழிற்சாலையையும் ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆம்பூர்-பேரணம்பட்டு சாலையில் ஒரு பாலம் தேவையாக இருக்கின்றது. ஆம்பூருக்கு பக்கத்தில் பாலாறு ஓடுகிறது. ஆற்றில் வெள்ளம் வந்தால், வாகனங்கள் ஆற்றைக் கடக்க முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. ஆம்பூருக்கு அந்தப் பக்கத்தில் தான் தொழிற்சாலைகள் பல இருக்கின்றன. ஆகவே, இந்தப் பாலத்தை அமைப்பதற்கு ஆம்பூரை பேரணம்பட்டு, குடியாத்தத்தோடு இணைக்கின்ற நெடுஞ்சாலையில் பாலம் அமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதைப் பற்றி அமைச்சரிடம் நான் ஏற்கெனவே ஒரு மனுக்கூட கொடுத்திருக்கிறேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே போல, ஆலங்காயம் திருப்பத்தூர் வழித்தடம் ஒன்று வேப்பம்பட்டு, வள்ளிப்பட்டு, பொன்னேரி வழியாக ஏற்படுத்தி அப்பகுதி மக்களுக்கு போக்குவரத்து வசதி செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இது சம்பந்தமாகவும் மாண்புமிகு அமைச்சரிடம் ஒரு மனு கொடுத்தேன். இது வரை நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை. எனவே, இந்தக் கோரிக்கையை ஏற்று அந்த வழித்தடத்தை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது.)

மொத்தத்தில், இது ஒரு நல்ல பட்ஜெட், வரவேற்கத் தக்க பட்ஜெட், இருந்தாலும், நான் ஏற்கனவே சொன்னதைப் போல நல்ல பாராட்டத்தக்க பட்ஜெட்டாக இருந்தாலும், சிறுபான்மை மக்களுக்கு வழிவகைகள் செய்திருந்தால் பரிபூரணமாக இருந்திருக்கும். சிறுபான்மை மக்களைப் பற்றி நான்

சொல்ல வேண்டிய நிலையில் இருப்பதால் அடுத்தடுத்து வருகிற ஆண்டுகளில் பேசிக் கொள்ள வாய்ப்பளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, அப்போது மற்ற கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று கூறி, இந்த பட்ஜெட்டை வரவேற்று அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இனிப் பேசவிருக்கிற உறுப்பினர்கள் தங்கள் உரையை ஐந்து நிமிடங்களுக்குள் முடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கே. சௌந்திரராஜன் : பேரவைத் தலைவரவர்களே, இந்த மாமன்றத்தில் மதிப்புக்குரிய நிதியமைச்சர் வைத்துள்ள நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவிப்பதற்காக உங்கள் முன்னாலே நிற்கின்றேன்.

இன்றைய தினம், மதிப்பிற்குரிய நிதியமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் சமர்ப்பித்திருக்கிற நிதிநிலை அறிக்கை இந்த நாட்டிலிருக்கிற ஏழை பாட்டாளி மக்களுடைய உணர்வுகளை எல்லாம் பிரதிபலிக்கிற நிதிநிலை அறிக்கையாக அமைந்திருக்கிறது என்பதை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி நமது மாண்புமிகு பேராசிரியர் குறிப்பிடுகிறபோது, இதில் உப்பு இல்லை, எனவே சப் என்று இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

(பிற்பகல் 12-10)

அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்வது, ஏற்கனவே முன்பிருந்த ஆட்சியில் இருந்தவர்கள் இந்த நாட்டை நோயாளியாக்கி விட்டதன் விளைவாகத்தான் இந்த நிதிநிலை அறிக்கை உப்பு இல்லாத அறிக்கையாக, ஒரு மாமருந்து தருகிற நேரத்தில், உப்பற்ற பத்தியம் வைப்பது போல் நிதிநிலை அறிக்கையைத் தயாரித்து அந்த வகையில் இந்த நிதிநிலை அறிக்கை சப் என்றிருக்கிறது என்று கூறிக் கொள்வது தவருக இருக்க முடியாது என்று கருதுகிறேன். இந்த நிதிநிலை அறிக்கை ஒரு மாமருந்தாக இந்த நாட்டுக்கு இருக்கிறது என்பதை நான் பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, பேராசிரியர் அவர்கள் பேசுகிறபோது ஜனதிபதி ஆட்சி பற்றியும் அந்த நேரத்தில் நடைபெற்ற கொடுமைகள் பற்றியும் கூறினர்கள். உள்ளபடியே அந்தக் கருத்துக்களை நான் ஏற்றுக்கொள்கிற நேரத்தில் இன்றைய தினம் நான் அவர்களிடம்



தெரிவித்துக்கொள்ள விரும்புவதெல்லாம் இன்றையதினம் பேசுகிறபோது பேராசிரியர் அவர்கள் எந்த உணர்வுகளைக் குறிப்பிட்டார்களோ அந்த உணர்வுகளின் அடிப்படையில் கடந்த காலத்தில் இருந்த ஆட்சியில் எந்தெந்த அளவில் இந்த நாட்டில் கொடுமைகள் நடைபெற்றிருந்தன என்று குறிப்பிட்டிருந்தால் உள்ளபடியே நான் மெத்த மகிழ்ச்சியடைந்திருப்பேன்.

காரணம், பேராசிரியர் அவர்களோடு நீண்ட காலம், நான் இளைஞனாக இருந்தபோதே, உறவோடு பழகியவன்; அவர்களுடைய வீர உரைகளை எல்லாம் பல நேரங்களில் கேட்டு மகிழ்ந்தவன் என்ற காரணத்திற்காக அவர்களுக்கு ஒன்றை நான் நினைவூட்ட விரும்புகிறேன். நேப்பியர் பூங்காவில் பேசும்போது ஒரு கருத்தை அவர்கள் வெளியிட்டார்கள். மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்களைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு அவர்கள் பேசுகிற போது தெளிவாகச் சொன்னார்கள். ''நான் கலைஞர் கருணாநிதி அவர்களை தலைவனாக ஏற்றுக் கொள்ளமாட்டேன். வேண்டுமானால் தளபதியாக ஏற்றுக் கொள்வேன்'', என்று வீர உரையாற்றினார். அந்த அளவிற்கு வீரத்திற்குப் பேர்போன பேராசிரியர் அவர்கள் ஆட்சியில் இருந்தபோது இந்த நாட்டில் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் கொடுமைப்படுத்தப்பட்டார்கள். சிறைச்சாலையில் அடைக்கப்பட்டார்கள். சொல்லப்போனால் என் தொகுதியில் திருச்சி க்ளைவ் ஹாஸ்டலில் மிகக் கொடுமையான ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. அங்கே பத்து பதினைந்து வயது பாலகர்கள் இளம் சிறுர்கள், இளம் தளிர்கள், நான்கு சுவர்களின் மத்தியில் அடைக்கப்பட்டு காவல் துறையினரால் கொடுமைப்படுத்தப்பட்டு அவர்கள் ரத்தம் கொட்டப்பட்டது அந்த ஆட்சிக் காலத்தில் நடைபெற்றது. அதை பேராசிரியர் அவர்கள், வீர உரை ஆற்றுகிறவர்கள், கண்டித்திருப்பார்களேயானால் நிச்சயமாக இந்த நேரத்தில் ஜனதிபதி ஆட்சிக் காலத்தில் நடந்ததைக் கண்டிக்கும் அந்த உணர்வைப் பெற்றிருக்கிறுர்கள் என்று கூறலாம். ஆனால் ஏனோ பேராசிரியர் அதைப் பெறவில்லை என்பதற்காக வருந்துகிறேன். அந்த வகையில் அவர்கள் ஆட்சி இருந்திருந்தால் அதை வரவேற்றிருக்கக்கூட முடியும், அவற்றையெல்லாம் செய்ய அவர்கள் தவறிவிட்டார்கள்.

திரு. க. அன்பழகன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னுடைய பேச்சைக் குறிப்பிட்டுச் சொன்ன காரணத்தால் நான் இப்போதாவது விளக்கவேண்டும் என்று விரும்புகிறேன். ''தனிப்பட்ட முறையில் எனக்கு தலைவராக நான் கலைஞரை ஏற்றுக் கொள்ளவில்லை ; அவரை விட நான் வயதானவன் என்று சொன்னேன். இப்போதும் அதே நிலைதான். தனிப்பட்ட முறையில்—இன்டிவிடுவல் கப்பாஸிட்டியில்— அது ; ஆனால் கட்சி என்ற முறையில் அவரைத் தலைவராக, தளபதியாக ஏற்றுக் கொள்கிறேன் கட்சிக்குள், மறுக்கவில்லை'' என்று அந்தக் கூட்டத்திலேயே சொல்லியிருக்கிறேன். அது ஒரு பெரிய பிரச்சினை அல்ல.

இரண்டாவதாக, க்ளேவ் ஹாஸ்டலில் நடைபெற்ற நிகழ்ச்சி. அதுகுறித்து திராவிட முன்னேற்றக்கழக அரசால் விசாரணைக் கமிஷன் ஏற்பாடு செய்து அறிவிக்கப்பட்டது. அந்த அறிக்கை அரசாங்கத்தினிடத்திலும் பொது மக்களிடத்திலும் இன்றைக்கும் இருக்கிறது.

அதேபோல் எமர்ஜென்ஸி காலத்தில் நடைபெற்ற அக்கிரமங் களுக்கெல்லாம் விசாரணைக் கமிஷன் வைக்கிற அளவிற்கு எல்லா அக்கிரமங்களுக்கும் விசாரணைக் கமிஷன் வைக்க இந்த அரசு முன் வருமானால் அது வரவேற்கத்தக்கது.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : பாயிண்ட் ஆப் ஆர்டர், திருச்சி க்ளேவ் ஹாஸ்டல் சம்பவம் குறித்து குப்பண்ணன் அறிக்கை மீது கடந்த கால அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்ததா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை.

திரு. கே. சௌந்திரராஜன் : க்ளேவ் ஹாஸ்டல் சம்பவத்தை வரலாற்று சம்பவத்தோடு குறிப்பிட்டுக் கூற வேண்டுமானால் நான் உறுதியாகச் சொல்லிக் கொள்கிறேன். ஜாலியன்வாலா பாக் நிகழ்ச்சி நாம் வரலாற்றில் படித்த நிகழ்ச்சி. அப்போது நான் இளைஞனாக இருந்தபோது நடைபெற்ற நிகழ்ச்சி அது.

ஆனால் கிளேவ் ஹாஸ்டலில் நான்கு சுவர்களுக்குள் மாணவர்கள் அடைக்கப்பட்டு ரத்தம் சொட்ட சொட்ட அடிக்கப்பட்ட நிகழ்ச்சி அப்போது இருந்த ஆட்சியில்தான் நடைபெற்றது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். இப்படி செய்தவர்கள் இன்றைக்கு இந்த நிதிநிலை அறிக்கையின் மீது பேசுகின்ற நேரத்தில் ஜனதிபதி ஆட்சியில் நடைபெற்ற கொடுமைகளைப் பற்றி விசாரிக்க வேண்டுமென்றும் அதை கண்டிக்க வேண்டும் என்றும் கருத்துக் களைச் சொன்னார்கள். அதை நான் ஏற்றுக் கொள்கிறேன். அதே நேரத்தில் முன்னால் இப்படிப்பட்ட தவறுகள் நடைபெற்ற நேரத் தில் ஏன் இவர்கள் ஊமையாக இருந்துவிட்டார்கள் என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையை நிதி அமைச்சர் அவர்கள் சமர்ப் பிக்கும்போது, இக்கட்டான நிலையில் தான் இந்த அறிக்கையை தயாரித்திருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இதைத் தான் நமது பேரறிஞர் அண்ணா அவர்கள் முன்பே தனது கடைசி கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள். மாநிலங்களுக்கு இருக்கின்ற அதிகாரங்களைப்பற்றிய உணர்வுகளை அதில் குறிப்பிட்டிருக் கிறார்கள். அந்த உணர்வினைத்தான் இரண்டு நாட்களுக்கு முன்பு





பேசிய பாரத பிரதமர் தேசாய் அவர்களும், பலமான மாநில அரசுகள் இருந்தால் தான், மத்தியில் பலமான மத்திய அரசு இருக்க முடியும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, இப்படிப் பட்ட உணர்வுகள் இன்றைக்கு எல்லா தரப்புகளிலிருந்தும் வந்து கொண்டிருக்கிறது. ஆகவே இந்த உணர்வுகளை ஏற்றுக்கொண்டு அதன் அடிப்படையில் இந்த அரசு செயல்படும் என்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது.)

அடுத்து, இங்கு பல்வேறு கருத்துக்களைச் சொல்ல வேண்டும் என்று நான் விரும்பினாலும் துணைத்தலைவர் அவர்கள் முடிக்க வேண்டும் என்று மணியடிக்கின்ற காரணத்தால், எனது தொகுதி யிலுள்ள சில விஷயங்களை மட்டும் இங்கு கூறி விடை பெறுகிறேன். என்னுடைய தொகுதி திருச்சி 2-வது தொகுதியாகும். இங்கே அகில உலகத்தில் எங்குமில்லாத அளவுக்கு ஒரு நரக பூமி இருக் கிறது. அண்டகொண்டான் பகுதி என்கின்ற அந்தப் பகுதியில், நம் நாடு சுதந்திரம் அடைந்து 30 ஆண்டுகளுக்கு மேலாகியும் அங்கு சாலை வசதி கிடையாது. போக்குவரத்து வசதி கிடையாது. ஒளி விளக்கு வசதி கிடையாது. தண்ணீர் வசதி கிடையாது. ஒரு நரக பூமியாக இருக்கிறது. திருச்சியின் மையப் பகுதியில் இப்படிப்பட்ட ஒரு இடம் இருக்கிறது. இதைப் பற்றி கவனிக் கின்றவர்கள் இதுவரை யாரும் இல்லை. இனியாவது அரசு இதைக் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் திருச்சி நகரத்தில் பல்வேறு பகுதிகளில் எந்தவிதமான வசதியும் இல்லாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே இதைக் கவனத்தில் எடுத்துக் கொண்டு இதற்குப் பரிகாரம் தேடித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திருச்சி நகரத்தைப் பொறுத்தவரையில், பீடித் தொழிலைச் செய் கின்றவர்கள் ஏராளமான பேர்கள் இருக்கின்றார்கள். இதில் எத்தனை வயதுள்ளவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று பார்த்தால் 3 வயது குழந்தை முதல் 90 வயதுள்ள கிழவி வரை ஒரு குடும்பத் திலுள்ள அனைவரும் ஈடுபட்டிருக்கிறார்கள். இவர்கள் குறிப்பிட்ட நேரத்தில் வேலை செய்கின்றார்களா என்று பார்த்தால், இன்னநேரம் என்றில்லாமல் இரவு நடு நிசியிலும் பீடி சுற்றிக் கொண்டிருப் பதை நாம் பார்க்கலாம். அந்த அளவுக்கு அவர்களுடைய குடும்ப வாழ்க்கை அமைந்திருக்கிறது. ஒரு வேளை சோற்றுக்கா 20 மணி நேரம் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. அரசாங்கம் எவ்வளவோ கூலிச் சட்டங்களைக் கொண்டு வந்திருந்தும் கூட அவைகள் எல்லாம் சரியான முறையில் செயல்படாததின் காரண மாக, பெரிய முதலாளிகள் தான் மேலும் மேலும் கொழுத்து வருகிறார்களே தவிர கூலி வேலை செய்கின்றவர்கள் என்றைக்கும் இப்படிப்பட்ட கஷ்டநிலைமையில் தான் வாழ்ந்து கொண்டிருக் கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. கே. சௌந்திரராஜன்] [1977 ஆகஸ்டு 2

*மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: இரண்டு மூன்று
தினங்களுக்கு முன்னால், பீடி அதிபர்களும், தொழிலாளர் பிரதி
நிதிகளும் என்னைச் சந்தித்தார்கள். மீண்டும் 4-ம் தேதி இது
பற்றி பேச இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. சௌந்திரராஜன்: அடுத்து, திருச்சியில் ஒரு சாராய
தொழிற்சாலை இருக்கிறது. இதிலிருந்து வருகின்ற சாராய நாற்
றத்திற்கு நிரந்தரமாக திருச்சி நகரம் ஆளாகிக்கொண்டிருக்கிறது
ஆகவே இதைப் போக்குவதற்கு ஒரு நிரந்தர பரிகாரத்தை தேடித்
தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது)

மேலும், திருச்சியில், குடிநீர் வாரியத்தின் சார்பாக வடிகால்,
குடிநீர் இணைப்புத் தருகின்ற பல சாலைகளிலும் தோண்டப்பட்டு
குழிகளும் குட்டைகளும் நிறைந்து கிடக்கின்றன. இவைகள் எல்
லாம் நகராட்சி மன்றத்திடம் ஒப்படைக்காமல் இருப்பதின் காரண
மாக சாலைகள் சீர்படுத்தப்படாமல் இருக்கின்றன. இந்தக்
குறையைப் போக்குகின்ற அளவில் குடிநீர் வாரியம் விரைந்து
செயலாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஒரு வேண்டுகோள், இந்த நாட்டில் ஏழை எளிய
மக்கள் பிழைப்பதற்கு வழியில்லாமல் திண்டாடிக் கொண்டிருக்
கிறார்கள். இவர்கள் நல்ல முறையில் தொழிலைப் பயின்று
கொள்வதற்கு வசதி ஏற்படுத்திக் கொடுக்கின்ற முறையில்
இந்த நாட்டிலுள்ள ஏழை மக்கள் தொழிற் பயிற்சி பெற்றுக்
கொள்ளுகிற முறையில் தொழில் பயிற்சி பெறுவதற்கு ஒவ்வொரு
யூனியனுக்கும் ஒவ்வொரு தொழிற் பயிற்சிப் பள்ளியை உருவாக்கி
தொழிற் பயிற்சிப் பெறுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக்
கொடுத்தால், அவர்களாகவே சொந்த முறையில் தொழிலை ஏற்
படுத்திக்கொள்ள முடியும் என்பதையும் கூறி, அதற்குரிய
வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்
கொண்டு, இந்த நிதிநிலை அறிக்கையைத் தந்த நிதி அமைச்சர்
அவர்களைப் பாராட்டி முடித்துக்கொள்கிறேன்.

[பிற்பகல் 12-20]

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: மாண்புமிகு உறுப்
பினர்கள் ஒவ்வொருவரும் கண்டிப்பாக 5 நிமிடங்களுக்கு மேல்
எடுத்துக் கொள்ளக் கூடாது. ஏறக்குறைய இன்னும் 20 பேர்
களுக்கு மேல் பேச வேண்டியிருப்பதால், கண்டிப்பாக ஒவ்வொரு
வரும் 5 நிமிடங்களுக்கு மேல் பேசக்கூடாது என்று கேட்டுக்
கொள்கிறேன்.



1977 ஆகஸ்டு 2] [திரு. கே. சௌந்திரராஜன்]

திரு. இரா. எ. சந்திரன் ஜெயபால்: இந்த மன்றத்தின் துணை
தலைவர் அவர்களே, 1977–78ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை
இந்த மன்றத்திற்கு மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால்
அளிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையிலே கிராம மக்களின்,
நலத்தைப் பற்றித்தான் குறிப்பிடப்பட்டிருக்கிறதே தவிர, நகர்ப்
புறமக்களின் நல்வாழ்வைப் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை.

என்னுடைய தொகுதி தியாகராயநகர் தொகுதி, அது சென்னை
நகரத்தைச் சேர்ந்தது. அதிலே 7 மாநகர வட்டாரங்கள் இருக்
கின்றன. அவைகளில் மிகச் சிறப்பாக 113வது வட்டம், வட
பழனி ஆகும். அந்த இடம் கிராமத்தைப்போல் தோற்றம்
அளிக்கும்; அது மாநகராட்சியின் பகுதிக்குள் இருந்தாலும்
மின் வசதி இல்லை. சுகாதார வசதி மிகவும் குறைவு; குடிதண்ணீர்
வசதி இல்லை; பாதாள சாக்கடை வசதியும் இல்லை; நல்ல சாலை
கள் இல்லை, அந்தச் சாலைகளுக்கு விளக்குகளும் இல்லை. இப்படிப்
பட்ட நகர்ப் புறத் தொகுதிகளுக்கு இந்த நிதிநிலை அறிக்கையிலே
சற்றும் கவனம் செலுத்தப்படாமல் இருக்கிறது.

மேலும், இந்த நிதி நிலை அறிக்கையிலே நீதிபதிகளைப்பற்றி
எவ்வித கவனமும் செலுத்தவில்லை. தமிழகத்திலே வேலை செய்
கின்ற நீதிபதிகள் எல்லோருக்கும், இதர மாநிலங்களிலே உள்ள
சம்பளமோ, ஊதியமோ அந்த அளவுக்குக் கொடுக்கப்பட வில்லை
என்பதை மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்களின் கவ
னத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். தமிழகத்திலே நீதிபதி
களுக்கு வழங்கும் ஊதியம், இதர மாநிலங்களிலுள்ள, மற்றும்
அடுத்த மாநிலங்களான கேரளா, கர்நாடகம், ஆந்திரா போன்ற
மாநிலங்களிலே உள்ள நீதிபதிகளுக்குக் கொடுக்கப்படுகின்ற ஊதி
யத்தைவிட மிகக் குறைவாக இருக்கிறது.

அதைத் தவிர, பிற மாவட்டங்களிலிருந்து சென்னைக்கு மாற்ற
லாகி வரும் நீதிபதிகளுக்கு வீட்டு வசதி கிடையாது. மாவட்ட
நீதிபதிகள், உதவி நீதிபதிகள், டிஸ்டிரிக்ட் அண்டு செஷன்ஸ்
ஜட்ஜ், சப்–ஜட்ஜ் அதாவது துணை நீதிபதிகள், பர்ஸ்ட் கிளாஸ்
மாஜிஸ்ட்ரேட்டுகள் அதாவது முதல் வகுப்பு குற்றவியல் நீதிபதிகள்
செகன்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட்டுகள் அதாவது இரண்டாவது
வகுப்பு குற்றவியல் நீதிபதிகள் போன்றவர்களுக்கு மாவட்டங்களை
பொறுத்தவரையில் அரசு வீடுகள் கட்டிக் கொடுத்திருக்கிறது.
மாவட்ட நீதிபதிகளின் வீடுகள் அங்கே பெரிய பெரிய அரண்மனை
களைப் போல உள்ளன. ஆனால், அவர்கள் சென்னைக்கு மாற்றலாகி
வந்தால், எந்தவிதமான வீட்டு வசதியும் இல்லை. இங்கே நீதிபதி
களுக்கு என்று தனி குடியிருப்பும் அவர்கள் சென்னைக்கு மாற்
றலாகி வந்தால் அவர்களுக்கு அக்காமடேஷன் கண்ட்ரோலர்
பிரியாரிடி கொடுத்து வீடுகள் அளிப்பதில்லை. ஆனால்,
ஐ. ஏ. எஸ். ஆபீசர், ஐ. பி. எஸ். ஆபீசர் போன்றவர்களுக்கு

[திரு. இரா. எ. சந்திரன் ஜெயபால்] (1977 ஆகஸ்டு 2

அவர்கள் சென்னைக்கு மாற்றலாகி வந்தால், அவர்களுக்கு முறைக் குத் தவருக அக்காமடேஷன் கனட்ரோலர் அவர்களால் வீட்டு வசதி செய்து கொடுக்கப்படுகிறது. இதற்குச் சான்றுகள் உள்ளன,

முதல் வகுப்பு மாவட்ட நீதிபதிகளுக்கும், சப்மாஜிஸ்ட்ரேட்டு களுக்கும் மாவட்டங்களில் அவர்கள் வீடுகளில் வேலை செய்வதற் காக 2 பியூன்கள் அமைத்துக் கொடுத்திருக்கிறர்கள். மாஜிஸ்ட்ரேட்டு வீடுகளிலுள்ள அரசு சம்பந்தப்பட்ட ரிகார்டுகளை பாதுகாத்துக் கொள்வதற்கும், மற்றும் சொந்த அலுவல்களையும் கவனித்துக் கொள்கிறர்கள்.

ஆனல் சென்னைக்கு அவர்கள் வந்தவுடன் சிவில் சைடில் வேலை பார்க்கும் நீதிபதிகளுக்கு எந்த விதமான பியூன்களும் அளிக்கப்படவில்லை. குற்ற இயல் நீதிபதிகள், மெட்ரோபாலிடன் மாஜிஸ்ட்ரேட் வேலை பார்க்கும் நீதிபதிகளுக்கு காவல் துறையி லிருந்து காவலர்கள் வீட்டு ஆர்டர்லிகளாக அளிக்கப்பட்டிருக்கி றர்கள். ஆனல் அந்த போலீஸ் ஆர்டர்லிகள் நீதிபதிகளுடைய வீட்டுக்கு வேலைக்கு வராவிட்டால் நீதிபதிகளால் அவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்க முடியவில்லை. ஏனென்றல் அவர்கள் நீதித் துறையில் பணியாற்றவில்லை. இப்படிப்பட்ட அவல நிலையை மாற்றி நீதிபதிகள் வீட்டில் வேலை செய்யவும், உதவியாக இருக்கவும் பியூன்களை அளித்து உதவி செய்ய வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன்.

சென்னையிலே குற்ற இயல் நீதிபதிகள் 20 பேர்கள் பணி யாற்றுகிறர்கள். அவர்கள் 20 பேருக்கும் நீதிமன்றங்கள் கிடை யாது. சென்னை எழும்பூரில் குற்ற இயல் நீதிபதி தாழ்வாரத்தில் கோர்ட்டை அமைத்து வழக்குகளை விசாரித்துக் கொண்டிருக்கிறர். அவருக்கு ஓய்வு எடுக்க அறை கிடையாது. எப்.ஓ.எல். பிளஷ் அவுட் வசதிகள் கிடையாது; குடிதண்ணீர் வசதி கிடை யாது. சைதாப்பேட்டையில் வக்கீல்கள் சங்கத்தின் அறையை எடுத்து ஒரு நீதிபதி தன்னுடைய நீதிமன்றமாக அமைத்துக் கொண்டிருக்கிறர்கள். அவருக்கும் எந்தவித வசதியும் இல்லை. தலைநகரிலேயே இந்த மாதிரி நீதிமன்றங்கள் புறக்கணிக்கப்படக் கூடிய நிலை இருக்கிறது. இந்த நிலையை போக்க சட்ட அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று வேண்டிக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது.) நன்றி. வணக்கம்.

திரு. மு. ரெ. கோவேந்தன்: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர் களால் கொண்டு வரப்பட்ட நிதிநிலை அறிக்கைக்கு எனது பாராட் டுதல்களைத் தெரிவிக்கும் முன்பாக என்னைத் தேர்ந்தெடுத்து, சட்டமன்றத்திற்கு வர வாய்ப்பளித்த தமிழக முதல்வர் பொன் மனச் செம்மல் புரட்சித் தலைவர் அவர்களுக்கும் என்னை இம் மாமன்றத்திற்குஅனுப்பிய பேராவூரணித் தொகுதி வாக்காளப்



1977 ஆகஸ்டு 2] [திரு. இரா. எ, சந்திரன் ஜெயபால்]

பெருமக்களுக்கும் குறிப்பாகத் தாய்குலத்திற்கும் எனது பணிவான நன்றியைத் தெரிவித்துக் கொண்டு எனது கன்னிப் பேச்சைத் தொடங்குகின்றேன்.

மாண்புமிகு நிதியமைச்சர் நாவுக்கரசர் நாஞ்சிலார் அவர்கள் கொண்டு வந்த நிதிநிலை அறிக்கையில் இந்த நாட்டு மக்கள் மனங் குளிரக் கூடிய நல்ல பல திட்டங்கள் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. குறிப்பாக—அரிசன, பழங்குடி மற்றும் பிற்பட்ட வகுப்பு மாண வர்களுக்குக் கட்டணமில்லாக் கல்வி, கிராமப்புற வீட்டு வசதியை மேம்படுத்தும் திட்டம், கிராமப் புறங்களை இணைக்கும் சாலை வசதித் திட்டம், மீனவர் குடும்பங்களுக்குச் சேமநலநிதி, கிராமப் புற மக்களுக்கு நடமாடும் மருத்துவமனைகள், கிராமப்புறங்களில் நிலப்பண்ணை அமைத்தல், உயிரிழக்கும் மீனவர் குடும்பத்திற்கு ரூ. 10,000 நிதி உதவி அளித்தல், கிராமப்புறங்களில் 10,000 சிறுதொழில்கள் தொடங்குவது, அதன் மூலம் 50,000 பேருக்கு வேலை வாய்ப்பளித்தல், கிராமப்புறங்களுக்குக் குடிநீர் வழங்குதல், கிராமங்களில் சிறு பேருந்துகள் (மினி பஸ்) விடுதல் ஆகிய வற்றிற்கும், பாசனக் கட்டணத்தை ஏக்கருக்கு ரூ. 12-லிருந்து 10 ஆகக் குறைத்தும், இரண்டாவது வகைப் பாசனங்களுக்கு ரூ. 10-லிருந்து ரூ. 8 ஆகக் குறைத்ததற்கும், பாசனம் சம்பந்தப் பட்ட தீர்வை குறித்து விரிவாக ஆய்வு நடத்த 'பரிந்துரைக்குழு' ஒன்று அமைக்க முடிவு செய்துள்ளதற்கும், மிளகாய், நிலக்கடலை போன்ற பயிர்களுக்குள்ள தனித் தீர்வையை நீக்கியதற்கும் எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்ற ஆண்டு தஞ்சை, திருச்சி மாவட்டத்திலுள்ள விவசாய மக்கள் காவிரித் தண்ணீர் வராததால் அவர்கள் அடைந்த மன வேதனையும், துயரும் சொல்ல முடியாத ஒன்றாகும். இந்த நிலையை நன்கறிந்த நமது தமிழக முதல்வர் பொன்மனச் செம்மல், புரட்சித் தலைவர் அவர்கள் மிக விரைவாக - இடைக்காலக் காவிரி நீர் ஒப்பந்தத்தை நிறைவேற்றி, தஞ்சை திருச்சி மாவட்டத்தி லுள்ள விவசாயக் குடும்பங்களையும் அதே நேரத்தில் தமிழக மக்களையும வாழ வைத்ததற்காக எனது நன்றியைத் தெரி வித்துக் கொள்வதுடன், காவிரி நீர் ஒப்பந்தத்தை விரைவாக நிறைவேற்றித் தருமாறும் வேண்டுகிறேன்.

பேராவூரணித் தொகுதியில் உள்ள சி.எம்.பி. வாய்க்கால்கள் ஏரிகள், குளங்கள் அனைத்தும் பழுது பார்க்கப்படாமலும், தூர் எடுக்காமலும் உள்ளன. அவைகளை எல்லாம் பழுது பார்த்துக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். அத்துடன் பாசனத் திற்கு நிலநீரை வெளியில் கொணரும் திட்டத்தில் பல ஆயிரக் கணக்கான ரூபாய்ச் செலவில் 'நிலநீர்த் திட்டக் கோட்டத்தால்' வெட்டப்பட்ட பல பாசனக் கிணறுகள் வெட்டப்பட்ட நிலையி லேயே பம்ப் அறைகள் கட்டப்பட்டு எந்தவிதமான பயனும்

இல்லாமல் இருக்கின்றன. ஆகவே, அதற்கு மின்சார மோட்டார் இணைப்புக் கொடுத்துப் பாசனத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டு கிறேன்.

(பிற்பகல் 12·30).

பேராவூரணித் தொகுதியில் பல ஆயிரக் கணக்கான ரூபாய்ச் செலவில் குடிநீருக்காகத் தோண்டப்பட்ட ஆழக் குழாய்க் கிணறு களில் கை பம்பு பொருத்தப்பட்டு அவையனைத்தும் இதுவரை சீர்செய்யப்படாமல் குடி தண்ணீருக்காகப் பல கிராமங்களில் அவதிப்படுகிறார்கள். அத்துடன் மேல்நிலை நீர்த்தொட்டி கட்டப் பட்டு குடிநீர் கிடைத்து வந்த ஆவணம், அம்மையாண்டி, அலிவலம் போன்ற பல கிராமங்களில் குழாய் இணைப்புகள் பழுதடைந்து சுமார் ஆறுமாத காலமாகியும் இன்றுவரை பழுது பார்க்கப்பட வில்லை. இதனால் அப்பகுதி மக்கள் குடிநீருக்கு மிகுந்த அவதிக் குள்ளாகி இருக்கின்றனர். ஆகவே, அவற்றை உடனடியாகச் சீர் செய்துகுடிநீர் கிடைக்க ஆவன செய்வதோடு கை பம்புகள் பொருத்தப்பட்ட அனைத்து ஆழ்க்குழாய்கள் கிணறுகளுக்கும் மேல் நிலை நீர்த் தொட்டி கட்டி குடிநீர் வசதி கிடைக்கச் செய்ய வேண்டுகிறேன். மேலும், ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் 'மோட்டார் மெகானிக்' ஒருவரை நியமனம் செய்து உடனுக் குடன் பழுது பார்த்துக் கொடுக்கச் செய்வது மிகவும் அவசிய மாகும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசாங்கத்தால் நடத்தப்பட்டு வந்த திருவோணம் ஒன்றி யத்தைச் சேர்ந்த அகப்பை மருத்துவமனை சுமார் 2 ஆண்டுகளாக இயங்காமலிருக்கிறது. ஆகவே உடனடியாக அம்மருத்துவ மனை இயங்க ஆவன செய்யுமாறு வேண்டுகிறேன். அத்துடன் பேராவூரணியில் உள்ள அரசு மருத்துவமனை, பெருமகளூரில் உள்ள அரசு மருத்துவமனை, சிருவாவிடுதி அழகியநாயகிபுரத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆகியவற்றிற்குத் தேவை யான மருந்துகள் அளித்து நல்ல நிலையில் இயங்க ஆவன செய்ய வேண்டுகிறேன். மேலும் நடமாடும் மருத்துவப் பிரிவுகள் 24 வட்டாரங்களில் தொடங்கப்படுவதாக நிதிநிலை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இத்திட்டத்தை ஆரம்பத்திலேயே பேராவூ ரணி சேதுபாவா சத்திரம் வட்டாரங்களிலும் செயல்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் உள்ள ஊராட்சி ஒன்றியங்களில் ஆணையர் களுக்கு வழங்கியுள்ள 'ஜீப்'புகளுக்கு ஒதுக்கப்படும் பெட்ரோல் அளவு போதாமல் அவர்கள் கிராமப்புறங்களுக்குச் செல்ல முடிவ இல்லை. இதை ஒரு காரணமாகச் சொல்லி அலுவலக வேலையுடன் இருந்து விடுகிறார்கள். ஆகவே தற்போது கொடுக்கப்படும் பெட்ரோல் அளவை இருமடங்காக வழங்கி கிராமப் பகுதிகளில் திட்டங்கள் செவ்வனே நடைபெற ஆவன செய்ய வேண்டுகிறேன்.





ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள பொதுநிதியிலிருந்து செலவு செய்வதில் உள்ள கட்டுப்பாடுகளை நீக்கி, குடிதண்ணீர், சாலை வசதிகளைப் பெருக்குவதற்கு ஏற்படும் செலவினங்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவரின் அனுமதி போதுமானது என்று ஆணை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

கிராமப்புற மக்களுக்காக 16,000 நியாய விலைக் கடைகள் திறக்கப்பட இருக்கிறது என்ற இனிக்கும் செய்தி, கிராமப்புற மக்களின் தேவையறிந்து நிலையறிந்து தெரிவிக்கப்பட்டதாகும். அதற்கு எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்வதோடு சுமார் 5 லட்சம் மக்கள் வாழுகின்ற பேராவூரணித் தொகுதியின் மையமான பேராவூரணி நகரத்தில் ஒரு ஒழுங்குமுறை விற்பனைக் கூடமும் (மார்க்கட்டிங் கமிட்டி) தேங்காய் எண்ணெய் பிழியும் தொழிற்சாலையும், கடலை எண்ணெய் பிழியும் தொழிற்சாலையும் ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகக் கடற்கரையோரப் பகுதிகளில் அடிக்கடி நாட்டுப் படகு விசைப் படகுத் தகராறுகள் ஏற்படுகின்றன. இதுவரையில் அவர்களது பிரச்சனைகளைத் தீர்த்து வைக்க எந்த ஒரு ஏற்பாடும் செய்யப்படவில்லை. நாட்டுப் படகுக்காரர்கள் கடலில் வலை விரித்துவிட்டு வந்து விடுகிறார்கள். அச்சமயத்தில் விசைப் படகு அப்பகுதியில் சென்று நாட்டுப் படகுக்காரர்களுடைய வலையை அறுத்துச் சென்று விடுகிறது. வலையோ ரூ. 2 ஆயிரம், 3 ஆயிரம் பெறுமானமுள்ளது. வலையை இழந்த மீனவர் குடும்பங்கள் அடையும் வேதனை சொல்லி முடியாது. இதனால் நாட்டுப் படகுக் காரர்களுக்கும் விசைப் படகுக்காரர்களுக்கும் கலவரங்கள் ஏற்பட்டு பல கொலைகள் கூட நடந்திருக்கின்றன. ஆகவே இந்த அரசு அவர்களது பிரச்னைகளைப் பரிவோடு கவனித்து விசைப் படகு நாட்டுப் படகு பிரச்னைகளைத் தீர்க்க அரசியல் தலைவர்கள், அரசு அதிகாரிகளைக் கொண்ட குழு அமைத்து நிரந்தர தீர்வு காண வேண்டுகிறேன். அத்துடன் அரசுக்கு அந்நியச் செலவாணியை ஈட்டித் தருகின்ற இறால்மீன் மீது உள்ள விற்பனை வரியை ரத்து செய்து மீனவ மக்களை வாழவைக்க வேண்டுகிறேன்.

நூற்றாண்டுகளுக்கு மேலாக போக்குவரத்துள்ள பேராவூரணித் தொகுதியின் மிக முக்கியமான அடியிற்கண்ட சாலைகளின் குறுக்கே உயர்மட்டப் பாலங்கள் கட்டித்தருமாறு கேட்டுக் கொள் கிறேன் :—

(1) காலகம்—ஆவுடையார்கோவில் சாலை பூனைகுத்தி ஆற் றில் (கி.மீ. 17-6இல்) சுமார் ரூபாய் 5·5 லட்சம் செலவில் ஒரு பாலமும்;

(2) மேற்படி சாலையில் குரட்டூர் ஆற்றில் (கி.மீ. 10-2 இல்) சுமார் ரூ. 9 லட்சம் மதிப்பீட்டில் ஒரு பாலமும்;

(3) மேற்படி சாலையில் கண்ணமுடையார் ஆற்றில் (கி.மீ. 10-6இல்) சுமார் ரூ. 4 லட்சம் மதிப்பீட்டில் ஒரு பாலமும்;

(4) பெருமகளூர்—அத்தானி சாலையில் முடியனாற்றில் (6·8 கி.மீ.) சுமார் 5 லட்ச மதிப்பீட்டில் ஒரு பாலமும்;

(5) ஒட்டங்காடு—ஆயிங்குடிச் சாலையில் அம்புலியாற்றில் (கி.மீ. 24·4இல்) சுமார் ரூ. 4 லட்ச மதிப்பீட்டில் ஒரு பாலமும் நடப்பு நிதியாண்டில்—இரண்டாம் பகுதித் திட்டத்தில் (Part II Scheme) கட்டித்தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அடியிற்கண்ட தடங்களில் தமிழ்நாடு அரசு விரைவுப் பேருந்துகளை விடுமாறு கேட்டுக் கொள்கிறேன்:—

1. பேராவூரணி—சென்னை வழி: புதுக்கோட்டை, திருச்சி.

2. பேராவூரணி—சென்னை வழி: தஞ்சை, திருப்பாப்புலியூர்.

3. பேராவூரணி—மதுரை வழி: அறந்தாங்கி, காரைக்குடி.

4. பேராவூரணி—பழனி வழி: புதுக்கோட்டை, திண்டுக்கல்.

பேராவூரணித் தொகுதியில் சென்னை—கன்னியாகுமரி நெடுஞ்சாலைக்கருகில் வங்காளக்குடாக் கடல் ஓரத்தில் சரபேந்திரராசன் பட்டினம் கிராமத்தில் தஞ்சை மன்னரால் 1814ல் கட்டப்பட்டுள்ள—இதுவரையில் பல்லாயிரக்கணக்கான மக்கள் வந்து பார்த்து செல்கின்ற 'மனோரா' என்ற வரலாற்றுச் சிறப்புமிக்க நினைவுச் சின்னத்தைச் சுற்றுலா இடமாக அறிவித்து. பயணிகள் தங்கும் விடுதி, பூங்கா போன்றவற்றை அமைத்துத் தருமாறு வேண்டுகிறேன். அத்துடன் அப்பகுதி மீனவர்கள் பயன்பெறுகிற வகையில் ஒரு 'கலங்கரை' விளக்கம் ஏற்படுத்தித் தர வேண்டுகிறேன்.

சுற்றுலாத்துறை தங்கும் விடுதிகளில் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்குவதற்கு கட்டணச் சலுகை (Concession) அளிக்குமாறு வேண்டுகிறேன்.

பேராவூரணி ஆத்தாளூரில் வீரமாகாளியம்மன் கோயில் தேவஸ்தானம் இருக்கிறது. அந்தக் கோயிலுக்குச் சொந்தமான தரிசாகக் கிடந்த நிலத்தில் ஏழை விவசாயிகள் தென்னை பயிரிட்டு காய்க்கும் நிலைக்குக் கொண்டுவந்தவுடன் கோயில் நிர்வாகத்தினர் அந்தத் தென்னை மரங்களின் மகசூலை ஏலம் விட்டு விடுகிறார்கள். அதனால் தென்னை பயிரிட்டு காய்க்க வைத்த ஏழை விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆகவே, கோயில் நிலங்களில் பயிரிட்டு காய்க்கும் தென்னை மரங்



களை நெடுஞ்சாலைத்துறை தென்னை ஒன்றுக்கு ரூ. 4 என்ற விகிதத்தில் பஞ்சாயத்துகளுக்குக் கொடுப்பதுபோல் விவசாயிகளிடமே குத்தகைக்குக் கொடுத்து அவர்களை வாழ வைக்கும்படி வேண்டிக்கொள்கிறேன்.

பட்டுக்கோட்டை, ஆலங்குடி, அறந்தாங்கி ஆகிய தொகுதிகளின் மையமாக பேராவூரணித் தொகுதி இருக்கிறது. இந்த நான்கு தொகுதிகளிலும் சுமார் 20 லட்சம் மக்கள் வசிக்கிறார்கள். இப் பகுதியில் கல்லூரி இல்லாதது ஒரு பெருங்குறையாக உள்ளது. இந்த நிலையைப் போக்க பேராவூரணித் தொகுதியில் ஒரு கலைக்கல்லூரி இந்த நடப்பு நிதியாண்டில் ஏற்படுத்தித் தருமாறு வேண்டிக்கொள்கிறேன். (மணியடிக்கப் பட்டது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தயவு செய்து இத்துடன் முடித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. மு. ரெ. கோவேந்தன்: வரும் கல்வியாண்டிலிருந்து, மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி, விவசாயக் கல்லூரி, பட்ட மேற்படிப்பு ஆகியவற்றிற்கு மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் போது மதிப்பெண்கள் அடிப்படையில் மட்டுமல்லாது கிராமப்புறங்களிலுள்ள கல்லூரிகள், உயர்நிலைப் பள்ளிகளில் பயின்று வரும் மாணவர்களுக்கு என்று தனி மதிப்பெண் அளித்து அதன் அடிப்படையிலும் தேர்ந்தெடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ. சின்னையா அவர்களைப் பேச அழைக்கிறேன்.

*திரு. வீ. சின்னையா: மதிப்பிற்குரிய மாமன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, இந்த 1977–78 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையைப் பார்க்கும் பொழுது அவசரம் அவசரமாக அள்ளித் தெளித்ததைப்போல இது காணப்படுகிறது. இந்த நிதிநிலை அறிக்கையானது நாட்டு மக்களுக்கும், நாட்டிலுள்ளவர்களுக்கும் உகந்ததாக இல்லை என்பது எனக்குத் தெளிவாகப் புரிகிறது. ஆகவே, இந்த மாமன்றத்தில் கூறுபவர்களெல்லாம், எங்கே தொழில் வளம் இருக்கிறதோ அவர்களும் தொழில் வளம் வேண்டுமென்று சொல்கிறார்கள், காவிரி நீர் எங்கெங்கு ஓடுகிறதோ அங்கெல்லாம் காவிரி நீர்ப் பற்றாக்குறை என்று சொல்கிறார்கள். புதுக்கோட்டை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் வறட்சிப் பிரதேசமாகக் காட்சியளிக்கிறது என்பது யாருக்கும் தெரியாமலில்லை. ஆகவே, சிறிது காலத்தில் அது பாலைவனமாக மாறப்போகிறது என்ற உறுதியான

நிலைமை ஏற்படப்போகிறது. ஆகவே, இப்பொழுது வேளாண்மையை எடுத்துக் கொண்டால் அங்குள்ள விவசாயிகள் ஏதோ ஆழக்கிணறுகளை எடுத்து அதிலிருந்து தண்ணீர் எடுத்து விவசாயம் பார்க்கிறார்கள். அங்கு உற்பத்தியான பொருட்களை நல்ல கட்டுப்படியான விலைக்கு விற்பது கிடையாது. உற்பத்தி செய்யப்படும் பொருளுக்குக் கட்டுப்படியான விலை கிடையாது காலாகாலத்திலே, உற்பத்தியாகும் நேரத்திலே ஒரு விலையும் உற்பத்தி முடிந்த பிறகு தலைகீழான ஒரு விலையுமாக இருக்கிறது. அந்த நிலைமையைப் பார்க்கும்பொழுது உண்மையிலேயே கட்டுப்படியான விலை கிடைக்க இந்த . அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல இப்பொழுது அந்த ஊரிலே நிலவள வங்கிகள் இருக்கின்றன. நிலவள வங்கிகளில் போய் நாம் கேட்டால் 420 அடிக்கு அப்பாலுள்ள கிணறுகளுக்கு, ஆழக்கிணறுகளுக்குப் பணம் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். அப்படிப்பட்ட. நிலைமைகள் மாற வேண்டும். பணக்காரர்கள் ஆழப்படுத்திக் கொள்கிறார்களே தவிர மற்ற சிறு விவசாயிகள் ஆழப்படுத்த முடியவில்லை. ஆகவே அந்த நிலை மாற வேண்டும். எந்த நிலமானாலும் கடன் கொடுக்க வேண்டும், அடி வித்தியாசம் இருக்கக் கூடாது.

அதைப்போல இங்குள்ள விவசாயிகள் காலாகாலத்திலே வெள்ளாமை செய்ய முடியாத நிலையில் இருக்கிறார்கள். இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால் கேரளாவிலிருந்து வந்து கால்நடை அத்தனையையும் விலைக்கு வாங்கிக் கொண்டு போகிறார்கள். ஏழை விவசாயிகள் உழ வேண்டுமென்றால் புதிதாக மாடுகள் வாங்க வேண்டுமென்றால் விலையும் சரியாக இல்லை. 100 ரூபாய் பெறக் கூடியதை 500 ரூபாய் என்று சொல்கிறார்கள். அந்த நிலையை மாற்ற வேண்டும். எதற்காக அங்கே வாங்கிச் செல்கிறார்கள் என்றால் அடித்து மாமிசத்தை வற்றல் செய்து அந்தப் பொருளை வெளிநாடுகளுக்கு பதப்படுத்தி அனுப்புகிறார்கள். அந்த மாதிரி செய்யும்போது வருவாய் அதிகமாகக் கிடைப்பதால் புதுக்கோட்டை மாவட்டத்திலே சிறிது காலத்திற்குள்ளாக மாடேயில்லாமல், கால்நடையே இல்லாமல் போகும் என்று தெரிகிறது. ஆகவே, அதைத் தடை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-40)

மேலும் பாசனத் திட்டத்தை எடுத்துக்கொள்வோமானால், புதுக்கோட்டை ஸ்டேட்டாக இருந்த காலத்தில், அந்நியர் ஆட்சிக் காலத்தில் தொண்டமான் கால்வாய் என்று வெட்டப்பட்டது. ஆனால், அந்தக் கால்வாய் வெட்டப்படுவது தடைப்





பட்டு, வெட்டாமல் நிறுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, மீண்டும் அந்தக் கால்வாயை வெட்ட நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல், அங்குள்ள ஏழை, எளிய பழங்குடி மக்களுக்குக் குடியிருப்புக்காகக் கடன் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள், கடன் வாங்கிக் கட்ட முடியாத நிலையிலே இருக்கிறார்கள். ஆகவே, அந்தத் தொகையை அவர்களுக்கு மானியமாகக் கொடுக்க வேண்டுமென்று கூறிக் கொள்கிறேன். முன்னால், அரிசன மக்களுக்கு, பழங்குடி மக்களுக்கு, இனமாக வீடு கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். அதுபோல் மீண்டும் இனமாக வீடு கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரிசனங்களுக்கு இலவசக் கல்வித் திட்டம் கொண்டு வந்திருப்பதை ஆதரிக்கிறோம். அது உண்மையிலே வரவேற்கத்தக்கதுதான் என்றாலும் அங்குள்ள அரிசன மக்கள் வேலையில்லாமல் வேலையில்லாத் திண்டாட்டத்தின் காரணமாக, வீதியிலே திரிவதைப் பார்ப்பதற்கு வேதனையாக இருக்கிறது. வைத்திருந்த ஆடு, மாடு, இதர பொருள்கள் அத்தனையையும் விற்று, தாய் தந்தையர் தன் மகனைப் படிக்க வைக்கிறார்கள். படித்த பிறகு வேலைக்குப் போவான், மறுவாழ்வு கிடைக்கும் என்று கருதி படிக்க வைக்கிறார்கள். ஆனால், வேலையில்லாத நிலையில் அவர்கள் பெரும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, தயவு செய்து அரிசன மக்களுக்கு வேலை வாய்ப்புத் தேடித்தரும் ஸ்தாபனத்தின் மூலம் முதலிடம் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கூறி, வாய்ப்பளித்த துணைத் தலைவருக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

*திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே, நிதிநிலை அறிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். சமுதாய முன்னேற்றத்திற்காக, விவசாயிகள், நெசவாளர்கள், தொழிலாளர்கள், மீனவர், அரிசன மக்கள், நகர்ப்புற மக்கள், கிராம மக்கள் ஆகியவர்கள் முன்னேற்றத்திற்கு வழிவகை செய்யும் வகையில் அதிகமாகப் பணத்தை ஒதுக்கி, அவர்களுடைய முன்னேற்றத்திற்கு வழிவகை செய்திருப்பது பாராட்ட வேண்டிய ஒன்றாகும். மக்களின் நலனைப் பாதுகாக்கின்ற நல்ல பல திட்டங்களை இந்த வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் அளித்திருக்கிறார்கள். இந்த வரவு-செலவுத் திட்டத்தில் கல்விக்கு முக்கியத்துவம் அளித்திருக்கிறார்கள். கல்விக்காக ரூ. 13.3 கோடி ஒதுக்கியுள்ளார்கள். புதிய கல்வி முறை திட்டங்களுக்காக ரூ. 3 கோடி ஒதுக்கியுள்ளார்கள். 1,100 புதிய ஆசிரியர்களை நியமிப்பதற்கு வழிவகை செய்யும் முறையில் நிதி

ஒதுக்கீடு செய்திருப்பதால், பயிற்சி முடிந்து, வேலைவாய்ப்பு இல்லாமல் திண்டாடுகின்ற பலருக்கு வேலை வாய்ப்பு அளிக்கின்ற வகையில் இந்த வரவு–செலவுத் திட்டம் அமைந்திருப்பது பாராட்ட வேண்டிய விஷயமாகும்.

இந்த அரசு விவசாயிகளை ஊக்குவிக்கின்ற வகையில் விவ சாயத் திட்டத்திற்காகவும் பாசனத் திட்டத்திற்காகவும் 1977–78–ல் ரூ. 24.7 கோடியாக உயர்த்தியிருப்பதும், 7 புதிய நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றுவதன் மூலம் 35,000 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்று கூறியிருப்பதும், சிறுபாசனத் திட்டங்களுக்காகவும், ஏரி குளங்களைத் தூர் வாரி சீரமைக்க ரூ. 4.7 கோடி ஒதுக்கியிருப்பதும் வரவேற்கக் கூடிய ஒன்றாகும்.

1976–77-ம் ஆண்டு வணிகப் பயிர்கள் மீது விதிக்கப்பட்ட தனித் தீர்வை வசூலிக்கப்படாமலிருக்கவும், அது வசூலிக்கப்பட மாட் டாது என்றும் வணிகப் பயிருக்கு விதிக்கப்பட்ட தனித்தீர்வை ஏக்கருக்கு ரூ. 20 என்பது ரூ. 15 ஆகக் குறைத்தும் புகையிலை, மிளகாய், பாசனப் பருத்தி, பாசன நிலக்கடலை ஆகிய பயிர் களின் மீதான தீர்வையை, ஏக்கருக்கு ரூ. 12.5 என்ற அளவில் உள்ள தீர்வையை அறவே நீக்கிவிட முடிவு செய்து அல்லல்படும் விவசாயிகளுக்கு ஓரளவு நன்மை தரும் வகையிலே அமைத்திருக் கிற இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்கக் கடமைப்பட்டிருக் கிறேன். கிராம மின்வசதித் திட்டத்தின் கீழ் 30 ஆயிரம் பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்புத் தரும் என்பதையும், நிலத் தடி நீரைப் பாதுகாப்பதற்கும், அதன் பயனை முறைப் படுத்து வதற்கும் ஆய்வு மேற்கொள்ளப்படும் என்று சொல்லப் பட்டிருக் கிற நேரத்தில் சிறு சிறு அணைகள், ஏரிகள் மூலம் தண்ணீரைத் தேக்கி வைத்து விவசாயத்திற்கு வழிவகை செய்ய வேண்டு கிறேன்.

உழைப்பு ஒன்றையே மூலதனமாகக் கொண்ட விவசாயப் பெருங்குடி மக்கள் புதிய அரசிடம் பல சலுகைகளை எதிர்பார்க் கிறார்கள். நீர்ப்பாசனத் திட்டத்தை தீவிரமாக செம்மையாகச் செயல் படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கிராம மக்களின் அடிப்படைப் பிரச்சினையான குடிநீர் வசதிக்கு 55 ஆயிரம் குடியிருப்புக்களில் குடிநீர் வசதி அளிப்பதற்கு விரிவான திட்டங்கள் தீட்டி, அதற்காக 6.65 கோடி ரூபாய் ஒதுக்கப்பட் டிருப்பதை வரவேற்கின்ற நேரத்தில் கிடைக்கின்ற தண்ணீரை அல்லலுறும் கிராம மக்களுக்கு வழங்குவதற்கான திட்டங்களைத் தீவிரமாகச் செயல் படுத்துவது மூலம் நன்மை செய்து தாருங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கைத்தறித் துணியைக் கொள்முதல் செய்வதற்கும், விற்பனை செய்வதற்கும் நிதி ஒதுக்கப்பட்டிருப்பது வரவேற்க வேண்டிய ஒன்றாகும்.



சிறு வணிகர்களுக்குச் சலுகை அளிக்கும் முறையில் ஆண்டுக்கு ஒரு லட்சம் ரூபாய்க்குக் குறைவாக விற்பனை உள்ளவர்களுக்கு ஒட்டு மொத்த கணிப்பு முறை கொண்டு வரப்படும் என்பதை ஆதரிக்கிறேன். வெல்லத்திற்கு ஒரு முனை வரியிலிருந்து பல முனை வரிகளைப் போட்டிருக்கிறார்கள். அதனால் சிறு விவசாயிகள், வியாபாரிகள் ஆகியவர்களுக்குப் பாதிப்பு ஏற்படும். இதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்த நிதி நிலை அறிக்கையில் அரசு ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு கொடுத்திருக்கிறார்கள். இதனால் 4 லட்சத்து பத்தாயிரம் பேர்கள் பயன் பெறுவர். இது பாராட்ட வேண்டிய விஷய மாகும். எனது தொகுதியான நாட்ராம்பள்ளி மிகவும் பிற் படுத்தப்பட்ட தொகுதியாகும். எந்தவிதமான நீர்ப்பாசன வசதியும், குடிநீர் வசதியும் இல்லாமல் இருக்கிறது. என் தொகுதியில் பாலாற்றுக்குக் குறுக்கே புல்லூர் பகுதியில் ஒரு அணை கட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். புதிய வரிகள் எதையும் போடாமல் சமுதாயத்தில் அனைத்துப் பகுதி மக்களுக்கும் பல்வேறு சலுகைகள், நல்ல திட்டங்களைக் கொண்டுள்ள இந்த புரட்சி நிதிநிலை அறிக்கையை வர வேற்றுப் பாராட்டி விடை பெறுகிறேன். வணக்கம்.

திரு. கே. உச்சி : பேரவைத்துணைத் தலைவர் அவர்களே, இந்த நிதி நிலை அறிக்கையைப் பற்றி நான் என்னுடைய கருத்துக் களைச் சொல்வதற்கு முன்னால், என்னுடைய தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், என்னுடைய தொகுதி மக்களுக் கும் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் நீலகிரி மலைப்பகுதியிலிருந்து வந்திருக்கும் காரணத்தால், வெளிநாட்டிலுள்ள மக்களை உளப் பூர்வமாக கவர்ச்சிகரமாக இழுக்கும் சக்தி வாய்ந்த ராணி என்றழைக்கபடுகின்ற மலைப் பகுதி, நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக தன்னுடைய அழகை இழந்து வருகிறது. காரணம் வளம் மிகுந்த பகுதியிலேயுள்ள சோலைகள் அழிக்கப்பட்டு, தேயிலையைச் சாகுபடி செய்கிறார்கள். ஆனால் தேயிலையைச் சாகுபடி செய் தால் என்ன என்று கேட்டால், அதற்குப் பதிலாக பக்கத்திலே கிராமத்திலே உள்ள மற்ற காட்டுப் பகுதிகளில் யூகலிப்டஸ்— கற்பூர மரங்களைப் பயிரிட்டு வருகிறார்கள். இந்த கற்பூர மரங் களைவளர்ப்பதை விட்டு, அங்கே தேயிலையைப் பயிரிடுமாறு கேட்டுக் கொள்கிறேன். அங்குள்ள மக்கள் பெரும்பாலும் தேயிலைத் தோட்டங்களையே நம்பியிருக்கிறார்கள். ஆனால் தேயிலை விலை ஒவ்வொரு நாளும் குறைந்து கொண்டே போகிறது. விலை குறைந்தால் உங்களுக்கு என்ன கஷ்டம் என்று கூட நினைக்கலாம். விலை குறைவதைப் பற்றி சந்தோஷம்தான். அதே நேரத்தில் உற்பத்திச் செலவு அதிகரித்து வருவதற்கும் விலை குறைவதனால்

அந்த தொழில் நாளடைவில் நசிந்து விடும் என்பதாலே அதை நம்பி வாழும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பட்டினி கிடக்கும் நிலை உருவாகும் என்பதை இந்த அரசின் கவனத்துக்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அடுத்து உரங்கள் விலை கணிசமான அளவுக்கு உயர்ந்திருக்கிறது. உற்பத்திச் செய்ய தேவையான உரங்களின் விலை ஒவ்வொரு நாளும் உயர்ந்து கொண்டே போகிறது. இதர செலவுகளும் உற்பத்தி செலவுகளும் அதிகரித்துக் கொண்டே வருகின்றன.

(பிற்பகல் 12-50)

அப்படி வருவதால் உருளைக்கிழங்கு நாளடைவில் நசிந்துபோய் விடுகிறது. ஆகையால் உருளைக்கிழங்கு உற்பத்திச் செலவைக் குறைக்க உரத்தின் விலையையும் கணிசமான அளவிற்குக் குறைக்க வேண்டும் என்று சொல்வதோடு, பூச்சி மருந்தின் விலையையும் கணிசமாகக் குறைக்க வேண்டும் அல்லது மானியமாகக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நீலகிரி மலைப்பகுதியில் பாதைகள் வசதி மிகவும் குறைவு. அந்தப் பாதைகளை—ஹில் ஏரியா டெவலப்மென்ட்—மலை வாழ் பகுதி மேம்பாடு திட்டத்தின்கீழ் எடுத்துக் கொண்டு, கடந்த 3 ஆண்டு காலத்தில் பல பாதைகளைச் செப்பனிட்டு சீர்செய்து வந்து இருக்கிறார்கள். அப்படி இருந்தும் சில பாதைகள் இன்னும் சரிசெய்யப்படவில்லை. அந்தப் பகுதியில் உள்ள கிராம மக்களுக்கு இதனால் பஸ் வசதி, ஜீப் வசதி போன்றவை கிடைக்கவில்லை. அதனால் பேருந்துகளும் வர இயலவில்லை. ஆகவே, அந்தப் பாதைகளைச் செப்பனிட்டுத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக நீலகிரி மாவட்டத்தின் முக்கியமான தேவையைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். உதகைப் பகுதியில் ஒரு ஊராட்சி ஒன்றியம் தான் இருக்கிறது. உதகைப் பகுதி ஒன்றியம்தான் தமிழகத்திலே 2-வது மிகப் பெரிய ஒன்றியம் என்று கருதுகிறேன். அது மிகப் பெரிய ஒன்றியமாக இருப்பதாலும், மலைப் பகுதியாக இருப்பதாலும் அந்த ஒன்றியத்தில் நடக்கும் வேலைகளைச் சென்று பார்வையிடவும், மேற்பார்வை செய்யவும் அதிகாரிகளுக்கு சரிவர இயலவில்லை. ஒரு ஒன்றியத்திற்கு ஒரு ஜீப் தான் கொடுத்து இருக்கிறார்கள். அதற்குக் கூட பெட்ரோல் சீலிங் வைத்து இருக்கிறார்கள். ஆகையால் சரிவர பணிகளைக் கவனிக்க இயலவில்லை. ஆகவே, உதகை ஒன்றியத்தை இரண்டு ஒன்றியங்களாகப் பிரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி பிரிக்கிற காலத்தில் உதகை ஒன்றியம் என்றும், குந்தா ஒன்றியம் என்றும் பெயரிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.





குடிநீர்த் திட்டத்தைப் பற்றிப் பேசுகிற நேரத்தில், குக்குச்சி என்ற இடத்தில் குடிநீர்த் திட்டம் நிறைவேற்ற 3 ஆண்டுக் காலத்திற்கு முன்பே திட்டம் தீட்டப்பட்டு கிட்டதட்ட 80,000க்கு மேற்பட்ட குழாய்கள் வாங்கப் பெற்று அங்கே கொண்டு வந்து போடப்பட்டு இருக்கின்றன. அப்படியிருந்தும் அங்கே இன்னும் குடிநீர் வசதி செய்து தரப்படவில்லை. ஆகவே அந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஊக்கத்துரை என்ற இடத்தில் உள்ள சுகாதார நிலையம் மிகவும் கீழ்த்தரமான நிலையில் இருக்கிறது. அது ஒன்றியத்தால் நடத்தப்பட்டு வருகிறது. போதிய நிதி வசதி இல்லாததால் அது அப்படி இருக்கிறது. அதனை அரசு ஏற்று நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்தப் பகுதியில் ஒரு காட்டாறு ஓடுகிறது. அதில் அடிக்கடி தண்ணீர் அதிகமாக வருகிறது. ஆகவே, அந்தக் காட்டாற்றைக் கடக்க ஒரு சாலையும், பாலமும் வேண்டும் என்று கேட்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. கா. ந. சண்முகம்: இந்த மாமன்றத்தின் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் நானெல்லாம் நின்று ஒரு உறுப்பினராக உரையாற்றுவதற்கு காரணமான பேரறிஞர் அண்ணாவின் நாமத்தைச் சொல்லி புரட்சித் தலைவர் அவர்களுக்கு என் இதயங் கனிந்த நன்றியைச் சொல்லி லால்குடி மக்களுக்கும் என் நன்றியை இந்தப் பேரவையிலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

நடப்பு ஆண்டுக்கான இந்த நிதிநிலை அறிக்கையில் ஒன்றும் இல்லை, ஒன்றும் இல்லை என்று கூறுகின்ற எதிர்க் கட்சிக் காரர்கள் எங்களது புரட்சித் தலைவரின் தளபதிகளின் முன்னவரும் அவையின் முன்னவரும் நிதி அமைச்சருமான நாஞ்சிலார் சமர்ப்பித்த நிதிநிலை அறிக்கையைப் பாராட்டுவதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தால்தான் தங்களுடைய துயர் துடைக்கப்படும் என்று எண்ணிய என்னுடைய தொகுதி மக்கள் இந்த நிதிநிலை அறிக்கையைப் பெரிதும் மகிழ்ச்சியோடு வரவேற்பார்கள் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. ஏனென்றால் என்னுடைய தொகுதியில் பெருமளவில் உள்ள விவசாயிகளுக்கு சொல்லப்பட்டிருக்கின்ற திட்டங்களை மனதாரப் பாராட்டித்தான் ஆக வேண்டும் ஏனென்றால் நிதிநிலை அறிக்கையில் குறிப்பாக திராட்சை, கரும்பு வாழை, தென்னை, வெற்றிலை, மஞ்சள் ஆகியவற்றிற்கு உண்டான தீர்வை ஏக்கர் ஒன்றுக்கு 20 ரூபாயாக இருந்ததை 15 ரூபாயாகவும், குறைந்த காலப் பயிர்களுக்குத் தனித் தீர்வையை அதாவது ஏக்கருக்கு 135 ரூபாய் என்ற அளவில் உள்ள தீர்வையை அறவே

விட்டு விடுவது என்று அறிவித்து இருப்பதும் விவசாயிகளுக்கு ஒரு வரப்பிரசாதம் ஆகும். கரைமேல் பிறந்து, கண்ணீரில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற மீனவ நண்பர்களுக்கென அறிவித்திருக்கின்ற திட்டம் எங்களது புரட்சித் தலைவர் அவர்கள் மேல் கொண்டுள்ள பற்றுதலை இந்த நாடே போற்றுகிறது. அதோடு மட்டுமல்லாமல் ஏழைப் புலவருக்கு 75 ரூபாய் மாத உதவித் தொகையாகக் கொடுக்கின்ற திட்டமும், ''விழுந்தால் வீட்டுக்கு விழாவிட்டால் நாட்டுக்கு'' என்ற அண்ணாவின் கொள்கைக்கு ஏற்ப வருகின்ற பரிசு சீட்டுத் திட்டம் போன்ற பல திட்டங்கள் புரட்சிகரமான திட்டங்களாகும். எங்களது தொகுதியில் உள்ள கிராமங்களில் எதிர்பாராத விதமாக தீப்பிடித்துக்கொண்டால், திருச்சியிலிருந்தோ, திருவரங்கத்திலிருந்தோ தான் தீயணைப்புப் படையினர் வந்து தீ அணைக்க வேண்டும். அவர்கள் வருவதற்குள்ளாக தீ பரவி மேலும் பெரிதும் சேதம் ஏற்பட்டு விடுகிறது. எனவே, எனது தொகுதியின் மையமான லால்குடியில் ஒரு தீயணைப்பு நிலையம் ஏற்படுத்தித் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியின் இன்னொரு பகுதியான புள்ளம்பாடி, முழுமையாக கிராமம் சூழ்ந்த பகுதியாகும். இங்குள்ள பல கிராமங்கள் சாலை வசதி குன்றியும், மருத்துவ உதவி இன்றியும், குடி தண்ணீர் வசதி இல்லாமலும் இருக்கின்றன. இந்த நிதி நிலை அறிக்கையிலே அறிவிக்கப்பட்டிருக்கின்ற கிராமப் புறச் சாலைகள் அமைக்கும் திட்டத்திற்கு ஒரு தொகையை ஒதுக்கியிருக்கின்றனர். கிராமப்புறங்களில் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவதும், பொருத்தமான இடங்களில் சிறு பேருந்துகளைப் பயன்படுத்தி அவற்றைப் பெருக்குவதும் இந்த அரசினுடைய கொள்கையாகும். என்று அறிவித்திருப்பது கிராமப்புற மக்களுக்கு மகிழ்ச்சி தரக்கூடிய ஒரு விஷயமாகும். குறிப்பாக, நடப்பாண்டில், கிராமப்புறச் சாலை அமைப்புத் திட்டங்களுக்காக ஒதுக்கிய ஒதுக்கீட்டை விட 60 லட்சம் ரூபாய் அதிகப்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

மருத்துவ வசதியின்றி பெருமளவில் கிராமங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று பட்ஜெட்டில் கூறப்பட்டு அதற்கான சில திட்டங்கள் — குறிப்பாக 5,000 மக்களுக்கு ஒரு சிறு சுகாதார நிலையம் ஏற்படுத்தப்படும் என்று கூறப்பட்டுள்ளது. நமது நாட்டின் முதுகெலும்பாய் விளங்குகின்ற கிராமப் புற மக்களுக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற திட்டமாகும்.

எங்களது பகுதியில் விவசாயம் தான் மக்களின் முக்கியத் தொழிலாகும். ஆனாலும் விவசாயப் பெருங்குடி மக்கள் சரியான பாசன வசதியின்றி தவிக்கின்றனர். பொதுவாக எங்களது பகுதிகளில் பாசன வாய்க்கால்களான பங்குனி பெருவளை, அய்யன் வாய்க்கால் போன்ற வாய்க்கால்களின் தலைப்பு வாத்தலையில்





இருக்கின்றது. இந்த மூன்று வாய்க்கால்களின் தலைப்பு சரியில்லாததாலும் பங்குனி வாய்க்காலின் தலைப்பு அடைபட்டிருப்பதாலும் தண்ணீர் சரிவர பாசனத்திற்கேற்ப கிடைப்பதில்லை. எனவே இந்த வாய்க்கால்களின் தலைப்பை செம்மைப்படுத்துவதால் எங்கள் பகுதியில் ஏராளமான விவசாயிகள் பயன்பெறுகின்ற காரணத்தால் அரசு இதில் தீவிர கவனம் செலுத்த வேண்டுமென்று மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பகுதி விவசாயிகளில் பெரும் பகுதியினர் குத்தகை நிலம் நடுபவர்களே அதிகம் உள்ளனர். எங்கள் பகுதிக்கு சரியான பாசன வசதியின்மையால் சரிவர விவசாயம் செய்யாமல் அன்றாட வாழ்க்கையில் குடும்பத்தை நடத்திச் செல்லக் கூட வழி இல்லாமல் இருக்கின்ற விவசாயிகளிடம் நிலச் சொந்தக்காரர்கள் குத்தகையை உடனடியாகக் கட்ட வேண்டுமென்று கெடுபிடி செய்வதாக, குறிப்பாக அன்பிலுக்கு அருகில் இருக்கின்ற அரியூர் செங்கரையூர் கிராமத்தில் இருக்கின்ற நிலப் பிரபுக்கள் விவசாயிகளுக்கு வக்கீல் நோட்டீஸ் விட்டிருக்கின்ற காட்சியைப் பார்க்கின்றனர். துன்பச் சூழலில் உழல்கின்ற அந்த விவசாயிகளுக்கு அரசு ஆவன செய்ய வேண்டுகிறேன்.

எங்களது பகுதியில் இருக்கின்ற டால்மியா சிமெண்ட் தொழிற்சாலையிலிருந்து வெளிவருகின்ற புகையால் ஏறத்தாழ 1,000 ஏக்கர்களில் விவசாயம் பாதிக்கப்படுகின்றது. ஆனால் ஏற்கெனவே, அந்தப் புகையை ஒரு குறிப்பிட்ட தூரம் கொண்டு சென்று விடுவதற்கான திட்டம் ஒன்று இருந்தது. ஆனால் அத்திட்டத்தை இன்னும் அமுல் படுத்தாமல் இருப்பதால் 1,000 ஏக்கர் வெள்ளாமை பாதிக்கப்படுகின்றது. ஆகவே அரசு இதற்கு ஆவன செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த 1974 ஆம்ஆண்டு டிசம்பர் மாதத்தில் தமிழ்நாடு முழுவதிலும் உள்ள சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள் பல கோரிக்கைகளை வைத்துப் பொது வேலை நிறுத்தம் செய்தனர். இதற்கு முன்பிருந்த தொழிலாளர் நல அமைச்சர் கே. ராஜாராம் அவர்கள் பரிந்துரையின் பேரில் உத்திரப் பிரதேசத்தின் அடிப்படையில் ஒப்பந்தம் செய்யப்பட்டு அவர்களை வேலை நிறுத்தத்தைக் கைவிடும்படி கேட்டுக்கொண்டார். உத்திரப் பிரதேசத்தில் சர்க்கரை ஆலைத் தொழிலாளர்களுக்கு என்னென்ன சலுகை வழங்கப்பட்டதோ அதே போல் தமிழ் நாட்டிலும் எல்லாத் தொழிற்சாலைகளுக்கும் பொருந்தும் என்று அமைச்சர் கேட்டுக்கொண்டதின் பேரில் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டனர். இந்த ஒப்பந்தத்தை எல்லா சர்க்கரை முதலாளிகளும் ஒத்துக்கொண்டார்கள். இதன் பயனாக எல்லாச் சலுகைகளும் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டது.

குறிப்பாக, எல்லா சர்க்கரை ஆலைகளிலும் ஓய்வுக்கால ஊதியம் 15 நாட்களுக்கு வழங்கப்பட்டது. ஆனால் காட்டூர் கோத்தாரி சர்க்கரை நிறுவனத்தில் மட்டும் 7 நாட்களுக்கு வழங்கப்பட்டுக் கொண்டிருந்தது. இதை எதிர்த்து சர்க்கரை ஆலையில் வேலை செய்த கே. சிங்காரவேல் என்பவர் 15 நாட்களுக்கான ஓய்வு கால ஊதியம் தரவேண்டும் என்று மில் முதலாளிமேல் லேபர் கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்து லேபர் கோர்ட்டிலும் 15 நாட்களுக்கான ஓய்வு கால ஊதியம் தரவேண்டும் என்று உத்திரவு போடப்பட்டுள்ளது. அந்த உத்திரவு போடப்பட்டு 1½ ஆண்டு ஆகியும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதனால் நமது அரசு உடனடியாக இதில் நேரடி தொடர்பு கொண்டு 1975 ஆம் வருடம் ஜனவரி மாதத்திலிருந்து ஓய்வு கால ஊதியம் வழங்கி தொழிலாளர்களைக் காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தொழிலாளர்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

சட்ட மன்றத் தேர்தல் நடைபெற்றபோது கூகூர் கிராமத்தில் ஒரு கொலை நடந்தது. அந்தக் கொலையில் சம்பந்தப்பட்டவர்கள் மீது இதுவரையில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆதாரம் இல்லை என்று அதிகாரிகள் அதை அப்படியே விட்டு வைத்திருக்கிறார்கள். இந்த வழக்கில் தக்க நடவடிக்கை எடுத்து குற்றவாளிகளைக் கண்டு பிடித்து தண்டனை வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்படி நல்ல பல திட்டங்களை அறிவித்திருக்கின்ற எங்களது புரட்சித் தலைவரின் ஆட்சிக்காலம் பொற்காலமாக அமையும் என்பதற்கு இந்த நிதி நிலை அறிக்கையை நற்சான்று என்று கூறி, வாய்ப்பளித்த பேரவைத்துணைத் தலைவருக்கு நன்றி கூறி அமருகிறேன். வணக்கம்.

* திரு. மெ. ஆண்டி அம்பலம்: பேரவை துணைத் தலைவரவர்களே, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே இந்த நிதிநிலை அறிக்கையின் மீது சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த ஆண்டு பட்ஜெட் ஒரு சாதாரண பட்ஜெட் என்பதை ஒருசில திட்டங்களை மேற்கோள் காட்டி, குறிப்பிட விரும்புகிறேன். பனைவெல்லம், நாட்டு சர்க்கரை போன்றவைகள் மீது வரி விதிப்ப செய்ய உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இதனால் பனைவெல்லம் உற்பத்தி செய்யும் தொழிலாளர்கள் பல லட்சம் பேர்கள் பாதிக்கப்படுவார்கள். அவர்களை பாதுகாக்கும் வகையிலே இந்தத் திட்டம் அமைக்கப்பட வேண்டும்.





[பிற்பகல் 1-00]

விவசாயிகள் தனியாரிடம் வாங்கிய கடன் அசலைக் கொடுத்தால் போதும் என்று நினைக்கிறார்கள். விவசாய வங்கி நில அடமான வங்கி மூலமாக விவசாயிகள் வாங்கிய கடனை வட்டி சேர்த்து அசலுக்கு மேல் வசூல் செய்கிறார்கள். அதில் குறிப்பாக மாடுகள் பம்பு செட்டு அனைத்தையும் ஜப்தி செய்கிறார்கள். 3 வருட காலமாகப் பருவ மழை பொய்த்ததன் விளைவாக அவதிப் படும் நிலையில் விவசாயிகள் உள்ளார் கள். அதற்கு இந்த அரசு கவனம் செலுத்த வேண்டும். சமுதா யத்தில் நலிந்த சுமார் 1,000 பெண்களுக்கு ரூ. 150 மானியத் தொகை கொடுத்து, டைப் அடித்தல் முதலிய தொழிற் பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டிருக் கிறது. இந்தத் தொகை மிக மிகக் குறைவு. இதேபோல் தையல் தொழில், பழ வகைகள் பதப்படுத்துதல் முதலிய பல தொழில்களுக்கும் இந்த வசதி விஸ்தரிக்கப்பட வேண்டும். மானியத் தொகை ஆண்டு ஒன்றுக்கு ரூ. 150 என்பது மிக மிகக் குறைவு. நிதிநிலை அறிக்கையில் மதுரையில் உயர்நீதி மன்றம் அமைக்கக் கோரியதையும், அநேக சிவில் கேஸ்கள் பல ஆண்டு களாகப் பைசல் ஆகாமல் இருப்பதையும் நிவர்த்தி செய்ய நட வடிக்கை எதுவும் இதில் குறிப்பிடப்படவில்லை.

கிராமங்களுக்கு மருத்துவ சுகாதார வசதிகள் புறக்கணிக்கப் பட்டு இருப்பதை அரசு ஒப்புக் கொண்டுள்ளதை நான் பாராட்டு கிறேன். பட்ஜெட்டில் குறிப்பிட்டபடியாவது கிராமத்தில் வசதி செய்து அரசு கொடுக்குமா என்பது எனக்குத் தெரியவில்லை. மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கிராம வளர்ச்சித் துறையைக் கண்காணித்துச் சபை உறுப்பினர்களுக்குத் தெரி விக்கக் கேட்டுக்கொள்கிறேன். நகரத்திலும் சுகாதார வசதி கள் கவனிக்கப்பட வேண்டும். உதாரணமாக மதுரையிலும் வடிகால் கழிவு நீர்த் தேக்கம் முதலிய சுகாதாரக் குறைவி-டி பாதிக்கப்படுகிறது என்பது உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். கிராம குடிநீர் வழங்கும் திட்ட;றன். நல்ல நோக்கம் தெரிகிறது. ஆனால் ஹரிஜனங்கள் பழ ியாக மக்கள் வாழும் குடியிருப்புப் பகுதிகளுக்கு குடிநீர் வ சுமார் திட்டத்தில் அவர்களின் நலன்களைப் பாதுகாக்கும் வகையி ல் ஒரு நீர் வடிகால் வாரியத்தின் ஒரு ஹரிஜனப் பிரதிநிதியும் மெ க்கள் நியமிக்கப்படவேண்டும். லயில்

பெரியாறு மேம்பாட்டுத் திட்டத்தில் பாசன முதலீடு சம்பந்து மாக உலக வங்கியின் உதவியுடன் வேலை நடக்கவிருக்கிறது. ம் 41.04 கோடி ரூபாய் திட்டத்தில் செலவிடப்பட இருக்கிறது. அதில் இந்த ஆண்டு 3.16 கோடி ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக் கிறது. இதன் காரணமாக துரிதமாக வேலைகள் நடைபெறுது. 38,000 ஏக்கர் இதனால் பாசன வசதி பெற வேண்டும். துரிதமாக வேலைகள் நடைபெறுவதற்காக சட்ட மன்ற உறுப்பினர்களைக் கொண்ட கண்காணிப்புக் குழு ஒன்றை அமைத்து சீர் செய்ய வேண்டும்.

[திரு. மெ. ஆண்டி அம்பலம்] [1977 ஆகஸ்டு 2

மண் வளப் பாதுகாப்பிற்காக 302 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சென்ற ஆண்டுச் செலவைப் பார்த்தால் இது போதுமானதாக இல்லை. மேலும் காற்றடித்து மணலைக் கொண்டுவந்து கொட்டுவதால் நிலங்கள் மேடாகிவிடுகின்றன. இராமநாதபுரம் மாவட்டத்தில் இதுபோன்று பல நிலங்கள் மேடாகியுள்ளன. இது குறித்து முன்னாள் ஆளுநரின் ஆலோசகர் ஒரு திட்டத்தைத் தயார் செய்து கொடுத்தார்கள். அது எந்த நிலையில் இருக்கிறது என்று தெரியவில்லை.

ஒரு லட்சம் ரூபாய் வரை வியாபாரம் செய்யும் சிறு வியாபாரிகளுக்கு விற்பனை வரி விகிதங்களில் மாறுதல்கள் உத்தேசிக்கப் பட்டிருக்கிறது. இந்த இலக்கு ஒரு லட்சம் ரூபாய் என்பதற்குப் பதிலாக 3 லட்சமாக உயர்த்தப்பட்டால் வியாபாரிகளுக்கும் நலம், அதிகாரிகளும் நல்ல முறையில் வேலை செய்ய உதவியாகவும் இருக்கும்.

அரசு ஊழியர்களுக்கு மூன்றுவது ஊதியக் கமிஷன் அமைக்க இருப்பதை விரைவில் அமல் செய்யவேண்டும். ஆசிரியர்கள் சம்பள விதங்களையும் இந்தக் கமிஷன் சீர் செய்ய வேண்டும். காவல் துறையினரின் ஊதிய விஷயத்தை இந்தக் கமிஷன் எடுத்துக் கொள்ளுமா இல்லையா என்று தெளிவாகத் தெரியவில்லை.

தமிழ் நாட்டில் கைத்தறி நெசவாளரின் நிலை கவலைக்கிடமாக இருக்கிறது. நெசவாளர்களைக் கூட்டுறவுத் துறையில் சேர்த்துக்கொண்டால் மட்டும் போதாது. அவர்களின் துன்பத்தை நீக்க தேவையான நூல் விநியோகம் தட்டுப்பாடு இல்லாமல் எ கிடைக்க ஆவன செய்ய வேண்டும். மதுரையில் அமைக்க வா ருக்கும் வடிவ அமைப்பு நிலையம் நெசவாளர்களுக்குத் தேவைப் அம யும் உபகரணங்களை சகாய விலைக்குக் கொடுக்க ஆவன செய்ய ண்டும்.

*

ரவர் உணவுப் பொருட்களின் விலைவாசியைக் கட்டுப்படுத்த திட்ட நிதிநி மான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இது மத்திய அரசின் கட லை. மாநில அரசு மத்திய அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்புக் கொடுக்கும் என்று மட்டும் சொல்லி இந்த அரசு ட்டிக் கழித்துக் கொள்ளக் கூடாது. உணவு உற்பத்தியில் எண்ணெய் விலை உயர்ந்து கொண்டே போகிறது. மேலும், எண்ணெய் வித்துக்களை பெரும் அளவில் உற்பத்தி செய்ய, விவசாயிகளுக்கு ஊக்கம் தர வேண்டும். சென்ற ஆண்டில் 74 லட்சம் டன் உணவு தானியம் உற்பத்தி என்றும் இந்த ஆண்டில் 84 லட்சம் டன் எனவும் குறிக்கப்பட்டு இருக்கிறது. இது மிகவும் குறைவு என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.



1977 ஆகஸ்டு 2] [திரு. மெ. ஆண்டி அம்பலம்]

மிசா சட்டத்தை தவறு தவறு என்று சொல்கிறார்கள் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள். இவர்கள் மீது ஆளும் கட்சியில் உள்ளவர்கள்தானே இந்தப் புகாரைக் கொடுத் தார்கள். காவல் துறையினரிடம் ஒரு புகாரை கொடுத்தால் அந்தப் புகார் மீதும் விசாரணை நடக்குமா நடக்காதா அப்படி யிருக்கும்போது ஏன் மிசா மிசா என்று அலறிக் கொண்டிருக் கிறார்கள் என்று தெரியவில்லை.

மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் ஆயிரங்கால் மண்டபத் தில் உள்ள பொருட்காட்சி சாலையைக் காண 50 காசுகள் வசூல் செய்கிறார்கள். அது மிகவும் அதிகம். ஆகவே 20 காசுகள் வசூல் செய்தால் அதிகமான மக்கள் பார்க்க வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து திருச்சி ஜில்லா எடமலைப்பட்டிபுத்தூரில் இருக்கும் இந்துஸ்தான் லீவர் லிமிடெட் என்ற கம்பெனி கடந்த இரண்டு வருடங்களாக மூடிக் கிடக்கிறது. பலகோடி ரூபாய் பெறுமான முள்ள அந்தக் கம்பெனி திரும்ப ஓடத் தொடங்கினால் சுமார் 1,000 தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும். ஆகை யால் அந்தக் கம்பெனி ஓட அரசு ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியில் ஏரக்காபெட்டி என்னும் கிராமம் உள்ளது. அங்கு காட்டாறு, திருமணிமுத்தாறு, உடைப்பின் காரணமாக 100-க்கணக்கான ஏக்கர் நஞ்சை நிலம் மணல் மேடிட்டு உள்ளது. அந்தக் கிராமமும் மணல் மேவி அழிந்து போகும் நிலையில் உள்ளது. நான் ஏற்கனவே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் இந்தச் சட்டமன்றத்தில் பேசினேன். அதைக் கவனிக்கவில்லை. ஆகையால் இந்த அரசு தடுப்புச் சுவர் கட்டி ஏழை விவசாயிகளின் நிலத்தில் மேவியிருக்கும் மணலை, டிராக்டர் மூலம் அப்புறப்படுத்திக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், மதுரை ரோட்டில் இருந்து வத்திப்பட்டி வழியாக காசம்பட்டி வரை ரோடு மிகவும் மோசமாக இருக்கிறது. சுமார் 7,000-த்திற்கும் மேற்பட்டு ஜனத் தொகை உள்ள ஊரில் ஒரு பிரசவக் கேஸைக் கூட எடுத்துக் கொண்டு வர முடியாமல் மக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். அவ்வளவு சீர்கேடான நிலையில் உள்ளது அந்த ரோடு. ஆகையால் மதுரை ரோட்டில் இருந்து காசம்பட்டி வரை ஒரு நல்ல ரோடும், நடுவில் ஒரு பாலமும் அமைத்துத் தர ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* திரு. க. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரியலூர் தொகுதி வாக்காளப் பெருங்குடி மக்களுக்கும், கழகத்தின் தானைத் தலைவருக்கும் என்னுடைய, நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. மெ. ஆண்டி அம்பலம்] [1977 ஆகஸ்டு 2

''நோயற்ற வாழ்வே குறையற்ற செல்வம்'' என்ற பழமொழிக்கேற்ப நோயற்ற வாழ்வு வாழ கிராமப் பகுதிகளில், கழக ஆட்சியில் குடி தண்ணீர் வசதி செய்து கொடுப்பதற்கு கொள்ளிடத்திலிருந்து தண்ணீர் கொண்டுவர திட்டமிடப்பட்டிருந்தது. இப்போது அந்தத் திட்டங்கள் எல்லாம் எந்த அளவுக்கு இருக்கின்றன என்பது புரியவில்லை. அந்தத் திட்டங்களை எல்லாம் இந்த அரசு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். எனக்கு இங்கு அதிகமாகப் பேசுவதற்கு நேரம் இல்லாவிட்டாலும், அரியலூர் நகரத்தைப் பொறுத்த அளவில், சில விஷயங்களைக் குறிப்பிட விரும்புகிறேன்.

அங்கு 'டிட்கோ' நிறுவனத்தின் சார்பில் 'போர் வெல்' போட்டு 500 அடிக்குக் கொண்டு சென்றிருக்கிறார்கள். இதன் காரணமாக அங்கு சுற்றியுள்ள 15 கிராமங்களுக்குக் குடிதண்ணீர் மிகக் குறைவாக இருக்கிறது. மேலும் புள்ளம்பாடி வாய்க்காலிலிருந்து விவசாய மக்களுக்கு, கழக ஆட்சிக் காலத்தில் நல்ல முறையில் தண்ணீர் வந்தது. அங்குள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் விவசாயம் செய்தார்கள். அங்கு இப்போது தண்ணீருக்கு நெருக்கடி ஏற்பட்ட நிலையிலும் எந்த விதமான முயற்சி செய்யும் முடியாமல் போகவே ஏறத்தாழ இரண்டு லட்சம் ஏக்கர்கள் பாதிக்கப்பட்டன. அதில் இந்த வாய்க்காலுக்கு மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் அவர்கள் இப்போது வரும் தண்ணீரில் ஓரளவு தண்ணீர் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அரியலூரில் நடந்துகொண்டிருக்கும் சிமின்ட் தொழிற்சாலைக்கு அடிக்கல் நாட்டு விழாவுக்கு வந்திருந்த மத்திய அமைச்சர் திரு. ஓம் மேத்தா அவர்கள் பேசும்போது, 'இந்த நகரத்தில் உள்ள படித்த வாலிபர்களுக்கு இங்கு வேலை கொடுப்பதில் முன் உரிமை அளிக்கப்படும்', என்று சொன்னார்கள். ஆனால் அவர்கள் சொன்னபடி அங்குள்ள படித்த பட்டதாரி வாலியர்களுக்கு வேலை அளிக்கப்படவில்லை. அங்கு மூன்றரை ஆண்டுக் காலமாக சிமின்ட் தொழிற்சாலைக்கு அருகிலுள்ள கிராமங்களுக்கு, எந்த விதமான பயனும் கிடைக்கவில்லை. இதை அரசு கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-10)

தமிழகத்தைப் பொறுத்தவரையில் 55,000 கிராம உத்தியோகஸ்தர்கள் கிராமங்களிலே கர்ணம், முன்சீப், தலையாரி போன்றவர்கள் இருக்கின்றார்கள். ஆனால், இந்த நிதி நிலை அறிக்கையிலே அவர்களுக்கு எந்தவிதமான அறிவிப்பும் செய்யப்படவில்லை. 200 ரூபாய்க்குக் கீழ் ஊதியம் வாங்கும் எந்த அதிகாரிகளுக்கும், எந்த விதமான உயர்வும், அதாவது இந்த 20 ரூபாய் கொடுக்கப்படாதது போல், இவர்களுக்கும் சம்பளம் உயர்த்தித் தரப்படவில்லை. அதையும் இவர்களுக்குத் தரவேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.



1977 ஆகஸ்டு 2] [திரு. க. ஆறுமுகம்]

தேவை அதிகமாக இருப்பினும், இன்னும் அரியலூர் தொகுதியில் வேளாண்மையை விஞ்ஞான ரீதியில் பெருக்க நகருடன் தொடர்பு கொள்ள நல்ல சாலை வசதிகள் தேவை. அந்த வகையில், அரியலூரிலிருந்து கல்லங்குறிச்சி கடுகூர் வரை உள்ள சாலையையும், ஆத்தூர்—ஆனந்தவாடி—இரும்பிலிக்குறிச்சி வழியாக உடையார்பாளையம் வரை ஒரு புதிய இணைப்புச் சாலையையும், மாத்தூர், குருவாடி, தூத்தூர் வரை ஒரு சாலையையும் அமைத்து பேருந்து வசதி அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தற்போது பொதுப் பணித் துறை அமைச்சராக உள்ளவர், சென்ற ஆட்சியிலே எங்கள் பகுதிக்கு வந்திருக்கிறார்கள். அவர்களுக்கு இதெல்லாம் நன்கு தெரியும்.

எங்கள் பகுதியிலே தண்ணீர் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. ஆனால், கடந்த ஒரு மாத காலமாக, தண்ணீரைக் காட்டிலும் அதிகமான அளவுக்குச் சாராயம் காய்ச்சப்படுகின்றது.. திருமானூர், கீழப்பழூர் ஆகிய இடங்களிலுள்ள காவல் துறையினர் அங்குள்ளவர்களிடம் பணத்தைப் பெற்றுகொண்டு, பொய் வழக்கு போடக் கூடிய சூழ்நிலை உருவாகி இருக்கிறது.

இன்னும் பல நல்ல திட்டங்களையெல்லாம் செய்யலாம். குடிப்பதற்குத் தண்ணீர், படிப்பதற்குப் பள்ளி, நடப்பதற்கு சாலை ஆகிய இந்த மூன்றும் முக்கியமானது என்று முன்பு உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு இராமச்சந்திரன் அவர்கள் எங்கள் பகுதிக்கு வந்திருந்தபோது அடிக்கடி தெரிவித்திருக்கிறார்கள். அந்த நிலைமையை ஏற்படுத்த, அவர்கள் தமிழக மக்களுக்கு ஒரு விடி வெள்ளியாகத் திகழ வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், லால்குடி, அரியலூர் வட்டங்களில் பாசன வசதியைக் கொடுக்கும் நந்தையார் வாய்க்கால் வறண்டுபோய், சுமார் 15,000 ஏக்கர் பயிரிடப்படாமல் இருக்கிறது. அதேபோல், கண்டிராதித்தம் ஏரியும் நீர் இல்லாமல் பாழடைந்து உள்ளது. சென்ற வருடம் தண்ணீர் வராததால், விவசாயம் பாதிக்கப்பட்டு, விவசாயிகள் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, உடனடியாக நடவடிக்கை எடுத்து இவ்வாண்டு பயிர்த் தொழில் செய்ய தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தற்சமயம் பட்ஜெட்டிலே, ஒய்வு பெறுகிறவர்களுக்கு 10,000 ரூபாய் அளிக்கப்படும் என்று ஒரு புதிய திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இது அமுலுக்கு வந்தால், பழைய குடும்பப் பாதுகாப்பு திட்டம் கைவிடப்படுகிறதா? ஏற்கனவே மாதம் 1 ரூபாய் மட்டும் பிடித்துக் கொண்டு வந்தார்கள். அரசு ஊழியர்கள் இறந்துவிட்டால், அப்போதும் 10,000 ரூபாய் கொடுத்தார்கள். ஆனால் இப்போது 10,000 கொடுக்கப்படுவது தெளிவாக விளக்கப்படவில்லை.

எனவே, அரசாங்க ஊழியர்களுடைய கோரிக்கையைக் கவனித்து, பணியிலிருந்து ஓய்வு பெற்ருல், எல்லோருக்கும் 10,000 ரூபாய் என்று மாற்றியமைக்க வேண்டும். தற்போது பிடிக்கும் 15 ரூபாய்க்குப் பதில் 10 ரூபாய் பிடித்தால் போதும் என்று அரசு ஊழியர்கள் கருதுகிருர்கள். அறிவிக்கப்பட்டுள்ள அறிவிப்பின்படி மாதம் 15 ரூபாய் வீதம் பிடித்தால், 25 ஆண்டுகளில் வங்கியில் நீண்டகால வளர் சேமிப்பு முறையில் 22,000 ரூபாய் கிடைப்பதாகச் சொல்லுகிருர்கள். ஆகவே, 15 என்றிருப்பதை, ஊழியர்களின் மீது கருணை கூர்ந்து 10 ரூபாய் வீதம் பிடிக்கும்படி இந்த அரசை நான் கேட்டுக் கொள்கிறேன்.

அரசு ஊழியர்களுக்கு இடைக்கால நிவாரணமாக அறிவிக்கப்பட்ட தொகை ரூ. 10 லிருந்து ரூ. 20 ஆக உயர்த்தியிருப்பது பாராட்டுதற்குரியது. ஆனல், ரூ. 200-க்கு கீழ் ஊதியம் பெறுவோருக்கும் தாராளமாக்கப் பட்டிருந்தால், ஏழை அரசு ஊழியர்களின் ஏக்கமும் தீர்ந்திருக்கும், நாங்களும் அதை எடுத்துக் கூறும் நிலை ஏற்பட்டிருக்காது. ஆகவே, இதை எல்லா அரசு ஊழியர்களுக்கும் விஸ்தரிக்க வேண்டும். கழக அரசு இருந்தபோது சில சமயங்களில் சமமான அகவிலைப்படியும் பிற்காலத்தில் சம்பளத்தின் அடிப்படையிலும் அகவிலைப்படியும் உயர்வும் அளித்து வந்தது. ஆக, இந்த அரசும் 7.3 லட்சம் அரசு ஊழியர்களுக்கும் இந்த இடைக்கால நிவாரணத்தை அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, எனக்கு இந்தச் சந்தர்ப்பத்தை அளித்த மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து, விடை பெறுகிறேன் நன்றி, வணக்கம்.

திரு. கே. ஜே. சுப்பிரமணியம் : மாண்புமிகு அவைத் துணைத் தலைவர் அவர்களே, வணக்கம். நிதிநிலை அறிக்கை பற்றிய விவாதத்தில் கலந்துகொள்ள வாய்ப்பளித்ததற்கு முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது போளூர் தொகுதி, வட ஆற்காடு மாவட்டத்திலேயே மிகவும் பின்தங்கிய பகுதியாகும். இந்தத் தொகுதியில் ஒரு தொழிற்சாலைகூட இல்லை. இத்தொகுதி முழுவதும் விவசாயத்தையே சார்ந்திருக்கின்ற பகுதியாகும். விவசாயத்திற்கு வேண்டிய மழை பெய்வதும், பருவ நிலைக் கோளாறுகளால் மிகக் குறைந்த அளவிலேயே உள்ளது. இப்பகுதி மக்கள் விவசாய வருமானத்தின் மூலம் தங்கள் வாழ்கைக்கான நிதியாதாரத்தைப் பெற்று வருகின்றனர். பருவ மழை பொய்த்திடும் நிலையில் விவசாயிகள் அல்லலுற நேரிட்டு வருகிறது. இந்நிலையில் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கும், எனது தொகுதியில் கமண்டல நதியின் குறுக்கே செண்பகதோப்பு என்னுமிடத்தில் அணை கட்டுவதற்காக 1977—78 நிதிநிலை அறிக்கையில்





திட்டத்தைச் சேர்த்து 3.55 கோடி ரூபாய் ஒதுக்கி உள்ளதற்கு எனது மனப்பூர்வமான நன்றியையும் எனது தொகுதி விவசாயப் பெருங்குடி மக்களின் நன்றியையும், தெரிவித்துக் கொள்கிறேன். நடப்பு நிதியாண்டில் அணைத் திட்ட வேலைகளை விரைவில் தொடங்கிட அரசு ஆணை பிறப்பித்திட வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகளுக்குப் பாசன வசதியை வரப்பிரசாதமாக அளித்ததுபோல மின் கட்டணத்திலும் சலுகைகளை அளித்து விரைவில் மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் விவசாயிகளை திருப்தி செய்ய வேண்டுகிறேன்.

போளூர் பெரிய ஏரிக்குத் தண்ணீர் வரு கால்வாயைச் செப்பனிட வேண்டும். மழை பெய்து மலையிலிருந்து வரும் தண்ணீரை போளூரை அடுத்த காப்பலூர் கிராமத்தில் குறுக்கே தடுப்புக் கட்டி அந்த ஏரி நிரம்பிய பிறகே போளூர் ஏரிக்குத் தண்ணீர் விட முடியும். மற்றொரு முறையும் தண்ணீரைத் திருப்ப குறுக்குச் சுவர் கட்ட வேண்டும். எனவே, அரசு இவ்விஷயத்தில் தலையிட்டு நிரந்தரமாக ஏரிக்குத் தண்ணீர் வர குறுக்குத் தடுப்புச் சுவர் கட்டி நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு பணிவுடன் போளூர் தொகுதி மக்கள் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

போளூர் தொகுதியில் காங்கிரஸ் ஆளும் கட்சியாக இருந்த போதும், தி.மு.க. ஆளும் கட்சியாக இருந்தபோதும் தொழில் சம்பந்தமாக எந்தவித உதவியும் செய்யவில்லை. முன்னாள் எங்கள் மாவட்ட அமைச்சரும் முன்னாள் முதல்வரும் போளூர் தொகுதியில் பேசும்போது அண்ணாவால் போற்றப்பட்ட (பொற்கொடு) போளூர் என்பார். அது புகைபெறும் தொகுதி என்பார். இந்தப் பொன்மொழி பேசியே மக்களைத் திசை திருப்பினார்கள். போளூர் தொகுதியில் பாப்பாம்பாடி என்னும் கிராமத்தில்சர்க்கரை ஆலை கட்டுவதற்கு இடம் பார்த்து கூட்டுறவு சர்க்கரை ஆலை நிபுணர்கள் பார்வை இட்டும், முன்பு இருந்த அரசுக்குத் தெரிவித்தும் பயன் இல்லை. இந்த அரசு போளூர் தொகுதியில் சர்க்கரை ஆலை ஏற்பட கவனம் செலுத்துமாறு கேட்டுக் கொள்கிறேன்.

போளூர் தொகுதியில் பெரும்பாலும் கரும்புப் பயிர் சாகுபடி ஆகிறது. இங்கு சாகுபடி ஆகும் கரும்பை வேறு இடத்திற்கு எடுத்துச் செல்ல முடியாமல் போய்விடுவதால், இங்கு, சர்க்கரை ஆலையை அமைத்தால், கரும்பு சாகுபடி செய்யும் விவசாயிகளின் குறையும் நீங்கும், படித்த இளைஞர்களுக்கும் வேலையில்லாத் தொழிலாளர்களுக்கும் வேலை கிடைக்கும்.

[திரு. கே. ஜே. சுப்பிரமணியம்] [1977 ஆகஸ்டு 2

போளூர் திருப்பத்தூர் மலைப்பாதை ஒன்று அமைக்க நெடுஞ்சாலைத் துறையினரால் சர்வே செய்யப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டுப் பிறகு நின்று விட்டது. அந்தப் பாதை அமைக்கும் வேலையைத் தொடர்ந்து செய்தால் என்னுடைய தொகுதியில் உள்ள மலைப்பகுதி மக்களுக்குப் பெரும் உதவியாக இருக்கும் என்று கூறி மேற்படி வேலையை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

சுகாதாரத்தில் மிகவும் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். போளூர் நகரத்தில் பழைய அரசு மருத்துவமனை கட்டிடத்தைப் புதுப்பித்து தனி பிரசவ விடுதி கட்டித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

சந்தவாசல் கிராமத்தில் இருக்கும் மருத்துவ மனையை விரிவுபடுத்தினால் அதைச் சுற்றியுள்ள நான்கு ஐந்து கிராம மக்களுக்கு வசதியாக இருக்கும் என்று கேட்டுக் கொள்கிறேன். கன்னியம்பாடியில் உள்ள மருத்துவ மனையையும் அபிவிருத்தி செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

சோழவரம் கிராமத்தின் அருகில் 20 ஏக்கர் நிலம் தரிசாக உள்ளது. அந்த நிலத்தை அரிசன மக்களுக்கு வீடு கட்ட ஒதுக்கித் தரவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

வேலூரிலிருந்து சோழவரம் வரை 16 கிலோ மீட்டர் உள்ளது. வேலூரிலிருந்து வரும் ஆசிரியர், பொதுமக்கள் சோழவரத்திலும், அதன் அருகில் உள்ள கல்லூரி மாணவ, மாணவிகள் அதிகமாகச் செல்ல வேண்டியிருப்பதால் இந்தக் கிராமத்திற்கு பஸ் வசதி செய்து தரவேண்டும் என்று இந்த அரசைக் கேட்டு கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையானது இதுவரை புறக்கணிக்கப் பட்டுவந்த கிராம மக்களின் அடிப்படைத் தேவைகளான பாசனம். குடிநீர் போன்றவற்றில் மிகுந்த அக்கறை கொண்டு கிராமப் புறத்தின் எளிய மக்களை நினைவில் கொண்டு தயாரிக்கப்பட்டிருக்கிறது. கிராமப்புற மக்களுக்கும், நகர்ப்புற மக்களுக்கும் அடிப்படை உரிமைகளைப் பெறுவதில் உள்ள ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்கின்ற அளவிலும் வகையிலும் தயாரிக்கப் பட்டிருக்கின்றது. மக்களின் வரிப் பளுவை, அதிலும் குறிப்பாக ஏழை எளிய மக்களின் வரிப் பளுவை அதிகமாக்காமலும், அதே நேரத்தில் அபிவிருத்திப் பணிகளுக்கான நிதியாதாரங்களுக்கான வழிவகைகள் காணப்பட்டிருப்பதற்காக நிதியமைச்சர் அவர்களைப் பாராட்டி இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று விடைபெறுகிறேன்.



1977 ஆகஸ்டு 2]

[பிற்பகல் 1-20]

* THIRU A. EAKAMBARA REDDY : Mr. Deputy Speaker, Sir, I rise to lend general support to the various developmental schemes formulated by our Hon. Minister for Finance in the Budget.

Regarding Agriculture. the allocation made is very meagre, Rs. 30.2 crores. Most of the villages depend upon agriculture not because it is attractive but because most of the population live in the villages. Naturally they are forced to depend upon agriculture. So I request the present Government to kindly formulate such of the schemes in the villages which will provide labour or some living to the village population. Also during the off-season the agricultural labourers and Harijans are put to hardship because no alternative labour is available to them. During the discussion on the Governor's Address, I had suggested that labour-*cum*-production-oriented schemes could be taken up in the villages so as to provide labour as well as asset to the nation. Such villages could be brought under a Crash Scheme for Rural Employment which was in vogue during 1972-73. For this year the target of production is 84 lakh tonnes as compared to the production of 74 lakh tonnes during the last year. An increased production of 10 lakh tonnes has to be made to achieve this target of 84 lakh tonnes. This target could not be achieved unless the Government give sufficient assistance as well as remunerative price to the producers. The producers can produce the required quantity of foodgrains. My suggestion is that plant protection measures should be taken and they should be supplied with improved high yielding and high breed seeds at subsidised rates. At present hybrid and high-yielding seeds—not quality seeds—are supplied at an abnormal price. Agricultural production can only be achieved by giving quality seeds and other facilities to the ryots.

As I have already stated in the Governor's Address, remunerative price should be given to the grower and reasonable price for the consumer. But no mention has been made in the Budget speech about the remunerative price to the grower. Unless the ryot is given a remunerative price, he will not be in a position to increase the production which the Government are expecting from him. So, my submission is that the ryot is entirely depending upon agriculture and a reasonable price should be given to him. Then only our country will be prosperous and the ryot also will be in a position to produce what is expected of him to reach the target.

[Thiru Eakambara Reddy] [1977 ஆகஸ்டு 2

Then, coming to irrigation, the people in my constituency mostly depend on tank irrigation. There are three tanks, Madikattan Odai, Karimbedu Tank and Gurusamy Naidu Tank and the execution of the schemes connected with it are pending for a long time. As our area was transferred from Andhra Pradesh on 1st April 1960, the Pallipat Veligaram and Poonimangadu tank works also were not carried out for want of concurrence from the Andhra Pradesh Government. According to the terms of the Pataskar Award, the existing irrigation sources shall be maintained and that should be taken into consideration by the Government. I met the Chief Minister of Andhra Pradesh in that connection and he is prepared to give his consent to the execution of the works. The tanks are in Tamil Nadu but the Head Works and the supply channels are in Andhra Pradesh. So I request the Government to kindly arrange for an Inter-States Irrigation Ministers' Meet and solve the problem.

Then with regard to rural health, it is a welcome measure that the Government are extending medical aid to the rural areas. In this connection, I submit that the Pallipat Block in my constituency has been erroneously classified as a Block under III category instead of V category. The Panchayat Education Finance Enquiry Committee which was constituted in 1972 had erroneously classified it under III category. I represented the matter to the Government. The Accountant-General, Tamil Nadu during his recent visit to the Block was also apprised of the matter. So I request the Government to kindly go into the matter and reclassify the Block under V category and also take it up for inclusion in the scheme to provincialise the Pallipat Panchayat Union Dispensary as a Government dispensary.

As regards Rural roads, the allocation made for Rural Roads is very meagre. There are so many villages which are 4 to 5 kms. away from the Main bus route—even 10 kms. in some places—and they have to be linked with bus routes with fair-weather roads. Also all these villages have to be connected with bus-routes so that in times of urgency, they need not walk for miles together to catch a bus. Such difficulties could be overcome if the Government allot some funds for forming roads in those villages so that Mini-buses could ply there. In this connection, I wish to point out that there is a proposal for construction of a submergible bridge across the Kusasthali river near Pallipat. This is pending for the last 10 years. A provision of Rs. 27 lakhs was made



1977 ஆகஸ்டு 2] [Thiru A. Eakambara Reddy]

for the scheme and it has been sent to the Government. I think it would have received the concurrence of the Government of India. I request the Government to execute this scheme during this year so as to give relief to the age-long sufferings of the people there.

Finally, a word about handloom weavers in my constituency There are about 20,000 handlooms in my constituency. Last year an intensive development scheme was started at Kancheepuram to benefit 5,000 looms. Since Kancheepuram is the Headquarters of our District, the scheme can very well be extended to our area so that the handloom weavers operating 20,000 looms in our area can be benefited. At present they are suffering a lot at the hands of the Master-Weavers for their daily bread. So I would request the Government to extend the scheme to our area.

I conclude my speech with thanks for giving me an opportunity to participate in the discussion on the Budget.

Thank you.

* Thiru N. RAMACHANDRA REDDY: Mr. D Speaker, Sir, I wish to say a few words on the Budget pre by the Hon. Minister for Finance for the year, 1977-78.

At the outset I would like to state that the present B not so disappointing as the previous ones presented since In the last ten years, funds have been squandered. Th misrule, and maladministration and also corruption coup extravagance which have brought the State to a very position from the pre-eminent position which it had previously. Also agricultural production was hampered in Many factories were closed. Yet out of these things, ou Minister has made a good job out of a very bad bargain.

Now coming to Agriculture I would like to state that the production is being made and is increasing every year, the ecord to mic condition of the farmer is still the same. That is because he is not getting at least a reasonable price for his produce though he has to pay a high price for labour, manure, fertiliser, etc. So I request the Government to make arrangements for better market-

ing of the agricultural produce. Agriculture has become a gambling now-a-days because suddenly there is failure of monsoon. In addition we are getting depressions. When we get depressions, it washes away the remaining portions. So I request Government to make suitable provision and they could also use their good offices with the Centre and introduce crop insurance scheme.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் அனுமதியோடு அவையின் நேரம் இன்னும் இரண்டு நிமிடங்கள் நீட்டிக்கப்படுகிறது.

THIRU N. RAMACHANDRA REDDY: With regard to my constituency, I represent Hosur which is a backward area in Dharmapuri district. In the backward Dharmapuri district, my constituency Hosur is the most backward taluk. With regard to ...ucational facilities, though we are having high schools, college
the ...cation is beyond the reach of even the middle class families
this c...use we are not having a college there. Most of our boys
has b... in Telugu and they have to come to Madras for their college
instead ...ation, which is very costly. Previously we used to get
Commissions in Bangalore colleges. Now-a-days they are not giving
it unde...sion to our boys and so it is necessary that a college should
ment. ...arted in our Hosur taluk.

recent vi...
request th... ...h regard to irrigation facilities, my taluk is dependent on
the Block ... But almost all tanks have been silted up. I request the
the scheme ...ment to make provision for de-silting the tanks and supply
...ensary as...

As regar... ...egard to transport, the less said the better. We are not
is very meagre ...d transport facilities. Rural roads are in a bad condition.
away from th... ...st Government to make provision to improve all rural
and they hav... to make provision for good transport in our area.
Also all th...
that in ti... ...ile concluding, I thank the Hon. Chief Minister for having
to catch ...ed all help to start a 'rural health centre' by private agencies
ment a... ...Hosur. Thank you, Sir.
Mini-...
out

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.32 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.



## 8. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

### A. Statutory Rules and Orders.

19. Notification issued in G.O. Ms. No. 935, Rural Development and Local Administration, dated 24th May 1977 in regard to certain variations to the Royapettah East Extension Town Planning Scheme of Madras City sanctioned in the late Health Department Notification No. 344, dated the 24th April 1952, published at pages 632 to 633 of Part I-A of the *Fort St. George Gazette,* dated the 27th August 1952. Laid on the Table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).

20. Notification issued in G.O. Ms. No. 936, Rural Development and Local Administration, dated 24th May 1977 in regard to certain variations to the Mylapore Southern Section Area Town Planning Scheme of Madras City sanctioned in the late Education and Public Health Department Notification No. 333, dated the 26th June 1944 published at pages 205-206 of Part I-A of the *Fort St. George Gazette,* dated the 15th August 1944. (Laid on the Table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).

21. Notification issued in G.O. Ms. No. 937, Rural Development and Local Administration, dated 24th May 1977 in regard to certain variations to the Lloyds Road Area Town Planning Scheme of Madras City sanctioned in the Education and Public Health Department Notification No. 880, dated the 1st November 1938 published at pages 731-733 of Part I-A of the *Fort St. George Gazette,* dated the 8th November 1938. (Laid on the Table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).

22. Notification issued in G.O. Ms. No. 802, Rural Development and Local Administration, dated 5th May 1977 in regard to certain variations to the Nungambakkam Eastern Section Area Town Planning Scheme of Madras City sanctioned in the late Education and Public Health Department Notification No. 74, dated 16th January 1939 published at pages 61-62 of Part I-A of the *Fort St. George Gazette,* dated the 24th January 1939. (Laid on the Table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).

23. Notification issued in G.O. Ms. No. 882, Rural Development and Local Administration, dated 16th May 1977 in regard to certain variations to the Mylapore Eastern Section Area Town Planning Scheme of Madras City sanctioned in the Public Health Notification No. 913, dated the 17th November 1939 published at pages 793-795 of Part I-A of the *Fort St. George Gazette* dated the 21st November 1939. (Laid on the Table of the House under section 123 (2) of the Tamil Nadu Town and Country Planning Act, 1971 (Tamil Nadu Act 35 of 1972).

*B Reports, Notifications and other papers.*

**Nil.**

## தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை

---

## புதன் கிழமை, 1977 ஆகஸ்டு 3

---

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினுக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினு

### ஒட்டல்களில் உணவுப் பண்டங்கள் விற்பனை

** 12—வினு : திரு. எஸ். ஜே. இராமசாமி, திரு. வி. கே.*

மாண்புமிகு கோதண்டராமன் : உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) 1976 முதல் 1977 ஜூன் வரை தமிழ்நாட்டில் ஒட்டல்களில் பண்டங்களின் எடை குறைவு மற்றும் அதிக விலையில் விற்றது குறித்து ஒட்டல்காரர்கள் யார் மீதேனும் வழக்குகள் பதிவு செய்யப்பட்டனவா, மாவட்டவாரியாக?

(ஆ) தண்டனை அடைந்த ஒட்டல்காரர் எத்தனை பேர்?

மாண்புமிகு திரு. க. ரா. எட்மண்ட்: (அ) 1976-ம் ஆண்டு தமிழ் நாடு உணவு விதிகள் (உணவுப் பண்டங்களின் விலை நிர்ணயமும், விலைப்பட்டியல் அறிவிப்பு) ஆணையின் கீழ் உணவுப் பண்டங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட எடைக்குக் குறைவாக விற்றதற்காக, சென்னையில் 20, வட ஆற்காடு மாவட்டத்தில் 7, கோயம்புத்தூர் மாவட்டத்தில் 84, நீலகிரி மாவட்டத்தில் 34, தஞ்சாவூர் மாவட்டத்தில் 313, புதுக்கோட்டை மாவட்டத்தில் 27, திருச்சி மாவட்டத்தில் 17, மதுரை மாவட்டத்தில் 56, இராமநாதபுரம் மாவட்டத்தில் 13, திருநெல்வேலி மாவட்டத்தில் 27, கன்னியாகுமரி மாவட்டத்தில் 5, ஆக மொத்தம் 603 உணவு விடுதிகளின் பேரிலும், விலை நிர்ணயத்துக்கு மேல் அதிக விலையில் விற்றதற்காக, சென்னையில் 5, கோயம்பத்தூர் மாவட்டத்தில் 15, திருச்சி மாவட்டத்தில் 1, திருநெல்வேலி மாவட்டத்தில் 41, கன்னியாகுமரி மாவட்டத்தில் 1 ஆக மொத்தம் 63 உணவு விடுதிகளின் பேரிலும் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

(இ) வழக்குகள் பதிவு செய்யப்பட்ட 666 உணவு விடுதிகளில், 419 உணவு விடுதிகளுக்குத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், வேறு எந்த மாநிலத்திலும் இல்லாமல் தமிழ்நாட்டிலே மட்டிலும் புத்தகாலத்திலே கொண்டு வருவது போல் 1976-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12-ம் தேதியிலே கொண்டு வரப்பட்ட இந்த ஓட்டல் பண்டங்கள் விற்பனை, விலை குறைப்பட, எடை நிர்ணயம், விஜிடேரியன் ஓட்டல்களுக்கு மட்டிலும் போடப்பட்டுள்ளது. நான்-விஜிடேரியன் ஓட்டல்களுக்குக் கிடையாது. ஒரு வேளை அவர்களிடத்திலே ஏதாவது ஒப்பந்தம் பண்ணிப் போடப்பட்டிருக்கிறதா? அதற்கான காரணம் என்ன? இது பாரபட்சம் இல்லையா? ஆகவே 1976-ஐ விட உணவுப் பொருள்கள் விலை மோசமான அளவு உயர்ந்துள்ள இந்தச் சமயத்திலே அதை அப்படியே நீடிக்க, இது சம்பந்தமாக சர்க்காருடைய கருத்து என்ன?

மாண்புமிகு திரு. க. உரொா. எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டபடி, ஏதாவது ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளதா என்பது இந்த அரசுக்குத் தெரியாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கண்டுபிடித்துக் கொடுத்தால் இந்த அரசு நன்றியுடையதாக இருக்கும். இந்தச் சட்டத்தைப் பொறுத்த மட்டில், இந்த ஆண்டு செப்டம்பர் மாதம் 26-ந் தேதியோடு, இந்தச் சட்டம் காலாவதி ஆகிறது. என்றாலும் பொது மக்கள் நன்மையைக் கருதி, இந்தச் சட்டம் அமலில் மேற் கொண்டு இருப்பது நலமாக இருக்கும் என்று கருதி, 1955-ம் வருடத்திய அத்தியாவசியப் பண்டங்கள் சட்டத்தின் கீழ் இந்த ஆண்டு மீண்டும் அமலுக்குக் கொண்டு வருவது பற்றி, இந்த அரசினுடைய யோசனையில் இருக்கிறது.

திரு. எஸ். ஜே. இராமசாமி: தலைவர் அவர்களே, இதற்காக வழக்குகள் எத்தனை பதிவு செய்யப் பெற்றிருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் யாருக்காவது தண்டனை வழங்கப்பட்டிருக்கிறதா? அந்தத் தண்டனை என்ன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. க. உரொா. எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, 626 வழக்குகளில், 555 உணவு விடுதி உரிமையாளர்களுக்குத் தண்டனை அளிக்கப்பட்டதாகத்தான் குறிப்பில் இருக்கிறது. என்ன தண்டனை விதிக்கப்பட்டது என்று இந்தக் குறிப்பிலே இல்லை. உறுப்பினர் அவர்கள் ஆர்வத்தோடு கேட்கின்றபடியால் இதற்கான ஆதாரங்களைத் திரட்டித் தர தயாராக இருக்கிறேன். 6 உணவு விடுதிகள் மீது வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கின்றன.





திரு. கு. ரமணி: இந்த ஓட்டல்களிலே எடையை நிர்ணயித்து அங்கங்கே போர்டுகளை எழுதி வைத்து விடுகிறார்களே, நிர்ணயித்த எடையோடு அந்தப் பொருள்கள் தொடர்ந்து கொடுக்கப்படுகின்றனவா என்று பார்ப்பதற்கும், கண்காணிப்பதற்கும் ஒழுங்கான ஏற்பாடுகள் இன்று இருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொா. எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது விதிமுறைகளின் கீழ் ஓட்டல்களுக்குப் போய் அதிகாரிகள் சோதனையிட்டு எடை அளவு ஒழுங்காக இருக்கிறதா என்று பார்க்க வேண்டுமென்று அவர்களுக்கு ஏற்கனவே உத்தரவு இடப்பட்டிருக்கிறது. ஏதாவது வழக்குப் போடப்படுகிற நேரத்திலே தான் பொது மக்களுக்குத் தெரிய வருமே ஒழிய சாதாரண, குறிப்பிட்ட எடைகள் இருக்கும்போது அதிகாரிகள் சோதனையிடுவது பொதுமக்களுக்குத் தெரிய எந்த விதமான நியாயமும் இல்லை.

திரு. ஆர். உமாநாத்: இந்த முறையினால் தண்டனை கொடுக்கக்கூடிய சட்டத்தில், பைன் போடுவதற்கும் சிறைப்படுத்துவதற்கும் இரண்டுக்கும் வகை செய்யப்பட்டிருக்கிறது. கோர்ட்டுகளுக்குப் போனால் பைன் தான் போடுகிறார்கள். முதலில் பைன் கட்டிவிட்டு—ஒரு விலை கொடுக்கிறோம் என்ற முறையிலே—மீண்டும் மீண்டும் செய்கிறார்கள். ஆகவே, சட்டத்திலே இருக்கிற பைன் என்ற புரொவிஷனை எடுத்து விட்டு சிறை தண்டனை மட்டும் என்று கொண்டு வருவதற்கு deterrent sentence என்று கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வீர்களா? ர்ணயம்

மாண்புமிகு திரு. க. உரொா. எட்மண்ட்: உறுப்பினர் கட்டால் ந்தவித அனுபவம் உள்ளவர்கள், விவரங்கள் தெரிந்தவர்கள் நான்-வெஜ் வழங்குவது நீதி மன்றத்தின் பொறுப்பு. இப்படி ு. ஆகவே டனை வழங்க வேண்டும் என்று நீதி மன்றங்களை பாடு முதலி படுத்த முடியாது. இருந்தாலும் குற்றவாளிகளுக்கு, வழங்குவதை மட்டும் வைத்துக்கொண்டு, அபராதம் எடுத்து விடலாம் என்ற யோசனையை உறுப்பினர் ஓட்டல் கூறுகிறார்கள். அது பற்றி பரிசீலிக்கப்படும். ணம்

த்து

திரு. என். கிட்டப்பா: வேறு எந்த மாவட்டத்திலும் இல்லாத அளவிற்குத் தஞ்சை மாவட்டத்தில் 300-க்கு மேற்பட்ட வழக்குகளுக்கு ஆளாக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதற்கான காரண காரியங்களை அமைச்சரவை ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. க. உரொா. எட்மண்ட்: மற்ற மாவட்டங்களைவிட தஞ்சை மாவட்டத்தில் அதிகமான வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. 313 வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. ஒரு வேளை உறுப்பினர் அவர்கள் அந்த மாவட்டத்தில் இருந்து வருவது காரணமாயிருக்கலாம்.

திரு. ஜே. ஜேம்ஸ்: வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அமைச்சர் அவர்கள் பதவி ஏற்ற பிறகு எவ்வளவு வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன ?

மாண்புமிகு திரு. க. உரொா. எட்மண்ட்: 1977-ம் ஆண்டு ஜூன் மாதம் வரையில் உள்ள குறிப்புகளைத்தான் கொடுத்திருக்கிறேன். அதற்குப் பின்னால் இந்த அமைச்சரவை பதவி ஏற்ற பிறகு—ஜூன் மாதம் 30-ம் தேதிதான் பதவியேற்றது—எவ்வளவு வழக்குகள் பதிவு செய்யப்பட்டன என்ற விவரங்கள் இப்போது என்னிடம் இல்லை.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: இது பல லட்சக்கணக்கான மக்கள் நகரங்களில் வாழ்கிற இலட்சக்கணக்கான மக்கள் வாங்கிச் சாப்பிடுகிற பிரச்சினை. சட்டம் வந்த பிறகு இட்லியின் நிறையை அதிகப்படுத்துத் தொடர்ந்து ரவையைக் கலந்து வருவது தெரியுமா? ஜெயராம ஐயர் போன்றவர்கள் ரவையையே வைத்துக் கொண்டு இட்லியாக்கி விடுகிற நிகழ்ச்சி அரசாங்கத்துக்குத் தெரிய வருமா? போலீஸ் கான்ட்ராக்ட் அவர்களுக்கு இருக்கிற காரணத்தால் அவரைப் போன்ற பெரியவர்கள் மேல் நடவடிக்கைகள் எடுக்காமல் இருப்பதாகக் கூறப்படுவது உண்மையா? ஒரு கேள்வியே அனுமதிப்பதால் மூன்று நான்கு கேள்விகளைச் சேர்த்து கேட்கிறேன். இப்போது அவற்றின் மீது போடப்பட்டிருக்கும் வரியை ரத்து செய்யும் உத்தேசமுண்டா? இப்போது எண்டுமத்தியில் அந்த வரியைக் கொடுக்காமல் சாப்பிட்டுவிட்டு அமலில் என்று கிளர்ச்சி ஒன்று நடத்தப் போகிறார்கள் என்று கருதி, அரசுக்குத் தெரியுமா?

சட்டத்தை
வருவது

மாண்புமிகு திரு. க. உரொா. எட்மண்ட்: உளுந்து-அரிசியில் தான் இட்லி தயார் செய்யப்படவில்லை. ஹோட்டல் இட்லியும் செய்யப்படுவதுண்டு என்பது உறுப்பினர் திரு. அவர்களுக்குத் தெரிந்திருக்கும் என்று நினைக்கிறேன்.

ஆகவே

திரு. எஸ்.ஜே. சாதிக் பாட்சா: குறைந்த விலையில் தரமான உணவு கொடுக்க ஜனதா உணவு என்ற திட்டத்தை நிறைவேற்றி வந்தார்கள். இந்த ஜனதா உணவு கிடைப்பதற்கு அரசாங்கத்தின் சார்பாக ஜனதா உணவு விடுதிகள் திறக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. உரொா. எட்மண்ட்: சென்னையில் அப்படி ஒரு விடுதி அரசாங்கத்தால் நடத்தப்படுகிறது. அது எந்தளவிற்கு வெற்றிகரமாக நடைபெறுகிறது என்பதைப் பரிசீலித்து அது உண்மையில் பொது மக்களுக்குச் சாதகமாகவும் அரசாங்கத்திற்கு ஓரளவு லாபம் தருவதாகவும் இருந்தால் மேற்கொண்டு அப்படிப்பட்ட விடுதிகளைப் பல்வேறு இடங்களில் திறப்பது பற்றி இந்த அரசு ஆலோசிக்கும்.





திரு. எஸ்.ஆர். இராதா: இந்த உணவு விடுதிகளில் எடையின் அளவை மட்டும் பார்த்துக் கொண்டிருக்கிற அரசாங்கம் எடையோடு கூட சுவையையும் கவனிப்பதற்கு வழிவகை செய்யுமா?

மாண்புமிகு திரு. க. உரொா. எட்மண்ட்: எடையை நிர்ணயம் செய்யலாம். எடை எல்லா இடங்களிலும் ஒன்றாகத்தான் இருக்க முடியும். ருசியைப் பொறுத்த மட்டில் அது ஆட்களுடைய விருப்பத்தைப் பொறுத்திருக்கிறது.

திரு. என். கிட்டப்பா: மற்ற மாவட்டங்களுக்கு எல்லாம் உணவு வழங்கும் தஞ்சை மாவட்டத்தில் இந்தக் குற்றங்கள், கண்டுபிடிப்புகள் அதிகமாக நடைபெற்றிருப்பதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். எனவே அதைப் பரிசீலித்து அதற்கான மூல காரணத்தை அறிந்து அதைப் போக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. க. உரொா. எட்மண்ட்: மூல காரணம் எதுவாகவும் இருக்க முடியாது. அங்கிருக்கிற பொது மக்கள் அதிகாரிகளோடு ஒத்துழைப்பதுதான் காரணமாக இருக்கலாம்.

[முற்பகல் 9-10]

திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே, ஓட்டல்களில் விலை நிர்ணயம் செய்வது பற்றியும், எடை போடுவது பற்றியும் சொன்னார்கள். வெஜிட்டேரியன் ஓட்டல்களை மட்டும்தான் சொன்னார்கள். நான்-வெஜிட்டேரியன் ஓட்டல்களில் விலை நிர்ணயம் எதுவும் கிடையாது. கோழி பிரியாணி என்று கேட்டால் இரண்டு துண்டு தான் அதில் இருக்கிறது. இதற்கு எந்தவிதமான கட்டுப்பாடும் கொண்டு வரப்படவில்லை. நான்-வெஜிடேரியன் ஓட்டல்களில் தான் காஸ்ட்லியாக இருக்கிறது. ஆகவே இந்த ஓட்டல்களிலும் விலை நிர்ணயம், எடைக் கட்டுப்பாடு முதலியவை கொண்டு வரப்படுமா?

மாண்புமிகு திரு. க. உரொா. எட்மண்ட்: அசைவ ஓட்டல்களில் இப்படிப்பட்ட கட்டுப்பாடு கொண்டு வராததன் காரணம் இன்னும் அதிகமான கொலைகள் நடக்க வேண்டாம் என்று நினைத்து முன்னால் இருந்தவர்கள் கொண்டு வரவில்லையோ என்னவோ தெரியவில்லை. என்றாலும் இதைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: இப்போது ஓட்டல்களில் விற்பனை வரி போடுகிறார்கள். இதை எதிர்த்து மக்கள் கிளர்ச்சி நடத்தப் போவதாகத் தெரிகிறது. ஆகவே இந்த விற்பனை வரி ரத்து செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. க. உரொா. எட்மண்ட்: புதிதாக இதைத் தள்ளுபடி செய்வது பற்றி ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

[1977 ஆகஸ்ட் 3

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி எண். 13....

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : இது முக்கியமான கேள்வி. சென்னையில் அதிகமான ஓட்டல்களை வைத்துக் கொண்டிருக்கிற ஜெயராம ஐயர் என்பவர் போலீஸ் காண்ட்ராக்டராக இருப்ப தால் தான் இவரது ஓட்டல்களில் நடவடிக்கை எடுப்பதில்லை என்று சொல்லப்படுகிறது, அதற்கு காரணம்?

மாண்புமிகு திரு. க. உரொா. எட்மண்ட் : இந்த உணவுப் பொருட்கள் விலை நிர்ணயச் சட்டம் சில இடங்களுக்கு மட்டும் தான் பொருந்தும். நட்சத்திர உணவு விடுதிகளுக்குப் பொருந் தாது. ஆகவே இதில் எண்ணிக்கை குறைவாக இருக்கலாம்.

திரு. வி. கே. கோதண்டராமன் : பாயின்ட் ஆப் ஆர்டர், மூலக் கேள்வியை கேட்கின்றவர்களுக்கு உப கேள்விகள் கேட்ப தற்கு அதிகப்படியாக சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும். நான் இந்த கேள்வியைக் கொடுத்திருக்கிறேன். ஆனல் எனக்கு உப கேள்விகள் கேட்பதற்குச் சந்தர்ப்பம் தரப்படவில்லை. கையைத் தூக்கி தூக்கிக் கைதான் வலிக்கிறது. இப்படி இருப்பது நியா யம்தானு ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்வி ஒன்றுக்கு மட்டும் 13 நிமிடங்கள் ஆகியிருக்கின்றன. எல்லோருக்கும் நிறைய சந்தர்ப்பம் தரப்பட்டிருக்கிறது. திரு. கோதண்ட ராமன் அவர்கள் என் பார்வையில் படாமல் இருந்திருக்கலாம். இனிமேல் வரும்போது தாராளமாகக் கேள்விகளைக் கேளுங்கள். இப்போது அடுத்துள்ள கேள்வியை எடுத்துக் கொள்ளலாம் கேள்வி எண். 13....

திரு. வி. கே. கோதண்டராமன் : கேள்வி நேரத்திற்கு ஒரு மணி நேரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே 13 நிமிடங்கள் ஆகிவிட்டது என்று சொல்வது அதிக நேரமாகிவிட்டது என்று சொல்லிவிட முடியாது. உணவுப் பொருட்கள் பற்றிய கேள்வி முக்கியமான கேள்வி. இதில் நிறைய பேர்களை அனுமதியுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து வருகின்ற நட வடிக்கைகளுக்கு நேரம் இல்லாமல் போய் விடும். ஆகவே இதில் கனம் உறுப்பினர்கள் என்னேடு ஒத்துழைக்க வேண்டும். முக்கியமாக இருந்தால் ஒரு கேள்வியைக் கேளுங்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : எப்போதும் நான் உங்க ளோடு ஒத்துழைத்துக் கொண்டு தான் இருக்கிறேன். ஒரு கேள் வியை மட்டும் கேட்க விரும்புகிறேன். இப்படிப்பட்ட சட்டம் கொண்டு வருகின்ற நேரத்தில் 200 மாதிரி ஓட்டல்கள் திறந்து வைக்கப்படும் என்று சொல்லப்பட்டது. ஆனல் இப்போது ஒரே ஒரு ஓட்டல் மட்டும் தான் நடைபெறுகிறது என்றும், அது



1977 ஆகஸ்ட் 3]

நல்லமாதிரியாக நஷ்டமில்லாமல் நடைபெறுகிறதா என்று பார்த்துவிட்டு மேலும் ஓட்டல்களைத் திறக்கலாம் என்றும் அமைச் சர் சொல்லுகிருர். இதே மாதிரி கோயம்புத்தூரிலும் 'அவனுசி லிங்கம் மாதிரி ஹோட்டல்' என்று திறக்கப்பட்டது. அதிலும் நஷ்டம் என்ற காரணத்திற்காக அதுவும் மூடப்பட்டு விட்டது. இப்போது இங்கு நடைபெறுகின்ற மாதிரி ஓட்டலும் நஷ்டத்தில் தான் ஓடுவதாகத் தெரிகிறது. இப்படிப்பட்ட நிலையில் உணவுப் பொருட்களின் விலையைக் குறைப்பதற்கு, ஜனதா உணவு விடுதிகள் நல்ல முறையில் நடக்கக் கூடிய அளவுக்கு இந்தச் சர்க்கார் நட வடிக்கை எடுக்குமானல், குறைந்த விலையில் உணவுப் பொருட்களை அவர்களுக்குக் கொடுப்பதோடு, மேலும் சலுகை விலையில்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது விவாதம் அல்ல. சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சலுகை விலையில் உணவுப் பொருட்கள் வழங்குவதோடு, இதற்கு விதிக்கப்படும் வரியையும் ரத்து செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. க. உரொா. எட்மண்ட் : இவை எல்லாம் பரிசீலனையில் இருக்கிறது. கூடிய விரைவில் அதுபற்றி தெரிவிக் கப்படும்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, தண்டனை கொடுக் கப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் கூறினர்கள். என்ன தண்டனை கொடுக்கப்பட்டது என்ற பதிலைச் சொல்லவில்லை. சாதாரணமாக, என்னென்ன பதில் கேட்கப்படும் என்று ஆண்டிசி பேட் செய்து பதில்களைச் சேகரித்து வருவது என்பது மரபு. அந்த மாதிரி மரபைக் கடைப்பிடித்து, அமைச்சர் அவர்கள் இனி சப்ளிமெண்டரிகளுக்குப் பதில் தருவாரா என்று அறிய விரும்புகி றேன்.

THE HON THIRU G. R. EDMUND : This is not a supplementary question.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, கேள்வி எண். 18..

திரு. ஆர். உமாநாத் : தலைவரவர்களே, பாயிண்ட் ஆப் ஆர் டர். அமைச்சர் அவர்கள் தண்டனை கொடுக்கப்பட்டது என்று சொன்னதை ஒட்டி தண்டனை என்ருல் என்ன, ஃபைனு, செண் டன்சா என்று கேட்கப்பட்ட கேள்வி ஃபார்பெச்ட் அல்ல. இப்படிப்பட்ட துணைக் கேள்விகளுக்கும் அமைச்சர் தயாராக வர வேண்டும் என்று பேரவைத் தலைவர் அவர்கள் அமைச்சருக்குக் கூறுவாரா ?

[1977 ஆகஸ்ட் 3

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், துணைக் கேள்வியாக, அவருக்கு அனுகூலமாகக் கேட்டிருக்கிறார். அமைச்சர்கள் கேள்விக்குப் பின்னால் கேட்கப்படுகின்ற அத்தனைத் துணைக் கேள்விகளுக்கும் பதில்களைத் தயாராகச் சேகரித்துக் கொண்டு வர வேண்டுமென்பது மரபு. அமைச்சர்கள் அந்த மரபைக் கடைபிடிப்பார்கள்.

தரங்கம்பாடிக்குக் குடிநீர் வழங்கல்.

*13. வினா : திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) தரங்கம்பாடி பேரூராட்சி பகுதிக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க குடிநீர் வடிகால் வாரியத்திடம் திட்டம் ஏதேனும் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) ஆம்.

(ஆ) தரங்கம்பாடி பேரூராட்சி பகுதிக்கு குடிநீர் வழங்குவதற்காக ரூ.21 லட்சத்தில் ஒரு திட்டத்தினைத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் உருவாக்கியுள்ளது. பேரூராட்சியின் நிதி நிலையைப் பற்றிக் கோரியுள்ள அறிக்கைகள் ஊரக வளர்ச்சி இயக்குநரிடமிருந்தும், தஞ்சை மாவட்ட ஆட்சியரிடமிருந்தும் வரப்பெற்றவுடன், மேற்கூறிய திட்டம் குடிநீர் வடிகால் வாரியத்தினால் அரசின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்படும்.

திரு. எஸ். கணேசன் : தலைவரவர்களே, வருவாய் மிகவும் குறைவாக உள்ள பேரூராட்சி அது. அங்கு வாழ்கின்ற பொது மக்களின் நீண்டகாலக் கோரிக்கையான, ரூ. 21 லட்சத்தை நீண்டகாலக் கடனாகவோ மானியமாகவோ கொடுத்து குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, மானியமாக அளிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அப்படி இயலுமா என்று இப்போது திடீரென்று பதில் சொல்வதற்கில்லை. இருந்தாலும், தரங்கம்பாடியில் வறட்சி நிலையை உத்தேசித்து, இவைகளை எல்லாம் பற்றி ஆர அமர யோசனை செய்து முடிவு எடுக்க வேண்டும்.



1977 ஆகஸ்ட் 3]

திரு. யா.சை.மு. யூசுப்: தலைவரவர்களே, தற்போது ஊராட்சி மன்றங்களில் மட்டும் தான் மானியம் கொடுக்கப்படுகின்ற நிலையில் குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. பேரூராட்சி மன்றங்களுக்கும் இப்படி மானியம் ஒதுக்குவது என்பது விஸ்தரிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, மானியம் ஒதுக்கி செய்வதாக நான் இப்போது சொல்லவில்லை. அங்கே குடிநீர் வழங்க, கடனில் மூன்றில் இரண்டுபங்கு எல்.ஐ.சி. யிடமிருந்தும் மூன்றில் ஒரு பங்கு அரசாங்கத்திடமிருந்தும் கடனாகத் தரப்படுகிறது. அதைத் திருப்பித் தந்துவிட வேண்டும். வட்டி சதவிகிதமும் சொல்கிறேன்—ஒன்பது சதவிகிதம்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, தரங்கம்பாடி வரலாற்றுப் புகழ் பெற்ற ஓர் நகரம். தஞ்சையின் தலைநகராகக் கூட 1845-ல் இருந்திருக்கிறது. இந்த நிதிநிலை அறிக்கையில் கூட, தரங்கம்பாடியிலுள்ள டேனிஷ் கோட்டையைப் புதுப்பித்து ஒரு பொருட்காட்சி அமைப்பதற்கு புதிய அரசு ஏற்பாடு செய்திருப்பதாகக் கூறப்பட்டுள்ளது. எனவே, அப்படிச் சிறப்பு வாய்ந்த அந்த ஊருக்குநேரடியாககவனம் செலுத்தி குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க, அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, மாண்புமிகு கிட்டப்பா அவர்கள் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர். நானும் அம்மாவட்டத்தைச் சேர்ந்தவன், அந்த மாவட்டத்தின் பிரதிநிதியாகவும் இங்கே அமைச்சரவையில் இருக்கிறேன் என்று கருதுகிறேன். ஆகவே, இந்தப் பிரச்சினை ஆழ்ந்த அனுதாபத்தோடு பரிசீலிக்கப்படும்.

திரு. எஸ். கணேசன் : தலைவரவர்களே, பேரூராட்சி மன்றம் இந்த நீண்ட காலக் கடன் வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி இருக்கிறது. நிதிநிலை அறிக்கையில் கூட, சுற்றுலா வளர்ச்சிக்காக டேனிஷ் கோட்டை பாதுகாக்கப்படும் என்று கூறப்பட்டிருக்கின்றது. ஆகவே, இதற்கு ஒரு முக்கியத்துவம் கொடுத்து விரைவாகச் செயல்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, நான் ஏற்கனவே சொன்னதைப் போல, யாரிடமிருந்து பரிந்துரை வர வேண்டுமோ, அவரிடமிருந்து வந்ததும் இது பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. துரை முருகன் : பொதுவாகவே, சில பஞ்சாயத்துக்களில் இந்தக் குடிநீர்ப் பிரச்சினை பெரிய பிரச்சினையாக இருக்கிறது. நிதி இல்லாத காரணத்தால் பல தொல்லைகளுக்கு ஆளாகி இருக்

[1977 ஆகஸ்ட் 3

றனை. ஆகவே, அப்படிப்பட்ட ''ஜெனுயின் கேஸ்களில்'' அரசு முழுத் தொகையையும் கொடுக்க முன்வருமா? ஆளுநர் உரையில் கூட, கிராமங்களுக்குக் குடிநீர் பற்றி முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, முழுத் தொகையையும் அரசே வழங்கி குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9-20]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குடிநீர் வழங்குவதிலே ரூரல் வாட்டர் சப்ளை ஸ்கீம் என்பது ஒன்று. இது பேரூராட்சி கீழ் வருகிறது. இது வேறு திட்டம். எனவே, இவைகள் இரு வேறு வகையான திட்டங்கள். கிராமங்களுக்குக் குடிதண்ணீர் வழங்கப்பட வேண்டுமென்று நிதிநிலை அறிக்கையிலேயே சொல்லப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. கோவிந்தராசன்: தலைவர் அவர்களே, மக்களுக்குக் குடிநீர் வழங்குவதை இந்த அரசு பிரதான வேலையாக எடுத்துக் கொண்டிருக்கிறது. அப்படியிருக்க, ஏற்கனவே குடிநீர் வாரியத்தின் மூலம்பஞ்சாயத்து ஒன்றியங்களுக்குப் பலதிட்டங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அப்பேர்ப்பட்ட திட்டங்கள் இருந்தும், அவைகள் நிறைவேற்றப்படாமல் இருப்பது மட்டுமல்ல, குடிநீர் கொடுக்காமல் இருக்கவும் இந்த பி.டீ.ஓ.க்கள், பஞ்சாயத்துத் தலைவர்கள் திட்டமிட்டு ஏற்பாடு செய்து கொண்டிருப்பதால் அதற்குத் தக்க நடவடிக்கை எடுப்பதற்கு இந்த அரசு முன்வருமா? அப்பேர்ப்பட்ட ஒரு நிலைமை, நெல்லிக்குப்பம் பஞ்சாயத்து ஒன்றியத்தின்கீழ் கோழிக்குப்பம் பஞ்சாயத்தில் மோட்டார் பற்றி எரிந்து விட்டதால், கடந்த ஒரு மாதகாலமாகக் குடிப்பதற்குத் தண்ணீர் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். இதற்கு வேண்டிய நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது தரங்கம்பாடியைப் பற்றியது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்தின் முதல்வர், புரட்சித் தலைவர் அவர்கள். இந்தியா சுதந்திரம் அடைந்து 30 ஆண்டுகள் ஆகியும்கூட இன்னும் குடிநீர் வசதி செய்து கொடுக்கப்படவில்லையே என்று வேதனைப்படுகிறார்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். எனவே, இந்தப் பிரச்சினையை நாங்கள் We are going with break neck speed எவ்வளவு வேகமாக முடியுமோ அந்த அளவுக்கு நடவடிக்கை எடுப்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1977 ஆகஸ்ட் 3]

திரு எஸ்.ஜே. இராமசாமி: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் துணைக் கேள்விக்குப் பதில் அளிக்கும்போது, கிட்டப்பாவும், நானும் ஒரே மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்று குறிப்பிட்டார்கள். அப்படியானால், மற்ற மாவட்டங்கள் புறக்கணிக்கப்படும் என்று அர்த்தமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, அவரை நெருக்கமாக இணைப்பதற்காக உறவு முறையைச் சொன்னேன். எல்லா மாவட்டங்களும் கவனிக்கப்படும்.

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, குடிநீர்த் திட்டத்தை மிக வேகமாக நிறைவேற்றுவதில், தீவிரமாக நடவடிக்கை எடுக்கப் போகிறோம் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இதைத் தீவிரப்படுத்த ஆயுள் காப்பீட்டுக் கழகத்திலிருந்து ஆண்டுதோறும் எவ்வளவு கடன் பெறுகின்றோமோ, அதைப் பொறுத்துத்தான் திட்டங்களை நிறைவேற்ற முடிகிறது. எனவே, 1975–76, 1976–77 ஆண்டுகளில் ஆயுள் காப்பீட்டுக் கழகம் எவ்வளவு கடன் கொடுத்திருக்கிறது? வருகிற 1977–78ஆம் ஆண்டில் எவ்வளவு நிதி கொடுக்க அவர்கள் இசைந்தார்கள், என்ன உடன்பாடு ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குத் தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரம் முடிவுற்றது.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்].

## 2. அறிவிப்பு

### மதுரைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு: மதுரைப் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்கு (Senate) இச் சட்டப் பேரவையின் சார்பில் உறுப்பினர்களாக இருந்த (1) திரு. கே.பி. கோபால், (2) திரு. இரா. இராமலிங்கம், (3) திரு. குப்பல் கே.எஸ். ராமகிருஷ்ணன், (4) திரு. எம்.எஸ்.கே. சத்தியேந்திரன் ஆகியோரின் பதவிக் காலம் 31–1–1976-ம் நாளுடன் முடிந்து விட்டதால், பல்கலைக்கழகப் பேரவையில் ஏற்பட்டுள்ள நான்கு வெற்றிடங்களுக்குத் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் தங்களிலிருந்து நால்வரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு, மதுரைப் பல்கலைக்கழகம் கோரியுள்ளது. பல்கலைக் கழகத்தின் விதிமுறைப்படி பதிவாரி அடிப்படையில் (Proportional representation) இத்தேர்வு நடைபெறுவதில்லை

எனவே, வேட்பாளர்கள் நியமனத் தாள்களை 9–8–1977,
செவ்வாய்க்கிழமை காலை 11 மணிக்குள் சட்டமன்றப் பேரவைச்
செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத் தாள்களைச்
செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத் தாள்கள் 9–8–1977 செவ்வாய்க்கிழமை, மாலை 3
மணிக்குப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக்
கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 10–8–1977 புதன்கிழமை
மாலை 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்
றிடங்களின் எண்ணிக்கைக்கு அதாவது நான்கு இடங்களுக்கு
மேற்படுமாயின் 12–8–1977 வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கும்
பிற்பகல் 1 மணிக்கும் இடையே, சென்னை கோட்டையிலிருக்கும்
பேரவைக் குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

## 3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### நெல்லிக்குப்பம் காவல் துறையினரால் கைது செய்யப் பெற்ற திரு. சிதம்பரம் என்பவர் இறந்து விட்டதும், அதன் விளைவாக ஏற்பட்ட நிகழ்ச்சிகள் குறித்தும்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, ஒத்திவைப்புத்
தீர்மானம். ''நெல்லிக்குப்பம் போலீசாரால் 30–7–1977
அன்று இரவு திரு. சிதம்பரம் என்பவர் கைது செய்யப்பட்டு,
ஒரு மணி நேரத்தில் இறந்து விட்டதாலும், அதன் பின்
நடந்த நிகழ்ச்சிகளாலும் ஏற்பட்டுள்ள நிலை குறித்து விவாதிக்க
''பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டு
மென்று, திரு. சி. கோவிந்தராசன், திரு. வி.கே. கோதண்டராமன்,
திரு பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம், திரு. ஆர். கிருஷ்ணன்,
திரு. எஸ்.ஜே. சாதிக் பாட்சா, திரு. எம். செல்வராஜ், மற்றும்
திரு. ஜே. ஜேம்ஸ், திரு. துரை முருகன், திரு எம்.ஏ. லத்தீப்
ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவை
யின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய
அவசர முக்கியமானது என்பதைச் சுருக்கமாக விளக்கும்படி கேட்
டுக்கொள்கிறேன்.

* திரு. சி. கோவிந்தராசன் : பேரவைத் தலைவர் அவர்
களே, சிதம்பரம் என்ற நபர் தேனாம்பேட்டையிலுள்ள ஒரு
இன்கம்டாக்ஸ் ஆபீசரிடத்தில் வேலை செய்து கொண்டிருந்தார்.
சமையல் ஆள் என்று கூறப்படுகிறது, அவருக்கு உறவினர் கூட.
அவர் நெல்லிக்குப்பம் சுந்தரபாண்டி என்ற கிராமத்திற்குச்
சென்றிருக்கிறார். இந்த இன்கம்டாக்ஸ் ஆபீசர் அவருடைய



வீட்டிலுள்ள நகைகளைத் திருடிக் கொண்டு போய்விட்டதாக ஒரு புகார் கொடுத்ததாகக் கூறப்படுகிறது. அதன் அடிப்படையில் சுந்தரபாண்டிக்கு 30ஆம் தேதி இரவு நெல்லிக்குப்பம் போலீசார் சென்று அவரைக் கைது செய்து போலீஸ் நிலையத்திற்கு அழைத்து வந்தனர். அழைத்து வந்த பிறகு அவரை அடித்திருக்கின்றனர். தகாத இடத்தில், இன்னும் சொல்லப் போனால் உயிர்நிலையில் அடித்த காரணத்தால் அவர் இறந்து விட்டார். இறந்து விட்டவரை பக்கத்தில் இருக்கக்கூடிய ஆஸ்பத்திரிக்கு — நந்தகோபால் ஆஸ்பத்திரி என்று கூறுகிறார்கள் ; அப்படிப்பட்ட ஆஸ்பத்திரியே நெல்லிக்குப்பத்தில் கிடையாது— எடுத்துச் சென்று படுக்க வைத்திருக்கிறார்கள். இறந்துவிட்ட சடலத்திற்கு எப்படி சிகிச்சை செய்ய முடியும் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது வழக்குமன்றத்திற்குப் போகக்கூடிய சூழ்நிலை இருக்கலாம். ஆகவே, உள்ளூரப் போகாமல் எப்படி இது ஒத்திவைப்புத் தீர்மானத்தின்கீழ் வரும் என்பதை மட்டும் சுருக்கமாக எடுத்துக் கூறவேண்டும்.

திரு. சி. கோவிந்தராசன் : இதைக் கேள்விப்பட்ட மக்கள் பார்ப்பதற்காக வந்திருக்கிறார்கள். வந்த மக்களைக் கலைக்க அங்கிருக்கக்கூடிய போலீசார் கண்ணீர் புகை பிரயோகம் செய்திருக்கிறார்கள். அவர்களைத் துரத்திக் கொண்டு தெருத் தெருவாக சென்று அடித்திருக்கிறார்கள். அந்த இடத்திலேயே லத்தி சார்ஜ் செய்யாவிட்டாலும் தெருக்களிலே அடித்திருக்கிறார்கள். பத்திரிகையில் வந்திருக்கும் செய்தியும், போலீஸ் கொடுக்கக்கூடிய தகவலும் அவர் லாக்கப்பில் அடித்து இறக்கவில்லை, அவரைக் கைது செய்து கொண்டு வரும்போதே அவர் பூச்சி மருந்தைச் சாப்பிட்டிருக்கிறார் என்று இருக்கிறது. இப்படிக் கைது செய்யப்படக்கூடியவர்கள் இறந்தால் மருந்து சாப்பிட்டார், மண்ணெண்ணையை வைத்திருந்தார் என்று சொல்லுவது போலீஸுக்கு வழக்கமாக ஆகிவிட்டது. அந்தக் கைதியை கைது செய்து கொண்டு வரும்போது சகோதரி வீட்டுக்குச் சென்று தண்ணீர் குடித்ததாகச் சொல்லப்படுகிறது. அரசியல்வாதிகளைக் கைதுசெய்யும்போது சட்டை போட்டுக்கொண்டு வருவதற்குக்கூட அவகாசம் கொடுக்காத போலீஸ் இவ்வாறு சகோதரி வீட்டிற்கு அனுப்பியிருக்க முடியுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. அதைச் சிக்கலாக்க வேண்டாம். தயவு செய்து சுருக்கமாகச் சொல்லுங்கள். ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி கொடுத்ததுபோல் விளக்கமாகப் பேசிக் கொண்டிருக்கக்கூடாது.

திரு. சி. கோவிந்தராசன் : போலீசார் அடித்து இறந்ததை மறைப்பதற்காக இப்படிப்பட்ட கதைகளை ஜோடனை செய்கிருர்கள். அப்படிப்பட்ட நிலைமை புதுவண்ணையிலும் நடந்தது. இன்னொரு தகவல்—அவர் வரும் வழியில் மயக்கம் அடைந்து விழுந்து விட்டார், வரும் வழியில் சோடா குடித்தார் என்பது. இப்படி முன்னுக்குப்பின் முரணுக இருக்கிறது. இப்படி எல்லாம் ஜோடனை செய்து தாங்கள் செய்த குற்றத்தை மறைப்பதற்காக இப்படி போலீசார் செய்கின்றனர். பஞ்சாயத்தார் இன்க்வெஸ்ட் நடத்தியதில் கூட அவர் அடித்துத்தான் இறந்திருக்க வேண்டுமென்று கூறியிருக்கிருர்கள். இதெல்லாம் போலீஸ் தொடர்ந்து செய்யக்கூடிய காரியமாக இருக்கிறது. கண்ணீர்ப் பிரயோகம் நடந்தது; தொடர்ந்து வீடு வீடாகப் புகுந்து சம்பந்தம் இல்லாதவர்களை எல்லாம் கைது செய்து வழக்குப் பதிவு செய்யப்படுகிறது. சம்பந்தம் இல்லாத நபர்கள் என்று சொன்ஞல் அப்பாவிகள்...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்னும் ஐந்தாறு பேர் பேசவேண்டும். சுருக்கமாகச் சொல்ல வேண்டும். எல்லாவற்றையும் விளக்கமாகப் பேசிவிட்டால் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி எதற்கு? ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி கொடுத்து விட்டதுபோல் விளக்கமாகப் பேசிக்கொண்டிருக்கக்கூடாது. நீங்கள் இப்படிப் பேசுவது போல் மற்ற மெம்பர்களும் ஆரம்பித்தால் நேரம் கிடையாது, அது முறையும் அல்ல.

திரு. சி. கோவிந்தராசன் : இந்தத் தகவல் வந்த உடனேயே நான் முதல்வர் அவர்கள் இல்லத்திற்குத் தொடர்பு கொண்டேன். முதல்வர் அவர்கள் இல்லாததால் ஐ.ஜி. அவர்களுடன் தொடர்பு கொள்ள முயற்சித்தேன். போலீசார் இப்படி பொது மக்களைத் துன்புறுத்துவதும், சாராயம் காய்ச்சுகிறவர்களுக்கு ஊக்கம் கொடுப்பதும்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் சம்பந்தம் இல்லாத விஷயங்களை, சாராயம் காய்ச்ச உடந்தையாக இருந்தார்கள் என்றெல்லாம் பேசுவது ஒத்திவைப்புத் தீர்மானத்தை ஒட்டியது அல்ல. அது அவசியமில்லை. சுருக்கமாக முடியுங்கள்.

[முற்பகல் 9-30]

திரு. சி. கோவிந்தராசன் : தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு வருகிறது. போலீஸ் மனித உயிரை மதிப்பது கிடையாது. காவலர்கள் உங்கள் சேவகர்கள் என்று சொல்லப்படுகிறது. '' உங்கள் நண்பன் '' என்று சினிமா படம் எடுத்தால் மட்டும் பிரயோசனம் கிடையாது. இப்படிப்பட்ட நிலைமை தொடர்ந்து போலீஸ் இலாகாவில் நடக்கிறது. இந்த அரசு ஏற்பட்ட பிறகு இது இரண்டாவது தடவை. இப்படிப்பட்ட



போலீஸ் இலாகாவினரின் மனப்பான்மையை மாற்றுவதற்காக கருத்துக்களைக் கூறுவதற்கு இது ஒரு முக்கிய பிரச்னை. இது குறித்து இந்த அவையில் விவாதிக்க வேண்டும். ஆகவே, இது அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னையாக இருப்பதால் இந்த அவையின் பிற நிகழ்ச்சிகளை ஒத்திவைத்து இது குறித்து விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு கட்சிக்கு ஒருவர் பேசினல் போதும் என்று கருதுகிறேன். கனம் உறுப்பினர் கோதண்டராமன் அவர்கள் தங்கள் கட்சிக்காரர் சொன்னது போதும் என்று கருதுவார்கள் என்று நம்புகிறேன். நேரம் இல்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : அவர் பேசிய கருத்துக்களை நான் பேசப் போவது இல்லை. இரண்டு நிமிடத்தில் என் கருத்தை முடித்துக்கொள்கிறேன். ஐயா, அந்த நெல்லிக்குப்பம்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கோதண்டராமன் சார், ஒரு கட்சிக்கு ஒருவர் சொன்ஞல் போதும். அதற்கு ஒத்துழைப்பு கொடுத்தால் நல்லது. இன்னும் 7-8 பேர் இதில் கலந்து கொள்ள வேண்டும். என்னேடு கொஞ்சம் ஒத்துழையுங்கள்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : இந்த அவையில் அதுதான் மரபு. பல்வேறு உறுப்பினர்கள் ஒரு கட்சியைச் சேர்ந்தவர்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருந்தால், அந்தக் கட்சி முடிவு எடுக்கிறபடி ஒரு உறுப்பினர் பேசுவார். அந்த மரபு மீறக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு கோதண்டராமன் ஒத்துழைப்புக் கொடுத்தால் நல்லது. கொஞ்சம் ஒத்துழையுங்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : அந்த மரபை நீங்களே உடைத்திருக்கிறீர்களே.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, பேரவைத் தலைவர் மீது எந்தவிதமான குற்றச்சாட்டும் இங்கே சொல்லக் கூடாது. அவர், மரபை நீங்களே உடைத்து இருக்கிறீர்களே என்று சொன்னதை திரும்பப் பெற வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கனம் உறுப்பினர் திரு. கோதண்டராமன் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். அன்று ஒரு கல்லூரி அல்ல, பல கல்லூரிகளைப் பற்றி பல பேர் பேச வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். இங்கே எல்லாக் கல்லூரிகளைப் பற்றியும் விரிவாகச் சொல்ல வேண்டும் என்பதற்

காக அன்றைக்கு அனுமதி வழங்கப்பட்டது. அதே முறையைத்தான் எப்போதும் கடைப்பிடிக்க வேண்டும் என்று கனம் உறுப்பினர் கருத வேண்டாம். ஒரு கட்சிக்கு அக்கட்சியைச் சேர்ந்த ஒருவர் பேசினால் போதும். தயவு செய்து என்னோடு ஒத்துழையுங்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : நான் ஒத்துழைக்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, நெல்லிக்குப்பத்தில் நடந்த சம்பவத்தைப் பற்றி நான் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்து இருக்கிறேன். நான் சொல்ல விரும்புவது எல்லாம், மொத்தமாக போலீஸ் இலாகாவை குற்றஞ்சாட்டி சொல்ல விரும்பவில்லை. சில அதிகாரிகள் ஓவர் ஜெலஸ்ஸாக இருந்து நடவடிக்கைகள் எடுப்பதால் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடந்து விடுகின்றன. டார்சர் செல் என்ற வார்த்தையை நெருக்கடி நேரத்தில், அவசர கால சட்டத்தின் உதவியோடு செய்யப்பட்ட கொடுமைகள் காரணமாகக் கேள்விப்பட்டோம். சமீப காலத்தில் இதுபோன்று காவலர் நிலையத்தில் விசாரணைக்குக் கொண்டு வருகிற குற்றவாளிகள் இறந்துவிடுவதும், அவைகளுக்குச் சமாதானம் சொல்கிறோம் என்று போலீசார் வாக்குமூலம் தருவதும் வாடிக்கையாக இருக்கிறது. அரசாங்கம் இதுபோன்ற நிலைமை ஏற்படக் கூடாது என்ற கொள்கை உடையது என்று நம்புகிறேன். ஆகவே, அரசாங்கத்தின் கொள்கையை போலீஸ் அதிகாரிகளுக்குச் சொல்வதற்கும், தெளிவுபடுத்துவதற்கும், தவறாக நடக்கிற போலீஸ் அதிகாரிகளைச் திருத்துவதற்கும் கூடுதலான விவரங்களைச் சொல்ல வேண்டும் என்பதற்காக இந்த அவையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சொல்ல விரும்புவது, இதுபோன்ற சம்பவங்கள் நடக்கும்போது ஆர்.டி.ஓ. என்கொயரி மட்டும் போதாது. உயர்மட்ட அதிகாரிகள், ரெவின்யூ போர்டு மெம்பர், அல்லது நீதிபதி தலைமையில் விசாரணை நடத்த வேண்டும் என்றும், அப்போதுதான் உண்மையைக் கண்டுபிடிக்க முடியும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். காவல் துறைக்கு அரசாங்கத்தின் கொள்கையைத் தெளிவுபடுத்த இந்தச் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு இந்தச் சபையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, இதுபோன்ற நிகழ்ச்சி நமது மாநிலத்தில் இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு இரண்டாவது தடவையாக நிகழ்கிறது. இதனுடைய முழு விவரங்களும் நமக்குத் தெரியவில்லை. அரசாங்கம் அந்த விவரங்களைத் தர இருக்கிறது. ஆனால் நான் இந்தச் சந்தர்ப்பத்தில் ஒன்றைக் கூற விரும்புகிறேன். இந்த நிகழ்ச்சியைப் பொறுத்தமட்டில் விபரீதமான பல செய்திகள் பத்திரி



கையில் வந்து இருக்கிறது. போலீஸ் தரப்பில் இருந்து கொடுக்கிற செய்திகள் கான்டிரடிக்டரியாக இருக்கின்றன. சிதம்பரம் சாவிற்கு அவன் பூச்சி மருந்து சாப்பிட்டான், ஆகவே, அவன் செத்து விட்டான் என்று செய்திகள் வந்தன. ஆனால் இந்தக் காரியத்தைப் பொறுத்தவரையில் உண்மைநிலை என்ன என்று சொல்வதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. ஆகவே இது மிகவும் முக்கியமான காரியம். அந்த அடிப்படையில் இந்த அவையில் இதுகுறித்து விவாதிக்க அவகாசம் அளிக்கும் வகையில் பிற நிகழ்ச்சிகளை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லிக்குப்பத்தில் நடந்த இந்தச் சம்பவம் மிகவும் துர்பாக்கியமானது. சிதம்பரம் என்கிற அந்தக் கைதி லாக்கப்பிலே இறந்துவிட்டாரா அல்லது தற்கொலை செய்து கொண்டாரா என்பது இப்போதுள்ள பிரச்சினை. இந்தப் பிரச்சினைக்குள் நான் போக விரும்பவில்லை. லாக்கப்பில் அவர் அடித்துக் கொல்லப்பட்டார் என்பது மிகவும் வருத்தத்திற்குரிய ஒன்றாகும், அதே நேரத்திலே லாக்கப்பிலே இருக்கும்போது அடித்துக் கொல்லப்படவில்லை, தற்கொலை செய்து கொண்டார் என்று போலீசார் சொன்னால் அதுவும் கவலைக்குரிய ஒன்றாகும். பொதுவாக லாக்கப்பில் தற்கொலை செய்வது என்பது சாத்தியமில்லை. ஒரு கைதியை லாக்கப்பிலே போடுவதற்கு முன் சர்ச் செய்ய வேண்டும், சர்ச் செய்து அந்தக் கைதி என்னென்ன பொருட்கள் வைத்திருந்தார் என்று சர்ச் செய்து அதை எல்லாம் சர்ச் ரிஜிஸ்டர் என்று வைத்திருப்பார்கள் அதிலே பதிவு செய்ய வேண்டும். லாக்கப்பிலே போடுவதற்கு முன்பு அவரிடம் விஷமருந்து இருக்குமானால் போலீசார் அதை எடுத்து ரிஜிஸ்டர் செய்திருப்பார்கள். இந்நிலையில் எந்த வகையில் எடுத்துக் கொண்டாலும் போலீசாருடைய பொறுப்பு இதிலே இருக்கிறது. இது தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. மனித உயிர்கள் மட்டுமல்லாமல் மனித உரிமைகளோடும் விளையாடக்கூடிய நிலைமை இருக்கிறது. அதற்கு போலீசார் பொறுப்பேற்றுக்கொண்டிருக்கிறார்கள். அந்தத் துறையின் நன் மதிப்பையும் நல்ல பெயரையும் காப்பாற்றக்கூடிய கடமை நமக்குத்தான் இருக்கிறது. அவர்கள் தவறு செய்தால் அதைச் சுட்டிக்காட்ட வேண்டிய பொறுப்பு இந்த அவைக்கு இருக்கிறது. ஆகவே இந்தப் பேரவையின் நடவடிக்கைகளை ஒத்திவைத்து விவாதிப்பதால் அது பொது நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்பதால் இந்தப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க அனுமதியளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் என்னும் நபர், சென்னையில் தேனாம்பேட்டை காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட திருட்டு வழக்கு ஒன்றின் சம்பந்தமாகத் தேடப்பட்டு வந்தவர். அவர் தென்னாற்காடு மாவட்டம் நெல்லிக்குப்பம் அருகிலு

ள்ள சுந்தரவாண்டி என்ற கிராமத்திலிருப்பதாகத் தகவல்
கிடைத்தது. அதன்பேரில் தேனும்பேட்டை காவல் நிலையத்தைச்
சேர்ந்த காவலர் நடராஜன் மேற்கூறிய சிதம்பரத்தின் உறவினர்
திரு செல்லவேலு என்பவரின் உதவியுடன் சுந்தரவாண்டி கிராமத்
திற்குச் சென்று 31—7—1977 அன்று கைது செய்து நெல்லிக்
குப்பத்திற்கு அழைத்து வந்தார். வரும் வழியில் மேல்பாதி
என்னும் கிராமத்தில் தாகமாக இருப்பதாகக் கூறி உறவினர்
ஒருவரது இல்லத்தில் தண்ணீர் அருந்தியதாகத் தெரிகிறது.
அப்பொழுது காவலர் நடராஜனுடன் சென்றிருந்த சுந்தர
வாண்டி கிராமத்தைச் சேர்ந்த சக்கரபாணி என்பவர் சிதம்பரம்
தண்ணீர் குடிக்கையில் ஏதோ சில விதைகளைக் கீழே துப்பியதாகக்
கூறி அவைகளை காவலர் நடராஜனிடம் கொடுத்தார். நடராஜன்
இதுபற்றி சிதம்பரத்திடம் கேட்டபோது, தனக்கு உடல்நலம்
சரியில்லையென்பதற்காக நெல்லிக்குப்பம் மருத்துவரிடம் வாங்
கிய மாத்திரைகளைத்தான் சாப்பிட்டதாகக் கூறினார் என்று
தெரிகிறது. பின்பு அவர்கள் நெல்லிக்குப்பம் வந்தடைந்தபோது
மீண்டும் தாகமாக இருப்பதாக சிதம்பரம் கூறினார். அவருக்கு
காவலர் நடராஜன் சோடா வாங்கிக் கொடுத்தார். அதைக்
குடித்த பின்பு அவர் கை கால்கள் வலிப்பு வந்ததுபோல்
துடித்தார். உடன் காவலர் ஒரு ஜட்காவில் நகர் மன்ற மருத்துவ
மனைக்கு அவரை எடுத்துச் சென்றார். அங்கிருந்த மருத்துவர்,
சிதம்பரம் மரணமடைந்துவிட்டதாகக் கூறினார். இதற்குள்
செய்தியறிந்து மக்கள் கூட்டமாகக் கூடிவிட்டனர். இவ்விவரம்
நெல்லிக்குப்பம் காவல் நிலையத்திற்குத் தெரியப்படுத்தப்பட்டது.
விருத்தாசலம் கோட்டாட்சித் தலைவர் பிரேத விசாரணை நடத்தும்
படி கோரப்பட்டார். ஆனால் அங்கு கூடியிருந்த மக்கள் விசாரணை
நடத்த இயலாமல் தடுத்தனர். விசாரணைக்கு ஒத்துழைக்கும்படி
மக்கள் கேட்டுக்கொள்ளப்பட்டனர். உள்ளூர் பிரமுகர்கள்
திருவாளர்கள் வீரப்பன், நடராஜன் ஆகியோர் கூடியிருந்த
மக்களை அமைதியாக இருக்கும்படியும், கலைந்துசெல்லும்படியும்
கேட்டுக்கொண்டனர். பிரேத விசாரணை நடக்கும்போதே
நிலைமை கட்டுக்கடங்காமலிருந்தது. பிரேத விசாரணை முடிந்தது.
பிரேதப் பரிசோதனைக்காக உடலை கடலூர் மருத்துவ
மனைக்கு அனுப்ப முயற்சித்தபோது அங்கு கூடியிருந்த கூட்டம்
வன்முறையில் ஈடுபட்டது. பிண ஊர்தியைத் தடுத்தனர். கல்
லெறியவும் செய்தனர். மாவட்ட கண்காணிப்பாளர், இரண்டு
துணை கண்காணிப்பாளர்கள், இரண்டு ஆய்வாளர்கள் உட்பட
சுமார் 20 காவலர்கள் கல்வீச்சால் காயமுற்றனர்.

(முற்பகல் 9·40)

பொதுமக்களிலும் இருவர் கல்வீச்சால் காயமுற்றனர். நிலைமை
மேலும் கட்டுக் கடங்காமல் போகவே, கண்ணீர்புகை பிரயோகம்
செய்யப்பட்டது. வன்முறையில் ஈடுபட்ட 12 பேர்கள் கைது
செய்யப்பட்டு அவர்கள் மீது ஒரு வழக்கும் பதிவு செய்யப்பட்டது.
முன்னெச்சரிக்கையாக காவல்துறைச் சட்டம் 30 (2) பிரிவின்கீழ்



நெல்லிக்குப்பம் காவல் நிலைய அதிகாரத்திற்குட்பட்ட பகுதிகளில் 2 வார காலத்திற்கு தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. நிலைமை தற்போது திருப்திகரமாயுள்ளது.

பிரேதப் பரிசோதனையின்போது, நெல்லிக்குப்பத்தைச் சேர்ந்த மூவர் பஞ்சாயத்தார்களாக இருந்தனர். அவர்கள் மரணமடைந்த சிதம்பரத்தை தங்களுக்குத் தெரியாது என்றும் அவர் போலீசாரால் அடிக்கப்பட்டு மரணமடைந்திருக்கலாம் என்றும் கூறினார்கள். நெல்லிக்குப்பம் நகர் மன்ற மருத்துவ மனையைச் சேர்ந்த மருத்துவ அதிகாரி, தான் சிதம்பரத்தை பரிசோதித்தபோது அவர் மரணமடைந்திருந்தார் என்றும் வெளிக் காயங்கள் எதுவும் இல்லை என்றும் சாட்சியமளித்தார்.

கடலூர் அரசு பொது மருத்துவ மனையில் 1—8—1977 அன்று பிரேதப் பரிசோதனை நடைபெற்றது பிரேதப் பரிசோதனை அறிக்கையில், வாய் வழியாகவும் மூக்கு வழியாகவும் இரத்தம் கசிந்திருந்ததாகவும் கண்கள் சிவந்திருந்ததாகவும் கழுத்தருகே வடுக்கள் இருந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. கழுத்து நெரிக்கப்பட்டதால் அவர் மரணமடைந்திருக்கலாம் என்றும் கூறப்பட்டுள்ளது. ஆகவே மருத்துவ அதிகாரிகளின் முடிவுகள் ஒன்றுக்கொன்று முரணாக உள்ளன. உண்மையை அறிவதற்காக உடற்கூறுகளை இரசாயனப் பரிசோதனைக்கு அனுப்புவதற்கான ஏற்பாடுகள் உடனே செய்யப்பட்டுள்ளன. இதற்கிடையில் விருத்தாசலம் கோட்டாட்சித் தலைவர் இச் சம்பவம் சம்பந்தப்பட்ட அனைவரிடமும் உண்மை நிலையினை அறியும் பொருட்டு விசாரணைகள் நடத்தி வருகிறார். இரசாயனப் பரிசோதனை முடிவுகள் கிடைத்தவுடன் தனது முழுமையான விசாரணை அறிக்கையை அவர் அரசுக்கு அனுப்பி வைப்பார். அவ்வறிக்கையின்பேரில் அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

இதில் சம்பந்தப்பட்டுள்ள காவலர் நடராஜன் சென்னை போலீஸ் கமிஷனரால் 1—8—77 முதல் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார். விசாரணை அறிக்கை கிடைத்த பின்னர் மேல் நடவடிக்கை எடுக்கப்படும். விசாரணையை விரைவில் முடிக்கும்படி மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். ஆகவே இந்நிகழ்ச்சி சம்பந்தமாக எல்லாவித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாலும் மேற்கொண்டும் விசாரணை அறிக்கையின் பேரில் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற உறுதிமொழியுடனும் சபையின் மற்ற நடவடிக்கைகளை ஒத்தி வைக்கவேண்டிய அவசியமில்லை என்று கூறிக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, கனம் முதலமைச்சரவர்கள் கொடுத்த விளக்கத்தில் மருத்துவ அதிகாரிகளின் அறிக்கை ஒன்றுக்கொன்று முரணாக இருப்பதாகச் சொன்னார்கள். அவ்வாறு இருப்பதால் ஆர். டி. ஓ. அளவில் விசாரணை செய்தால் நியாயம் கிடைக்காது என்பதால் ரெவின்யூ

போர்டு உறுப்பினரைக் கொண்டு விசாரணை செய்ய ஏற்பாடு செய்வார்களா? ஏனென்றால் இதில் டாக்டர்கள் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள், போலீஸ் அதிகாரிகள் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் எனவே லோக்கல் ஆர். டி. ஓ. விற்கு அவ்வளவு செல்வாக்கு இருக்குமா என்பதில் சந்தேகமாக இருக்கிறது. எனவே ரெவின்யூ போர்டு உறுப்பினரைக் கொண்டு உண்மையைக் கண்டறிய முதலமைச்சரவர்கள் முன்வருவார்களா?

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :</u> ஏற்றுக்கொள்கிறேன்.

<u>திரு. சி. கோவிந்தராசன் :</u> தலைவரவர்களே, நான் பேசும் பொழுதே குறிப்பிட்டேன். ஒருவரைக் கைது செய்துவிட்ட பிறகு தண்ணீர் குடிக்க விட்டதாகவும் ......

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> தயவுசெய்து நீங்கள் இதற்கு முன் உறுப்பினர் சொன்ன யோசனையைப் போல் கூறினால் முதலமைச்சருக்கு உதவிகரமாக இருக்கும். மறுபடியும் வழக்கிற்குள் போவதில் பிரயோஜனம் இல்லை.

<u>திரு. சி. கோவிந்தராசன் ;</u> தலைவரவர்களே, முன்னுக்குப் பின் முரணான கருத்துக்கள் மருத்துவர்கள் மத்தியில் இருப்பதாகக் கூறுகிறார்கள். பாரபட்சமான முறையில் இல்லாமல் இருக்க ரெவின்யூ போர்டு உறுப்பினரைக் கொண்டே விசாரணையை கட்டாயம் நடத்த வேண்டுமென்று முதலமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்;

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் ஒத்துக்கொண்டார்களே, பிறகு ஏன் கேள்வி எழுப்பிக்கொண்டு நேரத்தை வீணாக்குகிறீர்கள்.

<u>திரு. எம். ஏ. லத்தீப் :</u> தலைவரவர்களே, முதலமைச்சரவர்களின் பதிலிலிருந்து ஒரு கைதி போலீஸ் கஸ்டடியில் இருக்கின்ற பொழுது ஏதோ சாப்பிட்டார், வாந்தி எடுத்தார் என்ற குறிப்பு சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி போலீஸ்காரர்கள்........

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> விசாரணை யோசனையை முதலமைச்சரவர்கள் ஏற்றுக் கொண்டார்கள்.

<u>திரு. எம். ஏ. லத்தீப் :</u> அப்படி கஸ்டடியில் எடுத்து வரும் பொழுது யார் இருந்தார்கள், அவர்கள் மீது டிபார்ட்மெண்டல் ஆக்ஷன் எடுக்கப்படுமா ?

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> வழக்கிற்குள் தயவு செய்து போகாதீர்கள். அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். அதோடு விட்டுவிடுங்கள்.



மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து, இத்தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய தேவையில்லை என்ற காரணத்தினால் இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

## <u>4. கவன ஈர்ப்பு.</u>

<u>(அ) கீழ் பவானி ஆயக்கட்டிற்கு தண்ணீர் விடப்படாததால் விவசாயம் பாதிக்கப்படுவதும், அதனால் தண்ணீர் விட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய அவசியமும் குறித்து.</u>

<u>திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :</u> தலைவர் அவர்களே, 41-வது விதியின் கீழ் கீழ் பவானி ஆயக்கட்டிற்கு குறித்த காலத்தில் தண்ணீர் சரிவர விடப்படாததால் விவசாயம் பாதிக்கப்படுவதும் அதனால் தண்ணீர் விட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய அவசியமும் குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அடுத்து, திருமதி சுப்புலட்சுமி. அவர்கள் இருக்கையில் இல்லை. அடுத்து, திரு. சு.முத்துசாமி.

<u>திரு. சு. முத்துசாமி :</u> தலைவர் அவர்களே, 41-வது விதியின் கீழ் கீழ் பவானி ஆயக்கட்டிற்கு குறித்த காலத்தில் தண்ணீர் சரிவர விடப்படாததால் விவசாயம் பாதிக்கப்படுவதும் அதனால் தண்ணீர் விட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய அவசியமும் குறித்தும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

<u>திரு. ஆ. நடராசன் :</u> தலைவரவர்களே, இந்தப் பொருள் பற்றி, ஏற்கனவே 25-ம் தேதி கடிதம் எழுதியிருந்தேன். அதற்கு நிதிநிலை அறிக்கையிலே பேசுங்கள் என்று சொல்லி இருந்தார்கள்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திருவாளர்கள் ஆர். கே. எஸ். தண்டபாணி, துரை ராமசாமி ஆகியோரும் இதே பொருள் குறித்து, 41-வது விதியின்கீழ் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார்கள். அவர்களுடைய பெயர்களும் சேர்த்துக்கொள்ளப்படும். அமைச்சரவர்கள் பதில் சொன்ன பிறகு, வேண்டுமானால் கேள்விகள் கேட்கலாம்.

திரு. ஆ. நடராசனுடைய பெயரையும் சேர்த்து விட்டேன்; வேண்டுமானால், ஏதாவது இருந்தால் கேளுங்கள்.

* திரு. மு. கருணாநிதி : ஒரு ஒழுங்குப் பிரச்சினையை நான் எழுப்ப விரும்புகிறேன். இதே, கீழ் பவானி பாசன வாய்க்காலில் நீர் விடுவது சம்பந்தமாக சட்டமன்றப் பேரவையின் 41-வது விதியின்கீழ் அறிவிப்பு என்ற தலைப்பில் மாண்புமிகு உறுப்பினர் பேரூர் தொகுதியைச் சேர்ந்த நடராசன் அவர்கள் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தை அளித்திருந்தார். அதற்கு செயலாளரிடமிருந்து வந்துள்ள பதிலில் மேற்கண்டுள்ள பொருள்பற்றி நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் அல்லது மானியக் கோரிக்கைமீது பேச வாய்ப்பு இருப்பதால், சட்டமன்ற விதிகளின் 41-வது விதியின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள தங்களது அறிவிப்பிற்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அனுமதி மறுத்துள்ளார் என்று அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஆனால் அதே விஷயம் பற்றி மற்ற உறுப்பினர்களுக்கு இப்பொழுது வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. அதை பாரபட்சமாக நான் கருதவில்லை. தவறு நடந்திருக்கிறது, திருத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கவன ஈர்ப்புத் தீர்மானம், ஒத்திவைப்புத் தீர்மானம் போன்றவற்றிற்கு காலையில் நோட்டீஸ் கொடுக்கும்போது, இந்தமாதிரி நிலை ஏற்படாதிருக்க செயலாளருக்கும் எல்லோருக்கும் அறிவுரை தந்திருக்கிறேன். எந்த ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தையும், ஒத்திவைப்புத் தீர்மானத்தையும் நன்றாக வரிசைப்படுத்தி, எதெதெற்கு அனுமதி கிடைத்திருக்கிறது, மறுக்கப்பட்டிருக்கிறது என்று என்னுடைய பார்வைக்கு வைக்க வேண்டுமென்று கூறி இருக்கிறேன். இப்படிப்பட்ட தவறுகள் இனி நடைபெறாதபடி நான் பார்த்துக் கொள்வேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, பவானிசாகரிலிருந்து முதல் சுற்றுத் தண்ணீர் இயல்பாக ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் திங்கள் 15-ம் தேதியில் விடப்படும். முதல் சுற்றுத் தண்ணீர் விட சுமார் 24 ஆயிரம் மிலியன் கன அடி தண்ணீர் தேவைப்படும். இந்த நீர்த்தேக்கத்தில் சுமார் 20 ஆயிரம் மிலியன் கன அடி தண்ணீர் இருப்பு இருக்கும்போதுதான் இயல்பாக விவசாயத்திற்காகத் தண்ணீர் விடப்படும். தற்போதைய இருப்பு 8 ஆயிரம் மிலியன் கன அடி தண்ணீர். தென்மேற்கு பருவ மழை பவானியின் நீர் பிடிப்பு பகுதியில் தாமதித்து பெய்வதால் நீர்த்தேக்கத்தில் நீர் வரவு அண்மைக் காலம் வரையில் மிகக் குறைவாக இருப்பினும் கடந்த சில நாட்களாக நீர் வரவில் கணிசமான முன்னேற்றம் காணப்படுகிறது. மேலும் தண்ணீர் வருவதற்கான அறிகுறிகள் ஊக்கமூட்டுவதாக இருக்கின்றன. தண்ணீர் வரத்து நிலைமை மிகவும் உன்னிப்பாகக் கவனிக்கப்பட்டு வருகிறது. இப்போதைய போக்கு தொடருமானால் நீர்த்தேக்கத்தை திட்டமிட்டபடி ஆகஸ்ட் 15-ம் தேதியிலேயே திறந்து விட இயலும்.





திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பொதுப்பணித் துறை அமைச்சரவர்கள் சொன்னார்கள், ஆகஸ்ட் 15-ம் தேதி வாக்கிலே தண்ணீர் விடப்படலாம் என்று கருத்துத் தெரிவிக்கிறார்கள். பொதுவாக, விவசாயத்திற்குத் தண்ணீர் திறந்து விடும்போது, முன் கூட்டியே 15 நாள், 20 நாட்களுக்கு முன்னாலேயே பத்திரிகையிலே செய்தி கொடுத்து அறிவிப்பது வழக்கம். அதுபோல், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரை, ரேடியோ மூலமும், பத்திரிகை செய்தி மூலமும், அரசாங்கக் குறிப்பு மூலமும் தண்ணீர் திறந்து விடப்படுவதற்கு 15 நாட்களுக்கு முன்னதாகவே நோட்டீஸ் என்ற முறையிலே அறிவிப்பு கொடுக்கப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானமே போதுமானது.

(ஆ) பூம்புகாரில் ஏற்பட்டுள்ள கடலரிப்பால் அங்குள்ள கட்டடங்கள் பாழ்பட்டுப் போகாமல் தடுக்க தடுப்புச் சுவர் கட்டுவது குறித்து.

திரு. எஸ். கணேசன் : தலைவரவர்களே, 41-வது விதியின் கீழ் பூம்புகாரில் ஏற்பட்டுள்ள கடல் அரிப்பால் அங்கு கட்டப்பட்டுள்ள அறிஞர் அண்ணா சுற்றுலா மாளிகை, சிலப்பதிகார கலைக் கூடம், நெடுங்கல் மன்றம், 400-க்கும் மேற்பட்ட மீனவர் குடியிருப்புகள் கடல் அரிப்பால் பாழ்பட்டுப் போகாமல் தடுத்திட தடுப்புச் சுவர் கட்டுவது குறித்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, பூம்புகாரில் ஏற்பட்டுள்ள கடலரிப்பு பிரச்சனையைப் பரிசீலிப்பதற்கென இப்பகுதியின் நீர், மற்றும் நில அமைப்பு, கடற்கரையின் மாறுபாடுகள், காற்று, அலை மற்றும் அலை ஏற்றங்கள் ஆகியவற்றினைக் குறித்து திட்டவட்டமாக ஆய்வு செய்து விவரங்களைச் சேகரித்திட அரசு ரூ. 15,000 செலவு செய்ய 1976 சனவரி திங்களில் ஒப்புதலளித்துள்ளது. தல ஆய்வுகள் நடந்தேறி வருகின்றன. அவற்றின் முடிவுகள் தெரிந்தபின் அதனடிப்படையில் கடலரிப்புத் தடுப்புக் கட்டுமானங்கள் அமைப்பதற்கான திட்டங்கள் தீட்டப்படும்.

[முற்பகல் 9-[illegible]0]

திரு. எஸ். கணேசன் : கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில் மீனவர்கள் துயரைத் துடைப்பதற்காகவும், இலக்கியச் செல்வங்களைப் பாதுகாப்பதற்காகவும் ஒரு விரிவான திட்டம் ஆய்வில் இருந்ததே, அந்தத் திட்டம் மீண்டும் செயல்படுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, பூம்புகாரைப் பொறுத்தவரையில், அந்தக் கடலோரப் பகுதியிலே எவ்வளவு செலவாகும் என்பது குறித்து மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. அது வந்த பின் முடிவெடுக்கப்படும். பொதுவாகவே, கிழக்குக் கடலோரப் பகுதிகளில் இதேபோல கடல் அரிப்பினால் பாதகம் ஏற்படுகிறது. அவற்றை எல்லாம் தடுக்கின்ற வகையில் எல்லா இடங்களுக்கும் சேர்த்து ஒரு சிறப்பான திட்டம் வகுக்கப்படுவதற்கு இந்த அரசு முடிவு எடுத்திருக்கிறது.

## (5) 1977-78 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1977-78 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம். இப்போது 3 மணி 40 நிமிடம் இருக்கிறது. அதற்குள் கனம் உறுப்பினர்கள், திரு. மாரிமுத்து, எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள், அவை முன்னவர் அவர்கள் ஆகியோர் பேச வேண்டும். திரு. மாரிமுத்து அவர்கள் சுருக்கமாக எவ்வளவு நேரத்தில் முடித்துக் கொள்வார்கள் என்று சொன்னால் நன்றாக இருக்கும்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : நான் தங்களிடம் ஒரு மணி நேரம் வேண்டுமென்று கேட்டிருக்கிறேன். அதற்குள் எவ்வளவு சீக்கிரம் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு மணி நேரம் தாராளமாக எடுத்துக் கொள்ளுங்கள். அதற்கு மேல் போகாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

## (6) தகவல் கோரல்.

### முதலமைச்சர் மகாநாட்டின் முடிவுகள்குறித்து.

திரு. ஜே. ஜேம்ஸ் : பாயின்ட் ஆப் இன்பர்மேஷன், சார் நேற்றைய தினம் நான் தங்களிடம் கேட்டதற்கு மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் உடல்நிலை சரியில்லை, ஆகவே டெல்லியில் நடந்த காரியங்கள் பற்றி நாளைய தினம் இந்த சட்டமன்றத்திலே அறிவிப்பார்கள் என்று கூறியிருந்தீர்கள் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அறிவிப்பார்கள் என்று சொல்லவில்லை. அவர்களைக் கேட்டுத் தகவல் இருந்தால் தெரிவிப்பார் என்று சொன்னேன்.





திரு. ஜே. ஜேம்ஸ் : அவர்களைக் கேட்டுத் தகவல் இருந்தால் தெரிவிப்பார்கள் என்று சொன்னீர்கள். இன்றைய தினம் அவையில் வந்திருக்கிறார்கள். அவர் டெல்லியிலே சென்று முதலமைச்சர் மாநாட்டில் கலந்து கொண்டதன் சம்பந்தமாக, அங்கே என்னென்ன முடிவுகள் எடுக்கப்பட்டன என்பதை, இந்த அவைக்கு முதலமைச்சர் அறிவிப்பாரா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : ஏற்கனவே ஏடுகளில் வெளியிடப்பட்டுள்ளன.

* திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, முதலமைச்சர் சொல்லியதிலிருந்து ஒரு சிறு பிரச்னை எழுகிறது. அது பிரச்னையாக இருந்தால் நீங்கள் தீர்ப்பு கூறுங்கள். சட்டமன்றம் கூடி இருக்கும்போது ஒரு முதலமைச்சர் அவர்களுடைய கருத்தும் அரசாங்கத்தின் கருத்தும் ஏடுகளில் வந்திருப்பதைப் பார்த்துக் கொள்ளலாம் என்று சொல்வது சட்டமன்றத்தின் முதல் உரிமைக்கு மாறுபட்ட ஒன்று. எனவே, சாதாரணமாக, முதலமைச்சர் அரசாங்கத்தின் சார்பாகக் கூறுவதை சட்டமன்றத்திற்குச் சொல்லிவிட்டுதான் ஏடுகளுக்கு சொல்ல வேண்டுமென்று ஒரு மரபு இருக்கிறது. ஏடுகளிலே வந்திருந்தாலும், சட்டமன்றத்திற்கு அதனைச் சொல்ல முதலமைச்சர் முன்வருவாரா ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : அத்தகைய அவசியம் ஏற்பட்டால் தெரிவிப்பேன்.

## (6) 1977—78-ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் மீது விவாதம்—தொடர்ச்சி.

* திரு. ஏ. ஆர். மாரிமுத்து : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்த அவையிலே மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களால் கொடுக்கப்பட்டிருக்கும் நிதி நிலை அறிக்கையின் பேரிலே என்னுடைய கருத்துக்களைச் சொல்ல நான் முன் வந்துள்ளேன்.

தலைவர் அவர்களே, இந்த நிதி நிலை அறிக்கை 30 கோடி ரூபாய் துண்டு விழக்கூடிய ஒரு நிதி நிலை அறிக்கையாகக் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த 30 கோடி ரூபாயையும் எப்படிச் சரிக் கட்ட முடியும் என்பது பற்றி நாம் ஆலோசிக்கக் கடமைப் பட்டிருக்கிறோம். வருவாய் தரப்பிலே, 30 கோடி ரூபாய் துண்டு விழுவது ஒரு பக்கம் இருந்தாலும் ஒட்டுமொத்தமாக உள்ள நிதி நிலையிலே 18·88 கோடி ரூபாய் துண்டு விழுவதாகவும் அறிவித்திருக்கிறார்கள். வருவாய்த் துறையிலே 30 கோடி துண்டுவிழுந்தால் கூட ஒட்டு மொத்தமான நிதிநிலையிலே நமக்குத் துண்டு விழாமல் இருக்குமானால் அது அரசுக்கு அதிக சிரமம் கொடுக்காத ஒன்றாக இருந்து இருக்க முடியும். ஆனால் வருவாய்த் துறையிலே துண்டு

விழுந்து ஒட்டு மொத்த நிதிநிலையிலும் துண்டு விழுமானால் நாம் வருஷ முடிவிற்குள்ளாக அரசு எடுத்த திட்டங்களை, அரசு அறிவித்த திட்டங்களை நிறைவேற்ற முடியுமா? அதற்கு ஏதாவது சங்கடம் வருகிறதா என்பதை ஆலோசனை செய்து இருக்க வேண்டும்.

இரண்டு விஷயங்களை நாம் உன்னிப்பாகக் கவனிக்கவேண்டும். முதலமைச்சர்கள் மாநாட்டிலே நிதிக் கட்டுப்பாட்டை தளர்த்தி விடக் கூடாது என்று அறிவித்து இருக்கிறார்கள். அது சம்பந்தமாக ரிசர்வ் பாங்கிற்கு அறிவிப்புக் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அப்படி அறிவிப்பு கொடுக்கப்பட்டு இருக்கிற காரணத்தால் நாம் ஓவர் டிராப்ட் ரிசர்வ் பாங்கிலிருந்து வாங்குவது சிரமமாக இருக்கும். ஆகையால் நான் இதை ஒரு குறிப்பாகத் தான் சொல்கிறேன். எனக்குள்ள கவலையெல்லாம் நீங்கள் அறிவித்த திட்டங்கள் எதுவும் நிதிப்பற்றாக்குறை காரணத்தால் விட்டு விடக்கூடாது என்பது தான். போட்ட திட்டங்கள் அத்தனையும் நிறைவேற்றப்படவேண்டும். ஆகவே, இந்தச் சங்கடங்களை எப்படித் தீர்க்கப்போகிறீர்கள் என்பதை இப்போதே யோசனை செய்து பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஓவர் டிராப்ட் வாங்க முடியாது. இன்றுள்ள நிலையில் வரி போட முடியாது. புதிதாக மக்கள் ஆதரவு பெற்று பொறுப் பேற்று இருக்கிறீர்கள். புதிதாக வரி போட்டால் ஓரளவு மக்கள் மத்தியில் அதிருப்தி ஏற்படும். அதை நான் ஓரளவு புரிந்து கொண்டு இருக்கிறேன். இருந்தாலும் நீங்கள் கொடுத்துள்ள நிதி நிலை அறிக்கையிலே துண்டு விழுவது 30 கோடி ரூபாய்க்கு—ஒரு 4—5—6 கோடி என்றால் ஓரளவிற்குச் சமாளித்துக் கொள்ளலாம்; ஆகவே, இத்தகைய சங்கடங்களை நிதி அமைச்சர் ஆலோசிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இந்த நிதி நிலை அறிக்கையில் பிரதானமானது மூலதனச் செலவு. அந்த மூலதன செலவினத்தில் சென்ற ஆண்டை விட 3·86 குறைவாகத்தான் ஒதுக்கி இருக்கிறோம். இது அதிகரிக்கப்பட வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள். இந்தச் செலவினங்களை நாம் கணக்கில் எடுத்துப் பார்க்கிறபோது, வட்டிக்கு மாத்திரம் 73 கோடி ரூபாய் இந்த ஆண்டில் ஒதுக்கியிருக்கிறீர்கள். வட்டிக்கு 73 கோடி கொடுப்பது என்பது ரொம்பச் சிரமமான காரியம். நம்முடைய வருவாயில் பெரும்பகுதியை இது விழுங்கி விடுகிறது என்று சொன்னாலும் நாம் கடன் பெற்றதற்கு வட்டி கொடுத்துத்தான் ஆகவேண்டும். வட்டி கொடுக்காமல் நாம் கடன் எழுப்ப முடியாது என்ற நிலை இருக்கிறது. இதிலே சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு இறுதியிலே நாம் மத்திய சர்க்காருக்குக் கொடுக்க வேண்டிய கடன் 670 கோடியாக இருக்கிறது. இது இரண்டு ஆண்டுகளில் 120 கோடிக்குச் சென்று விடும். அப்படியானால் 128 கோடி ரூபாய்க்கு நாம் மத்திய அரசிலிருந்து கடன் பெற்று இருக்கிறோம். இதில் இந்த ஆண்டு





26 கோடி ரூபாய் நாம் வட்டியாகச் செலுத்த வேண்டியிருக்கிறது. முன்பு வாங்கியதை முதலில் செலுத்த வேண்டியிருக்கிறது. இச் சிரமங்கள் தமிழ் நாட்டுக்கு மட்டுமல்ல, எல்லா மாநிலங்களுக்கும் இருக்கிறது. இதிலே நாம் தொடர்ச்சியாகக் கடன் கொடுத்து வருகிறோம். 18·86 கோடி தான் நாம் வட்டியாகத் திரும்பி வாங்குகிறோம். வட்டி, மற்றும் பிராபிட், டிவிடென்ட் எல்லாம் சேர்ந்தே நாம் பெறுவது 18·86 கோடி தான். ஆகையால் ரெவின்யூ செலவினங்களில் இருந்து 54 கோடி ரூபாய் அதிகமாக இந்தச் செலவினங்கள் ஒதுக்க வேண்டியிருக்கிறது. இதைப் பற்றி ஆராய்ந்து அட்மினிஸ்டிரேடிவ் ரிபார்ம்ஸ் கமிஷன் ஒரு ஆலோசனை கூறி இருக்கிறது. அதாவது மத்திய சர்க்காரிலிருந்து வாங்கும் கடன்களை இரண்டு விதமாகப் பாகுபாடு செய்து இருக்கிறது.

[முற்பகல் 10–00]

ஒன்று நான்-புரொடக்டிவ் ஸ்கீம், மற்றொன்று புரொடக்டிவ் ஸ்கீம். இந்த நான்-புரொடக்டிவ்-ஆக செலவாகிற தொகையை மத்திய அரசு கடனாக இல்லாமல் மானியமாக அளிக்க வேண்டுமென்று அட்மினிஸ்ட்ரேடிவ் ரிபார்ம்ஸ் கமிஷன் முடிவெடுத்திருக்கிறது. அப்படி நாம்முடிவு எடுத்துக்கொண்டு, மத்திய சர்க்காரிடம், பைனான்ஸ் கமிஷனிடமும், பிளானிங் கமிஷனிலும் பேசுகின்றபோது நான்-புரொடக்டிவ் ஸ்கீமுக்காகக் கொடுக்கின்ற தொகை பூராவையும் மானியமாகக் கொடுக்க வேண்டுமென்று வாதாட வேண்டும். அப்படி நாம் வாதாடுகின்றபோது இதற்கு முன்னாலே கொடுக்கப்பட்ட கடனை,—புரொடக்டிவ், நான்-புரொடக்டிவ் என்று பிரித்து, பாகுபடுத்தி, நான்-புரொடக்டிவ் ஸ்கீமுக்காக முன்பு வாங்கிய தொகையையும் சேர்த்து மானியமாகக் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தினால் நம்முடைய கடன் சுமை குறையும். இல்லாவிட்டால் குறையாது. கடன் சுமையைக் குறைப்பதற்கு ஒரே வழி இதுதான். ஆகவே, இதை வற்புறுத்த வேண்டும். இதை அரசு கவனத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மதுவிலக்கால் ஏற்படுகிற இழப்பை மத்திய சர்க்கார் ஈடுகட்ட வேண்டும். பிரதம அமைச்சர் அவர்கள் கூட இத் திட்டத்தை வலியுறுத்தி இருக்கிறார்கள். நாடு பூராவும் மதுவிலக்கை நான்காண்டுகளுக்குள் கொண்டுவர வேண்டுமென்று அறிவித்திருக்கிறார்கள். இனிமேல் இதைச் செய்யக் கூடிய மாநிலங்களுக்குத் தான் இந்த உதவி உண்டு, இதை இதுவரையில் அமுல்படுத்திக்கொண்டு வந்துள்ள குஜராத், தமிழ் நாடு போன்ற மாநிலங்களுக்கு இல்லை என்ற நிலை ஏற்பட்டு விடக்கூடாது. இக் கருத்து ஏற்கெனவே வற்புறுத்தப்பட்டு வந்துள்ளது. எத்தனையோ தடவை மாநில அரசுகள் தீர்மானம் போட்டு வற்புறுத்தி வந்திருக்கிறது. மேலும் முயற்சி செய்து மாநில சர்க்கார் இதைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே மொழிப் பிரச்சினை பற்றி பேசப்பட்டது. ஆளுகின்ற கட்சி, இரு மொழிக் கொள்கையை ஆதரிக்கிறது என்று அறிவித்திருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரையில், மும்மொழிக் கொள்கையை ஏற்றுக் கொண்டிருக்கிறது. அப்படி ஏற்றுக்கொண்டிருந்தாலும் கூட. பண்டிட் ஜவஹர்லால் நேரு அவர்கள் பிரதம அமைச்சராக இருந்தபோது, இந்தி பேசாத மக்களின் மீது இந்தி திணிக்கப் படாது என்ற வாக்குறுதியைக் கொடுத்திருக்கிறார்கள். இந்தி பேசாத மாநிலங்களில் உள்ள மக்கள், தாங்களாகவே விரும்பி, இந்தியை ஏற்றுக்கொள்ளும் வரையில் ஆங்கிலமே தொடர்பு மொழியாக இருக்கும், இந்தி அவர்கள் பேரில் திணிக்கப்படக் கூடாது என்ற உறுதி மொழி கொடுக்கப்பட்டிருக்கிறது. சட்டபூர்வமாகவும், பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தியை, யார் மீதும், யாரும் திணிக்கக் கூடாது என்ற திட்டவட்டமாகக் கருத்தைக் கொண்டிருக்கிறது. ஆனால் அதே நேரத்தில், நான் கேட்டுக்கொள்வேன், மும்மொழித் திட்டத்தை இங்கே இருக்கிற ஆட்சி ஏற்றுக்கொள்ளவில்லை, இரு மொழித் திட்டத்தை தான் ஏற்றுக் கொண்டிருக்கிறது என்றாலும் கூட, இந்தியை தாங்களாகவே விரும்பிப் படிக்கின்றவர்களுக்கு வசதி செய்து கொடுப்பதை நிறுத்தி விடக் கூடாது, வசதியைத் தொடர்ந்து செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆனால், இன்றைக்கு மத்தியிலே இருக்கின்ற ஜனதா அரசின் பாராளுமன்ற நடவடிக்கைகளைப் பார்த்தால், மொழிப் பிரச்சினையை சிக்கலாக்கி விடுவார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது. அங்கே, இந்தியில் தான் பதில் சொல்வேன் என்று கூறுவது விபரீத விளைவுகளை உண்டாக்கி விடுமோ என்ற ஐயத்தை உண்டாக்கி இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

மொழிப் பிரச்சினை என்பது, உணர்ச்சி வசப்படக் கூடிய ஒரு பிரச்சினை. அதை ஜாக்கிரதையாக அணுக வேண்டும். மத்திய அமைச்சர்கள் இம்மாதிரி மொழிப் பிரச்சினையை அணுகக் கூடாது. இந்தியை இந்தியா பூராவிலும் கொண்டு வந்தேயாக வேண்டுமென்ற எண்ணம் உள்ளவர்கள் ஓரிருவர் அமைச்சராக இருக்கிறார்கள். அவர்கள் உணர்ச்சி வயப்பட்டு ஒரு போக்கை கடைபிடிப்பார்களேயானால் இந்தி பேசாத மக்களுக்கு மத்திய அரசு கொடுத்த வாக்குறுதியை மீறி இந்தியை திணிக்கின்றது என்ற கருத்து நாட்டில் ஏற்பட்டால், விளைவுகள் விபரீதமாக இருக்கும் என்பதை கருத்திற்கொண்டு, அப்படி ஏற்படாமல் பார்த்துக்கொள்வது மத்திய அரசின் பொறுப்பும் கடமையுமாகும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, நாட்டின் மிகப் பெரிய பிரச்சனை, விலைவாசிப் பிரச்சனை. இந்த விலைவாசி ஏற்றத்தினாலே அடித்தளத்திலே உள்ள மக்கள், நடுத்தர மக்கள், எந்த அளவுக்குப் பாதிக்கப்படுகிறார்கள்



என்பதை நாம் ஒவ்வொருவரும் நன்றாக உணர்வோம். சுதந்திரம் பெற்ற பிறகு, முதல் ஐந்தாண்டுத் திட்டப் போட்ட பிறகும் ஒவ்வொரு திட்டம் போட்ட பிறகும், விலைவாசி ஏறி வந்ததே தவிர, இறங்கவில்லை. விலைவாசியைக் குறைப்பதற்காக அரசு எத்தனையோ நடவடிக்கைகளை எடுத்தாலும்கூட, விலைவாசியைக் குறைக்க முடியவில்லை, விலைவாசி ஏறிக்கொண்டுதான் இருந்தது. விலைவாசி ஏறிக்கொண்டே வந்ததால் ஐந்தாண்டுத் திட்டங்களைக் கூட நாம் ஒழுங்காக நிறைவேற்ற முடியவில்லை. கோடிக்கணக்கான ரூபாய் ஐந்தாண்டுத் திட்டங்களின்மீது செலவு செய்த போதிலும், எந்த ஒரு இலக்கை அடையப் போகிறோம் என்று சொன்னோமோ அந்த இலக்கை எந்தத் திட்டத்தினாலும் அடைய முடியாதபடி விலைவாசியேற்றம் அந்தத் திட்டங்களை எல்லாம் பாழாக்கியதை நாம் பார்த்தோம். அப்படிப் பாழாக்கப்பட்ட திட்டத்தினை ஒரு கட்டத்தில்தான் நாம் அடக்க முடிந்தது. ஒரு கட்டத்தில்தான் நாம் பணவீக்கத்தை ஓரளவிற்குக் குறைக்க முடிந்தது. அவசர கால நேரத்தில் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு பதுக்கல்காரர்களை, கள்ளப் பணம் வைத்திருந்தவர்களை, கள்ளக் கடத்தல்காரர்களை இவர்கள்மீது கடுமையான நடவடிக்கைகள் எடுத்து—அவர்களை உள்ளே பிடித்துவைத்து ஓரளவு விலைவாசியைக் குறைக்க முடிந்தது என்பது நிதர்சனமான உண்மை. அவசரகால நிலையினால் ஏற்பட்ட முக்கியமான பலன் பெரும் பலன் நாட்டுக்கு ஏற்பட்டது விலைவாசிக் குறைப்பு. இதை நிதர்சனமாகப் பார்த்தோம். கடும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு ஒரே ஆண்டில் 30 சதவீதம் அளவிற்கு விலைகள் குறைந்ததைப் பார்த்தோம்.

ஆனால் இன்றைய தினம் எல்லோருக்கும் விடுதலை கொடுத்து விட்டார்கள். எல்லோருக்கும் சுதந்திரம் என்று இன்று ஆட்சியில் இருக்கிற ஜனதா கட்சி அறிவித்துவிட்டது. சுதந்திரம் மக்களுக்கு வேண்டும், அரசியல் கட்சிகளுக்கு வேண்டும். இல்லை என்று யாரும் சொல்லமாட்டார்கள். அதில் யாரும் குறுக்கிடவில்லை. ஆனால் சமூக விரோதிகளுக்கு சுதந்திரம் இருக்க முடியும் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை. சமூக விரோதிகளின்மீது கடும் நடவடிக்கைகள் எடுத்து அடக்கப்பட்டாலொழிய மக்களை அந்தத் தீயசக்திகளிடமிருந்து காப்பாற்ற முடியாது. ஆகையால்தான், ஜனதாக் கட்சித் தலைவர்கள், அமைச்சர்கள் மத்தியில் பேசுகிறபோதுகூட இந்த மிசாவைப் பயன்படுத்த வேண்டுமா—இறுதியில் பயன்படுத்தப் போவதில்லை என்று அறிவித்திருந்தாலும்—என்று எண்ணிப்பார்க்கின்ற நிலைமை ஏற்பட்டது. எவ்வளவுதூரம் விலைகளை குறையுங்கள் என்று வியாபாரிகளிடம் சொன்னாலும் அவர்கள் விலைகளைக் குறைப்பதற்கு முன்வரவில்லை. ஆகவே விலைவாசி ஏறிக்கொண்டே இருக்கிறது. ஆகையினால் மக்களின் வெறுப்பை நாம் பெறக்கூடிய ஒரு சூழ்நிலை இன்றைக்கும் இருக்கிறது. ஆகையினால் எப்படியாவது கடும் நடவடிக்கைகள் எடுத்தாக வேண்டும். அதற்காக மிசா பக்கம் போகலாம் என்ற கருத்துக்கூட அங்கே பேசப்பட்டது. ஆனால் மிஸா என்ற

வார்த்தையை உபயோகிக்கக் கூடாது என்ற நிலையில்—அவர்கள் தேர்தல் காலத்தில் கொடுத்த வாக்குறுதியைக் கடைப்பிடித்தாக வேண்டும். எனவே மிஸா என்று சொல்வதை விட்டு விட்டு எப்படிப் பேசுகிறார்கள் என்றால், கைது செய்யப்பட்டவர்களை அதாவது சமூக விரோத சக்திகளை கைது செய்தால் அவர்களுக்கு ஜாமீன் கிடையாது என்று சட்டத்தைக் கெட்டிப்படுத்துவோம் என்ற முறையில் யோசிக்கிறார்கள். இதுதான் மிஸா சட்டத்திலும் இருந்தது. எந்தவிதத்திலும் கோர்ட்டுக்கு போக முடியாது என்றதொரு நிலையை ஏற்படுத்தியதால்தான் பல சமூக விரோத சக்திகளை அடக்க முடிந்தது. அந்தமாதிரியான ஒரு சட்டத்தைப் போடுதவற்கு அவர்கள் முயற்சிகள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். கடுமையான சட்டத்தை மத்திய அரசு நிறைவேற்றி சமூக விரோத சக்திகளை ஒடுக்கினால்தான் விலைவாசியைக் குறைக்கமுடியும்.

இன்று அத்தியாவசியப் பண்டங்களின் விலைகள் ஏறிக்கொண்டு போய்க்கொண்டிருக்கின்றன. தமிழ்நாட்டில் அரிசியின் விலை ஏறியிருக்கிறது என்று சொல்கிறார்கள். தஞ்சையில் ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய்க்கு மேல் போய்விட்டது என்று சொல்கிறார்கள். நான் ஊரிலிருந்து வரும்போது இரண்டு ரூபாய்க்குக் குறைவாக இருந்தது, இப்போது ஏறிவிட்டதாகச் சொல்கிறார்கள். தஞ்சை மாவட்டத்திலேயே இரண்டு ரூபாய்க்கு மேல் ஏறிவிட்டது என்றால் பாக்கி மாவட்டங்களில் அரிசி விலை எப்படி இருக்கும்? மத்திய சர்க்கார்தான் அரிசியின் விலையைக் குறைக்கவேண்டும், எமக்கு இதில் பங்கில்லை என்று மாநில சர்க்கார் இருந்து விடக் கூடாது. இருக்கவும் முடியாது. மாநில அரசுக்கும் பொறுப்பு உண்டு. கடமை உண்டு மத்திய அரசு நடவடிக்கைகள் எடுப்பது ஒருபுறமிருக்க மாநில அரசும் தீவிரமான நடவடிக்கை எடுத்து விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவதற்கு முயற்சிக்க வேண்டும். பதுக்கல்காரர்களை மத்திய சர்க்கார் வந்து பிடிக்க முடியாது நாம் தான் பிடிக்க வேண்டும். கள்ளக்கடத்தல் செய்பவர்களைப் பிடிக்க வேண்டும். கள்ளப் பணம் புழக்கத்தைத் தடுக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்று கள்ளப் பணம் புழக்கத்திற்கு வந்துவிட்டது. அதன் காரணமாக விலைவாசிகள் ஏறிக்கொண்டே போகிறது. ஆகவே இதையெல்லாம் கண்டுபிடிக்க அரசு முயற்சிக்க வேண்டும். மாநில சர்க்காரும் தன் கையில் இருக்கிற அதிகாரத்தைப் பயன்படுத்தி எந்த அளவிற்கு விலைவாசியைக் குறைக்க முடியுமோ அந்த அளவிற்கு குறைக்க முயற்சிக்க வேண்டும். அத்தியாவசியப் பண்டங்களான அரிசி, எண்ணெய், பருப்புகள் போன்ற பொருள்கள் நியாயமான விலைக்குக் கொடுக்கப்படுவதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். விலைவாசியேற்றத்தைத் தடுப்பதோடு கூட அத்தியாவசிய பண்டங்கள் நியாயமான விலைக்கு கிடைக்க ஒரு நிரந்தரமான ஏற்பாட்டை நாடு பூராவும் செய்ய வேண்டும் என்ற கருத்து பல ஆண்டுகளாகப் பேசப்பட்டு வருகிறது. ஆனால் அது பேச்சளவில் இருக்கிறதே தவிர செயல் அளவில் அதை நாம் அமலாக்கவில்லை



ஆயிரம் நியாய விலைக் கடைகள் திறக்கப்பட்டன, ஓராயிரம் நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட்டன என்று புள்ளி விவரம் சொல்கிறோமே தவிர ஒட்டு மொத்தமாக நாடு பூராவும் ஒரு திட்டத்தைப் போட்டு ஐயாயிரம் மக்கள் தொகை கொண்ட ஒரு இடத்தில் ஒரு நியாயவிலைக் கடை இருக்கும், அந்த நியாயவிலைக் கடை மூலம் அத்தியாவசியப் பண்டங்கள் கிடைக்கும் என்றதொரு நிலையை ஏற்படுத்த வேண்டும். அத்தியாவசியப் பண்டங்கள் என்ன என்ன என்று குறிப்பிடவேண்டும். அப்படிப்பட்ட ஒரு முயற்சியை அரசாங்கம் செய்யும் என்ற ஒரு உத்தரவாதத்தை அளிக்கவேண்டும். எப்படி உத்தரவாதம் அளிப்பது? விநியோகிப்பதற்கான ஏற்பாடுகள் எல்லாம் சரியாக செய்யவில்லை என்றால் மக்களுக்கு உத்தரவாதம் செய்ய முடியாது. ஆகவே இதற்கேற்ற வகையில் உத்தரவாதம் கொடுக்கக் கூடிய முறையில் அரசு கொள்கைத் திட்டங்களை வகுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 10-10]

விநியோகத்திற்கு மட்டும் ஏற்பாடு செய்தால் மட்டும் போதாது. பெருமளவில் கொள்முதல் செய்ய வேண்டுதல். அந்த வகையில் கொள்முதல் செய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்களா இல்லையா என்பது தெரியவில்லை. விரைவில் இதற்கான முடிவு எடுத்தாகவேண்டும். சென்ற ஆண்டில் கொள்முதல் செய்து வைத்திருப்பதை இப்போது விநியோகம் செய்யலாம். இதற்கு வேண்டிய அளவு அரசு ஸ்டாக்கில் இருக்கிறதா என்பது தெரியவில்லை. இவ்விதம் விநியோகம் செய்யக்கூடிய பொறுப்பை அரசு ஏற்றுக்கொள்கின்ற வகையில் அரசின் கையில் பஃபர் ஸ்டாக் இருக்கக்கூடிய முறையில், அதாவது குறைந்தது ஐந்து லட்சம் டன் அளவுக்கு தானியங்களை கொள்முதல் செய்து வைத்திருக்கவேண்டும். எப்போது கொள்முதல் செய்வது என்பது கொள்கை ரீதியாக எடுக்கப்பட வேண்டிய விஷயம். முன்பு வியாபாரிகளிடமிருந்து லெவி முறை வைத்து வாங்கி கொண்டிருந்தோம். அப்படியில்லாமல் நேரடியாக வாங்குவது என்றாலும் கூட விவசாயிகளுக்கு கட்டுப்படியான விலை கிடைக்க வேண்டும். அதை கொடுப்பதற்கு அரசு முன் வரவேண்டும். மத்திய அரசு ஒரு விலையை நிர்ணயித்துக் கொள்கின்ற முறையை கையாள்கின்றது.

குறிப்பாக உணவு தான்யங்களின் விலையை கட்டுப்படுத்துவதற்காக மத்திய அரசு 'அக்ரிகல்சர் பிரைஸ் கமிஷன்', ஏற்படுத்தி அதன் மூலமாக விலையை நிர்ணயம் செய்கிறார்கள். அவர்கள் நாடு முழுவதுக்கும் ஒட்டு மொத்தமாக நாட்டு நலன் அடிப்படையாகக் கொண்டு விலையை நிர்ணயித்து விடுகிறார்கள். விலை உயர்த்த முடியாது என்று மத்திய அரசும் சொல்லிவிடுகிறது. விலை உயர்த்த வேண்டும் என்று எத்தனையோ விவசாயிகள் டெப்டேஷன் சென்று பார்த்தார்கள். இருந்தாலும், ஒரே கொள்கையில் ஒரே விலையைத்தான் நிர்ணயிக்க முடியும் என்று சொல்லிவிட்டார்கள். அப்படி நிர்ணயித்தாலும், இங்கே மாநில அரசு அந்த விலையைவிட கொஞ்சம் அதிகமாக விலை கொடுக்க முடியுமா

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1977 ஆகஸ்ட் 3

என்று பார்த்தால் விவசாயிகளுக்குக் [illegible] பொன்ஸ் போன்ற முறையில் விலையை அதிகமாக [illegible] விவசாயிகளுக்குக் கட்டுப்படியாக இருக்கும் [illegible] நியாயமான விலையில் [illegible] [illegible] கண்மை மார்க்கும் தெரிவித்துக் கொள்கிறேன் [illegible]

இதே போன்று உணவுத் தானியங்கள் மட்டும் [illegible] விவசாயப் பொருட்கள் ஒரு புறம் இருக்க [illegible] யிலிருந்து விநியோகம் செய்யக்கூடிய பிளேடு போன்ற பொருட்களை எடுத்துக்கொண்டால், அவற்றின் மீதே இன்னின்ன விலையில் விற்கவேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நியாயமான விலையில் மக்களுக்கு பொருட்கள் கிடைக்கின்றனவா என்றால் மக்களுக்குக் கிடைக்கவில்லை என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். சர்க்கார் இதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள் என்பது தெரியவில்லை. நான் ஒரு கடையில் போய் பிளேடு வாங்கினேன். அந்த பாக்கட்டின் மீது 1.30 என்று போட்டிருந்தது. [illegible] விற்றார்கள். 1.30 என்று போட்டிருக்கிறதே [illegible] விற்கிறீர்களே என்று கேட்டதற்கு [illegible] சொல்லி விட்டார்கள். அரசாங்கம் ஏன் இது [illegible] விட்டுவைக்கின்றது என்று தெரியவில்லை. [illegible] பட்ட விலையில் நியாயமான விலையில் மக்களுக்குப் பொருட்கள் கிடைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை [illegible] வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இவ்விதம் தேவையான [illegible] வருகின்ற பொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்ய [illegible] மக்களுக்கு அத்தியாவசியமாக இருக்கின்ற பொருட்களை விநி யோகிப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, முதலமைச்சர்கள் மாநாட்டில், [illegible] பேசப்பட்டதாக பத்திரிகைச் செய்திகளிலிருந்து [illegible] மாநில அரசின் முக்கிய வருவாய் என்பது [illegible] மாநில அரசுகளுக்கு தங்களுடைய வருவாயைப் பெருக்கிக்கொள்ள வேண்டும் என்று விரும்பேசத் [illegible] இந்த [illegible] நம்ப வேண்டியிருக்கிறது. இந்த விற்பனை வரியைத்தான் மத்திய எக்ஸைஸ் ட்யூட்டியாகப் போட்டு மாற்றி விடுவார்களேயா ஞல் மாநில அரசு எதாவது வரியை எந்த விதத்திலாவது உயர்த்தி எடுத்து மக்களுக்கு காரியங்களைச் செய்யதாக வேண்டும் என்கின்ற வரும் போது இதுபோன்ற வரிகளைத்தான் அதிகப்படுத்தி வருவாயைப் பெருக்கிக்கொள்ள வேண்டியிருக்கிறது. [illegible] நிலையில் மாநில சர்க்காரின் இந்த விற்பனை வரிகளை மத்திய எக்ஸைஸ் ட்யூட்டியாக மாற்றிக்கொள்வதற்கு [illegible] என்று கேட்டுக்கொள்கிறேன். [illegible] சர்கள் இதற்கு எதிர்ப்பும் தெரிவித்திருக்கிறார்கள். [illegible] [illegible] கின்ற வகையிலே இருக்க வேண்டும் என்று [illegible] கிறேன்.





1977 ஆகஸ்ட் 3] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

இன்னும் முதல் அமைச்சர்கள் மகாநாட்டிலே விலைவாசிகள், போக்குவரத்துக்கள் பற்றியெல்லாம் விவாதித்திருக்கிறார்கள். இவைகள் எல்லாவற்றிலும்விட, மாணவர்கள் அரசியலில் இழுக்கக் கூடாது என்று பிரதம மந்திரி அவர்கள் தமது பேச்சிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். இது வரவேற்கத்தக்க அம்சமாகும். அவசரநிலை பிரகடனம் ஆவதற்கு முன்னாலேயே, இந்தியா நாட்டிலே வட மாநிலங்களிலே போராட்டங்கள் நடத்தப்பட்டிருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும்; இந்த நாட்டிலே உள்ள மக்களுக்கெல்லாம் தெரியும். இந்தப் போராட்டத்திலே பிரதான பங்கு வகிக்கும்படியாக, இந்தப் போராட்டங்களிலே ஈடுபட்ட தலைவர்கள் மாணவர்களுக்கு அறைகூவல் விட்டார்கள். பள்ளிக் கூடங்களுக்கும், கல்லூரிகளுக்கும் செல்லக் கூடாது, இதிலே இரண்டு ஆண்டுகள் ஆனாலும்கூடப் பரவாயில்லை, இப்போதிருக்கின்ற அரசை மாற்றிவிட்டுத்தான் மறுவேலை என்றெல்லாம் அறைகூவல் விட்டார்கள். அப்படி அறைகூவல் விட்டு இன்றைக்கு ஆட்சிக்கு வந்த பிறகு, இதை தவறு என்று உணர்ந்து மாணவர்களை அரசியலில் புகுத்தவிடக்கூடாது, இறக்கிவிடக் கூடாது. இது நாட்டுக்கு ஆபத்து என்பதை மாண்புமிகு பிரதம மந்திரி அவர்கள் ஏற்றுக்கொண்டு, அதைத் அறிவித்திருப்பது வரவேற்கத்தக்க அம்சமாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, நமது மாநிலத்தைப் பொறுத்த வரையில் இந்தக் கட்சி ஆட்சியில், அதிகாரத்தில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்களா?

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: எனக்கு மட்டும் என்ன, இது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்தானே. முதல் அமைச்சர்கள் மாநாட்டிலே, பிரதம மந்திரி அவர்கள் பேசிய பேச்சிலே மாணவர்கள் அரசியலில் இழுக்கக் கூடாது, அவர்கள் கலந்துக் கொள்ளக் கூடாது என்று அறிவுரை வழங்கியிருக்கிறார்கள். அது பெருமைக்குரியது என்றுதான் நான் கூறுகிறேன். முதலில் மாணவர்களைத் தூண்டிவிட்டு, இப்போது இப்படி மனமாற்றம் ஏற்பட்டதை நான் வரவேற்கின்றேன். காங்கிரஸ் கட்சி மாணவர்களை அரசியலில் இழுப்பதை அன்றைக்கும் ஏற்றுக்கொள்ளவில்லை; இன்றைக்கும் ஏற்றுக் கொள்ளவில்லை.

தலைவர் அவர்களே, இன்றைக்கு நீர்ப்பாசனப் பிரச்னை மிகவும் ஒரு முக்கியமானப் பிரச்னையாகும்; இது பற்றி முன்னாலே [illegible] அவர்களுடைய உரையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். [illegible] போது நானும் இதுபற்றிச் சொன்னேன். காவிரிப் பிரச்னைக்கு [illegible] காண வேண்டும், இன்றைக்கு [illegible] வேண்டுமென்று சொன்னேன். 1924 ஆம் ஆண்டு செய்த ஒப்பந்தம் காலாவதியாகி [illegible]

என்று கர்நாடக அரசு சொல்லுகிறது. இது தவறு. அந்த ஒப்பந்தத்தைப் படித்துப் பார்த்தால் அது இன்னும் செயலில் இருக்கிறது. காலாவதி ஆகவில்லை என்பது தெரியும். அதன்படி, அவர்கள் நமக்குத் தண்ணீர் தரவேண்டும். அது எப்படியிருந்தாலும், நாம் இந்த ஒப்பந்தத்தை விரைவிலே [illegible] முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இந்த காவிரி டெல்டாப் பகுதிகளை நவீனப்படுத்த வேண்டும். இதற்கான முயற்சி நீண்டநாட்களாக இருந்து வருகிறது. ஏற்கனவே இருந்த அரசாங்கமும் இதற்காக திட்டம் போட்டிருக்கிறது. ஆனால், உலக வங்கியிலே கடன் பெறும் முயற்சி இதுவரை வெற்றி பெறவில்லை. இதற்கு இந்த ஆண்டு 3 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இது எந்த மூலைக்கு? 400 கோடிக்கு மேல் ஆகக்கூடிய திட்டமாகும் இது. ஆகவே, 400 கோடி செலவிடக்கூடிய இந்தத் திட்டத்திற்கு..........

திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, 40 கோடிக்கான திட்டத்தை தமிழக அரசு, மத்திய அரசுக்கு சிபாரிசு செய்து, அதை மத்திய அரசு உலக வங்கிக்கு அனுப்புவதாக இருந்தது. ஆனால், கர்நாடக அரசு இதற்கு மறுப்பு தெரிவித்ததால், மத்திய அரசு உலக வங்கிக்கு அனுப்பவில்லை. இந்த திட்டத்திற்கு அப்போது 40 கோடி ரூபாய் செலவாகும் என்று மதிப்பீடு போடப்பட்டது. ஆனால், இப்போது கூடுதல் ஆகலாம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : இந்த 40 கோடிக்கான திட்டத்தையும் விரைவிலே செய்து முடிப்பதற்கான முயற்சி செய்ய வேண்டும். தஞ்சை மாவட்டம் காவிரிப் பாசனப் பகுதிகளை எடுத்துக் கொண்டால், பாசன முறையிலே தண்ணீரைப் பாய விடுவதும், நிற்பதும் ஒரே பகுதியாக இருக்கிறது. இப்படி தேங்கிவிடக்கூடிய ஒரு சூழ்நிலை அந்தப் பகுதிகளிலே இருப்பதால் இதை நவீனப்படுத்துவதற்கு உலக வங்கியிடமிருந்து கடன் வசதி பெறுவதற்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டும்.

அது மட்டுமல்லாமல், மேற்குத் தொடர்ச்சி மலையிலே உற்பத்தியாகி, மேற்குக் கடலிலே கலக்கக்கூடிய, வீணாகப் போகக்கூடிய தண்ணீரைப் பெறுவதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டும். இதற்கு முன்னாலே இருந்த அரசு, கேரள அரசுடன் இதற்கான பேச்சுவார்த்தைகள் நடத்தியது. அப்போது கேரளா அரசு, இந்தத் தண்ணீரை எடுத்துக் கொண்டு, பயன்படுத்துவதன் மூலம் விளையக்கூடிய தானியங்களை தங்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டதாக அறிகிறேன். எனவே, இந்தப் பேச்சைத் தொடர்ந்து பேசி அந்தத் தண்ணீரைப் பயன்படுத்துவதற்கு ஒரு முயற்சி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



[முற்பகல் 10–20]

அடுத்து, கிணற்றிலிருந்து தண்ணீர் இறைக்கக்கூடிய பிரச்னை. 30,000 பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுப்பதாகக் கூறியிருக்கிறார்கள். விவசாயிகள் பல இடங்களில் பம்ப் செட்டுகளைக் கடனுக்கு வாங்கி வைத்து நாலைந்து ஆண்டுகள் ஆகியும் கனெக்ஷன் கிடைக்காமல் இருக்கிறது. நிலவள வங்கியில் வாங்கிய கடனுக்கு வட்டி கொடுக்கவேண்டுமென்று விவசாயிக்குப் பிராது வருகிறது. பம்ப் செட்டுகளுக்காக கடன் வாங்கி கனெக்ஷன் கிடைக்காமல் இருந்தால் அந்த விவசாயிகளிடம் கடன் வசூலைத் தள்ளி வைக்கும் முயற்சியை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வறண்ட பகுதிகளில் குட்டைகளை ஏற்படுத்துவது சிறப்பான திட்டம். இந்தக் குட்டைகளை அமைத்தால் கிணறுகளில் தண்ணீர் ஊற வாய்ப்பாக இருக்கும். இராமநாதபுரம், கோவை, சேலம் போன்ற மாவட்டங்களில் சர்குலேஷன் டாங்குகளை வெட்டும் முயற்சியை அரசாங்கம் விரைவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மின் உற்பத்திக்காக தொகைகளை ஒதுக்கியிருக்கிறார்கள். இந்த ஆண்டு அறிக்கையிலே 30,000 பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள் அதே நேரத்தில் பத்தாயிரம் சிறு தொழில்களையும் ஆரம்பித்து மின் இணைப்புக் கொடுக்கப் போகிறோம் என்று சொல்லுகிறார்கள். இப்போதே மின்வெட்டு இருக்கிறது. இப்போது உற்பத்தியாகும் மின்சாரம் போதவில்லை, அதனால் புதிதாகத் தொழில்களை ஆரம்பிக்க வேண்டாமென்று சொல்லவில்லை. எந்த அளவு சங்கடத்திற்கு உள்ளாகியிருக்கிறோம் என்பதை உணர்ந்து மின் உற்பத்தியை அதிகமாக்கும் முயற்சிகளைச் செய்ய வேண்டும். அதற்காக இன்னும் பல திட்டங்களை அமலாக்க வேண்டும். ஹொகனேகல் திட்டத்தை நிறைவேற்றினால் 800 மெகாவாட் மின்சாரம் கிடைக்கும். கர்நாடக மாநில அரசோடு பேசி அந்தத் திட்டத்தைக் கொண்டு வரும் முயற்சியை அரசு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து தொழில், தொழில் வளர்ச்சியை இங்கே கூறப்பட்டிருக்கிறது. தொழில் வளரவேண்டும். தொழில் வளர்ந்தாலொழிய நாட்டிலே பொருளாதாரம் வளர முடியாது. எந்த நாட்டில் அதிகத் தொழில் வளர்ச்சி இருக்கிறதோ அந்த நாடுதான் பணக்கார நாடு ஆகும். வெறும் விவசாயம் வளர்ச்சியால் பணக்கார நாடாக இருக்க முடியாது. விவசாயம் லாபகரமான தொழிலாக இல்லை. தொழில்களைப் புதிதாக ஆரம்பிக்க வேண்டுமென்று சொல்லும்போது இருக்கின்ற தொழிற்சாலைகள் மூடப்படாமல் இருப்பதற்கான காரியங்களை அரசு செய்யவேண்டும்.

எனக்குக் கிடைத்திருக்கும் தகவல் தமிழ் நாட்டில் 137 தொழிற்சாலைகள் லாக் அவுட் அல்லது ஸ்ட்ரைக் என்று ஏதோ ஒரு காரணத்தால் நடைபெறாமல் இருப்பதாகத் தெரிகிறது. 137 தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்குமானால் தமிழகத்தின் பொருளாதார நிலை என்னவாகும்? என்ன காரணம், ஏன் இப்படி நடக்கிறது என்பது பற்றி அவசர உணர்வோடு அரசு ஈடுபட்டு அந்தத் தொழிற்சாலைகள் நடப்பதற்கான முயற்சியைச் செய்ய வேண்டும். அப்படிப்பட்ட தொழிற்சாலைகளில் சில அங்குள்ள தொழிலாளர்களுக்குள்ளே இருக்கும் போட்டியினாலேயே மூடப்பட்டிருக்கின்றன. லாக் அவுட் இருக்கிறது. ஒரு பக்கத்தில் தொழிலாளர்களுக்குள்ளே அடித்துக் கொள்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். மறு பக்கத்தில் முதலாளிகள் குண்டர்களை வைத்திருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். யார் தவறு செய்தாலும் அரசு தலையிட்டு தடுத்து நிறுத்த வேண்டும். அதற்கெல்லாம் அரசுக்கு அதிகாரம் இருக்கிறது. யார் தவறு செய்தாலும், யார் பலாத்கார நடவடிக்கையில் ஈடுபட்டாலும் மானேஜ்மென்டாக இருந்தாலும், தொழிலாளர் தரப்பில் இருந்தாலும் உடனடியாகத் தடுத்து நிறுத்தி தொழிற்சாலைகளை இயக்கச் செய்யும் முயற்சியிலே அரசு ஈடுபட வேண்டும். இந்தத் தொழிற்சங்கம் சரியில்லை, அந்தத் தொழிற்சங்கம் சரியில்லை என்று சொல்லிக் கொண்டிருப்பதில் பயன் இல்லை. யார் தவறு செய்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுத்து தொழிற்சாலை திறக்கப்பட வேண்டுமென்பதிலே அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். தொழிலாளர் பக்கம் சாதகமாக இருக்கத்தான் வேண்டும். இல்லையென்று சொல்லவில்லை. மானேஜ்மென்ட் பக்கத்தில் தவறு இருந்தாலும் நடவடிக்கை எடுக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை. தொழிற்சாலைகளை மீண்டும் திறப்பதில் அரசு அவசர உணர்வோடு செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சிறு தொழில்கள் பத்தாயிரம் துவக்கப் போவதாகச் சொல்லப்படுகிறது. இப்போது பத்தாயிரம், முன்னாலே 4 ஆயிரம் சிறு தொழில்கள் துவக்குவதாகச் சொன்னார்கள், எல்லாம் பேப்பரிலே தான் இருக்கிறது, நடைமுறையிலே இல்லை, எந்தச் சிறு தொழில் நடந்து கொண்டிருக்கிறது என்ற புள்ளிவிவரத்தைப் பார்க்க வேண்டும், எனக்குக் கிடைத்த தகவலின்படி இரண்டாயிரம் கூட இயங்கவில்லை. இரண்டாயிரம் சிறு தொழில்கள் என்பது வெறும் பேப்பரில்தான் இருக்கிறது, நடைமுறையில் இயங்கவில்லை. ரிஜிஸ்டர் பண்ணியிருக்கிறார்கள் அவ்வளவுதான். ரிஜிஸ்டர் பண்ணிவிட்டாலே தொடங்கப்பட்டு விட்டதாகச் சொல்ல முடியாது, அவைகள் எல்லாம் இன்னும் தொடங்கப்படாமல் இருப்பதற்கு என்ன காரணம், சிரமங்கள் என்ன அவர்களுக்கு இருக்கின்றன, மூலப் பொருட்கள் கிடைக்கவில்லையா, மின்சாரம் கிடைக்கவில்லையா என்பதையெல்லாம் பார்த்து அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்[illegible]





ஆரம்பிப்பதால் அர்த்தமே கிடையாது. சென்ற ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தொழில்கள் என்ன நிலையில் இருக்கின்றன, ஆரம்பிக்கப் பட்டிருக்கின்றனவா என்பதையெல்லாம் பார்த்து சிரமங்களை எல்லாம் நீக்க அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும்.

அடுத்து, சிக் மில்ஸ். மத்திய அரசே அவைகளை நேரடியாக எடுத்துக் கொண்டு நடத்துவது என்ற கொள்கையை ஏற்று அதன்படி தமிழ்நாட்டிலே கூட பல மூடப்பட்ட பஞ்சாலைகளை எடுத்துக் கொண்டு நடத்தியது. ஆனால் இன்றைக்கு மத்திய அரசு ஒரு கொள்கையை எடுத்திருக்கிறது. சிக் மில்களை மற்ற தனியார்கள் நடத்தக்கூடிய லாபகரமான மில்களோடு இணைத்து விடுவது என்று அறிவித்திருக்கிறார்கள். அதைப்பற்றி இந்த மாநில அரசின் கருத்து என்ன என்பதைச் சொல்ல வேண்டும். மத்திய அரசு ஒரு கொள்கையை முடிவு எடுத்துவிட்டால், நமக்கு ஏற்ற கொள்கையை நாம் அறிவிக்கலாம். தனியார்கள் நல்ல முறையிலே நடத்தக்கூடிய மில்களோடு இணைப்பதிலே அதிலே உள்ள தொழிலாளர்களையும் ஸ்டாப்களையும் சேர்த்து எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நாம் சொல்கிறோம். ஆனால் இந்தத் திருத்தத்தை மத்தியிலே இருக்கிற ஜனதா அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்களுக்குச் சலுகைகள் கொடுக்கிறோம், அந்தச் சலுகைகளைப் பெற்று லாபம் சம்பாதிக்கலாம் என்று கூட நல்ல மில்காரர்கள் எடுத்துக் கொள்ள முன் வரலாம். அப்படி எடுத்துக் கொள்ளப்படுகிறபோது தொழிலாளர்கள் நலன்களும் காப்பாற்றப்பட வேண்டும். சிக் மில்களை எடுத்துக் கொள்வதே தொழிலாளர்கள் நலனை ஒட்டித்தான். தொழிலாளர்களை எடுத்துக் கொள்ளாமல் சிக் மில்களை மட்டும் நன்றாக நடத்தப்படுகிற தனியார் மில்களோடு இணைப்போமானால் நாம் தொழிலாளர்களுக்காக எந்தக் கொள்கையை நிறைவேற்ற வேண்டுமென்று நினைக்கிறோமோ, அது நடைமுறைப்படுத்தப்படாத நிலைமை ஏற்படும். ஆகவே அரசே சிக் மில்களை ஏற்று நடத்துவதுதான் சரியானது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கைத்தறியைப் பொறுத்தவரையிலே இது ஒரு பெரிய பிரச்னை. விவசாயத்திற்கு அடுத்தபடியாக நம் நாட்டிலே அதிகப்படியானவர்கள் ஈடுபட்டிருக்கின்ற தொழில். இந்தக் கைத்தறித் தொழிலாளர்களுக்கு எத்தனையோ காரியங்களைச் செய்வதற்கு நாம் பல நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டாலும்கூட அவர்கள் நலன் பாதுகாக்கப்பட்டிருக்கிறது என்று நாம் சொல்லிவிட முடியாது. இந்த நிதிநிலை அறிக்கையிலே 30 ஆயிரம் கைத்தறிகளை கூட்டுறவிற்குள் கொண்டுவருவது என்று சொல்லி இருக்கிறார்கள். அது நல்லதுதான். [illegible]வற்றினையும், சென்ட் பர்சன்ட் கொண்டுவர வேண்டியதுதான். ஆனால் அப்படிக் கொண்டுவருவதால் அவர்களுடைய பிரச்னை தீர்ந்துவிடுமா? இதற்கு முன்னாலே கூட்டுறவுக்குள் கொண்டுவரப்பட்ட கைத்தறித் தொழி

லாளர்களுக்கு வாழ்க்கை நன்றாக இருக்க வேண்டுமே! அவர்களும் இன்றைக்குத் திண்டாடிக்கொண்டுதானே இருக்கிறார்கள். அவர்களுக்கும் நியாய விலையில் நூல் கிடைக்கவில்லை. சாயம், கிடைக்கவில்லை. மாஸ்டர் வீவர்களின் கீழ் பணிபுரிகின்ற தொழிலாளர்களுக்கு வேலை உத்திரவாதம் கிடையாது. இம்மாதிரிப் பல சங்கடங்கள் இருப்பதால் கூட்டுறவோடு இணைப்பதால் மட்டும் பிரச்னை தீர்ந்துவிடும் என்று கருதிவிடக் கூடாது. அவர்களுக்கு வருடம் பூராவிற்கும் நியாயமான விலையில் நிரந்தரமாக நூல் கிடைப்பதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும். மாஸ்டர் வீவர்களிடம் வேலை செய்யக் கூடிய தொழிலாளர்களை எல்லாம் தொழிலாளர்கள் சட்டத்திற்குள் கொண்டுவந்து அவர்களை எல்லாம் தொழிலாளர்கள் என்று அறிவிக்க வேண்டும். அப்போதுதான் தொழிலாளர்களுக்கு உரிய நலன்களை மாஸ்டர் வீவர்களிடமிருந்து பெறமுடியும். ஆகவே அவர்களைத் தொழிலாளர்களாக ஏற்றுக்கொள்ள வேண்டும். அவர்களுக்குச் [illegible] சாயம் எல்லாம் கிடைப்பதில்லை. காரணம் அவர்கள் தனியார்களிடத்திலே இருப்பதால்தான்.

[முற்பகல் 10-30]

சாய வினியோகம், ஜரிகை போன்றவைகள் கூட்டுறவுத் துறையின் மூலம்தான் விற்பனை செய்யப்பட வேண்டுமென்று செய்து தனியார் துறையிலிருந்து மாற்றிக் கொடுக்கவேண்டும்.

நெசவு செய்யக்கூடிய தொழிலாளர்களுக்குச் சில பகுதிகளில், குறிப்பாக சின்னாளப்பட்டி போன்ற பகுதிகளில் செயற்கைப் பட்டு நூல் கூட்டுறவுச் சங்கத்தில் கிடைப்பதில்லை. தனியார் பங்கு போட்டுக்கொண்டு விலையை இஷ்டப்படி ஏற்றி பொருளை எடுத்துச் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள். கஷ்டப்படும் நெசவாளிகள் கேட்டால் மார்க்கெட் விலையை விட அதிக விலையைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதே மாதிரி கைத்தறிக்கு ஒதுக்கப்படும் ரகங்கள் சம்பந்தமாகக் கண்டிப்பாக அமல் நடத்தினால்தான் பயன் உண்டு. அதை அவர்கள்தான் உற்பத்தி செய்ய வேண்டுமென்று அமல் நடத்துவதற்கான முயற்சிகளை அரசாங்கம் செய்ய வேண்டும். வேறு யாரும் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட ரகங்களை உற்பத்தி செய்யாமல் தடை செய்தாக வேண்டும். ராஜா சுப்பிரமணியம் கமிட்டி பரிந்துரை செய்திருக்கிறது. அந்தப் பரிந்துரைகளை அரசாங்கம் கவனித்து அமல் செய்வதற்கான முயற்சிகளைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து விவசாயத் தொழிலாளர்களின் பிரச்னை. விவசாயத் தொழிலாளர்கள் சம்பந்தமாக எத்தனையோ போராட்டங்களும், சங்கடங்களும் நடந்து கொண்டிருக்கின்றன. இன்றைக்கும் அவர்களுடைய அவல நிலை நீங்கியபாடில்லை. நியாயமான





குறைந்த பட்ச ஊதியம் அவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தாலும் பல்வேறு பகுதிகளில் அந்த ஊதியம் கிடைப்பதில்லை. அவ்வாறு நிர்ணக்கப்பட்ட ஊதியம் கிடைக்கச் செய்வதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்து எப்படி அதை அமலாக்குவது என்பதை ஆலோசிக்க வேண்டும். அதற்குச் சட்டத்தை மட்டும் போட்டுவிடுவோமேயானால் அதனால் பெரியதொரு பயன் நமக்குக் கிடைத்துவிட முடியாது. அந்தச் சட்டத்தை அமலாக்குவதற்கான முயற்சிகளைச் செய்ய வேண்டும். அதுமட்டுமல்லாமல் விவசாயத் தொழிலாளர்களுக்குச் சமூகப் பாதுகாப்பு எப்படி அளிப்பது என்பதையும் யோசிக்க வேண்டும். பல்வேறு அரசு ஊழியர்களுக்கு, பல தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு இருக்கிறது என்பதைப்போல விவசாயத் துறையிலே ஈடுபட்டிருப்பவர்களுக்கு அரசுதான் பாதுகாப்பு அளிக்க முடியுமே தவிர, நிரந்தரத் தொழிலாளர் என்று வைத்து தனியாரிடத்தில் பெறுவது என்பது இந்தக் காலகட்டத்திலே, பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம் எல்லாம் போட்டதற்குப் பிறகு ஒருவருக்கு நிரந்தரமான ஊதியம் என்று வைத்துப் பெறுவது என்பது முடியாத காரியம். அரசுதான் அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க முயற்சிகளைச் செய்யவேண்டும்.

மீனவர்களைப்பற்றி ஒன்றை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மீனவர்களுடைய பிரச்னை ரொம்ப ஆழமாகச் சிந்திக்கப்பட வேண்டிய ஒன்று. முன்னால் இருந்த அரசுகள் எல்லாம் இதை எடுத்தார்கள். விசைப் படகுகள் கொண்டு வந்தார்கள், வீடுகள் கட்டிக் கொடுத்தார்கள். இப்படிப் பல்வேறு காரியங்களை நாம் செய்தாலும் கூட அவர்களுடைய பொருளாதார நிலையில் ஏதாவது ஏற்றம் கண்டதா, அவர்களுடைய வருவாயில் ஏதாவது 20 சதவிகிதம் அல்லது 50 சதவிகிதம் ஏற்றம் காணும் முறையிலே இவை அமலாக்கப்பட்டனவா என்று பார்த்தால் அவர்கள் அன்றைக்கு இருந்தவர்கள் அப்படியேதான் இருந்து கொண்டிருக்கிறார்களே தவிர, அவர்களுடைய பொருளாதார நிலை உயர்ந்ததாகத் தெரியவில்லை. இன்றைக்கு விசைப் படகுகள் நிறையக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆண்டுதோறும் கொடுத்த அந்த விசைப் படகுகளினால் மீனவர்கள் யாருக்காவது பலன் கிடைத்ததா என்றால் யாருமே அடையவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். தனியார்கள் வாங்கிக் கொண்டு, இவர்களை வேலைக்கு அமர்த்தி இவர்களுக்குத் தினச் சம்பளத்தைக் கொடுத்து, அந்த இலாபத்தைக் கொண்டு போகிறார்கள். இப்படி விசைப் படகுகளைக் கொண்டு தனியார் இலாபம் சம்பாதித்துக் கொண்டு போவதால் மீனவர்களுக்குப் பயன்படாமல் இருக்கிறது. இன்றைக்கு விபத்திலே இறந்து போனால் அவர்கள் குடும்பத்திற்குப் பாதுகாப்பு அளிக்க 5,000 ரூபாய் மானியம் அளிக்கப்படும் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். அது நல்ல திட்டம். ஆனால் விபத்திலே சாகின்றவர்களுக்கு மட்டும் இதை அறிவித்துவிட்டு உயிரோடு இருப்பவர்களுடைய நிலையை உயர்த்துவதற்குத்

திட்டம் இல்லை என்றால் பயன் இல்லை. இருப்பவன் என்ன நினைப்பான் என்றால், செத்துப் போனால்தான் 5,000 ரூபாய் கிடைக்கும் என்று. அவர்களுக்காக மீனவர் கூட்டுறவுச் சங்கம் என்று வைக்கப்பட்டிருக்கிறது. நைலான் நூல் கொடுக்கிறார்கள். ஆனால் அது போதிய அளவிற்குக் கிடைப்பதில்லை, தேவையானவர்களுக்குக் கிடைப்பதில்லை. இதிலும் நியாயமான முறையில் அவர்களுக்குக் கிடைக்க, கூட்டுறவுச் சங்கங்களின் மூலம், 10, 15 பேர்களை வைத்து அவர்களுக்குக் கொடுத்து அவர்கள் அந்த இலாபத்தை அடையச் செய்வதன் மூலம் அவர்களுடைய பொருளாதார நிலையை உயர்த்த முடியுமே தவிர இம்மாதிரி சில காரியங்களினால் அவர்களுடைய நிலையை உயர்த்திவிட முடியும் என்று கருதினால் அது தவறு. அந்த வகையிலே நீங்கள் அதைச் சிந்திக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கிராமப்புற வீட்டு வசதியைப்பற்றிக் கூறியிருக்கிறார்கள். ஆதரிக்கப்பட வேண்டும். கிராமப்புற வீட்டு வசதிபற்றி சொல்லப்பட்டு வருகிறதே தவிர, அதிகப்படியான தொகை கொடுக்கப்படவில்லை. இதற்காகக் கடன் தொகை கொடுக்கப்படுகிறதென்று ஒவ்வொரு யூனியனிலும் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு, கட்டுக்கட்டாக இங்கே வந்திருக்கின்றன. 10 பேர், 20 பேருக்குக் கடன் கொடுத்திருக்கிறோமே தவிர, பலபேர் ஏமாந்து விட்டார்கள். ஆகவே, கிராமப்புற வீட்டு வசதிக்கு அதிகப்படியான நிதிக்கு ஏற்பாடு செய்ய வேண்டும், ஒதுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கல்வியைப் பொறுத்த வரையிலும் இந்த ஆண்டு ரூ. 23 கோடி அதிகமாகவே ஒதுக்கப்பட்டிருக்கிறது. எவ்வளவு ஒதுக்கினாலும் கூட கல்வித் துறையிலே இருக்கிற குறைபாடுகள் நீக்கப்படவில்லை. இன்றைக்கு அநேகம் பேர்கள், பயிற்சி பெற்ற இளநிலை, முதுநிலை ஆசிரியர்கள் வேலையில்லாமல் திண்டாடுகிறார்கள். திருநெல்வேலியிலிருந்து கடிதம் வந்திருக்கிறது. பயிற்சி பெற்ற 3,500 பேர்கள் வேலையில்லாமலிருக்கிறார்கள் என்று. இந்த மாதிரி தமிழ்நாடு முழுவதற்கும் 10,000-க்கும் மேல் இருக்குமோ என்று நினைக்கிறேன். இவ்வளவு அதிகமாகப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் வேலையில்லாமல் திண்டாடுகிறார்கள் என்று இருக்கும் போது அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க வேண்டியது நம்முடைய கடமை. ஆதலால், மாணவர், ஆசிரியர் விகிதாச்சாரத்தைக் குறைத்து, அதிகப்படியான ஆசிரியர்களைப் போட அரசு யோசிக்க வேண்டும். இன்றைக்கு யூனியன் பள்ளிகளிலே ஆசிரியர்களை நிறையப் போட வேண்டியிருக்கிறது. அரசு அனுமதி இல்லாததால் அவர்களைப் போடமுடியவில்லை. ஆசிரியர்கள் வேலைக்குப் போகத் தயாராக இருக்கிறார்கள். ஆனால், அரசு அனுமதி இல்லாத நிலையில் அவர்கள் வேலை பெறமுடியவில்லை. ஆகவே, அரசு இதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



புதிதான, கல்விமுறை 10+2+3 என்ற திட்டத்தைப் பற்றி ஒன்று கூற விரும்புகிறேன். இப்பொழுதிருக்கிற உயர்நிலைப் பள்ளிகள் எல்லாவற்றிலுமே அத் திட்டத்தை அமுலாக்க முடியாதுபோல் பேசியதிலிருந்து தெரிகிறது. டைரக்டர் அவர்கள் 400 உயர்நிலைப் பள்ளிகளில் இந்த ஹையர் செக்கண்டரி வகுப்புகளை வைக்க முடியும் என்று சொல்லியிருப்பதாகப் பத்திரிகையிலே கேள்விப்பட்டேன். அப்படி இருந்தால், பாக்கி இருக்கிற கிராமங்களிலே இருக்கிறவர்கள் நகரப் பள்ளிகளிலே தான் வந்து படிக்க வேண்டும். இப்பொழுது 11 ஆண்டு பள்ளிப் படிப்பு, ஓர் ஆண்டு பி.யூ.சி., 3 ஆண்டு பட்டப்படிப்பு என்றிருக்கும் போதே, 4 ஆண்டுகள் நகரத்திற்கு வந்து படிக்க வேண்டி இருக்கிறது. கிராமப்புறப் பள்ளிகளில் ஹையர் செக்கண்டரி வகுப்புகள் இருக்காதென்றால், இன்னொரு ஆண்டு அதிகமாக நகரங்களிலே செலவழிக்க வேண்டிய நிலைமையேற்படுகிறது. இப்பொழுது 4 ஆண்டுகள் படிக்க ஒரு மாணவனுக்கு ரூ. 2,000 செலவழிக்க வேண்டிய நிலைமை பெற்றோர்களுக்கு ஏற்படுகிறது. இப்பொழுது இன்னும் ஓராண்டு நகரத்திலிருக்க வேண்டுமானால் இன்னும் அதிகமாகச் செலவாகும். அந்த நிலையைத் தவிர்க்க வேண்டுமானால், அதிகம் செலவானால் கூடப் பரவாயில்லை, எல்லா உயர்நிலைப் பள்ளிகளிலும் ஹையர் செக்கண்டரி கல்வியை அரசு அமுல் செய்தாக வேண்டும். அப்படிச் செய்துவிட்டால், சாதாரண ஏழை மக்கள், கிராமப்புறச் சூழ்நிலையிலே இருக்கிறவர்களுக்கு வசதி ஏற்படும். அதைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தனியார் பள்ளிகளிலே வேலை பார்க்கும் ஆசிரியர்களுக்குப் பாதுகாப்பு பற்றி ரொம்ப நாளாகப் பேசப்படுகிறது. அவர்களுக்குச் சரியான பாதுகாப்பு கிடைக்கவில்லை. நினைத்த நேரத்திலே வேலையை விட்டு அனுப்பப்படுகிறார்கள். ஒழுங்காகச் சம்பளம் அளிக்கவில்லையென்ற நிலையிருக்கிறது. இதையெல்லாம் கவனத்திலே கொண்டு, கல்வி முறையிலே பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் வேலைவாய்ப்பு, மாணவர்கள், ஆசிரியர்கள் விகிதாசாரம் இவைகளையெல்லாம் தக்க முறையிலே கவனிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

நகர்ப்புற உச்ச வரம்புத் திட்டத்திலே சிக்கல் இருப்பதாகச் சொல்கிறார்கள். இதனால், நகர்ப்புறங்களில் வீடுகள் கட்ட அனுமதி இல்லை, குறிப்புகள் சரியாக இல்லையென்று சொல்வதாலே சென்னை மாநகரிலே வீடுகள் கட்டுவதே குறைந்து விட்டது. அதனால் பல இலட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை கிடைப்பது குறைந்து விட்டது என்று கூறப்படுகிறது. ஆகவே, வீடுகள் கட்ட அனுமதிக்கப்படுமானால், அந்தத் தொழிலாளர்களுக்கு அதிகப்படியான வேலை வாய்ப்புக் கிடைக்க ஏதுவாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசு ஊழியர்களுக்கு அளிக்கப்பட்ட இடைக்கால நிவாரணம் 200 ரூபாய்க்கும் குறைந்த வருவாய் உள்ளவர்களுக்கும் அளிக்கப் படவில்லை என்ற நிலைமையை மாற்றி, அவர்களுக்கு கிடைக்கச் செய்ய வேண்டும். இடைக்கால நிவாரணம் கொடுக்கின்ற போது, இதர மாநிலங்களுக்கு ஒப்ப, மத்திய அரசு கொடுக்கின்ற அளவுக்கு தங்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கோருகிறார்கள். அதையும் அரசு கவனத்தில் எடுத்துக் கொள்ளவேண்டும்.

[முற்பகல் 10–40].

விவசாய நிலங்களைப் பொறுத்தமட்டில் முன்னால் இருந்த வரியிலிருந்து சில சலுகைகள் அளித்திருக்கிறார்கள். குறுகிய காலப் பயிர்களுக்குப் போடப்பட்ட வரி குறைக்கப்பட்டிருக்கிறது. புகையிலை, கடலை, மிளகாய் போன்றவைகளுக்கு வரியில்லை என்று தெரிவித்து இருக்கிறார்கள்.

தண்ணீர்த் தீர்வையை எடுத்துக் கொண்டால், அதிலே அதிகமாகப் போடப்பட்ட தண்ணீர் வரியிலே 2 ரூபாய் குறைத்து பாக்கி வசூலிக்க வேண்டும் என்று அறிவித்திருக்கிறார்கள். ஒன்றைக் கவனத்தில் கொள்ள வேண்டும். முன்னால் இருந்த அரசு இந்த வரியைப் போட்டது. இது போட்டது தவறு என்று விவசாயிகள் கூறி, இந்த வரியை எடுத்துவிட வேண்டுமென்று கேட்டதற்காக சென்ற ஆண்டு இது வசூலிக்கப்படாமலேயே விடப்பட்டிருந்தது.

திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, முன்பிருந்த அரசு இந்த வரியைப் போட்டது என்று சொன்னார். தவறான எண்ணம் வரக் கூடாது என்பதற்காகத்தான் சொல்கிறேன். இந்த வரி போடப்பட்டது ஜனாதிபதி ஆட்சியில் மாண்புமிகு திரு. சி. சுப்பிரமணியம் அவர்களால் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதனை மக்கள் வேண்டாமென்று சொல்லி வந்தார்கள். ஆனால் வசூலிக்காமல் விட்டுவிட்டார்கள். அதை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டார்கள். ரத்து செய்யாமலேயே விட்டுவிட்டார்கள் என்பதுதான் கவலை.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : ஆகவேதான் சொல்கிறேன். ரத்து செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். உங்களைச் சொல்லவில்லை. அரசைக் கேட்டுக்கொள்கிறேன். ஆகவே புதிதாகப் போடப்பட்ட இந்தத் தண்ணீர் தீர்வையை அரசு எடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதிலே பொதுவாக விவசாயிகளிடத்திலே அதிகமான பணம் தேங்கிப் போயிருக்கின்றது என்று மேல் நிலையிலே இருக்கிறவர்கள் மத்தியில் ஒரு கருத்து இருக்கிறது. ரொம்ப நாளாக பேசப்பட்டு வருகிறது. பிளானிங் கமிஷன் அடிக்கடி மாநில அரசுகளுக்குச் சொல்வது, விவசாயிகளுக்கு அதிகப்படியான வரி போட வேண்டும் என்று. நிலவரியைப் போட வேண்டுமென்று கருத்துக்கள் அனுப்பப்படுவதாக நான் அறிகிறேன்.



விவசாயத் துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்குக் கிடைக்கக் கூடிய வருவாய் மிகவும் குறைவு. ஆகவே இதை நீங்கள் தயவு செய்து கவனிக்க வேண்டும். இன்றைக்குத் தேசிய வருவாயிலே சரிபாதி விவசாயத் துறையிலிருந்து பெறப்படு கிறது. சரிபாதி இதர தொழில்களிலிருந்து பெறப்படுகிறது. ஆனால் இந்த விவசாயத் தொழிலை நம்பி இருக்கிற மக்கள் 70 சதவீதம் ஆவார்கள். ஆகவே 70 சதவீதம் பேர்கள் 50 சத விகித வருவாயை வைத்துக் கொண்டு வாழ்க்கையை நடத்த வேண்டும். பாக்கி உள்ள 30 சதவிகிதத்தினர் 50 சதவிகித வரவை வைத்துக் கொண்டு வாழ்கிற நிலை இருக்கிறபோது, விவசாயத் துறையிலே இருந்து அதிக வரி வாங்க வேண்டிய கொள்கை இருக்கிறதே அது தவறு. விவசாயத்தை நம்பி இருக்கக்கூடிய பெரிய வருவாய் உடையவர்களுக்கு அக்ரிகல்சுரல் இன்கம் டாக்ஸ்—வருவாயை அதிகப்படுத்திக் கொள்ளலாம். பெரிய விவசாயிகள் அதிகமாகப் பலன் பெறுகிறவர்களைப் பற்றிக் கவலையில்லை. சாதாரண விவசாயிகள் நிலையை கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

நெல் உற்பத்தி செய்கின்ற தொழில் லாபகரமாக இல்லாத தொழில். அவர்களுடைய வருவாய் மிகக் குறைவு. தஞ்சையில் ஒரு சாகுபடிக்கு ஏக்கராவுக்கு 250 ரூபாயிலிருந்து 300 ரூபாய் நிகர லாபம் கிடைக்காது. இரு போகம் சாகுபடி செய்தால் 500 ரூபாய்க்குக் கூட நிகர லாபம் கிடைக்காது. குறைந்த வருவாய் உடைய சாகுபடிக்கு வரியை நீங்கள் அதிகப் படுத்தி, தண்ணீர்த் தீர்வை போடுவது நியாயம் இல்லை. அதை விட்டு விடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நில சீர்திருத்தத்தைப் பற்றித் திட்டத்திலே பல ஆண்டுகளாகக் கூறப்பட்டிருக்கிறது. குத்தகைக்காரர்களுக்கு நிலம் சொந்தமாக ஆகவும், இயற்றப்பட்டு பிறகு கைவிடப்பட் டது. அந்தச் சட்டத்தை புதிதாகக் கொண்டுவர அரசு முயற் சிக்க வேண்டும். அது மிகவும் அவசியமான ஒன்று. பல லட்சக்கணக்கான நிலங்கள் இரண்டு பேர்களுக்குச் சொந்தமாக இருக்கிறது. நிலச் சொந்தக்காரர்களுக்கும் உரிமையாக இருக் கிறது. குத்தகைக்காரர்களுக்கும் உரிமையாக இருக்கிறது. ஒவ்வொரு நிலத்திற்கும் இரண்டு பேர்களுக்கும் உரிமை இருப்ப தால், இரண்டு பேர்களும் முதலீடு செய்து உற்பத்தியைப் பெருக்க முடியவில்லை. இந்தக் குத்தகைக்காரர்களுக்கு அந்த நிலத்தைச் சொந்தமாக ஆக்க சட்டம் மீண்டும் கொண்டு வரப்பட வேண்டும்.

குத்தகைப் பதிவுச் சட்டப்படி பல பேர் பதிவு செய்யாமல் இருக்கிறார்கள். பதிவு செய்யப்படாத காரணத்தால் அந்தக் குத்தகைதாரர்கள் எல்லாம் வெளியேற்றப்படுகிறார்கள். அவர்

களை யெல்லாம் வெளியேற்றம் செய்யாமல் இருப்பதற்காக,
விவசாயிகளுக்குச் சரியான பாதுகாப்பு அளிப்பதற்கான முயற்சி
களை அரசு செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இளைஞர் அணி என்ற பெயரில் படித்தவர்களுக்கு வேலை
கொடுக்க வேண்டும் என்று அமைப்பு ஏற்படுத்தப்பட்டது.
அதிலே அவர்கள் 2-3 ஆண்டுகள் வேலைபார்த்த பிறகு இன்றைக்கு
அந்த அணியில் பலருக்கு வேலை இல்லை என்று வெளியேற்றி
விட்டார்கள். இன்றைக்கு சிலர் மட்டும் அதிலே இருக்கிறார்கள்.
அவர்களுக்கு என்ன பாதுகாப்பு ? 4 ஆண்டுகள் 3 ஆண்டுகள்
அவர்கள் வேலை பார்த்த பிறகு அவர்கள் வெளியேற்றப்பட்டால்
அவர்களுக்கு வயதாகி விட்ட காரணத்தால் அரசு
வேலைகளுக்குச் செல்ல இயலவில்லை. ஆகவே, அவர்களுக்கு
அரசு முதல் உரிமை அளித்து, வேலை கொடுக்க வேண்டும். அந்தச்
சலுகை அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

கூட்டுறவுச் சங்கத்தைப் பொறுத்த வரையில், கடன் வசூல்
நெருக்கடி இல்லை என்று சொல்லப்படுகிறது. தஞ்சை மாவட்
டத்தைப் பொறுத்தவரையில் இரண்டு ஆண்டுகளாக சரியான
விளைச்சல் இல்லை. சென்ற ஆண்டு தண்ணீர் வசதி அளிக்காத
காரணத்தால் ஒரு பகுதி பஞ்சத்திலும், மற்றொரு பகுதி சரியான
விளைச்சல் இல்லாமல் போய் விட்டது. ஆகையால் அங்கே
குறுகியக் கால கடன் ஒத்தி வைக்கப்பட்டது. நில வள வங்கி
யின் கடன் ஒத்தி வைக்கப்படவில்லை. அதை வசூலிப்பதற்காக
நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதனால் விவசாயிகள்
கஷ்டப்படுகிறார்கள். அவர்கள் பொருள்கள் ஜப்தி செய்யப்
படுகின்றன என்ற தகவல் எனக்கு வந்து இருக்கிறது. இதில்
அரசு கவனம் செலுத்தி, குறுவைக்கு இப்போது தான் தண்ணீர்
வருகிறது. குறுவை சாகுபடியாகிக் கொண்டு இருக்கிறது.
குறுவை நெல் கைக்குவரும் வரையில் அந்தத் தஞ்சை மாவட்டத்
தில் கடன் வசூலை நிறுத்தி வைக்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

பென்ஷன்தாரர்களுக்கு நீண்ட நாளைய கோரிக்கை ஒன்று
இருக்கிறது. அவர்களுக்கும் இடைக்கால நிவாரணம் அளிக்கப்
படவேண்டும். இதுவரையில் இடைக்கால நிவாரணம் அளிக்
கப்படுகிற தொகை அவர்களுக்கும் அளிக்கப்பட்டு வந்து இருக்
கிறது. ஆகவே, இந்த இடைக்கால நிவாரணம் அளிக்கப்பட்ட
தொகையையும் பென்ஷன்தாரர்களுக்கு அளிக்க வேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன்.

விற்பனை வரியில் வெல்லத்திற்கும், நாட்டு சர்க்கரைக்கும்
பல முனை வரி போட்டு இருக்கிறார்கள். நாட்டு சர்க்கரைக்கு
பல முனை வரியிலிருந்து விலக்களிக்க வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.



*திரு மு. கருணாநிதி: பேரவைத் தலைவரவர்களே, அறிவாற்றல்
மிகுந்த என்னுடைய அருமை நண்பர் நிதி அமைச்சர்
அவர்கள் இந்த மாமன்றத்திலே வைத்துள்ள நிதிநிலை அறிக்கை
மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைய
கருத்துகளைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கல்வி நிதிநிலை அறிக்கை என்று குறிப்பிட்டு இந்த மாமன்றத்
திலே அவர் வைத்துள்ள இந்த அறிக்கையில் எதிர்க்கட்சிகளின்
சார்பாக பல்வேறு கருத்துக்கள் குறிப்பிட்ட போதிலும் நிதி
அமைச்சர் அவர்கள் புதிய அரசின் சார்பாக முதல் தடவையாக
வைத்துள்ள இந்த அறிக்கையின் மீது கருத்து மாறுபாடுகளை நான்
கூற வேண்டியவனாக இருந்தபோதிலும் நிதிநிலை அறிக்கையை
அவையிலே வைத்த நிதி அமைச்சர் அருமை நண்பர் மனோகரன்
அவர்களை நான் வாழ்த்துகின்றேன்; பாராட்டுகின்றேன். இந்த
நிதி நிலை அறிக்கையினுடைய விவாதம் தொடங்கியபோது, கழ
கத்தின் சார்பில் துணைத் தலைவர் பேராசிரியர் அவர்கள் கருத்துக்
களை எடுத்துரைத்து இறுதியாக ஒன்றைக் குறிப்பிட்டதை வைத்து
இந்த மாமன்றத்திலே உள்ள உறுப்பினர்கள் பலரும் அவர்க
ளுடைய விமர்சனங்களைச் செய்தார்கள்.

[முற்பகல் 10-50)

பேராசிரியர் நிதிநிலை அறிக்கையைப் பற்றிக் குறிப்பிட்டு,
முடிக்கின்ற நேரத்தில் இந்த அறிக்கையிலே உப்பு இல்லை, ஆகவே
சப்பென்றிருக்கிறது என்று குறிப்பிட்டார். அதற்கு எப்படியா
வது பதில் சொல்லியே தீரவேண்டுமென்ற முறையிலே ஆளுங்
கட்சியின் சார்பிலே பேசிய ஒரு உறுப்பினர், இதற்கு நேரடியாகப்
பதில் சொல்லாமல், ஏற்கனவே கழக அரசின் சார்பில் இங்கே
வைக்கப்பட்ட நிதி நிலை அறிக்கை சாக்கடையாக இருந்தது,
சாராய வாடை வீசியது, என்றெல்லாம் பேச்சைக் தொடங்கி
விவாதத்திலே ஒளி ஏற்றுவதற்குப் பதிலாக, கொஞ்சம் வெப்பம்
ஏற்படுகின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்கினார். அவரே கூட
சொல்லி இருக்கலாம், ''எங்கள் நிதியமைச்சர் கொண்டு வந்த
நிதி நிலை அறிக்கையிலே உப்பில்லை என்று பேராசிரியர் சொல்
கிறார், உங்களுடைய நிதியமைச்சர் கருணாநிதி கொண்டு வந்த
நிதிநிலை அறிக்கையிலே புளியில்லை, காரம் இல்லை, உறைப்பு இல்லை''
என்று கூறியிருக்கலாம். அதற்குப் பதிலாக, சாராய வாடை
வீசியது, சாக்கடை மணம் கமழ்ந்தது என்றெல்லாம் கூறி விவா
தத்திலே அந்த அளவுக்குச் சூடேற்றியிருக்க வேண்டிய அவசிய
மில்லை என்றுதான் நான் கருதுகிறேன்.

மற்றொரு ஆளுங்கட்சி உறுப்பினர் நேற்றைய தினம் பேசும்
போது குறிப்பிட்டார், '' தி.மு.க. அரசிலே மக்களெல்லாம்
நோயாளிகளாக ஆக்கப்பட்டு விட்ட காரணத்தால், அவர்களுக்கு
உப்பில்லாப் பத்தியம் தேவைப்படுகிறது, எனவே இந்த அறிக்கை

உப்பில்லாமல் அமைந்திருக்கிறது'' என்று பேராசிரியர் எடுத்துச் சொன்ன கருத்தை அவர் ஒப்புக்கொள்கிற வகையில் ''ஆமாம் உப்பில்லை'', என்று அவரே நேற்றையதினம் எடுத்துச் சொன்னார்.

நோயாளிகளுக்கு மருந்து கொடுப்பது என்பது ஒன்று. சில நேரங்களில் நோய் இல்லாதவர்களுக்கு மருந்து கொடுப்பதன் மூலம் ஆபத்தை உருவாக்குவது ஒன்று. சில நேரங்களில் நோயாளிகளுக்கு மருந்து கொடுக்கத் தெரியாதவர்கள் பச்சைவெட்டு மருந்தைக் கொடுத்து அதன் காரணமாக, நோயாளிகளை இறப்புலகுக்கு அனுப்புவது ஒன்று. எனவே மருந்து கொடுக்கின்ற நேரத்தில் எவ்வளவு எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்பதை எடுத்துக் காட்டுவதற்காகத்தான் கூறப்பட்டதே தவிர, எதிர்க் கட்சிகள் சார்பிலே நிதி நிலை அறிக்கையை எப்படியாவது தாக்கித் தீரவேண்டும், எதிர்த்தே தீரவேண்டுமென்றல்ல. சில ஆக்க பூர்வமான யோசனைகளையும் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றோம். உப்பில்லை என்று சொன்னதை பெரிய குற்றச் சாட்டாக நிதியமைச்சர் கருதிக்கொள்ள மாட்டார் என்றே கருதுகின்றேன். நமது வீடுகளில் கூட சில நேரங்களில் குழம்போ, ரசமோ வைக்கிற நேரத்தில், உப்புக் குறைவாக இருக்குமானால்— அதிகமாகப் போய் விட்டால் தான் ஆபத்து— உப்பு குறைவாக இருக்குமானால், அதை எடுத்துச் சொல்ல வேண்டியவர்கள்— சாப்பிட்டுப் பார்த்தவர்கள் சொன்னவுடன், மேலும் கொஞ்சம் உப்பைப் போடுவதற்கு வசதியாக இருக்கும். அதேபோல், நீங்கள் கொஞ்சம் உப்பைச் சேர்த்துக் கொள்ளுங்கள்—இந்த நிதிநிலை அறிக்கையிலே உங்களுடைய திட்டங்களிலே என்று எடுத்துக் காட்டுகின்ற வகையிலே நீங்கள் எடுத்துக் கொள்ள வேண்டுமே அல்லாமல், ஏதோ இந்த அறிக்கையிலே உப்பில்லை என்கின்ற வகையிலே எதிர்க்கிறார்கள் என்று கருதிடத் தேவையில்லை.

இங்கே 1975-76 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை—அதற்குப் பிறகு இந்தத் தமிழ்நாடு அரசு கலைக்கப்பட்ட பிறகு, டெல்லி பாராளுமன்றத்திலே நிதியமைச்சராக இருந்த சி. சுப்பிரமணியம் அவர்கள் முன் வைத்த தமிழ் நாட்டினுடைய நிதிநிலை அறிக்கை—அதற்குப் பிறகு ஜனதா ஆட்சி அங்கே உருவான பிறகு, எச்.எம். பட்டேல், நிதியமைச்சர் என்கிற முறையிலே வைத்த நிதிநிலை அறிக்கை—இன்றைக்கு மாண்புமிகு நிதியமைச்சர் மனோகரன் அவர்கள் இங்கே வைத்திருக்கிற நிதிநிலை அறிக்கை இவைகளை எல்லாம் ஒரு முறை ஒப்பிட்டுப் பார்ப்பது நலமென்று நான் கருதுகின்றேன்.

1975-76 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சி கலைக்கப்படுவதற்கு முன்பு மார்ச் திங்கள் இந்த அவையில் வைக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையில் அந்த ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தைப் பற்றி நான் குறிப்பிடும்போது வருவாய்க் கணக்கில் துண்டு விழுவது 30 கோடி ரூபாய் என்றும் எல்லாக் கணக் கையும் மொத்தமாகப்



பார்த்தால் ஏறத்தாழ அந்தப் பற்றாக்குறை 20 கோடி ரூபாயாக இருக்கும் என்றும் குறிப்பிட்டிருந்தேன். என்றாலும் திட்டப் பணிகளுக்காகவும் வறட்சித் தணிப்புப்பணிகளுக்காகவும் மத்திய அரசிடமிருந்து நாம் எதிர்பார்க்கும் உதவி வரும்போது அந்தப் பற்றாக் குறை நிறைவு செய்யப்பட்டு விடும் என்றும் நான் 1975-76 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையிலே சுட்டிக்காட்டியிருந்தேன். நான் கூறியவாறு, மாநில அரசுக்குக் கிடைத்துள்ள வருவாய் காரணமாக 1976-77 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் வரவு-செலவுத் திட்டத்தை மத்திய நிதியமைச்சர் சி. சுப்பிரமணியம் அவர்கள் நாடாளுமன்றத்திலே முன்வைத்தபோது,1975-76ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீட்டின்படி, வருவாய்க் கணக்கில் பற்றாக்குறை ஏழேமுக்கால் கோடி ரூபாய் என்றும், மொத்தத்தில் பற்றாக்குறை சுமார் ஆறேகால் கோடி ரூபாயாகவும் இருக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

எனவே 1975-76-ல் ஏறத்தாழ 20 கோடி ரூபாய் பற்றாக் குறையாக இருக்கும் வரவு-செலவுத் திட்டம், நிதி நிலை என்று நான் எடுத்துக் காட்டியதற்கு ஏற்பவும் அவைகள் எப்படி ஈடு செய்யப்படும் என்று நான் எடுத்துக்காட்டியதற்கேற்பவும் அவர்கள், அரசு கலைக்கப்பட்ட பிறகு டெல்லி நாடாளுமன்றத்தில் வைக்கப்பட்ட அறிக்கையில் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் நான் சொன்னதற்கேற்ப மொத்தத்தில் பற்றாக்குறை ஆறேகால் கோடி ரூபாயாகத்தான் இருக்கும் என்று அறிவித்ததை எண்ணிப் பார்க்கிற நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழக அரசு நிதி நிலையைப் பொறுத்து எந்தவிதமான ஆபத்தான கட்டத்திலும் இந்த மாநிலத்தை வைக்கவில்லை என்பது மிகத் தெளிவாகப் புலனாகும் என்பதை நான் இங்கு எடுத்துக் காட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இன்னொரு முரண்பாட்டையும் நான் இங்கே எடுத்துச் கூறாமல் இருக்க முடியாது. அதை நிதி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருவது என் கடமை என்று நான் கருதுகிறேன்.

1976-77-ம் ஆண்டு திரு.சி. சுப்பிரமணியம் அவர்கள் நாடாளுமன்றத்தில் வைத்த தமிழ்நாட்டு வரவு-செலவுத் திட்ட அறிக்கைக்கும் 1977-78 ம் ஆண்டுக்கான அறிக்கையை, திரு. எச்.எம். பட்டேல் அவர்கள் நாடாளும்ன்றத்தில் வைத்த தமிழ்நாடு வரவு செலவுத் திட்ட அறிக்கைக்கும் ஒரு முரண்பாடு உள்ளது. திரு சுப்பிரமணியம் அவர்கள் வைத்த அறிக்கையிலே கூறியுள்ள வாசகத்தை அப்படியே தருகிறேன். அவர்களுடைய அறிக்கையில் பத்தாவது பக்கத்தில் இருபதாவது பாராவில் என்ன சொல்லுகிறார்கள் என்றால்,

'' 1976-77-ம் ஆண்டு வருவாய் கணக்கில் வருவாய்கள் 575.63 கோடி ரூபாயாகவும், செலவுகள் 587.95 கோடி ரூபாயாகவும், ஆகவே பற்றாக்குறை 12·37 கோடி ரூபாயாக

இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது ; வருவாய்க் கணக்கு, கடன் கணக்கு, மூலதனக் கணக்கு ஆகியவற்றை ஒருங்கு சேர்த்து முழுமையாகப் பார்க்கும்போது 9.98 கோ்டி ரூபாயாக பற்றாக்குறை இருக்கும் என்று எதிர்பார்க்கப்பகிடுறது.''

இது திரு. சுப்பிரமணியம் அவர்கள் பாராளுமன்றத்தில் வைத்த அறிக்கை. அதற்குப் பிறகு திரு. பட்டேல் அவர்கள் பாராளுமன்றத்தில் வைத்த நிதிநிலை அறிக்கையில் என்ன குறிப்பிடுகிறார்கள் ?

> ''1976-77–ம் ஆண்டு வரவு—செலவுத் திட்டத்தில் வருவாய்க் கணக்கில் 5.32 கோடி ரூபாய் பற்றாக்குறை இருக்கும், எல்லாக் கணக்கையும் சேர்த்து மொத்தமாகப் பார்க்கும்போது 2.98 கோடி ரூபாய் பற்றாக்குறை ஏற்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது ''

என்பதாக பட்டேல் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். அதே பட்டேல் அவர்களுடைய அறிக்கையை, நம்முடைய நிதி அமைச்சர் அவர்களும் இந்த நிதிநிலை அறிக்கையில் 30–வது பக்கத்தில், ' 1976–77 ஆம் ஆண்டில் வருவாய்க் கணக்கில் 5.32 கோடி ரூபாய் பற்றாக்குறையாக இருக்குமென்றும், எல்லாக் கணக்குகளையும் சேர்த்து மொத்தமாகப் பார்க்கும்போது 2.98 கோடி ரூபாய் பற்றாக்குறையாக இருக்குமென்றும் எதிர்பார்க்கப்பட்டது ' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதிலே நான் சொல்கிற முரண்பாடு, திரு. சுப்பிரமணியம் அவர்கள் சொன்னது, 'பற்றாக்குறை 12.37 கோடியாக வருவாய்க் கணக்கில் இருக்குமென்று மதிப்பிடப்பட்டுள்ளது ; வருவாய்க் கணக்கு, கடன் கணக்கு, மூலதனக் கணக்கு ஆகியவற்றை ஒருங்கு சேர்த்துப் பார்த்தால் 9.98 கோடி ரூபாயாக பற்றாக்குறை இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது' என்பதாகும். 1976-77 ஆம் ஆண்டு பற்றியது அது. ஆனால் அதே 1976-77–ம் ஆண்டு பற்றி திரு. பட்டேல் அவர்கள் குறிப்பிடுகிற நேரத்தில், ஏழு கோடி ரூபாய் வித்தியாச அளவில், ' வருவாய்க் கணக்கில் 5.32 கோடி ரூபாய் பற்றாக்குறை என்றும் எல்லாக் கணக்குகளையும் சேர்த்து மொத்தமாகப் பார்த்தால் 2.98 கோடி ரூபாய் பற்றாக்குறை ஏற்படும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது ' என்று குறிப்பிடுகிறார்கள்.

திரு. பட்டேல் அவர்கள் குறிப்பிட்ட அதே வாசகத்திற்கும், திரு. சுப்பிரமணியம் அவர்கள் குறிப்பிட்ட வாசகத்திற்கும் முரண்பாடாக 7 கோடி ரூபாய் வித்தியாசம் வருகிற அளவிற்கு அதே கணக்கை நமது நிதி அமைச்சர் மாண்புமிகு திரு. மனோகரன் அவர்களும் இங்கே வைத்துள்ள நிதிநிலை அறிக்கையில் 1976-77 ம் ஆண்டு வருவாய்க் கணக்கில் 5.32 கோடி ரூபாய் பற்றாக்குறை, எல்லாக் கணக்குகளையும் சேர்த்து மொத்தமாகப் பார்த்தால் 2.98 கோடி ரூபாய் பற்றாக்குறை





என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆக, எதிர்பார்க்கப்படுவது 12.37 கோடி ரூபாய் என்று கூறிவிட்டு, அடுத்தாண்டு சொல்லும்போது எதிர்பார்க்கப்பட்டது 5.37 கோடி ரூபாய் என்று கூறுவது பொருத்தமுடையது அல்ல, இதற்கு வேறு எங்கேயாவது கணக்குகள் இருக்கின்றன என்று தேடிப் பார்த்துச் சொன்னாலும் நிதிநிலை அறிக்கையில் திட்டவட்டமாக அதைக் குறிப்பிட்டிருக்கவேண்டும். எனவே, இப்படிப்பட்ட ஒரு பெரிய தவறு விளைந்ததை நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டுவருவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[முற்பகல் 11-00]

இதில் வேறு ஏதாவது கூடுதல் நிதி சேர்ந்துள்ளதா, அப்படியென்றால் அதற்கு என்ன கணக்கு; எந்த வகையில் சேர்ந்தது, ஏன் இவ்வாறு கவனிக்கப்படவில்லை? இந்த நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்படுகிற நேரத்தில் பட்டேல் அவர்களது அறிக்கையை ஒப்பிட்டுப்பார்க்கவில்லையா, சுப்பிரமணியம் அவர்கள் கொடுத்த அறிக்கையை ஒப்பிட்டுப் பார்க்கவில்லையா என்று இயல்பாக நினைக்க வேண்டியிருக்கிறது. அதற்கு நிதி அமைச்சர் அவர்கள் தனது பதிலுரையில் விளக்கம் அளிப்பார்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வரவு-செலவுத் திட்டத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். முதலில் நிதி அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள் கொடுத்தபோது சில விவரங்களைச் சொல்லியிருப்பார்கள். அதன்பின்னால் அடுத்து திரு. எச். எம். பட்டேல் அவர்கள் திருத்தப்பட்ட மதிப்பீட்டைப் பற்றி சொல்லியிருப்பார்கள். திருத்தப்பட்டு வருகின்றவைகளை நிதி அமைச்சர் அவர்கள் அறிக்கையில் குறிப்பிட்டது எதிர்பார்க்கப்பட்டது என்று நான் கருதுகிறேன்.

திரு. மு. கருணாநிதி : திருத்தப்பட்ட மதிப்பீடு என்பது அதற்கடுத்த வரியில் வருகிறது. இதைப் படித்துப் பார்த்தால் தெரியும். சுப்பிரமணியம் அவர்கள் எதிர்பார்க்கப்பட்டது என்று தனியாகச் சொல்லுகிறார். எதிர்பார்க்கப்பட்டது எவ்வளவு தொகை என்று சுப்பிரமணியம் அவர்கள் சொன்னது 12 கோடி, அல்லது மொத்தமாக 9 கோடி என்று கூறி இவ்வளவு துண்டு விழுகிறது என்று சொல்லியிருக்கிறார். எதிர்பார்க்கப்படுகிறது என்று போன ஆண்டில் சொல்லப்பட்டது. இந்த ஆண்டில் பட்டேல் அவர்கள் எதிர்பார்க்கப்பட்டது என்று குறிப்பிடும்பொழுது குறிப்பிட்டு எதைச் சொல்ல வேண்டுமோ அதைத்தான் சொல்ல வேண்டுமே தவிர, அதற்கு மாறாகக் குறிப்பிட்டிருப்பது, தவறானது, முரணானது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த அறிக்கையில் ஆண்டுத் திட்டம் என்ற தலைப்பில் நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் ஒரு வாசகத்தை எடுத்துக் காட்டியிருக்கிறார். அதைப் படிப்பது அவசியம் என்று கருதுகிறேன். அதில்,

"அடிப்படைத் தேவைகளான வேளாண்மை, பாசனம், மின்சக்தி, தொழில்கள் ஆகியவற்றிற்குச் சிறப்புக் கவனம் அளித்து, இந்த வரவு-செலவுத் திட்டத்தில் 1977-78 ம் ஆண்டுத் திட்டத்திற்கு வேண்டிய நிதி ஒதுக்கீடு செய்துள்ளோம். அதே நேரத்தில், குடிநீர் வழங்கல், கல்வி, சுகாதாரம், அரிசனங்கள்—பழங்குடி மக்கள் பின்தங்கிய வகுப்பினர் நலன் முதலிய சமூகப் பணிகளுக்கும் சிறப்புக் கவனம் அளித்துள்ளோம் . . . ."

என்றும் நமது நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். இதே ஆண்டு திட்டத்தை மார்ச் மாதத்தில் பட்டேல் அவர்களால் டெல்லியில் வைக்கப்பட்டபோது என்ன குறிப்பிட்டிருக்கிறார் என்று பார்த்தால், மின் சக்திக்கு இந்த அரசு 94.9 கோடி என்று குறிப்பிட்டிருக்கிறது. திரு. பட்டேல் அவர்கள் இந்த ஆண்டுத் திட்டத்திற்கு இந்த மின்சக்திக்கு 95 கோடி என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். பாசனத்திற்கு இந்த அறிக்கையில் 24.7 கோடி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. திரு. பட்டேல் அவர்களுடைய அறிக்கையில் பாசனத்திற்கு 25 கோடி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. வேளாண்மையும் அதன் தொடர்பான துறைகளுக்கும் 30.2 கோடி என்று இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. திரு. பட்டேல் அவர்களது அறிக்கையில் 30 கோடி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. தொழில்களுக்கு இந்த அறிக்கையில் 13.8 கோடி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. திரு. பட்டேல் அவர்களுடைய அறிக்கையில் 14 கோடி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. போக்குவரத்து, சாலை வசதி என்ற தலைப்புக்கு இந்த அறிக்கையில் 25.2 கோடி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. திரு. பட்டேல் அவர்களுடைய அறிக்கையில் 24 கோடி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. குடிநீர் வழங்கலும் கழிவு நீர் அகற்றலும் என்ற தலைப்பில் இங்கு 26.5 கோடி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. திரு. பட்டேல் அவர்களது அறிக்கையில் 25 கோடி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. கல்விக்கு 13.3 கோடி ரூபாய் என்று சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. திரு. பட்டேல் அவர்களுடைய அறிக்கையில் 13 கோடி ரூபாய் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஏனைய சமூக பொருளாதார பணிகளுக்கு 34.9 கோடி ரூபாய் என்று இந்த அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது. திரு. பட்டேல் அவர்களுடைய அறிக்கையில் 34 கோடி என்று அதாவது வீட்டுவசதி என்கிற தலைப்பில் 16 கோடியும் சமூகப் பொருளாதாரம் என்பதில் 18 கோடி என்றும் ஆகமொத்தம் 34கோடி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. வேளாண்மை, பாசனம், குடிநீர், மின்சக்தி போன்ற எந்தெந்த



தலைப்புகளில் தனிக்கவனம்செலுத்தப்படும்என்று ஜனதாகட்சியைச் சேர்ந்த திரு. பட்டேல் அவர்களுடைய ஆண்டுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறதோ அதே வாசகத்தைத்தான் எழுத்து பிசகாமல் இந்த நிதிநிலை அறிக்கையிலும் நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். இரண்டு நிதிநிலை அறிக்கையையும் எடுத்துப் படித்துப் பார்த்தால் நான் சொன்னவை எவ்வளவு சரியானது என்பதை நாம் புரிந்து கொள்ள முடியும்.

எனவேதான், டெல்லியிலே நாடாளு மன்றத்திலே மத்திய நிதி அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட தமிழ்நாடு ஆண்டுத் திட்டத்திற்கும் இங்கே இப்போது வைத்துள்ள ஆண்டுத் திட்டத்திற்கும் எள்ளளவும் வேறுபாடு இல்லை. குறிப்பாக, சொல்ல வேண்டுமானால், இந்த ஆண்டுத் திட்டத்தைப் பார்த்த பிறகு, இதை ஒரு ஜனதா பட்ஜெட் என்றேகூட சொல்லலாம் என்று நான் கருதுகிறேன். ஆனால், ஒரே ஒரு வித்தியாசம் அதிலே, 260 கோடி ரூபாய் ஆண்டுத் திட்டம் என்று குறிக்கப்பட்டிருக்கிறது. இங்கே 263.5 கோடி ரூபாயாக அதாவது 3.5 கோடி ரூபாய் உயர்த்தப்பட்டிருக்கிற ஒன்றைத் தவிர, மத்திய நிதி அமைச்சர் திரு. பட்டேல் அவர்கள் சமர்ப்பித்த திட்டங்கள்தான் இதிலேயும் இருக்கின்றதே தவிர, வேறு எந்தப் புதிய அம்சமும் நமது நிதி அமைச்சர் அவர்களது நிதிநிலை அறிக்கையிலே கிடையாது என்பதை நான் இங்கே வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக, எல்லா அரசுகளும் எந்தெந்தப் பிரச்சனைகளிலே சிறப்புக் கவனத்தை நிதிநிலை அறிக்கையிலே செலுத்துமோ, அதையேதான் நாம் இந்த நிதிநிலை அறிக்கையிலேயும் காண முடிகிறது. பாசன வசதிகளைப் பற்றிக் குறிப்பிடும்போது, "கடந்த காலத்தில், திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நிதிநிலை அறிக்கையில் போதுமான ஒதுக்கீடு செய்யாமலேயே பாசனத் திட்டங்கள் பல அறிவிக்கப்பட்டன. இதனால் இத்திட்டங்களை நிறைவேற்றி முடிப்பதற்கும் காலத்தாமதம் ஆயிற்று" என்று கடந்த கால அரசைப்பற்றி இந்த நிதிநிலை அறிக்கையிலே குறை கூறியிருக்கிறார்கள். கடந்த காலத்தில் பாசனத் திட்டங்களுக்கு எவ்வளவு கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது என்பதற்குச் சில உதாரணங்களை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கழக அரசு வருவதற்கு முன்பு தீட்டப்பட்ட திட்டங்களான இராமா நதி, மணிமுக்தா நதி, கடானா நீர்த்தேக்கத் திட்டம் எல்லாம் கழக அரசு காலத்தில் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டுள்ளன. பரப்பலாறு திட்டத்திற்கு, 1974–75 ஆம் ஆண்டில் 13·46 லட்சமும், 1975–76-ல் 4·79 லட்சமும் 1976–77-ல் 4·60 லட்சமும் செலவழிக்கப்பட்டதால், இந்த ஆண்டு 2·81 லட்சம் மாத்திரம் இந்த நிதிநிலை அறிக்கையிலே ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைக் கூர்ந்து கவனித்தால் நீர்ப்

பாசனத் திட்டங்களை முன்பிருந்த கழக அரசு நிறைவேற்றாமல் விட்டு விடவில்லை என்பதைத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும்.

அதைப்போலவே, சன்னாறு திட்டத்திற்கு, கழக அரசு 1974–75 ஆம் ஆண்டு 32·49 லட்சமும், 1975–76-ல் 13·90 லட்சமும், 1976–77-ல் அதன் தொடர்பாக 24·18 லட்சமும் ஒதுக்கப்பட்ட காரணத்தால், இப்போது 2.56 லட்சம் மட்டுமே இந்த ஆண்டு இந்த நிதிநிலை அறிக்கையிலே ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை நாம் நினைவிலே வைத்துக்கொள்ள வேண்டும்.

தண்டரை அணைக்கட்டுத் திட்டத்திற்கு, 1974–75-ல் 18·76 லட்சமும், 1975–76-ல் 7·49 லட்சமும், 1976–77-ல் 4·04 லட்சமும் செலவழித்த காரணத்தால், இந்த ஆண்டு இந்த திட்டத்திற்கு 1·51 லட்சம் மட்டுமே ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நாம் மறந்து விடக்கூடாது.

நந்தன் கால்வாயைப் புதுப்பித்தலுக்காக கழக அரசு 26.41 லட்சம் 1974-75லும், 39,64 லட்சம் 1975-76லும் செலவழித்தக் காரணத்தால், இப்போது வெறும் 50 ஆயிரம் மாத்திரமே இந்தக் கால்வாய்த் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது.

கருப்பா நதித் திட்டம், பிளவுக்கால் திட்டம், பாலாறு பொருந்தலாறு, குடகனாறுத் திட்டம், வறட்டுப்பள்ளம் நீர்தேக்கத் திட்டம் போன்றத் திட்டங்களை நிறைவேற்றத் தொடங்கி, கழக அரசு பெரும்பகுதியை முடித்து விட்டது என்பதை யாரும் மறுக்க இயலாது. எனவே, கழக அரசு பாசன வசதிகளைத் தோற்றுவிக்க வில்லை, போற்றப்படவில்லை என்கிற குற்றச்சாட்டை யாரும் கூற இயலாது என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

சேர, சோழ, பாண்டியர் காலத்திலே இருந்து தமிழகத்தில் ஏறத்தாழ 40 லட்சம் ஏக்கராதான் பாசன வசதிபெற்றது என்றாலும், இடையில் 20 ஆண்டு கால காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் திரு. பக்தவச்சலம் ஆட்சிக் காலம் வரை 8 லட்சம் ஏக்கரா புதிதாகப் பாசன வசதி பெற்றது என்பதும், பிறகு கிட்டத்தட்ட 9 ஆண்டு கால கழக ஆட்சியின்போது 16 லட்சம் ஏக்கரா பாசன வசதி பெற்றது என்பதையும் நாம் மறந்துவிடலாகாது.

1975–76-ல் அறிவித்த வீராணம் ஏரியினை சீரமைத்தல், செண்பகத் தோப்பு நீர்த்தேக்கம், தொட்டஹள்ளா நீர்த்தேக்கம், சித்தமல்லி நீர்த்தேக்கம், உப்பாறு நீர்த்தேக்கம்,



சிறுமலையாறு நீர்த்தேக்கம், பொய்கை அணைக்கட்டு, கௌண்டியா நதி நீர்த்தேக்கம் ஆகிய திட்டங்கள் மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டு, அதற்கான தொடக்கப் பணிகள் செய்யப்பட்டதையும் மறைத்து விட இயலாது

பரம்பிக்குளம்-ஆளியாறு பிரச்னையை எடுத்துக்கொண்டால், கேரள அரசோடு சுமுகமாகப் பேசி தீர்த்து, நீராறு வாயிலாகக் கிடைக்கும் தண்ணீரை பரம்பிக்குளம் ஆயக்கட்டுப் பகுதிகளில் கிட்டத்தட்ட 89,000 ஏக்கராவிற்குப் பகிர்ந்து அளிப்பது என்கிற ஒரு திட்டம் தீட்டப்பட்டு, அது செயல்படுத்தப்படக்கூடிய நிலைக்கு வந்தது.

(முற்பகல் 11-10)

1975–76 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் இதைப்பற்றி நான் அப்போதே குறிப்பிட்டிருந்தேன்—கழக அரசு சார்பாக—அதற்குப் பிறகு கோவையிலுள்ள சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளு மன்ற உறுப்பினர்கள் கட்சி சார்பற்ற முறையில் கலந்து பேசி அவர்களுடைய கோரிக்கைகளுக்குச் செவிமடுத்து 89,000 ஏக்கர் என்பதை ஏறத்தாழ ஒரு லட்சம் ஏக்கர் அந்தப் பகுதியிலுள்ள ஆயக்கட்டுதாரர்களுக்கு அதாவது பரம்பிக்குளம் ஆளியாறு ஆயக்கட்டுதாரர்களுக்கு, பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை பல்லடம், தாராபுரம் வட்டங்கள் ஆகியவற்றில் வேலைகள் தொடங்க ஏற்பாடாயிற்று. கழக அரசு அந்த நேரத்தில் கலைக்கப்பட்டு, குடியரசுத் தலைவர் ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்டு அந்தத் திட்டங்கள் — எந்த வேலையும் நடைபெறாமல் அப்படியே நிறுத்தி வைக்கப்பட்டு விட்டன என்பதை இந்த நேரத்தில் குறிப்பிடுவது — பாசன ஆதாரங்களில், பாசன வசதிகளைப் பெருக்குவதில் முன்பு இருந்த கழக அரசு எள்ளளவும் பின் தங்கியிருக்கவில்லை என்பதை எடுத்துக் காட்டுவதற்காகத்தான் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

நிதியமைச்சர் அவர்கள் இப்போது அறிவித்துள்ள செண்பகத் தோப்புத் திட்டத்திற்கு இந்த ஆண்டு 25 லட்சம் ரூபாய் தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் கேளவரப்பள்ளி நீர்த்தேக்கத் திட்டத்திற்கு நிதிநிலைக் குறிப்பின் படி ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ள அந்தப் பெரிய திட்டம் நிதிநிலை அறிக்கையில் காணப்படாமல், செண்பகத் தோப்புத் திட்டம் மாத்திரம் நிதிநிலை அறிக்கையில் காணப்படுகிறது. ஆனால் அதற்காகக் கொடுக்கப்பட்ட புத்தகத்தில் செண்பகத் தோப்புத் திட்டமும் இருக்கிறது. கேளவரப்பள்ளி திட்டமும் இருக்கிறது. பெரிய திட்டம் நிதிநிலை அறிக்கையில் எடுத்துக் காட்டப்படாததற்குக் காரணம் என்ன? என்று எனக்குப் புரியவில்லை. நிறைவேற்ற இருப்பதாக அறிவித்துள்ள ஏழு திட்டங்களையும் கூட நிதிநிலை அறிக்கையில் ஒரு பக்கம், இரண்டு பக்கம் அதிகமானாலும் பரவாயில்லை என்று அதனு

டைய விவரங்களை அறிவித்திருந்தால் உறுப்பினர்களுக்கு வசதியாக இருந்திருக்கும் என்பதைச் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது.

புதிதாக அறிவிக்கப்பட்டுள்ள ஏழு திட்டங்களுக்குச் சுமார் இரண்டு கோடி ரூபாய்தான் ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது — விவரங்களைப் பார்க்கும்போது. அதிலே, கழக அரசு போதுமான நிதியைத் திட்டங்களுக்காக வழங்கவில்லை என்ற குற்றச்சாட்டையும் நிதிநிலை அறிக்கையில் தெரிவித்தார்கள். குதிரையாறு நீர்த்தேக்கத் திட்டத்திற்கு ஆயிரம் ரூபாய் மாத்திரமே ஒதுக்கியிருப்பதாகக் குறிப்புகளில் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அது போதுமான நிதியா என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். அது மாத்திரமல்ல; அறிவிக்கப்பட்டுள்ள செண்பகத் தோப்புத் திட்டத்திற்கு 3½ கோடி ரூபாய் செலவாகுமென்று நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டு விட்டு, இந்த ஆண்டு 25 லட்சம் ரூபாய்தான் அதற்காக ஒதுக்கியிருப்பதை நான் குறை சொல்ல மாட்டேன். ஏனென்றால், திட்டங்களைத் தொடங்கும்போதே அதனுடைய மதிப்பீட்டுத் தொகை அவ்வளவையும் ஒரேயாண்டில் ஒதுக்குவது இயலாது. நான் இப்படி ஆளும் கட்சிக்காக வாதாடுகின்ற அதே நேரத்தில், ஆளும் கட்சி வைத்த நிதிநிலை அறிக்கையில், முன்பு இருந்த ஆளும் கட்சி எத்தனையோ திட்டங்களை எல்லாம் கன்னாபின்னா என்று அறிவித்துவிட்டு அதற்குப் பணத்தை ஒதுக்க முடியாமல் அவஸ்தைப்பட்டது என்ற குற்றத்தைச் சொல்லியிருக்கும் காரணத்தால்தான் இதைக் குறிப்பிடுகிறேனே தவிர வேறல்ல. பாசன வசதியைப் பெருக்கப் பெரும் பணியை மேற்கொண்ட கழக அரசைக் குறை கூறுவதற்காக இந்த நிதிநிலை அறிக்கையில் அப்படிப்பட்ட வாசகத்தை சேர்த்திப்பது உள்ளபடியே பொறுத்துக்கொள்ள இயலாதது ஆகும். எனினும் பொறுத்துக்கொண்டு நான் ஆளும் கட்சியின் சார்பாக 3½ கோடி ரூபாய் திட்டத்திற்கு 25 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள், அப்படித்தான் ஒதுக்க முடியும் என்று உங்களுக்காக வாதாட வேண்டியவனாக இருக்கிறேன். அப்படித்தான் ஒதுக்க முடியும் என்பதை நான் இங்கே எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்று, நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் புதிய திட்டம் என்று ஒன்றை அறிவித்திருக்கிறார்கள். அது முன்பே சென்ற ஆண்டிலே அறிவிக்கப்பட்ட திட்டமாகும். இந்த அறிவிப்பு வேறோரிடத்தில் செய்யப்பட்டிருக்கிறது

> "தொழுநோய் பெருமளவில் பரவியுள்ள செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென்னாற்காடு, சேலம் ஆகிய மாவட்டங்களில் தொழு நோயைத் தடுத்தல், தொடக்க நிலையிலேயே கண்டறிதல், கட்டுப்படுத்துதல் ஆகியவற்றை முக்கிய நோக்கங்களாகக் கொண்டு பள்ளிச் சிறார்களுக்கு, மருத்துவ உதவி அளிக்கபுதிய திட்டம் தொடங்கப்படும்,"



என்று இந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டது. 1976–77 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை அறிக்கையில் நாடாளுமன்றத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சியின் போது திரு. சுப்பிரமணியம் அவர்கள் இதனை அறிவித்திருக்கிறார்கள்.

எனவே 1976–77–ல் அறிவித்துவிட்ட காரணத்தாலே இது ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட ஒரு பழைய திட்டம் ஆகிறது. ஆனால் இந்த நிதிநிலை அறிக்கையிலே 35-வது பாராவிலே 'மற்றொரு புதிய திட்டத்தை அறிவிக்கிறேன்' என்று குறிப்பிட்டு,

> "குறிப்பாக, செங்கற்பட்டு, தருமபுரி, வட ஆற்காடு, தென் ஆற்காடு, சேலம், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை மாவட்டங்களிலும், தஞ்சாவூர், மதுரை, கோயம்புத்தூர் மாவட்டங்களில் சில பகுதிகளிலும் அதிக அளவில் உள்ள தொழு நோயைத் தடுப்பது இத்திட்டத்தில் முக்கிய நோக்கமாகும்"

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இது ஒரு புதிய திட்டம் என்று அறிவிக்கப்பட்டிருக்க வேண்டியதில்லை. அது இந்த அவையைத் திசை திருப்புவதாகிவிடும். நான், வேண்டுமென்றே நிதியமைச்சர் அவர்கள் திசை திருப்புகிறார்கள் என்று சொல்லமாட்டேன். ஏனென்றால் இது கன்னி பட்ஜெட், ஆகவே இப்படிச் சொல்லியிருப்பது இந்த அவையை திசை திருப்புவதாக ஆகிவிடும். அந்தத் திட்டத்தை அங்கே சி. எஸ். அவர்கள் சொன்னார்கள். அந்தத் திட்டத்தையே புதிய திட்டம் பார் என்று சொல்லியிருக்கிறீர்கள். நான் என்னுடைய உரையிலே முதலிலே ஜனதா கட்சியின் பட்ஜெட்டாக நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் சமர்ப்பித்த பட்ஜெட் இருக்கிறது என்று கூறினேன். இப்போது இன்னொரு பக்கத்திலே பார்த்தால் காங்கிரஸ் கட்சியின் பட்ஜெட்டாகவும் — இந்த திட்டத்தை எடுத்துக்கொண்ட வகையிலே — தோற்றம் அளிக்கிறது. இப்படி ஒரு பக்கத்திலே பார்த்தால் ஜனதா கட்சியின் பட்ஜெட்டாகவும் இன்னொரு பக்கத்திலே பார்த்தால் காங்கிரஸ் கட்சியின் பட்ஜெட்டாகவும் தெரிகிறது. இப்போதுள்ள ஆளுங்கட்சியின் பட்ஜெட் எது என்று கேட்கிறேன். என்ன புதுமைகள் செய்திருக்கிறீர்கள் என்று கேட்க விரும்புகிறேன். பக்கத்திற்குப் பக்கம் கிராமம், மகளிர், குடிநீர், அரிஜனம் என்கின்ற வார்த்தைகள் வந்து வந்து போகின்றன. இப்படி வார்த்தைகள் அடிக்கடி நிதிநிலை அறிக்கையில் புழக்கத்திலே காணப்படுகிறதே அல்லாமல் அந்தத் தலைப்புகளில் உருவான திட்டங்கள் எதுவும் குறிப்பிட்டுச் சொல்கின்ற அளவிற்கு வகுக்கப்படவில்லை என்பதே எங்களுடைய குற்றச்சாட்டாகும்.

ஆளுங்கட்சி உறுப்பினர்கள் பலரும் இங்கே பேசிய நேரத்திலே முன்னேற்றக் கழக ஆட்சியின் போது கிராமங்கள்மேல் அக்கறையே காட்டவில்லை என்று பேசினார்கள். இப்போதுள்ள

[திரு. மு. கருணாநிதி] [1977 ஆகஸ்ட் 3

ஆளுங்கட்சிதான் கிராமங்களின் பால் அக்கறை காட்டுகிறது என்றெல்லாம் சொன்னார்கள். கிட்டத்தட்ட ஆயிரம் அல்லது ஆயிரத்து ஐநூறு கிராமங்களைத் தவிர எல்லா இடங்களிலும் கழக ஆட்சியின் காலத்திலேயே மின் விளக்கு வசதிகள் செய்யப் பட்டன என்பதை யாரும் மறந்துவிடலாகாது. சில பேர்கள் சொல்கிறார்கள், இந்தியாவிலேயே அரியானா மாநிலத்தில் தான் முழுமையாக மாநிலம் முழுவதும் மின் விளக்கு வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. தமிழ்நாட்டில் அப்படி செய்யப் பட்டதாக பெருமை அடித்துக்கொள்ள கழக அரசிற்கு உரிமை இல்லை என்றெல்லாம் சொன்னார்கள். அரியானா எவ்வளவு பெரிய மாநிலம் என்பது அரியானா மாநிலத்திற்கு அடிக்கடி டெல்லி யிலிருந்து அந்தப் பகுதிக்குச் சென்று வருகின்ற வாய்ப்பை பெற்றிருந்த நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள், ஏறத்தாழ செங்கற்பட்டு மாவட்டத்தின் பரப்பளவு உள்ள மாநிலம் தான் அரியானா மாநிலம். அங்கே மின்சார வசதி முழுமையாக செய்யப்பட்டிருக்கிறது, ஆனால் பல செங்கற்பட்டு மாவட்டங்களை உள்ளடக்கிய தமிழகத்தோடு அதை ஒப்பிடுவது முறையாகாது, சரியாகாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1967-ம் ஆண்டிலேயே தமிழ்நாட்டிலே 2 இலட்சம் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கப்பட்டிருந்தது. அந்த எண்ணிக்கை 1975 ஆம் ஆண்டில் 7 லட்சமாக உயர்ந்தது என்பதை எண்ணிப் பார்க்கிறபோது அது கிராமங்களுக்குச் செய்யப்பட்ட காரியமாகத் தெரியவில்லையா? எங்கோ ஒன்றிரண்டு பம்பு செட்டுகள் வேலை செய்யாவிட்டால் கிராமங்களுக்கு ஒதுக்கப் படுகின்ற நிதி போய்ச் சேரவில்லை, மக்களுக்குப் போய்ச் சேர வில்லை என்று மற்றொரு புதிய வார்த்தையைச் சொல்கிறார்கள், ஊழல், லஞ்சம், இப்போது மூன்றாவது செலவு செய்த பணம் மக்களுக்குப் போய்ச் சேரவில்லை என்று சொல்கிறார்கள். புள்ளி விவரங்களைக் காட்டினால் புள்ளிவிவரங்களைப் பார்த்து நாங்கள் ஏமாறத் தயாராக இல்லை என்கிறார்கள். புள்ளிவிவரங்களை வைத்துத்தான் நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்படுகிறது. புள்ளி விவரங்களை வைத்துத்தான் அரசாங்க அறிக்கை வெளிவருகிறது. புள்ளி விவரங்களிலே ஒன்றிரண்டு தவறுகள் இருக்கலாம், அதனால் மொத்தமே தவறு என்று யாரும் கூறமுடியாது. 1967 ஆம் ஆண்டில் இரண்டு லட்சமாக இருந்தது 1975 ஆம் ஆண்டிலே 7 லட்சம் பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கப்பட் டிருக்கிறது. இவைகள் எல்லாம் கழக அரசிலே கிராம மக்க ளுக்குச் செய்யப்பட்ட காரியங்கள் இல்லையா?

கிராமங்களிலே உள்ள அரிசனங்களுக்கு ஒரு லட்சம் என்ற இலக்காக கொண்டு இலவசமாக 4,000 ஆயிரம் ரூபாய் பெறு மானமுள்ள 40 ஆயிரம் வீடுகள் கட்டித் தரப்பட்டிருக்கின்றன. இவைகள் எல்லாம் கிராமங்களிலே உள்ள அரிசனங்களுக்குச் செய்யப்பட்ட காரியமாகத் தோன்றவில்லையா?



1977 ஆகஸ்ட் 3]

*மாண்புமிகு திரு பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் 40 ஆயிரம் வீடுகள் என்று குறிப்பிட்டார் கள். 40 ஆயிரம் அல்ல, 30,022 வீடுகள் தான் கட்டி முடிக்கப் பட்டன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 11·20]

திரு மு. கருணாநிதி :—பத்தாயிரம் வித்தியாசத்தில் ஒன்றும் பறிபோய் விடவில்லை. நாற்பதாயிரம் வீடுகள் கட்டித் தரப் பட்டன என்கின்ற புள்ளி விவரங்களை எங்களுக்கு அளித்த அதே அதிகாரிகள்தான் இப்பொழுது முப்பதாயிரத்து சொச்சம் என் கின்ற புள்ளி விவரத்தையும் உங்களுக்கு அளித்திருக்கிறார்கள். ஆகவே, இரண்டு பேரும் அதிகாரிகளிடத்தில் சண்டை போட வேண்டுமே தவிர நமக்குள் சண்டை போட்டுக் கொள்வதிலே அர்த்தமில்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

கிராமச் சிறப்பு சாலை வசதிக்காக மூன்றரை கோடி ரூபாய் 1974–75-ம் ஆண்டில் இந்த அரசின் சார்பாக மூன்றரை கோடி ரூபாய் செலவழித்திருக்கிறோம். அதாவது, ஏற்கெனவே கிரா மத்தில் இருக்கிற சாலை வசதிகள் போக சிறப்பு சாலை வசதிகளுக் காக கழக அரசு 1974–75இல் மூன்றரை கோடி ரூபாய் செலவிடப் பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்தின் தொடர்ச்சியாக 1975–76-ம் ஆண்டுக்கும், வரும் ஆண்டுத் திட்டம் என்ற பெயரில் 1976–77-ம் ஆண்டுக்கும் ஏழரை கோடி ரூபாய் கிராமச் சிறப்புச் சாலைத் திட்டத்திற்காக 1975–76-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே நான் அந்தப் பொறுப்பிலிருந்த பொழுது அறிவித்திருக்கிறேன், அவ்வாறு 1975–76-ஆம் ஆண்டுக்கு இரண்டரை கோடி ரூபாயும், 1976–77-ம் ஆண்டுக்கும் இரண்டரை கோடி ரூபாயும் ஆக ஐந்து கோடி ரூபாய் கிராமச் சிறப்புசாலை வசதிக்காக அப்பொழுதே செல வழிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் மிச்சமுள்ள இரண்டரை கோடி ரூபாயில் மிச்சமுள்ள இரண்டாண்டுகளுக்குச் செலவிடக் குறிப் பிட்ட தொகையை மூன்றாண்டுகளில் செலவழிப்பதாக இருந் தால் கூட அந்த இரண்டரை கோடி ரூபாயை இந்த ஆண்டு செல வழிக்கப்படும் என்று குறிப்பிட்டிருக்க வேண்டும். அல்லது குறிப்பேடுகள் ஏதாவது இருந்திருக்க வேண்டும். ஆனால் சுமார் ஒன்றரை கோடி ரூபாய்தான் கிராமப்புற சிறப்புச் சாலைகளுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. எனவே இதைவிட அதிகமாகக் கிராமப் புற சிறப்புச் சாலைகளுக்கு முன்பிருந்த கழக அரசு அக்கறையோடு பணியாற்றியதை எடுத்துக் காட்டுவதற்காகத்தான் இதைக் குறிப் பிடுகிறேன். இந்த இரண்டரை கோடி ரூபாயில் ஒன்றரை கோடி ரூபாய் போக மிச்சமுள்ள பணம் கிராமச் சாலைகளுக்கு ஒதுக்கப்பட வேண்டும். வேறு எந்தத் துறைகளுக்குத் திருப்பப் பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். அப்படித் திருப்பப்பட்டிருக்குமானால் கிராமச் சிறப்புச் சாலைகளின் மீதுள்ள அக்கறையை எடுத்துக்காட்டுவதாக இருக்காது என்பதை இங்கே எடுத்துக் கூறக் கடமைப் பட்டிருக்கிறேன்.

[திரு. மு. கருணாநிதி] [1977 ஆகஸ்ட் 3

கிராமங்களின் மின் வசதிக்காக 1974–75-ல் 9 கோடி ரூபாயும், 1975–76-ல் 13·75 கோடி ரூபாயும் ஆக இருந்தது, 1976–77-ல் 9·50 கோடி ரூபாயாகவும், 1977–78-ல் 11·20 கோடி ரூபாயாகவும் என்று குறைந்துள்ளதை நான் இங்கு சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. கிராமங்களில் உள்ள அரிசன காலனிகளில், குடியிருப்புகளுக்கு 1933ஆம் ஆண்டு, மின்சாரம் தமிழ்நாட்டுக்கு அறிமுகமான அந்தக் காலத்திலேயேயிருந்து 1967-ஆம் ஆண்டு வரையில் 4,354 அரிசனக் குடியிருப்புகளுக்குத்தான் மின் விளக்கு வசதி செய்யப்பட்டன. கிட்டத்தட்ட 33 ஆண்டுக் காலத்திற்கு. ஆனால் இந்த ஒன்பதாண்டுக் கால கழக ஆட்சியில் 13,768 அரிசனக் காலனிகள் மின் விளக்கு வசதிகள் பெற்றிருக்கின்றன என்பதை நான் எடுத்துக் காட்டும்பொழுது இவையெல்லாம் கிராமங்களுக்காகச் செய்யப்பட்ட காரியங்கள் அல்லவா என்பதை எண்ணிப் பார்த்திடவேண்டும்.

குடிநீர் எல்லாக் கிராமங்களும் முழுமையாகப் பெறவில்லை என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். அதிலே இந்த அரசும் முதல் அமைச்சரவர்களும், மற்ற அமைச்சர்களும், ஏன் இந்த மன்றத்திலே இருக்கின்ற எல்லா உறுப்பினர்களும் அவரவர்களுடைய தொகுதியை மனத்திலே வைத்தும், ஆங்காங்கு இருக்கின்ற கிராம மக்களுடைய அவதியை மனத்திலே பதிய வைத்தும் இன்னும் குடிநீர் வசதி, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதியை எல்லா கிராமங்களுக்கும் பெருக்கிட வேண்டுமென்பதில் அதிக அக்கறை உள்ளவர்களாக இருக்கிறோம். எனவே, அதிலே இரண்டு விதமான கருத்துக்களுக்கு இடமில்லை. அது முழுமை அடையவில்லை என்கிற அதே நேரத்தில் கிராமங்களுக்குப் பாதுகாக்கப்பட்ட முறையில் குடிதண்ணீர் தர வேண்டுமென்பதில் பழைய அரசு அக்கறை எடுத்துக் கொண்டதா இல்லையா என்பதையும் நாம் கவனிக்கத் தவறி விடக் கூடாது. வெள்ளைக்காரர்களுடைய காலத்திலேயிருந்து 67-ம் ஆண்டு வரையில் குடிநீர் வசதிக்காகச் செலவழிக்கப்பட்ட தொகை 80 கோடி ரூபாய். ஆனால் 71-ம் ஆண்டிலேயிருந்து 75-ம் ஆண்டு வரையில், குடிநீர் வாரியம் அமைக்கப்பட்ட பிறகு நான்காண்டுக் காலத்தில் குடிநீர் வழங்குவதற்காகச் செலவழிக்கப்பட்ட தொகை 53 கோடி ரூபாய் என்பதை நான் இங்கே எடுத்துக் காட்டுவது சிறப்புடையதாக இருக்கும் என்று கருதுகிறேன்.

நகரங்களும், கிராமங்களும் இப்பொழுது குடிநீர் வாரியத்தின் சேர்கிறது. நகரங்களுக்கு குடிநீர் அளிக்கும் நேரத்தில் வழியிலே உள்ள பல கிராமங்களுக்கும் இணைந்துப் பயன்பட்டிருக்கிறது. கிராமங்களைப் பற்றி அறிக்கையிலே அதிகமாகச் சொல்லப்பட்டிருப்பதால் முன்பிருந்த அரசு செய்திருக்கும் காரியங்களை இந்த அரசும் மேற்கொள்ளும், மேற்கொள்கிறது. மேற்கொள்ள முயற்சிக்கிறது என்ற அடிப்படையில்தான் இந்த விவரங்களை நான் சொல்ல விரும்புகிறேன்.



1977 ஆகஸ்ட் 3] [திரு. மு. கருணாநிதி]

உதாரணமாக சிவகங்கை குடிநீர்த் திட்டத்திற்கு தண்ணீர் கொண்டு செல்லப்படுகிறதென்றால், இடைக்காட்டூர், பாப்பான்குளம், பிக்கூர், பெரியகோட்டை, கீழக்கநந்தாரி, வானியங்குடி ஆகிய கிராமங்கள் பயன்பெறுகின்றன.

இராமநாதபுரம் நகருக்குத் தண்ணீர் கொண்டு செல்கிறோம் என்றால், கொட்டி, செட்டிகுறிச்சி, கருத்தவேந்தல், தேவேந்திர நல்லூர், மாவலங்காரி, கீழக்கோட்டை, தீயானூர், எட்டிவயல், அச்சுடன் வயல் ஆகிய கிராமங்கள் பயன்பெறுகின்றன.

பெருந்துறை நகருக்குத் குடிதண்ணீர் கொண்டு செல்கிறோம் என்றால், வழியிலுள்ள சென்னிமலை, கேசிபாளையம், சித்தோடு, குமரியான் பரப்பு, நசியனூர், கங்காபுரம், துடுப்பதி, ஜீனப்புரம், மூக்காத்திப் பிடாரியூர், சுள்ளிபாளையம், ஒட்டப்பாறை, அம்மாபாளையம் ஆகிய கிராமங்கள் பயன்பெறுகின்றன.

தஞ்சை-கொள்ளிடம் குடிநீர்த் திட்டத்தின் மூலம் விளாங்குடி, புனல்வாயில், திருவையாறு, முகாசா கல்யாணபுரம், கண்டியூர், ஆவிக்கரை, மணக்கரம்பை, ராஜேந்திரம், ஆற்காடு ஆகிய கிராமங்கள் பயன்பெறுகின்றன. எனவே குடி தண்ணீர் திட்டத்திலே முன்பிருந்த அரசு கவனம் செலுத்தவில்லையென்று குறை சொல்வது என்பது முறையாகாது என்பதற்காகத்தான் இந்த விவரங்களை அதிக அளவுக்குக் கொடுக்க நேரமில்லை என்பதாலே, ஓரளவுக்குச் சுட்டிக்காட்டினேன்.

மகளிர் நலன் பாதுகாக்கப்படும் என்கின்ற தலைப்பிலே தரப்பட்டிருக்கின்ற உதவிகள் மிகவும் குறைவானவை. ஆனால் மகளிர் நலனுக்காக மேற்கொண்டிருக்கிற அக்கறையைப் பாராட்டுகின்ற அதே நேரத்தில் ஆயிரம் மகளிருக்கு மாத்திரம் தட்டச்சு, சுருக்கெழுத்துப்பயிற்சி பெற மாதம் ஒன்றுக்கு ரூ. 12 அளவில் உதவி வழங்குவதென்பது மிகக் குறைந்த தொகை. குறைந்த எண்ணிக்கையுள்ள மகளிரே பயன்பெறுகின்றார்கள்.

விதவைகளுக்குப் பழைய கழக அரசால் தையல் இயந்திரங்கள் வாங்கித் தரப்படுவதென்று, ஒரே நாள் விழாவிலே ஆயிரம் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன, அதற்குப் பிறகு அந்தத் திட்டம் தொடர்ந்து நடைபெறும் என்று எண்ணினோம். ஆனால் குடியரசுத் தலைவருடைய ஆட்சியிலே, அந்தத் திட்டம் நடைபெற்றதா இல்லையா என்று கூடத் தெரியவில்லை. நடைபெற்றதாகச் செய்திகள் வெளிவராத காரணத்தால் நடைபெறவில்லை என்றே கருதுகிறேன்.

விதவைகள் துயர் தீர்க்கப் பல திட்டங்கள் இருப்பதாக, தேர்தல் அறிக்கையிலே இன்றைய ஆளுங்கட்சி சொன்னபோதிலும் அவை அனைத்தும் இந்த நிதிநிலை அறிக்கையில் இடம் பெறவில்லை என்பதை நான் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது.

[திரு. மு. கருணாநிதி] [1977 ஆகஸ்ட் 3

கழக ஆட்சிக் காலத்தில் விதவைகள் திருமணம் செய்து
கொள்ள வேண்டும்—விதவைத் திருமணம் நடைபெற வேண்டு
மென்ற பகுத்தறிவுக் கொள்கையின் அடிப்படையில் பெரியாரும்
அண்ணாவும் எந்தக் கொள்கைகளுக்காகப் பாடுபட்டார்களோ
அந்த அடிப்படையில் செயல்பட வேண்டுமென்று விதவைகளைத்
திருமணம் செய்து கொள்கின்ற வாலிபர்களுக்கு, அந்தத்
தம்பதிகளுக்கு, சிறு சேமிப்புப் பத்திரம் ரூ. 5,000 தரப்படு
மென்றும் 7 ஆண்டுக் காலத்தில் அது ரூ. 10,000 ஆக மாறு
மென்றும் அப்பொழுது பரிசுகள் வழங்கப்பட்டன. அந்த 7
ஆண்டுக் காலம் வைப்பதற்குக் காரணம் ரூ. 5,000 வாங்கு
வதற்காக ஒரு விதவையைத் திருமணம் செய்து கொண்டு பிறகு
கைவிட்டுவிட்டுச் சென்றுவிட்டால் என்ன ஆவது என்பதற்காகத்
தான் 7 ஆண்டுகளுக்கு ஒழுங்காக நடந்து அதற்குப் பிறகு
ரூ. 10,000 பெற்றுக் கொள்ள வேண்டுமென்ற அளவில் விதவைத்
திருமணத்திற்கு ஊக்கம் அளிக்கிற வகையிலே அந்தத் திட்டத்
தைப் பழைய அரசு வகுத்தது. அதை இந்த அரசும் தொடர்ந்து
நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த
நிதி நிலை அறிக்கையிலே எதுவும் சொல்லாத காரணத்தால்,
அதனைச் சொல்ல வேண்டியவன் ஆனேன்.

மகளிர் நலன் என்ற தலைப்பிலே இந்த அறிக்கையிலே
இன்சூரன்ஸ் போன்ற காரியங்களிலே அவர்களுக்கு உதவு
வதற்கும் பிராவிடெண்ட் பண்ட் போன்ற காரியங்களிலே அவர்
களுக்கு உதவுவதற்கும் ஆங்காங்கு மகளிருக்கு உதவி உதவி
நிலையங்கள் மாநிலத்தில் பல இடங்களில் வைக்கப்படும் என்று
ஏற்படுத்துவது தேவைதானு என்பது எனக்கு ஏற்பட்டுள்ள சந்
தேகம். கேள்வி அல்ல. சந்தேகம். கேள்வி என்றால் தேவை
இல்லை என்று பொருளில் அமைந்துவிடும். ஏன் சந்தேகம்
எழுகின்றதென்றால், ஏற்கனவே மாவட்டங்களில் மாவட்ட
மகளிர் மன்றங்கள் ஆங்காங்கு இருக்கின்றன. அரசு உதவியோடு
பல இடங்களில் நடைபெற்று வருகின்றன. அவைகளே
இந்தப் பிரச்னைகளைக் கவனித்துக்கொள்ள முடியுமென்று கருது
கிறேன்.

அது மாத்திரமல்ல, இன்சூரன்ஸ் செய்து கொள்ளக்கூடிய
அளவுக்குச் சூழல் உள்ளவர்கள் தங்களுக்குப் பிறகு யாருக்கு
அந்த இன்சூரன்ஸ் தொகை சேர வேண்டுமென்று எழுதிவிட்டுச்
செல்கிறார்கள். அதே போல், பிராவிடெண்ட் பணம் யாருக்குச்
சேர வேண்டுமென்று குறிப்பிட்டு விட்டுச் செல்கிறார்கள்.
அப்படிப்பட்ட நிலையில் ஏதாவது தவறுகள் ஏற்படுமானால்
அதைத் தீர்த்து வைப்பதற்கு இப்போதுள்ள மாவட்ட மகளிர்
நல அதிகாரிகளே கூடப் போதும். எனவே அதற்கென்ற
உதவி நிலையங்கள் தேவையில்லையென்பது என்னுடைய கருத்து.

வரிகளைப் பொறுத்தவரையில் இந்த நிதிநிலை அறிக்கையில்
வரவேற்கத்தக்க அம்சங்களும்—அதே நேரத்தில், சில மாறுபட்ட
கருத்துக்களை எடுத்துச் சொல்லி அதற்கு நிவாரணமும் அரசு



[திரு. மு. கருணாநிதி]

1977 ஆகஸ்ட் 3] வாய்ந்த அம்சங்களும்
வேண்டும் என்று கூறுகின்ற தகுதி
இருக்கின்றன என்பதை நாம் மறந்து விடுவதற்கில்லை.

[முற்பகல் 11-30]

இங்கே நம்முடைய நண்பர் ப.உ.ச. அவர்கள் காங்கிரஸ்
தலைவர் திரு. மாரிமுத்து அவர்கள் பேசிய நேரத்தில் குறுக்கிட்டு
விளக்கியதைப் போல, இப்போது நீங்கள் பெரும்பாலும் நீக்கி
யிருக்கிற அல்லது குறைத்திருக்கிற வரிகள் எல்லாம் கழக
ஆட்சிக் காலத்தில் போடப்பட்ட வரிகள் அல்ல. குடியரசுத் தலைவ
ருடைய ஆட்சிக் காலத்தில்தான் கரும்பு, தென்னை, வெற்றிலை,
மஞ்சள் போன்றவைகளுக்குத் தீர்வை 25 ரூபாய் என்று விதிக்கப்
பட்டு, பிறகு 20 ரூபாயாகக் குறைக்கப்பட்டு, இப்போது 20
ரூபாயிலிருந்து 15 ரூபாய் என்று குறைக்கப்படுகிறது என்று
சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வெற்றிலையும், மஞ்சளும் என்ன
பாவம் செய்தது என்று எனக்குப் புரியவில்லை. இதிலே அறவே
நீக்குகின்ற வரிகளில் ஒன்றாக மஞ்சளைச் சேர்த்து அதற்குப்
போடுகிற வரியை நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மகளிர் நலனில் மிகுந்த அக்கறை உள்ளதாக அறிவித்திருக்கிற
இந்த ஆட்சி மஞ்சளுக்கு வரி போட்டது என்ற கெட்ட பெயரை
எடுத்துக் கொள்ளக்கூடாது என்று—முதலமைச்சர்டால் எனக்
குள்ள அன்பின் காரணமாக எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்
கிறேன். கழக ஆட்சி காலத்திலேயும் இது பற்றி யோசிக்கப்
பட்டது. நிதித் துறை மஞ்சளுக்கு வரி போடவேண்டுமென்று
சொன்ன நேரத்தில், 'சென்டிமென்டாக' நான் 'மஞ்சளுக்கு
வரி போட்ட ஆட்சி என்று சொல்வார்கள் ஆகவே வேண்டாம்'
என்று அப்போதே சொன்னேன். அதைத்தான் இப்போதும்
சொல்லி, கரும்பு, தென்னை, வெற்றிலை போன்றவைகளுக்கு
அறவே நீக்க முடியாவிட்டாலும், மஞ்சளுக்கு உள்ள வரியை
யாவது நீக்கவேண்டுமென்று மகளிர் சார்பாக நான்— இந்த
அடவன் கேட்டுக்கொள்கிறேன்.

வரி விலக்குவதையும், வரி குறைப்பதையும் வரவேற்கும்
அதே நேரத்தில் நீங்கள் இந்த வரிகளைக் குறைத்திருப்பது அல்லது
நீக்கியிருப்பது, ஏற்கனவே குடியரசுத் தலைவர் ஆட்சியில் திரு.
சி. சுப்ரமணியம் அவர்கள் வரிகளைப் போட்டபோது என்ன
காரணங்களைச் சொன்னாரோ அந்தக் காரணங்களைச் சிந்தித்தால்
அதிலே நீங்கள் முரண்படுகிறீர்கள் என்பதையும் யோசிக்க
வேண்டும். அவர் சொன்னார், "இந்த வரிகள் பணப்
பயிர்களுக்குப் போடப்படுகிற வகையில் சாதாரண மக்களையோ
சமுதாயத்தின் அடித்தளத்து மக்களையோ பாதிக்காது என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன்" என்பதாக அவர் குறிப்பிட்டு
அப்போது இந்த வரிகளை எல்லாம் போட்டார். அந்த வரவு-
செலவுத் திட்டம் நாடாளுமன்றத்தில் குடியரசுத் தலைவர்
காலத்தில் நிறைவேறியது. அப்போது நம்முடைய நிதியமைச்சர்
அவர்கள் என்ன கருத்துக்களைச் சொன்னாரோ எனக்கு ஞாபகம்
இல்லை அல்லது எனக்குத் தெரியவில்லை. இப்போதாவது அது

சமுதாய மேல்மட்டத்தில் உள்ளவர்களைத்தான் பாதிக்கும். அடித்தளத்து மக்களைப் பாதிக்காது என்று சொன்ன கருத்திற்கு மாறுபாடாக அது குறைக்கப்பட வேண்டும் அல்லது அறவே நீக்கப்படவேண்டும் என்கின்ற வகையில் நிதிநிலை அறிக்கையில் நீங்கள் அறிவித்திருப்பது மெத்தவும் பாராட்டுக்குரிய ஒன்று என்பதை நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏற்கனவே கழக அரசு காலத்தில் 59 பொருள்கள் மீது பலமுனை விற்பனை வரி இருந்ததை ஒரு முனை வரியாக ஆக்கியிருக்கிறோம். அதைத் தமிழ்நாட்டிலுள்ள வணிகப் பெருமக்களும், வாங்குவோரும் மெத்தப் பாராட்டிப் பேசினார்கள். மேலும் பலமுனை வரிகளை எல்லாம் ஒரு முனை வரியாக ஆக்க வேண்டும் என்கிற முறையீடுகள் அடிக்கடி அரசுக்கு வந்து கொண்டிருக்கும் என்பதை நான் அறிவேன். அதே நேரத்தில் பலமுனை வரி வெல்லம், வெல்லத்தூள், உருண்டை வெல்லம், நாட்டுச் சர்க்கரை ஆகியவைகளுக்கு ஏற்கனவே இருந்த ஒரு முனை வரியை மாற்றி பலமுனை வரியாக விதித்திருப்பது தேவையில்லை என்பதை நான் இங்கே சுட்டிக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன். ஏன் என்றால் இது பற்றி என்னிடமும் மற்ற எதிர்க் கட்சியினரிடமும் வந்த வணிகப் பெருமக்கள் இப்போதிருக்கிற 5 சதவிகித ஒருமுனை வரியை 6 அல்லது 7 இன்னும் கூட கொஞ்சம் அதிகமானால் 8 சதவிகிதத்திற்கு வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்கள், இந்தப் பலமுனை வரி என்ற தன்மை வேண்டாமென்று சொன்னார்கள். அதை கொள்கை அளவிலேகூட, முதலமைச்சர் அவர்கள் நிதி அமைச்சருக்கு அந்த அறிவுரையை ஆலோசனையைத் தருவார்கள் என்று நம்புகிறேன். ஏன் என்றால் அவரே கூட தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்றாக 1977-ம் ஆண்டு மே மாதம் 24-ம் தேதி அன்று அவரை ஆசிரியராகக் கொண்ட அண்ணா பத்திரிகையிலே, பழனித் தொகுதியிலே பேசிய பேச்சு வெளிவந்திருக்கிறது.

அதிலே இன்றைக்கு முதலமைச்சராக உள்ளவர், அன்றைக்குக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். "பலமுனை விற்பனை வரி விதிப்பது விலைகள் உயரக் காரணமாகி விடுகிறது என்று வியாபாரிகள் தரப்பில் சொல்லப்படுகிறது. அது பற்றி பரிசீலித்து ஒரு முனை வரியாக மாற்றுவோம்" என்று பழனியில் சொல்லியிருக்கிறார்கள். பரிசீலித்து மாற்றுவோம் என்று சொல்லியிருக்கிறார். எனவே அதை மனதில் வைத்துக் கொண்டு மாற்றுவார் என்று எதிர்பார்க்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: சிலவற்றிற்குப் பலமுனை வரியும், சிலவற்றிற்கு ஒருமுனை வரியும் இருக்கிறது என்று சொல்லி, எந்த அளவிற்கு மாற்ற வேண்டுமோ, அந்த அளவிற்கு மாற்றப்பட வேண்டும் என்று குறிப்பிட்டு, பலமுனை வரி பல்வேறு நிலைகளில் உள்ள பொருள்களுக்கு மாற்றப்பட வேண்டும் என்று சொல்லிய கருத்தை நான் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன்.



திரு. மு. கருணாநிதி: விளக்கம் அளிக்கிற காரணத்தால் அச்சப்படுகிறேன். பலமுனை வரியை நீட்டாமல், மேலும் இப்போது பலமுனை வரி விதிக்கப்படும் பொருட்களுக்கு ஒரு முனை வரியாக அவைகளை மாற்றி அமைக்க வேண்டுமென்று நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

கேளிக்கை வரி பற்றிய பிரச்சனையில் ஏற்கெனவே இந்த மாமன்றத்தில் பல நேரங்களில் அது விவாதிக்கப்பட்டிருக்கிறது அப்போதெல்லாம் இதிலே வரி ஏய்ப்பு எந்த வகையில் நடைபெறுகிறது என்ற பிரச்சனைகளும் ஆராயப்பட்டிருக்கின்றன. சென்னை போன்ற இடங்களில் உள்ள திரையரங்குகளில் அவர்கள் வாராந்திர வாடகை, மாதாந்திர வாடகை இவைகளை நிர்ணயிப்பதின் மூலமாக சிறுசிறு படங்களை எடுப்பவர்கள், குறைந்த செலவில் படமெடுப்பவர்கள் எவ்வளவு அவதிக்கு ஆளாகிறார்கள் என்ற கருத்து அப்போது ஆளுங்கட்சி, எதிர்கட்சி என்ற இருதரப்பிலிருந்தும் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. இதையெல்லாம் முதலமைச்சருக்கு நான் புதிதாகக் கவனப்படுத்த வேண்டிய அவசியமில்லை. இதையெல்லாம் மனதில் நிறுத்தி 1975-ஆம் ஆண்டு கழக அரசு காலத்தில் நவம்பர் திங்களில் ஒரு குழு அமைக்கப்பட்டு, அதிலே கட்சி சார்பற்ற முறையில் எல்லோரும் பங்கு பெறவும், சினிமா தொழில் அதிபர்களும் அந்தக் குழுவில் பங்கு பெறவும் வாய்ப்புக்கள் அளிக்கப்பட்டு, அந்தக் குழு ஒரு பரிந்துரையை இந்த அரசிடம் வழங்கியிருக்கிறது. அதற்குப் பிறகு கழக அரசு கலைக்கப்பட்டுவிட்ட காரணத்தால் இடையில் உள்ள ஓராண்டுக் காலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சியில் அது கவனிக்கப்படவில்லை.

இப்போது செய்யப்பட்டிருக்கிற இந்த வரிக் குறைப்பால் அதிக பலன் கிட்டவில்லை என்று அந்தத் துறையில் உள்ளவர்கள் எடுத்துக்காட்டிக்கொண்டிருக்கிறார்கள். அந்தக் குழுவின் அறிக்கை என்னவாயிற்று என்பதையும், அதுபற்றி என்ன முடிவை இந்த அரசு எடுக்கஇருக்கிறது என்பதையும், இன்றைக்கு இல்லாவிட்டாலும், தொடர்ந்து வருகின்ற மானிய விவாதங்களில் அரசின் சார்பில் விளக்குவார்கள் என்று நான் நம்புகிறேன்.

அரசு ஊழியர்களுக்கு இடைக்கால நிவாரணமாக பத்து ரூபாய் கொடுத்து, அதனை 200 ரூபாய்க்கு மேல் மாதச் சம்பளம் வாங்குபவர்களுக்குத்தான் என்று கூறி, 200 ரூபாய்க்குக் குறைவாகச் சம்பளம் வாங்குபவர்களுக்கு அந்தப் பத்து ரூபாய் இல்லை என்று கூறியிருப்பது சோஷலிசத்திற்கு உகந்த ஒரு நிலையாகாது என்பதை நான் வற்புறுத்திக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, 200 ரூபாய்க்குக் குறைவாக ஊதியம் பெறுபவர்கள் கடைநிலை ஊழியர்கள், காவல்துறை நண்பர்கள், சாலைகளில் வேலை செய்யும் மேஸ்திரிகள் என்று இப்படி மூன்றரை இலட்சம் பேர் இதனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த பத்து

[திரு. மு. கருணாநிதி] [1977 ஆகஸ்ட் 3

ரூபாய் இடைக்கால நிவாரணத்தை அனைவருக்கும் சேர்த்து
அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எப்போதும்
பதிலின்போது சலுகைகள் சிலவற்றை அறிவிப்பது வழக்கம்.
அந்த வகையில் இன்றைக்கு இதனை அறிவிப்பார்கள் என்று நம்பு
கிறேன். நிதியமைச்சர் இன்று அப்படி அறிவிப்பதின் மூலமாக
நிச்சயமாக பெயரைத் தட்டிக்கொண்டு போவார் என்று நான்
நம்புகிற காரணத்தினால் அந்த அறிவிப்பை இன்று இங்கே
செய்வார் என்ற மன நிறைவோடு, முழு நம்பிக்கையோடு அந்த
வேண்டுகோளை நான் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக 15 ரூபாய், சம்பளத்தில் பிடித்தம் செய்
வதன் மூலமாக 25 ஆண்டுகளுக்குப் பிறகு, 10,000 ரூபாய் அரசு
ஊழியர்களுக்குக் கொடுக்கப்படும் என்கிற இந்தத் திட்டம்—
ஆளுங் கட்சியில் இருப்பவர்கள் வருத்தப்படக்கூடாது—
தத் திட்டத்தை யோசித்துத் தந்தவர்களும் வருத்தப்படக்கூடாது— இந்
—உடனடியாக கைவிட வேண்டிய திட்டம் என்பதை நான் இங்
கே தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால் 200 ரூபாய்க்குமேல்
சம்பளம் உள்ளவர்களுக்குப் பத்து ரூபாய் கொடுத்து, அவர்களிட
மிருந்து 15 ரூபாயைப் பிடித்துக் கொள்ளுகிறீர்கள். அந்தப்
பத்து ரூபாய் கொடுக்கப்படாத மூன்றரை இலட்சம் பேர்களிட
மிருந்தும் 15 ரூபாயைப் பிடித்துக் கொள்கிறீர்கள். ஆகவே,
பத்து ரூபாய் கிடைக்காதவர்களும் இதிலே பாதிக்கப்பட்டு அவ
திக்கு ஆளாகுகிறார்கள். பல உறுப்பினர்கள் இது பற்றிய கணக்கு
களை எடுத்துக் காட்டினார்கள்.

[முற்பகல் 11-40]

தமிழ் நாடு மாநிலக் கூட்டுறவு வங்கியிலே பண சேமிப்புத்
திட்டம் என்கின்ற ஒரு திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டத்தில்
ஒரு நபர் மாதம் ரூபாய் 15 வீதம் கட்டிக்கொண்டிருந்தால்,
25 ஆண்டுகளில், அவருக்கு 20,948 ரூபாயாகக் கிடைக்கிறது.
அந்தப் பலாப் பழத்தை விரும்புவார்களா, இந்த களாப் பழத்தை
விரும்புவார்களா என்பதை தயவு செய்து நிதியமைச்சர் எண்ணிப்
பார்க்கவேண்டும். அது இஷ்டப்பட்டால் கட்டுகிற பணம்.
இது கட்டாயமாக நீங்களே எடுத்துக்கொள்கின்ற பணம்.
னும் சொல்லப்போனால் அதே 15 ரூபாய்க்குப் பதிலாக இன்
தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கியில் 15-க்குப் பதிலாக அந்த
ரூபாய் 5 வீதம் 30 ஆண்டுகளுக்குக் கட்டினால், முடிவில் ரூபாய்
12 ஆயிரம் பெறலாம். ரூபாய் 5 வீதம் 30 ஆண்டுகள் கட்டினால்
ரூபாய் 12 ஆயிரம் பெறுகிறார்கள். ரூபாய் 15 வீதம் 25 ஆண்டு
களுக்குக் கட்டினால் ரூபாய் 20 ஆயிரம் பெறுகிறார்கள். ஆகவே,
இது அதிகமாக லாபத்தைத் தராது. இப்படிப்பட்ட சேமிப்பை
விட்டுவிட்டு, நீங்கள் அவர்களிடத்தில் வரி போடுவதைப்போல,
சுருக்கமாகச் சொல்லிவிடலாம்— அரசு ஊழியர்களுக்கெல்லாம்
தலைக்கு ரூபாய் 15 வரி என்று சுருக்கமாகச் சொல்லி விடலா



[திரு. மு. கருணாநிதி]
1977 ஆகஸ்ட் 3]

ரூபாய் 15 பிடித்துக்கொண்டு விடுவது ஏற்றுக்
அதே போல, ரூபாய் 15 என்று கணக்கு வைத்துப்
கொள்ளக்கூடிய ஒன்றல்ல. ரூபாய் 13 கோடி உங்க
பார்த்தால், ஒரு ஆண்டுக்கு ஏறத்தாழ ரூபாய் 13 கோடி உங்க
ளுக்கு கிடைக்கும். அந்தக் கணக்கு எங்கேயாவது இருக்கிறதா
என்று பார்த்தேன். இருப்பதாகத் தெரியவில்லை. அதிலிருந்து
புரிந்து கொண்டேன். அந்த 13 கோடி ரூபாயை வரவு வைக்காத
காரணத்தால், அதைப்பற்றிக் குறிப்பிடாத காரணத்தால், அதை
விட்டுவிடுவீர்கள் என்று கருதுகிறேன். இல்லாவிட்டால், அதை
வரவு வைத்து 13 கோடியைக் காட்டி இருப்பீர்கள். ஆக, ஒரு
ஆண்டு 13 கோடி ரூபாயை அரசு ஊழியர்களிடமிருந்து பெற்றுக்
கொள்ள எண்ணுகிறீர்கள். அருமையான திட்டங்கள்— இதை
விட லாபகரமான திட்டங்கள் இருக்கின்றன— எனவே இதை
விட்டுவிட வேண்டும். இல்லையேல் 13 கோடிக்குக் கணக்கு வைத்
திருக்கிறோம், ஆகவே வைத்துக்கொள்கிறோம் என்றெல்லாம்
ஆதாரங்களைக் கொடுப்பீர்களானால்— அரசு பொறுப்பிலிருப்பவர்
கள்— ஆகவே, அதிகமான ஆதாரங்களைக் கொடுப்பதற்கு அதிகாரி
கள் இருக்கிறார்கள்— ஆகவே, அப்படிப்பட்ட ஆதாரங்களை எடுத்து
காட்டுவதன் மூலமாக, 13 கோடி ரூபாய்க்குக் கணக்குகளைக்
காட்டியிருக்கிறோம், ஆகவே, அந்த 13 கோடி ரூபாயை பயன்
படுத்திக் கொள்கிறோம் என்று வாதிடாமல், அந்த அரசு ஊழி
யர்களின் வயிற்றில் அடிக்காமல், 15 ரூபாய் பிடிக்கின்ற திட்டத்
தை தயவு செய்து கைவிட வேண்டுமென்று நான் வற்புறுத்தி
உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கவர்னருடைய உரையில், 16 ஆயிரம் ரெவின்யூ
கிராமங்களில் இந்த அரசின் சார்பில், நியாய விலைக்
கடைகளைத் திறக்கப் போகிறோம் என்று குறிப்பிட்டிருந்தார்கள்.
கவர்னர் உரையிலே குறிப்பிடப்பட்ட மிக முக்கியமான ஒரு
திட்டம்— நிதிநிலை அறிக்கையிலே காணப்படவில்லை. அதற்காக
பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறதா என்றால் அதுவும் தெரியவில்லை.
இந்த 16 ஆயிரம் கிராமங்களில் 9 ஆயிரம் கிராமங்களுக்கு மேல்,
அரிசி, சர்க்கரை, கோதுமை ஆகியவை வழங்கப்படுகிறது. அவை
மாத்திரமல்லாமல், உப்பு, புளி, மிளகாய் போன்ற பலசரக்கு
சாமான்களும் நியாய விலையில் கிடைப்பதற்கு ஒவ்வொரு
ரெவின்யூ கிராமத்திலும் இவ்வளவு என்று சொன்னால், இப்போது
சென்னை என்று எடுத்துக் கொண்டால், சென்னையிலே இருக்கின்ற
100 கடைகளைப் பொறுத்த வரையில் ஒரே ரெவின்யூ கிராமமாக
ஆக்கிவிட்டால், ஒரு கடை என்றுதான் கணக்குப் பார்க்க
வேண்டும். அப்படிப் பார்த்தால், 16 ஆயிரம் ரெவின்யூ கிராமங்
களில், இன்னும் ஆயிரத்திற்கு மேல் சேர்த்துக்கொள்ள வேண்டும்.
அதையும் சேர்த்துக் கொண்டு பார்ப்போமானால், 17 ஆயிரம்
கிராமங்களுக்கும், இந்தக் கடைகளை மாற்றிக் கொடுத்தால், மிகக்
குறைந்த கணக்குப்படி, ரூபாய் 10 கோடியாவது ஆகும். இதற்கு
நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்குமானால் நிதிநிலை அறிக்கையில்
ஏன் எடுத்துச் சொல்லப்படவில்லை என்று அறிந்துகொள்ள ஆவல்

உடையவனாக இருக்கிறேன். ஏனென்றால், கவர்னர் உரையில்
சொல்லப்பட்டதை எல்லாம் நிதிநிலை அறிக்கையில் கோடிட்டுக்
காட்ட வேண்டும்.

ஏனென்றால், தமிழ் மக்களுக்கு, தமிழ் கலாச்சாரத்திற்கு,
தமிழுக்கு, இன்னென்ன காரியங்கள் செய்யப்படும் என்று கோடிட்
டுக் காட்டி, இவைகளை எல்லாம் நீங்கள் இந்த நிதிநிலை அறிக்
கையிலே விவரமாக எடுத்துச் சொல்லி இன்னென்ன செய்வோம்
என்று சொல்லியுள்ளதால், இங்கே பெரிய பிரச்சனையாக இருக்
கின்ற அந்தப் பிரச்சனையைப் பற்றி இந்த அறிக்கையிலே குறிப்
பிட்டிருக்கலாம் என்பதற்காகக் கவலைப்பட்டு கேட்கிறேனே
அல்லாமல் வேறல்ல.

அந்த நியாய விலைக் கடைகள் எப்போது திறக்கப்படும்,
அதற்காக செய்யப்பட்ட ஒதுக்கீடுகள் எவ்வளவு என்ற விவரங்
களை எல்லாம் நிதியமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்தால்
நல்லது என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்த வரையில், புதி
தாக எந்தக் கொள்கையும் சொல்லப்படவில்லை என்பதுதான்
எனது வாதம். எதிர்த் தரப்பில் பேசிய சில கட்சித் தலைவர்
களுக்கும் இதே கருத்து இருக்கிறது என்பதை, இந்த அவையி
லுள்ள யாரும் மறந்திருக்க முடியாது.

நிலச் சீர்திருத்தம் பற்றி தேர்தல் நேரத்தில் அளித்த உறுதி
மொழிகள் எதுவும் இங்கு இடம் பெறவில்லை. நம்முடைய
மார்க்ஸிஸ்ட் கட்சித் தலைவர் திரு. சங்கரய்யா அவர்கள்கூட
தேசீய உடைமையாக்கும் திட்டங்களைப் பற்றி எல்லாம் திராவிட
முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் இங்கே வலியுறுத்திப் பேச
வில்லை. நாளைக்கு பேசுகிற எதிர் கட்சித் தலைவர் அவர்களா
வது அது பற்றி பேசுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன் என்று
குறிப்பிட்டார்கள். நாங்கள் பேசினாலும் பேசாவிட்டாலும்,
திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில் தேசிய
மயமாக்கும் கொள்கையில் மிகத் தீவிரமாக இருந்து வருகிறது
என்பதை நண்பர் சங்கரய்யா அவர்கள் உணருவார்கள் என்று
கருதுகிறேன்.

அந்தக் காரணத்தால்தான் ஏற்கனவே அலுமினியம் தொழிற்
சாலை தேசிய மயமாக்கப்பட வேண்டும் என்று இந்த அவையில்
தீர்மானித்தோம். ஆனால் மத்திய அரசினுடைய ஒப்புதல் இது
வரையில் அதற்குக் கிடைத்தபாடில்லை. அதேபோல் பஸ்கள்,
கிட்டத்தட்ட 10,000 பேருந்துகளில் 4,000-க்கு மேற்பட்ட,
பேருந்துகள் கழக ஆட்சிக் காலத்தில் தேசீய மயமாக்கப்பட்டன.
டி.வி.எஸ். ராமன், அன்ட் ராமன் போன்ற பெரிய கம்பெனி
களுடைய பஸ்கள் எல்லாம் அன்றைக்கு அரசுடைமையாக்கப்பட்டு
அவைகள் பல்வேறு கழகங்களாக, பல்வேறு வாரியங்களாக இன்



றைக்கு அமைக்கப்பட்டு அவைகள் எல்லாம் இன்று சிறந்த ப
யினை ஆற்றிக் கொண்டிருக்கின்றன. எனவே தேசிய மயமாக்கு
கொள்கையில் எங்களுக்கு எள்ளளவும் பின்வாங்கும் தன்மை
இடையாது என்று அவைக்கு நான் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

திரு. ஆர். உமாநாத் : கனம் எதிர் கட்சித் தலைவர் அவர்க
சொல்கிறபோது செலக்டிவ்வாக சில இன்டஸ்ட்ரீஸ், பாக்டரிகளை
தேசிய மயமாக்குவது என்று முன்பிருந்ததைப் பற்றிச் சொ
கிறார்கள். அதை ஒத்துக் கொள்கிறேன். திரு. சங்கரய்யா
அவர்கள் குறிப்பிட்டது 75 குடும்பங்கள், பெரிய பிஸினஸ்,
ஹௌஸஸ் தேசீய மயமாக்கப்படுவது பற்றித்தான். அவைகள்
எல்லாம் தேசீய மயமாக்கப்படுமா என்றுதான் கேட்டார்கள்.

திரு. மு. கருணாநிதி : அண்ணா அவர்கள் இங்கே எதிர்கட்சித்
தலைவராக இருந்தபோது அதைப் பற்றியும் பேசியிருக்கிறார்கள்
ஆகவே, அந்தக் கொள்கையில் நாங்கள் எள் அளவும் பின் வாங்
கிட மாட்டோம் என்பதை மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித்
தோழர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். கொள்கை ரீதி
யாக தேர்தல் அறிக்கையில் எடுத்துச் சொல்லப்பட்ட பல விவரங்
கள் இந்த நிதி நிலை அறிக்கையில் இல்லை என்பதை நான் கோடிட்டு
காட்டாமல் இருக்க முடியாது. விவசாயிகளுடைய நலன்களைப்
பாதுகாக்க பயிர் இன்ஷூரன்ஸ் திட்டம் செயல்படுத்தப்படும்
என்று நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் சட்ட மன்றத்
தேர்தலுக்கு முன்பு பல கூட்டங்களில் பேசியிருக்கிறார்கள்.
தேர்தல் அறிக்கையிலேகூட அவ்வாறு கருத்து அமைந்த அந்த
வார்த்தைகள் போடப்பட்டிருக்கின்றன. பழனியில் அவர்கள்
பேசிய பேச்சில்—மே மாதம் 24-ம் தேதி அவர்களுடைய
'அண்ணா', பத்திரிகையிலேயே வெளி வந்திருக்கிறது.
அ.இ.அ.தி.மு.க. ஆட்சி அமைந்தவுடன் விவசாயிகளின் நலன்களைப்
பாதுகாக்க பயிர் இன்ஷூரன்ஸ் திட்டம் செயல்படுத்தப்படும்.
விவசாயிகளின் நலன்களைப் பாதுகாக்க பயிர் இன்ஷூரன்ஸ் திட்
டத்தை தேர்தல் அறிக்கையிலும் கழகம் அறிவித்துள்ளது....
விவசாயிகள் கடன் தொல்லைகளுக்கு ஆளாகாமல் இருக்க இந்தத்
திட்டம் உதவிகரமாக இருக்கும் என்றும் குறிப்பிட்டார்கள்.
இப்போது, தேர்தல் நேரத்தில் தருகிற வாக்குறுதிகள் வேறு,
இந்த இடத்தில் வந்து உட்கார்ந்துவிட்ட பிறகு பொறுப்புகள்
வேறு, நிலைமைகள் வேறு, இப்போது இதையெல்லாம் மத்திய
அரசுதான் செய்ய வேண்டும் என்பதை உணர்ந்து மத்திய அரசு
இதற்கான ஒரு திட்டத்தைக் கொண்டு வர வேண்டும் என்று
இன்றைக்கு குறிப்பிட்டிருக்கிறார்கள். விவசாயிகளுடைய தினக்
கூலியை மாற்றி மாதச் சம்பளம் அளிக்கப்படும் என்று நம்முடைய
முதல் அமைச்சர் அவர்கள் அவர்களுடைய கட்சிக் கொள்கையை
ஏற்கனவே அறிவித்திருக்கிறார்கள். நான் கவர்னர் அவர்கள்
உரையின் மீது பேசும்போதுகூடச் சுட்டிக் காட்டினேன். இந்த
நிதிநிலை அறிக்கையில் விவசாயிகளின் தினக் கூலி மாற்றப்பட்டு

[திரு. மு. கருணாநிதி] [1977 ஆகஸ்ட் 3

அவர்களுக்கு மாதச் சம்பளம் அளிக்க என்னென்ன வழிவகைகள்
செய்யப்பட்டிருக்கின்றன என்று இந்த அறிக்கையில் நான் தேடித்
தேடிப் பார்த்தேன். அது காணப்படவில்லை. சர்க்கரை ஆலை
ஒன்று அமைக்கப்படுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.
ஏற்கனவே இருந்த கழக அரசுக் காலத்தில் ஒரு முக்கியமான
முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. இனிமேல் அமைக்கப்படும்,
சர்க்கரை ஆலைகள் எதுவாக இருந்தாலும் அது தனியார் துறை
யில் இல்லாமல் பொதுத் துறையில்தான் அமையும் என்று ஒரு
முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறுதான் இது அமையும்,
அமைய வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அந்த நம்பிக்
கையையும் நான் பெறுகிறேன். படி அரிசித் திட்டம் பற்றி இந்த
மன்றத்தில் விவாதம் நடைபெற்றது. நம்முடைய முதல்
அமைச்சர் அவர்கள் அதற்கு ஒரு தேதி கூறி பதில் தருவதாகச்
சொல்லிவிட்டு அதிலுள்ள சங்கடங்களை எல்லாம் இங்கே எடுத்து
விளக்கினார்கள். படி அரிசி கிடையாது என்று முடிவாகச் சொன்
னார்கள். ஆனால் அவர்கள் அறிவித்த தேர்தல் பிரகடனத்திலும்
வானொலிப் பேச்சிலும், அண்ணா அவர்கள் ஆட்சியில் அமர்ந்ததும்
ஏழை மக்களுக்கு ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடுவோம்
என்றார்கள். ஆனால் அதிகாரிகள் சர்க்காரின் வரவு செலவுக்
கணக்கைக் காட்டி ஆண்டு ஒன்றுக்கு எட்டு கோடி ரூபாய் துண்டு
விழும் என்று கூறினார்கள். எட்டு கோடி ரூபாயை எப்படித்
தேடுவது என்று அதற்கு வழி கண்டு பிடிக்க வேண்டுமே தவிர
ஏழைகளின் வயிற்றில் அடிக்காதீர்கள்: என ஒரு ரூபாய்க்கு ஒரு
படி அரிசி திட்டத்தை முதல் கட்டமாக அண்ணா அவர்கள் நிறை
வேற்றினார்கள்.

(முற்பகல் 11–50.)

அவர்களுடைய பேச்சிலே " இதுபோன்ற திட்டங்களை நிறை
வேற்றிட ஆட்சியில் இருப்பவர்களுக்கு அறிவாற்றலோடு, கஷ்டப்
படுகிற மக்களிடத்திலே கருணை காட்டும் உள்ளமும் வேண்டும்"
என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அன்றைக்கு முதலமைச்சர்
அவர்கள் வாதிட்டதெல்லாம், அண்ணா அவர்களுக்கு அடை
மொழியாக "படியரிசித் திட்டம் கொண்டு வந்த அண்ணா" என்று
குறிப்பிட்டதாக தெரிவித்திருக்கிறார்கள். இந்த அமைச்சரவை
யின் அறிவாற்றலை நான் சந்தேகிக்கமாட்டேன். அறிவாற்றல்
நிரம்பப் பெற்றவர்கள் இருக்கின்றனர். அறிவாற்றல் அதிகம்
இருக்கிறது என்றாலும் கூட இன்னும் அதிகமாக பெறுவதற்காக
" பிரெயின் டிரஸ்ட் " ஒன்று வைக்கப்போவதாகவும் சொல்லிக்
கொண்டிருக்கிறீர்கள். ஆகவே உங்களுடைய அறிவாற்றலை நான்
சந்தேகிக்கவில்லை. நிரம்ப இருக்கிறது, அதை நான் பாராட்டு
கிறேன். ஆனால் நீங்கள் தேர்தல் நேரத்தில் சொன்னபடி கருணை
காட்டும் உள்ளத்தோடு படி அரிசித் திட்டத்தைக் கொண்டு
வாருங்கள் என்றுதான் நான் மீண்டும் மீண்டும் இந்த ஆட்சியா
ளர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.



1977 ஆகஸ்ட் 3] [திரு. மு. கருணாநிதி]

வீடுகளுக்கும், வேளாண்மைத் துறைக்கும் மின் கட்டணத்தை
குறைப்போம் என்று தேர்தல் அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்
கிறது. தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களிலும் சொல்லப்பட்டிருக்
கிறது. இவைகளும் படியரிசி போன்றவைகளும் நிலைமைகளை
ஆராயாமல் தரப்பட்ட தேர்தல் வாக்குறுதிகள் என்பதை இப்
போதாவது உணர்கிறீர்களா அல்லது ஏதாவது குறைக்கப் போகி
றீர்களா என்பது எனக்குப் புரியவில்லை. நிதிநிலை அறிக்கையில்
அது பற்றி கோடிட்டு காட்டவில்லை என்ற காரணத்தால்.

விலைவாசி பற்றி கழக அரசின் மீது முன்பு குற்றஞ் சாட்டப்
பட்டது. இதற்குக் காரணம் மத்திய அரசா அல்லவா என்பது
இங்கே வந்து அமர்ந்த பிறகு தெரிந்து கொண்டிருக்க முடியும்.
விலைவாசி அதிகமாகிவிட்டது என்று சொன்ன நேரத்திலே இரண்டு
கட்சிகளும் ஒன்றாக இருந்தபோது மத்திய அரசுதான் அதற்குக்
காரணம் என்று சொல்லி வந்தாலும், பிரிவு ஏற்பட்டுவிட்ட பிறகு
முன்னேற்றக் கழக அரசுதான் காரணம் என்று சொல்ல வேண்டிய
நிலை அன்று எதிர்க் கட்சியாக இருந்த இன்றைய ஆளுங்கட்சிக்கு
தவிர்க்க முடியாத நிலை ஏற்பட்டது. இப்போது விலைவாசியை
மத்திய அரசு தான் குறைக்க வேண்டிய இடத்தில் இருக்கிறது
என்கின்ற பேருண்மையை நாம் அனைவரும் உணர்ந்து கொண்டி
ருக்கிறோம். " விலைவாசி நிலையாக ஒரு சில காலம் இருந்திருப்
பினும்" என்று நிதிநிலை அறிக்கையில் நிதி அமைச்சர் குறிப்பிட்ட
ஒரு வார்த்தையை வைத்துக் கொண்டு ஆளும் கட்சியில் உள்ள
உறுப்பினர் ஒன்றைச் சொன்னார். அந்த வாசகத்திற்கு அவர்
தந்த விளக்கம், " அந்த ஒரு சில காலம் என்பது எந்தக் காலம்
தெரியுமா, அதுதான் அவசர காலம், நெருக்கடி காலம் அப்போது
தான் விலைவாசி ஒரு நிலையாக இருந்தது " என்று இங்கே பேசினார்.

ஆனால் அந்தக் காலத்திலே விலைவாசி நிலையாக இல்லை என்
பதை நானல்ல, அன்றைய நிதியமைச்சராக இருந்த திரு. சி.
சுப்பிரமணியம் அவர்களே எடுத்துக் காட்டியிருக்கிறார். அதாவது
1976-ம் ஆண்டு மார்ச் மாத நிலையோடு ஒப்பிட்டுப் பார்த்தால்
விலைவாசிகள் 15.5 சதவிகிதம் அதிகரித்துள்ளது உண்மையே
என்று அப்போதைய நிதி அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள்
ஒத்துக்கொண்டிருக்கிறார். இந்த விலை உயர்வினால் பழையபடி
பணவீக்க நிலைமைக்கு இப்போது இந்தியா வந்துள்ளது. பொரு
ளாதாரத்தில் பணவீக்கப் போக்கு ஏற்பட்டுள்ளது என்று திரு.
சி. சுப்பிரமணியம் அவர்கள் கூறினார் என்று "ஸ்டேட்ஸ்மென்"
பத்திரிகையில், 1977-ம் ஆண்டு மார்ச் திங்கள் 3-ம் தேதியில்
வெளி வந்திருக்கிறது. ஆகவே அவசர காலத்தில் விலைவாசி
15.5 சதவீத அளவுக்கு அதிகரித்தது என்பதை நாம் புரிந்து
கொள்ள வேண்டும்.

பல புரட்சிகரமான திட்டங்களை நாங்கள் நிறை வேற்றப்
போகிறோம் என்று சொன்னீர்கள். இங்கே பேசிய சில உறுப்
பினர்கள் கூட, இதிலே புரட்சியில்லை, புதுமையில்லை என்று இந்தத்

தரப்பிலிருந்தும், என்ன புரட்சி வேண்டும், என்ன புதுமை வேண்டும் என்று அந்தத் தரப்பிலிருந்தும் பேசிக் கொள்ளப் பட்டது. நான் அதற்குள் நுழைய விரும்பவில்லை. விவாதத்தில் இறுதியான கட்டத்தில் இந்த விவாதத்திற்கு நிதி அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கின்ற இந்தக் கட்டத்தில் நான் இதிலே புரட்சி இருக்கிறதா புதுமை இருக்கிறதா என்ற அந்த வார்த்தைகளை எல்லாம் பயன்படுத்த விரும்பவில்லை.

ஆனால் முதலமைச்சர் அவர்கள் சட்ட மன்ற தேர்தலின் போது, வாணியம்பாடியில் பேசிய பேச்சு 'அண்ணா' பத்திரிகையில் 1977-ம் ஆண்டு ஜூலை திங்கள் 29-ம் தேதியன்று வெளியிடப்பட்டிருக்கிறது. அதிலே சொல்லியிருக்கிறார், "பல புரட்சிகரமான திட்டங்களை நாங்கள் தயாரித்து வைத்திருக்கிறோம். அத்தனை திட்டங்களையும் தேர்தல் அறிக்கையில் நாங்கள் வெளியிடவில்லை. இப்போது வெளியிடவேண்டாம் என்பதற்காகத்தான் நாங்கள் வெளியிடவில்ல. நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு அந்தத் திட்டங்களை செயல்படுத்திக் காண்பிப்போம், ...... என்று சொல்லியிருக்கிறார்கள். ஒருவேளை பட்ஜெட் ரகசியங்கள் என்பதால் அப்போது அவைகளை வெளியிடாமல் இருந்திருக்கலாம். அந்தத் திட்டங்களை உங்களுடைய தேர்தல் அறிக்கையிலே வெளியிடவில்லை. ஆளுநர் உரையிலும் அவைகளை வெளியிடவில்லை. நிதிநிலை அறிக்கையிலும் வெளியிடவில்லை, ஆகவே எப்போதுதான் அவைகளை வெளியிடப் போகிறீர்கள் என்று கேட்க விரும்புகிறேன்.

இப்படிக் கேட்டால் காலம் வற்புறுத்தும்போது வெளியிடுவேன் என்று அவர் பதில் சொன்னாலும் சொல்லக்கூடும். எனவே, தேர்தல் நேரத்தில் சொல்லப்பட்ட இந்த வாக்குறுதிகளில் ஒரளவாவது இந்த நிதிநிலை அறிக்கையில் இடம் பெற வேண்டும் என்பதற்காகத்தான் இவைகளை எல்லாம் சுட்டிக்காட்டினேனே அல்லாமல் வேறு அல்ல.

வண்டியிழுப்பவர்களுக்கும் பாரம் தூக்குபவர்களுக்கும் கல் உடைப்பவர்களுக்கும் லாரி ஓட்டுபவர்களுக்கும் வேலை பாதுகாப்பு, வேலை நேர நிர்ணயம் போன்ற உத்தரவாதம் அளிக்கப்படும் என்று அதே வாணியம்பாடி கூட்டத்தில் நம்முடைய முதலமைச்சர் சட்டமன்ற தேர்தல் நேரத்தில் பேசி 1977-ம் ஆண்டு மே மாதம் 29-ம் தேதி 'அண்ணா' பத்திரிகையில் வெளியாகி இருக்கிறது. அது பற்றியும் இதில் இடம் பெறவில்லை.

பிறகு அவர்கள் குற்ற பரம்பரைச் சட்டத்தை ரத்து செய்வதாக தேர்தல் நேரத்தில் அறிவித்தார்கள். ஆனால் அது இந்த நிதி நிலை அறிக்கையிலே இடம் பெறவில்லை. எனவே குற்ற பரம்பரைச் சட்டத்தை எப்போது ரத்து செய்யப் போகிறீர்கள்? ரத்து செய்யாததற்குக் காரணம் என்ன?



ஏன் இந்த அறிக்கையிலே அது இடம் பெறவில்லை என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இதற்கு நிதி அமைச்சர் அவர்கள் விளக்கம் அளிப்பார்கள் என்றும் நான் நம்புகிறேன்.

தபால் ஆபீசுகளில் கடன் கொடுக்கின்ற திட்டத்தைப் பற்றி இங்கே இந்த மன்றத்திலே பேராசிரியர் அவர்கள் கேள்வி எழுப்பியபோது, இந்த அவையிலே முதல் அமைச்சர் அவர்கள் கடன் கொடுப்பதற்கான வசதிக்கான இடம்தான் வேண்டுமென்று கேட்டேன் என்று பதில் சொன்னார்கள். ஆனால், முதல் அமைச்சர் மேலவையிலே பேசும்போது, அப்படி ஒரு பிரிவு தபால் ஆபீஸ்களில் ஒதுக்கப்பட வேண்டுமென்று மத்திய சர்க்காரிடம் கேட்பதாக உத்தேசம்; இதற்கு மேல் இதை வற்புறுத்திக் கேட்க வேண்டாம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஒருவேளை இப்போது டெல்லி சென்றபோது அதைப் பற்றி அவர்கள் பேசியிருப்பார்கள் என்று நான் கருதுகிறேன். அதன்படி தபால் ஆபீஸ்களில் விரைவில் இப்படிப்பட்ட கடன் வழங்கும் பிரிவுகள் ஏற்படும் என்றும் நான் நம்புகிறேன்.

பொதுவாக நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மத்திய உதவிகளைப் பொறுத்த வரையில் மாநில அரசுக்கு நியாயமாகக் கிடைக்கக் கூடிய உதவிகள், உரிமைகள் கிடைக்கவில்லை என்பதை இந்த மன்றத்திலே ஆளும் கட்சியிலே உள்ளவர்களும் சரி, எதிர்க் கட்சியிலே வீற்றிருக்கின்ற நாங்களும் சரி, அல்லது ஆளும் கட்சிக்குத் தோழமைக் கட்சிகளாக இருக்கின்ற சில கட்சிகளும் சரி எடுத்துச் சொல்லத் தவறவில்லை. அப்படி மத்திய உதவிகளைப் பெறுவதில் மாநில அரசோடு திராவிட முன்னேற்றக் கழகம் எல்லா வகையிலும் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறது என்பதை நான் எடுத்துக் கூறி, இந்த கன்னி பட்ஜெட்டை இந்த அவையின் முன் வைத்த நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் மனோகரன் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் சமர்ப்பித்த பட்ஜெட்டுக்கு அல்ல, அவருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் என்கின்ற அளவில், விடை பெறுகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் ஒரு மணி நேரம் நமது எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் நான் சமர்ப்பித்த நிதி நிலை அறிக்கையைப் பற்றி தனது வண்ணத் தமிழில், எண்ணங்களை எடுத்து வைத்திருக்கிறார்கள். நான் இந்த அவையில் ஒரு நிதி நிலை அறிக்கையைச் சமர்ப்பிக்கின்ற அளவிற்கு ஒரு வாய்ப்பு கிடைத்தமைக்காக முதலில் என்னைத் தேர்ந்தெடுத்த தமிழ்ச் சமுதாயத்திற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவாக, இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, இந்த அவைக்கு நான் முற்றிலும் புதியவன் என்கின்ற முறையில் ஒருசில உணர்வுகளை எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1977-ஆம் ஆண்டு நாடாளும் மன்றத் தேர்தல் நடந்து முடிந்த பிறகு, அதுவரை ஆண்டு கொண்டிருந்த காங்கிரஸ் கட்சி மேலே அகற்றப்பட்டானதற்குப் பிறகு, ஒரு புதிய அரசியல் தட்பவெட்ப சூழ்நிலைக்கேற்ப இந்தியத் துணைக் கண்டத்தில் மக்கள் உருவாக்கினார்கள், ' ஒரே ஒரு தனிக் கட்சிதான் இந்தியத் துணைக் கண்டத்தை ஆளலாம், ஒரே ஒரு தனிக் கட்சியின் கொடிதான் இந்திய துணைக் கண்டத்திலே பறக்கலாம், ஒரே ஒரு தனிக் கட்சியின் தலைவரது குரல்தான் இந்தியத் துணைக் கண்டத்திலே கேட்கலாம், என்று கருதிக் கொண்டிருந்த மயக்கத்தை, மாயையை உடைத்து தூள் தூளாக்கி ஆல்டர்னேடிவ் கவர்ன்மென்டை உருவாக்கி, இரண்டு கட்சிகளுக்கு மேலும் ஆட்சியை அமைக்கலாம் என்கின்ற நிலைமையை உருவாக்கித் தந்த இந்தியத்துணைக் கண்டத்து மக்கள் அனைவருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு டெல்லியிலே இருக்கிற அரசு ஜனதா அரசு என்று குறிப்பிடுகிறபோது, அது பல கட்சிகளைக் கொண்ட ஒரு அமைப்பு. இந்த அமைப்பு நீடித்து, மக்கள் எதிர்பார்ப்பதை யெல்லாம் நிறைவேற்றுவார்கள் என்று நான் மனதார நம்புகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : ஆன் எ பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன், தலைவர் அவர்களே, டெல்லியிலே இருக்கின்ற அரசு ஒரு தனி அரசு, ஒரு கட்சியின் அரசாங்கச் செயல்படுகின்றதே தவிர பல கட்சிகளின் கூட்டு அல்ல என்பதை டெல்லியிலே உள்ள தலைவர்களே ' கிளாரிபை செய்து விட்டார்கள் என்பதை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கு நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

(நண்பகல் 12.00)

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : இது ஒன்றும் கிளாரிபிகேஷனாகத் தெரியவில்லை. கன்பியூஷன்தான் இருக்கிறது. அந்தக் கட்சியிலே இருக்கிற ஒவ்வொரு அமைச்சரும் ஆள் ஆளுக்கு இப்படிப்பட்ட முரண்பட்ட கருத்துக்களைப் பேசுகிறார்களே என்று வருத்தம். திரு. ஜகஜீவன்ராம் அவர்கள் ஒரு பக்கத்தில், திரு. மொரார்ஜி அவர்கள் மறுபக்கத்தில், திரு. பர்னான்டஸ் அவர்கள் இன்னொரு பக்கத்திலே என்று இருப்பதைச் சுட்டிக்காட்டி, அப்படி ஒரு நிலை அமையாமல் ஒருமித்த—இன்டகிரேடெட் பிளாக் ஆக—இயங்கி நாட்டு மக்களின் நம்பிக்கைக்கு ஏற்புடைத்தாக இருக்க வேண்டும், அரசுக்கு இரண்டுகட்சிகள் மாறிமாறி ஆட்சி அமைக்கின்ற நல்ல ஜனநாயக சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வதற்காகத்தான் நான் சொன்னேனே தவிர, மத்தியிலே இருக்கிற அரசைக் குறைத்துக் கூறவேண்டுமென்ற எண்ணத்தில் நான்



கூறவில்லை என்பதை அந்தக் கட்சியின் சார்பாக இங்கே வாதிட்டுக் கொண்டிருக்கிற வழக்கறிஞர் நண்பர் திரு. ஜேம்ஸ் அவர்களுக்கு மெத்தப் பணிவன்போடு நான் தெரிவித்து கொள்கிறேன்.

இரண்டாவது நான் தெரிக்க விரும்புவது—1977-ல் சட்டசபைக்கான தேர்தல் நடைபெற்றது. அந்தத் தேர்தலில், அந்த ஜனநாயகப் பரிசோதனையில், தமிழகத்து மக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கீழே இறக்கி, அந்த ஆட்சி இருக்கவேண்டிய தேவையில்லை என்ற அடிப்படையை உருவாக்கி, அந்த ஆட்சி ஜனநாயகத்திற்கு எதிராக இயங்குகிற ஆட்சி என்பதை அவர்களுக்குச் சுட்டிக்காட்டுகிற வகையில் அவர்கள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆட்சிக் கட்டிலில் அமர்த்தியிருக்கிறார்கள். அதற்காக தமிழக மக்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி எனது இதயபூர்வமான நன்றியையும், வாழ்த்துக்களையும் தெவித்துக் கொள்கிறேன்.

அவர்கள் அப்படிச் செய்ததற்கு என்ன காரணம் என்பதை நான் தீவிரமாகவும் அல்லது அதிகமாகவும் ஆலோசித்துக் கொண்டிருக்க விரும்பவில்லை. ஆனால் தமிழகத்து மக்கள் எனது பெருமதிப்புக்குரிய எதிர்கட்சித் தலைவர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது 1972ஆம் ஆண்டு நமது இப்போதைய முதல்வர் அவர்களை அன்றைக்கு அவர்கள் தூக்கி எறிந்து விட்டதும், அதன்பிறகு ஒரு கட்சி உருவாக்கப்பட்டு, அந்தக் கட்சிக்கு லட்சோப லட்சம் மக்கள் ஆதரவு உருவாயிற்று. அந்தக் காலத்தில் அவ்வாறு தூக்கி எறிந்தது எனது மதிப்பிற்குரிய, அன்றைய முதல்வராக இருந்த பெருமதிப்பிற்குரிய கலைஞர் கருணாநிதிதான்.

திரு. மு. கருணாநிதி : இன்றைய முதல்வர் அவர்களை 1972ஆம் ஆண்டு நான் தூக்கி எறிந்தேன் என்று நிதியமைச்சர் அவர்கள் குறிப்பிடுவது தவறான தகவலாகும். அது ஒரு கட்சியினுடைய முடிவு. அந்த முடிவில் இன்றைய நிதியமைச்சர் நண்பர் மனோகரன் அவர்களும் கையெழுத்துப் போட்டிருக்கிறார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். (ஆரவாரம்).

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தட்டிவிட்டால் போதுமா ? நமது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கொஞ்சம் தனது மனசாட்சியோடு இப்போது உறவாட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன் (ஆரவாரம்). அது கட்சிக் காரியம்: அந்த விஷயத்திற்குள் நான் நுழைய விரும்பவில்லை; இது சமயமும் அல்ல; அது காலம் கடந்து போன ஒன்று. காலம் கடந்து போன ஒன்று என்று மட்டும் சொல்லுவதைவிட, அந்தக் கட்சியை நாட்டுமக்கள் ஏற்கனவே கைவிட்டு விட்டார்கள்

என்பது மற்றொன்று. ஆகையால் அதுபற்றி நான் விரிவாக விளக்க விரும்பவில்லை.

திரு. மு. கருணாநிதி : தேவையில்லாமல் அந்தப் பிரச்சினையை எழுப்பிவிட்ட காரணத்தால் இந்த விளக்கத்தை அளிக்கிற நிலைமைக்கு ஆளானேன். அவர்கள் கையெழுத்துப் போட்டது உண்மையா அல்லவா? மனச்சாட்சியோடு உறவாடுகிற உறவுகள் எல்லாம் நன்றாகத் தெரியும். அவர்களிடத்திலும், பேசியிருக்கிறேன். நான் கேட்டுக் கொள்வது எல்லாம் இன்று முதல் அமைச்சராக இருக்கின்றவர்களை அன்றைக்கு கட்சியிலிருந்து வெளியேற்றியபோது மனோகரன் அவர்கள் கையெழுத்து போட்டாரா இல்லையா?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தயவு செய்து எதிர்க் கட்சித் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்; அதோடு மாமன்றத் தலைவர் அவர்களையும் கேட்டுக் கொள்கிறேன். இந்தப் பிரச்சினைக்குள்ளே நுழைந்து ஒரு விவாதத்தை ஆரம்பிப்பதற்கு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் விரும்புகிறார்களா? என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். ஆனால் வாதத்திற்காக ஒன்றை மட்டும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். எக்சிக்யூட்டிவ் மெம்பர்களாக—செயற்குழு உறுப்பினர்களாக இருந்தவர்கள் திடீர் திடீரென்று அழைக்கப்பட்டு நமது எம்.ஜி. ஆர்.—முதல்வர் அவர்களை அன்று வெளியே தூக்கி எறிந்துவிட்டு கையெழுத்து வாங்கினார்கள். முன்னாள் முதல்வரும் இந்நாள் எதிர்க்கட்சித் தலைவருமாகிய நீங்கள் நான் சென்னையிலே இருக்கும்போது என்னிடத்தில் கையெழுத்து வாங்கினீர்களா என்ற கேள்விக்குப் பதில் சொன்னால் நான் வேறு பதில் சொல்ல வேண்டிய அவசியமில்லை.

திரு. மு. கருணாநிதி : பிரச்சினையைக் கிளப்பி என் மீது குற்றம் சுமத்திய பிறகு விளக்கத்தை அளிக்க வேண்டியவனாக இருக்கிறேன். செயற்குழு உறுப்பினர்கள் கூட, அன்றைக்கு என்னிடமும் பொது செயலாளராக இருந்த நாவலர் நெடுஞ்செழியன் அவர்களிடமும் கொடுத்த முடிவை ஏற்று நாங்கள் அப்போது இன்றைய முதலமைச்சராக இருப்பவரை அன்றைக்குத் தாற்காலிகமாகத் தள்ளி வைக்கும் முடிவை எடுத்தோம். பிறகு பொதுக்குழு கூடிய நேரத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேரும் அந்த முடிவுக்கேற்ப கையெழுத்திட்டார்கள். அதிலே நண்பர், இப்போது நிதியமைச்சராக இருக்கிறவர்களும் கையெழுத்திட்டார்கள் என்றுதான் சொல்லுகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையிலிருந்து விலகி நிதிநிலை அறிக்கைக்கு வந்து இந்த அவையிலே அதைப்பற்றிய விளக்கத்தைப் பெறுவதற்குரிய சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று





நான் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன். அன்றைய தினம் பாதிக்கப்பட்டவன் நான். நானே சிரித்துக் கொண்டிருக்கிறேன். நீங்களும் சிரித்துக் கொண்டிருக்கிறீர்கள். இந்தப் பிரச்னையை விட்டுவிட்டு நிதிநிலை அறிக்கைக்கு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சுலபமாக, பாதிக்கப்பட்டவன் நான் என்று சொல்லலாம். ஆனால் பாதிக்கப்பட்டவர்கள் இங்கே உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை மறந்துவிடக் கூடாது. இதற்குப் பிறகு நான் விஷயத்திற்கு வருகிறேன்.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்த விவாதத்தில் இது வரும் என்று நான் கருதவில்லை. மிகவும் வருந்துகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : உங்களுடைய கேள்விகளுக்குப் பதில் சொல்ல வேண்டுமென்று நீங்களே சொன்னீர்கள். சொல்வேன் என்று எப்படி என்னைப் பாராட்டினீர்களோ அந்தப் பாராட்டுக்குரிய முறையிலே நான் அமைய வேண்டுமென்று விரும்புகிறேன். இப்படிச் சில செதிகளைச் சொல்லிக் கொண்டு வருவதற்குக் காரணம், இந்த அவைக்கு நான் புதியவன் என்ற காரணத்தாலேயும் இந்தச் சேதிகளுக்கு நான் தொடர்புடையவன் ஆகவும் இருக்கிறேன் என்ற காரணத்தாலேயும் சொன்னேன். மக்கள் அந்த ஆட்சியை நீக்கிவிட்டு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை உருவாக்கியதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நன்றி தெரிவிக்கின்ற இந்த நேரத்திலே எதிர்க்கட்சியின் ஆதரவோடும் அவர்களது ஒத்துழைப்போடும் நான் சில பேர்களை அவர்களுக்கு அறிமுகம் செய்ய விரும்புகிறேன். அதிலே ஒன்று, திண்டுக்கல் தேர்தல் காலத்தின்போது குத்துண்டு மாண்டுபோன வத்தலக்குண்டு ஆறுமுகம்; கண்ணிழந்த கர்ணன்; உதயகுமார்; கிளை ஹாஸ்டல் செய்தியைச் சொல்ல வேண்டியதில்லை; சிதம்பரம் பாலசுந்தரம்; அப்பு; பூலாவரி சுகுமாரன், அவர்களுடைய தந்தை பழனியப்பன்; பாத்திமா; பெரியகுப்பம் சம்பவங்கள்; இன்னும் ஜோடிக்கப்பட்ட 25 ஆயிரம் பொய் வழக்குகள் இவைகள் மூலமாக ரத்த சாட்சிகளுக்கு—அவர்களை எண்ணிப் பார்ப்பதற்கு இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி—நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் சிந்திய ரத்தத்தின் விளைவாக தியாகத்தின் விளைவாக அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆட்சிக் கட்சியாக மக்கள் உருவாக்கியிருக்கிறார்கள், ரத்தத்தின் ரத்தமாக இருக்கின்றவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரை முருகன் : பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன் சார்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லாவற்றையும் கிளாரிபிகேஷன் என்று கேட்க முடியாது. உட்காருங்கள்.

திரு. துரை முருகன் : ஒரு விளக்கம் கேட்கிறேன். கிளாரிபிகேஷன் என்றால் நீங்கள் அனுமதிக்க வேண்டும். பேசுகிறேன் ........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேண்டாம், உட்காருங்கள் என்று நானும் சொல்ல முடியும், எங்களுக்கு உரிமை இருக்கிறது, அனுமதி கொடுத்தாலும் கொடுக்காவிட்டாலும் பேசுவேன் என்றால் எப்படி? தயவு செய்து கிளாரிபிகேஷன் ஒன்றும் இப்போது கேட்க வேண்டாம். கடைசியில் கேட்கலாம்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : இங்கே கடந்த 6 நாட்களாக நிதிநிலை அறிக்கையின் மீது நடைபெற்ற விவாதத்தில் 102 பேர்கள் பங்குபெற்றிருக்கிறார்கள். ஆட்சிக் கட்சியின் சார்பிலேயும், எதிர்க்கட்சியின் சார்பிலேயும், தோழமைக் கட்சிகளின் சார்பிலேயும் பேசிய மொத்த எண்ணிக்கை—என்னோடு சேர்த்து—104, என்பதை நான் மெத்தப் பெருமையோடும், பெருமிதத்தோடும், தலைநிமிர்ந்தும் தெரிவித்துக் கொள்கிறேன். நடைபெற்ற விவாதத்திலே ஏதோ அங்கொன்றும் இங்கொன்றும் ரசாபாசமாக இருந்ததே தவிர மொத்தத்தில் நடந்த விவாதங்கள் மிகவும் கண்ணியம் மிக்கவையாகவும் தரத்திற்கு ஏற்றவையாகவும் தமிழக அவையின் பெருமைக்குரியதாகவும் அமைந்திருந்தது என்பதை மெத்த பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் பேசும்பொழுது திரு. அன்பழகன் அவர்கள் பேசியதை, இந்த பட்ஜட்டில் உப்பும் இல்லை, சப்பும் இல்லை என்று பேசியதைச் சொல்லி, அதைத் தொடர்ந்து ஆளுங்கட்சிக்காரர்கள் சொன்ன வார்த்தைகளையெல்லாம் எடுத்துச் சொல்லி, இப்படி ஆயிற்றே என்றார்கள்.

(பிற்பகல் 12-10)

இப்படிப்பட்ட தரக்குறைவுகள் நடந்திருக்கலாம். நான் மறுக்கவில்லை. ஆனால் அதை விட்டுவிட்டுப் பார்த்தால் இன்றைய தினம் பேசிய நமது முன்னாள் முதல்வரவர்கள் தனது பிரச்னையிலிருந்து துளிக்கூட வழுவாமல் தனது ஆட்சிக்காலத்தில் அவர் என்னென்ன சாதித்தார் என்பதை அவருக்குக் கிடைத்த புள்ளிவிவரங்களைப் பயன்படுத்தி அவர்கள் சொன்னார்கள். அவர் சொல்லும்பொழுது இன்னொன்றும் சொன்னார். எங்களுக்கு அதிகாரிகள் தந்த புள்ளிவிவரத்தை வைத்துக் கொண்டு நாங்கள் பேசினோம். உங்களுக்கு அதிகாரிகள் தந்த புள்ளிவிவரங்களை வைத்துக் கொண்டு நீங்கள் பேசுகிறீர்கள். நாம் இரண்டு பேரும் சண்டை போடுவதை விட அதிகாரிகளிடம் சென்று சண்டை போடுவோம் என்ற அவரது பேச்சில் ஒரு எதிர்க்கட்சித் தலைவர் பேசுகின்ற முறைக்கு இலக்கணம் இருக்கிறதா என்பதை அவர் சிந்தித்துப் பார்க்க நான் கேட்டுக் கொள்கிறேன். அவர் பேசும்



பொழுது சில கருத்துக்களை எடுத்து வைத்துச் சொன்னார்கள். நான் மொத்தமாக எழுப்பப்பட்ட சில பிரச்னைகளுக்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதிலே ஒன்று, Centre State relations மத்திய மாநில உறவு பற்றி இங்கே பேசும்பொழுது மிகத்தெளிவாக நமது பெருமதிப்பிற்குரிய கவர்னர் அவர்கள் பேசிய பேச்சை நான் படிக்க வேண்டுமென்று கூடத் தேவையில்லை, நீங்கள் அத்தனைபேரும் படித்தீர்கள். மத்திய மாநில உறவு சரியாக இருக்கிறது. Ii is cordial அது மட்டுமல்லாமல், இருமொழிக் கொள்கை என் சர்க்காரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கை என்றும் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். நான் பணிவன்போடு இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். முதலமைச்சரவர்கள்கூட இப்பொழுது சென்று பேசிவிட்டு வந்ததற்குப் பிறகு அவர்களுக்கு ஏற்பட்ட உணர்வுகளை நான் என்னிடம் தேக்கி வைத்திருக்கிறேன். நமது மாண்புமிகு முன்னாள் முதல்வர் கருணாநிதி அவர்களுக்கு இந்நாள் பிரதம அமைச்சரைத் தெரியும். தேர்தல் காலத்தில் நமது பிரதம அமைச்சரவர்கள் என்னென்ன கருத்துக்களைச் சொன்னார்கள் என்பதை அவர் மிகத் தெளிவாக அறிந்து வைத்திருக்கிறார்கள். தேர்தல் காலத்தில் 42-வது அரசியல் சட்ட மசோதாவைக் கடுமையாக விமர்சனம் செய்தவர் இன்றைய பிரதமர் என்பதை நாடு மறந்து விடவில்லை. அதுமட்டுமல்ல, மிகத் தெளிவாகச் சொன்னார்கள், கல்வி ஸ்டேட் லிஸ்டிலே இருக்க வேண்டுமே தவிர "it should not go either to concurrent or central list", என்று குறிப்பிட்டதும் அவர் என்பதையும் நீங்கள் மறந்து விடக்கூடாது. நான் பெருமைக்காகச் சொல்லவில்லை, சந்திக்கின்ற வாய்ப்பு கிடைத்து நான் பிரதம மந்திரியோடு பேசிக் கொண்டிருக்கும்பொழுது அந்த 42-வது அரசியல் சட்ட மசோதாவிலே, சட்டமாக்கப்பட்ட அதிலே வந்திருக்கிற 'deployment of police forces' என்ற பகுதி பற்றி நான் அவரிடம் பேசிக் கொண்டிருந்த பொழுது அவர் தெரிவித்த கருத்துக்கள் இன்னும் எனக்குப் பசுமையாக இருக்கின்றன. அவர் தெரிவித்தார், "withoui cousulting Chief Ministers of States, there is no necessity to deploy police forces in particular State or States" என்று குறிப்பிட்டார். இது 42-வது அரசியல் சட்ட மசோதாவிலே இருக்கிறதா என்று கேட்டபொழுது "if my party comes to power, I will see that this is scrapped"

[திரு. கி. மனோகரன்] [1977 ஆகஸ்ட் 3

என்று ஆரம்பத்திலே சொன்னார். அதை இன்றைக்கும் அவர் வலியுறுத்திக்கொண்டு இருக்கிறார். 'எந்தக் காரணத்தைக் கொண்டும் மாநில முதல்வர்களைக் கலக்காமல், மாநில அரசுகள் விரும்பாமல் போலீசை மாநிலங்களுக்கு அனுப்புகின்ற அளவிற்கு எனது அரசு இருக்காது என்பது மட்டுமல்ல, இன்னும் மேலேயே போனார் மாநில அரசுகள், 'எங்களுக்குக் காவல்துறையினரை அனுப்புங்கள் அல்லது இராணுவத்தை அனுப்புங்கள்' என்று கேட்க வேண்டிய சூழ்நிலை இல்லாத அளவிற்கு நிலைமைகளை உருவாக்குவேன்'' என்ற வாக்குறுதிகளைத் தெரிவித்தார்கள். இன்றைக்கு நமது முதலமைச்சரவர்கள் பேசவில்லை, என்ன நடந்தது என்பதைப் பற்றிப் பேசவில்லை. அவர்கள் நிச்சயமாக அந்தக் கருத்தைத் தெரிவிப்பார்கள் என்று நான் மனதார நம்புகிறேன். ஆனால் ஒன்றை மட்டும் உறுப்பினர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். பெருமதிப்பிற்குரிய மொரார்ஜி அவர்கள் பேசியதாக நான் 'Times of India' - விலும், 'Statesman' பத்திரிகையிலும் பார்த்த கருத்துக்களை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

தலைவரவர்களே, உங்களுடைய அனுமதியோடு நான் அதைப் படித்துக் காட்ட விரும்புகிறேன்.

"The Prime Minister today assured the Chief Ministers that the Centre would not in any way seek to curtail the powers of the States. Indeed it would assist the States to the extent possible whenever assistance was needed. At the same time a strong Centre was a binding factor for the country. A strong Centre required strong States as well. A strong Centre with weak States could lead to dictatorship."

என்ற கருத்தைப் பேசியதாக 'டைம்ஸ் ஆப் இந்தியா'விலே வந்திருக்கிறது. இதே கருத்துக்களை ஸ்டேட்ஸ்மென், நாஷனல் ஹெரால்டு, இந்துஸ்தான் டைம்ஸ் ஆகிய அத்தனை பத்திரிகைகளும் தெரிவித்திருக்கின்றன. அனைத்திற்கும் மேலே இருக்கிற பெருமதிப்பிற்குரிய மொரார்ஜி அவர்கள் மாநில உரிமைகளைப் பாதுகாக்கின்ற ஆபத்பாந்தவனாக இருப்பார் என்று நாம் நிச்சயமாக நம்பலாம் என்று திரு. ஜேம்ஸ் அவர்களின் அனுமதியோடு இந்த அவைக்குத் தெரிவிக்க வேண்டுமென்று விரும்புகின்றேன். அவர் இந்த உரிமைகளில் கைவைக்க மாட்டார் என்றும் நம்புகின்றேன். ஒன்றை மட்டும் மிகத் தெளிவாக நான் இந்த மாமன்றத்திற்குத் தெரிவிக்க விரும்புகிறேன். எவ்வளவுதான் எங்களைப் புண்படுத்தினாலும் சரி, எவ்வளவுதான் குடுமியை அங்கே கொடுத்துவிட்டு எம்.ஜி.ஆர். இங்கே ஓடி வந்து விட்டார் என்று தெரு முனையில் யார் பேசினாலும் சரி, எவ்வளவுதான் எங்களை



1977 ஆகஸ்ட் 3] [திரு. கி. மனோகரன்]

தூண்டி விடுகின்ற அளவுக்கு மத்திய சர்க்கார் பேசினாலும்,
தேவையான நேரத்தில் தான் அப்படிப்பட்ட காரியங்களைப் பற்றி
யோசிப்போமே தவிர, அனாவசியமாக அனைத்திந்திய அண்ணா
தி.மு.க. அரசு மத்திய சர்க்காரோடு மோதாது என்பதை
மாமன்றத்திற்குத் தெரிவிக்க விரும்புகின்றேன். எனக்குத் தெரியும்,
டிராப் போடப்படுகிறது. சில பேர் இருக்கிறார்கள், பொறியை
வைக்கிறார்கள். அதிலே மாட்டிக் கொள்ள மாட்டார்களா,
உரிமைகளைச் சோபத்தில் விட்டு விடுவார்களா என்று யாராவது
நினைத்தால். அனைத்திந்திய அண்ணா தி.மு.க. அரசு எந்தக்
கொள்கையையும் விட்டுக் கொடுக்காமல் நிற்கும் என்பதை நான்
அரசின் சார்பாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே இருக்கிற எதிர்க்கட்சித் தலைவருக்குத் தெரியும்,
என்னைவிட மாநில ஆட்சியைப் பற்றி பாராளுமன்றத்திலே பேசிய
ஒரு நபரை அடையாளம் காட்டுங்கள் பார்க்கலாம். இந்தியை
ஆதரிப்பதா என்று கேட்கிற எதிர்க்கட்சித் தலைவரைப் பார்த்து
நான் கேட்கிறேன், கடுமையான கனல் பிழம்பைக் கக்கி நான்
பேசியதைப் போன்று யாராவது I oppose Hindi அதைச்
சொல்கிறேன். I oppose Hindi as official language
அதைச் சொல்கிறேன், யாராவது பேசி இருப்பார்களானால் அவர்
களது முகவரியை எனது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்
தருவார்களானால் நான் நன்றி உள்ளவனாக இருப்பவனாவேன்.

எனக்கும் அவருக்கும் இடையிலே ஒரு வேறுபாடு. அவருடைய
பேச்சிலிருந்து நான் அதைத்தான் புரிந்து கொள்கிறேன்:
He opposes Hindi எனக்கும் அவருக்கும் ஒரு வேறு
பாட்டை நான் புரிந்து கொள்கிறேன். என்னைப் பொறுத்த
வரையில் I oppose Hindi என்று சொல்லத் தயாராக இல்லை.

I oppose Hindi as official language imposed by the central Government on unwilling people of the South. இதுதான் எனக்கும் அவருக்கும் இருக்கிற வேறுபாடு.

அவர் மொழியையே எதிர்க்கிறார். நான் மொழியை எதிர்க்க
வில்லை. ஆனால், மொழி சுமத்தப்படும்போது, திணிக்கப்படும்
போது, கட்டாயப்படுத்தப்படும்போது, அதைத் தடுப்பதற்குத்
துள்ளி எழுகின்ற ஆற்றல்படை மறவர்களாகத் தமிழக மக்கள்
தயாராக இருக்கிறார்கள் என்பதை மாமன்றத்திற்குத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

எதிர்க்கட்சித் தலைவர் கூட்டங்களிலே பேசுகின்ற பேச்சுக்களை
இப்பொழுது இலவசமாகப் பத்திரிகை வந்து
எனக்கு கொண்டிருக்கிற காரணத்தாலே—நான் படிக்கிறேன். அடிக்கடி
அவர் பேசிக்கொண்டிருக்கிறார், 'தமிழ்ச் சமுதாயத்திற்கு ஆபத்து

வருமானால், தமிழ்ச் சமுதாயம், தமிழர்களுக்கு ஆபத்து வருமானால்' என்று. எங்கேயிருந்து ஆபத்து என்பதை அவர் சுட்டிக் காட்டட்டும்.

இந்தத் தமிழ்ச் சமுதாயத்திற்கு ஆபத்து, ஆபத்து என்கிறீர்களே எங்கிருந்து என்பதைக் குறிப்பிடவில்லையே என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், பட்ஜெட்டைப் பற்றிக் கூறும்போது பாராட்டினார், தமிழ்ப் புலவர்களுக்கு ரூ. 75 கொடுக்கிறீர்கள், நன்றி, என்றார். ஆனால், நீங்கள் 7 ஆண்டுகள் முதலமைச்சராக இருந்தபொழுது, நலிந்த, மெலிந்த, நொந்த, வெந்த, வறுமையிலே வீழ்ந்த ஏழைத் தமிழ்ப் புலவர்கள் உங்கள் கண்களுக்குப் புலப்படவில்லை, புரட்சித் தலைவர் கண்களுக்குத் தான் புலப்பட்டார்கள். அவர் இதை நினைவிலே கொள்ள வேண்டுமென்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஆகவே, நான் இந்தப் பிரச்னையைப் பற்றி பேசும்பொழுது, கருணாநிதி அவர்கள் தமிழ்ச் சமுதாயப் பாதுகாப்பாளன் "நான்" ஏதாவது ஆபத்து ஏற்படுமானால்....' என்று பூச்சாண்டி காட்டினீர்கள். தயவு செய்து சொல்கிறேன், நாம் இரண்டு பேரும் சேர்ந்து செய்ய வேண்டிய ஒன்றை நீங்கள் உங்களுக்கென்று பிரித்துக்கொண்டு பார்க்கிறீர்கள் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, இது போன்ற பேச்சுக்கள் சுமூகமான உறவுக்குத் தடை ஏற்படுத்தி விடுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்துகின்ற காரணத்தால் எனது பெருமதிப்பிற்குரிய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரைத் திருத்தினேனே தவிர வேறல்ல என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

__திரு. துரைமுருகன் :__ இப்பொழுதாவது ஒரு விளக்கம் கேட்கலாமா?

__மாண்புமிகு பேரவைத் தலைவர் :__ முடித்த பிறகு, கடைசியிலே ஏதாவது சந்தேகம் இருந்தால் கேளுங்கள் என்று சொன்னேன்.

[பிற்பகல் 12.20]

__மாண்புமிகு திரு. கி. மனோகரன்:__ நான் திரு. துரை முருகன் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். பேசிக் கொண்டிருக்கும் போது தொடர்பு அறுகின்ற அளவுக்குத் தயவு செய்து குறுக்கீடு செய்யாமல் இருங்கள். உங்களுக்கு அபாரமான ஞாபக சக்தி மிகவும் உண்டு என்பதை நான் அறிவேன். என்னுடைய பேச்சு முடிந்த பிறகு கேளுங்கள். இப்போது நான் பிரச்னைக்கு வருகிறேன்.



இங்கே பட்ஜெட்டைப் பற்றி என்னுடைய மதிப்பிற்குரிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் புள்ளி விவரம் தந்து மிகத் திறமையாக வாதாடினார்கள். அவர் சொல்லும்போது ஒன்றைச் சொன்னார். திரு. அன்பழகன் போன்ற அறிவாளிகள் திறமைப் படைத்தவர்கள், கலையிலே வல்லவர்கள் புலவர் பெருமக்கள் எல்லாம், பேசும்போது பொறுப்புணர்ச்சியோடு கடமை உணர்ச்சியோடு, தங்களுடைய கருத்துக்களை எடுத்து வைத்தார்கள் என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் நான் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன், எனக்கு அவர்கள் கொஞ்சம் வெளிச்சம் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். என்னை அவர்கள் இருட்டறையிலே வைத்திருக்கிறார்களோ என்று நான் அஞ்சுகிறேன். ஏன் என்றால் அவர் சொன்னார்—உப்பில்லை சப்பில்லை என்று. சில பேர்கள் பேசும்போது புதுமையில்லை புரட்சியில்லை என்று குறிப்பிட்டார்கள். அத்தனையும் கேட்ட பிறகு 1967-லேயிருந்து 1971 என்று கருதுகிறேன் அப்போது சமர்ப்பிக்கப்பட்ட நிதி நிலை அறிக்கைகளைப் படித்துப் பார்க்கின்ற அருமையான வாய்ப்பைப் பெற்றேன். முதலில் நிதி நிலை அறிக்கையை சமர்ப்பித்தவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் என்பது நமக்கெல்லாம் தெரியும். அந்த அறிக்கையை அப்போது எதிர்க்கட்சித் தலைவராக பணியாற்றியவர்கள் அருமை நண்பர் கருத்திருமன் அவர்கள், அவர் எடுத்த எடுப்பிலே சொன்னார். 'இதிலே புரட்சி இருக்கும், புதுமை இருக்கும் கொந்தளிப்பு வரும் என்றெல்லாம் எதிர் பார்த்தோம். ஆனால் ஒன்றும் காணவில்லையே' என்று அண்ணா அவர்களைப் பார்த்துச் சொன்னார்கள். அண்ணா அவர்கள், புரட்சி வெடிக்காது பலன்கள்தான் கிடைக்கும். புரட்சி வெடிக்கும் என்று எதிர்பார்த்து பட்ஜெட்டைப் பார்க்காதீர்கள், என்று குறிப்பிட்டார். புரட்சி வரும், கொந்தளிப்பு வரும் என்று மிகவும் சாதுவான சாதிக்பாட்சா அவர்கள்தான் சொன்னார்கள். அமைதியாக இருக்கக்கூடியவர்கள் இப்படி எரிமலையாக மாறுவார்கள் என்று நான் எதிர்பார்க்கவில்லை.

__திரு. க. அன்பழகன் ;__ நிதி அமைச்சர் அவர்கள் நான் பேசியதிலே தொடங்கி ஒரு விளக்கம் சொல்லி வேறொரு விஷயத்திற்கு வந்திருக்கிறார்கள். நான் பேசியதை அப்படியே சொல்லி, அதற்கு ஒரு மறுப்புச் சொன்னால் ஏற்புடையதாக இருக்குமே தவிர, ஒன்றிலே இருக்கிற ஒன்றைச் சேர்த்து மொத்தமாகச் சொல்வது முறையாகாது. புரட்சி வெடிக்கும் என்று சொன்ன கருத்து கூட, ஆளும் கட்சி தேர்தலிலே பிரச்சாரம் செய்யும் போது அப்படிப்பட்ட உறுதி மொழிகள் தரப்பட்ட பொழுது, புரட்சிகரமான நிதி நிலை அறிக்கை எதிர்காலத்திலே வரும் என்று சொல்லப்பட்டது. புரட்சி நடிகர், புரட்சித் தலைவர் என்ற பட்டம் இருக்கிறது, அதனால் சொல்லவில்லை. எதிர் காலத்திலே இந்த அரசு புரட்சிகரமான காரியம் செய்யும் என்று சொன்ன காரணத்தாலே, அதற்குத்தான் பதில் சொல்லவேண்டுமே தவிர......

[1977 ஆகஸ்ட் 3

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : புரிந்து கொண்டேன். I under stood என்பதைப் பேசிவிட்டு, கடைசியில் முடிக்கும்போது சொன்ன வாசகம் உப்பும் இல்லை, சப்பும் இல்லை என்று மற்றவர்கள் சொல்கிறார்கள். நீங்கள் என்ன சொன்னீர்கள் அதைக் கொஞ்சம் சொல்லுங்கள் பார்க்கலாம்.

திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, நான் சொன்ன தொடரைச் சொல்கிறேன். எல்லோரும் உப்பும் இல்லை, சப்பும் இல்லை என்று வழக்கமாக சொல்லுகிற மரபுக்கு சொல்கிறார்கள். நான் சொல்கிறேன், உப்பு இல்லை. அதனால் சப்பென்று இருக்கிறது என்று சொன்னேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : உப்பு இல்லை. ஆகவே சப்பென்று இருக்கிறது என்று அவர் சொன்னார். நான் எதற்கு வருகிறேன் என்றால், அவர்கள் கவனிக்காமல் திசை திருப்புகிறார்கள் என்று சொல்கிறேன். புரட்சி வெடிக்கும் என்று எதிர்பார்த்தேன் என்று திரு. கருத்திருமன் அவர்கள் சொன்னார்கள். அதற்குப் பிறகு பேராசிரியர் அன்பழகன் அவர்கள் அமர்ந்த பிறகு எனது அருமை நண்பர் மதிப்பிற்குரிய மதியழகன் அவர்கள் நிதி நிலை அறிக்கையைத் தாக்கல் செய்தார்கள். அன்று வழியில் தாக்கல் செய்த அந்த அறிக்கையைப் பற்றி, எதிர்க்கட்சியிலே வீற்றிருந்த அத்தனை பேரும், இதிலே புரட்சி இருக்கும், கொந்தளிப்பு இருக்கும் என்றெல்லாம் எதிர்பார்த்தோம். ஆனால் எதையும் காணோம் என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு, எதிர்க்கட்சித் தலைவர் கருணாநிதி அவர்கள் மிகத் திறமையானவர் என்று ஏற்றுக் கொண்டு சொல்கிறேன், உண்மையிலேயே அவர்கள் திறமைசாலி என்பதை ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் அவர்களுடைய திறமை வேறு திசைக்குப் போகிறது என்பது வேறு விஷயம். திறமை என்று வரும்போது அவர் மிகத் திறமையானவர், நூற்றுக்கு நூறு ஏற்றுக் கொள்கிறேன். அவர்களுடைய ஆற்றலை நான் ஏற்றுக் கொள்கிறேன். நிதி நிலை அறிக்கையைப் பற்றிப் பேசும்போது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இதிலே புதுமை இருக்கும், புரட்சி இருக்கும் என்று எதிர்பார்த்தோம், ஏமாந்து விட்டோம் என்று சொன்னார்கள். அதற்குப் பிறகும் அவர் நிதிநிலை அறிக்கை சமர்ப்பித்து இருக்கிறார். அப்போதும் சொல்லப்பட்டது. இதையெல்லாம் படித்ததற்குப் பிறகு எனக்கு ஏற்பட்ட உணர்வு இப்படிச் சொல்வது நான் இந்தச் சபையின் மரபாக ஆக்கப்பட்டு இருக்கிறதோ என்று நான் கருதுகிறேன். யாராவது எதிர்க்கட்சிக்காரர்கள் எழுந்து இதிலே அது இல்லை, இது இல்லை என்று சொல்லாவிட்டால் சபையை மீறிய பெரிய குற்றத்திற்கு ஆளாகி விடுவோம் என்று அஞ்சி இப்படிப் பேசுகிறார்கள் என்ற அளவிற்குப் பேசியிருக்கிறார்கள்.



1977 ஆகஸ்ட் 3) [திரு. கி. மனோகரன்]

என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். திரு. இலட்சுமணசுவாமி முதலியார் அவர்கள் மேல்சபையில் பட்ஜெட் விவாதத்தின்போது குறிப்பிட்டதை இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இதற்கிடையில் இன்னொரு கருத்தை நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எடுத்து வைத்தார்கள். உங்களுடைய பட்ஜெட்டை படித்துப் படித்துப் பார்த்தேன். பிரித்துப் பிரித்துப் பார்த்தேன். வார்த்தைகளுக்கு இடையில் நுழைந்து விளையாடிப் பார்த்தேன்—இது என்னுடைய வார்த்தைகள். அவர் அப்படிச் சொல்லவில்லை—உங்களுடைய தேர்தல் பிரகடனம் தெரியவில்லை என்று குறிப்பிட்டார்கள். நான்

பெரிய மனது வைத்து அவர்களது கண்ணியமான பார்வைக்கு எனது தேர்தல் பிரகடனத்தை வைக்கிறேன். அந்தத் தேர்தல் பிரகடனத்தை ஒரு பக்கத்திலே வைத்துக்கொண்டு மனமாற்றம் இல்லாமல் இன்னொரு பக்கத்திலே பட்ஜெட்டை வைத்துக் கொண்டு நீங்கள் படித்துப் பார்ப்பீர்களானால் தேர்தல் அறிக்கைக்கும் எங்கள் பட்ஜெட்டிற்கும் சம்பந்தம் இல்லை என்று நிச்சயம் உங்களால் நிரூபிக்க முடியாது என்பதை இந்த மாமன்றத்தில் உறுதியாகத் தெரிவிக்க விரும்புகிறேன்.

ஆகவே, தேர்தல் அறிக்கையை கையோடு கொண்டு வந்து இருக்கிறேன். ஒரு சில பகுதிகளை மாத்திரம் படிக்க விரும்புகிறேன். அதிலே ஏதோ பயிர் பாதுகாப்பு கழகத்தைப் பற்றிச் சொன்னீர்கள். இப்போது நீங்கள் மத்திய சர்க்காரை எதிர் நோக்கி இருக்கிறீர்களோ என்று சொன்னார்கள். நாங்கள் வந்தால் கொண்டு வருவோம் என்றல்லவா என்று சொன்னீர்கள் என்று கேட்டார்கள். அவர்களுக்கு விளக்கமாகச் சொல்கிறேன்: நாங்கள் தேர்தல் காலத்தில் சொல்லியது ''பயிர்களுக்கு பாதுகாப்பு காணச் செய்வது' என்று சொல்லி இருக்கிறோம்; ''காணச் செய்வது'' என்பதை நாங்கள் செய்வோம் என்று எடுத்துக்கொண்டு நீங்கள் இப்படிப்பட்ட கருத்துக்களைப் பேசியிருக்கிறீர்கள் என்று பார்க்கிறபோது, நீங்கள் இப்படித் தவறான தகவல்களைத் தரலாமா என்று நான் உங்களைப் பார்த்து மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் தயவு செய்து தவறான தகவல் தருவதற்கு ஒரு முன்மாதிரியாக இருக்க வேண்டாம் என்று மெத்தப்பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அதற்குப் பிறகு இங்கே மற்றொன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன். நாங்கள் கொடுத்த தேர்தல் அறிக்கையைப் படித்துக் காண்பிக்கிறேன். தேர்தல் அறிக்கையின் தலைப்புகளை மாத்திரம் வேகமாகப் படித்துக் கொண்டே போகிறேன்.

[பிற்பகல் 12-30]

''அண்ணா அரசு அமைப்போம், 'ஊழலற்ற ஆட்சி', 'மின் சக்திப் பெருக்கம்' 'மது விலக்கு', 'நில உச்சவரம்பு', 'விவசாயம்', 'விவசாயத்தில் பல செலவு', 'விவசாயத் தொழிலாளர் நலன்', 'கைத்தறி நெசவாளர்', 'மகளிர் நலன்', 'கல்வி', 'நாட்டுப்புற வசதி', 'கிராம முன்னேற்றம்'',

இப்படி இத்தனையும் இதிலே இருக்கிறது. அவகாசம், சந்தர்ப்பம் இருக்குமானால், என்னுடைய பெருமதிப்புக்குரிய எதிர்க் கட்சித் தலைவர் அதை படித்துப் பார்க்கலாம். அதற்கும், பட்ஜெட்டிற்கும் தொடர்பு இல்லை என்று வாதாடுவதில் பொருள் இல்லை என்பதற்காகச் சொல்கிறேன். (கைதட்டல்)





திரு. துரை முருகன்: தலைவரவர்களே, ஒரு மினிஸ்டர் சொல்லும்போது இடையில் ஒரு விளக்கம் கேட்க ஒரு உறுப்பினருக்கு உரிமை இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் தலைவர் விளக்கம் கேட்கிறார். அமைச்சர் அதற்கு விளக்கம் தருகிறார். நீங்கள் பேசியதில் விளக்கம் தரவில்லை, இது எதிர்கட்சித் தலைவருக்கும் அமைச்சருக்குமிடையே நடைபெறுகிற விவாதம். எதிர்க் கட்சித் தலைவர் கேட்டுக்கொள்வார்.

திரு. துரை முருகன்: விளக்கம் பெறுவதற்கு அங்கத்தினர்களுக்கும் உரிமை இருக்கிறதா இல்லையா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இருக்கிறது. இல்லை என்று சொல்லவில்லை.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: அதற்குப் பிறகு, இங்கே சேல்ஸ் டாக்ஸ் பிரச்சினையைக் கிளப்பினார்கள். அதை, எனது அருமை நண்பர் மாரிமுத்து பேசும்போது தனது பேச்சில், எந்தக் காரணத்தைக் கொண்டும் சேல்ஸ் டாக்ஸை விட்டு விடக் கூடாது என்றும், அதன் மூலம் கிடைக்கின்ற வருவாய் பெருமளவில் இருக்கிறது என்றும், ஆகையினால் அந்தத் துறையை நாம் விட்டு விடக் கூடாது என்றும் கூறினார்.

நானும், நேற்றைய தினம் வந்த டெல்லிப் பத்திரிக்கையில் எல்லாம் பார்த்தேன். அங்கே ஏராளமான முதலமைச்சர்கள் அதைப் பற்றி தங்களது எதிர்ப்புகளைத் தெரிவித்தார்கள் என்று வந்திருக்கிறது. இன்னும் சொல்கிறேன். நமது முதலமைச்சர் பேசியபோது கூட அங்கே சொன்னதாகக் கேள்விப்பட்டேன். இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், சேல்ஸ் டாக்ஸை விட்டுக் கொடுப்பதற்கு நாங்கள் தயாராக இல்லை என்பதை உறுதியாகத் தெரிவித்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு, அந்தப் பத்திரிகை நிருபர் தனது கருத்தை எழுதுகிறபோது ஜனதா சர்க்கிளில், அவர்களது வட்டாரத்தில், முதலமைச்சர் அவர்கள் கிளப்பிய எதிர்ப்புக்கு ஆதாரம் இருக்கிறது என்ற ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள்.

ஆகவே, நான் பணிவாக, துணிச்சலோடு சொல்ல முடியும் என்று கருதுகிறேன்—எந்தக் காரணத்தைக் கொண்டும் சேல்ஸ் டாக்ஸை மத்திய சர்க்கார் கவ்விக் கொள்ளாது என்று கருதுகிறேன்—அதனால் ஏற்படுகின்ற அச்சத்தை அவர்கள் விட்டுவிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதற்குப் பிறகு, நமது மதிப்புக்குரிய அன்பழகன் அவர்கள் ஒரு பிரச்சினையைக் கிளப்பினார்கள். அவர் பிரச்சினையைக் கிளப்புகிறபோது என்ன தெரிவித்தார் என்றால், ஒரு சில பத்திரிகைகளி

1977-ஆம் ஆண்டு நாடாளும் மன்றத் தேர்தல் நடந்து முடிந்த பிறகு, அதுவரை ஆண்டு கொண்டிருந்த காங்கிரஸ் கட்சி மேலே அகற்றப்பட்டானதற்குப் பிறகு, ஒரு புதிய அரசியல் தட்பவெட்ப சூழ்நிலைக்கேற்ப இந்தியத் துணைக் கண்டத்தில் மக்கள் உருவாக்கினார்கள், 'ஒரே ஒரு தனிக் கட்சிதான் இந்தியத் துணைக் கண்டத்தை ஆளலாம், ஒரே ஒரு தனிக் கட்சியின் கொடிதான் இந்திய துணைக் கண்டத்திலே பறக்கலாம், ஒரே ஒரு தனிக் கட்சியின் தலைவரது குரல்தான் இந்தியத் துணைக் கண்டத்திலே கேட்கலாம், என்று கருதிக் கொண்டிருந்த மயக்கத்தை, மாயையை உடைத்து தூள் தூளாக்கி ஆல்டர்னேடிவ் கவர்ன்மென்டை உருவாக்கி, இரண்டு கட்சிகளுக்கு மேலும் ஆட்சியை அமைக்கலாம் என்கின்ற நிலைமையை உருவாக்கித் தந்த இந்தியத்துணைக் கண்டத்து மக்கள் அனைவருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு டெல்லியிலே இருக்கிற அரசு ஜனதா அரசு என்று குறிப்பிடுகிறபோது, அது பல கட்சிகளைக் கொண்ட ஒரு அமைப்பு. இந்த அமைப்பு நீடித்து, மக்கள் எதிர்ப்பார்ப்பதையெல்லாம் நிறைவேற்றுவார்கள் என்று நான் மனதார நம்புகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: ஆன் எ பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன், தலைவர் அவர்களே, டெல்லியிலே இருக்கின்ற அரசு ஒரு தனி அரசு, ஒரு கட்சியின் அரசாங்கச் செயல்படுகின்றதே தவிர பல கட்சிகளின் கூட்டு அல்ல என்பதை டெல்லியிலே உள்ள தலைவர்களே 'கிளாரிபை செய்து விட்டார்கள் என்பதை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கு நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

(நண்பகல் 12.00)

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: இது ஒன்றும் கிளாரிபிகேஷனாகத் தெரியவில்லை. கன்பியூஷன்தான் இருக்கிறது. அந்தக் கட்சியிலே இருக்கிற ஒவ்வொரு அமைச்சரும் ஆள் ஆளுக்கு இப்படிப்பட்ட முரண்பட்ட கருத்துக்களைப் பேசுகிறார்களே என்று வருத்தம். திரு. ஜகஜீவன்ராம் அவர்கள் ஒரு பக்கத்தில், திரு. மொரார்ஜி அவர்கள் மறுபக்கத்தில், திரு. பர்னான்டஸ் அவர்கள் இன்னொரு பக்கத்திலே என்று இருப்பதைச் சுட்டிக்காட்டி, அப்படி ஒரு நிலை அமையாமல் ஒருமித்த— இன்டகிரேடெட் பிளாக் ஆக—இயங்கி நாட்டு மக்களின் நம்பிக்கைக்கு ஏற்புடைத்தாக இருக்க வேண்டும், அரசுக்கு இரண்டுகட்சிகள் மாறிமாறி ஆட்சி அமைக்கின்ற நல்ல ஜனநாயக சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வதற்காகத்தான் நான் சொன்னேனே தவிர, மத்தியிலே இருக்கிற அரசைக் குறைத்துக் கூறவேண்டுமென்ற எண்ணத்தில் நான்





ரூ. 25,000 அல்லது ரூ. 20,000 என்று அவர்களுக்கு வரும்போது
அவர்களுக்கு கடைசியில் 25 ஆண்டுகள் ரூ. 15 வீதம் அவர்
களிடம் பிடிக்கும்போது ரூ. 10,000 கொடுக்கிறீர்கள், இது
பரிதாபகரமாக இல்லையா என்று கூறி வேதனைப்பட்டார்கள்.

அதோடு இன்னொன்றும் தெரிவித்தார்கள். மீதி இருக்கிற
மூன்று லட்சத்திற்கு மேற்பட்டவர்கள் அனாதைகளாக நிற்
கிறார்கள், ஆரம்ப ஆசிரியர்கள், காவல் துறையினர் இந்தப்
பிரிவினர்களுக்கெல்லாம் ஏதாவது கொடுக்கக் கூடாதா, நிதி
அமைச்சர் அவர்கள் தனது பதிலில் அதையெல்லாம் சொல்
வார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன் என்று குறிப்பிட்டார்கள்.

நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.
ரூ. 15 பிடிக்கலாம் என்றால்—முதலிலே அவர்கள் தெரிந்து கொள்ள
வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

It is not compulsory. It is an idea mooted. அதை முதலில்
தெரிவித்துக்கொள்கிறேன்.

"It is an idea mooted." இப்படி ஒரு கருத்து
தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ரூ. 15 பிடிப்பதன் மூலம் ரூ.
22,000 அல்லது ரூ. 26,000 கடைசியில் வந்து ரூ. 10,000
அவர்கள் போகும்போது பெறுவார்களானால் அதன் மூலம் அவர்
களுக்கு அந்த ரூ. 10,000-க்கு உத்தரவாதம் நிச்சயமாக இருக்
கிறது; மீதி பிடிக்கப்படுகிற பணத்தை இம்பௌண்டிங் அல்ல-
கம்பெல்ஸரி டெப்பாஸிட் ஸ்கீமும் அல்ல—அந்தப் பணம்
அவர்களுடைய நலனுக்காகவே செலவழிக்கப்படும் என்று பட்
ஜட்டில் தெளிவாகத் தெரிவித்ததற்குப் பிறகு..............

திரு. மு. கருணாநிதி: 30-வது பக்கத்தில், "7·3 இலட்சம்
அலுவலர்களுக்கு பயன்தரும் வகையில் சிறப்பான புதிய ஓய்வு
கால நன்மைத் திட்டம் ஒன்றைக் கொண்டுவரத் திட்டமிட்
டுள்ளோம். இத்திட்டத்தின்கீழ், அலுவலர்களின் சேமிப்பாக
மாதந்தோறும் 15 ரூபாய் பிடித்தம் செய்யப்படும். இப்பிடித்
தங்கள் மீதான வட்டியுடன் ஒரு கூடுதல் பணிக்கொடையும்
அரசால் வழங்கப்படும். இதனால் இன்னும் ஒரு சில ஆண்டுகளில்
ஓய்வு பெறும் அலுவலர்களுக்கும் நல்ல பயன் கிட்டும்........"
என்றிருக்கிறது. எந்த இடத்திலும் ஆப்ஷன் என்று குறிப்பிடப்
படவில்லை.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: நான் தெரிவிக்க விரும்பு
கிறேன். அதிலே இன்னொரு பகுதியைப் பார்த்தால் அவர்களுக்குப்
புரியும். இதை நிறைவேற்றுவதற்கு முன்பு சம்பந்தப்பட்ட அந்
தத் தொழிற்சங்கத்தைச் சார்ந்த தலைவர்களை வரவழைத்து அவர்
கள் ஏற்றுக்கொள்கிறார்களா என்று கேட்டதற்குப் பிறகுதான்
இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும் என்று தெரிவித்திருக்கிறோம்
என்பதை நான் உறுதியாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. கி. மனோகரன்] [1977 ஆகஸ்ட் 3

அது மட்டுமல்ல. இன்னொரு செய்தியையும் நான் இந்த அவைக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்தச் சங்கத்தைச் சார்ந்தவர்கள் பலமுறை என்னைச் சந்தித்தார்கள். நான் இத்திட்டத்தைப் பற்றி அவர்களிடம் கேட்டேன். நீங்கள் என்ன கூறுகிறீர்கள் என்று கேட்டபோது அவர்கள் எனக்கு சொன்னதை நான் அப்படியே தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் ஆங்கிலத்தில் சொன்னார்கள்.

"It is a novel idea. It is a revolutionary principle" நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால், என்று சொல்லிவிட்டு, 'நீங்கள் பிடித்துக்கொள்வது பற்றி எங்களுக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லை' என்று சொன்னதற்கு, நான் சொன்னேன், 'இதை ஒரு கருத்தாக வைத்திருக்கிறோமே தவிர விட்டுவிடவேண்டும் என்று நீங்கள் சொல்வீர்களானால் விட்டுவிடுவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது' என்று சொன்னவுடன், திரு. சிவ இளங்கோ அவர்களும், திரு முனுசாமி அவர்களும், திரு. ரங்கராஜன் அவர்களும் என்னிடம் சொன்னது, "எந்தக் காரணத்தைக் கொண்டும் இந்தத் திட்டத்தை விட்டு விடாதீர்கள், வேண்டுமானால் ரூ. 15 என்றிருப்பதை ரூ. 10 ஆகக் குறைத்துக்கொள்ளுங்கள்", என்று சொன்னார்களே தவிர, 'விட்டு விடுங்கள்', என்று அவர்கள் சொல்லவில்லை. மாறுகச் சொன்னது, "தயவுசெய்து விட்டு விடாதீர்கள்", என்று அவர்கள் கேட்டார்கள்.

நான் அவர்களிடம் திருப்பிச் சொன்னேன். "Option is open. உங்களுக்கு ஏதாவது ஆல்டர்னேட்டிவ் ப்ரப்போஸல் இருக்குமானால் அதையும் எனக்கு வழங்குங்கள், அதையும் நாம் அனைவரும் இருந்து பரிசீலித்ததற்குப் பிறகு முடிவு செய்யலாம்," என்று சொன்னேனே தவிர வேறல்ல.

It is not a final one. It is not compulsory என்பதை எனது பெருமதிப்பிற்குரிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடைசியாக 30-வது பக்கத்தில் 47-வது பாராவில் எழுதப்பட்டிருக்கிறது.

[பிற்பகல் 12-40]

"இத்திட்டத்தின்கீழ் வரும் தொகை அலுவலர்களுக்குப் பயன்தரும் வகையில் செலவிடப்படும். அரசு அலுவலர்கள் சொந்தமாக வீடுகட்ட அதிக அளவில் கடன் கொடுக்கவும், அவர்களுக்கு வாடகை வீடு கட்ட வீட்டு வசதி வாரியத்திற்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்யவும், உள்ளாட்சி நிறுவன அலுவலர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்தின் மூலமாகக் கடன் வசதி அளிக்கவும் இந்தத் தொகை பெரும்பாலும் பயன்படுத்தப்படும். இத்திட்டத்தின் விவரங்கள் குறித்து அலுவலர



1977 ஆகஸ்ட் 3] [திரு. கி. மனோகரன்]

சங்கங்களைக் கலந்து ஆலோசித்து, அதன் அடிப்படையில் இதனைக் கூடிய விரைவில் செயல்படுத்துவோம்". என்றிருப்பதை உங்களது மேலான கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

திரு. மு. கருணாநிதி : எப்படி எப்படி செயல்படுத்தப்பட வேண்டும் என்பதைப்பற்றித்தான் கலந்து பேசுவதாக சொல்லப்பட்டிருக்கிறதே தவிர "ஆப்ஷன்" என்று எந்த இடத்திலும் சொல்லப்படவில்லை. எப்படியிருந்தாலும் இப்போது 'ஆப்ஷன்' என்று ஒத்துக்கொண்டதற்கு நன்றி........

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : கலந்து பேசுவது என்றால் இதையெல்லாம் பற்றி பேசுவதற்காகத்தான். நான் சொல்லுவதைப் புரிந்து கொள்ளாமல் எதையோ பேசிக் கொண்டிருந்தால் எப்படி? மன்னிக்க வேண்டும்.........

திரு. துரை முருகன் : பாயிண்ட் ஆப் ஆர்டர்............

(திரு. க. சுப்பு அவர்களும் எழுந்திருந்தார்.....)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பேசி முடிக்கட்டும்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தயவுசெய்து எங்களுக்குள் தகராறு ஏற்படுத்த முயற்சிக்க வேண்டாம். நாங்கள் இருவரும் நீண்ட நாள் பழகிய நண்பர்கள். பாசத்தோடு பழகியவர்கள், பழைய கால நண்பர்கள். திரு. துரை முருகன் இதைத் தெரிந்து கொள்ள வேண்டும். நாம் இருவருமே ஒன்றாக இருந்தவர்கள்தான். இப்போது பிரிந்திருக்கிறோம். நீங்கள் செய்த வினையின் காரணமாக அங்கே போய் உட்கார்ந்திருக்கிறீர்கள். அதைப்பற்றி இப்போது கவலைப்பட வேண்டியதில்லை.

(திரு. க. சுப்பு அவர்கள் எழுந்திருந்தார்.)

(திரு. துரைமுருகன் அவர்கள் எழுந்திருந்தார்.)

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, வரவு செலவுத் திட்டத்தில் பேசும்போது, 'நாங்கள் பழைய நண்பர்கள், பாசத்தோடு பழகியவர்கள்', என்றெல்லாம் பேச வேண்டிய தேவையில்லை. "நீங்கள் செய்த வினையின் காரணமாகத்தான் அங்கே போய் உட்கார்ந்திருக்கிறீர்கள்", என்றெல்லாம் பேசுவது முறையல்ல. அதைப்போலப் பேசுவதற்கு எங்களுக்கும் தெரியும்...

(ஆளும் கட்சியிலிருந்து சில உறுப்பினர்கள் எழுந்திருந்தார்கள். எதிர்கட்சித் தரப்பிலிருந்தும் சில உறுப்பினர்கள் எழுந்திருந்தார்கள்....).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து உட்காருங்கள். இப்போது எதுவும் வேண்டாம்.

திரு. க. சுப்பு : வினை, தினை என்றெல்லாம் பேசிக்கொண்டிருப்பது முறை தானா?....

திரு. துரை முருகன்: நீங்கள்தான் வினை செய்தவர்கள், அதனால்தான் அங்கே போய் உட்கார்ந்திருக்கிறீர்கள்....

(திரு. க. சுப்பு அவர்கள் ஏதோ பேசிக் கொண்டிருந்தார்....)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்கார்ந்து கொண்டே பேசக் கூடாது, ஏதாவது பேசவேண்டுமென்றால் எழுந்து பேசுங்கள்....

திரு. க. சுப்பு : நீங்கள் தான் எழுந்திருக்கவே விடமாட்டேன் என்கிறீர்களே....

(வேறு சில உறுப்பினர்களும் எழுந்து நின்றார்கள்....)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லோரும் ஒரே சமயத்தில் எழுந்து நின்றால் எப்படிச் சபையை நடத்துவது?....எல்லோரும் இப்படியே பேசிக்கொண்டிருங்கள், நானும் உட்கார்ந்து கொண்டிருக்கிறேன். தயவு செய்து இந்தச் சபையின் மதிப்பைக் காப்பாற்ற என்னோடு ஒத்துழையுங்கள்.

(உட்கார்ந்து கொண்டே, திரு. க. சுப்பு : வரவு செலவுத் திட்டத்தைப் பற்றி பேசாமல் வினை, தினை என்று பேசிக்கொண்டிருந்தால்..........என்று சொன்னார்).

(திரு. துரை முருகன் அவர்கள் எழுந்திருந்தார்....)

உட்கார்ந்து கொண்டே பேசாதீர்கள்...(எதிர்க் கட்சி வரிசையிலுள்ள திரு. சுப்பு, திரு. துரை முருகன் இவர்களைப் பார்த்து) உட்கார்ந்து கொண்டே பேச வேண்டுமென்றால் வெளியே போய் கத்துங்கள்.... இங்கே கத்தாதீர்கள்.

திரு. துரை முருகன் : வெளியே போய் கத்துங்கள் என்று சொல்வது முறைதானா? நீங்களே ஆத்திரத்தோடு பேசுகிறீர்களே!......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் அப்படி உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தால் அப்படித்தான் சொல்ல வேண்டியிருக்கிறது....





திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, வெளியே போய் கத்துங்கள் என்று சொன்னதற்கு வருத்தம் தெரிவிக்கும் வகையில் நாங்கள் இந்தச் சபையிலிருந்து வெளிநடப்புச் செய்கிறோம். . .

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் வெளிநடப்புச் செய்தனர்.)

திரு. எஸ். ஜே. ராமசாமி : பாயிண்ட் ஆப் ஆர்டர். தலைவரை எதிர்த்து வெளிநடப்பு செய்வது முறைதானா?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : எதிர்க் கட்சித் தலைவரும் பிற உறுப்பினர்களும் சபைக்குத் திரும்ப வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இங்கே கத்தாதீர்கள், வெளியே போய் கத்துங்கள் என்று சொன்ன வார்த்தையை வைத்துக் கொண்டு வெளியே போய் விடுவது என்று சொல்வது உங்களது கடமையை நிறைவேற்றுவதற்கு அது உதவியாக இருக்குமா என்பதையும் எண்ணிப் பார்த்து, வேண்டுமென்றால், விழ்பாவிக்காக இரண்டு நிமிட நேரம் ஓய்வு எடுத்துக் கொண்டு, வேண்டுமென்றால் ஐந்து நிமிட நேரம் தேநீர் அருந்திவிட்டு, பின்னால் சபைக்கு வாருங்கள் என்று மெத்தப் பணிவன்போடு எதிர்க்கட்சியைச் சேர்ந்த நண்பர்களை அழைக்கிறேன்.

இங்கே ஒரு கருத்தை மதிப்பிற்குரிய அன்பழகன் அவர்கள் குறிப்பிட்டார்கள். அந்தக் கருத்து என்னவென்றால், இந்த பட்ஜெட்டிலே சோஷலிசம் தெரியவில்லை, தேர்தலிலே சொன்ன வாக்குறுதிகள் விடப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். இதற்குக் காரணம், இன்றைக்கு நாம் பஞ்சப்படி தருகின்றோம் : பர்னஸ் அல்வன்ஸ் தருகிறோம். அதிலே, அவர்களுக்கு கொடுக்கப்படும் 20 ரூபாய் 200 ரூபாய்க்குமேல் பணம் வாங்குகிறவர்களுக்குத்தான் என்றிருக்கிறதே தவிர, 200 ரூபாயும் அதற்குக் கீழே வாங்குகிறவர்களுக்கும் எதுவும் தரவில்லை என்பதால் இதை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். கீழே இருப்பவர்களுக்கு அதிகமாகவும் மேலே இருப்பவர்களுக்குக் குறைவாகவும் கொடுக்கவில்லை; ஆகவே இது சோஷலிச முறையல்ல என்று எடுத்துச் சொன்னார்கள்.

நான் சில கசப்பான உண்மைகளை எடுத்துச் சொல்வதற்காக யாரும் கவலைப்படக் கூடாது. இந்தத் திட்டத்திலே உள்ள அத்தனை பேர்களும், புரட்சித் தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவிப்பது போல், அவர்கள் அத்தனை பேரும் எங்கள் ரத்தத்தின் ரத்தமாக இருக்கிறார்கள் என்பதையும், எங்களைவிட்டு அவர்களை யாராலும் பிரிக்க முடியாது என்பதையும் நான் இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் உள்ள நிலைமைகளை நான் தெரிவித்துக்கொள்கிறேன். 150 ரூபாய்க்கு கீழே தொகை வாங்குகின்ற நண்பர்கள் ஏறத்தாழ 1 முறை பஞ்சப்படி வாங்கியிருக்கிறார்கள். இப்போது அவர்கள் சென்ட்ரல்

டியர்னஸ் அலவன்சைத் தாண்டியிருக்கிறார்கள். ஆனால் திரு. அன்பழகன் அவர்கள் குறிப்பிடும்போது, அவர்கள் அல்லவா கல் உடைக்கிறார்கள் என்று சொன்னார்கள். அதைவிட, எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் கருணாநிதி அவர்கள், கண்ணீர் சிந்திக்கொண்டு, அவர்கள் அல்லவா ரொம்பத் துயரத்திலே ஆழ்ந்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள்.

ஆனால், எனது பெருமதிப்பிற்குரிய எதிர்க் கட்சித் தலைவர் கலைஞர் கருணாநிதி அவர்கள் ஆட்சியில் என்ன நடந்திருக்கிறது என்பதை நான் உங்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். 1975-ம் ஆண்டு, அடிஷனல் டியர்னஸ் அலவன்ஸ் கொடுத்தபோது,

> "The additional D.A. was given to Government employees. The benefit of Rs. 20 will be given to low paid employees and Rs 30 for higher paid employees".

கீழ்த் தரப்பிலே இருக்கின்றவர்களுக்கு 20 ரூபாயும், மேல் தரப்பிலே இருப்பவர்களுக்கு 30 ரூபாயும் வழங்கினார்கள் என்பதை நான் உங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோல், 1976 ஆம் ஆண்டில், அடிஷனல் டியர்னஸ் அலவன்ஸ் கொடுக்கும்போது, அதேமாதிரி கீழே இருப்பவர்களுக்கு 10 ரூபாயும், மேலே இருப்பவர்களுக்கு 20 ரூபாயும் வழங்கினார்கள் என்பதைத் தயவு செய்து நான் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இதை அவர்கள் மறுக்க மாட்டார்கள் என்றும் நிச்சயமாக நம்புகிறேன்.

ஆனால், இப்போது கீழே இருப்பவர்களுக்கு நாங்கள் ஒன்றும் கொடுக்கவில்லை என்று நீலிக் கண்ணீர் வடிக்கின்றார்கள். அவர்களுக்கு என்ன செய்வது என்பதுபற்றி ஆலோசனை நடத்தப்பட இருக்கிறது. அந்த ஆலோசனையில் ஈடுபடுவதற்கு நமது முதல் அமைச்சர் அவர்களும், அந்தச் சங்கத்தைச் சேர்ந்த தலைவரும் கூடபேசயிருக்கிறார்கள். தேவைப்பட்டால், எதிர்க் கட்சித் தலைவர்களின் யோசனைகளும் கேட்கப்படும் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்திலே நான் மெத்தப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதற்குப் பிறகு, இங்கே பேசிய சில நண்பர்கள் குறிப்பிட்ட கருத்துக்கள் பெரும்பாலும் அவர்களது தொகுதியைப் பற்றிய கருத்துக்களாகத்தான் இருந்தன. என்றாலும், ஒரு உண்மையை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எதிர்க் கட்சித் தலைவர், என் பெருமதிப்பிற்குரிய கலைஞர் கருணாநிதி அவர்கள் பேசும்போது, அரிசனங்களுக்கு நாங்கள் எவ்வளவோ கட்டடங்களைக் கட்டிக் கொடுத்தோம் தெரியுமா என்று பெருமையோடு பேசினார்கள். அப்படி கட்டடங்கள் கட்டுவதில் தப்பில்லை.





ஆனால் எவ்வளவு கட்டிடங்கள் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். இதற்காக கோடிக்கணக்கான ரூபாய் செலவழிக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். உண்மையில், அப்படிச் செலவழித்திருந்தால் அது பெருமைக்குரிய விஷயம்; அப்படிச் செலவழித்ததாகவும் தெரியவில்லை. இந்த உண்மையை இந்த அவை தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காக நான் சில உண்மைகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1973–74-ம் ஆண்டு பட்ஜெட்டில் கலைஞர் கருணாநிதி அவர்கள் அறிவித்தது 80 ஆயிரம் வீடுகள், 10 வருடங்களுக்கு. அதற்குப் பிறகு என்ன நினைத்தாரோ தெரியாது. 1973–74ஐத் தாண்டியதற்குப் பிறகு, ஒரு கோடி ரூபாய் பட்ஜெட்டிலே ஒதுக்கி, 1974–75-ன் டார்ஜெட்டாக ஒரு லட்சம் வீடுகளை 5 வருடங்களுக்குள் கட்டுவேன் என்று அறிவித்தார்கள். நான் இந்த ஆண்டுகளைச் சொல்கிறபோது, அதிலே இருக்கின்ற சில அம்சங்களும் உங்கள் இதயத்தைக் கவர வேண்டுமென்று எதிர்பார்க்கிறேன். அதற்குப் பிறகு, 1974–75ஆம் ஆண்டிற்கு டார்ஜெட் போடும்போது, ஒரு லட்சம் வீடுகள் 5 ஆண்டுகளுக்குள் கட்டப்படும் என்று சொல்லிவிட்டு, அதற்குப் பிறகு அதை ''மாடிபை'' செய்துவிட்டு, இரண்டு ஆண்டுகளுக்குள் ஒரு லட்சம் வீடுகளைக் கட்டுவோம் என்று சொல்லியிருக்கிறார். அதையெல்லாம் மறந்துவிடுவோம். 1973-74-ல் 80 ஆயிரம் வீடுகள் கட்டுவோம் என்று கூறிவிட்டு, அரிசனங்களுக்காகக் கட்டி முடித்த வீடுகள் 2,892 தான். அதற்குப் பிறகு, 1977 பிப்ரவரி நெருங்கிக் கொண்டிருக்கிற நேரத்தில், வேக வேகமாக—அந்த வேகத்தை உருவாக்கிய சக்தி எது என்பதை நான் கூறத் தேவையில்லை.

[பிற்பகல் 12–50]

வேகவேகமாக 12.17 கோடி செலவில் அவர் கட்டி முடித்த வீடுகள் 27,514. ஆக மொத்தம் அவரது ஆட்சியில் அரிசனங்களுக்காகக் கட்டி முடிக்கப்பட்ட வீடுகள் 30,406 என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவர் கட்டி முடிக்கவில்லை என்பதற்காக நான் குறை சொல்லவில்லை. கட்டி முடிக்கும் திட்டங்களைப் போட்ட பிறகு அந்தத் திட்டங்களை நிறைவேற்றாமல் இந்தச் சர்க்கார் சென்றுவிடக் கூடாது என்று கேட்டார்கள். மிகத் தெளிவாக நான் நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறேன். நிச்சயமாக ஏற்கெனவே இருந்த சர்க்கார் ஆரம்பித்த திட்டங்களையும், நடுவில் நின்றுவிட்ட திட்டங்களையும் நிறைவேற்றுவோம் என்ற உறுதியினைத் தந்திருக்கிறோம் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் பெரு மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதற்குப் பிறகு மகிழ்ச்சிகரமான சேதியை இங்கே நான் தெரிவித்தாகவேண்டும். முதலமைச்சர் அவர்கள் பிரதம அமைச்சரோடு பேசிக் கொண்டிருக்கும்போது—ஜேம்ஸ் அவர்கள் கூட குறிப்பிட்டார்கள்—கள்ள மார்க்கட்காரர்களைப் பிடிக்க, பதுக்கல்காரர்களைப் பாய்ந்து பிடிக்க, கருஞ்சந்தைக்காரர்களைக் கருவறுக்க, தேவைப்பட்டால்—பெர்னாண்டஸ் அவர்கள் கூடச் சொன்னார்கள்—, தூக்கு மேடையில் போட வேண்டும். இந்த ஒரு விஷயத்தில் பண்டித நேருவோடு உடன்பாடு கொண்டவன்; மற்ற எந்த விஷயத்திலும் நேருவுக்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை' என்று கூறியிருக்கிறார்.

திரு. பெர்னாண்டஸ் எனக்கு நெருங்கிய நண்பர். அவரே அவர்களையெல்லாம் தூக்குமேடையில் போட வேண்டுமென்று சொன்னார். தூக்குமேடையில் போடக்கூடிய அளவுக்குக் கள்ளப்பணம் விளையாடுகிறது.

நேற்று கூட சபையில் விவாதத்திற்கு வந்தது. விவாதத்திற்கு வந்த நேரத்தில் கள்ளப் பணத்தை பிடிப்பது யார் என்று கேட்டார்கள்? கருஞ்சந்தையினரைப் பிடிப்பது யார்? என்ற கேள்வியை எழுப்பினார்கள். வருமான வரியை ஏமாற்றுகிறவர்களைப் பிடிப்பது யார் என்று கேட்டார்கள். அருமை மாண்புமிகு அமைச்சர் இராமச்சந்திரன் அவர்கள் எழுந்து அந்தப்பொறுப்பு மத்திய சர்க்காரில் இருக்கிறது என்று தெரிவித்தார்கள். ஆனால் அதற்கு முன்னாலே நம்முடைய முதல்வர் அவர்கள் பிரதம அமைச்சர் மொரார்ஜி அவர்களைப் பார்த்துப் பேசிக்கொண்டிருந்த நேரத்தில் இப்படிப்பட்டவர்களை, சமுதாய விரோதிகளை, தேசிய விரோதிகளை, 'எகனாமிக் டிசிப்ளின்' என்கிற பொருளாதாரக் கட்டுப்பாட்டைக் குலைக்கின்ற கயவர்களைக் கையும் களவுமாகக் கண்டு பிடித்து தண்டனை அளிக்கும்போது யாராவது மத்திய அரசிடம்—உங்களுடைய சிபாரிசுக்கு வந்து தங்களை விட்டு விட வேண்டுமென்று கேட்கிற நிலைமை உருவாகாமல் தயவு செய்து அவர்களுக்கு உதவாமல் எங்களுக்கு உதவ வேண்டுமென்று கேட்டுக்கொண்டபோது, மொரார்ஜி அவர்கள் பரிபூரணமாக ஒத்துழைக்கிறோம் என்று சொன்னார்கள் என்பதை திரு. ஜேம்ஸ் அவர்களுக்கும் மற்ற நண்பர்களுக்கும், உறுப்பினர்களுக்கும் தெரிவித்துக் கொண்டு, அந்தக் கட்சியின் தலைவர்கள் துணையோடு, பிரதமரின் துணையோடு அந்தக் காரியத்தில் ஈடுபட, நடவடிக்கை எடுக்க நம்முடைய முதல்வர் அவர்கள் தயாராக இருக்கிறார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதற்குப் பிறகு மீனவர்களைப் பற்றி இங்கே பேசப்பட்டது. மீனவர்களுக்கு என்ன செய்திருக்கிறீர்கள் என்று கேட்டார்கள். ஒன்று—தவறாகச் சொல்லவில்லை—பட்ஜட்டைப் படிக்க வேண்டும்; பட்ஜட்டை ஒட்டி கொடுத்திருக்கும் அறிக்கைகளைப்



படித்துப் பார்த்து செய்திகளைச் சொல்ல வேண்டும். பட்ஜட்டில் சொல்லப்பட்டிருப்பது—மீனவர்கள் ஆழ்கடலுக்குப் போகிறார்கள்; பயங்கரமான சூறாவளிக்கு ஆட்படுகிறார்கள்; சுறா மீன்கள் தாக்க வருகின்றன; இவைகளுக்கும் மேலே செல்ல முயற்சிக்கிறான், வெறும் வயிற்றுப் பிரச்சினைக்காக. ஆழ்கடலில் சென்று அவன் சாகிறபோது அவன் குடும்பத்திற்குப் பணம் வழங்க வேண்டுமென்ற திட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. கொஞ்சம் கேவலமாகக் கூடச் சொன்னார்கள்—மீனவ சமுதாயத்திற்காகக் கண்ணீர் வடிக்கிறார், மீனவராக நடிக்கிறார்; அந்தப் படம் எல்லாம் வருகிறது—என்று சொன்னார்கள். அவர்தான் சொன்னார்—ஆழ்கடலில் சென்று மீனவர் இறந்து விட்டால் அவர் குடும்பத்திற்கு ஐயாயிரம் ரூபாய் கொடுக்க வேண்டுமென்று முதல் தவணையாக உடனடியாக இரண்டாயிரம் ரூபாய் கையில் கொடுக்க வேண்டும். அதற்குப் பிறகு இருக்கும் 3.000 ரூபாயை ''பாண்ட்ஸ்' என்ற முறையில் கொடுக்க வேண்டும். அதற்குப் பிறகு ஒரு ஐயாயிரம் ரூபாய் 'அப் டு ஃபைவ் தௌசன்ட் ருபீஸ்'—அவர்களுக்குத் தேவைப்படும்போது என்னென்ன உதவிகள் செய்ய வேண்டுமோ அதற்காக கொடுக்க வேண்டும். அந்தத் தொகையை மட்டும் கணக்கில் எடுத்துக் கொண்டு மீனவ சமுதாயத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் 3.2 கோடி ரூபாயை அப்படியே மறைத்து விட்டார்கள் என்ற வேதனை எனக்கு இல்லாமல் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த அளவிற்கு 3.2 கோடி ரூபாய் மீனவர்களுக்கும் மற்றவர்களுக்கும் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்து இது முற்றிலும் புதிய ஸ்கீம் என்பதையும் நான் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதற்குப் பிறகு பேசியவர்களில் சிலர் இன்னொரு கருத்தைச் சொன்னார்கள். குறிப்பாக, அதை திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான் அவர்கள் குறிப்பிட்டார்கள் என்று கருதுகிறேன். எக்ஸ்-சர்வீஸ்மென் பற்றிப் பேசியிருக்கிறார்கள். இது முக்கியமான பிரச்னை என்பதை அரசு ஏற்றுக் கொள்கிறது. மிக முக்கியமான பிரச்னையாக இருக்கிறது என்பதால் அரசு தயக்கமற்று ஏற்றுக் கொள்கிற நேரத்திலே இந்த முக்கியமான பிரச்னையில் இருக்கிற மிக முக்கிய அம்சங்களில் ஒன்று—திரு. தொண்டமான் அவர்கள் இராணுவத்தில் இருந்திருக்கிறார் என்பதைச் சபைக்குச் சொன்னார், அவர் ஒரு யோசனையைச் சொன்னார்—எக்ஸ்-சர்வீஸ்மென்னை எப்படிப் பயன்படுத்தப்போகிறீர்கள் என்றால் அதற்கென்று திட்டம் தீட்ட இந்த அரசு முன்வந்திருக்கிறது. நான் இந்த நேரத்திலே ஒரு உண்மையை—எனக்குக் கிடைத்த ஒரு உண்மையைக் உங்களுக்குக் கூற விரும்புகிறேன். தமிழகத்தைப் பொறுத்த வரையில் இராணுவத்தில் ஏராளமான ஆட்களைச் சேர்ப்பதில்லை. கேரளாவிலிருந்து ஏராளமான பேர்கள் சேர்கிறார்கள். இவர்கள் சேராததற்குக் காரணம் இவர்கள் விரும்பாத காரணம் அல்ல, நீங்கள் தமிழர்கள்; ஆகவே உங்களைச் சேர்க்கமாட்டோம்

என்பதல்ல காரணம், இந்த மக்களுக்கு இராணுவத்திற்குரிய
உடல் கட்டு இல்லை என்ற காரணம் காட்டுகிறார்கள். அந்தக்
காரணம் நியாயமானது என்று சொல்லிக்கொள்கிறேன்.
எனவே அதற்கு என்றே முகாம்களை அமைத்து எக்ஸ்-சர்வீஸ்
மென்களைப் பயன்படுத்தி இங்கேயுள்ளவர்கள் இராணுவத்திற்குச்
செல்வதற்கு உதவியாக இளம் தோழர்களைத் தயார்படுத்த அவர்
களுக்குப். போஷாக்கு உணவுகள் 2, 3 மாதங்களுக்கு வழங்கு
வதற்கு முடிவு எடுத்துப் பயன்படுத்துவோமானால் அவர்கள்
எல்லாம் இராணுவத்திற்குச் செல்வதன் மூலம் வேலைவாய்ப்பைப்
பெறமுடியும், அதே நேரத்தில் அவர்களுக்குப் பயிற்சி கொடுக்
கின்ற முறையிலே எக்ஸ்-சர்விஸ்மென் உதவி செய்வார்கள்
என்று கூறி இந்தக் கருத்து இந்த அரசின் சீரிய பரிசீலனையில்
இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதற்குப் பிறகு, இங்கே கிராப் இன்ஷூரன்ஸ் பற்றிப் பேசப்
பட்டது. இது மத்திய சர்க்கார் செய்ய வேண்டிய காரியம்
என்று உங்களுக்குத் தெரியும். இங்கே கோபத்தோடு
சில பேர்கள் கேட்டார்கள், ஏன் நாம் செய்யக் கூடாதா என்று.
ஆனால் மத்திய சர்க்கார் தலைசிறந்த பொருளாதார மேதை
புரஃபஸர் தண்டேகார் அவர்களைத் தலைவராகக் கொண்ட ஒரு
குழுவை இதற்காக ஏற்படுத்தி எப்படி எப்படிச் செய்யலாம்
என்று ஒழுங்கு முறைகள் வகுத்து அறிக்கையைச் சமர்ப்பியுங்கள்
என்று கேட்டு இருக்கிறார்கள். அந்த அறிக்கையை தண்டேகார்
சமர்ப்பித்ததற்குப் பிறகு கிராப் இன்ஷூரன்ஸ் பிரச்னைப்பற்றி
மத்திய சர்க்காரோடு பேசி தமிழகம் பலன் பெறுகின்ற அளவிற்கு
கொண்டுவர முடியும் என்று நம்புகிறேன். அதைப்பற்றிக்
கவலைப் படத் தேவையில்லை, நிச்சயமாக நடக்கக்கூடிய காரியம்,
அது தேர்தல் காலத்திலே சொல்லப்பட்டதுதான்.

அதற்குப் பிறகு, திரு. அன்பழகன் அவர்கள் அர்பன் லேண்ட்
சீலிங் பற்றிச் சொன்னார்கள். அவைகளைப் பரிசீலித்தோம்.
இன்னும் மேற்கொண்டு அது பரிசீலனையில் இருக்கிறது. நான்
இதயம் திறந்து சொல்கிறேன். திரு. அன்பழகன் தெரிவித்த
கருத்தோடு 100க்கு 100 நான் ஒன்றுகிறேன். அர்பன் லேண்ட்
சீலிங்—புல் ஆப் கன்ட்ராடிக்ஷன்ஸ்—முரண்பட்ட கூட்டுச்
சேர்க்கையாக இருக்கின்றது, தெள்ளிய நீரோடையாக இல்லை
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். முதலமைச்சர் அவர்
கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம், நம்முடைய மாநிலத்திற்
கேற்ற வகையிலே எப்படி எப்படி மாற்ற முடியுமோ அப்படி
மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதை
யும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதற்குப் பிறகு, ஒரு மிகப் பெரிய பிரச்னை இங்கே எழுப்பப்
பட்டது. அதுதான் தமிழ்ப் புலவர்களுக்கு 75 ரூபாய் உதவி
அளிக்கிறீர்களே, இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலே உயிரை



இழந்தவர்கள் குடும்பத்திற்கும், 6 மாதம் 1 வருட காலம்
என்று சிறை சென்றவர்களுக்கும் பென்ஷன் வழங்குவது என்ற
ஒரு திட்டத்தை நாங்கள் கொண்டுவந்தோம்.

[பிற்பகல் 1.00]

ஆனால் இடையிலே வந்த அட்வைசர் ஆட்சி அப்படியே அடி
யோடு பிய்த்தெறிந்தது என்ன நியாயம்? தமிழுக்காக
வாதாடுகின்ற புரட்சித் தலைவரை முதல்வராகக் கொண்டிருக்கிற
இந்த அரசு மீண்டும் அந்தப் பென்ஷன் திட்டத்தைக் கொண்டு
வருமா என்ற கேள்வியை எழுப்பினார்கள். தமிழுக்காகத்
தாங்கள் இருப்பதாக உருவாக்குகின்ற வகையிலே அப்படிச்
சொல்லியிருக்கக்கூடும் அல்லது உண்மையாகவும் சொல்லி
யிருக்கக்கூடும். அதை நான் மறுக்கவில்லை. அதிலே இருக்
கின்ற சட்டச் சிக்கலை இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்பு
கிறேன். சுப்ரீம் கோர்ட் வரை சென்று வந்த ஒன்று இது.
சுப்ரீம் கோர்ட் தீர்ப்பிலே என்ன வழங்கியிருக்கிறார்கள் என்பதை
இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

"The Madras Budget Manual 4th Edition was referred to by the
appellant. The appropriation in the present case shows that a
fund was kept apart to meet the pension scheme. There is
no legislative sanction for such pension scheme. The Govern-
ment by an executive order could not authorise the payment
of pension scheme. The appellant is right in his contention
that the pension scheme is unconstitutional and the budget
sanction is equally unconstitutional. . . ."

இதை சுப்ரீம் கோர்ட் தெளிவாகத் தெரிவித்ததற்குப் பிறகு
இதற்குமேல் என்ன வழிமுறைகளைச் செய்ய வேண்டுமென்று
நமது எதிர்க்கட்சித் தலைவரவர்கள் சொல்லிவிட்டாலும் நான்
பணிவன்போடு தெரிவித்துக் கொள்ளுகின்றேன், நீதிமன்றத்தின்
உரிமைகள், பத்திரிகையாளர்களுக்குள்ள உரிமை, பேச்சுரிமை,
மற்றைய உரிமைகள், அனைத்து உரிமைகளுக்காகவும் நான்
போராடுவதற்குத் தூக்குமேடை ஏறத் தயாராக இருக்கிறோம்
என்று சொல்கின்ற நமது எதிர்க்கட்சித் தலைவர் கருணாநிதி
அவர்கள் சுப்ரீம் கோர்ட் தீர்ப்பை எதிர்த்துப் போர்க்கொடி
உயர்த்த வேண்டுமென்று என்னிடம் யோசனை சொல்லமாட்டார்
கள் என்று மனதார நம்புகிறேன். ஆனால் ஒன்றைத் தெரிவித்துக்
கொள்கிறேன், முதலமைச்சரவர்களைக் கேட்டேன், என்ன
சொல்கிறீர்கள் என்று. அப்படி நான் கேட்டபோது அவர்
களுக்கு வேறு வழியில்லை, சர்க்கார் சம்பந்தப்படாத அளவிற்குக்
கட்சி ரீதியாக நாம் அந்தக் காரியத்தைச் செய்வதற்கு முயற்சிப்
போம் என்ற உறுதியை, உத்தரவாதத்தை என்னிடம் தந்து

அதைச் சபைக்கு நீங்கள் அறிவிக்கலாம் என்று தெரிவித்திருக்கிறார் கள். ஆகவே, அந்த அறிவிப்பை இங்கே தெரிவித்துக் கொள் வதில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்குப் பிறகு கடைசியாக என்பதைவிட, இன்னும் கொஞ்சம் நேரத்திற்குள்ளாக நான் வந்து விடுகிறேன். 7.3 இலட்சம் பேர்களை உள்ளடக்கிய நமது என்.ஜி.ஓ.க்களும், மற்ற ஸ்தாபன அசோசியேஷன்களைச் சேர்ந்த நண்பர்களும் இருக்கிறார்களே, அவர்களைப்பற்றி, சிலவற்றைப்பற்றி நான் தெரிவிக்க விரும்பு கிறேன். அவர்களது கோரிக்கை 'பே கமிஷன்' அமைக்க வேண்டுமென்பதாகும். இந்த 'பே கமிஷனை' அமைப்பீர்களா இல்லையா, அமைப்பீர்களா இல்லையா என்று பல நண்பர்களும் இங்கே, கேட்டார்கள். பே கமிஷனை அமைக்க வேண்டுமென்று ஏற்கெனவே ஆளுநர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நான் இந்த மாமன்றத்திற்கு நிதியமைச்சர் என்ற முறையில் முத லமைச்சரின் சார்பாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். பே கமிஷன் நிச்சயமாக அமைக்கப்படுகிறது. அந்த பே கமிஷனுக்கு யார் தலைமை தாங்குவது என்ற ஒரு சிக்கல் எழுந்தது. அப்பொழுது என்.ஜி.ஓ. வினரும் சொன்னார்கள், மற்றைய தோழர்களும் சொன்னார்கள், எந்தக் காரணத்தைக் கொண்டும் நீதிபதி தலைவராக இருக்க வேண்டுமே தவிர அல்லது ஓய்வு பெற்ற நீதிபதிதான் தலைவராக இருக்க வேண்டுமே தவிர வேறுயாரை வைத்தாலும் நாங்கள் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்பதில் விடாப்பிடியாகவும், உறுதியாகவும் இருந்தார்கள் அந்த உறுதிபாட்டுக்குத் தலை வணக்கம் தெரிவித்து நான் இங்கே பே கமிஷன் அமைக்கப்படும் என்பதை உங்களுக்குச் சொல்லி அந்த பே கமிஷனுக்குத் தலைமை தாங்குவதற்குப் பொறுப்பை ஓய்வு பெற்ற நீதிபதி திரு. ஆர். சதாசிவம் அவர்கள் ஏற்றுக் கொள்வதற்கு முன் வந்திருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன் அதனுடைய 'டேர்ம்ஸ் ஆஃப் ரெஃபரன்ஸ்' 1977 ஆகஸ்ட் 15 ஆம் நாளில் அறிவிக்கப்படும், அதிலே அங்கத்தினர்களாக வரப்போகின்றவர்களின் பெயர் களும் அறிவிக்கப்படும் என்பதையும் இந்த நேரத்தில் தெரி வித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதற்குப் பிறகு, பலபேர்கள் சொன்னார்கள். வெல்லம் சுவைக்கும் அல்லவா, அந்த வெல்லத்திற் கெல்லாம் இப்படி வரியைப் போட்டிருக்கலாமா என்றும் கேட்டார்கள். அவர்கள் கேட்டார்கள் என்பதற்காக அல்ல, வெல்லம் சுவைக்கும் என்பது எங்களுக்கும் தெரியும், ஆனால் அது ஒருமுனை வரியிலிருந்து நீக்கப்பட்டு மும்முனை வரியாகப் போடப்பட்டதற்கான கார ணத்தை ஆட்சி கண்டுபிடித்த பிறகு மும்முனை வரி போடப்



பட்டிருக்கிறது என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்து கொள்கிறேன். பயங்கரமான அளவில் 'இவேஷன்' நடக்கிறது. அதிலே சின்னஞ்சிறு வியாபாரிகளும் இருக்கிறார்கள, இல்லையென்று சொல்லவில்லை, ஆனால் டிமிங்கிலங்கள் பின்னால் இருந்து கொண்டு செய்யும் அட்டூழியங்கள் அளவிற்கு அடங்காது.

ஆகையினாலே இதைப் பற்றி விவரமாக முதலமைச்சரும் நானும் சம்பந்தப்பட்டவர்களும் கூடிச் சிந்தித்தற்குப் பிறகு ஒரு முடிவிற்கு வந்திருக்கிறோம். அந்த முடிவை இந்தச் சந்தர்ப் பத்தில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புவேன். அதாவது இதுவரை சிங்கிள் பாயின்ட் டாக்ஸ்ஸாக இருந்தது உங்களுக்குத் தெரியும். சிங்கிள் பாயின்ட் 5 இருந்தது. இப்பொழுது மல்ட்டி பாயின்ட் டாக்ஸ் 4 ஆகக் குறைக்கப்பட்டது. ஆனால் இனிமேல் உங்களுக்குத் தெரியும் 50,000 க்கு மேலே போகாதவர்களுக்கு சேல்ஸ்டாக்ஸிலிருந்து விதிவிலக்கு உண்டு. ஆனால் இப்பொழுது அவர்களுக்கு அரசுச் சலுகை என்ற அளவில் அளித்திருப்பது மல்ட்டி பாயின்ட் டாக்ஸ் நீடிக்கும், ஆனால் 4 லிருந்து 3 ஆகக் குறைக்கப்படும் என்பதை இந்தச் சந்தர்ப் பத்தில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதற்குப் பிறகு பல பேர் சொன்னார்கள், விவசாயிகளுக்கான மின் கட்டணம் பற்றி என்ன கருத்தை அரசு எடுத்தது என்றெல் லாம் சொன்னார்கள். விவசாயிகளைப் பற்றி நான் கருதாமல் இல்லை. ஏனென்றால் அனைத்திந்திய அண்ணா தி. மு. க. வை ஆட்சியிலே வைத்த பல சக்திகளில் அந்த சக்தியும் ஒன்று என்பது எனக்குத் தெரியும். ஆகையினாலே அவர்களைப் பொறுத்த வரையில் நாங்கள் மிகவும் ஜாக்கிரதையாக கவனித்து அவர்களுக்கு உதவ வேண்டுமென்று இதயப்பூர்வமாக விரும்பி ஒரு முடிவிற்கு வந்தோம். ஆனால் வருகின்ற பொழுது ஒன்றை நிதியமைச்சர் என்ற முறையில் நான் சொல்லாமல் இருக்க முடியாது. எல்லா விவசாயிகளுக்கும் இந்த வாய்ப்பு இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்வது நியாயமாக இருக்காது என்று சபை நிச்சய மாக நம்பும் என்று நான் கருதுகிறேன். எல்லோருக்கும் என்று வந்தால் பெரிய பெரிய நிலச்சுவான்தார்களும் நிலக்கிழார்களும் அந்த வசதிகளையும் வாய்ப்பினையும் பெறக்கூடும். ஆகையினாலே சிறு விவசாயிகள் அவர்கள் எந்தக் கணக்கிலே வருகின்றார் களென்றால் 5 ஏக்கர் டிரை லான்ட் வெட் லாண்ட் என்றால் $2\frac{1}{2}$ ஏக்கர். அதை வைத்திருப்பவர்களுக்கு இப்பொழுது கொடுக்கப் பட்டிருக்கிற டெஃபனிஷன் சிறு விவசாயிகள். இந்த விவசாயி இப்பொழுது கொடுத்துக் கொண்டிருக்கிற டாரிஃப் 16 பைசா என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி சிந்தித்துப் பார்த்தோம்; சிந்தித்துப் பார்த்ததற்குப் பிறகு அவர்களுக்கு எப்படி ஏப்படி உதவுவது; உதவாமல் போனால் நமது மனசாட்சிக்கு விரோதமாக இருக்கும் அல்லவா? அல்லது அரசியல் பாரம்பரியத் திற்கு அது எதிராக இருக்குமல்லவா என்று கருதியதற்குப் பிறகு

[திரு. கி. மனோகரன்] [1977 ஆகஸ்ட் 3]

காபினட் கூடி முடிவெடுத்து, 16 பைசா என்று இருப்பதை 14 பைசாவாகக் குறைத்திருக்கிறோம் என்பதை மெத்த மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொண்டு (ஆரவாரம்) அருமை நண்பர்கள் கைதட்டுகிறார்கள். அடுத்த கட்டத்திற்கு வருகிறேன். மகிழ்ச்சியோடு இந்த கசப்பு மாத்திரையை நான் ஏற்றுக் கொள்கிறேன் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். அதனாலே சர்க்கார் இழக்கப் போகிற தொகை ரூ. 2.5 கோடி என்பதைத் தெரிவித்துக் கொண்டு ஆனால் ரூ. 2 கோடி அல்ல, ரூ. 20 கோடியானாலும் விவசாயிகளுக்குச் செலவழிக்கிற மனப்பக்குவம் இந்தச்சர்க்காருக்கு இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

நிதிநிலை இப்படி இருப்பதிலே எந்த அளவிற்கு வந்திருக்கிறோம்; நண்பர் மாரிமுத்து அவர்கள் கூட இப்பொழுது அப்படிப் பேசினார்கள். அவர்களுக்கெல்லாம் மனதோடு இருக்கிற கஷ்டம் எனக்குப் புரிகிறது. ஆக்கப்பூர்வமான யோசனைகளை எனக்குத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். உணர்கிறார் ; நிதிநிலை அறிக்கை எப்படித் தயாரிக்கப்பட்டது? எப்பொழுது தயாரிக்கப்பட்டது? இந்த அரசு எப்பொழுது ஆட்சிக்கு வந்தது; வந்து எத்தனை ஆண்டுகள் ஆயிற்று? நாங்கள் என்ன 7 ஆண்டைத் தாண்டியிருக்கிறோமா, உங்களுடைய உள்ளத்தைஒன்றுகேட்கிறேன்; மனசாட்சியோடு பதில் சொல்லுங்கள். ஒருமாதம் கூடத் தாண்டவில்லை அல்லது ஒரு மாதம் தாண்டியிருப்போம். இதற்கிடையில் இப்படிப்பட்ட ஒரு பட்ஜெட்டை உங்களிடத்திலே சமர்ப்பித்துள்ளோம். எல்லோரும் பாராட்டினார்கள்; அதை நான் அறிவேன். அதைப் பாராட்டுகிறோம் இதைப் பாராட்டுகிறோம் என்று சொல்லிவிட்டு கொஞ்சம் தட்டுவோம் என்று அந்த மாதிரி தட்டினார்களே தவிர மொத்தத்தில் இந்த பட்ஜெட்டிற்கு நல்ல பாராட்டுக் கிடைத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக கேளிக்கை வரியைப் பற்றி இங்கே நண்பர்கள் எல்லாம் பேசினார்கள். அதைப் பற்றிப் பேசும் போது இப்பொழுதும் முதலமைச்சர் அவர்களை இழுத்துக்கொண்டு, முதலமைச்சர் அவர்கள் எல்லாம் இதிலே ரொம்ப அக்கறை காட்டுவார் என்றெல்லாம் சொல்வார்கள். இப்படியெல்லாம் அவர்கள் சொன்னார்கள். இப்பொழுது போடப்பட்டிருக்கிற வரிகளில் மாற்றம் தேவை என்றும் இப்பொழுது நீங்கள் கொண்டு வந்திருக்கிற இந்த வரிமுறை சரியாக இல்லையென்றும், ஆகையினாலே இன்றைக்கு எப்படியாவது ஒரு மாற்றத்தை நீங்கள் கொண்டு வருவீர்களானால் நன்றாக இருக்கும் என்றும் பல நண்பர்கள் எங்களுக்குத் தெரிவித்தார்கள்.

[ பிற்பகல் 1-10 ]

ஒரு 5 பைசா கம்மி பண்ணியதன் மூலம் எத்தனை பேர்கள் சினிமா பார்க்கிறார்கள் என்று கணக்கெடுத்த போது கிட்டத்தட்ட 81 லட்சம் பேர்கள் அதன் மூலம் அந்த வாய்ப்பைப் பெறுகிறார்கள்



1977 ஆகஸ்ட் 3] [திரு. கி. மனோகரன்]

என்பதைக் கண்டோம். தமிழ்நாடு முழுவதும் உள்ள தியேட்டர்கள், டூரிங் டாக்கீஸ்கள் கணக்கிட்டால் ஏறத்தாழ 1800-க்கும் பக்கம் இருக்கும் என்று கருதுகிறேன். அதிலே மிகச் சாதாரணமான தொழிலாளிகள், ஏழை பாழைகள் இவர்களைக் கணக்கிட்டால் இந்தக் குறைந்த கட்டணத்தின் காரணமாக 78 லட்சம் டிக்கெட்டுகள் விற்கப்படுகின்றன. இவைகளைக் குறைத்து இவர்களுக்கு நாம் நல்ல வாய்ப்பினைச் செய்ததன்மூலம் அவர்களும் சிரமமில்லாமல் சினிமா பார்க்க வேண்டும். அதே நேரத்தில் சினிமா நடத்துகிறவர்களுக்கும் நஷ்டம் ஏற்படக் கூடாது என்று கருதி—அதுமட்டுமல்ல சில அதிகாரிகளின் தொல்லையும் அவர்களுக்கு அதிகம் இருக்கிறது என்ற காரணத்தால் அதை எப்படித் தீர்க்கலாம் என்ற கணக்கைப் போட்டபோது இந்தக் கருத்தை நாங்கள் தெரிவித்தோம். ஆனால் அதற்குப் பிறகு பல உறுப்பினர்கள் எங்களைப் பார்த்துத் தெரிவித்தது என்னவென்றால் அவைகளைப் பற்றி நேற்று நாங்கள் சிந்தித்தோம். 'கம்பவுண்டிங் டாக்ஸ்' சரியாக இருக்கும் என்று சொன்னார்கள். அதுதான் 'இவேஷனைத்' தடுப்பதற்கும் 'கரப்ஷனை' நீக்குவதற்கும் வழியாக இருக்கும் என்றும் குறிப்பிட்டார்கள். ஆகவே 'கம்பவுண்டு டாக்ஸ்' போடுவது நல்லது என்று கருதி 'எக்ஸிபீட்டர்களும்' சொன்னார்கள். மற்றவர்களும் சொன்னார்கள் இந்தக் கருத்தை முதலமைச்சர் அவர்களிடம் எடுத்துத் தெரிவித்த போது இந்தக் கருத்தைப் பற்றி நாம் நிச்சயம் சிந்திக்கலாம் என்று சொன்னார்கள். ஆனால் ஒன்றை நான் உங்களுக்குச் சொல்வேன். கம்பவுண்ட் டாக்ஸ போட்டால் நல்லது என்று எல்லோருக்கும் இருக்கிறது. ஆனால் இந்தகம்பவுண்டு டாக்ஸ் திரு. கருணாநிதி இருந்த காலத்தில் போடப்பட்டு கண்மூடி மறைவதற்குள் அது அடிக்கப்பட்டுவிட்டது என்ற உண்மையை உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். அப்படி அடித்ததற்கு காரணம், புரட்சி தலைவர்களுடைய தியேட்டர்கள் முழுவதும் ஓடியது என்பதுதான், என்று வெளியிலே பேசப்பட்டது என்பதை சபைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதற்குப் பிறகு, வெல்லம். வெல்லத்தைப் பற்றி நான் ஏற்கனவே சொல்லிவிட்டேன். 3 சத விதம் குறைப்பதாகச் சொல்லிவிட்டேன். அதற்குப் பிறகு மீன் விற்பனை செய்பவர்கள் Prawns, lobsters, Frogs, விற்பனை செய்பவர்கள் நம்மிடம் வந்தார்கள். எல்லோரும் வந்து எங்களுக்கு ரொம்பவும் கஷ்டமாக இருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் ஒன்று எந்தக் காரணத்தைக் கொண்டும் சாதாரண மீன் வாங்கி விற்பனை செய்பவர்களை இது பாதிக்காது. ஆனால் இங்கே பேசிய திரு. உமாநாத் என்று கருதுகிறேன்—எக்ஸ்போர்ட் செய்கிறவர்கள் பயங்கரமாகக் கொள்ளை அடிக்கிறார்கள். அவர்களுக்கு எவ்வளவு வேண்டுமானாலும் நாங்கள் டாக்ஸ் போடலாம் என்று தெரிவித்தார்கள். ஆகவே 500 ரூபாய் வருடத்திற்குக் குறைவாக இருப்பவர்களுக்கு அந்தக் காரணத்தைக் கொண்டு வரியில்லை. ஆனால் அதே நேரத்தில் ஒரு 'கன்செஷன்' என்ற காரணத்திற்

[திரு. கி. மனோகரன்] [1977 ஆகஸ்ட் 3

காக பல பேர்கள் அங்கே கேட்டார்கள் என்ற காரணத்திற்காக
இந்த டர்ன் ஓவரை 5 ஆயிரத்தில் இருந்து பத்தாயிரம் உயர்த்தி
இருக்கிறோம் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் உங்கள் அனைவரு
ருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதற்குப் பிறகு கடைசியாக பல
பற்றி நான் பேசாமல் பிரச்சினைகள்
சில பிரச்சினைகளை நான் இருந்திருக்கலாம்.
விட்டுவிட்டேன் என்று சொல்பவர்களுக்கு விட்டுவிட்டிருக்கலாம்.
கொள்ள விரும்புவது இப்போது மணி 1¼ (குறுக்கீடு) நான் தெரிவித்துக்
வேண்டும். தொழிலாளர் பிரச்சினை பற்றியும், மன்னிக்க
மில்களைப் பற்றியும், தொழிற்சாலைகளைப் பற்றியும், மூடப்பட்டிருக்கிற
பரிகாரம் காணவேண்டாமா என்ற நல்ல கருத்தை, அதற்கு ஒரு
மதிப்பிற்குரிய தேசீய காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு. மாரிமுத்து
அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அதற்கு ஒரு பெரு
முதலமைச்சர் அவர்கள் வைத்திருக்கிறார்கள். யோசனையை
சேர்ந்தவர்களையும் தொழிற்சங்கத்தைச் நிர்வாகத்தை
மற்றும் அரசியல் கட்சித் தலைவர்களையும் சேர்ந்தவர்களையும்
அனைவரும் ஒன்றாக உட்கார்ந்து இது இந்த மாநிலத்தின் அழைத்து நாம்
என்ற அளவுக்கு அந்தப் பிரச்சினையை உருவாக்கி பிரச்சினை
கட்சியின் பிரச்சினையாக அந்தக் கண்ணோட்டத்தோடு அதை ஒரு
தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சிக்குரிய காணாமல்
திட்டமாக இந்தத் திட்டத்தை கருதி நாம் அருமையான
முடிவெடுக்கத் தயாராக இருக்கவேண்டுமென்று அனைவரும் கூடி ஒரு
சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன். நான் இந்தச்
காலத்தில் பெரு மதிப்பிற்குரிய அதை தகுந்த
சொல்வார்கள் என்பதைச் முதலமைச்சர் அவர்கள்
கடைசியாக ஒன்றைத் தெரிவித்துக் கொள்கிறேன். சொல்லிவிட்டு, நான்
மன்றத்திற்குப் புதியவன் என்பதற்காகச் சொல்கிறேன். நான் இந்த
காலம், ரொம்பவும் பேச வேண்டியிருக்கிறது. குறுகிய

உங்களுக்கு எல்லாம் தெரியும். மாணவர்கள் கிளர்ச்சி எங்
கேயும் நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. அந்தக் கிளர்ச்சி
யில் அரசியல் நோக்கம் இருக்கிறதா இல்லையா என்பதில் நான்
புகுந்து பார்க்க விரும்பவில்லை. சில இடங்களில் அரசியல்
தூண்டுதல் இருக்கிறது. சில இடங்களில் அவர்களுக்குள்ளே
கல்லூரியில் நடைபெறும் தேர்வுகள் காரணமாக அந்தத் தக
ராறுகள் வருகின்றன. சில இடங்களில் மாணவர்களுக்கும் பிரின்சி
பாலுக்கும் இடையே உள்ள சில கோரிக்கைகளின் மீதும் ஏற்
படும் தகராறு இருந்து வருகின்றன. இவைகளைப் போக்குவதற்கு
இப்போது பெரு மதிப்பிற்குரிய நமது முதலமைச்சர் அவர்கள் ஒரு
யோசனை வைத்து இருக்கிறார்கள் என்பதை இந்தச் சபைக்கு
நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

1977–78 ஆம் ஆண்டு வரவு-செலவுத் ...



1977 ஆகஸ்ட் 3] [திரு. கி. மனோகரன்]

மாணவர்களையும், பெற்றோர்களையும் உள் அடக்கிய குழு ஒன்றை உருவாக்கி அந்தக் குழுவில் நாம் எல்லாம் புகுந்து அந்தப் பிரச்னையை அலசிப் பார்த்து நிரந்தரமாக அந்த மாண வர்களின் மத்தியில் இருக்கிற அதிருப்தியைப் போக்கி, அவர்கள் உள்ளம் புண்படாத அளவிற்கு ஒரு சூழ்நிலையை வளர்க்க நாம் முயற்சிக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் உங்களை எல்லாம் கேட்டுக்கொள்கிறன்.

கடைசியாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஏதாவது ஒன்று விட்டுப் போய் இருந்தால், நான் அறிஞர் அண்ணா அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றுகிறவன் என்ற முறையில் இங்கே ஒன்றைக் கூறிப்பிட விரும்புகிறேன். ''பல விஷயங்கள் பட்ஜெட்டில் வருவதால் என் பேச்சில் அவை வரவில்லை என்பதால் அவற்றில் எனக்கு அக்கறை இல்லை என்று கருதத் தேவையில்லை. அந்தப் பேச்சில் குறிப்பிட்டுள்ளதை விட என்னுடைய மனதில் அந்த விஷயங்கள் மிகுந்த பற்றுதலைப் பெற்று இருக்கும்'' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதை இங்கே நான் உங்களுக்கு நினைவூட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

மற்றொரு விட்டுப்போன பிரச்னை பற்றியும் நான் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

கைம்பெண்களுக்கு உதவி அளிப்பது போதாது என்று எதிர்க் கட்சித் தலைவரவர்கள் சொன்னார்கள். நான் அவர்களுக்குப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஏழு வருஷத்திற்குப் பிறகு ஆட்சியில் அமர்ந்ததற்குப் பிறகு, நீங்கள் ஒரு மாதமான ஒரு ஆட்சியைப் பார்த்து இவைகள் எல்லாம் சொல்வது எங்களுக்கு நல்ல கருத்துக்களை வழங்குவதற்காகச் சொல்கிறீர்கள் என்று எடுத்துக் கொள்கிறேன். இதில் எங்களுக்குள்ள இக்கட்டான சூழ்நிலையையும் நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். 'டு ஸ்டார்ட் வித்' நாங்கள் இந்த அறிவிப்பு செய்து இருக்கிறோம்.

அவர்கள் பிறகு சொன்னார்கள். தருமபுரி, சேலம், கடலூர் போன்ற மாவட்டங்களில் தொழு நோய்க்காரர்கள் இருக்கிறார்கள். அவர்களைக் கண்டறிவதற்கு—ஆரம்பக் கட்டத்தில் கண்டறிவதற்கு நீங்கள் முயற்சி எடுக்க வேண்டும் என்றும், தி.மு.க. ஆட்சியில் செயலாற்றியதைத்தான் நீங்களும் சொல்கிறீர்கள் என்றும் சொன்னார்கள். நான் எதிர்க்கட்சித் தலைவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் நல்ல திட்டங்களை தீட்டினால் நாங்கள் அதை தீண்டத் தகாத திட்டங்களாகக் கருத வேண்டும் என்று கருதுகிறீர்களா? நல்ல திட்டங்களை யார் சொன்னாலும் ஏற்றுக்கொள்ள மன வளமும், பக்குவமும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் பெற்று இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். நான் இன்னொன்றையும் தெரிவித்துக் கொள்கிறேன். நாங்கள் பல திட்டங்களை ஆரம்

பித்து வைத்தோம், என்னிடம் குறிப்பு இருக்கிறது என்று அவர்
கள் பெருமை பேசிக் கொண்டார்கள். அதற்காகச் சொல்
கிறேன். பட்ஜெட்டரி ப்ரோவிஷன் மீறி அவர் சிலவற்றை
ஆரம்பிக்கவில்லை என்று சொன்னார்கள். ஆரம்பித்த குறிப்பு
என்னிடத்தில் இருக்கிறது. தேவை என்றால் சபையின் கவனத்
திற்கு நான் அதைத் படித்துக் காட்ட விம்புகிறேன். ஸ்கீம்ஸ்.
1975–76-ல் வித் அவுட் பட்ஜெட்டரி ப்ரோவிஷன்ஸ் அவர்
அறிவித்தது 15 திட்டங்கள். அவைகள் அப்படியே இருக்கின்றன.
அது மட்டுமல்ல; சில திட்டங்களை 1974–75-ல் அறிவித்து
எடுத்து, ஆனால் முடிவு பெறாத கட்டத்தில் இருக்கின்றன. அந்
தத் திட்டங்களை நாங்கள் அப்படியே விட்டு விடுவோம் என்று
அவர் எதிர்பார்க்கத் தேவை இல்லை என்று நான் அவர்களுக்குப்
பணிவாகத் தெரிவித்துக் கொள்கிறேன். திரு. மாரிமுத்து
அவர்கள் பேசும்போது சொன்னார்கள். அவர்கள் சில திட்டங்
களை எல்லாம் போட்டு இருக்கிறார்கள். பாதியில் இருக்கிறது;
அதை முடித்து வைக்க வேண்டும் என்று கேட்டார்கள். நிதி
நிலைகளுக்கு ஏற்ற முறையில் நிச்சயமாக நாங்கள் செய்வோம்
என்பதைத் தெரிவித்து, இந்த பட்ஜெட்டின் அடிப்படைக்கருத்து
என்ன என்பதை ஒரு வார்த்தையில் நான் சொல்லி என் பேச்சை
முடித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த பட்ஜெட் அல்லது ஆளுநர் உரை என்பது இரண்டும்
தமிழகத்திற்கு தெரிவிக்க விரும்புகிற கருத்து ஒன்றே ஒன்று
தான். அந்தக் கருத்தை நான் அந்த மொழியிலேயே சொல்
கிறேன்.

[பிற்பகல் 1-20]

இதைச் சொன்னவர், இன்றைய குடியரசுத் தலைவராக இருக்
கிற அமெரிக்காவின் கார்ட்டர்.

'can our government be honest, decent, open, fair and compassionate? can our government bo competent?

இந்த பட்ஜெட்டிலும், ஆளுநர் உரையிலும் ஓடிக்கொண்டிருக்கிற
இழை அதுதான் என்பதை தயவுசெய்து மறந்துவிடக் கூடாது.
தான் இன்னொன்றையும் தெரிவிக்கிறேன். டால்ஸ்டாய் அவர்
களின் 'வார் அண்டு பீஸ்' என்ற புத்தகத்தை இங்கே இருக்
கிற பல நண்பர்கள் படித்திருக்கக் கூடும் என்று நான் நம்பு
கிறேன். அதிலே அவர் தெரிவிக்கின்றபோது தான் எழுதிய
புத்தகத்தின் நோக்கத்தைப் பற்றிச் சொல்லும்போது அவர்
குறிப்பிட்டிருப்பதை அப்படியே தருகிறேன்



'The purpose of the book is to show that the course of human events—even the greatest historical human events is determined ultimately not by the leaders but by the common, ordinary people. Their hopes and dreams, their doubts and fears, their courage and tenacity, their quiet commitments determine the destiny of the word. . .

இந்தப் பட்ஜெட்டைப் பொறுத்த வரையில் நான் தெரி
வித்துக் கொள்வேன், இந்த நிதிநிலை அறிக்கையின் அடிப்படை
இந்த அடிப்படைக்குக் காரணமாக இருக்கின்ற எனது பெரு
மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் எங்கே சென்றாலும் சரி,
எந்த மன்றத்தில் பேசினாலும் சரி, அவர் பேசுவது அத்தனையும்,
கிராமப்புறங்களில் வாழ்கின்ற மக்களுக்கு குடிநீர் வசதி தேவை
—இன்றைக்கு பல புள்ளி விவரங்களைக் கூட பெருமையாகக்
காட்டலாம்—பாலங்கள், சாலைகள் என்று—அந்தப் புள்ளி விவ
ரங்கள் அத்தனையும் வழிலைக்கு பயன்படக் கூடியதாக அமை
யாது. இந்த அவையில் நான் கூட புள்ளி விவரங்களைக் காட்ட
லாம். புள்ளி விவரங்கள் முக்கியமல்ல, செலவிடப்படுகின்ற
பணம், முறையாகப் போய்ச் சேரவேண்டியவர்களுக்குப் போய்ச்
சேர வேண்டும் என்ற பாடத்தை இந்தத் தேர்தலில் நான்
பெற்றேன் என்பதைச் சொல்ல முடியும். முதலமைச்சர் அவர்கள்
இதை எப்போதோ பெற்றார்கள் என்று சொல்வதற்குக் கார
ணம், நான் 15 ஆண்டுகளாகத் தேர்தலில் நகரப்புறத்தில் மட்டும்
தான் நின்றேன். கிராமங்களுக்குச் செல்கின்ற வாய்ப்பு இந்தத்
தடவை தான் பெற்றேன். நான் நின்ற பகுதி பாளையங்கோட்டை
பகுதி; நான் சுற்ற வேண்டியிருந்த கிராமங்கள் 92 கிராமங்கள்.
அங்கே மக்கள் குடிநீருக்காக படுகின்றபாட்டை, அல்லலை நேரில்
கண்டேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இவ்வளவு
கோடிகள் செலவழித்த பிறகு, அந்தக் கோடிகளுக்கெல்லாம்
புள்ளி விவரங்கள் தந்ததற்குப் பிறகு, ரோடு போட்டோம்,
சாலை போட்டோம் என்றெல்லாம் சுவரொட்டிகள் ஒட்டப்பட்ட
பிறகு, நாடு சுதந்திரம் பெற்று 30 ஆண்டுகள் ஆன பிறகு
கிராமங்களில் குடிக்க நீர் இல்லை என்று சொல்வது எவ்வளவு
பெரிய அவமானம் என்று கருதுகிறீர்கள்? அந்த அவமானத்
தைப் போக்கிடுவது தான் இந்த அரசின் நோக்கம் என்பதை
இந்தச் சந்தர்ப்பத்திலே பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

நீங்கள் என்னை அனுமதிப்பீர்களானால், தவறாகக் கருதாவிடில்,
இந்த பட்ஜெட்டைப் பற்றி சில பத்திரிகைகளில் வெளியான
சில கருத்துக்களைத் தெரிவிக்கிறேன். இதிலேயும், குறிப்பாக
இரண்டொரு பத்திரிக்கைகள் தெரிவித்த கருத்துக்களை மட்டும்
சொல்லி விடைபெற விரும்புகிறேன். இல்லாவிட்டால் எனது

[திரு. கி. மனோகரன்] [1977 ஆகஸ்ட் 3

பேச்சு நீண்டு போகும். அதற்காக மாமன்றத் தலைவர் என்னை மன்னிக்க வேண்டும்.

'All India Anna D.M.K.'s Maiden Budget' என்ற தலைப்பில்,

'It is not surprising that the maiden Budget of the new All India Anna D.MK. Government of Tamil Nadu seeks to fulfil the hopes raised by its leaders' oft expressed concern for the downtrodden. The question is, as always, to what extent the Government will succeed in its objectives. Various programmes have been listed by the State Finance Minister, Mr. K. Manoharan, in his Budget Speech for the promotion of self-employment for rural artisans like cobblers, carpenters and blacksmiths, the provision of fishermen welfare fund and the employment-oriented rural works scheme pertaining to road-making, minor irrigation and development of small scale industry..........'

என்று சொல்லிவிட்டு அதற்குப் பிறகு அது சொல்கிறது. அதை மட்டும் இங்கே படித்துவிட்டு விடைபெற விரும்புகிறேன்.

'So far as the Annual Plan for the current year is concerned, it is weighted in favour of power, irrigation and agriculture. Irrigation is intended to be provided for an additional 35,000 acres while stabilising the water supply for 77,000 acres.............'

கடைசியாக, அந்தப் பத்திரிகை எழுதுகிறது.

'The present budget has a slant in favour of small industry, but the Finance Minister concedes that small units have never done well enough so far. Much better results that what has been possible in the past are required if Tamil Nadu is to regain the place in the industrial map of the country which it once held. The All India Anna D.M.K. Government ..............'

'must take some bold measures to attract new investment. It has also to get the entrepreneurs and leaders of labour to show greater initiative than before in keeping the wheels of industry moving all the time. No doubt this calls for a special effort on the part of the Chief Minister and his experienced colleagues in the Cabinet. That need not necessarily be at the expense of the agricultural sector........'

உறுப்பினர்கள் குறிப்பாக கவனிக்க விரும்புகிறேன்.

'Mr. Manoharan's Budget is not a spectacular one but its rural bias is to be welcomed.'



1977 ஆகஸ்ட், 3] [திரு. கி. மனோகரன்]

என்று குறிப்பிட்ட 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகை எனது வாழ்த்துக்களைத் தெரிவித்திருக்கிறது.

இப்படி பல பத்திரிகைகள் 'வெல்பேர் பட்ஜெட்' என்று எழுதியிருக்கின்றன. மெயிலில், கடைசிக் கட்டத்தைப் பற்றி மட்டும் படித்துக் காட்ட விரும்புகிறேன்.

> Mr. Manoharan, as a matter of fact, reconciled several conflicting views, and made the best of a bad bargain, attempting to do the maximum good by the people with the slender resources after much of them has been squandered away by the earlier D.M.K. regime......

இந்தக் கருத்துக்களைத் தெரிவித்த பத்திரிகைகளுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கு கூடியிருக்கும் உறுப்பினர்கள் அனைவருக்கும் நான் மெத்த வருத்தத்தோடு சொல்கிறேன், ஒரு ஒப்புக்கொள்ளப் பட்ட, அங்கீகரிக்கப்பட்ட ஒரு எதிர்க் கட்சி இந்த நேரத்தில் ஒரு வார்த்தை சொன்னதற்காக தனது பொறுப்பைத் தட்டிக் கழித்துக் கொண்டு போயிற்றே என்பதற்கு நான் மிகவும் வருந்துகிறேன் என்று சொல்லி ஆனால் எனக்கு இருக்கிற மகிழ்ச்சி எனது பேச்சை எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் தனது அறையிலிருந்தே இப்போது கேட்டுக் கொண்டிருப்பார்கள் என்ற நம்பிக்கையை இந்தச் சபைக்குத் தெரிவித்துக் கொண்டு அதற்கேற்ற முறையில் அவர்களும் எங்களோடு ஒத்துழைக்க வேண்டும் என்றும், இங்குள்ள தோழமைக் கட்சிகளைச் சார்ந்தவர்களும், எதிர்க் கட்சிகளைச் சார்ந்தவர்களும் எங்களது முயற்சிக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்றும், மக்களுக்காக மலர்ந்திருக்கிற இந்த அரசைப் பேணிக் காக்க வேண்டிய பொறுப்பு உங்களுக்கு இருக்கிறது என்றும், உங்களது கட்சி வேறு கட்சி என்றும் எனது கட்சி வேறு கட்சி என்றும் இன்றைக்கு தயவுசெய்து பார்க்காமல் இன்றைக்கிருக்கிற பொருளாதார சிக்கலில், சூழலில் நாம் எந்தளவிற்கு அதல பாதாளத்திற்குப் போயிருக்கிறோம் என்பதைக் கணக்கிலெடுத்து ஏழை, ஏழைபாழைகள் நொந்தவர்கள். வெந்தவர்கள், வாழ்க்கையில் எதுவுமின்றி வசதியற்றவர்களின் எண்ணிக்கை, (below the poverty line) வறுமைக்கோட்டின் கீழே இருக்கிறவர்களின் எண்ணிக்கை 70-க்கு மேற்பட்ட விகிதமாக, 70 சத விகிதத்திற்கும் மேற்பட்டு இருப்பதால் அதை மனதில் கொண்டு இதய சுத்தியோடு அவர்களுக்குப் பணியாற்ற நாம் அனைவரும் சூளுரைப்போம் என்று கேட்டு இந்த நிதிநிலை அறிக்கையை உங்களது ஒப்புதலுக்கு வைத்து விடைபெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவைக்கு ஒரு அறிவிப்பு. அதோடு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் ஒரு அறிவிப்பு இந்த காரசாரமான விவாதத்தில் பேசுகிறபோது 'கத்துங்கள்' என்று சொன்ன வார்த்தையை, அந்த வார்த்தை அவர்களுக்கு தவறாகப்படுமானால், மனம் வேதனைப்படுமானால் மேற்கொண்டு அந்த வார்த்தையைப் பயன்படுத்தாமல் பார்த்துக்கொள்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், அவர்களது கட்சியைச் சார்ந்தவர்களும் நாளைக்கு இந்த அவைக்கு வருவார்கள் என்று இதைத் தெரிவிக்கிறேன்.

நாளைய தினம் மானியக் கோரிக்கைகள் எடுத்துக்கொள்ளப் படும.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் 1 30 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 7. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### *A. Statutory Rules and Orders.*

24. Notificatian issued in G.O. Ms. No. 2452, Rural Development and Local Administration, dated 16th December, 1976 in regard to exclusion of Chattriapatti and Madampatti villages from the limits of Manaparai Municipality. [Laid on the Table of the House under section 304 (*b*) of the Tamil Nadu Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]

25. Notification issued in G.O. Ms. No. **1767, Home** (Transport-I), dated 17th June 1977 in regard to **concessional** rate of tax payable under the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (Tamil Nadu Act 13 of 1974) in respect of short wheel base buses operated by Thiruvalargal Cheran Transport Corporation Limited in Nilgiris district and by Thiruvalargal Pandian Roadways Corporation Limited in Ramaeswaram Island in Ramanathapuram district. [Laid on the Table of the House under section 26 (2) of the Tamil Nadu Motor Vehicles Taxation Act, 1974 (Tamil Nadu Act 13 of 1974).]

26. Notification issued in G.O. Ms. No. 935, Commercial Taxes and Religious Endowments, dated 19th May 1977 in regard to appointment of date on which certain provisions of the Tamil



Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari Act, 1963 (Tamil Nadu Act 26 of 1963) **shall** come into force in the inam estate of Arayapuram Thattimalpadugai in Papanasam taluk of Thanjavur district. [Laid on the Table of the House under section 73 (5) of the Tamil Nadu Inam Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Tamil Nadu Act 26 of 1963).]

27. Notification issued in G.O. Ms. No. 1097, Commercial Taxes and Religious Endowments, dated 2nd July 1977 in regard to empowering of the Principal Subordinate Judge, Erode to be the Tribunal under the Tamil Nadu Minor Inams (Abolition and Conversion into Ryotwari), Act, 1963 (Tamil Nadu Act 30 of 1963), with jurisdiction over the areas comprised in the taluk of Dharapuram, Erode and Gobichettipalayam. [Laid on the Table of the House under section 48 (5) of the Tamil Nadu Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 (Tamil Nadu Act 30 of 1963).].

### B. *Reports, Notifications and other papers.*

**Nil.**